மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலைய வெளியீடு—8

M534

கம்ப ராமாயணம்

க. பால காண்டம்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்
தொகுத்து வைத்த குறிப்புரை முதலியவற்றுடன்
அவர்கள் குமாரரும்
நூல் நிலைய கௌரவ கியூரேட்டருமான
S. கலியாணசுந்தர ஐயரால்

UNIVERSITY EXTENSION LIB
7 FEB 1991
MADURAI

சென்னை, திருவல்லிக்கேணி
ஸ்ரீ ரங்கா அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப் பெற்றது.

விரோதி-வரு சித்திரை-மீ

அடையாறு * சென்னை-20

1949

14222
031:1F50:11
H9

பொருள் அடக்கம்

		பக்கம்
1.	இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூல்கள் முதலியவற்றின் முதற்குறிப் பகராதி	III-IV
2.	முகவுரை	V-VIII
3.	தனியன்கள்	1
4.	வாழ்த்து	7
5.	பாலகாண்டம்	9-463
	பாயிரம்	9
	1. ஆற்றுப் படலம்	17
	2. நாட்டுப் படலம்	25
	3. நகரப் படலம்	45
	4. அரசியற் படலம்	69
	5. திருவவதாரப் படலம்	73
	6. கையடைப் படலம்	110
	7. தாடகை வதைப்படலம்	120
	8. வேள்விப் படலம்	139
	9. அகலிகைப் படலம்	154
	10. மிதிலைக் காட்சிப்படலம்	176
	11. குலமுறை கிளத்துபடலம்	225
	12. கார்முகப் படலம்	236
	13. எழுச்சிப் படலம்	258
	14. வரைக்காட்சிப் படலம்	283
	15. பூக்கொய் படலம்	310
	16. நீர்விளையாட்டுப் படலம்	325
	17. உண்டாட்டுப் படலம்	337
	18. எதிர்கோட் படலம்	363
	19. உலாவரு படலம்	374
	20. கோலங்காண் படலம்	394
	21. கடிமணப் படலம்	413
	22. பரசுராமப் படலம்	447
6.	செய்யுண் முதற்குறிப்பகராதி	464
7.	அரும்பதவகராதி	480

இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி

அகநா-அகநானூறு
அசதிக்-அசதிக் கோவை
அடிக்-அடிக்குறிப்பு
அடியார்-அடியார்க்கு நல்லார்
அரங்கத்தந், திருவரங்கத்-திருவரங்கத் தந்தாதி
அரிச்சந்திர-அரிச்சந்திர புராணம்
அவை-அவையடக்கம்
அறநெறிச்-அறநெறிச்சாரம்
ஆசாரக்-ஆசாரக் கோவை
ஆற்றூர்ப்-ஆற்றூர்ப் புராணம்
ஆனைக்காப்-திருவானைக்காப் புராணம்
இ.கொ-இலக்கணக் கொத்து
இராச-இராச பாரம்பரியம்
இராசராச-இராசராச சோழனுலா
இறை-இறையனாரகப் பொருள்
உத்தர-உத்தர காண்டம்
ஐந். எழு-ஐந்திணை யெழுபது
கந்த-கந்தபுராணம்
கந்தரலங்-கந்தரலங்காரம்
கந்தரனு-கந்தரனுபூதி
கல்-கல்லாடம்
கலி-கலித் தொகை
கலிங்கத்-கலிங்கத்துப் பரணி
குமர. பிரபந்த-ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு
குமாரசம்-குமாரசம்பவம்
குலோத், குலோத் உலா-குலோத் துங்க சோழனுலா
குலோத் கோவை-குலோகத்துங்க சோழன் கோவை
குலோத். பிள்ளை-குலோத் துங்க சோழன்பிள்ளைத் தமிழ்
குறிஞ்சி-குறிஞ்சிப்பாட்டு
குறிப்-குறிப்புரை
குறுந்-குறுந்தொகை
கூர்ம-கூர்ம புராணம்
சத-சதகம்
சர்க்-சருக்கம்
சிதம்பரச் செய்-சிதம்பரச செய்யுட் கோவை
சிலப்-சிலப்பதிகாரம்
சிற், திருச்சிற்-திருச்சிற்றம்பலக் கோவையார்
சிறுபஞ்ச-சிறுபஞ்சமூலம்
சிறுபாண்-சிறுபாணாற்றுப்படை
சீகாழிக்-சீகாழிக் கோவை
சீவக-சீவக சிந்தாமணி
சுந்தர-சுந்தரமூர்த்தி நாயனார்
சூ-சூத்திரம்
சூளா-சூளாமணி
சே-சேனாவரையர்
சேதுபு-சேதுபுராணம்
தக்க-தக்கயாகப்பரணி
தஞ்சை-தஞ்சைவாணன் கோவை
தண்டி-தண்டியலங்காரம்
தமிழ்நா-தமிழ் நாவலர் சரிதை
தனி-தனியன்
தனிப்-தனிப்பாடல்
திணைமாலை நூற்-திணைமாலை நூற்றைம்பது
திணைமொழியைம்-திணை மொழியைம்பது
திரிகடு-திரிகடுகம்
திருஞா-திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்
திருநா-திருநாவுக்கரசு நாயனார்
திருமங்கை-திருமங்கை யாழ்வார்
திருவரங்கக்-திருவரங்கக் கலம்பகம்
திருவள்ளுவ-திருவள்ளுவ மாலை
திருவா-திருவாசகம்
திருவாய்-திருவாய்மொழி
திருவால-திருவாலவா யுடையார்

திருவிளை - பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம்
திவ்-திவ்யப் பிரபந்தம்
தே-தேவாரம்
தொல்-தொல்காப்பியம்
ந-நச்சினார்க்கினியர்
நள-நளவெண்பா
நற்-நற்றிணை
நன்-நன்னூல்
நாச்சியார் திரு - நாச்சியார் திருமொழி
நாலடி-நாலடி நானூறு
நாற்கவி - நாற்கவிராச நம்பியகப் பொருள்
நான்மணி-நான்மணிக் கடிகை
நீதி நெறி - நீதி நெறி விளக்கம்
நூற்றெட்டுத் திரு - நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி
நெடுநல்-நெடுநல் வாடை
நைடத-நைடதம்
பட்டினப்-பட்டினப்பாலை
பதி-பதிகம்
பதிற்-பதிற்றுப் பத்து
பரி-பரிபாடல்
பரி, பரிமேல் - பரிமேலழக ருரை
பழ-பழமொழி நானூறு
பாக, பாகவத-பாகவதம்
பால-பாலகாண்டம்
பிங்கல, பிங்காலம்-பிங்கல நிகண்டு
பி-ம்-பிரதிபேதம்
பிரபந்தத்-பிரபந்தத் திரட்டு
பிரபு-பிரபுலிங்கலீலை
புறநா-புறநானூறு
பு - வெ - புறப்பொருள் வெண்பா மாலை
பெருங்-பெருங்கதை
பெரும்பாண் - பெரும்பாணாற்றுப் படை
பெருமாள்-பெருமாள் திருமொழி
பெரிய-பெரிய புராணம்
பெரியாழ், பெரியாழ்திரு - பெரியாழ்வார் திருமொழி
பேர்-பேராசிரியர்
பொருந-பொருநராற்றுப் படை
மணி-மணிமேகலை
மதுரைக்-மதுரைக்காஞ்சி
மதுரைக்கலம்-மதுரைக்கலம்பகம்
மலைபடு-மலைபடுகடாம்
மு-முற்றும்
முத்தொள்-முத்தொள்ளாயிரம்
முது-முது மொழிக்காஞ்சி
முருகு-திருமுருகாற்றுப் படை
முல்லை, முல்லைப் - முல்லைப்பாட்டு
மேரு, மேருமந்தர - மேருமந்தர புராணம்
மேற்-மேற்கோள்
யசோதர-யசோதர காவியம்
யா-கா-யாப்பருங்கலக் காரிகை
யா-வி-யாப்பருங் கலவிருத்தி
ரகு-ரகுவம்சம்
வான்மீகம் - வான்மீகி ராமாயணம்
விக்கிரம-விக்கிரம சோழனுலா
விநாயக-விநாயக புராணம்
வி.பா-வில்லி புத்தூராழ்வார்பாரதம்
விவேகசிந்-விவேக சிந்தாமணி

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

முகவுரை

கற்பாரி ராமபிரானே யல்லால் மற்றுங்கற்பரோ
புற்பா முதலாப்புல் லெறும்பாதி யொன்றின்றியே
நற்பால யோத்தியில் சராசரம் முற்றவும்
நற்பாலுக் குய்த்தனன் நான்முகனூர் பெற்றநாட்டுளே.

(திருவாய்மொழி 7. 5 : 1)

இராமாயணம் ஏழு காண்டங்களை யுடையது. அவற்றுள் **கம்பர்** இயற்றியவை முதல் ஆறு காண்டங்களே. இந்த ஆறு காண்டமும் சேர்ந்தது கம்பராமாயண மென்று வழங்கும். ஏழாவதாகிய உத்தர காண்டத்தை வாணியன் தாதர் என்பவர் இயற்றினரென்று கூறுவர் பெரியோர்.

இராமாயணத்தின் பெருமை உலகம் நன்கறிந்ததே. கம்ப ராமாயணத்தை அவர் காலத்திலும் பிற்காலத்திலும் கொண் டாடுபவர் அநேகர். அது காவியங்களுட் சிறந்தது என்று ஆன் றோர் கூறுவர். எல்லா மதத்தினராலும் பாராட்டப்பெறுவது.

எந்தையாராகிய மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர் கள் தம் ஆசிரியர்களிடம் கம்பராமாயணம் முழுவதையும் நன் முகப் பாடம் கேட்டவர்கள். அதனால் அருமையான செய்தி களை அவர்கள் அறிந்திருக்க வேண்டும்.

இவ்வேழு காண்டங்களையும் குறிப்புரைகளுடன் திருத்த மாக அச்சிட வேண்டுமென்ற எண்ணத்துடன் என் தந்தையா ரவர்கள் பல வருஷங்கள் உழைத்து வந்தார்கள். அவர்கள் காலத்திலேயே இவை வெளிவந்திருந்தால் மிக்க சிறப்பாக இருக்குமென்பதை நான் எடுத்துக் கூறவேண்டியதில்லை. ஆனாலும் அந்த நோக்கத்துடன் அவர்கள் தேடித் தொகுத்து வைத்துள்ள கம்பராமாயண ஏட்டுச் சுவடிகளும், கையெழுத் துக் கடிதப் பிரதிகளும் பல. அன்றியும் அவர்கள் அவ்வப் போது ஆராய்ந்து எழுதிய உரைப் பகுதிகளும், செய்யுள் நயங் களும், மேற்கோள்களும், ஒப்புமைப் பகுதிகளும், அரிய பாட பேதங்களும், விட்டுப்போன பாடல்களும், சிறந்த பகுதிகளும்,

1943–ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அவர்கள் பெயரால் இந்நூல் நிலையம் திறக்கப் பெற்றது. இதுவரை வெளிவராத நூல்களும், அருமையான கம்பராமாயணம் போன்ற நூல்களும் நல்ல பதிப்புக்களாக வெளிவர வேண்டுமென்ற கருத்து இந்நிலையத்தின் அத்தியக்ஷரவர்களுக்கு உண்டாயிற்று.

நூல் நிலையம் ஆரம்பிக்கப் பெற்றது முதல் புத்தகப் பதிப்பு வேலையை ம-ள-ா ஸ்ரீ **ச. கு கணபதி ஐயரவர்கள்** B.O.L, கவனித்து வருகிறார்கள். அவர்கள் தமிழில் சிறந்த பயிற்சி யுள்ளவர்கள். எந்தையாரவர்களோடு பல வருஷங்கள் பழகி நூற் பதிப்பு விஷயத்தில் நல்ல அனுபவம் வாய்ந்தவர்கள். அவர்களுடைய பேருழைப்பால், **பரதசேனுபதீயம், நவநீதப்பாட்டியல், கும்பேசர் குறவஞ்சி, மூவருலா யாப்பருங்கலக் காரிகையுரை** முதலிய நூல்கள் வெளியாயின.

கம்பராமாயணத்தையும் பதிப்பிக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் உண்டாகவே மாதிரி வெளியீடாக 28-4-1946-ல் **பாலகாண்டத்தின்** திருவவதாரப் படலம் முடிய உள்ள பகுதி வெளியிடப் பெற்றது. ம ள-ா-ஸ்ரீ கணபதி ஐயரவர்களுக்கு உதவியாக இருந்து வேலைபார்க்கும்படி அவ்வப்போது சில சில பண்டிதர்கள் நியமிக்கப்பெற்று வேலைபார்த்து வருகிறார்கள். மாதிரி வெளியீட்டைப்பற்றிப் பலர் பாராட்டிச் சில யோசனைகளையும் தெரிவித்தார்கள். அவற்றை மேற்கொண்டு இப்போது **பாலகாண்டம்** பதிப்பிக்கப் பெற்றுள்ளது. பதிப்பின் முறை வருமாறு :

முதலிற் சிறந்த மூல பாடம், அதனையடுத்து அரும்பத வுரை, அந்த வுரையிற் சிலவற்றுக்கேற்ற பிரயோகம், விசேடக் குறிப்பு, ஒப்புமைப் பகுதிகள், இலக்கணக் குறிப்பு, கம்பர் கருத்து வான்மீகத்துக்கு வேறுபட்டிருந்தால் அது, பிரதி பேதங்கள்.

விட்டுப்போன பாடல்களும் அதிகப் பாடல்களும் உரிய இடங்களில் அமைந்துள்ளன. பாடல்களின் கருத்து எளிதிற் புலப்படுமாறு தலைப்புக்கள் எழுதப்பெற்று அங்கங்கே சேர்க்கப் பெற்றுள்ளன.

செய்யுள் முதற் குறிப்பு

பால காண்டத்தின் பதிப்புக்காக, உபயோகித்த நூல்கள் முதலியவற்றின் விவரம் :—

1. இந்நூல் நிலையத்து ஓலைச் சுவடிகள் — 7
2. வேறு சுவடிகள் — 2
3. இராமாயணக் கையெழுத்துக் கடிதப்பிரதிகள் 2
4. இராமாயணக் கருப்பொருட் சுவடிகள் — 2
5. வசனமாக உள்ள சுவடிகள் — 2
6. அவ்வப்போது வெளிவந்துள்ள அச்சுப் பிரதிகள்
7. இராமகதையைக் கூறும் வேறுகாவியங்களும் நூல்களும்
8. அவ்வப்போது வெளிவந்துள்ள இராமாயணக் கட்டுரைகளும் உபந்நியாசங்களும்

படலங்களின் பெயரும் தொகையும் பிரதிக்குப் பிரதி வேறுபடுகின்றன. பெரு வழக்காக உள்ள பெயர்களையே படலப் பெயர்களாகக் கொண்டு எஞ்சிய விவரங்கள் குறிப்புரையில் அங்கங்கே காட்டப் பெற்றுள்ளன.

கம்பராமாயணத்துக்கு இராமாயணக் கருப்பொருள் என்று பழைய அரும்பதவுரை ஒன்று உண்டு. இதன் பிரதிகள் சில இந் நூல்நிலையத்தில் உள்ளன. இப்பதிப்பில் இவ்வுரை பகரக் குறிகளுக்கிடையே காட்டப் பெற்றுள்ளது. இந்த உரையையன்றிப் பொழிப்புரையாகக் கூறும் ஒரு சுவடியும் உள்ளது. அதில் உள்ள உரை இப்பதிப்பில் 'ஓர் உரை' என்ற தொடராற் புலப்படுத்தப் பெற்றுள்ளது.

கம்பராமாயணத்துக்குப் பழைய வசனம் ஒன்று உள்ளது. சில செய்யுட்களின் உரையை நிச்சயிக்க அது மிகவும் உதவியது.

செய்யுளெண்கள் தொடர்ச்சியாகக் காட்டப் பெற்றுள்ளன.

சுவடிகளைச் சோதனை செய்கையில் காண்டங்களின் தொடக்கத்திலும் முடிவிலும் துதி கவிகள், இராமாயணப் பெருமை, பயன் முதலியவைகளைப்பற்றிய கவிகள் பல காணப்பட்டன. அவை எல்லாக் காண்டங்களும் முடிந்த பின்

கம்பரைப் பற்றிய வரலாறும், கம்பராமாயண ஆராய்ச்சி முதலியனவும் பிற்சேர்க்கையாகப் பின்னர் வெளிவரும்.

எதிர்பாராது நேர்ந்த சில இடையூறுகளால் இப்பதிப்பில் அங்கங்கே தவறுகள் காணப்படும். அவற்றைத் தெரிவித்து உதவும்படி அறிஞர்களை வேண்டுகிறேன்.

இப்புத்தகத்தை அச்சுக்குக் கொடுப்பதற்கு முன்பு என் வேண்டுகோளின்படி மூலத்தையும் உரை முதலியவற்றையும் படித்துப் பார்த்துச் சென்னைக் கிறிஸ்தியன் காலேஜ் ஹை ஸ்கூல் தமிழாசிரியர் ம-ா ா-ஸ்ரீ வி. மு. கப்பிரமணிய ஐயர் B.O.L., அவர்கள் அவசியமான திருத்தங்களைச் செய்து உதவினர்கள். என் மனமார்ந்த நன்றி அவர்களுக்கு உரியதாகும்.

இப்பதிப்பு விஷயமாக மிக்க ஊக்கமெடுத்துக் கொண்டு எல்லா வகையிலும் கவனித்து இந்த வடிவில் வெளிவருவதற்கு முக்கிய காரணமாக உள்ளவர் மேற்கூறிய ம-ா-ா-ஸ்ரீ ச. கு. கணபதி ஐயரவர்கள் B.O.L.. ஆவர். அவர்களுக்கும், உடனிருந்து ஒப்பு நோக்குதல், குறிப்பு எழுதுதல் முதலிய உதவிகள் புரிந்த தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ L ஸ்ரீநிவாஸையரவர்களுக்கும், வியாகரண சிரோமணி ம-ா-ா-ஸ்ரீ T. இராமானுஜ ஐயங்காரவர்களுக்கும் ம-ா-ா-ஸ்ரீ R பாலகிருஷ்ணையரவர்களுக்கும் என் நன்றியைச் செலுத்துகின்றேன்.

இந்நூல் நிலையத்தைப் பாதுகாத்து வருவதோடு நூற் பதிப்பு விஷயத்தில் எனக்கு ஒரு கவலையும் உண்டாக்காமல் உதவி வருபவர்களும் இந் நிலையத்தின் அத்தியக்ஷருமான ஸ்ரீமதி ருக்மிணி தேவியாரவர்களுடைய சிறந்த தமிழபிமானம் தமிழகத்தாரால் மிகவும் பாராட்டற்குரியது.

இந்த வெளியீட்டுக்காகச் சென்னைச் சர்வகலாசாலையார் இரண்டாயிர ரூபாய் நன்கொடை யளிப்பதாக வாக்களித்து முன்னதாக ஆயிர ரூபாய் வழங்கி உதவியிருக்கிறார்கள். இப் பேருதவி இந்நூல் நிலையத்தாரால் மிகவும் பாராட்டப் பெறுகிறது.

சென்னை
26-4-'49

இங்ஙனம்,
S. கலியாணசுந்தரையர்

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

உ

ஸ்ரீராமஜயம்

கம்ப ராமாயணம்

*தனியன்கள்

கம்பர் கவிச்சிறப்பு

வெண்பா

க தராதலத்தி னுள்ள தமிழ்க்குற்ற மெல்லாம்
அராவு மரமாயிற் றன்றே—இராவணன்மேல்
அம்புநாட் டாழ்வா னடிபணியு மாதித்தன்
கம்பநாட் டாழ்வான் கவி.

---

* கம்பரையும் அவர்தம் இராமாயணத்தையும் புகழ்ந்து கூறும் தனிக் கவிகள் இங்கே தனியன்கள் என்ற தலைப்பின்கீழ்க் கொடுக்கப் பெற்றுள்ளன. பல புலவர்கள் பாடின இவை ஒரு வகையில் சிறப்புப் பாயிரத்துள் அடங்கும். ஏனைச் சிறப்புப் பாயிரங்கள் போலல்லாமல் இங்கே ஆசிரியருக்கு வணக்கம் முதலியன கூறப்பட்டுள்ளன.

(க) தராதலம் - பூமியாகியஇடம். அம்புநாட்டு ஆழ்வான் - இராமன்; கடவுளரை ஆழ்வானென்னலுமுண்டு; ஆராவமுதாழ்வான்; ஆள்வான் என்பது ஆழ்வானென்றுயிற்று. ஆதித்தன் கம்பன் - ஆதித்தன் என்றவருடைய மகனாகிய கம்பன்; 'ஆதவன் புதல்வன்.....மாதவன் கம்பன்' (தனியன், 5): ஆதித்தனை ஒரு சோழனென்றுகொண்டு தம் காலத்தவனான அவன் பெயரோடு கம்பருடைய பெயரும் இணைந்து வந்ததாகப் பொருள் கூறுவாருமுண்டு; இந்த ஆதித்தன் என்பவன் சோழன் விஜயாலயன் மகன்; 'எண்ணிய சகாத்தம்' (தனியன், 8) என்ற செய்யுளிற் கூறப்படும் காலமும் ஆதித்தன் காலமும் ஒன்றென்பர். இங்ஙனம் பொருள் கூறுவார், குலமுறை கிளத்துபடலத்துள் கம்பர் 'ஆதித்தன் குலமுதல்வன் மனுவினே' (725) என்று குறிப்பது இச்சோழமன்னனையே என்பர். கம்பர் ஆதித்தன் காலத்துக்கு மிகவும் பிற்பட்டவர் என்பது பிறர் கருத்து. கம்பநாடு: ஓரிடம்; (தனியன் 2, 4, 6-9.) பெரியோர் பிறந்த இடத்தை நாடு என்றல் மரபு; 'காழிநாடன்' (தே. திருஞா. திருக்கேதீச்சுரம்; 'ஒழிவிலொடுக்கம்.) 'கவிஅரம் ஆயிற்று' என்று முடிக்க. கம்பர் கவியின் பெருமை: தனியன், 9.

கம்பர் துதி

கட்டளைக் கலித்துறை

உ வாழ்வார் [1]தருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பன்
தாழ்வா ருயரப் புலவோ ரகவிரு டானகலப்[2] வாழ்த்துப் பெற
போழ்வார் கதிரி னுதித்ததெய் வப்புலமைக் கம்பநாட்
டாழ்வார் பதத்தைச்சிந் திப்பவர்க் கியாது மரியதன்றே.

விருத்தம்

ஊ அம்பரா வணிசடை யரன யன்முதல்
உம்பரான் முனிவரால் யோக ராலுயர்
இம்பராற் பிணிக்கரு மிராம வேழஞ்சேர்
கம்பநா டம்புலவரைக் கருத்தி ருத்துவாம்.

எ சம்ப நாடன் னுமைசெவி சாற்றுபூங்
கொம்ப னுடன் கொழுந னிராமப்பேர்

(உ) ஆர்தரு - நிறைந்த. வெண்ணெய் நல்லூர் - ஒரு கிராமம்; இது தஞ்சை ஜில்லாவில் கதிர்வேய் மங்கலம் என்னும் கதிராமங்கலத்தைச்சார்ந்த ஒரு சிறுகுக்கிராமம். தேவாரப்பாடல் பெற்றதும் விழுப்புரத்திற்கு அருகேயுள்ளதுமான திருவெண்ணெய் நல்லூர் வேறு. சடையப்பன்: இவர் கரிகாற் சோழனுல் தாபிக்கப்பெற்ற அறுபத்துநான்கு கோத்திர வேளாளருள் ஒரு கோத்திரத்தலைவர். நயினர் என்று வழங்கப்பெறுவர்; காணியாளரகவுல். தம் இராமாயணத்துள் கம்பர் சடையப்பருக்கு நிலையான இடம் அமைத்தமையின் 'வாழ்த்துப்பெற' என்றார்; க, 14. தாழ்வார் - அறிவிலே தாழ்ந்தவர்; நாலாம் வருணத்தவராகிய வேளாளர் என்பாருமுளர்; கம்பர் தாம் பாடிய ஏரெழுபதில் வேளாளரைப் பாராட்டியிருப்பதைக் கொண்டும் வேளாளரகத்தில் வளர்ந்தமைகொண்டும் 'தாழ்வாருயர' என்று கூறினர் என்பர். போழ்வார் கதிர் - இருளைப் பிளக்கின்ற கிரணங்களோடு கூடிய சூரியன்; 'வாள்போழ் விசும்பு' (முருகு. 8); 'வாள் போழ் வானத்து வயங்கு கதிர்' (நற்கவி. சூ. 147, உரை); 'விண்ணம் போழும்வாள்' (பாக. க. 8 : 13) தெய்வப் புலமை என்ற அடைமொழி திருவள்ளுவருக்கும் உண்டு. (பிரதிபேதம்) 1 'திருவெண்ணெய்'

(ஊ) அம்பு அரா - கங்கையையும் பாம்பையும். அரன் - உருத்திரன். இராமவேழம்; 'இருகை வேழத்திராகவன்' (வாழ்த்து, 1.) வேழம் சேர் கம்பனென்றது ஒருநயம்; கம்பர் – யானைகட்டும் கம்பம் போன்றவர்.

(எ) சம்பு அந்நாள்; சம்பு - சிவபெருமான். சம்பு உமைக்குச் சொல்லியது இராமாயணம். பூங்கொம்பு அன்னாள் - சீதை. பம்ப - பரவ. நாள்

பம்ப நாடழைக் குங்கதை பாச்செய்த
கம்ப நாடன் கழறலை யிற்கொள்வாம்.

வேறு

(நு) ஆதவன் புதல்வன் முத்தி யறிவினை யளிக்கு மையன்
போதவ னிராம காதை புகன்றருள் புனிதன் மண்மேற்
கோதவஞ் சற்று மில்லான் கொண்டன்மா றன்னை யொப்பான்
மாதவன் கம்பன் செம்பொன் மலரடி தொழுது வாழ்வாம்.

வான்மீகியும் கம்பரும்

(சு) நாரணன் விளையாட் டெல்லாம் நாரத முனிவன் கூற
ஆரணக் கவிதை செய்தா னறிந்தவான் மீகி யென்பான்
சீரணி சோழ நாட்டுத் [1]திருவழுந் தூரு வச்சன்
[2]காரணக் கொடையான் கம்பன் தமிழினற் கவிசெய் தானே.

தழைக்கும் - நீண்டகாலம் சிறந்தோங்கும்; விருத்தத்தை, 'பா' என்றார்; தனியன், 7; க. 10, 13.

(நு) ஆதவன் - சூரியன்; ஆதவன் புதல்வன் கம்பன்: 'ஆதித்தன் கம்ப நாட்டாழ்வான்' (தனியன், 1.) அறிவினை அளிக்கும் ஐயன் - இராம பிரான். இராமகாதை - இராமாயணம்; தனியன், 8. கோது அவம்; கோது - குற்றம். கொண்டல்மால் தன்னை - மேகம்போன்ற திருமாலை; கொண்டல் - மேகம். கம்பருக்குத் திருமால் உவமை: தனியன், 7.

(சு) நாரணன் விளையாட்டு-இராமாயணம். இராமகதையை முதன் முதல் ஒரு நூலாகச் செய்தவர் வான்மீகி.

ஆரணக் கவிதை: [வேதத்தின் உட்பொருளாகிய காயத்திரியின் எழுத்து இருபத்துநாலுக்கும் இருபத்துநாலு கிரந்தமாகச் செய்தமையால் 'ஆரணக்கவிதை செய்தான்' என்றார்.] வேதத்தில் மாத்திரம் வழங்கிவந்த சந்தஸைக் கொண்டு முதலில் வான்மீகி செய்தமையால் இங்ஙனம் கூறினர். வான்மீகி: (க. 8, 9, 13, 46, 107; சு. 18: 24; உத்தர. பாயிரம், 5.)

இந்நூலுள் பகரக்குறிகளுள் அமைந்த உரைப்பகுதி கம்ப ராமாயணக் கருப்பொருள் என்ற சுவடியிற் கண்டது.

திருவழுந்தூருவச்சன் - திருவழுந்தூரிற்பிறந்த உவச்சன்; உவச்சன் - பூசாரி; 'கம்பன் பிறந்தவூர் காவேரி தங்குமூர், கும்பமுனி சாபங் குலைந்தவூர் —செம்பதுமத், தாதகத்து நான்முகனுந் தாதையுந் தேடிக்காண வேதவித்து வாழுமழுந் தூர்' (தமிழ்நா. 185.) கம்பர் உவச்சரென்பது 'கைமமணிச் சீரன் றிச் சீரறியாக் கம்பநாடன்' (தமிழ்நா. 102.) என்பதனாற் றெரிகிறது. காரணக்கொடை - கம்பருடைய கோத்திரம்; காணியாளரகவல், (பி - ம்.) [1] 'திருவழுந்தூருள் வாழ்வோன்' [2] 'காரணி கொடையான்'

கம்பராமாயணத்துக்கு அமுதம் உவமை

எ அம்பிலே சிலையை நாட்டி யமரர்க்கன் றமுத மீந்த
தம்பிரா னென்னத் தானும் தமிழிலே [1]தாலை நாட்டிக்
கம்பநா டுடைய [2] வள்ளல் கவிச்சக்ர வர்த்தி பார்மேல்
நம்புபா மாலை யாலே [3] நரருக்கின் றமுத மீந்தான்.

அரங்கேற்றிய காலமும் இடமும்

அ எண்ணிய சகாத்த மெண்ணூற்றேழின் மேற்சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய விராம காதை பங்குனி [1]யுத்த ரத்திற்
கண்ணிய வரங்கர் முன்னே கவியரங் கேற்றி னானே.

(எ) அம்பு - பாற்கடல். சிலை - மந்தரமலை. 'அம்பிலேவில்லை வைத்து' என்பது நயம்; அமரர் - தேவர்; அமுதமுண்டபின்னர் அமரராயினமையின் இங்கே இகுறியளவாக நின்றது. அமரர் - மரணமற்றவர். தம்பிரான் - தலைவன். தமிழிலே - தமிழாகிய கடலிலே. தாலை - நாவை. கவிச்சக்கரவர்த்தி: சயங்கொண்டாருக்கும், ஒட்டக்கூத்தருக்கும் இப்பட்டம் வழங்கி வந்தது. நம்பு - விருப்பம்; 'நம்பும் மேவும் நசையா கும்மே' (தொல். உரி. 33.) ஈந்தான் என்பதற்கேற்ப வள்ளல் என்றார். 'மறைப்பாற்கடலைத் திருநாவின் மந்தரத்தாற் கடைந்து' (திருவரங்கக். தனி. 3) என்பதனை இச் செய்யுளோடு ஒப்புநோக்குக. கம்பருக்குத் திருமால் உவமை; தனியன், 5.

(பி - ம்) [1]'தன்னை' [2]'கோமான்' [3]'நரர்க்குமின் றமிர்த மீந்தான்', 'நரர்க்குமின் னமுத மீந்தான்'

(அ) சகாத்தம் எண்ணூற்றேழின்மேல் பண்ணப்பெற்றது இக்கதை; சகாத்தம் - சாலிவாகனசகம்; கி. பி. 885; தனியன் 1, குறிப்புரை.

வெண்ணெய் நல்லூர்.....இராமகாதை: 'வெண்ணெய் நல்லூர் வயிற் றந்தே' (க. 14.) [வெண்ணெய் நல்லூரிலுள்ள சடையன், சராமன், கண்ணனென்னும் மூவரும் பாடுவித்தது இராமகாதை]; இம்மூவரும் உடன் பிறந்தார் என்பர்; 'என்னுடைய தம்பி சராமனுக்கிளையான்', 'வெண்ணெயே.....சராமனூர்' (தமிழ்நா. 77, 86); 'வெண்ணெய் வாழ் கண்ணன்; (500.) பங்குனி யுத்தரத்தில்: 'உண்மை யேறுந் திருவரங்கத் தொருவன் சபையி லுத்தரநாள், வண்மை யேற வரங்கேற்றி வைத்தார் சோழ மண்டலமே' என்று சோழமண்டல சதகம் கூறும். பங்குனியுத்தரநாளில் (பி - ம்) அத்தநாள் - ஹஸ்தநக்ஷத்திரம். கண்ணிய - மதிப்புமிக்க. திருவரங்கத்துப் பெரிய கோயிலில் இந்நூல் அரங்கேற்றப்பெற்றது.

(பி - ம்.) [1]'யத்தநாளிற்'

கம்பர் கவியின்பம்

வேறு

கூ இம்பர் நாட்டிற் செல்வமெல்லா மெய்தி யரசாண்டி ருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா ஒங்கு நீழலிருந்தாலும் [யிற்
செம்பொன் மேரு வணையபுயத் திறல்சே ரிராமன் றிருக்கதை
கம்ப நாடன் [1]கவிதையிற்போற் கற்றோர்க் கிதயங் களியாதே.

கம்பர் கவித்துவ சக்தி

வேறு

கo கழுந்த ராயுன கழல்பணி யாதவர் கதிர்மணி முடிமீதே
அழுந்த வாளிகள் தொடுசிலை ராகவ வபிநவ கவிநாதன்
விழுந்த நாயிறு தெழுவதன் முன்மறை வேதிய ருடனுராய்ந்
தெழுந்த நாயிறு விழுவதன் முன்கவி பாடிய தெழுநூறே.

(கூ) இம்பர்நாடு - இவ்வுலகம். கதையில் - பலரால் எழுதப்பெற்ற கதைகளுள். கவிதையிற்போல் - கவிதையில் களிப்புண்டாதல்போல; 'வழி பட்டோட, வருள்பெற்று மாயன் கோல மலரடிக்கீழ், சுழிபட் டோடுஞ் சுடர்ச்சோதி வெள்ளத் தின்புற் றிருந்தாலும். இழிபட் டோடு முடலினிற்பி றந்துதன்சீ ரியான்கற்று, மொழிபட் டோடுங் கவியமுதம் நுகர்ச்சி யுறு மோ முழுதுமே' (திருவாய்மொழி, அ. 10: 5) என்ற பாசுரத்தை இச் செய்யுள் ஒத்திருக்கின்றது. (பி - ம்.) [1]'கவிதையைப்போற்'

(கo) கழுந்து - ஆயுதங்களிலே கைபிடிப்பதனல் தேய்ந்து வழுவழுப் பாக உள்ளபாகம்; 'கழுந்தோடும் வரிசிலை', 'கழுந்துடை வரிசிலை' (251, உ. 12 : 26); 'உழுந்துடைக் கழுந்தில்' (குறுந். 384); 'விற்கழுந்து கொடுமா முடியின் மோதுமுன்', 'ஆசுகங் கழுந்தாக' (வி - பா. அருச்சுனன்றவ. 106, பதினலாம்போர். 30.) கழுந்தர் - தேய்ந்த அறிவினர்; அறிவற்றவர் என்ற படி. உன - உன்னுடைய, வாளிகள் - அம்புகள்; சிலைராகவ - கோதண்ட ராம; 'வாகை சூடிய சிலையிராமன்' (க, 16.) அபிநவகவி - புதுமையா கக் கவிபாடுகின்றவர். கம்பர் அவ்வளவு விரைவாக ஒரு பொழுதில் எழு நூறு கவி பாடினரென்பது புகழ்ச்சியுரைபோற் றோன்றுகிறது. நாயிறது: அது, பகுதிப்பொருள் விகுதி: எழுந்த ஞாயிறு விழுவதன்முன் - பகல் நேரத்தில் என்றபடி. பகல் நேரத்திலன்றிக் கம்பர் இரவிலும் கவிபாடினு ரென்பது, 'ஒற்றியூர் காக்க வுறைகின்ற காளியே, வெற்றியூர் காகுத்தன் மெய்ச்சரிதை - பற்றியே, நந்தா தெழுதுதற்கு நல்லிரவின் மாணுக்கர், பிந் தாமற் பந்தம் பிடி' (தமிழ்நா. 96) என்ற பாவால் தெரியவருகிறது.

தொகைக் கவி

வேறு

கக [1]கரைசெறி காண்ட மேழு கதைகளா யிரத்தெண் ணூறு
பரவுறு சமரம் பத்துப் [2]படலநூற் றிருபத் தெட்டே
[3]உரைசெயும் விருத்தம் பன்னீ ராயிரத் [4]தொருபத் தாறு
[5]வரமிகு கம்பன் சொன்ன வண்ணமும் [6]தொண் ணூற் றாறே.

தனியன்கள் முற்றும்.

(கக) இச்செய்யுள் சில பிரதிகளில் இல்லை. பிரதிதோறும் பாடம் வேறுபடுகின்றது. உத்தரகாண்டம் வாணியன்தாதனால் இயற்றப்பட்டதை அறியாத ஒருவர் இப்பாடலைப் பாடியிருத்தல் வேண்டும்.

(பி - ம்.) [1]'கரைதெரி' [2]'படலநூற்றெண்பத்தொன்று' [3]'விரை செறி விருத்தம் பன்னீராயிரத் தொண்ணூற்றாறு' [4]'தொருநூற்றாறு' [5]'வரை செறி கம்பன்' [6]'எண்பத்தேழே'

வாழ்த்து *

சடகோபர்

விருத்தம்

1 தருகை நீண்ட தயரதன் மூன்றரும்
இருகை வேழத் திராகவன் முன்கதை
[1]திருகை வேலைத் தரைமிசைச் செப்பிடக்
குருகை நாதன் குரைகழல் காப்பதே.

அனுமான்

வேறு

2 அஞ்சிலே யொன்று பெற்ரு னஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்ரு ரூக [1]வாரியர்க் காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற வணங்கைக்கண் டயலா ரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தா னவனம்மை [2]யளித்துக் காப்பான்.

---

* இத்தலைப்பில் கூறப்பெற்ற மூன்று கவிகளும் பாலகாண்டத்துக்குப் புறம்பானவை.

1 தருகை நீண்ட தயரதன்: 267, 812; கூ. 4:21; சு. 5: 76. இருகை வேழம்: உ. 4:177; கூ. 6:27; 'இருகை யானை' (திருவா. சத. 41.) திருகை வேலைத்தரை; திருகு-மாறுபாடு; 'திருகலையுடைய விந்தச் செகத்துளோர்' (225); ஐ-அழகு; வேலை-கடல். 'திரிகை வேலை' என்ற பாடத்துக்கு, கடல் வட்டம் என்பது பொருள்; திரிகை-வட்டம்; அன்றித் திரிதலையுடைய வேலையுமாம்; 'திமிதமிட்டுத் திரியுந் திரைக்கடல்' (சு. 7:42.)

இக்கவி பல பிரதிகளிற் காணப்படவில்லை.

(பி - ம்.) [1]'திரிகை வேலைத்'

2 அஞ்சு-பஞ்ச பூதங்கள். பெற்றவன் வாயு. தாவினது நீர். ஆருக-மார்க்கமாக; மார்க்கமாக அமைந்தது வான். 'அஞ்சிலே ஒன்று ஆருக' என்பது நயம். ஆரியர்க்கு ஆக-தேவரின் பொருட்டு; இராமனுக்காக; 'ஆருயிர்காக்க' என்ற பாடத்துக்கு, 'இராவணனது கொடுமையிலிருந்து உயிர்களைக்காக்கும் பொருட்டு' என்பது பொருள்; [ஆருயிர்:சாதியேக வசனம்; ஊர் வந்தது என்பதுபோல்.] அஞ்சிலே ஒன்று-பூமிதேவி. அயலார்-பகைவர். வைத்தது தீ. (பி - ம்.) [1]'ஆருயிர்க்காக', 'ஆரியற்காக', 'ஆருயிர்காக்க' [2]'யளித்துவப்பான்', 'யளித்து வைப்பான்'

கலிமகள்

3 [1]பொத்தகம் படிக மாலை குண்டிகை பொருந்சேர் ஞான
வித்தகந் தரித்த செங்கை விமலையை யமலை தன்னை
மொய்த்தகொந் தளக பார முகிழ்முலைத் தவள மேனி
மைத்தகு கருங்கட் செவ்வா யணங்கினை வணங்கல் செய்வாம்.

---

3 பொத்தகம்-சுவடி; தொல். சொல். சூ. 449, சே; நன். 433, மயிலை. ஞான வித்தகம்-அறிவுச் செல்வம்; 'வித்தக நீறணிவார்' (திருஞா. தே.) சின் முத்திரையை ஞான வித்தகம் என்றார். விமலை-மலத்தினின்றும் விடுபட்ட வள். அமலை-மலமற்றவள்; சாத்துவிக குணமாகிய வெண்மை நிறமாதல் பற்றி இங்ஙனம் கூறினர். மொய்த்த-அடர்ந்த. கொந்து: கொத்து என்ப தன் விகாரம்; பூமாலைக்கு ஆகு பெயர். முகிழ்-தாமரை மொட்டு; கோங்கின் அரும்பும் ஆம். தவளம்-வெண்மை. மைத்தகு-அஞ்சனத்தினால் தகுதி பெற்று விளங்கும்.

ஒப்பு : 'புத்தகமும் ஞானத்து முத்திரையும் பொற்பளிங்கும், வைத்த கமண்டலமும் வன்னிகையும்-முத்து, வடங்கொண்ட பூண்முலையாள் வந் தென் மனத்தே, இடங் கொண்டாள் நீங்கிற் றிடர்' (பெருந்தொகை, 118); 'குண்டிகை படிக மாலை, மிண்டிய வித்தகத்தோ, டண்டிய பொத்த கங் கைக், கொண்டவள் வாணி யாகும்' (பிரபந்தத். 6:37.)

க. பாலகாண்டம்

பாயிரம்*

பரம்பொருள் வணக்கம்

4 உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கே[1]சர ணங்களே.

5 [1]சிற்கு ணத்தர் தெரிவரு நன்னிலை
எற்கு ணர்த்தரி தெண்ணிய மூன்றனுள்
முற்கு ணத்தவ ரேமுத லோரவர்
நற்கு ணக்கட லாடுத னன்றரோ.

---

* இப்பகுதியில் வந்துள்ள கவிகளிற் சில கம்பர் வாக்கல்ல என்று தோன்றினும் பல பிரதிகளிற் காணப்பட்டமையின் இங்கே பதிப்பிக்கப் பெற்றன.

4 உலகம்:மங்கலச் சொல்; முருகு. 1, அடிக். தாம்-வேறுதுணையின்றித் தாமே. உளவாக்கல்-படைத்தல்; சூக்கும வடிவாய் இருந்தவற்றை ஸ்தூல மாக உண்டாக்குதல். விளையாட்டு-எளிதிற் செய்யும் காரியம் என்றபடி; 'விளையாட்டினிதுகந்தோய்'; 'யாதவிபருமாயைவிளையாட்டும் வேண்டுமோ' (கூ. 1. 51, 54); 'காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி' (திருவா. திரு வெம். 12.) அவர்-பரப்பிரமம். சரணங்களே: வணக்கம்; அருக சரணம், சித்த சரணம், சாது சரணம் என்பவற்றிற்போல; 502; கூ. 3: 36; ஞ. 6:80; 'சரணமாகுந்தன தாளடைந் தார்க்கெலாம், மரணமாஞல் வைகுந்தங் காடுக் கும் பிரான்' (திருவாய். 9. 10:5)

இதுமுதல் மூன்று கவிகள் பரவஸ்து வணக்கம்; ஆழ்வார் திருநகரிப் பிரதிகளில், 'இதுமுதல் மூன்று கவிகள் கடவுள் வணக்கம்' என்ற குறிப்புள் ளது. வைணவர் இம்மூன்றையும் முறையே வஸ்து நிர்த்தாரணம், குண நிர்த்தாரணம், நாம சித்தாந்தம் என்பர் (பி - ம்.)[1]'சரணங்களே' (க)

5. சிற்குணத்சர்-ஞானிகள்; சித்-ஞானம்; 'சிற்குணத்தின்' என்றபாடத் துக்கு. 'ஆன்ம ஞானத்தினுலேயும்' என்று பொருள் கொள்க. தெரிவரு நன்னிலை-அளவிடக் கூடாத பிரமத்தினுடைய மகத்துவத்தை. உணர்த்த அரிது. மூன்றனுள்-சாத்துவிகம், இராசதம், தாமதமென்று சொல்லப் பட்ட மூன்று குணங்களுக்குள்ளே. முதலோர்-எல்லாச் சராசரங்களுக்கும் முதலான தெய்வம். 'தெரிவருநன்னிலை எற்குணர்த்தரிது. அதனுல் முதல்வராகிய சாத்துவிக குணத்தவரான மூர்த்தியினுடைய குணங்களாகிய கடலிற் படிந்து நிலைத்தல் நன்று' என்றும் சொல்லலாம். குணக்கடல்: 111, 567; உ. 4:121, 9:58, 11:37, 12:77, 131, ஞ.உ: 60; கூ. 16:22.

6 ஆதி யந்த [1]மரியென யாவையும்
ஓதி ஞரல கில்லன [2]வுள்ளன
வேத மென்பன மெய்ந்நெறி [3]நோன்மையன்
பாத மல்லது பற்றிலர் பற்றிலார்.

'அலகிலாத வானந்த குணக் கடல்' (யசோதர. காப்பு.) எல்லா மதத்தவரும் தத்தம் கடவுளரையே முற்குணத்தவர் என்பர்.

[சிற்குணம்-ஆன்மஞானம். எற்கு-எனக்கு. உணர்த்தரிது-அறிவிக்க இயலாது. முக்குணங்களுள் முதற்குணமான சுத்த சாத்துவிகமான ஞான ரூபத்தையுடையவரே யாவர்க்கும் முதலாகிய பரப்பிரமம். அவர் - அவ ருடைய. நற்குணக்கடல்-கிருபாசமுத்திரத்திலே. ஆதும்-முழுகுவோம்.

இவ்வாறன்றிச் சாத்துவிக குணம் அரி யென்றும் அரனென்றும்பொரு ளுரைத்துப் பிணங்குவர். 'உலகம் யாவையும்' என்னும் திருவிருத்தம் முதல் மூன்று பாட்டாலும் பொதுமையாற்பிரமத்தை வணங்கினன் கம்பன். இதுமகாகாவியமாகையால் இம் மூன்று பாட்டுக்கும் தனித்தனியே பொருள் விரிக்கிற் பெருகுமென வறிக.] (பி - ம்.) [1]'சிற்குணத்தின்' (உ)

6 வேதம் அலகில்லன : 'அநந்தாவைவேதா' (நக்க. 40, உரை.) உள்ளன-சத்தியமானவை. மெய்ந்நெறி நோன்மையன்-உலகத்துக்கெல்லாம் உண்மையான வழியைத் தருகிற பெருமையை யுடையவன் ; 313 ; சு. 12 : 37. மெய்நெறி :313 ; 'பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க நெறி' (குறள், 6.) பாதமே பற்று : சு. 12 : 37 ; பற்றிலார்-அகப்பற்று, புறப்பற்றுக்களோத் துறந்த ஞானிகள் ; 354, 366.

'மெய்ந்நெறி நோன்மையனுடைய பாதங்கள் ஆதியந்தம் அரியன ; அரியன-இல்லாதவை. யாவையும் ஒதினும் அலகில்லன-சகல கலைகளையும் அறிந்தவர்களாலும் அளவிடக் கூடாதவை. வேதமென்பன உள்ளன-வேதங்களானவை சிரசின்மேலே உண்மையாக வைத்திருக்கப் பெற்றன. பற்றிலார் அல்லன பற்றிலர்- எப்பற்றுக்களையும் துறந்த ஞானிகள் இப் பாதங்களே அல்லாமல் பிறவற்றைப் பற்ற மாட்டார்கள்' (ஓர் உரை.)

[ஆதியந்தம் அரியனவும் அலகில்லன வேதங்கள் உள்ளன என்பனவு மாகிய பாதம் எனக் கூட்டுக. 'வேதம் உள்ளன என்பன' என்று அன்வயம். மெய்ந்நெறி நோன்மையன்-உண்மை வழியான பெருமையுடையவன். பற்றி லர் பற்றிலார்-பற்றார்கள் ; விருப்பும் வெறுப்புமற்ற பெரியோர்கள். இவ் வாறன்றி, 'ஆதி அந்தமும் அரியென யாவையும் ஓதியும் அலகில்லென உளவென வேதமென்பன' எனப் பாடங்கொண்டு ஆதியிலும் அந்தத்திலும் அரியென்று சொல்லியும் வேதங்கள் பரத்துவத்தை யறியாமல் மயங்குமென உரைப்பாருமுளர்.]

'அலகில்லன உள்ளன வேதமென்பன யாவையும் ஓதினுர் பற்றிலார். ஆதியந்தம் அரியென மெய்ந்நெறியை அருளிச் செய்த நோன்மையனது பாதமல்லது பற்றிலர்' என்று பொருள் கொள்ளலுமொன்று. நாமும் அத் தகைய பாதங்களைப் பற்றுவோம் என்பது கருத்து.

(பி - ம்) [1]. மரியன', 'மரீயென', [2]. வுள்ளென', 'ஞரலதில் லென' [3] 'நன்மையன்'

(ஊ)

அவையடக்கம்

7 ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றெரு
பூசை முற்றவு நக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ.

8 நொய்தி னெய்யசொன் னூற்கலுற் றேனெனை
வைத வைவின் மராமர மேழ்தொளை
எய்த வெய்தவற் கெய்திய மாக்கதை
செய்த [1]செய்தவன் சொன்னின்ற தேயத்தே.

9 வைய மென்னை யிகழவு மாசெனக்
கெய்த வும்மிதி யம்புவ தியாதெனிற்
பொய்யில் கேள்விப் [1]புலமையி னேன்புகல்
தெய்வ [2]மாக்கதை மாட்சி தெரிக்கவே.

---

7 பூசை-பூஜை; 559; 2.4:100 கூ. 1 : 25; பூசா : மலைநாட்டு வழக்கு. பாற்கட .....புக்கென : 'முற்றப், பெருகு தெண்கடலுற்றுண் பெருநசை ஒருசு ணங்கனை யொக்குந் தகைமையே' (பெரிய. பாயிரம், 6.) ஆசைபற்றி அறையலுற்றேன் : 46; 'காதல் கிளரத் தமிழ் நூற்கலுற்றேன்' (சூளா. பாயிரம். 2.) காசு இல்-குற்றமில்லாத. கொற்றத்திராமன் கதை: இராமாயணம் முழுவதும் இராமனது வீரத்தையே கூறுவதாகும்; தனியன், 8, க, 15-6, 19, 23. அரோ : அசை. (சு)

8 நூற்கலுற்றேன் : 'இராமன் கதைமேற் றமிழ் நூற்கலுற்றேன்' (உத்தர. கடவுள். 5); 'தமிழ்நூற்கலுற்றேன்' (சூளா. பாயிரம்.) எனை = என்னை-என்ன பேதைமை! வைத வைவின் ..... எய்வதற்கு : சாபமொழி போன்றது அம்பு; 418, 559; கூ. 7:182; சு. 12:35; சு. 17: 116. வைதவைவின்... .....மாக்கதை; வைவு-வான்மீகி முனிவரது சாபம்; முனிவர் ஒருநாள் நீராடச் செல்லுகையில் ஆணும் பெண்ணுமாகக் கூடியிருந்த இரண்டு கிரவுஞ்சங்களில் ஆண் பறவையை வேடன் ஒருவன் அம்பாற் கொன்று வீழ்த்தப் பெண் பறவையின் துன்பதனைக் காணச் சகியாத முனிவர் 'மாநிஷாத ப்ரதிஷ்டாம்த்வம்' என்று தொடங்கும் ச்லோகத்தினுல் அவனைச் சபித்தார்; அந்த ச்லோகத்தின் காரணமாக இராமாயணம் தோன்றியதென்பர். மாக்கதை : 9, 14 செய்த செய்தவன் : 9, 13, 46, 107; சு. 18 : 24. சொல்-கவி; 'தேவர் குறளும் .....திருமூலர் சொல்லும்' (ஔவையார்) என்பதுபோல. சொல்லுக்கே கௌரவம் உண்டென்றபடி தேயம்-தமிழ் நாடு. (பி-ம்) [1] 'செய்தவர்' (சு)

9. வையம்-அறிஞர்கள். 'உலகமென்ப துயர்ந்தோர் மாட்டே.' பொய்யில் கேள்வி: 'பொய்யற்ற கேள்வியாற் புரையோரைப்படர்ந்து' (கலி. கச : 14.) புலமையினேன்-வான்மீகி. புலமையினோர் என்ற பாடத்

10 துறைய டுத்த [1]விருத்தத் தொகைக்கவிக்
குறைய டுத்த செவிகளுக் கோதின்யாழ்
நறைய டுத்த வசுணநன் மாச்செவிப்
பறைய டுத்தது போலுமென் பாவரோ.

11 முத்த மிழ்த்துறை யின்முறை [1]போகிய
உத்த மக் [2]கவி ஞர்க்கொன் றுணர்த்துவென்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் [3]பெறுபவோ.

12 அறையு மாடரங் கும் [1]மடப் பிள்ளைகள்
தறையிற் கிறிடத் தச்சருங் காய்வரோ
[2]இறையுங் கேள்வி யிலாதவென் புன்கவி
முறையி னாலுணர்ந் தோரு முனிவரோ.

துக்கு இராமகதையை வடமொழியில் எழுதிய பல அறிஞர்கள் என்ற பொருள் கொள்ளவேண்டும். தெய்விகமான இராமாயணக்கதை.

(பி மீ) [1] 'புலமையினோர்' [2] 'மாக்கவி' (சு)

10 துறை-சந்தபேதம்; அகமும் புறமும் ஆகியபொருட்கூறு எனினும் அமையும்; 'அவியசத்துறைகள் தாங்கி' (கூ. 5: 1.); '[உறையடுத்த செவி; உறை-இடம்.] அசுணமா: இது யாழ் முதலிய இன்னிசைக்கு மகிழ்ந்து பறை முதலிய கடிய ஓசைகளுக்கு வருந்தி மரழ்கும் என்பர்; இதனை நச்சினர்க்கினியர். 'இசை யறியும் விலங்கு' என்பர் (சீவக. 1402, நச்.); அசுணம்: உ 8:24; நற். 304; நான்மணிக். 2; நளா. காட்டுச். 28; பெருங். க. 47:241.2; வி பா. காண்டவ. 20; கூர்ம. இராமன் வனம்புகு. 6; மேருமந்தர. வைசயந்த. 44. பறை-பறை யோசை பா-விருத்தம்; தனியன் 4; நூல், 13. (பி-ம்.) [1] 'விருத்தக் கவித்தொகை' (எ)

11 துறை-பொருட் கூறுகள். [முத்தமிழ்-இயலிசை நாடகம்.] முறை போகிய-முறையே பயிற்சி மிக்க. பத்தர் சொன்னவும்-மூடபத்தியுடனே அடியார்கள் செய்த தோத்திரங்களும். பக்தியினலேஇலட்சணம் தெரியா மல் பாடினலும் குற்றம் பாராட்டாமல் பொறுத்து இரட்சிக்கவேண்டும் என்பது கருத்து. (பி-ம்.) [1] 'நோக்கிய' [2] 'கவிகட்' [3] 'பெறுவரோ' (அ)

12 ஆடரங்கு-நாடகசாலை. மடம்-அறியாமை. படப்பிள்ளைகள் (பி-ம்.) பட-உண்டாக. தறை=தரை. தச்சர்-சிற்பிகள். இறையும்-சிறிதும். புன்கவி: 120. (பி-ம்) [1] 'படப்' [2] 'இறையு ஞானமிலாத' (கூ)

நூல் வழி

13 தேவ பாடையி னிக்கதை செய்தவர்
மூவ ரானவர் தம்முளு முந்திய
நாவி ஞருரை யின்படி நான்றமிழ்ப்
பாவி ஞலி துணர்த்திய பண்பரோ.

நூலியற்றிய இடம்

14 நடையி னின்றுயர் நாயகன் றோற்றத்தின்
இடைநி கழ்ந்த விராமாவ தாரப்போர்த்
தொடைநி ரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயிற் றந்ததே.

ஏக விருத்த ராமாயணம்

வேறு

15 பராவரு மிராமன் மாதோ டிளவல்பின் படரக் கான்போய்
விராதனைக் கரனை மானைக் கவந்தனை வென்றி கொண்டு
மராமரம் வாலி மார்பு துளைத்தனை வருத்துப் பின்னர்
இராவணன் குலமும் பொன்ற வெய்துட னபோத்தி வந்தான்.

---

13 தேவபாடை-வடமொழி; 'பற்பலதேயவேந்தர் தொகுதலின்பாடை தேர்வான், அற்புட னெவருந் தேவ பாடையி னறைவர் மாதோ' (நைடத. சுயம், 7.) மூவர்: வான்மீகர் வஷிஷ்டர் போதாயனர் என்றும், வான்மீகர் வஷிஷ்டர் அகஸ்தியரென்றும், வான்மீகர் வியாஸர் போதாயனரென்றும் வான்மீகர் பாஸர் காளிதாசர் என்றும், சிலவனர் நாரதர் வான்மீகியென்றும் பலவாறுகூறுவர். நாவிஞர் வாக்கையுடையவர். ஆதிகவி யாதல்பற்றி 'முந்திய நாவிஞர்' என்றார். 'உணர்த்திய பண்பு ..... நாவிஞருரையின்படி' என்று முடிக்க. (கo)

14 நடையில் நின்று; நடை-நல்லொழுக்கம்; 'இராமன் நடையையும் கிருஷ்ணன் மொழியையும் அறிக' என்பது பழமொழி. நாயகன்-திருமால். தோற்றம்-அவதாரம். இடைநிகழ்ந்தவிராமாவதாரம்: [பரசுராமன் பலராமன் இவர்களுக்கிடையே அவதாரம் செய்த தசரத ராமன்.]

இராமாவதாரம்: இராமாயணத்தின் பெயர் இது; புறத்திரட்டில் இப் பெயரோடே இந்நூல் காணப்படுகிறது; 'இராமன் கதை' என்றும் பெயருண்டு; 22; இ. கோ. சூ. 7, உரை; ஒரு சுவடியில் இராமன் கதை என்றே காணப்படுகிறது, தொடை-எதுகை முதலியன. தோம்-குற்றம். மாக்கதை-மகாகாவியம்; 21; 'எடுக்கும் மாக்கதை' (பெரிய. பாயிரம்.) (கக)

15 இக்கவியில் இராமாயணம் முழுவதும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இராமபிரானது தோள்வலிக்கேற்ற செயல்களே இதிற் கூறப்பெற்றுள்ளன; 7, குறிப். (கஉ)

பயன்

வேறு

16 நாடிய பொருள்கை கூடு ஞானமும் புகழு முண்டாம்
[1]வீடியர் வழியு மாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை [2]நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் மேல்வலி கூறு வோர்க்கே.

வேறு

17 நன்மையுஞ் செல்வமு நாளு நல்குமே
தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே
சென்மமு மரணமு மின்றித் தீருமே
இம்மையே ராமவென் றிரண்டெ ழுத்தினால்.

18 வடகலை தென்கலை வடுகு கன்னடம்
இடமுள பாடையா தொன்றி னுயினும்
திடமுள ரகுகுலத் திராமன் றன்கதை
அடைவுடன் கேட்பவ ரமர ராவரே.

---

16 நாடிய-விரும்பும். பொருள் கல்வியும் செல்வமும்; நற்பொருள் செய்வார்க்கிடம் பொருள் செய்வார்க்குமஃதிடம்' (சீவக. 77.)

'ராம விஜயமாகிய இராமயணக் கதையைப் பாராயணம் பண்ணுகிற பேருக்கு யாவரும் விரும்பப்பட்ட கல்விப் பொருளும் செல்வப் பொருளும் அனுகூலமாகும்: ஆகவே இம்மையிலே கல்விப்பொருளினால் ஞானமுண்டாகும்; செல்வப்பொருளினால் தானதர்ம உபகாரங்கள் செய்யப்பட்டுக் கீர்த்தியுண்டாகும்; அப்படி இம்மையில் உண்டான ஞானத்தினாலே மறுமையிலே மோட்சமடையும் வழியைக் காட்டும்; தானதர்ம உபகாரமான கீர்த்தி உண்டாகவே ஸ்ரீ மகாலட்சுமியாகிய பிராட்டியாருக்கு மனசு சந்தோஷமாய் மோட்சமடைவதற்கு ஏதுவான கிருபாகோக்கத்தைப் பிரசாதிப்பாள்' (ஓர் உரை.) [இது தன்தொழிலும் பிறிதின் தொழிலும் மயங்கிய பாட்டு.]

பல பிரதிகளில் இது நூலின் முதற் பாட்டாகக் காணப்படுகிறது.

(பி - ம்)[1]: வீடியல் வழியதாகும்', 'வீடுபேர் வழியுமாகும்' (கரு)

17 நல்கும்-அளிக்கும். தின்மை-தீமை. இரண்டெழுத்தினால்-இரண்டெழுத்தையும் உச்சரிப்பதனால் என்று பொருள் கொள்க; என்ற இரண்டெழுத்தினால்; தொகுத்தல் விகாரம். ராம மந்திரப்பயன்: சு. 5: 71. இரண்டெழுத்தால் ஆம் பயன் இவ்விரண்டு என்று காட்டியது ஒரு நயம். (சசி)

18 வடகலை-வடமொழி. தென்கலை-தமிழ். வடுகு-தெலுங்கு. (கரு)

வேறு

19 வென்றிசே ரிலங்கை யானை வென்றமால் வீர மோத
நின்றரா மாய ணத்தி னிகழ்ந்திடு கதைக டம்மில்
ஒன்றினைப் படித்தோர் தாமு மூரைத்திடக் கேட்டோர் தாமும்
நன்றிது வென்றோர் தாமு நரகம தெய்தி டாரே.

வேறு

20 இராகவன் கதையி லொருகவி தன்னி
லேகபா தத்தினை யுரைப்போர்
பராவரு மலரோ னுலகினி லவனும்
பன்முறை வழுத்தவீற் றிருந்து
புராதன மறையு மண்டர்பொற் பதமும்
பொன்றுநா ளதனினும் பொன்று
அராவணை யமல னுலகெனும் பரம
பதத்தினை யணுகுவ ரன்றே.

வேறு

21 இறுவ ரம்பினி ராமவென்றோ ரும்பர்
நிறுவ ரென்பது நிச்சய மாதலான்
மறுவின் மாக்கதை கேட்பவர் வைகுந்தம்
பெறுவ ரென்பது பேசவும் வேண்டுமோ.

22 அன்ன தான மகிலநற் றூனமும்
கன்னி தானங் கபிலையின் றூனமும்
சொன்ன தான பலமெனச் சொல்லுவார்
மன்னி ராம கதைமற வார்க்கரோ.

---

19 வென்றிசேர் இலங்கையானை-முன்பு வெற்றியை யுடைய இராவணனை; வென்றிக் களிற்றை விரிதாரவன் வென்ற வாறும்' (சீவக. 14. ந.) வீரம் ஓத:7, குறிப். நரகமது ; அது : பகுதிப் பொருள் விகுதி. (கசு)

20 ஏகபாதம்-ஓர் அடி. அவனும்-அந்தப்பிரமனும். பொற்பதம்-பொன்னுலகு பொற்பத முதலியன அழியுநீர் மையன. (கஎ)

21 இறுவரம்பின்-அந்திய காலத்தில். உம்பர்-நித்தியசூரியர். 'அமரரேறே' (திருமாலை, 2.) நிறுவர்-நிலைத்து நிற்பார். மறு இல்-குற்றமற்ற. மாக்கதை : 14, அடிக். (கஅ)

22 அகிலம்-பூமி. கபிலை-பசு. சொன்னதானம் ; சொன்னம்-பொன். இராமகதை : 14, அடிக். (கக)

வேறு

23 மற்றொரு தவமும் வேண்டா மணிமதி லிலங்கை மூதூர்ச்
செற்றவன் விசையப் பாட [1]தெளிந்ததி லொன்று தன்னைக்
கற்றவர் கேட்போர் நெஞ்சங் கருதுவோ ரிவர்கள் பார்மேல்
உற்றர சாள்வர் பின்னு [2]மும்பராய் வீட்டிற் சேர்வார்.

வேறு

24 ஆதியரி யோநம நாராயணர் திருக்கதை
யறிந்தனு தினம்பரவுவோர்
நீதியனு போகநெறி நின்றுநெடு நாளதினி
றந்துசெக தண்ட முழுதுக்
காதிபர்க ளாயரசு செய்துள நினைத்தது
கிடைத்தருள் பொறுத்து முடிவில்
சோதிவடி வாயழிவின் முத்திபெறு வாரெனவு
ரைத்தசரு தித்தொ கைகளே.

வேறு

25 இனையநற் காதை முற்று
மெழுதினோர் வியந்தோர் கற்றோர்
அனையது தன்னைச் சொல்வோர்க்
கரும்பொருள் கொடுத்துக் கேட்போர்
கனைகடற் புடவி மீதே
காவலர்க் கரசாய் வாழ்ந்து
வினையம தறுத்து மேலாம்
விண்ணவன் பதத்திற் சேர்வார்.

---

23 உம்பர் - நித்திய சூரியர். சில பிரதிகளில் இச்செய்யுள் தனியன்களில் ஒன்றுகக் காணப்படுகிறது. (20)

(பி ம்.) [1]'தெரிந்ததில்' [2]'மும்பராயுலகிற் செல்வார்'

24 ஆதியரியோம் நம நாராயணர்: இங்கே இராமன் என்றபடி. 'ஓம் நமோ நாராயணு வென்றுரைத்துளமுருகி' (சு. 5: 23), நாராயணரென்பது நேகம்பன், ஓமாமற் சொன்ன வுறுதியால் - நோக; வாரென்றால் வ்ரென் பேன் வாளென்றால் வள்ளென்பேன், காரென்றால் கர்ரென்பேன் நான்' (தனிப். காளமேகம்.) அழிவில் முத்தி - பரமபதம். சுருதி - வேதம். (22)

25 புடவி - உலகம். வினையமது; அம்: சாரியை; அது: பகுதிப் பொருள் விகுதி; 201. மேலாம் விண்ணவன் - திருமால். (22)

1. ஆற்றுப் படலம்

கோசலமும் ஆறும்

26 ஆச லம்புரி யைம்பொறி வாளியும்
காச லம்பு முலையவர் கண்ணெனும்
பூச லம்பு நெறியின் புறஞ்செலாக்
[1]கோச லம்புனை யாற்றணி கூறுவாம்.

மேகங்களின் செயல்

27 நீற ணிந்த கடவு ணிறத்தவான்
ஆற ணிந்துசென் றூர்கலி மேய்ந்தகிற்
சேற ணிந்த முலைத்திரு மங்கைதன்
வீற ணிந்தவன் மேனியின் மீண்டவே.

---

26 [ஆசலம்-இடும்பை; அற்பமாகிய குற்றமுமாம்.] 'அந்தக ராசலம் வந்தா லுனையழை யாதிருப்பார்' (திருவரங்கத். 64.) ஐம்பொறிவாளி என்றது இங்கு ஆடவருடைய இந்திரியங்களை; வாளி-அம்பு. ஆடவரின் ஐம் பொறிகளும் ஒருங்கே செல்லக் கூடிய இடமாக உள்ளவர் பெண்கள்; 'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும், ஒண்டொடி கண்ணே யுள' (குறள், 1111.) அலம்பு-ஒலிக்கின்ற. பூசல்-போர்த்தொழிலமைந்த. நெறியின்புறம் செலா-ஒழுக்க நெறிதவறி அப்பாற் செல்லாத; எனவே. 'ஆடவர் தங்கள் தங்கள் ஸ்திரீகளிடத்தும், பெண்கள் தங்கள் தங்கள் நாயகரிடத்தும் அல்லாமல் பர நாரியரிடத்திலும் பர புருஷரிடத்திலும் காமஞ் செய்யாத' (ஓர் உரை.) ஐம் பொறியுங் காமமும் :'பெய்த வைம்பொறியும்பெருங் காமமும். வைத வெஞ்சொலின் மங்கையர் வாட்கணின், எய்த வைம்பெரு வாளியின்' (ச. 12:35.) கோசலம் புனை ஆறு: புனை என்றதனால் ஆறு மாலையாம்; குறிப்புருவகம். நாட்டுக்கு ஆறு அலங்காரம்: 'ஆறில்லா வூருக்கழகுபாழ்' (ஔவையார்.) ஒழுக்க நெறிக்கு நீர் காரணம்: 'நீரையின்றி யமையாது உலகாயின் எத்திறத்தார்க்கும் மழையின்றி ஒழுக்கம் நிரம்பா தென்று உரைப்பாருமுளர்' (குறள், உ0,பரி.) கதா நாயகன் நாயகிகளின் பெருமையை உடம்பொடு புணர்த்தலாற் பெற வைத்தார். (பி.ம்.)[1] 'கோசலம்புன லாற்றணி', 'கோசலம்புனலாறது' (க)

27 வான்-மேகங்கள்; எழுவாய். ஆறு அணிந்து-தாம் செல்லும் வழியை அலங்கரித்துக்கொண்டு. ஆர்கலி-கடல். மேய்ந்து: மேகங்களை மிருகங்களாகப் பாவித்தார்; 'மூல் கடல் குடிக்குமழை' (பரி. அ:32); 'எம்ம கோததியும் மாய மேய் மேகம்' (தக்க. 421.) வீறு-முலைமேல் தோற்றும் வீற்றுத் தெய்வம். மேனியின்-திருமேனியின் நிறம்போலக் கறுத்து. ஒப்பு:சீவக. 32. (உ)

28 பம்பி மேகம் பரந்தது பானுவால்
நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினான்
அம்பி [1]னாற்றுது மென்றகன் குன்றின்மேல்
இம்பர் வாரி [2]யெழுந்தது போன்றதே.

29 புள்ளி மால்வரை [1]பொன்னென நோக்கிவான்
வெள்ளி வீழிடை [2]வீழ்த்தெனத் தாரைகள்
உள்ளி [3]யுள்ளவெல் லாமுவந் தீயுமவ்
வள்ளி யோரின் வழங்கின மேகமே.

---

28 பம்பி-ஒலித்து; திணைமொழியைம். 17. [சென்று நெருங்கி என்பாருமுளர்.] எழுந்து என்றுமாம். மேகம்:பன்மை. நம்பன்-நமக்குச் சிறந்தான்; நம்பன் மாதுலன்-சிவ பெருமானின் மாமனாகிய இமவான். அம்பின்-நீரால். ஆற்றுதும்-தணிவிப்போம். வாரி-கடல். நிறம் பற்றியும் பரப்புப் பற்றியும் அதிக நீரைத் தன்னிடங் கொண்டிருத்தல் பற்றியும் கடல் மேகத்துக்கு உவமை.

'மேகம் பரந்த வாரி எழுந்தது போன்றது' என்று முடிக்க; 'சூனிற முகிற்குலம்.....நெடுங்கடல் வாரி மூரிவான், மேனிரைத்துள தெனமுழக்க மிக்கதே'(ச. 7:6) 'நம்பனாகிய மாதுலன் வெம்மையை நண்ணினானென்று கடல் எழுந்தது போலும்' என்பாருமுளர்; இமயமலையிற் பிறந்துவரும் ஆறுகளை மணத்தலாற் கடல் இமவானுக்கு மருகனாவான்.

(பி-ம்.) [1]'னாட்டுது' [2]'யெழுந்தன போன்றவே' (௩)

29 புள்ளி மால்வரை-இமயமலை; 'புள்ளிமா நெடும் பொன்வரை' (ச. 8:19, ரு. 7: 53.) புள்ளி - நன்மதிப்பு. [புள்ளி-இலக்கு; பல நிறமுமாம்.] இமயம் பொன்னிறமானது; 'பொற் கோட்டிமயம்', 'பொன்னுடை நெடுங்கோட்டிமயம்' (புறநா உ, ௩௬௯); 'இமயப்பொருப்பகஞ் சேர்ந்த... ...காக்கையும் பொன்னிறமாயிருக்கும்' (யா. கா. அவை.) நோக்கி: நோக்கல் நோக்கம். வெள்ளிவீழ்; வீழ்-விழுதுகள். மழைத்தாரைகளுக்கு வெள்ளி வீழ்; 'வெள்ளி வெண், கோல் நிரைத்தன போற் கொழுந்தாரைகள்' (சீவக. 33.)

1—2. 'இது பொன்மலையானதால் இதனிடத்திலே வருஷிக்கிறது நமக்கு யோக்கியமென்று ஆகாசமானது வெள்ளி விழுதுகளை நெடுக இறக்கினதுபோல் மேகங்கள் தாரைகளைச் சொரிந்தன' (ஓர் உரை.) உள்ளி- தம்மிடம் உள்ளன யாவை என்று எண்ணி; இரவலர் கேளாமுன் தாமே நினைந்து; 'குறிப்பறிந்தீதலே கொடை' (நைடத. நளன்றூது.) உள்ளி.....வள்ளியோர்: 'வள்ளியோ ரீகை வரையாதுபோல' (கல். 27.) வள்ளியோரின் வழங்கின மேகம். 'அவன் வண்மை போல்வானம் பொழிந்த நீர்' (பரி. உஉ: 7-8); 'அவன் கொடைபோன்மெனப் பொழிந்த' (நைடத. நாடு. 2.)

(பி-ம்) [1]'மாமேரு' [2]'பொன்னெனல்' [3] 'வீழ்ந்தன தாரைகள்' 'யுள்ளதெல்', 'யுள்ளியுள முவந்' (ச)

வெள்ளப் பெருக்கு

30 [1]மான நந்தல ஞகி மனுநெறி
போன [2]தண்குடை வேந்தன் புகழென
ஞான [3]முன்னிய நான்மறை யாளர்கைத்
தான மென்னத் தழைத்தது நீத்தமே.

நீத்தத்துக்கு உவமைகள்

31 தலையு மாகமுந் தாளுந்[1]தழீஇயதின்
[2]நிலைநி லாதிறை நின்றது போலவே
மலையி [3]னுள்ளவெல் லாங்கொண்டு மண்டலால்
[4]விலையின் மாதரை யொத்தது வெள்ளமே.

32 மணியும் பொன்னும் மயிற்றழைப் பீலியும்
அணியு மாணவெண் கோடு [1]மகிலுந்தன்
இணையி லாரமு மின்னகொண் டேகலால்
வணிக மாக்களை [2]யொத்தது வாரியே.

---

30 [மானம்-பெருமை ; அபிமானம் என்னலுமாம்.] நந்தலஞகி-கெடாதவ ஞகி. நேர்ந்து (பி-ம்.)-பொருந்தி. நோக்கி (பி-ம்.)-பொருளாக நினைத்து. வேந்தன்-தசரதன் ; கதாபாத்திரங்களுக்குத் தொடர்புள்ளவற்றை உவமையாகக் கூறுவது கவி மரபு ; பரி. 22 : 1-8 ; சீவக. 32 ; நைடத. நாடு. உ. வேந்தன் புகழ் : 65. தழைத்தது-பரந்தது.

ஞான.....மறையாளர் : 'ஞான நன்னெறி நல்வரம் பாயோன்' (சிலப். கடி : 42) ; 'தானத்தாற்.....ஞானத்தால்.....நாட்டு' (சிறு பஞ்ச. 36.) ஞான.....தானமென்னத் தழைத்தது : 459 ; 'உறக்குந் துணையதோர் .....அறப்பயனும், தான் சிறிதாயினுந் தக்கார்கைப் பட்டக்கால், வான் சிறிதாப் போர்த்து விடும்' (நாலடி. 38) ; 'தினைத்துணை நன்றி செயினும், பனைத்துணையாக், கொள்வர் பயன்தெரி வார்' (குறள், 104.) இங்கே 'தானமென்றது தசரத சக்கரவர்த்தி செய்த தானத்தை' (ஓர் உரை) ; 184.

(பி ம்) [1] 'மான நேர்ந்தற நோக்கி,' 'மான நேர்ந்தற ஞேக்கு' [2] வெண்குடை' [3] 'முந்திய' (கு)

31 தலை ஆகம் தாள்-(மலையைக் குறிக்குங்கால்) சிகரம், பக்கம், அடிவாரம்; தாள்-பாதசைலம்; 161. தழீஇ-தழுவி. அதின்-அத்தழுவலின். இறை-சிறிது பொழுது. மலையினுள்ளவை இன்னவை யென்பது அடுத்த கவியால் விளக்கமுறும்.

(விலை மாதர் தேடிய பொருளெல்லாம் பிறந்த அகத்துக்கே யாதலால் மலையிலுள்ள பொருளெல்லாம் கடலினிடம் சென்றன.)

(பி-ம்) [1] 'தழீஇயற' [2]. 'நிலையிலா' [3] 'னுள்ளதெல்லாங்' 'விலை கொண்' [4]. (கூ)

32 தழைப் பீலி - இறகுகளாகிய கலாபம் ; தழை - இறகு. அணியும் - அழகு செய்யும். ஆரம்-சந்தனம்.

(பி-ம்:) [1] 'மகிலகல்' [2]: யொத்ததவ்' (எ)

33 [1]பூநி ரைத்துமென் ருது பொருந்தியும்
தேன ளாவியுஞ் [2]செம்பொன் விராவியும்
[3]ஆனை மாமத மாற்றெ டளாவியும்
வான வில்லை நிகர்த்தது வாரியே.

34 மலையெ டுத்து மரங்கள் [1]முறித்துமா
டிலைமு தற்பொருள் யாவையு மேந்தலால்
அலைக டற்றலை யன்றணை வேண்டிய
[2]நிலையு டைக்கவி [3]யொத்தது நீத்தமே.

35 ஈக்கள் வண்டொடு மொய்ப்ப வரம்பிகந்
தூக்க [1]மேமிக வுட்டெளி வின்றியே
தேக்கெ றிந்து வருதலிற் றீம்புனல்
வாக்கு தேனுகர் மாக்களை மானுமே.

36 பணைமு கக்கரி யானைபன் மாக்களோ
டணிவ குத்தென வீர்த்திரைத் [1]தார்த்தள்ளி
[2]மணியு டைக்கொடி [3]வந்துமுந் தூன்றலால்
புணரி மேற்பொரப் போவது போன்றதே.

---

33 நிரைத்து – வரிசைப்படுத்தி. தாது – மகரந்தப்பொடி. விராவியும் – கலந்தும். வாரி – வெள்ளம். வானவில் ஐவண்ணமுமுடையது என்பர் : பூ வெண்மை, தாது பொன்மை, தேன்சிவப்பு, 'பொன்பசுமைஆனைமதம்கருமை. ஆனைமதம் கரியதென்பது, 'கருங் கட மூன்றுகு நால்வாய்க் கரி' (திருச்சிற். 55) என்பதனால் விளங்கும். தமிழர் நிறங்களை ஐந்தாகக் கூறுவது மரபு.

(பி – ம்) [1]'பூநிரைத்த மென்' [2]'செம் பொனளாவியும்' [3]'ஆனை மாமத வாற்றெ டளாவியும்' [4]'மான மாமணி யும்வரன் றேகலால்' (அ)

34 மாடு – பக்கத்திலுள்ள. மரங்கள்.....ஏந்தலால் : 40 அலை கடல் : வினைத்தொகை; 'திரியுந்திரைக் கடல்' (க. 7; 42) தலை: ஏழனுருபு. கவி –. வானரசேனை. நீத்தம்'- வெள்ளம். கவிகள் மரங்களைப் பறித்து வந்தமை : (சு. 7. 55-56). காவியங்களில் பின் நிகழ்ச்சிகளை முன்னே உவமையாகக் கூறுவது கவிமரபு.

(பி – ம்.) [1]'தரித்து', 'பரித்து' [2]'கலையுடைக்கவி' [3]'நீத்தமந்' (கூ)

35 வரம்பிகந்து. – எல்லை கடந்து. தேக்கெறிந்து – தேக்க மரங்களை எறிந்து; ஏப்பம் விட்டு. வாக்கு தேன் – வார்க்கின்ற கள்.

(பி – ம்) [1]'மேமிகுந்துட்டெளி'

36 பணை – கொம்பு. மாக்கள் என்றது சேனையைக் குறிக்கும்போது குதிரைகளும் காலாட்களு மென்றும். வெள்ளத்தைக் குறிக்கும்போது சிங்கம். யாளி, புலி, காட்டுப்பசு, பன்றி முதலிய விலங்குகள் என்றும் பொருள் படும். ஆர்த்து – ஆரவாரம் பண்ணி. அள்ளி – வாரி. மணிக் (கo)

சரயுவின் பெருமை

37 இரவி தன்குலத் தெண்ணில்பல் வேந்தர்தம்
[1]புரவு நல்லொழுக் கின்படி பூண்டது
சரயு வென்பது தாய்முலை யன்னதிவ்
[2]வுரவு நீர்நிலத் தோங்கு முயிர்க்கெலாம்.

குறிஞ்சி

வேறு

38 கொடிச்சிய ரிடித்த சுண்ணங் குங்குமங் கோட்ட மேலம்
நடுக்குறு சாந்தஞ் சிந்தூ ரத்தொடு நரந்த நாகம்
[1]கடுக்கைநாள் வேங்கை கோங்கு பச்சிலை கண்டில் வெண்ணெய்
அடுக்கலி னடுத்த தீந்தே னகிலொடு நாறு மன்றே.

கொடி – அழகையுடைய பூங்கொடிகள். ஒலிக்கும் மணிகட்டியதுவசங்கள். ஊன்றல் – நாட்டுதல்; 'அகலிரு விசும்பினூன்றும்' (புறநா. உஉஅ.) கொடியை முன்னே செல்ல விடுதலும் அதனை ஊன்றலும் போர் செய்வோர் மரபு.

(பி ம்.) [1]'தார்த்தலின்', 'தார்த்து வெண்' [2]'மணிநுரைக் கொடி' [3]'தோன்றவந் தூன்றலால்' (கக)

37 ஆற்றின் ஒழுக்கத்துக்கும், மனுகுலத்தரசர் ஒழுக்கத்திற்கும் பொதுத் தன்மை தூய்மையும் இடையறுமையுமாம். புரவு – காத்தல். 'சரயு: மானஸ ஸரலிலிருந்து வருவது; 428; வைவஸ்வதமனு ஓரம்பினால் மானஸ ஸரவின் கரையை யுடைத்து இந்நதியை வருவித்தாரென்பது வரலாறு. சரயு தாய் முலையன்னது: 'மன்னுயி ரேமுற மலர் ஞாலம் புரவீன்று பன்னீராற் பாய்புனல் பரந்நூட்டி... ..வகுல் யாறு' (கலி. நெ: 1 – 3); 'புனிறு தீர் குழவிக் கிலிற்றுமுலை போலச், சுரந்த காவிரி' (புறநா. சுஅ: 8 – 9) சரயு வளர்ப்புத்தாய்: ரகு. கங: 62; 'வாழியவன்றன் வளநாடு மகவாய் வளர்க்குந் தாயாகி .....வாழி காவேரி' (சிலப். எ: 27); உரவு நீர் – உலாவுங் கடல் (பு. வெ. 231 உரை); மிகுதியான நீருமாம்; உரவு – பரத்தல்.

(பி – ம்) [1]'பரவு' [2]. உரவு நீணிலத்தில்' (கஉ)

38 கொடிச்சியர் – குறிஞ்சிநில மகளிர். சுண்ணம் – வாசனைப்பொடி. கோட்டம் – வாசனையும் காரமும் உள்ள ஒருவகைப் பூடு: 'கடலிடைக் கோட்டந் தேய்த்துக் கழிவது கருமம் மன்றால்' (சூ. 15: 145); இது கொட்டமென்றும் வழங்கும். 'கொட்டமே கமழும்' (திருஞான. தே.); மலைநாட்டு வழக்கு; வைத்திய நூல்கள் குட்டம் என்று கூறும். நடுக்குறு

பாலை

39 எயினர்வாழ் சீறூ ரப்பு
மாரியி னிரியல் [1]போக்கி
வயின்வயி னெயிற்றி மாதர்
வயிறலைத் தோட [2]வோட்டி
அயின்முகக் கணையும் வில்லும்
வாரிக்கொண் டலைக்கு நீரால்
[3]செயிரறுங் கொற்ற மன்னர்
சேணையை மானு மன்றே.

முல்லை

40 செறிநறுந் தயிரும் பாலும்
வெண்ணெயுஞ் [1]சேந்த நெய்யும்
உறியொடு வாரி யுண்டு
குருந்தொடு மருத முந்தி
[6]மறிவிழி யாயர் மாதர்
[3]வனைதுகில் கவரு நீரார்
பொறிவரி யரவி னுடும்
புனிதனும் போன்ற தன்றே.

சாந்தம் - அரைத்துப் பூசினுல் நடுக்க முறுவிக்கும் சந்தனமரம். சிந்தூரம் - ஒருமரம். நரந்தம் - நாரத்தை. நாகம் - சுரபுன்னை. கடுக்கை - கொன்றை. நரள் வேங்கை - மணநாளை அறிவிக்கும் வேங்கை. (திணைமாலை நூற். 18, 20, 31.) ஆர் என்னும் பாடத்துக்கு ஆத்தி என்பது பொருள். பச்சிலை - தமாலம் என்னும் மரம். கண்டில் வெண்ணெய் - ஓமாலிகை என்னும் திரவியங்கள் முப்பத்திரண்டினுள் ஒன்று; (சீவக. 623, ந.) யானைக் கன்று பிறந்தவுடன் பால் அருந்துமுன் கழித்த மலம் என்பர்; கரிகூதம் என்பது இதன் வட மொழிப் பெயர்களுள் ஒன்று; ஒரு பூண்டென்பாரு முளர்.

(பி - ம்) [1]'கடுக்கையார்'

(கஉ)

39 எயினர் - வேடர்; பாலைநில மக்கள். அப்புமாரி - நீரின் மிகுதி, நீரை மிகுதியாகச்சொரியும் மழை' அம்புகளாகியமழை; சிலேடை. இரியல்போக்கி - ஓட்டி, நிலைகெட்டு ஓடச்செய்து. அயின் முகக்கணை - கூரிய முனைகளை யுடைய அம்புகள். பகைவரை வென்று அவருடைய பொருள்களைக் கைப்பற்றிக் கொள்ளுதல் வழக்கம். செயிர் அறும் கொற்றம் - குற்றமில்லாத வெற்றி. செயிர்தரு கொற்றமன்னர் (பி - ம்) = குறுநில மன்னர். அலைக்கும் நீரால்; நீரால் - ஜலத்தினுல், தன்மையால்; சிலேடை.

(பி - ம்) [1]'போக' [2]'வோடி' 'செயம் வருங்', 'செயிர்தரு

(கக)

40 செறிநறுந்தயிர் - கட்டித்தயிர்; 'பாறை படுதயிர்' (சீவக. 426.) 'பாறை படு வெண்டயிர்' (கூர்ம. கண்ணனவ. 111) சேந்த - சிவந்த. குருந்தொடு மருதம் உந்தி - குருந்த மரத்தையும் மருத மரத்தையும் தள்ளிக்கொண்டு;

மருதம்

41 கதவினை முட்டி மள்ளர்
கையெடுத் தார்ப்ப [1] வோடி
நுதலணி யோடை பொங்க
நுகர்வரி வண்டு கிண்டத்
ததைமணி சிந்த வுந்தித்
தறிபிறத் தடக்கை [2] சாய்த்து.
[3] மதமலை போலக் நீத்தம்
மருதஞ்சென் [4] றடைந்த தன்றே.

தினை மயக்கம்

42 முல்லையைக் குறிஞ்சி யாக்கி
மருதத்தை முல்லை யாக்கிப்
புல்லிய நெய்த றன்னைப்
பொருவரு மருத மாக்கி
எல்லையில் பொருள்க ளெல்லா
மிடைதடு மாறு நீராற்
[1] செல்லுமக் கதியிற் செல்லும்
வினையெனச் சென்ற தன்றே.

'கொல்லையஞ் சாரற் குருந் தொசித்த மாயவன்' (சிலப். ஆய்ச்சியர்.); 'நீனிறவண்ண னன்று நெடுந்துகில் கவர்ந்து தம்முன், பானிற வண்ண னெஞ்கிற் றழியுடைத் தென்று.....தொழுனை யாற்றுட், கோனிற வாளையினுர்க்குக் குருந்தவ னெளித்தது' (சீவக. 209); மருதம் முரித்தது யசோதை உரலொடு கண்ணனைக் கயிற்றினுல் பிணித்த அன்று. மறிவிழி - மான்போன்ற விழியையுடைய. அரவு - காளியன் என்னும் பாம்பு. புனிதன் - கண்ணன்.

(பி - ம்) [1] சேர்ந்த', 'சேர்த்து' [2] மறியுடை" [3] வளைதுகில்' (கடு)

41 கதவு - மதகுகளை அடைத்த கதவு; கோட்டையின் கதவு; கதவுகளை யானை முட்டல்: 'களிறும் கதவிற் பாய்ந்த' (பு. வெ. 107-) மள்ளர் - உழவர், போர் வீரர். ஆர்ப்ப - ஆரவாரஞ் செய்ய. நுதல் அணி ஓடை - சொல்லப் பட்ட அழகிய ஓடை என்னும் நீரோட்டம்; யானையின் நெற்றிப்பட்டம். ததைமணி - நெருக்கமாக உள்ள ஒளிவிடும் மணிகள், ஒலிக்கும் மணிகள்; யானைக்கு மணி கட்டுவது வழக்கம். தறி - வெள்ளத்தைத் தடுக்க நட்ட குதிரை மரங்கள் முதலியன, யானைகட்டும் கம்பம். தடக்கை - குளக்கரை; துதிக்கை. மதமலை - யானை. யானை ஆற்றுக்கு உவமை. 'மதில்கொல் யானை யிற்கதழ்பு நெறிவந்த, சிறையழி புதுப்புனல், (ஐங். எஅ); 'வெலற்கருங் குஞ்சரம் வேட்டம் பட்டென..... நிலைப்படா நிறைந்தன' (சீவக. 41.)

(பி - ம்) [1] வேகி' [2] யோச்சி' [3] மதமழை யானை' 'யென்ன' [4] றடைந்த மாதோ' (கக)

42 புல்லிய நெய்தல் - புன்புலம். மருதத்தைப் புல்லிய நெய்தலுமாம். புல்லுதல் - தழுவுதல். பொருவரு - ஒப்பு இல்லாத. தடுமாறல் - ஒன்றிருக்க வேண்டிய இடத்தில் மற்றொன் றிருத்தல்; 'தடு மாறுருபுகள்' (இ. கொ.

பல கால்களாகப் பிரிதல்

43 [1]காத்தகான் மள்ளர் வெள்ளக்
கலிப்பறை கறங்கக் கைபோய்ச்
சேர்த்தநீர்த் [2]துவலை பொன்னு
[3]முத்தமுந் திரையின் வீசி
நீத்தம்வான் [4]றலைய தாகி
நிமிர்ந்தபார் கிழிய நீண்டு
கோத்தகா [5]லொன்றே டொன்றின்
குலமெனப் [6]பிரிந்த தன்றே.

வேற்றுமை. 49.) செல்லுமக் கதியிற் செல்லும் வினையெனச் சென்றது: 'ஒரு சனனத்திலே பண்ணின வினை வேறொரு சனனத் திலே வந்து சனனங்களெல்லாம் தொடர்ந்து வருகிறது போல இருந்தது' (ஓர் உரை.) வினையாற் பலகதியிற் பிறத்தல். 100, 425; 'நாவாய்..... அங்கொடிங் கிழித்தி யேற்று மமைதியி னமர்வையத், திங்கொடங் கிழித்தி யேற்று மிருவினை யென்னலான' (உ. 11 : 46)

[வினையானது தேவரை மனிசராக்கியும், அவரை இழிகுலமாக்கியும், இழிகுலத்தை மிருகமாக்கியும் செய்வது போல ஒரு நிலத்துப் பொருளை மற் றொரு நிலத்துப் பொருளாக்கிற்று வெள்ளம்.] (பி-ம்.) [1]: செல்லுறு' (கஎ)

43 காத்த - அணைகள் தண்ணீரைக் காத்துக் கொண்டிருந்த. கார்த்த (பி-ம்)-கறுத்த; 'கருங்கான் மள்ளர்' (திருவிளை. நாட்டு. 25.) கலிப் பறை ஒலியையுடைய பறை. கறங்க-ஒலிக்க. வெள்ளத்தை யடக்கப்பறை யறைதல் : வையைத்திரைச் சிறையுடைத்தன்று கரைச்சிறை யறைகெனும், உரைச்சிறைப்பறையெழ' (பரி. கூ : 22-4) ; 'மன்றறிகழ்தென்கரை கடந்து மதுரை நகர் புகக்கண்டு, துன்றுமிரவிற் பறையறையுஞ் சும்மை கேட்டு' (திருவால. கூ0 : 5); 'வெறித்தடக்கை மதயானை மந்திரிகள் வேறு வேறு பல குடிகளும்.....அறுத்து விட்டு நகரெங்கணும் பறையறைந் தழைத்து' (திருவிளை. மண் சுமந்த. 3.) கரைகாப்பவர் ஆர்த்தல் : 'கவ்வையுங் கடும்புன லொலியுங் காப்பவர், செவ்வனூருயிரஞ் சிலைக்கும் பம்பையும்' (சீவக. 42.) கைபோய் விரைந்து சென்று ; ஒழுங்காகச் சென்று. துவலை-துளி ; 'தூதனிட்ட மலையின் றுவலையால்' (சு 7 : 37.) கோத்தகால்.....பிரிந்த : 'ஆதியிலே ஒரு நதியாய்ப் பின்பு வேறுவேறுனது எப்படியிருந்த தென் றால். ஆதிகாலத்திலே பிரம்மாவினிடத்திலே பிறந்த பிரமவங்கிசமானது பின்பு அனந்தம் குலங்களாகப் பிரிந்தது போலும் இருந்தது' (ஓர் உரை.) [குலம் ஒன்றில் அனேகம் பெயர் உற்பவித்தாற்போல ஆற்றில் கால்கள் பல பிரிந்தன.] 'பிரிந்ததன்றே' என்பதற்கு நீத்தம் எழுவாய்; 'பிரிந்தவன்றே' என்ற பாடத்துக்குக் 'கோத்த கால்' எழுவாய் ; கால்-கள்.

(பி-ம்.) [1] 'கார்த்தகான்', [2] : திவலை', [3] 'முத்தெறடு', [4] : தலையவாகி, [5]லொன்றொ டொன்றின்', [6] : பிரிந்தவன்றே',

(கஅ)

44 கல்லிடைப் பிறந்து போந்து
கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையின் [1]மறைக ளாலு
மியம்பரும் பொருளீ தென்னத்
தொல்லையி னெண்மே யாகித்
துறைதொறும் [2]பிரிந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயஞ் சொல்லும்
பொருளும்போற் [3]பரந்த வன்மே.

புனல் எங்கும் பரத்தல்

45 காதுகு சோலை தோறுஞ்
[1]சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும்
[2]புதுமணத் தடங்க டோறும்
மாதவி வேலிப் பூக
வனந்தொறும் வயல்க டோறும்
ஓதிய வுடம்பு தோறு
முயிரென வுலாய தன்மே.

---

44 கல்-இமயமலை கல்லிடை.....நீத்தம்: 'மலைத்தலைய கடற்காவிரி' (பட்டினப். 1.) பொருள் பரப்பிரமம்; 3. துறை தொறும்-இடங்கள் தோறும்; அந்த அந்தச் சமயங்கள் தோறும், சூழ்ச்சி-சூழ்ச்சியால்; 'தடக்கை பிடித்தான்' (1338) என்பது போல.

ஒப்பு: 'ஒன்றுகி மூலத்துருவம் பலவாகி யுணர்வு முயிரும் பிறி தாகி' (கூ. 2 : 30.)

(பி-ம்.) [1] 'மறைகளுலும்' [2] 'பரந்த' [3] 'பரந்த தன்றே' (கக)

45 சந்தனக்காடு (பி - ம்): 'சந்தக்காவெலாம்' (47.) போதவிழ் பொய்கை-அரும்புகள் மூறுக்கு அவிழ்கின்ற பொய்கை; பொய்கை-மானிட ராக்காத நீர்நிலை (சீவக. 338, நச்.) புதுமணத் தடங்கள்-புதுமணத்தைக் கொண்ட தடாகங்கள். மாதவி-குருக்கத்தி. பூகவனம்-கமுகந் தோட்டம்.

ஓதிய வுடம்பு - காற்கதி முதலியவாக நூல்களால் ஓதப்பட்ட உடம் பினை. உடம்புதோறும் உயிர்: மகத் பரிமாணம், மத்திம பரிமாணம், அணு பரிமாணம் என்ற மூன்றில் இது மத்திம பரிமாணம்; மத்திம பரிமாண மாவது புலப்பட்டும் புலப்படாமலும் இருத்தல்; 'வ்யக்தா வ்யக்தம்' எனப் படும். 'ஜீவன் ஒன்றே பல உடல்களை எடுத்துக் கொள்கிறது' என்ற கொள் கையை ஒட்டிக் கம்பர் இதனைக் கூறினர். 'வானின்றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும், ஊனு முயிரு முணர்வும்போ லுள்ளும் புறத்து முளனென்ப' (உ. 1 : 1.) ஓதிய.....வுயிரென - 'சந்தச் சென்ன மெடுப் பினும் அந்த அந்த உடம்புகளிலே போய் நுழையப்பட்ட ஆத்மாவைப் போல' (ஓர் உரை.)

(பி-ம்.) [1] 'சந்தனக்காடு', 'சண்பகக் காவு' [2] 'புதுமணற்றடங்கள்' (உ)

2. நாட்டுப் படலம்

46 வாங்கரும் பாத நான்கும் வகுத்தவான் மீகி யென்பான்
தீங்கவி செவிக ளாரத் தேவரும் [1] பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை யன்பெனு [2] நறவை மாந்தி
மூங்கையான் [3] பேச லுற்ற னென்னையான் மொழிய லுற்றேன்.

47 வரம்பெலா முத்தந் தத்து மடையெலாம் பணில மாநீர்க்
குரம்பெலாஞ் செம்பொன் மேதிக் குழியெலாங் கழுநீர்க் கொள்ளை
பரம்பெலாம் பவளஞ் சாலிப் பரப்பெலா மன்னம் பாங்கர்க்
[1]கரும்பெலாஞ் செந்தேன் சந்தக் காவெலாங் களிவண் டூட்டம்.

48 ஆறுபா யரவ மள்ள [1]ராலெபா யமலை யாலைச்
சாறுபா யோசை வேலைச் [2]சங்கின்வாய் பொங்கு மோதை
ஏறுபாய் தமர நீரி லெருமைபாய் துழனி யின்ன
[3]மாறுமா றுகித் தம்மின் [4]மயங்குமா மருத வேலி.

---

46 வாங்கரும்-வாங்குதற்கரிய; அவர் பாடிய சுலோகத்தில் ஓர் அடியை எடுத்து விட்டுப் புதிதாக ஒன்றைப் புகுத்த முடியாது என்பது கருத்து. பாதம் நான்கு-நான்கு அடிகள். நான்கு பாதங்களாலான சுலோகம் வான்மீகிக்கு முன்பில்லை; இவரே முதலிற் செய்தவர்; ஆதலின் இவர் ஆதிகவி. வான்மீகியின் தீங்கவி; 'வசையறுமதுர வான்மீகி (உத்தர. 15 : 142.) தேவரும் பருகச் செய்தான்: 'இரக்க மின்மை யன்றே வின்றிவ் வுலகங்க ளிராமன், பரக்குந் தொல்புக ழழுதினைப் பருகுகின்றதுவே'; 'வானோர் கேள்விச் செல்வந் துய்க்க வயிற்றோர் கிளைதந்தாள்' (உ. 2 : 88, 5 : 69)

வான்மீகி ராமாயணத்தின் பலச்ருதியில், 'தேவருங் கேட்டு மகிழ்ந் தனர்' என்பர். தேவரும்: உம்மை உயர்வு சிறப்பு; அசனரான தேவரும் பருகினர் என்பது ஒரு நயம். நறவம் - தேன்.

(பி - ம்) [1]'பரச்' [2]'நறவ' [3]'மொழிய'

(க)

47 பணில மென்றது முத்திற்குக் காரணம் கூறியது; வரம்பில் முத்தை மீன்ற பணிலம் மடையிலுள்ள தென்றபடி. குரம்பு - அணை. மேதி - எருமை. மேதிக் குழியெலாங் கழுநீர்: 'குழியெலாங் கழுநீராகி' (980); 'கழுநீர் மேய்ந்த கயவாயெருமை' (சிறுபாண். 42.) பரப்பு - பரம்படிக்கும் பலகை; 52. சாலி - உயர்ந்த சாதி நெல்வகை; 'சாலி நெல்லின் சிறைகொள் வேலி' (பொருந. 246.) சாலிப்பரப்பில் அன்னம்: 51. கரும் பெலாம் செந்தேன்: 'கரும்பி னினிமடற் றிறுத்த நிறையுறு தீந்தேன்' (பெருங். க. 48 : 146 - 7); 'தீங்கரும் பெருத்திற் றூங்கி யீயின்றி யிருந்த தீந்தேன்' (சீவக. 712.) (பி - ம்.) [1]'கரும் பெலாம்'

(உ)

48 அரவம், அமலை, ஓசை, ஓதை, தமரம், துழனி: ஒரு பொருட் சொற் கள். மள்ளர் - உழவர். வேலை - கரை.

(பி - ம்.) [1]'ராலெவா யமலை' [2]'சங்குவாய்' [3]'மாறு மாறுடிப் பாடை', 'மாறு மாறுகிப் பாடை' [4]'வயங்குமா'

(ங)

49 தண்டலை மயில்க ளாடத் தாமரை [1]விளக்கந் தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக் [2]குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி [3]மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கும் மாதோ.

50 தாமரைப் படுவ வண்டுந் தகைவரு திருவுந் தண்டார்க்
காமுகர்ப் படுவ மாதர் கண்களுங் காம னம்பும்
மாமுகிற் படுவ வாரிப் பவளமும் வயங்கு முத்தும்
நாமுதற் படுவ மெய்யு நாமநூற் பொருளு மன்னே.

51 நீரிடை யுறங்குஞ் சங்க நிழலிடை யுறங்கு மேதி
தாரிடை யுறங்கும் வண்டு தாமரை யுறங்குஞ் செய்யாள்
தூரிடை யுறங்கு மாமை துறையிடை யுறங்கு மிப்பி
போரிடை யுறங்கு மன்னம் பொழிலிடை [1]யுறங்குந் தோகை.

52 படையுழ வெழுந்த பொன்னும் பணிலங்க ளுயிர்த்த முத்தும்
இடறிய பரம்பிற் காந்து மினமணித் தொகையு [1]நெல்லின்
மிடைபசுங் கதிரு மீன்ற மென்கழைக் கரும்பும் வண்டு
கடைசியர் முகமும் போதுங் கண்மலர்ந் தொளிரு மாதோ

---

49. தண்டலை-சோலையில். தாமரை விளக்கம்: 'செந்தா மரைபூத் தெனத்தீப மெடுத்த தன்றே' (972); 'விளக்கினன்ன சுடர்விடு தாமரை' (நற். ஈகo : 1.) கொண்டலுக்கு முழவு : மலைபடு. 1-3; நற். கஙக : 3-6; குறுந். ஙஉஙு; அகநா. ஙஉஅ : 1-2; 'புலனெந்தும்' (திருஞா. தே.) குவளை கண்விழித்து நோக்கல் : 'முழுநீர் விழிபோல், மைத்தலா நீல மலர்வயல்' (தஞ்சை. 425.) எழினி - சித்திரம் எழுதிய திரைச்சீலை, அலைகள் திரைச் சீலைக்கு : 915, 923. மகரயாழ் - பத்தொன்பது நரம்புகட்டின வீணை சீவக. 608, ந. மகரயாழ்: யாழ் இசைக்கு ஆகு பெயர். 'குழலினிது யாழினி தென்ப' (குறள், 66.) வண்டுக்கு மகரயாழ் : மணி. சு : 4.
(பி-ம்.) [1] 'விளக்க மேந்த' [2] 'குவளைகள் விழித்து' [3] 'மதுரயாழின்' (சு)

50. தகைவரு-அழகு வளர்கின்ற. காமுகரிடத்தே படுவன. மாமுகிற்... ...முத்தும்; மேகங்கள் கடலிலுள்ள பவளங்களையும் முத்துக்களையும் தண்ணீருடனே குடித்து விட்டுப்பொழியும் என்றபடி. நாமுதல்-நாவினிடத்தே. நாமம் - புகழ். படுவ - உண்டாவன. (நு)

51. நிழலிடையுறங்கு மேதி: சிறுபாண். 42-6; அகநா. கக; 15-7. தார் - பூ; மாலையுமாம். தூர் - 'ஆழமான பள்ளங்களிலே இருக்கிற சேற்றோடே கூடிய மரத்தினது வேர்ச்சந்துகள்' (ஔ உரை.) இப்பி - சிப்பி. போர் 'நெற்போர். (பி-ம்.) [1] 'யுறங்கு மேகம்' (சு)

52. படை - கலப்பை; கொழு. பணிலங்கள் - சங்குகள். ஈன்ற -

53 [1]தெள்விளிச் சிறியாழ்ப் பாணர் தேம்பிழி நறவ மாந்தி
வள்விசி கருவி பம்ப வயின்வயின் வழங்கு பாடல்
வெள்ளிவெண் மாடத் தும்பர் வெயில்விரி பசும்பொற் பள்ளி
எள்ளருங் கருங்கட் டோகை யின்றுயி லெழுப்பு மன்றே.

54 ஆலைவாய்க் கரும்பின் றேனு மரிதலைப் பாளைத் தேனும்
[1]சோலைவாய்க் கனியின் றேனுந் [2]தொடையிழி யிருலின் றேனும்
மாலைவா யுகுத்த தேனும் வரம்பிகந் தோடி வங்க
வேலைவாய் மடுப்ப [3]நுங்கி மீனெலாங் களிக்கு மாதோ.

55 பண்கள்வாய் மிழற்று மின்சொற் கடைசியர் பரந்து நீண்ட
கண்கைகான் முகம்வா யொக்குங் களையலாற் களையி லாமை
உண்கள்வார் கடைவாய் மள்ளர் களைகலா தூலாவி நிற்பார்
பெண்கள்பால் வைத்த நேயம் [1]பிழைப்பரோ சிறியோர் பெற்றால்.

முத்தும், தொகையும், கதிரும் கண்மலர்ந்து. கண் - இடம், கணு; வண்டு கண்ணைப்போல மலர்ந்து. கரும்பு கண்மலர்ந்து. முகம் கண்கள் மலரப் பெற்று. போது கள் மலர்ந்து.

(பி-ம்.) [1] 'நெல்லும், மிடை பசுங் கதிர்க ளீன்ற மென்றழைக்' (எ)

53. தெள்விளி - தெளிந்த இசை; 'தீந்தொடை மகர வீணைத் தெள்விளி' (சீவக. 608.) [தெளிந்த மிடற்றோசை] சிறியாழ்ப் பாணர் - சிறு பாணர்; 'இன்குரற் சீறியா ழிடவயிற் றழீஇ' (சிறுபாண். 35.); நீட்டல் விகாரம். இவர் பெரும் பாணரினும் வேறுயவர். தேம்பிழி நறவம் - தேனூற் சமைத்த கள்; குறிஞ்சி. 155; அகநா. எஅ: 7; பெருங். உ. 2: 177. வள்விசி கருவி - வாராற் கட்டிய முழவம்; 154. பம்ப - ஒலிக்க. பாடல் - வைகறைப்பாடல். பாடல் மயிலைத் துயிலெழுப்பும்.

(பி - ம்.) [1] தெள்ளிய சிறியாழ்' (அ)

54. கரும்பின் தேன் - கருப்பஞ்சாறு. அரிதலை - அரிந்த தலையையுடைய பாளை-தெங்கு முதலியவற்றின் பாளை. பாளைத்தேன்: 69; பரி. எ: 34-5, பரிமேல்; 'வாளையும்.....பாளையந் தேறல்.....பழனங்களே' (இறை. 23, மேற்.) 'கமுகி னெற்றிப் பூமாண்ட தீந்தேன்' (சீவக. 31). இருல் - தேனடை. தொடையிழி என்றதனுற் கொம்புத்தேன் என்றவாறு; வரம்பிகந்து என்றது அளவில்லாமல் கழனி குளம், ஏரி முதலானவை யெல்லாம் அழித்துக்கொண்டு என்றபடி. வங்கம்-கப்பல். நுங்கி - விழுங்கி; 'நுங்குவ ருலகெலா மொடியில்' (211.)

(பி - ம்.) [1] 'சோலைவாய் மலரின்' [2] 'தொடையளி யிருலின்' [3] 'வுண்டு' (க)

55. கண்ணுக்குக் குவளை; கைகால் முகங்களுக்குத் தாமரை; வாய்க்குச் செவ்வாம்பல். ஆடவர் [illegible]

56 புதுப்புனல் குடையு மாதர் [1] பூவொடு நாவி பூத்த
கதுப்புறு வெறியே நாறுங் கருங்கடற் றரங்க மென்றூல்
[2] மதுப்பொதி மழலைச் செவ்வாய் வாட்கடைக் கண்ணின் மைந்தர்
[3] விதுப்புற நோக்கு மன்னர் மிகுதியை விளம்ப லாமோ.

57 வெண்டளக் கலவைச் சேறுங் குங்கும விரைமென் சாந்தும்
குண்டலக் [1] கோல மைந்தர் குடைந்தநீர்க் கொள்ளைச் [2] சாற்றில்
தண்டலைப் பரப்புஞ் சாலி வேலியுந் தழீஇய வைப்பும்
[3] வண்டலிட் டோட மண்ணு மதுகர மொய்க்கு மாதோ.

58 சேலுண்ட [1] வொண்க ணூரிற் றிரிகின்ற செங்கா லன்னம்
மாலுண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத் [2] தேரைதா லாட்டும் பண்ணை.

---

56. நாவி - கஸ்தூரி. கதுப்பு-கூந்தல்.| வெறி - மணம். விதுப்பு - விரைந்த விருப்பம்; 'நெஞ்சே, ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத், தோரே ருழவன் போலப், பெருவிதுப் புற்றன்றூல்' (குறுந். கஙக); 'வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்று' (அகநா. கஙசு: 8); 'புணர்ச்சி விதும்பல்' (குறள், அதி.) 129). ஒப்பு: 'குரும்பைவெம் மூலையா ராடக் கூந்தலி னறவந் தோய்ந்த, இரும்புன லாறு பாய வெறிதிரை சுருட்டுந் தெண்ணீர்க், கருங்கடல் புலவு நீங்கி நறுமணங் கமழு மென்றூல், முருந்துறழ் மூர லார்தம் மிகுதியை மொழிய லாமோ' (நைடத. நாடு. 11.)

(பி-ம்.) [1] 'போதொடு' [2] 'மதுப்பொழி', 'மதுப்பொலி' [3] 'விதிர்ப் புற நோக்கு மின்னர்' (கக)

57. வெண்டளம்-பச்சைக் கருப்பூரம். வெண்டளக் கலவைச் சேறு: சு. 1 : 16; 'குங்குமத் தளம்' (தக்க. 42, உரை.) நீர்ச்சாற்றில் - புதுப்புனல் விழவில். கொள்ளைச்சாற்றில், சேறும் சாந்தும் பரப்பிலும் வேலியிலும் வைப்பிலும் வண்டலிட்டோட மதுகரம் மொய்க்கும். 'கொள்ளைச்சாறும்' என்ற பாடங்கொள்ளின், 'வண்டலிட் டோடும்' என முடிக்க.

1-2 : ஒப்பு : 1, 130.

(பி-ம்.) [1] 'கோதை மாதர்' [2] 'சாறும்' [3] 'வண்டலிட் டோடும்' (கஉ)

58. சேல் உண்ட - சேல் என்னும் மீனை யொத்த. ஒண்கணூரில்: இல் ஐந்தனுருபு. சேலுண்ட..... வன்னம் - 'பள்ளத்திகளுடைய நடையைக் கற்றுக் கொள்ள வேண்டிக் குஞ்சுகளை மறந்துவிட்டு அவர்கள் வீட்டிலே போய் அவர்கள் பின்னே திரிந்து கொண்டிருக்கிற அன்னங்கள்' (ஔ உரை); 'பூமனைவாய் வாழ்கின்ற.....நடைகற்பாம் வந்தடைந்தே நாம்' (நள.) [மாலுண்ட நளினம் - பெருமையையுடைய நளினம். காலுண்ட சேற்று மேதி - சேறுபடிந்த கால்களையுடைய எருமைகள்]. கன்றையுள்ளிப் பால்

59 குயிலினம் வதுவை செய்யக் கொம்பிடைக் குனிக்கு மஞ்ஞை
அயல்விழி [1] மகளி ராடு மரங்கினுக் கழகு செய்யப்
பயில்சிறை யரச வன்னம் பன்மலர்ப் பள்ளி நின்றும்
துயிலெழத் தும்பி காலைச் செவ்வழி முரல்வ சோலை.

60 பொருந்திய மகளி ரோடு வதுவையிற் பொருந்து வாரும்
பருந்தொடு நிழல்சென் றன்ன வியலிசைப் பயன்றுய்ப் பாரும்
மருந்தினு மினிய கேள்வி செவியுற மாந்து வாரும்
விருந்தினர் முகங்கண் டன்ன விழாவணி விரும்பு வாரும்.

கிரங்கி, நினைத்து முலைவழியே நின்று பால் சோர' (திவ். திருப்பாவை, 12); உணவு கொடுக்கவும் தாலாட்டவும் அன்னங்களுக்குப் பொழுதில்லை. பண்ணை-வயலில். முடிபு: அன்னம் வளர்த்திய பிள்ளை உண்டு துயிலும்படி தேரை தாலாட்டும்.

(பி-ம்.)[1]'வுண்க ணுரிற்'[2] 'தேரைதா ராட்டும்','தேரைபா ராட்டும்'(கஙூ)

59. குயிலினம்-சேவலும் பெடையுமாகிய குயில்கள். குனிக்கும்-நடனம் செய்கின்ற. பயிலல்-நெருக்கம். எழ - எழும்படி. தும்பி - வண்டுகள். செவ்வழி: மாலைப் பொழுதிற்குரிய பண்; புறநா. கசக. காலையிற் செவ்வழி பாடியது தேனுண்ட மயக்கத்தால். (பி - ம்.) 1' மகளி ரோடு'

குயிலினம் என்னும் இப்பாட்டுக்குப் பின் கீழ்வரும் பாடல் ஒரு பிரதியிற் காணப்படுகிறது:

'காளையர் சேறுதன்னைக் கலந்துடன் மிதித்துநட்ட, தாள்களுங் கழுநீர் நாறுந் தடக்கையு மதுவே நாறும், ஆளையுஞ் சீறிப் பீறி யணிமலர்க் கமுகிற் பாய்ந்த, வாளையும் பாளை நாறும் வயல்களு மதுவே நாறும்.' (கச)

60. பொருந்திய மகளிர்-பிறப்பு முதலிய பத்துவகையாலும் ஒத்தமகளிர். 'பொருத்த நிமித்தங்களால் பொருந்திய' என்றலுமாம். இயல் - பாஷைப் பாட்டு. பருந்தொடு.....இயலிசை: 'பருந்து நிழலும்போற்பாட்டுமெழாலும்' (சீவக. 730); 'பருந்தும் நிழலுமெனப் பாவும் உரையும்' (சிலப். அடியார். உரைப்பா); 'பாற்றி யக்கமு நீழலு மாமெனப் பாட' (கந்த. திருக்கல். 1); 'பருந்து பறக்குமிடத்து முறையேயுயர்ந்து அந்நிலத்தின்கண் நின்று ஆய்ந்து பின்னும்அம்முறையே மேன்மே லுயர்கின் றூற்போலப் பாடவேண்டுதலின்' (சீவக. 730, ந.) 'வீணையினது தந்தியைப் போல் கண்டத் தொனியுங் கூட்டிப் பாடுகிற பேரும்' (ஔ உரை.) மருந்தினும் இனிய கேள்வி: 'செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவின், ஆன்றாரோ டொப்பர் நிலத்து' (குறள், 413.) விருந்தினர் முகங் கண்டன்ன விழா: 'முகம் கண்டு அன்ன விழாவின் அணியை விரும்புவோரும்' என்பதனை

61 கறுப்புறு மனமுங் கண்ணிற் சிவப்புறு சூட்டுங் காட்டி
[1]உறுப்புறு படையிற் ருக்கி யுறுபகை யின்றிச் சீறி
வெற்றுப்பில களிப்பின் வெம்போர் [2]மதுகைய வீர வாழ்க்கை
மறுப்பட வாவி பேணு வாரணம் பொருத்து வாரும்.

62 எருமைநா கீன்றசெங்க [1]ணேற்றையோ டேற்றை சீற்றத்
துருமிவை யென்னத் தாக்கி யூழுற நெருக்கி யொன்ருய்
விரியிரு ளிரண்டு கூரு வெகுண்டன [2]வனைய நோக்கி
அரியினங் குஞ்சி யார்ப்ப [3]வஞ்சுற வார்க்கின் ருரும்.

63 முள்ளரை முளரி வெள்ளி முளையிற முத்தும் பொன்னும்
தள்ளுற மணிகள் [1]சிந்திச் சலஞ்சலம் புலம்பச் சாலில்
துள்ளிமீன் றுடிப்ப வாமை [2]தலைபுடை சுரிப்பத் தூம்பின்
உள்வரா லொளிப்ப மள்ள ருழுபக டுரப்பு வாரும்.

---

61 கறுப்பு - வெகுளி. கண்ணின் - கண்ணைப் போலும். சூட்டு - உச்சிக் கொண்டை. உறுப்புறு படை - கால்கள் மூக்கு என்னும் உறுப்புக்களாலியன்ற படை; காலாயுதம் என்பது கோழிக்கு ஒரு பெயர். பகையின்றிச் சீறி: 'கறவொடு மொன்றே டொன்று காரண மின்றிச் சீறி' (நைடத. நாடு. 3.) வெம்போர் மதுகைய - வெம்போரில் வலிமையை யுடையன வாகிய மறுப்பட குற்றம்பட [ஆக்கைமறுப்பட (பி - ம்.) - உடம்பு கிழிபட.] வாரணம் - கோழிகள்; கோழி வென்றி: சீவக. 73, 120; பு. வெ. 348. (பி - ம்.) [1] 'உறுப்புடை படை' [2] 'மதுகையர் வீரவாக்கை' (கசு)

62 எருமை நாகு-பெண் எருமை (பெரும்பாண். 165.) ஏற்றை-கடா, 'துருவை மென்பிணையீன்ற . . . . . யேற்றை' (7.) உரும் - இடி. ஊழ் உற - முறைப்படியே. எருமைக்கடாக்களுக்கு இருள். ஒன்ருய் விரிந்த இருள். வெகுண்டன அனைய - கோபங் கொண்டனவாகிய அத்தகைய கடாக்களை. அரியினம் - வண்டின் சாதிகள். குஞ்சியார்ப்ப குடுமிகளினின்றும் எழுந்து ஆரவாரிக்க. அஞ்சுற - கேட்போர் அச்சமடையும்படி. மஞ்சுற என்ற பாடத்துக்கு மேகமண்டலத்தைப் பொருந்த என்பது பொருள்; மேகத்தை ஒப்ப எனினும் ஆம். ஆர்ப்பவர் வீரர் என்றபடி.

(பி - ம்.) [1] 'னேற்றினே டேற்றை', 'னேற்றினேடேறு சீற்றத்' [2] 'வதனை' [3] 'மஞ்சுற' (கஎ)

63 வெள்ளி - வெள்ளை; 493. இற - ஒடிய. முளரி வெள்ளி முளையிற - 'தாமரைக்கிழங்கின் வெள்ளிய வேர்கள் அறுந்து போக' (ஓர் உரை.) தள்ளுற - சிந்த; 'எள்ளு மேனலும் . . . . தள்ளு நீர்மையில்' (99.) மணிகள் - முத்துக்களை. புலம்ப - ஒலிப்ப. சலஞ்சலம் - ஆயிரம் வலம்புரிச் சங்குகளாற் சூழப்படுவது; 'வலம்புரி சலஞ்சலம் வளைஇய தொத்தனள்', 'வரிவளை சூழும் வலம்புரியினத்துட் சலஞ்சலம்' (சீவக. 184, 2103.) சலஞ்சலம் தானுக ஒலிப்பது: 'நல்லனவென்னுஞ் சொல் சலஞ்சலங்களைக் காட்டு மென்பாருமுளர்; அதன் பயன் அவை தாமே முழங்குவன' (தக்க. 397,

64 முந்துமுக் கனியி னானா முதிரையின் [1]முழுத்த நெய்யில்
செந்தயிர்க் கண்டங் கண்ட மிடையிடை செறிந்த [2]சோற்றில்
தந்தமி லிருந்து தாமும் [3]விருந்தொடுந் தமரி னோடும்
[4]அந்தணர் முதலோ ருண்டி யயில்வுறு [5]மமலை யெங்கும்.

65 முறையறிந் [1]தவாவை நீக்கி முனிவுழி முனிந்து [2]வெஃகும்
இறையறிந் துயிர்க்கு நல்கு [3] மிசைகெழு வேந்தன் காக்கப்
பொறைதவிர்ந் துயிர்க்குந் தெய்வப் பூதல மதனிற் பொன்னின்
நிறைபரஞ் சொரிந்து வங்க நெடுமுது காற்று நெய்தல்

உரை.) சலஞ்சலம் : ௩. 1 : 16. சுரிப்ப-அடக்கிக் கொள்ள ; 'ஒருமையு ளா மைபோ லைந்தடக்க லாற்றின்' (குறள், 126.) தூம்பு - மதகு. உரப்புதல் - அதட்டி ஓட்டுதல். 61 - 3. பொருத்துவாரும், ஆர்க்கின்றாரும், உரப்பு வாரும் ஆயினாரென ஒரு சொல் வருவித்து முடிக்க-

(பி - ம்) [1] 'சிந்தச்' [2] 'தலையுறை' (கஅ)

64 நானா - பலவகையான ; 176. [முதிரை - அவரை, துவரை கடலை, சிறுபயறு.] [தயிர்க்கண்டம் - கட்டித் தயிர் : கண்டம் - கண்ட சருக் கரை.] செறிந்தசோறு - 'சன்னச்சம்பா வரிசிச்சோறு' (ஓர்உரை.) விருந்து - புதிதாய் வந்தவர். அந்தணர் முதலோர் - பிராமணர் முதலிய நான்கு வருணத்தாரும் பிறரும். [தமதுண்டென்ன (பி - ம்.) - தம்முடைய பாகத் தைப் புசித்த இன்பம்போல.) 'அந்தண ரமுதருத்தி - பிராமணர்களைப் போசனம் பண்ணுவித்து' (ஓர் உரை); 'வேதியர்க் கருத்திப் பின்னர் விருந் தொடுநுகர்வர்' (நைடத. நாடு. 14.) அயில்வுறும் அமலை - உண்ணும் ஆரவாரம். 'ஊணொலி யரவம்' (புறநா. கஎ௩ : 4.) தம்தம் இல் இருந்து விருந்து ஓம்புதல் : 'தம்மிலிருந்து தமது பாத்துண்டற்றால்' (குறள், 1107.)

(பி - ம்.) [1] 'முகிழ்த்த', [2] 'சோற்றை', [3] 'விருந்தொடு தமதுண்டென்ன' [4] 'அந்தண ரமுத வுண்டி', 'அந்தண ரமுத ருத்தி' [5] 'மமலைத்தெங்கும்' (கக)

65 முறை - மனுமுறையை. முனிவுழி முனிந்து - தண்டிக்க வேண் டிய விடத்துத் தண்டித்து; முனிவு - கோபம். வெஃகும் இறை . விரும் பிக் கொள்ளத்தக்க வரிப்பொருளை; 'இறை அறிந்து உயிர்க்கு நல்கும் - 'ஓர் ஆன்மாவுக்குப் பிராண ஆனி வருமிடத்து விரைந்துபோய் அந்த வுபத்திர வத்தை நீக்கி ரட்சிக்கும்' (ஓர் உரை); இப்பொருளின்படி இறை என்பதற்கு இறந்து படுதல் என்பது பொருளாம்; 'பிரிந்திறை சூழாதியைய' (கலி. கஅ: 2, ந.) வேந்தன் - தசரதன். இசை கெழு வேந்தன்; 30. 1-2: இசை கெழு வேந்தனது இலக்கணம் கூறியபடி. பரம் - பாரமென்பதன் விகாரம். [வேந்தன் நீதி முறையினாற் காக்கப் பாரம் நீங்கிய பூமி.] உயிர்க்கும் - பெரு மூச்சுவிடும். சொரிந்து - கரையினிடத்தே இறக்கி. வங்கம் நெய்தல் நெடு முதுகாற்றும் - கப்பல்கள் தம் நெடிய முதுகைக் கடற்கரையில் ஆற்றிக் கொள்ளும். பொறை தவிர்ந்த பூதலத்திற்குக் கப்பல்கள் பொறையைக் கொடுக்கும் என்றபடி. முதுகாற்றல் : 758, 2. 12: 34. கலம் நிதி சொரிதல்: 83.

(பி - ம்) [1] 'தவாவி னீங்கி' [2] 'வைகும்' [3] 'மிருநில வேந்தன் காக்கும்' (உ0)

66 எறிதரு மரியின் சும்மை
யெடுத்துவா னிட்ட போர்கள்
[1]குறிகளும் போற்றிக் கொள்வார்
[2]கொன்றுநெற் குவைகள் செய்வார்
வறியவர்க் குதவி மிக்க
விருந்துண மனைவி னுய்ப்பான்
நெறிகளும் புதைப்பப் பண்டி
நிரைத்துமண் ணெளிய வூர்வார்.

67 கதிர்படு வயலி னுள்ள [1]கடிகமழ் பொழிலி னுள்ள
[2]முதிர்பல மரத்தி னுள்ள முதிரைகள் புறவி னுள்ள
பதிபடு கொடியி னுள்ள படிவளர் குழியி னுள்ள
[3]மதுவள மலரிற் சொள்ளும் வண்டென மள்ளர் கொள்வார்.

---

66 எறிதரும் - அரியப்பட்ட. சும்மை - சுமை; விகாரம். குறிகளும் போற்றிக் கொள்வார் - அடையாள முத்திரைகளேயும் வைத்துக் கொள்வார்கள். போர் போட்டபின் நெல் அடித்தல் சில நாட்டு வழக்கம். இரவில் போர்களைக் களத்து அரிகளை எவரும் எடுத்து விடாதபடி போர்களின் பல பக்கங்களில் சாணத்தையும் மண்ணையும் பிசைந்திட்டு எழுத்து அடையாள மிட்ட பலகையைக் கொண்டு முத்திரை யிடுவதுண்டு. குறி கொளும் போத்திற் கொல்வார் (பி - ம்.) - தூண்டுவோரின் குறிப்பிற் செல்லும் எருமைக் கடாக்களைக்கொண்டு மிதிப்பிப்பார்; பெரும்பாண். 236 - 42; 'ஈடொல் போர் பழித் தெருமைப் போத்தினுல். மாடுறத் தெழித்து .....கூப்பிய செந்நெற் குப்பைகள்.....குன்ற மொத்தவே' (சீவக. 59); 'கூனி ரும்பினிற்குரைத்தரி சும்மையிற் கொடுபோய், மேனிவந்துயர் வரை யெனப் போர்பல வேய்ந்து, நீனி றக்கரும் பகட்டினுற் றெழித்துவை மீத்த, தூநிறத்தநெற் பண்டியிற் பற்பலர் தொகுப்பார்' (நைடத. நாடு. 10.) விருந்துண: 'தமக்கென்றுலே யேற்றுர்' (ஆசாரக். 39.)

(பி - ம்) [1]'குறி கொளும் போத்திற் கொல்வார்' [2]'குன்றினெற்', 'குன்றினேர்' (உக)

67 புறவு - முல்லை நிலம். பதிபடு - பதிக்கப்படுகிற. படிவளர் குழியினுள்ள - பூமியினுள்ளே வளர்கின்ற குழியிலுள்ளனவாகிய மஞ்சள், இஞ்சி, சேம்பு முதலியன. வண்டென - அந்த அந்தக் காலமறிந்து கிரகித்துக் கொள்ளும் வண்டைப்போல. வண்டின் தன்மை: சு. 7 : 38; கலி. கூ : 1-4; கல் கூ : 1-4; திருவிளை. நூ : 19.

(பி - ம்.) [1]'கடிகமழ் புனலி லுள்ள', [2]'முதிர்பயன்', [3]'மதுவன மலரிற்', 'மதுவன மதனிற்', 'மதுமலாதனிற்' (உஉ)

வேறு

68 பருவ மங்கையர் பங்கய வாண்முகத்
[1]துருவ வுண்கணை யொண்பெடை யாமெனக்
கருதி யன்பொடு காமுற்று வைகலும்
மருத வேலியின் வைகின வண்டரோ.

69 வேளை வென்ற [1]முகத்தியர் வெம்முலை
ஆளை நின்று முனிந்திடு மங்கொர்பால்
பாளைதந்த மதுப்பரு கிப்பரு
வாளை நின்று மதர்க்கு மருங்கெலாம்.

70 ஈர நீர்படிந் திந்நிலத் தேசில
கார்க ளென்ன வருங்கரு மேதிகள்
ஊரி னின்றகன் றுள்ளிட [1]வுண்முலை
தாரை கொள்ளத் தழைப்பன சாலியே.

---

68 உருவம் - அழகு. ஆண்வண்டு கண்ணைப் பெடை யென்று எண்ணி வழிபடல்: 'வண்டு வழிபடரும் வாட்கண்ணுப்'(பழ. 4.) மருதவேலி: 350.

(பி - ம்) [1]'துருவ வேற்கணை', 'துருவ வொண்கணை' (உங)

69 வேளை வென்ற முகத்தியர் - காமக் கலக்கத்தைத் தருதலில் மன்மதனை வென்ற முகத்தின் அழகையுடையவர். 'வேலை வென்ற விழிச்சியர்' என்ற பாடங் கொண்டு வேலை என்பது எதுகை நோக்கி வேளை யென்று திரிந்தது என்பாருமுளர். 'காமனோர் வயங்கு வாண்முகத்தினர்' (வி. பா. 14 - ஆம்போர். 26.) ஆள்: சாதியொருமை; உ. 12 : 25.

முகத்தியர், ஆள் என்பன வயல்களில் வேலை செய்துகொண்டிருக்கும் மள்ளர்களையும் அவர் மகளிரையும் குறிக்கும். முனிந்திடும்: வேலை செய்ய வொட்டாமல் காம நோயைக் கொடுக்கும் என்றபடி. பாளைதந்த மது: 54, உரை. (பி - ம்.) [1]'விழிச்சியர்' (உச)

70 இந்நிலத்தே சில கார்களென்ன - இந்தப் பூமியிலே சஞ்சரிக்கிற சில மேகங்கள் போல நீர்படிதலினலும் நிறத்தினலும் பெரிய வடிவினலும் வெள்ளிய தாரைகளைச் சொரிதலினலும் கார்கள் எருமைகளுக்கு உவமையாயின; மூன்றீர் படிந்தனை மேகமும், நலங்கொள் மேதி நன்னகுந் தெரிக்கொணு' (பெரிய. வாயிலார். 3.) எருமை கன்றுள்ளிப் பால் சொரிதல், 58, உரை. (பி - ம்.) [1]'மென்முலை' (உடு)

71 முட்டி லட்டின் முழங்குற வாக்கிப
நெட்டு லக்கமு நீர்நெடு நீத்தந்தான்
பட்ட மென்கமு கோங்கு படப்பைபோய்
நட்ட செந்நெலி னூறு வளர்க்குமே.

72 [1]சூட்டு டைத்தலைத் தூநிற வாரணம்
தாட்டு ணைக்குடை யத்தகை சான்மணி
மேட்டி மைப்பன மின்மினி யாமெனக்
கூட்டி னுய்க்குங் [2]குருவிக் குழாமரோ.

73 தோயும் வெண்டயிர் மத்தொலி [1]துள்ளவும்
[2]ஆய வெள்வளை வாய்விட் டரற்றவும்
தேயு நுண்ணிடை சென்று வணங்கவும்
[3]ஆயர் மங்கைய ரங்கை வருந்துவார்.

---

71 முட்டுஇல் - விருந்தளித்தற்கு எப்பொழுதும் குறைவில்லாத. அட்டில் - மடைப்பள்ளிகளில். படப்பை - தோட்டக்கூறு. பட்டம் - நீர் ஓடை. தஞ்சை. 72; பாத்தியுமாம். கழுநீர் செந்நெலினூறு வளர்த்தல்: 'புனந்தாதாரு புதுவைச் சடையன், இருந்தவிய லூர்தெற்கு மேற்குப் - பரந்த பொன்னி, ஆற்று நீரால் விளையுமப்பாற் கிழக்காரிசி; மாற்றுநீ ரால் விளையுமாம்' (பெருந்தொகை, 1131.) (உசு)

72 வாரணம் - கோழி; சேவல் குப்பையைக் கிளறுதல்: 'குப்பைக்கோழி' (குறுந். கூ0டு); 'குப்பைகிளைப் போவாக் கோழி' (நாலடி. 341); 'குப்பை கிளைப்பருக் கோழி' (பெருங். கூ. 14: 112.) தாட்டு துணையாகக்குடைய [துணை (பி-ம்) - பேடும் சேவலும்.] குருவிகள் மின்மினியைக் கூட்டில் அடைத்தல்: 'எரியுமின் மினிமணி விளக்கி னின்றுணைக் குரீஇயினம் பெடையொடுந் துயில்வ கூட்டினுள்' (சூ. 7: 87.) [குரீஇ என்றது கடைக் குறையும் நீட்டும்வழி நீட்டலும்.]

(பி - ம்) [1]'சூட்டுடைத்துணை' [2]'குரீஇக் குழாமரோ', 'குரீயின் குழாமரோ' (உஎ)

73 துள்ளல் - விட்டு விட்டு ஒலித்தல். வாய் - பொருத்து வாய் வாய் விட்டரற்ற: 'அஞ்சிலம்பே வாய் விட்டரற்றுவன' (நள. க: 15). துள்ளல் போய்..... டரற்றவும்- (பி-ம்.) துள்ளல் மாயும்படி அரற்றவும். [தயிர் கடைவதால் கை நொந்து வருந்து மென்று வளைவாய் விட்டரற்ற வென்று கொள்க.] வணங்கவும் - வளையவும்.

ஒப்பு: 'முல்லையங் கோதை நல்லார் முகமதி வெயர்வு தோன்ற, வல்லிநுண் மருங்கு நோவ வாள்வளை வாய்விட் டரற்ப மெல்விரற் காந்தள் சேப்ப வெண்டயிர் கடையு மோதை, கொல்புலி முழக்க மென்ன வயின் றொறுங் குளிறுமாதோ' (நைடத. நாடு. 15.)

(பி - ம்.) [1]'துள்ளல்போய்' [2]'மாய வெள்வளை' [3]'ஆய மங்கையர்' (உஅ)

74 குற்ற பாகு [1]கொழிப்பன கோணெறி
கற்றி லாத கருங்க ணுளைச்சியர்
முற்றி லார முகந்துதம் முன்றிலிற்
சிற்றில் [2]கோலிச் சிதறிய முத்தமே.

75 துருவை மென்பிணை யீன்ற துளக்கிலா
[1]வரிம ருப்பிணை வன்றலை யேற்றைவான்
உருமி டித்தெனத் தாக்குறு மொல்லொலி
வெருவி மால்வரைச் சூன்மழை மின்னுமே.

76 தினைச்சி லம்புவ [1]தீஞ்சொ லிளங்கிளி
நனைச்சி லம்புவ நாகிள வண்டுபூம்
[2]புனைச்சி லம்புவ புள்ளினம் வள்ளியோர்
மனைச்சி லம்புவ மங்கல வள்ளையே.

---

74 குற்ற பாகு - வெட்டுப் பாக்கினின்றும்; குற்ற - வெட்டிய. கொழிப்பன - கொழித்து வேறாக எடுக்கப்படுவன. கோள் நெறி - ஆடவர் இதயங்களைக் கொள்ளை கொள்ளும் வழியை. நுளைச்சியர் - நெய்தல் நில மகளிர். கோணெறி கற்றிலாத என்றதனாலும், சிற்றில் கோலுதலாலும் பேதைப் பருவத்துச் சிறுமியர்கள் என்று கொள்ளவேண்டும். [நெறி..... நுளைச்சியர் - விளரப்படாத பார்வையையுடைய பரதவச் சிறு பெண்கள்.] முற்றில் - சிறுசுளகுகளில்; சீவக. 1099; ந. ஆர - நிறைய. இது மருதமும் நெய்தலும் மயங்கியதைக் கூறியது.

முடிபு. கொழிப்பன முத்தமே.

(பி - ம்.) [1]'கொழிப்பது', 'கொழிப்பவர்', [2]'கோலச்' (உக)

75 துருவை - செம்மறியாடு. இணை ஏற்றை - ஒன்றுக் கொன்று இணையான இரண்டு ஆண் ஆடுகள். [துருவை.....ஏற்றை - தலையீற்று ஆடு ஈன்ற கிடாய்.] பிணை ஈன்ற ஏற்றை: 62. [வன்தலை - வலிமை பொருந்திய தலை.] ஏற்றை தாக்குதல்: 'ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர், தாக்கற் குப் பேருந் தகைத்து' (குறள், 486.) இது முல்லையும் குறிஞ்சியும் மயங்கி வந்தது.

(பி - ம்.) [1]'வரிமருப்பின வன்றலை' [2]'யேறுவான்' (உ0)

76 தினை - தினைப்பயிர். சிலம்புவ - ஒலிப்பன. நனை - பூ அரும்பு. மலர்வதற்கு வண்டு ஒலிக்கின்றன. புனை - நீர்; பெருங். உ. 7: 75. மங்கல வள்ளை - உலக்கைப் பாட்டு; மலைபடு. 342; குறுந். அக; 1; கலி உ: 7 8; சூளா. சுயம். 106; பெருங். க. 40: 85, உ. 14: 52; திருவள்ளுவ. 5, மங்கல வள்ளை - 'நித்திய மங்கலமும் சோபனப் பாட்டும்' (ஓர் உரை.)

(பி - ம்.) [1]'செஞ்சொ' [2]'புனற்சிலம்புவ' (உக)

77 கன்று டைப்பிடி நீக்கிக் களிற்றினம்
வன்றெ டர்ப்படுக் கும்வன வாரிசூழ்
குன்று டைக்குல மள்ளர் [1]குழூஉக்குரல்
இன்று ணைக்களி யன்ன மிரிக்குமே.

78 வள்ளி கொள்பவர் கொள்வன மரமணி
துள்ளி கொள்வன தூங்கிய மாங்கனி
[1]புள்ளி கொள்வன பொன்னிரி புன்னைகள்
பள்ளி கொள்வன பங்கயத் தன்னமே.

79 கொன்றை வேய்ங்குழற் கோவலர் முன்றிலிற்
[1]கன்று றக்குங் குரவைக் கடைசியர்
புன்ற லைப்புனங் [2]காப்பிடை போதரச்
சென்றி சைக்கு நுளைச்சியர் செவ்வழி.

---

77 கன்று.....நீக்கி: 'கறையடி மடப்பிடி கானத்தலறக், களிற்றுக்கன் றெழித்த வுவகையர்' (அகநா .அஉ: 3-4.) தொடர் - சங்கிலி. [வன வாரி - வனப்பரப்பு.] வாரி - யானையை அடிப்படுத்துங்குழி; மலைபடு 572. மள்ளர் - யானையை அடிப்படுத்தும் வீரராகிய பாகர். இது குறிஞ்சியும் மருதமும் மயங்கியது. (பி - ம்.) [1] 'குழுக்குரல்' (கூஉ)

78 வள்ளி - வள்ளிக் கிழங்குகள். [மாணிக்கமும் கொள்வர்.] வள்ளிக்கு மாமணி கொள்ளல்; 83, துள்ளி - ஆமை; பிங்கல; ஆடி மாங்கனி யுண்ணல்: நெடுங்கான்மா அத் தூழுறு வெண்பழம், கொடுந்தாள் யாமை பார்ப் பொடு கவரும்' (அகநா. கக: 15-6.) மாங்கனி துள்ளி கொள்வன என்றலும் ஆம்; துள்ளி - துளி, தேன் துளித்தலே. பங்கயத்துப் பள்ளி கொள்வன. (பி - ம்.) [1] 'வெள்ளி கொள்வன மென்மலர்ப் புன்னைகள்' (கூஊ)

79 கொன்றைக் குழல் - கொன்றைப் பழத்தைத் துருவித் துளைத்து ஊதுவது; 'கொன்றையந் தீங்குழல்' (சிலப். ஆய்ச்சியர்.) கொன்றை வேய்ங் குழல் கொன்றைக் குழலும் வேய்ங்குழலும்; வேய் - மூங்கில். உறக்கும் - உறங்கச் செய்யும்; முற்று. கொன்றை.....கன்றுரக்கும் கடைசியர் குரவை- மருத நிலத்தில் பள்ளத்திகள் கைகோத்தாடுகிற குரவைக் கூத்தின் சத்தத் தைச் சரக் கொன்றைக் காயைப் புல்லாங் குழலாயூதுகின்ற இடையருடைய வாசலிலே கட்டியிருக்கிற பசுவின் கன்று கேட்டுப் பயந்து கூப்பிடும்' (ஓர் உரை.) காப்பு இடைபோதர - காவல் செடும்படி. நுளைச்சியர் - நெய்தல் நிலப் பெண்கள். இசையைக் கேட்டுக் கிளிகள் மேலும் மேலும் தம்மின மென்று புனத்துக்குள் வருகின்றமையால் இசை புனக்காவலை அழிக் கின்றது என்றபடி; 'ஆயோ வெனுங்குர லந்தோ புனத்தை யழிக்கின்றதே' (திருவரங்கக் கோவை.) இது முல்லையும் மருதமும் குறிஞ்சியும் செய்தலும் மயங்கியது.

(பி - ம்.) [1] 'கன்றுரக்கும்' [2] 'காப்புடை' (கூச)

80 சேம்பு [1]காலிறச் செங்கழு நீர்க்குளத்
தூம்பு காலச் சுரிவளை மேய்வன
காம்பு கால்பொரக் கண்ணகன் மால்வரைப்
பாம்பு தான்றெனப் பாய்பசுந் தேறலே.

81 பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி [1]விழைவன யாவையே.

82 பிறைமு கத்தலைப் பெட்பி னிருப்புபோழ்
[1]குறைக றித்திரள் [2]குப்பைப் பருப்பொடு
நிறைவெண் முத்தி னிறத்தரி சிக்குவை
உறைவ [3]கொட்டின வூட்டிடந் தோறெலாம்.

83 கலஞ்சு ரக்கு நிதியங் கணக்கிலா
நிலஞ்சு ரக்கு நிறைவள நன்மணி
பிலஞ்சு ரக்கும் பெறுதற் கரியதம்
குலஞ்சு ரக்கு மொழுக்கங் குடிக்கெலாம்.

---

80 கால் இற-அடியற்றுப் போகும்படி. குளத்தூம்பு - குளத்தினுடைய மதகு. கால - ஒக்க. காம்பு கால் பொர - மூங்கில்களைக் காற்று அலைக்க. தேறல் - மூங்கிலிற் கட்டியிருந்த கூட்டினின்றும் வழியும் தேன். தேனை ஊக்கிற்குப் பாம்பு: 'பொதிக்க ணிரூஅற் பூம்புறம் புதைஇ, மதிக்கண் மறைந்த மாசுணமரன' பெருங். உ. 50: 35-6.) காலிறும்படி தூம்பு தேறலைக் கால அதனை வளை மேய்வன. [பாம்பு தான்றெனப் பாய் பசுந் தேறலால் செங்கழுநீர்க் குளம் பெருகி மடைவழி யோடின தேனைச் சங்கின முண்டு முழங்கும்.] (பி - ம்.) [1]'கால் பொரச்' (நூ

81 வைகலும் - தினந்தோறும். விருந்து - விருந்தோம்பல்; 'மாதரா ரற்பி னின்றன வறங்கள்' (104.) விழைவன - அவர்கள் விரும்புவன. (பி - ம்.) [1]'விளைவன' (நூ சு

82 பிறை.....இரும்பு - அரிவாய்மணை, அரிவாளுமாம்; 'தெய்பிறை யிரும்பு' (சீவக. 55); குப்பைப் பருப்பொடு - பருப்பின் குவியலோடு. உறைவ கொட்டின - கொட்டினவையாகக் கிடப்பன. ஊட்டிடம் - ஊட்டுப்புரை. (பி - ம்.) [1]'குறைந றைக்கமிக் குப்பை' [2]'குப்பைப் பொருப் பொடு [3]'கொட்பின தூட்டிடந்', 'கோட்டமி லூட்டிடந்' (நூ எ

83 கலம் - மரக்கலங்கள். கணக்கிலா நிதியத்தை. நன்மணியைப் பிலம் சுரக்கும்; பிலம் - சுரங்கம். குலம் ஒழுக்கம் சுரக்கும்: 'எல்லாம் உணருங் குடிப்பிறப்பி னூதிய மென்னே' (நாலடி. 144.) (நூ அ

84 கூற்ற மில்லையோர் கூற்றமி லாமையால்
சீற்ற மில்லைதஞ் [1]சிந்தையின் செம்மையால்
ஆற்ற னல்லற மல்ல திலாமையால்
ஏற்ற மல்ல திழிதக வில்லையே.

85 [1]நெறிக டந்து பரந்தன நீத்தமே
குறிய ழிந்தன குங்குமத் தோள்களீள
சிறிய மங்கையர் தேயு மருங்குலே
வெறிய வும்மவர் மென்மலர்க் கூந்தலே.

86 அகிலி டும்புகை யட்டி லிடும்புகை
[1]நகலி னூலை நறும்புகை [2]நான்மறை
புகலும் வேள்வியிற் பூம்புகை யோடளாய்
முகிலின் விம்மி [3]முயங்கின வெங்கணும்.

வேறு

87 இயல்புடை பெயர்வன மயின்மணி யிழையின்
வெயில்புடை பெயர்வன [1]மிளிர்முலை குழலிற்
புயல்புடை பெயர்வன பொழிலவர் [2]விழியிற்
கயல்புடை பெயர்வன கடிகமழ் கழனி.

---

84 கூற்றம் - யமபயம்; கூற்றமில்லை: 'யாக்கை நிலையா தென்றறிந்து மறுமைக்கு வேண்டுவன செய்து கொண்டமையின்.....கூற்றத்தின் கொலைக்கு அஞ்சாமற் காவலுண்டாயிருக்கிற மதுரை' (மதுரைக். 632-3, உரை.) ஆற்றல் - செய்தல். சிந்தையின் செம்மை - மனத்தின் நடுவுநிலை. ஒப்பு: 98.

(பி - ம்) [1]'சிந்தை நற் செய்கையால்', 'சிந்தையின் செவ்வியால்', 'சிந்தையின் செய்கையால்' (கூ)

85 நெறிக டந்து.....நீத்தமே: மற்றவை நெறியின் புறம்பில்லாதவை; 26. குறி - கரும்பும் தொய்யிலும் முதலாகிய ஆடையாளங்கள். வெறி - வாசனை யுள்ளன, சித்த வெறியை யுடையன. இது நியமச் சிலேடையணி.

(பி - ம்) [1]'நெறியி றந்து நடந்தன' (சா)

86 நகலின் - நன்கு விளங்குதலுடைய. ஆலை - கரும்பு ஆலைகளின். நான்மறை புகலும் வேள்வி. 'வேத வேள்வியை' (தே. திருஞா.) முயங்கின - கலந்தன.

(பி - ம்) [1]'நகையி னூலை', 'நகிலிடும் புகையாலை', 'நகிலினூ', நகலினூ' [2]'நாவலர்' [3]'முழங்கின' (சூ)

8 இயல் - சாயல். மயில் பெண்களின் இயல்போல் புடை பெயர்வன. மணியிழையின் - இரத்தினபரணத்திலுள். குழலுக்கு மேகம் உவமை. விழியின் - விழியைப் போல. கடி - வாசனை.

(பி - ம்) [1]'முலையவர் குழல்போற்' [2]'விழிபோற்' (சூ)

88 இடையிற மகளிர்க ளெறிபுனன் மறுகக்
குடைபவர் [1]துவரித ழலர்வன குமுதம்
மடைபெய ரனமென மடநடை [2]யளகக்
கடைசியர் முகமென மலர்வன கமலம்.

89 விதியினை நகுவன வயில்விழி பிடியின்
கதியினை நகுவன வவர்நடை கமலப்
பொதியினை நகுவன் புணர்முலை [1]கலைவான்
மதியினை நகுவன வனிதையர் வதனம்.

90 பகலினை டிகலுவ படர்மணி மடவார்
நகிலினை டிகலுவ நளிவள ரிளநீர்
துகிலினை டிகலுவ [1]சுதைபுரை நுரைகார்
முகிலினை டிகலுவ கடிமண முரசம்.

---

88 இற - ஒடிய. எறி - அலையெறியும். மறுக - கலங்க. துவரிதழ் சிவந்த இதழைப்போல, துவரூட்டிய இதழைப்போல; 1277. நீர் மடையில் பெயர்கின்ற. அனமன - அன்னம் அன்ன. நடையையும் அளகத்தையு முடைய கடைசியரது.

(பி - ம்) [1]'துவரிதழன மலர்' [2]'யிளகக்' (சரூ)

89 விதி - பிரமன். நகுவன - இகழ்ச்சி செய்வன. 'அவர்களுடைய கண்கள் பிரம்மாவைப் பார்த்து, எங்களைப் போலக் கண்டவுடனே புருஷர் [ஞானிகளை ஞானங்கெட மயக்கியும், தீர்க்காயு படைத்த பேரை மனவி காரம் பண்ணி வாட்டியும் செய்கையால் விதியினை நகுவன.] கதி - நடை. கறை' (கலி. நெ:22.) கமல அரும்பு முலைபோல் எப்பொழுதும் ஒரு படித் தாயில்லாமல் மலர்தலும் குவிதலு முடையது. மதியினை நகுதல், தேய்ந்து வளர்தலாலும் மறுவோ டிருத்தலாலும்; 'திங்களுங்கள்.....முகங் கண்டு நாணி முயல் மறுத்தீர், மருந்தொன்று நாடியன் றேவட மேரு வலங் கொள் வதே' (தஞ்சை. 9.)

(பி - ம்) [1]'கலைவாண்', 'கலைவாய்' (சசு)

90 பகல் - சூரியன். நகில் - தனங்கள். நளி - பெருமை. சுதை - சுண்ணாம்பு. துகிலுக்கு நுரை. 'மணிநுரைக் கொடி' 36 (பி ம்); 'வெண்டுகில், அரையதாகவும் ஆடைகாணது.....குடைந்த, நுரைகை யரிக்கு மோர் நுடங்கிடை' (பெருங். க. 40: 148-51.) முரசுக்கு முகில்: குறுந். உஎ0, ஒப்புமைப்.

(பி - ம்) [1]'சுதை பொழி மனைகார்' (சரு)

91 காரொடு நிகர்வன கடிபொழில் கழனிப்
போரொடு நிகர்வன [1]பொலன்வரை யணைசூழ்
நீரொடு நிகர்வன நிறைகட னிதிசால்
ஊரொடு நிகர்வன விமையவ ருலகம்.

92 நென்மலை யல்லன [1]நிறமுறு தரளம்
சொன்மலை யல்லன தொடுகட லமிர்தம்
நன்மலை யல்லன நதிதரு நிதியம்
பொன்மலை யல்லன மணிபடு புளினம்.

93 பந்தினை யிளையவர் பயிலிட மயிலூர்
கந்தினை யனையவர் கலிதெரி கழகம்
சந்தன வனமல சண்பக வனமாம்
நந்தன வனமல நறைவிரி புறவம்.

94 கோகில நவில்வன விளையவர் குதலைப்
பாகியல் கிளவிக ளவர்பயி னடமே
கேகய நவில்வன கிளரிள வளையின்
நாகுக ளுமிழ்வன நகைபுரை தரளம்.

---

91 பொழிலுக்குமேகம் : 'தடங்கார்தரு பெருவான்பொழில்' (திருச்சிற். 31.) நெற் போர்க்கு மலை: மலைபடு. 461 ; கந்த. நாடு. 22. இமையவ ருலகத்தோடு நிகர்வது இரவு பகல் என்னும் வேறு பாடின்மைபற்றி; சீவக. 135. அணைசூழ்நீர் - குளம் முதலிய நீர் நிலைகள்.

(பி - ம்.) [1] 'புணர்மலை', 'புணர்முலை' (சசு)

92 சொன்மலை.....லமிர்தம்: 'யாவரும் தேவா மிர்தம்போல் வசனிப் பார்' என்றபடி. மலை - தொகுதி. பொன்மலை - மேருமலை. புளினம் - மணற்குன்று. அல்லன : 142. (பி - ம்.) [1] 'நிரைவரு' (சஎ)

93 இளையவர் - மகளிர். இளையவர் பந்தாடல் : 151, பந்தாடுமிடம் சந்தனவனம். கலை - வில் வித்தை முதலியன. பதுமினிச் சாதிப் பெண் களின் உடல் சண்பகப்பூ மணமுடையது. பெண்கள் சந்தனச் சோலை யில் பந்தாடுதல்: சந்தனச் சோலைப்பந் தாடுகின்றார்' (திருச்சிற். 107.) நறை விரி புறவம்-முல்லை மணம் வீசுகின்ற முல்லை நிலம். சிறந்த ஆடவர் மேனி முல்லை மலரின் மணமுடையது; 'மணந்தனன் மன்னெடுந் தோளே, இன்று முல்லை முகைநா றும்மே' (குறுந். 44); 'திருந்திழைகண், மான்மறிக்குன் றிருமேனி மலர் முல்லைப் புறவமே' (சிதம்பரச்செய். 57.) (சஅ)

94 இஃது எதிர்மறையணி. கோகிலம் கிளவிகளை நவில்வன. கேகயம் - மயில்கள் ; மயில்கள் அவர் பயில் நடமே நவில்வன. வளையின் நாகு-சங்

95 பழையர்த மனையன பழநறை நுகரும்
உழவர்த மனையன வுழுதொழில் புரியும்
மழவர்த மனையன மணவொலி யிசையின்
கிழவர்த மனையன கிளைபயில் வளையாழ்.

96 கோதைகள் சொரிவன குளிரிள நறவம்
பாதைகள் சொரிவன பருமணி கனகம்
ஊதைகள் சொரிவன [1] வுயிருறு மமுதம்
காதைகள் சொரிவன [2] செவிநுகர் கவிகள்.

வேறு

97 இடங்கொள் சாயல்கண் டிளைஞர் சிந்தைபோல்
தடங்கொள் [1] சோலைவாய் மலர்கொய் தாழ்குழல்
வடங்கொள் பூண்முலை மடந்தை மாரொடும்
தொடர்ந்து [2] போவன தோகை மஞ்ஞையே.

---

95 பழையர்-கள் விற்பவர்; 149. நுகரும்-அந்த நறையை உண்ணும். புரியும் - அவ்வுழு தொழில் புரிகின்ற. இசையின் - அந்த மண வொலிக் குரிய இசையின். மழவர் - இளைஞர். கிளை-கிளைநரம்பு; ஐந்து நரம்பு; சிலப். அ: 33 - 4, உரை. (நு0)

96 பாதை-வழி; என்றது தரைவழி கடல்வழிகளை; 'நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும், காலின்வந்த கருங்கறி மூடையும்' (பட்டினப். 185-6); 'அரும்பொரு ளரூஉம் விருந்திற்றேஎம், ஒருங்குதொக் கன்ன உடைப் பெரும் பண்டம், கலத்தினுங் காலினுந் தருவன ரீட்ட' (சிலப். உ: 5 - 7.) அமுதம் - நீர்; குறள், 11. காதை - பாட்டு: சிலப். மணி. முகவுரை. கனிகள் (பி - ம்.) - சாரம்; சீவக. 1985, உரை.

(பி-ம்.) [1] 'வுறைவுறு மமிர்தம்' [2] 'செவிநுகர் கனிகள்', 'செவியுறு கனிகள்' (நுக)

97 இடம் - பெருமை; 330; 'இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினும்' (நாலடி. ககசு.)

முடிபு: இளைஞர் சிந்தைபோல் மடந்தைமாரொடும் தொடர்ந்து போவன மஞ்ஞை. இளைஞர் சிந்தை மகளிரைத்தொடர்தல்; 577. தோகை மஞ்ஞை - ஆண் மயில்கள். மடந்தையரைத் தொடர்தல் பெண் மயிலெனக் கருதி.

(பி - ம்.) 1 'சோலையின்

98 வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்
திண்மை [1] யில்லைநேர் செறுந ரின்மையால்
உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்
வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால்.

99 எள்ளு மேனலு மிறுங்குஞ் சாமையும்
கொள்ளுங் கொள்ளையிற் கொணரும் பண்டியும்
அள்ள லோங்களத் தமுதின் பண்டியும்
தள்ளு நீர்மையிற் [1] றலைம யங்குமே.

100 உயருஞ் சார்விலா வுயிர்கள் செய்வினைப்
பெயரும் [1] பல்கதிப் பிறக்கு மாறுபோல்
அயிருந் தேனுமின் பாகு மாயரூர்த்
தயிரும் வேரியுந் தலைம யங்குமே.

101 கூறு பாடலுங் குழலின் பாடலும்
வேறு வேறுநின் றிசைக்கும் வீதிவாய்
ஆறு மாறும்வந் தெதிர்ந்த [1] தாமெனச்
சாறும் வேள்வியுந் தலைம யங்குமே.

---

98 வண்மை.....வறுமையின்மையால் ; 'யாதுங், கொள்வாரிலா மைக் கொடுப்பார்களு மில்லை' (179.) வெண்மை-அறியாமை ; 'வெள்ளியை யாதல் விளம்பினை', 'வெள்ளை மனத்தவர்' (452,784); 'வெண்மையெனப் படுவ தியாதெனி னெண்மை யுடையம்மா மென்னுஞ் செருக்கு' (குறள், 844); 'வெள்ளைக்கோட்டி' (சீலப். கூ0: 198); 'வெளிறிலாக் கேள்வியான்' (சீவக. 200); 'வினையு மாற்றநின் திருவடிவினுமிக வெள்ளையா கியது' (வி - பா. உலூக. 4); 'வெளிறெறி கேள்வி' (கூர்ம. சந்திர. 109.)

(பி - ம்.) 1 'யில்லையோர்' (இரு)

99 கொள்ளை - மிகுதி. அளத்தமுது - உப்பு. தள்ளுதல் - தம் இடத்தி னின்று நீக்குதல். தலைமயங்கும் - கலந்திருக்கும்.

(பி - ம்.) 1 'தரை மயங்குமே' (இச)

100 வினையால் பிறப்பில் தடுமாறுதல்; 42. உயரும் சார்வு - ஞானம்; உயர் கதியுமாம். அயிர் - சருக்கரை. வேரி - கள்.

(பி - ம்.) 1 'செல்கதிப்' (இடு)

101 கூறு - இசைக்கின்ற; 'மொழிந்தன பல்லியம்' (262); 'புகன்ற தீங்குழல்' (சீவக. 1940.) சாறு - விழவு. வேள்வி-திருமணம். சாறும் வேள்வியும்: 'வேள்வியும் விழாவும் நாடொறும் வகுத்து' (சிலப்-உசா: 232); 'விழ வொலியும் வேள்வொலியு மானுன் கண்டாய்' (தே. நா. மழபாடி).

(இச)

102 மூக்கிற் றுக்குறு [1]மூரி நந்துநேர்
தாக்கிற் றுக்குறும் பறையுந் தண்ணுமை
வீக்கிற் றுக்குறும் விளியு மன்னர்தம்
வாக்கிற் றுக்குறு [2]மொலியின் மாயுமே.

103 தாலி யைம்படை தழுவு மார்பிடை
மாலை [1]வாயமு தொழுக்கு மக்களைப்
பாலி னூட்டுவார் செங்கை பங்கயம்
வால்நி லாவுறக் [2]குவிதன் மானுமே.

104 பொற்பி னின்றன பொலிவு பொய்யிலா
நிற்பி னின்றன நீதி மாதரார்
அற்பி னின்றன வறங்க ளன்னவர்
கற்பி னின்றன கால மாரியே.

---

102 மூக்கின் தாக்குறும் மூரி நந்து - மூக்கினிடத்தே ஊதப்படும் பலமுள்ள சங்கின் ஓசை. பறை - போரிகை ஓசை. தண்ணுமை - மத்தளம். மன்னர் - வீரர். மாயும் - அழியும். எம் முழக்கமும் வீரர் ஆர்ப்பொலியி னல் அழியும்.

(பி-ம்.) 1 'முரிந்த கோதை நேர்' 2 மொலியை மானுமே', 'மொலியு மானுமே' (நுஎ)

103 தாலி ஐம்படை - காத்தற் கடவுளாகிய திருமாலுடைய ஐந்து ஆயுதங்கள் போலப் பொன்னுற் செய்யப்பட்டுக் காவலாகக் குழந்தைகளின் கழுத்திற் பூட்டப்பட்டு வந்த ஓர் ஆபரண விசேடம்; அகநா. நுசு; புறநா. எஎ; மணி. ஈ: 138, எ: 56; பெரியாழ். திரு க. 4: 5; கலிங்கத் அவதார. 9; திருவிளை. 39: 25. ஐம்படை:சங்கு, சக்கரம், கதை, வில், வாள் என பன. கைக்குப் பங்கயமும், பாலூட்டுஞ் சங்குக்கு நிலவும் உவமை.

(பி.ம்.) 1 'வாயமிர் தொழுகு' 2 'குவிவ மானுமே' (நுஅ)

104 பொற்பின்-அழகைப்போல். பொலிவு-நற்குண நற்செய்கைகள்; குடிப்பெருமையுமாம்; 'பொற்பே பொலிவு' (தொல். உரி. சூ.37.) 'நின்ற சொல்லி னீடுதோ றினியர்' (நற். க.)'நிற்பின்-சத்தியசற்சனங்களைப்போல்' (ஔ உரை.) அற்பு-அன்பு. அற்பினின்றன வறங்கள் : 'அறத்திற்கே யன்பு சார் பென்ப' (குறள், 76). 'அறங்கள்-இல்லற தருமம்' (ஔ உரை.) கற்பின் ...மாரி : 'வறனேடின வையத்து வான்றருங் கற்பினுள்' (கலி. கசு: 20); 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை' ((குறள், 55); 'வானம்.....நாடு' (சிலப். கசு: 145-7); 'வான்றரு கற்பின் மனையுறை மகளிர்' 'ஆயிழை.....மழைமுதல்

105 சோலை மாநிலந் துருவி யாவரே
வேலை கண்டுதா மீள வல்லவர்
சாலும் வார்புனற் சரயு வும்பல
காலி னெடியுங் கண்ட தில்லையே.

106 [1]வீடு சேருநீர் வேலை கான்மடுத்
தூடு பேரினு மூலவி லாநலம்
கூடு கோசல மென்னுங் கோதிலா
நாடு கூறினு நகரங் கூறுவாம்.

---

3. நகரப் படலம்

வேறு

மேலுலகினும் அயோத்தி சிறந்தது

107 [1]செவ்விய மதுரஞ் சேர்ந்தநற் பொருளிற்
சிரிய கூரிய தீஞ்சொல்
வவ்விய கவிஞ ரனைவரும் வடநூன்
முனிவரும் புகழ்ந்தது வரம்பில்
இவ்வுல கத்தோர் யாவருந் தவஞ்செய்
தேறுவா ரெதிரக் கின்ற
அவ்வுல கத்தோ ரிழிவதற் கருத்தி
[2]புரிகின்ற தயோத்திமா நகரம்.

---

105 நிலம் - கோசல நாடு. வேலை - எல்லை. கால்-வாய்க்கால், பாதம்; சிலேடை. சரயுநதி பாயாத இடமும் இந்நாட்டிலுண்டு. சரயு பலகாலினெடியும் காணுததை யாவர் இருகாலின் நடந்து காண்பார் என்றபடி. (சூ0)

106 வீடு சேரும் நீர் - கோசல நாட்டிற் பாய்ந்து எஞ்சியதாக வீடுதலை யுடைய நீர். கால் மடுத்து - காற்றோடு கலந்து. வீடு.....உலவிலா நலம்கூடு-' உகாந்த காலம் வந்து உலகமெல்லாம் அழிந்து போனலும் அழியாத வளப்பங்களை யுடைய' (ஓர் உரை.) (பி-ம்.) 1 'வீடுசேர' (சூக)

107 செவ்விய...தீஞ்சொல்: 'செவ்விய தீவிய சொல்லி' (கலி. கசு: 1.) [திவ்விய மதுரம் (பி-ம்)-அற்புத ரஸம்.] கவிஞர் - இராமாயணம் பாடிய சங்கப் புலவர் முதலியோர்; சங்கத்தார் ராமாயணத்தை நினைந்து கூறியது இது. வடநூன் முனிவர்: பாயிரம், 13, குறிப். அருத்தி - ஆசை. இச் செய்யுளின் கருத்து 'மாண்டுபிறக் குந்துயர்போய் வைகுந்தம் புக்கவரும், மீண்டுதொழக் காதலிக்கும் வேங்கடமே' (திருவேங்கடமாலை, 10) என்றதை ஒத்தது. சுவர்க்க லோகத்திலும் மேலானபோகங்களை யுடையது அயோத்தி எனக்.

அயோத்திக்கு உவமைகள்

108 நிலமகண் முகமோ [1]திலகமோ கண்ணே
நிறைநெடு மங்கல நாணே
இலகுபூண் முலைமே லாரமோ வுயிரி
னிருக்கையோ திருமகட் கினிய
மலர்கொலோ மாயோன் [2]மார்பினன் மணிகள்
வைத்தபொற் பெட்டியோ [3]வானோர்
உலகின்மே லுலகோ வூழியி னிறுதி
யுறையுளோ யாதென வுரைப்பாம்.

சூரிய சந்திரர் இமையாமல் திரியும் காரணம்

109 உமைக்கொரு பாகத் தொருவனு மிருவர்க்
கொருதனிக் கொழுநனு மலர்மேல்
கமைப்பெருஞ் செல்வக் கடவுளு முதலோர்
கண்டிலா நகரது காண்பான்
அமைப்பருங் [1]காத லதுபிடித் துந்த
வந்தரஞ் சந்திரா தித்தர்
இமைப்பிலர் திரிவ ரதுவலா லிதனுக்
கியம்பலா [2]மேதுவே றியாதோ.

---

108 உயிரின் இருக்கையோ - நிலமகளின் உயிர் நிலையான மருமஸ்தானமோ; 'ஆன்மாக்கள் எல்லாம் கூடியிருக்கின்ற சத்தியலோகமோ' (ஔ் உரை.) 'மாயோன் மார்பில் மணி' அயோத்திக்கு உவமை; உ. 2. 28. [உலகின் மேலுலகு - வைகுண்டம். ஊழியின் இறுதி உறையுள் - பரமபதம்.] ஊழியின்.....யுள் - 'சங்கார காலத்திலே யெல்லாரும் போய்ச் சேர்ந்திருக்கிற சிவலோகம்' (ஔ் உரை) 'ஊழி வாழ் திருநகர்' (உ. 9: 38.) இச் செய்யுளில் திருமாலின் தேவியரான திருமகளையும், பூமியையும் கூறினர்.

(பி - ம்.) 'திலதமோ' 2 மார்பினன் மணிக்கலம், 3 'மலரோன்' (உ)

109 இருவர் - திருமகளும் நிலமகளும். கமை = அமை - பொறுமை. கடவுளும் - பிரமனும். கண்டிலா - படைத்திலாத; தற்குறிப் பேற்றம்.

(பி - ம்.) 1 'காதன் முன்பிடித்' 2 'ஏதுமற்றியாதோ' 'முவமை மற்றியாதோ'

பிரமன் அயோத்தியைப் படைத்த சிறப்பு

110 அயின்முகக் குலிசத் தமரர்கோ னகரு
மளகையு மென்றிவை [1]யயனர்
பயிலுற வுற்ற [2]படிபெரும் பாலு
மிப்பெருந் திருநகர் படைப்பான்
மயன்முதற் றெய்வத் தச்சருந் தத்த
மனத்தொழி லினைனர் மறந்தார்
புயலுரு குடுமி நெடுநிலை [3]மாடத்
தந்நகர் புகலுமா றெவனே.

இது போகபுரி

111 புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்க
மென்னுமீ தருமறைப் [1]பொருளே
மண்ணிடை யாவ ரிராகவ னன்றி
மாதவ மறத்தொடு வளர்த்தார்
எண்ணருங் குணத்தி னவனினி திருந்திவ்
வேழுல காளிட மென்றுல்
ஒண்ணுமோ வதனின் வேறுரு போக
முறைவிட முண்டென வுணர்தல்.

---

110 குலிசம் - வச்சிராயுதம். நகர் - அமராவதி. அளகை - குபேர னுடைய நகர். 'அயனர் நகர் படைப்பான் பயிலுற வுற்றபடி' என்று இயைக்க. 'மயன் - தெய்வத்தச்சன்' (சிலப். உ: 12, அடியார்.) மயனை அசுரத் தச்சன் என்பாரு முளர்; வி. பா. இராச. 5. மயன் முதலினோர் மனத்திலே நினைத்துச் சிருஷ்டிக்கிறவர்கள்: வி. பா. இராச. 7. 8. நெடு நிலைமாடம்: 32.

(பி - ம்.) 1 'யயனும்' 2 'படிபெரும் பான்மை' 3 'மாடத் திரு நகர்' 'மாடப் பொன்னகர்' (சு)

111 புண்ணியம்..... துறக்கம்: 'அறம் பெரிதாற்றி யதன்பயன் கொண்மார், சிறந்தோ ருலகம் படருநர் போல' (பரி. ககு: 10-11); 'நோற் றோர் மன்ற.....ஆண்டு வாழ்வோரே', 'ஈண்டுச்செய் நல்வினை யாண்டுச் சென்றுணீ இயர், உயர்ந்தோ ருலகத்துப் பெயர்ந்தனன்' (புறநா. உசு: 16-8, களச: 19-20); 'ஈண்டுச் செய்வினை யாண்டு நுகர்ந்திருத்தல்' (மணி. கசு; 38.) குணத்தினவன்: 5, குறிப். தவத்தையும் அறத்தையும் நிலை நிறுத்தினன் இராமபிரான். ஏழுலகு - ஏழுதீவு. இனிதிருந்து ஆளிடம்: 112.

பொன்னகரிலும் சிறந்தது இது

112 [1] தங்குபே ரருளுந் தருமமுந் துணையாத்
தம்பகைப் [2] புலங்களைந் தவர்க்கும்
பொங்குமா தவமும் ஞானமும் புணர்ந்தோர்
யாவர்க்கும் புகலிட மான
செங்கண்மால் பிறந்தாண் டளப்பருங் காலந்
திருவின்வீற் [3] றிருந்தன னென்றூல்
அங்கண்மா ஞாலத் தந்நக ரொக்கும்
[4] பொன்னக ரமரர்நாட் டியாதோ.

தனக்கு உவமை வேறில்லாதது

113 அரசெலா மவண வணியெலா மவண
வரும்பெறன் மணியெலா மவண
[1] புரசைமா களிறும் புரவியுந் தேரும்
பூதலத்தி யாவையு மவண
விரசுவார் முனிவர் விண்ணவ ரியக்கர்
விஞ்சையர் முதலினே [2] ரெவரும்
உரைசெய்வா ராரு ரானபோ ததனுக்
குவமைதா னரிதரோ வுளதோ.

---

112 அருள், அறம்: 183, 'அருட்டுறையினீங்கிய வறமும்' (உ. 12 100); 'அருளொடு புணர்ந்த அகற்சி' (தொல். புறத். 21, ந.) திருமால் திருவின் வீற்றிருந்தன னென்றூல்: 'அனையதே பட்ட தென்றூல்; என்றூல் ஒரு வார்த்தைப் பாடு' (சீவக 1053 ந.) அந்நக ரொக்கும்பொன்னகர் யாதோ: 'துறக்கமா மென்னலாய தூய்மதி லயோத்தி' (உ. 6: 48க்குப் பின்னுள்ள அதிகப் பாடல்.)

(பி-ம்.) 1 'தங்குமா பொருளுந்' 2 'புலங்களைத் தவிர்க்கும்' 3 'றிருந்தமை தெரிந்தால்' 4 'நன்னக' (சு)

113 புரசை - யானைக் கழுத்திடு கயிறு. விரசுவார்.....உரை செய்வார். அங்கே வந்து கலப்பாராய் உரை செய்வார். உரை செய்தல் - புகழ்தல். அரோ: ஓர் இடைச்சொல்; 'கொல்' என்பது போல ஐயப்பொருளில் வந்தது; 1127.

(பி - ம்.) 1 'புரசைமால்' 2 'ரென்றூல், உரை செய்வன் யானே யானதனைத்'

மதில் வருணனை

114 நால்வகைச் சதுரம் விதிமுறை நாட்டி
நனிதவ வுயர்ந்தன பனிதோய்
மால்வரைக் குலத்தின் யாவையு மில்லை
யாதலா லுவமைமற் றில்லை
[1]நூல்வரைத் தொடர்ந்து பயத்தொடு பழகி
நுணங்கிய [2]நூலவ ருணர்வே
[3]போல்வரைத் தல்லா லுயர்விலை யுயர்ந்த
தென்னலாம் பொன்மதி னிலையே.

115 மேவரு முணர்வு முடிவிலா ணமயினுல்
வேதமு மொக்கும்விண் புகலாற்
றேவரு மொக்கு முனிவரு மொக்குந்
திண்பொறி யடக்கிய செயலாற்
காவலிற் கலியூர் கன்னியை யொக்குஞ்
சூலத்தாற் காளியை யொக்கும்
[1]யாவருந் தன்னை யெய்துதற் கரிய
தன்மையா லீசனை யொக்கும்.

---

114 நால்வகைச் சதுரம்: சு. 8: 16. வரைக் குலத்தில், நாட்டப் பெற்று உயர்ந்தன இல்லை நனிதவ: ஒரு பொருட் பன்மொழி. நூல்.....பழகி: அறிவுக்கும் மதிலுக்கும் சிலேடை; நூல்வரை - நூலின் வரம்பு. பிடித்த நூலின் எல்லை, நெடுநல். 78, ந பயம் - அறம் முதலிய நாற்பொருட் பயன், அகழிநீர். நுணங்கிய நூலவர்: 'நுணங்கிய கேள்வியர்' (குறள், 419.) 'நூலளவே யாகுமா நுண்ணறிவு' (மூதுரை); உயர்விலை யுயர்ந்தது - தன் உயரத்துக்குத் தானே ஒத்தது, (ஓர் உரை.)

(பி - ம்.) [1]நூல்வகைத்' [2] நுவலரு முணர்வே' [3]போல்வகைத்' (அ)

115 அறிவினுல் முடிவுகாண இயலாத தன்மையால் வேதம் உவமை. வேதம் நான்கு, புற மதிலும் நான்கு; 'வேத நான்கு மன்ன வாயிலே' (128.) பொறி - ஐம்பொறிகள், ஆயுதங்கள், சிலேடை. மதிலின்மேல் பொறிகள்: சிலப். கடு: 207, 218 பெருங். கூ. 3: 17-38, சீவக. 105, பு. வெ 112; திருவிளை. நகரப். 24 9. கலியூர் கன்னி - துர்க்கை; கிராமத்துக்குத் தீங்கு வராமற் காவல் புரிபவள். சூலம் - இடிதாங்கி, சூலமென்னும் ஆயுதம்; 142. ஈசன் - சிவன்; 'காலாக்கினிருத்திரன்' (ஓர் உரை.)

(பி - ம்.) [1]யாவரு மொக்கும் பெருமையா'லெய்தற் கருமை யாலீசனை', 'யாவையு மொக்கும் பெருமை' (க)

116 பஞ்சிவான் மதியை [1]யூட்டிய வனைய
படருகிர்ப் பங்கயச் செங்கால்
வஞ்சிபோன் மருங்குற் குரும்பைபோற் கொங்கை
[2]வயங்குவேய் வைத்தமென் பணைத்தோள்
அஞ்சொலார் பயிலு மயோத்திமா நகரி
னழகுடைத் [3]தன்றென வறிவான்
இஞ்சிவா னேங்கி யிமையவ ருலகங்
காணிய வெழுந்ததொத் துளதே.

117 கோலிடை யுலக மளத்தலிற் பகைஞர்
முடித்தலை கோடலின் மனுவின்
[1]நூலிடை நடக்குஞ் செவ்வையின் யார்க்கு
நோக்கருங் காவலின் வலியின்
வேலொடு வாள்விற் பயிற்றலின் வெய்ய
சூழ்ச்சியின் வெலற்கரு [2]நலத்திற்
[3]சாலுடை யுயர்விற் சக்கர நடத்துந்
தன்மையிற் றலைவரொத் துளதே.

118 சினத்தயில் கொலைவாள் சிலைமழுத் தண்டு
சக்கரந் [1]தோமர மூலக்கை
கனத்திடை யுருமில் வெருவருங் கவண்க
லென்றிவை கணிப்பில [2]கொதுகி
னினத்தையு முவணத் திறையையு மியங்கு
காலையு [3]மிதமல நினைவார்
மனத்தையு மெறியும் பொறியுள வென்றூன்
மற்றினி யுணர்த்துவ தெவனே.

---

116 பஞ்சி.....கால் - செம்பஞ்சிக் குழம்பாலே ஊட்டப்பட்ட. பூர்ண சந்திரர்களை வரிசையாய்ப் பதித்தது போன்ற நகங்களோடு கூடிய தாமரை யனைய பாதங்கள். தோளையுமுடைய அஞ்சொலார். வேய் - மூங்கில். நகரின் - நகரைப்போல. உடைத்தென, அன்றென அறிவான். இஞ்சி - மதில்; எழுவாய். (பி - ம்.) [1]ஊட்டிய தனைய' [2]வாங்கு வேய்' [3]'தோவென' (கo)

117 கோலிடை யுலகம் அளத்தலின்: மதிலுக்குக் கூறுங்கால் உலகத் தவர் கோலினுல் தன்னை அளத்தலினுல். மனு - தெய்வத் தச்சருள் ஒருவன். நூலிடை நடத்தல் - சிற்ப சாஸ்திரப்படி ஒழுங்குபடக் கட்டியிருத்தல். சூழ்ச்சி - நாற்புறமும் சூழ்ந்திருத்தல். சாலுடையுயர்வு - உன்னதமான உயர்ச்சி. அரசருக்குக் கூறுங்கால், கோல் - செங்கோல். மனு நூலிடை நடத்தல் - மனுதரும சாஸ்திரத்தின்படி ஒழுகல். பயிற்றல் - தெரியக் காட்டு தல். சூழ்ச்சி - ஆலோசனை. சக்கரம் - ஆணையாகிய சக்கரம்; ஓர் ஆயுதம். (பி - ம்.) [1]நூனெறி' [2]வலத்திற்' [3]'சால்புடை' (கக)

118 சினத்து அயில் - உடையவன் பண்பு உடையதன் மேல் ஏற்றப் பட்டது. தோமரம் - கைவேல். கனத்திடை உரும் - மேகத்தில் தோன்றும் இடி. பறப்பனவற்றுள் சிறுமைக்குக் கொசுக்களையும் பெருமைக்குக் கருட

119 பூணினும் புகழே யமையுமென் றிணைய
பொற்பினின் றுயிர்நனி புரக்கும்
யரணெண் டிசைக்கு மிருளற விமைக்கு
மிரவிதன் குலமுத னிருபர்
சேணையுங் கடந்து திசையையுங் கடந்து
திகிரியுஞ் செந்தனிக் கோலும்
ஆணையுங் [1]காக்கு மாயினு நகருக்
கணியென வியற்றிய தன்றே.

அகழியின் வருணனை

120 அன்னமா மதிலுக் காழிமால் வரையை
யலைகடல் சூழ்ந்தன வகழி
பொன்விலை மகளிர் மனமெனக் கீழ்போய்ப்
புன்கவி யெனத்தெளி வின்றிக்
கன்னிய ரல்குற் றடமென யார்க்கும்
படிவருங் [1]காப்பின தாகி
நன்னெறி விலக்கும் [2]பொறியென [3]வெறியுங்
காரத்தது நவிலலுற் றதுகாம்.

னையும் கூறினர். இயங்கு கால் - சஞ்சரிக்கும் காற்று. மதில் மேற் பொறிகள்: 115. குறிப்.

(பி - ம்) [1]தோமரம் வலயம்' [2]வலங்கி; னினத்தையு முவணர்க் கிறையையு' [3]மிதமலா' (கூ)

119. பூணினும் புகழ் சிறந்தது. யாணர் - புதிய வருவாயையுடைய. சேண் - தேவருலகம்; முருகு. 12, உரை. மதில், நகருக்கு அழகு: 'அகழு மதிலு மலங்கார நீர்மைய வென்பது போதர அணிதில்லை யென்றார்' (திருச்சிற். 181. பேர்.)

(பி - ம்.) [1]ஆணையுங் கடக்கு மாயினர்', 'ஆணையு நடத்து மாயினர் நகருக்' (கூ)

120. ஆழிமால்வரை - சக்கரவாளகிரி; 'நேமிமால்வரை மதிலாக, (188.) அலைகடல் - பெரும் புறக்கடல். விலைமாதர் மனம் ஆழ்ந்திருக்கும். புன்கவிதெளிவின்மைக்கு: 'சல்லார் கவிபோற் கலங்கி' (திருவிளை. 8 : 22.) கன்னியர் காப்பு: 'கட்டுடைக் காவலிற் காமர் கன்னியே' (சீவக. 98.) கன்னியரின் கற்பு: உ. 1 : 17; அகழியிற்கரா ; 'கோள்வாய் முதலிய குண்டகழி நீராக' (பு. வெ. 110.)

(பி - ம்.) [1]கற்பினதாகி' [2]பொறியினை யெறியும்' [3]வெறியு நாரமத மறையலுற்', 'வெறியு நகாது' (சச)

வேறு

121 ஏகு கின்ற தங்க ணங்க ளோடு மெல்லை [1]காண்கிலா
நாக மொன்ற கன்கி டங்கை நாம வேலை யாமெனு
மேக மொண்டு கொண் டெழுந்து விண்டொ டர்ந்த குன்றமென்
றூக நொந்து நின்று தாரை யம்ம திற்கண் வீசுமே.

122 அந்த மாம திற்பு றத்த கத்தெ ழுந்த [1]லர்ந்துநீள்
கந்த நாறு பங்க யத்த கான மான மாதரார்
முந்து வாண்மு கங்களுக்கு டைந்து போன [2]மொய்ம்பெலாம்
வந்து போர்வி ளைக்க மாம தில்வ [3]ளைந்த தொக்குமே.

123 சூழ்ந்த நாஞ்சில் சூழ்ந்த வாரை சுற்று முற்று பாரெலாம்
போழ்ந்த மாகி டங்கி டைக்கி டந்து பொங்கி டங்கர்மா
தாழ்ந்த வங்க வாரி யிற்ற [1]டுக்கொ ணுமை தத்தின்வீழ்ந்
தாழ்ந்த யானை [2]மீள்கி லாத மூந்து கின்ற போன்றவே.

---

121. கணங்கள் - மேகக் கூட்டங்கள். நாகம் - பாதாள உலகம்; எல்லை காண்கிலாக் கிடங்கு. நாமவேலை - அச்சந்தரும் கடல். மதிலுக்கு மலை: 'கோடுறழ்ந் தெடுத்த கொடுங்க ணிஞ்சி' (பதிற். கசு: 1); 'வரையுறழ் நீண் மதில்' (கலி. கூஉ: 12.)

முடிபு: மேகம் தங்கணங்களோடும் மொண்டு கொண்டெழுந்து மதிற் கண் தாரை வீசும்.

(பி - ம்.) [1]'காண்கலா, நாகமென்ற தன்கி டங்கை', 'காணலா' (கரு)

122. பங்கயத்த கானம் - தாமரைக்காடு. மானம் - பெருமையுள்ள. போன மொய்ம்பு - இழந்த வலிமை. போர் விளைத்தல் மாதரார் முகங்களாகிய தம் பகையை வெல்லும் பொருட்டு.

(பி - ம்.) [1]'லர்ந்த செங்', [2]'மொய்த்தெலாம்', 'மொய்ம்பிலுல்', [3]'ளைத்தன் மானமே', 'ளைந்த போன்றவே' (கசு)

123. நாஞ்சில் - ஏப்புழை; 'கனக நாஞ்சிற் கடிமதில் (நெ. 1 : 90); (நாஞ்சில் - கோட்டை, ஆரை - பிள்ளைக்கோட்டை) பார் - பாறை. பாரெலாம் போழ்ந்த கிடங்கு: மதுரைக் 730; மலைபடு. 91; அகநா. 79: 13. புறநா. கசு: 5. இடங்கர்மா — முதலை; 'முண்ட கத்துறை மேய்ந்த முதலைமா,' (சூளா. நாட்டு. 22.) திர்யக் என்பதுபோல மா என்பது சாதாரண விலங்கு கட்கே யன்றி நீர் வாழுயிர்கட்கும் பறவைகட்கும் வழங்கும் பெயர்; 'முதலையுஞ் சுறவும் .....மீனெனப்படுவ வல்லது மாவெனப்படா' (சிலப். பதி. 1—2, அடியார்.) வங்கவாரி - கடல். முதலைக்கு யானை: 125(பி - ம்) [1]'டுப்பொ ணுமதத்திலுல்' [2]'மீதெ ழாத' (கஎ)

124 ஈரும் வாளின் [1]வால்வி ரித்தெ யிற்றி ளம்பி றைக்குலம்
பேர மின்னி [2]வாய்வி ரித்தெ ரிந்த கட்பி றங்குதீச்
சோர வொன்றை யொன்று முன்றெ டர்ந்து சீறி டங்கர்மா
[3]போரு கந்து சிறு கின்ற போர ரக்கர் போலுமே.

125 ஆளு மன்னம் வெண்கு டைக்கு லங்க ளா[1]வ ருங்கரா
கோளெ லாமு லாவு கின்ற குன்ற மன்ன யானையாத்
தாளு லாவு பங்க யத்த ரங்க முந்து ரங்கமா
வாளும் வேலு [2]மீன மாக மன்னர் சேன மானுமே.

அகழியின் கரை

126 [1]விளிம்பு சுற்று முற்று வித்து வெள்ளி கட்டி யுள்ளுற
பளிங்கு பொற்[2]ற கட்ட கட்ட டுத்து றப்ப டுத்தலிற்
றளிந்த கற்ற லத்தொ டச்ச லத்தி னைத்த னித்துறத்
தெளிந்து ணர்த்து கிற்று மென்ற றேவ ராலு மாவதே.

---

124. ஈரும் வாளின் - ரம்பத்தைப்போல. முதலையின் எயிற்றுக்குப் பிறைக்குலம். பேர மின்னி - விட்டு விட்டு ஒளிவீசி. முதலை வாலுக்கு ஈர் வாள். முதலைக்கு அரக்கர்.

(பி - ம்.) [1]'வால்வி திர்த்' [2]'நாவி திர்த்', 'நாநிமிர்த்' [3]'போரில் வந்து', 'போரு வந்து' (கஅ)

125. ஆளும் - அகழியில் ஆட்சிகொண்ட. அன்னத்துக்கு வெண் குடை கரா - முதலை. அகப்பட்ட பிராணிகளை இழுத்துக்கொள்வது. கோள்-கிரகங்கள். தாள்-தாமரைத்தண்டு. முதலைக்கு யானை; 123. குதிரைக்கு ஆலை: ரு: 11 : 8. குன்றம் - மேருமலை. வாளுக்கு வாள்: 'வாளை பிறழும் கயங்கடுப்ப.....வெள்வாள் விதிர்த்து' (பு. வெ. 147.) கெண்டைக்கு வேல்: 'வேலன்ன வொண்கயல்', 'வயற் கெண்டையின் வேல் பிறழினும்' (புறநா. உசகு: 6, உஅள: 4.) (பி - ம்.) [1]'யருங்கராக்' [2]'மீனதாக' (கக)

126. விளிம்பு.....கட்டி: க. 6 : 5. விளிம்பு.....படுத்தலின் - 'வெள்ளியை யுருக்கி (த் திண்ணையாக) இரு புறமும் சுற்றிவரக் கட்டி நடுவே சந்து சந்துக்கும் பொன் தகட்டாலே சுந்தள மிழைத்துப் பளிங்குக் கற்களைத் தளவரிசையாய்ப் பதிப்பித்திருக்கிற படியினாலே' (ஓர் உரை.) அச்சலத்தினை - அந்த அகழியின் நீரை. தளிந்த - குளிர்ந்த; 'தளியார் சலதி' (சேதுபு. சேதுவந். 30); தெளிவுள்ள: 'ஆதிப்பிரானைத் தளிந்தவர்க் கல்லது' (திருமந்திரம், 527.) பளிங்கும் புனலும்: 949, 1055. 'பளிங்கு செற்றிக்குயிற்றிய பாயொளி, விளிம்பும் வெள்ளமு மெய்தெரியாது' (கு. 2 : 154); 'பளிங்கினுல் விளங்குகின்ற, மாரனும் மருளச்செய்த மாளிகை.....,நீரினுலியன்ற வென்ன நிழலெழுகின்ற' (சு. 9 : 40.)

(பி - ம்.) [1]'விளிம்பு தெற்றி' [2]'றலத்த கட்டடுத்' (உ0)

அகழிக்கும் காவற் காட்டுக்கும் உவமை

127 அன்ன நீர கன்கி டங்கு சூழ்கி டந்த தாழியைத்
துன்னி வேறு சூழ்கி டந்த தூங்கு வீங்கி ருட்பிழம்
பென்ன லாமி றும்பு சூழ்கி டந்த சோலை யெண்ணினைப்
பொன்னின் மா[1]ம திட்கு டுத்த நீல வாடை போலுமே.

வாயில்கள்

128 எல்லை நின்ற வென்றி யானை யென்ன [1]நின்ற மூன்னைமால்
லெல்லை யும்பர் நாட ளந்த தாளின் [2]மீது பர்ந்துபோய்
மல்லல் ஞாலம் யாவு நீதி மாறு ரைவ முக்கினுல்
கல்ல வாறு சொல்லும் வேத நான்கு மன்ன வாயிலே.

129 தாவில் பொற்ற லத்தி னிற்ற வத்தி னேர்க டங்குதாட்
பூவு யிர்த்த கற்ப கப்பொ தும்பர் புக்[1]கொ துங்குமால்
[2]ஆவி யொத்த சேவல் கூவ வன்பின் வந்த ணைந்திடா
தோவி யப்பு ரூவின் மாடி ருக்க வூடு பேடையே.

---

127. ஆழி - சக்கரவாளமலை: 120. இது மதிலுக்கு உவமை. பெரும் புறக்கடலும் பேரிருளும்: 'நேமி வரையதனைக் கருப் போதகமாங் கடல் சூழும், அழி நீரலை யாழியை வலைக்கு மந்தகாரக் குழாம்' (பாகவத. 5. 4: 25.) சக்கரவாளத்தைச் சூழ்ந்த இருட்டு மதிலுக்குப் புறத்தேயுள்ள அகழிக்கு உவமை. சூழ்கிடந்ததாகிய அகன்கிடங்கு இருட்பிழம் பென்னலாம். இறும்பு - செய்காடு திருச்சிற். 148, உரை. காவற்காட்டுக்கு நீலவாடை.

(பி - ம்.) [1] நகர்க்குடுத்த' (உக)

128 எல்லை நின்ற வென்றியானை: 'தன்மதவா ணம் திசைதொறு நிறு விய...சீய கங்கன்' (நன். சிறப்புப்.); 'யானைகளைத்தனக்குச் சுவாதீன மான எல்லையில் நிறுத்துவது கூத்திரியர்க் கியல்பு' (கோமேந்த்ர பாரத ஸங்க்ரஹம்.) மால் - திருமால். வழக்கு - மக்கள் வழக்குதல். வாயில் என்றது கோபுரத்தோடு கூடிய வாயிலை; 'தீயழற் செல்வன் செலவுமிசைத் தவிர்க்கும், வாயின் மாடம்', 'வாயின் மாடமொடு நாயிலுள்ளவழி' (பெரும். கூ. 3: 30—31, 25: 14:) வாயிலுக்கு வேதம்; வாயில் யானை யென்னநின்றன.

(பி - ம்.) [1]'நின்ற' [2]'மீது யர்ந்தவால்' (உஉ)

129 பொற்றலம் - பொன்னுலகம். தவஞ்செய்தவர் விண் முதலிய இடங்களில் வசித்தல்: 348. தாளையுடைய பூவை உயிர்த்த. ஓவியப்புரு - வாயின் மாடத்தின் மேற் புருவின் வடிவமாக அமைத்துள்ள உரு. முடிபு. தான்கூவ அன்பின் வந்தணைந்திடாது. ஓவியப் புருவின் மாட்டுச் சேவலிருக்க ஊடும் பேடை பொதும்பர் புக்கு ஒதுங்கும். பேடையின் ஊடலுக்குக் காரணம் ஓவியப்புருவை வேறோர் பெண்புருவென்று கருதினமையே.

(பி - ம்.) [1]கொதுங்கலால்' [2]'ஆவி யொத்த வன்பு சேவல்கூவ வந்த ணைந்திடா, வோவியப்' (உங)

கோபுரம்

130 கல்ல டித்த டுக்கி வாய்ப்ப ளிங்க ரிந்து கட்டிமீ
[1]எல்லு டைப்ப சும்பொன் வைத்தி லங்கு பன்ம ணிக்குலம்
வில்லி டக்கு யிற்றி வாள்வி ரிக்கும் வெள்ளி மாமரம்
புல்லி டக்கி டத்தி வச்சி ரத்த கால்பொ ருத்தியே.

131 மரக தத்தி லங்கு போதி கைத்த லத்து வச்சிரம்
[1]புரைத விர்த்த டுக்கி மீது பொன்கு யிற்றி மின்குலாம்
நிரைம ணிக்கு லத்தி னளி நீள்வ குத்த வோளிமேல்
விர்வு கைத்த லத்தி னுய்த்த மேத கத்தின் [2]மீதரோ.

132 ஏழ்பொ ழிற்கு [1]மேற்நி லத்த லஞ்ச கைத்த தென்ன நூல்
ஊழு றக்கு றித்த மைத்த வும்பர் செம்பொன் [2]வேய்ந்து மீச்
சூழ்சு டர்ச்சி ரத்து நன்ம னித்த சும்பு [3] தோன்றலால்
[4]வாழ்நி லக்கு லக்கொ ழுந்தை மௌலி சூட்டி யன்னவே.

---

130 இது முதல் மூன்று கவிகள் குளகம். கோபுர வருணனை. கல் அடித்தடுக்கி வாய் பளிங்கு அரிந்துகட்டி - 'கற்களை யிட்டுக் கெட்டிணை பண்ணித் தளவரிசைபோட்டு அடிப்படையில் பளிங்குக் கல்லைப் பிளந்து கட்டி' (ஓர் உரை.) எல்-ஒளி. பசும்பொன்வைத்து - பசும்பொன்னை உருக்கிக் சந்துக்குச் சந்து வார்த்து. வெள்ளி மாமரம் புல்லிடக்கிடத்தி - வெள்ளியாலியன்ற விட்டங்கள் பொருந்தும் படிக்குக்குறுக்கே அமைத்து; 'வெள்ளித் தகட்டை ஆதாரச் சிலையாகக் கீழே பரப்பி' (ஓர் உரை.)

(பி - ம்) [1]எல்லிடப்பசும்' (உசு)

131 ஆளிநீள் வகுத்த ஒளி - சிங்கத்தின் வடிவங்கள் அமைந்த தூண்[3]ஒழுங்கு. ஒளி-ஒழுங்கு. 'மாகதப் போதிகை வைத்துச் சுமை தாங்கும் படி அதன்மேல் வச்சிரத்தாலே உத்தாங்களும் பாவுசிலையும் பாய்ச்சிச் சந்துகளுக்கெல்லாம் சண்ணும்புபோல் பொன்னைக் காய்ச்சி விட்டுச செங்கற் பொடிபோல் மாணிக்கங்களைப் பருக்கை தட்டிக் கோமேதகத்தாலே கொடுங்கையை ஒழுங்காய் வைத்து' (ஓர் உரை.) கை-கைம்மரம். மேதகம்-கோமேதகம்; முதற்குறை. (பி-ம்.) [1]புரைத புத்தடுக்கி' [2]மேலரோ' (உரு)

132 'ஏழ்பொழிற்கு..... ..சமைத்தென்ன - ஒன்று மேலொன்று யிருக்கிற ஏழு நிலையும் மேலே யிருக்கிற ஏழு லோகத்தைப்போல' (ஓர் உரை.) நூல் ஊழ் - நூலின் மரபு குறித்து - கருதி. மணித்தசும்பு மாணிக்கக் கலசம். நிலக்குலக் கொழுந்து - பூமிதேவி. கோபுரம் மௌலி சூட்டியன்ன என்று ஒரு சொல்லே வருவிக்க:

(பி - ம்.) [1]மேனி லத்த லஞ்' [2]மேய்ந்து' [3]தோன்றுமால்' [4]வாழ்நகர்க்குலக்' (உசு)

மாளிகை

வேறு

133 திங்களுங் கரிதென வெண்மை தீற்றிய
சங்கவெண் [1]சுதையுடைத் தவள மாளிகை
வெங்கடுங் கால்பொர மேக்கு நோக்கிய
பொங்கிரும் பாற்கடற் றுரங்கம் போலுமே.

134 புள்ளியம் புறவிறை பொருந்து மாளிகை
தள்ளருந் தமனியத் தகடு வேய்ந்தன
எள்ளருங் கதிரவ னிளவெ யிற்குழாம்
வெள்ளிவெண் [1]கிரியிடை விரிந்த போலுமே.

135 வயிரநற் கான்மிசை மரக தத்துலாம்
[1]செயிரறு போதிகை கிடத்திச் சித்திரம்
உயிர்பெறக் குயிற்றிய வும்பர் நாட்டவர்
[2]அயிர்வுற விமைப்பன வளவில் கோடியே.

136 சந்திர [1]காந்தத்தின் றலத்த சந்தனப்
பந்திசெய் தூணின்மேற் பவளப் போதிகைச்
[2]செந்தம னியத்துலாஞ் செறிந்த திண்சுவர்
இந்திர நீலத்த வெண்ணில் கோடியே.

---

133 சுதை தீற்றிய மாடம்: புறநா. ஈஎஅ மணி.சு: 43; நைடத. நகர. 5. சங்கவெண் சுதை – சங்குச் சுண்ணும்பு. வெண்சுதைக்குத் திங்கள்: 641. கால்பொர – காற்றடிப்ப. மேக்கு நோக்கிய-மேல்நோக்கி எழும்பும். தரங்கம் – அலைகள். (பி – ம்.) [1]'சுதைபுரை' (உஎ)

134 இறை – புறாக்கள் தங்குவதற்கு அமைத்த இடம்; மாடத்தின் மேல் புறாக்கள் தங்குவதற்கு இடம் வகுப்பது சிற்ப தருமம்; இந்த இடம் 'கபோதகத்தலை' எனப்படும்; கபோதம் – புறா. புறவு இறை பொருந்தும் மாளிகை; 'மாடத், திறையுறை புறவின் செங்காற் சேவல்', 'மனையுறை புறவின் செங்காற் சேவல்' (பெரும்பாண் 438-9; நெடுநல். 45.) தவளமாளிகைக்கு வெள்ளி மலையும் அதன்மீதுள்ள பொன்னிலியன்ற இறைகளுக்கு இளவெயிற் குழாமும் உவமை. (பி – ம்.) [1]'கிரிமிசை' (உஅ)

135 கால் – தூண். துலாம் – தூணின் மேலுள்ள போதிகையின் இரு பக்கத்தும் கீழே வாழைப்பூ வடிவமாக அமைக்கப்படும் உறுப்பு; 136; சிலப். கரு: 213, பெருங். க. 27: 102; உ. 12: 43. அயிர்வுற இமைப்பன – ஐயம் கொள்ளும்படி விளங்குவன. குயிற்றியனவாகிய சித்திரம் இமைப்பன • அளவில் கோடி. (பி – ம்.) [1]செயிரறப் போதிகை' [2]'அயர்வுற' (உக)

136 தலத்த – தளவரிசையையுடையன. செந்தமனியம் – செம்பொன். சுவர்கள் நீலக் கற்களாலானவை. 'தளம் சந்திரகாந்தக் கல், தூண் சந்தனமரம்; போதிகை பவளம்; துலாம் தமனியம்; சுவர் இந்திர நீலம்' என்க. (பி – ம்.) [1]'காந்தத்திற்றரணம் வேய்ந்தன' [2]'செந்தனி மணித்துலாஞ்' (ஊ0)

137 பாடகக் காலடி பதுமத் [1]தேய்ப்பன
சேடரைத் தழீஇயின செய்ய வாயின
நாடகத் தொழிலின நடுவு துய்யன
ஆடகத் தோற்றத்த [2]மகளி ரல்லன.

138 புக்கவர் கண்ணிமை பொருந்து முதொளி
[1]தொக்குடன் றயங்கவின் ணவரிற் றோன்றலால்
திக்குற நினைப்பினிற் செல்லுந் தெய்வவீ
டொக்கநின் றிமைப்பன வும்பர் நாட்டினும்.

139 அணியிழை மகளிரு மலங்கல் வீரரும்
தணிவன வறநெறி தணிவி லாதன
மணியினும் பொன்னினும் வணங்த வல்லது
[1]பணிபிறி தியன்றில பகலே வென்றன.

---

137 இது பெண்களுக்கும் மாளிகைகளுக்கும் சிலேடை. பெண்களுக்குக் கூறுமிடத்து: பாடகம் அணிந்த கால்கள் பதுமம்போல்வன; ஆடவரை அணைந்திருப்பன; சேடர் - இளையராகிய கணவர்; 'ஊடறீர்க்கும், சேடரிற் சென்று புல்லிச் சிறுபுறந் தழீஇய தும்பி' (சீவக. 852.) வாய் சிவப்பினையுடையன; நடத்தொழில் செய்வன; இடை பஞ்சின் நுனியை ஒப்பன: துய்-பஞ்சின் நுனி; 'துய்யைச் சுடுவெங்கனலில்' (உ. 4: 127.) பொன்னின் தோற்றத்தையுடையன.

மாளிகைக்குக் கூறுமிடத்து: பாடு அகம் - வேலைப்பாடு தன்னிடம் அமைந்த. காலடி -பூமிக்குள் புதையுண்ட அடிப்படை; பதுமத்து எய்ப்பன-தாமரை வடிவில் அமைந்து அம்மலரை ஒப்பன. சேடரைத் தழுவியுள்ளவை; சேடர் - ஆதிசேஷன்; பாதாளம்வரை பயின்றுள்ளவை யென்றபடி; செய்ய ஆயின - அழகையுடையன. நாடு அகத்தொழிலன - சிற்பத்தொழிலை நாடும் இடத்தின; நடுதுயன வாயிருப்பன, பொன் மயமாயின; மகளிர் அல்லன - இத்தன்மைகளாற் பெண்களல்லாதன.

(பி - ம்.) [1]'தொப்பன' [2]'வளவிலாதன' (கூக)

138 ஒளிதொக்கு - மாளிகையின் ஒளிகூடி. கண்ணிமையாமை ஒளியின் மிகுதியினால். கண் இமையாமையின் மக்கள் தேவரைப்போல் தோற்றினர். வீடு - விமானம். மாளிகை தெய்வவீடுபோல உம்பர் நாட்டினும் அதிகமாக இமைப்பன. உம்பர் நாட்டினிடத்தும் உயர்ந்து இமைப்பன என்றலுமாம். (பி - ம்) [1]'தொக்குட றயங்கிவிண்' (கூஉ)

139 தணிவன - தங்குவன. அறநெறிகள் குறையாதன; 140. மணி - மாளிகைக்கு அணியும் முத்துமாலை முதலியன; மாளிகைக்கு மணியும் பொன்னும் வேண்டல்; சீவக. 115. பகல் - சூரியன்.

(பி - ம்.) [1]'பணிபிறி தியன்றன் பாங்கு மில்லையே' (கூஎ)

140 வானுற [1]நிவந்தன வரம்பில் செல்வத்த
தானுயர் புகழெனத் தயங்கு சோதிய
ஊனமி லறநெறி யுற்ற [2]வெண்ணிலாக்
[3]கோனிகர் குடிகடங் [4]கொள்கை சான்றன.

141 அருவியிற் றாழ்ந்துமுத் தலங்கு தாமத்த
விரிமுகிற் குலமெனக் கொடிவி ராவின
பருமணிக் குவையின பசும்பொன் கோடிய
[1]வருமயிற் கணத்தன மலையும் போன்றன.

142 அகிலிடு கொடும்புகை யளாய்ம யங்கின
முகிலொடு வேற்றுமை [1]தெரிக்கி லாமுழுத்
துகிலொடு நெடுங்கொடிச் [2]சூலம் மின்னுவ
[3]பகலிடு மின்னலின் பரப்புப் போன்றவே.

---

140 தானாக உயர்கின்ற புகழைப்போல்; புகழின் நிறம் வெள்ளை. 'அறநெறி உற்ற 'என்பதனை முற்றாக்கிமாளிகைக்கு ஏற்றலும் குடிகளுக்கு அடையாக்கலுமாம். கோன் நிகர் குடிகள் - செல்வத்தால் அரசரை ஒத்த குடிகள்; 'வீறுசால் மன்னர் விழையுங்குடியுள' (நான் மணிக். 54.) கோன் என்றது தசரதனை அன்று; பிற நாட்டு மன்னரை. தயங்கு - விளங்கும். கொள்கைகளால் உயர்ந்தன.

(பி - ம்.) [1]'நிமிர்ந்தன' [2]'விண்ணவர்' [3]'கோனகர் குடி'; 'கோனிவர்' [4]'கொள்ளை'

(௩௪

141 அருவிக்கு முத்தமாலை; குலோத். உலா, 215, கொடிக்கு முகில்: 36. குவையன - குவியல்களையுடையன. கோடி - ஓரெண். மயில் மாடத்து இருத்தல்: தெடுநல். 97-100. அருவி. முகில், மனம், பொன், மயில் இவை பொருந்துவதனால் மலையும் போன்றன.

(பி - ம்.) [1]'பொருமயிற்'

(௩௫)

142 தெரிக்கிலா - அறிவிக்காதவை. கொடிச்சூலம்; கொடி-ஒழுங்கு; புறநா 22: 15; மாளிகைகளின் மேற் சூலங்கள் இருத்தல்: 'புலியூர் மன் போற்பிறையணி மாளிகை சூலத்தவாய்' (திருச்சிற். 222.) [பகலிடுவின் மணிப் பரப்புத் தோன்றுமே (பி-ம்.)—பகற்காலத்து இடுகின்ற இந்திரதனுப்போல மணி யொளிகளின் பரப்புத் தோன்றும்.] அகிற் புகைக்கு மேகமும் சூலத்துக்கு மின்னும் உவமை.

மயங்கினவையாய் முகிலொடு வேற்றுமை தெரிக்கிலாத - துகில்என்று கூட்டலுமாம்.

(பி - ம்.) [1]'தெரிகலா' [2]'சூழன் மின்னிடப்' [3]'பகலிடை மின்மினி பறப்பத் தோன்றுமே'

(௩௬)

143 துடியிடைப் பணைமுலைத் தோகை யன்னவர்
அடியிணைச் சிலம்பூண் டரற்று மாளிகைக்
கொடியிடைத் தரளவெண் கோவை சூழ்வன
கடியுடைக் கற்பகங் கான்ற மாலையே.

144 காண்வரு நெடுவரைக் கதலிக் கானம்போற்
[1]ருணிமிர் பதாகையின் குழாந்த ழைத்தன
வாணனி மழுங்கிட [2]மயங்கி வைகலும்
சேண்மதி தேய்வதக் கொடிக டேய்க்கவே.

கட்டிட விசேடங்கள்

145 [1]பொன்றொடர் மண்டப மல்ல பூத்தொடர்
மன்றுக ளல்லன மாட மாளிகை
குன்றுக ளல்லன மணிசெய் குட்டிமம்
முன்றில்க ளல்லன முத்தின் பந்தரே.

நகரின் ஒளி

146 மிசுனென விளக்கென வெயிற்பி ழம்பெனத்
துன்னிய தமனியத் தொழிற ழைத்தவக்
கன்னிநன் னகர்நிழல் [1]கதுவ லாலரோ
பொன்னுல [2]காயது புலவர் வானமே.

---

143 கொடியிடைத்தரள வெண்கோவை - துவசத்திலே யுள்ள முத்துமாலை. தரளக்கோவை கற்பக மாலையைச் சூழ்வன. மாளிகைக்கொடி என்பதற்கு மாளிகையாகிய பெண் என்று பொருள் கொண்டு அவளது இடையிலுள்ள தரள எண்கோவையாகச் சூழ்வன கற்பகம் கான்றமாலை எனக் கொள்ளலுமாம். மாளிகைகளின் உயரமிகுதி கூறியபடி. (கூஎ)

144 பதாகை - பெருங்கொடி. கொடிகளுக்கு வாழைக் கானம். தாளிலே நிமிர்ந்த. வாள் - ஒளி. வைகலும் - நாடோறும். சேண் - ஆகாயம். (பி - ம்.) [1]'கோணிமிர்' [2]'மடங்கி' (கூஅ)

145 குன்று - பெரியமலை. குட்டிமம் - கல்பதித்த மேடை; செய் குன்று; 'குன்றென உயர்ந்தவக் கோயிற் குட்டிமம்', 'மணி கொள் குட்டிமம்' (சு. 8: 109; கு. 7: 24.) மண்டபம் பூத்தொடர் போன்றும், மன்றுகள் மாடமாளிகை போன்றும், குட்டிமம் குன்றுகள் போன்றும், முன்றில்கள் முத்தின் பந்தரைப் போன்றும் இருந்தனவென்று பொருள் கொள்க.

[பொன்தொடர் மண்டபம் முதலாகிய இவ்விடந்தோறும் முத்தின் பந்தர் உண்டென்க.] 'பொன் மண்டபங்களும்.....சாவடிகளும் மெத்தை வீடுகளும் .....ரத்தின மேடைகளும் தெருவீதிகளும் முத்தின் பந்தராய் இருக்கும்' (ஓர் உரை.) (பி - ம்.) [1]'பொன்றிணி' (கூக)

146 தமனியம் - பொன். மின்என, விளக்கென, பிழம்பெனத் துன்னிய தமனியம் என்க. தொழில் தழைத்த. கன்னி - அழிவில்லாமை. நிழல் - ஒளி. புலவர் - தேவர். (பி - ம்.) [1]'கதுவ லாலன்றே' [2]'காயதப்' (சஅ)

14222
031:1F50:
H9
14222
EXTENSION

147 எழுமிடத் தகன் றிடை [1]யேறி யெற்படும்
பொழுதிடைப் போதலிற் புரிசைப் பொன்மதில்
அழன்மணி திருத்திய வயோத்தி யாளுடை
நிழலெனப் பொலியுமா னேமி[2]யான்சுடர்.

அகிற் புகை

148 ஆய்ந்தமே கலையவ ரம்பொன் மாளிகை
வேய்ந்தகா ரகிற்புகை யுண்ட மேகம்போய்த்
தோய்ந்தமா கடனறுந் தூப நாறுமேற்
பாய்ந்ததா ரையினிலை பகர வேண்டுமோ.

பல இசைகள்

149 குழலிசை மடந்தையர் குதலை கோதையர்
[1]மழலையங் குழலிசை மகர யாழிசை
எழிலிசை மடந்தைய ரின்சொ [2]லின்னிசை
பழையர்தஞ் சேரியிற் பொருநர் பாட்டிசை.

---

147 எழும் இடத்து அகன்று - உதய காலத்தில் விலகி. இடை ஏறி - நடுப்பகலில் மிக்கு. எல்படு பொழுதிடை - மாலையில். போதலில் - இல்லாமற் போதலினால். நிழல் - ஒளி. நேமியான் சுடர் - சூரியனது ஒளி. சுடர்நிழல் எனப்பொலியும் என்க. உதய காலத்திலும், மாலையிலும் சூரியன் அயோத்திக்குத் தொலைவில் இருப்பதனால் ஒளி குறைந்தும் இடையில் அண்மையிலிருப்பதனால் அவ்வொளி ஏறியும் அயோத்தியாளுடை நிழல் என்று கூறும் படி அவன் ஒளி விளங்கும் என்பது பொருள்.

ஒரு பிரதியில் இச்செய்யுள், 'எழுமிடைத் தன்னிடை யேறி யெற்படு, பொழுதிடைப் போதலிற் புரிசைப் பொன்னகர், அழன் மணித் திருநகை யயோத்தி யாளுடை, நிழலிடைப் பொலியுமானேமி வான்சுடர்' என்று காணப்படுகிறது. (பி- ம்.) 1.யொன்றி' 2.வான்சுடர்' (சக)

148 மாளிகை வேய்ந்த அகிற்புகை - மாளிகையின்மீது பரவியிருந்த அகிலின் புகையை. ஒப்பு: 'நின்று புயல் வானம் பொழிந்த நெடுந்தாரை, என்று மகில் கமழு மென்பரால் - தென்றல், அலர்த்துங் கொடி மாடத் தாயிழையா ரைம்பால், புலர்த்தும் புகைவான் புகுந்து' (நள. க:14.) (சஉ)

149 குழல் இசை - கூந்தல் இசைந்து வருகின்ற. 'முடிக்க, முடியாத கூந்தன் முடியாள்' (திருவாரூருலா. சசுo.) குழல்: பேதைப் பருவத்தாருக்குடைய. மடந்தையர்: பருவங்குறியாது நின்றது. கோதையர் - கூந்தலையுடைய பருவமங்கையர் என்றபடி. குதலையையும் மழலையும் போன்ற அழகிய புல்லாங்குழலின் இசை. மகரயாழ்; 49, குறிப். யாழையும், குழலையும் சேர்த்துக் கூறல் மரபு. எழில் இசை - அழகு பொருந்திய. சொல் இன்னிசை - சொற்களாகிய இனிய இசை. பழையர்-கள் விற்பவர்; 95 பொருநர்: 'பொருநரும் போர்க்களம் பாடுநரும் ஏர்க்களம் பாடுநரும் பாணி பாடுநரும் எனப் பலராம்' (தொல். புறத். 36, நச்.) உள்ளன என ஒரு சொல் வருவித்து முடிக்க.

(பி-ம்.) 1'மழலைசெய் மகரயாழ் மயங்கு மெங்கணும்' 2'லவ்விசை' (சஙு)

நகரின் வேறு பல சிறப்புகள்

150 கண்ணிடைக் கனல்சொரி களிறு கால்கொடு
மண்ணிடை வெட்டுவ [1]வாட்கை மைந்தர்தம்
பண்ணைகள் பயிலிடங் குழிப டைப்பன
சுண்ணமக் குழிகளைத் தொடர்ந்து தூர்ப்பன.

151 பந்துகண் மடந்தையர் பயிற்று வாரிடைச்
[1]சிந்தின முத்தின மவைதி ரட்டுவார்
அந்தமில் சிலதிய ரகற்று குப்பைகள்
சந்திர னொளிகெட [2]நிலாத்த ழைப்பன.

152 அரங்கிடை மடந்தைய ராடு வாரவர்
கருங்கடைக் [1]கண்ணயில் காமர் நெஞ்சினை
உருங்குவ மற்றவ ருயிர்க ளன்னவர்
மருங்குல்போற் றேய்வன வளர்வ தாசையே.

153 பொழிவன சோலைகள் புதிய தேன்சில
விழைவன தென்றலு மிழிறு மெல்லென
நுழைவன வன்னவை நுழைய நேரொடுங்
குழைவன பிரிந்தவர் கொதிக்குங் கொங்கையே.

---

150 யானை வெட்டுவதற்குக் காரணம் தன்நிழலைப் பிறிதொரு யானை யென்று சுருதி யென்றுகூறல் அமையும். ? 'நிழறுழாய்க் குனிந்து குத்து..... ..மழறிகழ் கதத்தயானை' (சீவக. 2220.) வாட்கைமைந்தர்கள் - வாள்வீரர்கள்; வாளையுடைய இளைஞர். பண்ணைகள் - விளையாட்டுக்கள்; 307. [மைந்தர் தம் பண்ணைகள் பயிலிடம் குழி படைப்பனவாகக் களிறுகள் கால்கொடு வெட்டுவன; சுண்ணம் அக்குழியைத்தூர்ப்பன.]

(பி -ம்.) [1]'வெட்ட மைந்தர்கள்', 'வேட்கு மைந்தர்கள்' (சச)

151 பெண்கள் பந்தாடல்: 93. சிலதியர் - பணிப்பெண்கள், திரட்டு வாராகிய சிலதியர்.

(பி - ம்.) [1]'சிந்துவ' [2]'நிலாத்தழைப்பன' (சஙி)

152 காமர் - அழகமைந்த யுவர். உருங்குவ - உண்ணுவ; 'விடமுடை யரவினுட லுயிருருங் குவணம்' (பரி. சு: 42.) அவர் உயிர்கள் - அவ்வாடவரின் உயிர்கள்.

(பி - ம்.) [1]'கண்ணிணை' (சஞ)

153 சோலைகள் புதிய தேன் சில பொழிவன. மிளிறு - வண்டுகள் பிரிந்தவர் - கணவரைப் பிரிந்த மகளிருடைய. (சஎ)

154 இறங்குவ மகரயா ழெடுத்த வின்னிசை
நிறங்கிளர் [1]பாடலா னிமிர்வ வவ்வழிக்
கறங்குவ வள்விசி கருவி கண்முகிழ்த்
துறங்குவ மகளிரோ [2]டோதுங் கிள்ளையே.

155 குதைவரிச் சிலைநுதற் கொவ்வை வாய்ச்சியர்
[1]பதயுகத் தொழிலொடு பழிப்பி லாதன
ததைமலர்த் தாமரை யன்ன தாளினால்
உதைபடச் [2]சிவப்பன வுரவுத் தோள்களே.

156 பொழுதுணர் வரியவப் பொருவின் மாநகர்த்
தொழுதகை மடந்தையர் சுடர்வி ளக்கெனப்
பழுதறு மேனியைப் பார்க்கு [1]மாசையால்
எழுதுசித் திரங்களு [2]மிமைப்பி லாதவே.

157 தணிமலர்த் திருமக டயங்கு மாளிகை
இணரொளி பரப்பிநின் றிருடு ரப்பன
திணிசுடர் நெய்யுடைத் தீவி ளக்கமோ
மணிவிளக் கல்லன மகளிர் மேனியே.

---

154 இறங்குவன வாகிய யாழ்ப் பாடலால் எடுக்கப்பட்ட இனிய ஓசை. நிறம் கிளர் பாடலால் - இசைவிளங்கும் வாய்ப்பாட்டினால். இசை பாடலால் நிமிர்வ. வள்விசி கருவி: 53. உறங்குதல், இசையில் ஈடு பட்டு.

(பி - ம்.) [1]'பாடல் போய் நிமிர்ந்த வவ்வழி' [2]'டெரதுங்குங் கிள்ளையே'

(சஅ)

155 [பதை அகம் (பி-ம்)—ஊடலிற் பதைத்த மனம்; பதவு கைத் தொழிலொடு என்ற பாடத்துக்கு மென்மையான கைத்தொழிலொடு என் பது பொருள்.] பதயுகத் தொழில் - கூத்து இங்கே சாந்திக்கூத்து, விநோ தக் கூத்து; இரண்டு பாதங்களுக்கும் ஊட்டும் செம்பஞ்சுக் குழம்புமாம்.

(பி - ம்.) [1]'பதவுகைத்', 'பதையகத' [2]'சிவந்தன'

(சகூ)

156 பொழுதுணர் வரிய நகர்: 'வில்லுமிழ் கலன்களியாவு மிளிர்சுட ரெறிக்கு மாற்றால், எல்லியும் பகலுந் தோன்றா திமையவ ருலக மேய்க்கும்' (நைடத. நாடு. 27.) கற்பினால் தொழத்தகும் பெருமையையுடைய மடந் தையர். மாதரின் வனப்பு நோக்கிக் கண் இமையாமை: சீவக. 2506; மகளிர் மேனிக்கு விளக்கு: 157.

(பி - ம்.) [1]'மாசைகொல்' [2]'மிபைப்பிலாதன'

(ரு0)

157. தணி - தண்மை; பரி. சு, 29: கூ 11. இணர் ஒளி - தொகுதி யாகிய ஒளியை. தீவிளக்கமோ - தீபவொளி மட்டுமா? மணிவிளக்கு - மணி களாகிய விளக்கு.

(ருக)

158 பதங்களிற் றண்ணுமை பாணி பண்ணுற
விதங்களின் விதிமுறை சதிமி திப்பவர்
[1]மதங்கிய ரச்சதி வகுத்துக் காட்டுவ
சதங்கைக ளல்லன புரவித் [2]தாள்களே.

159 முளைப்பன முறுவலம் முறுதல் வெந்துயர்
விளைப்பன வன்றியு மெலிந்து நாடொறும்
இளைப்பன துண்ணிடை யிளைப்ப மென்முலை
திளைப்பன முத்தொடு செம்பொ ரைமே.

160 இடையிடை யெங்கணுங் களிய ரூதன
நடையிள வன்னங்க ணளின நீர்க்கயல்
பெடையிள வண்டுகள் பிரச [1]மாந்திடுங்
கடகரி யல்லன மகளிர் கண்களே.

---

158 தண்ணுமை – மத்தளஒலி. பாணி – கைத்தாளம். உற – ஒத்து நிகழ, சதி – தாளவொத்து; 'தாளினைப் பெயர்த்து முன்னஞ் சதிமுறை பிறழாதாட' (கூர்ம. திருக்கல். 56.) தண்ணுமையும் பாணியும் பண்ணும் உற விதங்களின் விதிமுறை பதங்களிற் சதிமிதிப்பவர். மதங்கியர் – ஆடமகளிர். மகளிர் காலிற் கட்டிய சதங்கைகள் வகுத்துக்காட்டுவ; அவை அல்ல வாயின் குதிரையின் தாள்கள் வகுத்துக் காட்டும்; குதிரைகளின் சதி: 840. 'மெத்துந் தகவும் விதமும் படவே, தித்தொந் தொந்தொந் தித்தீயென் றென், றெருத்துந் தாளத் தொக்கத் தத்தித், தத்தும் பரிதன் தான்வைத்த துவே' (திருவால. 28: 53.) தார்கள் (பி – ம்.)—குதிரையின் கழுத்திற் சதங்கை; 171.

(பி – ம்.) [1]'மதங்கியர் கச்சதி' [2]'தார்களே' (நூஉ)

159 முறுவல் – மகளிரின் புன்னகை. ஆடவர்க்கு முறுவல் துயர் விளைப்பன. 'அந்தகரில் வெந்துயர் விளைப்பன முறுவலே, இரட்சிக்கிற வரைப் பட்சிப்பன நகில்களே' (ஓர் உரை.) முலைகளில் எக்காலமும் தினைப்பன முத்தும் ஆரமுமே; காமுகர் இல்லை என்றவாறு. (நூஈ)

160 யானை பிரசம் மாந்தல்: 'மாரியங் கள்ளின் போர்வல் யானை' (பதிற். உக: 17.) பொருள் அல்லன – இவை அல்லாதன. களி-மதிழ்ச்சி, தேன், களிமண், கள், யானைமதம், அஞ்சனக்குழம்பு; சிலேடை. களி அரூதன அன்னம், தாமரை, கயல்வண்டுகள், கரி, மகளிர்கண்கள்.

(பி – ம்.) [1]'மார்த்திடும்', 'மார்ந்திடும்' (நூச)

161 தழல்விழி யாளியுந் துணையுந் தாள்வரை
முழைவிழக் கிரிங்கர் களிற்றின் மும்மத
மழைவிழும் விழுந்தொ றுமண் ணுங்கீழுறக்
குழைவிழு மதில்விழுங் கொடித்திண் டேர்களே.

162 [1]ஆடுவாம் புரவியின் குரத்தை [2]யாப்பன
சூடுவா ரிகழ்ந்தவத் தொங்கன் மாலைகள்
ஓடுவா ரிழுக்குவ தூட லூட்டுறக்
கூடுவார் வனமுலை கொழித்த சாந்தமே.

163 இளைப்பருங் குரங்களா லிவுளி [1]பாரினைக்
கிளைப்பன வவ்வழி [2]கிளைத்த தூளியின்
ஒளிப்பன மணியவை யொளிர மீதுதேன்
துளிப்பன குமரர்ந் [3]தோளின் மாலையே.

164 விலக்கருங் கரிமதம் வேங்கை நாறுவ
குலக்கொடி மாதர்வாய் குமுத நாறுவ
கலக்கடை கணிப்பருங் கதிர்க ணூறுவ
மலர்க்கடி நாறுவ மகளிர் கூந்தலே.

---

161 தாள்வரை – பாதசைலம். முழைவிழ – குகையில் செயலற்றுக் கிடக்கும்படி. முழையில் விழும்படி மும்மத மழைவிழும். குழை – சேறு. மலையுச்சியில் களிறு உள்ளமையின் ஆளிகள் செயலற்றன. (நுடு)

162 குரம் – குளம்புகள். யாப்பன – கட்டுவன. சூடுவாரிகந்த மாலைகள் – சூடுவாராகிய மடந்தையர் உடலினின்றும் பிய்த்தெறிந்த மாலைகள். ஊடல் ஊட்டுறக்கூடுவார் – ஊடல் ஊட்டுவித்தலினுல் கூடுவார். ஓடுவார் இழுக்குவது சாந்தம்; 'கோதை மடவார்தங் கொங்கை மிசைத்திமிர்ந்த, சீதக் களபச் செழுஞ்சேற்றுல் – வீதிவாய் மானக் கரிவழுக்கும்' (நள. க. 13.)

(பி- ம்.) [1]'ஆடுவார்' [2]'யார்ப்பன' (நுசு)

163 இவுளி – குதிரை. ஒளிப்பன – மறைக்கப்படுவன. வீதியிற் கிடந்த மணிகள் தூளியின் ஒளி மறைந்து தேன்பட்டு மீண்டும் விளங்கின. [தொய்யின்மாலை (பி - ம்.)—தோளிற்பூண்டமாலை.]

(பி - ம்.) [1]'தாரணி' [2]'கிளர்ந்த' [3]'தொய்யின்' (நுஎ)

164 யானைமதம் நாறுதல்: நக்க, 3, குறிப்புரை. அடிகள் 2; 3 சில பிரதிகளில் மூன்பின்னுக உள்ளன. கலக்கடை – ஆபரணங்கடைகள் [கலக்கடை வாசல்தோறும் அணிந்த ஆபரணம்.] கூந்தலின் இயற்கைமணம். நாறுதல் – மணத்தல், தோன்றுதல். (நுஅ)

அமராவதிக்கும் அளகைக்கும் மேம்பட்டது அயோத்தி

165 [1]கோவையி னிதணெடெண் குறிக்கி லாதவத்
தேவர்தந் நகரியைச் செப்பு கின்றதென்
யாவையும் [2]விளங்கிடத் திகளி யிந்நகர்
ஆவணங் கண்டபின் னளகை தோற்றதே.

மைந்தர் கூட்டத்திற் காண்பன

166 அதிர்கழ லொலிப்பன வயிலி மைப்பன
கதிர்மணி [1]யணிவெயில் கால்வ மான்மதம்
முதிர்வுறக் கமழ்வன முத்த மின்னுவ
மதுகர [2]மிரைப்பன மைந்த ரீட்டமே.

பலவகை ஒலிகள்

167 வளையொலி வயிரொலி மகர வீணையின்
கிளையொலி [1]முழவொலி கின்ன ரத்தொலி
துளையொலி பல்லியந் [2]துவைக்குஞ் சும்மையின்
விளையொலி கடலொலி மெலிய விம்முமே.

பல மண்டபங்கள்

168 மன்னவர் தருந்திறை யளக்கு மண்டபம்
அன்னமென் னடையவ ராடு மண்டபம்
பன்னருங் கலிதெரி பட்டி மண்டபம்
உன்னரு மருமுறை யோது மண்டபம்.

---

165 கோவையின்.....குறிக்கிலாத - அயோத்தியின் வரிசையில் வைத்து எண்ணப்படாத. அயோத்தியோடு எண்ணப்படுபவை மற்ற முத்தி நகரங்கள் ஆறுமாம். கோவையிந்நகர் (பி-ம்.)—[1] ஒழுங்காகக்கட்டியிருக்கிற தெருக்களையுடைய நகர்.' (ஓர் உரை.) இகலி - பகைத்து. ஆவணம்-கடைத் தெரு. அளகை தோற்றது; அமராவதியைச் செப்புகின்றது என்? 'மறக்கடுங் களிற்றுக் குபேரன் வாழளகை வடக்கிருந்தது நெடுவானிற், றுறக்கமு மொளித்த திலங்கையும் வெருவித் தொடுகடற் சுழிப்புகுந்ததுவே' (வி. பா. இந்திர. 25.)

(பி - ம்.) [1]'கோவையிந் நகரொடெண்' [2]'வழங்கிடத்' (நுக)

166 அயில் - வேல். மான்மதம் - கஸ்தூரி. மதுகரம் - வண்டு. ஒலித்தல் முதலியன மைந்தரீட்டங்களில்.

(பி - ம்.) [1]'வெயிற்குழாங்' [2]'மிசைப்பன' (சுo)

167 வளை - சங்கு. வயிர் - கொம்பு. வயிரும் வளையும்: முருகு. 120. கின்னரம் - ஒருவாத்தியம்; ஒருவகைப் பறவையின் ஒலியும் என்பர்; 940. துளை - குழல் முதலிய துளைக்கருவிகள். சும்மை - ஒலி.

(பி - ம்.) [1]'குழலொலி' [2]'துவைக்கு மொல்லொலி' (சுக)

168 பட்டி மண்டபம் - வித்வஜ்ஜனமண்டபம்; திருவா. சதகம். 49; மணி. க: 60—61; சிலப். ஙு: 102, உரை. அடி 3-4 மாறியுள்ளன. (சுஉ)

வேறு சில சிறப்புகள்

169 இரவியின் சுடர்மணி யிமைக்குந் [1]தோரணத்
தெருவினிற் சிறியன திசைகள் சேண்விளங்
கருவியிற் பெரியன வானைத் தானங்கள்
பரவையிற் பெரியன புரவிப் பந்தியே.

170 சூளிகை மழைமுகி றுடக்குந் தோரண
மாளிகை மலர்வன மகளிர் வாண்முகம்
வாளிக ளன்னவை மலர்வ மற்றவை
ஆளியை யன்னவர் நிறத்தி லாழ்பவே.

171 மன்னவர் கழலொடு மாறு கொள்வன
பொன்னணி தேரொலி புரவித் தாரொலி
இன்னகை யவர்சிலம் பேங்க [1]வேங்குவ
கன்னியர் குடைதுறைக் [2]களக வன்னமே.

பொழுது போக்கு

172 ஊடவுங் கூடவு முயிரி னின்னிசை
பாடவும் விறலியர் பாடல் கேட்கவும்
ஆடவு மகன்புன லாடி யம்மலர்
சூடவும் பொழுதுபோஞ் சிலர்க்கத் தொன்னகர்.

---

169 இமைக்கும் - பிரகாசிக்கும். தோரணத்தையுடைய தெருவைக் காட்டிலும். தானங்கள் - மதங்கள். புரவிப்பந்திக்குக் கடல்.

(பி - ம்.) [1]'தோரணங்' (சுஙூ)

170 சூளிகை - மாடத்து உச்சியறை; 2 9 : 24. தொடக்கும் - கட்டப்படும். தோரணமாளிகை: 177. வாளிகள் அன்னவை - கண்கள் முகம் மாளிகைமலர்வ. (அம்முகத்தே) வாளிகள் அன்னவை மலர்வ. நிறம் - உயிர்நிலை; 'கோல்தெரிந்து, வரிநுதல்யானை யருநிறத் தழுத்தி' (அ க நா. களஉ: 7 - 8.) (சுசு)

171 புரவித்தார் - குதிரைகளின் கழுத்திற் கட்டிய சதங்கைமாலை. தேரொலி தாரொலிகள் சுழல்வஞ்சுக்கு. (களகவன்னம் - களஹம்ஸம்.) அன்னப்பறவையின் குரல் சிலம்பொலிக்கு: 348, 865, 982. 'மின்னுர் சிலம்பிற் சிலம்புங் குரலன்னம்' (சீவக. 2890.) 'சிலம்பின் குரலன்னம்' (அரங்கத் தந். 92.)

(பி - ம்.) [1]'வெங்கணும்' [2]'கமலவன்னமே' (சுஙு)

172 உயிரின் இன்னிசை - உயிரைப்போன்ற இனிய இசை. அகன் புனலாடி மலர்சூடல்:: 175; 'பூக்கொய்து நீராட' (981.) (சுசு)

இதுவும் அது

173 முழங்குதிண் கடகரி [1]மொய்ம்பி னூரவும்
எழுங்குரத் திவுளியோ டிரத மேறவும்
பழங்கணை டிரந்தவர் பரிவு தீர்தர
வழங்கவும் பொழுதுபோஞ் சிலர்க்கம் மாணகர்.

இதுவும் அது

174 கரியொடு கரியெதிர் பொருத்திக் கைப்படை
வரிசிலை முதலிய வழங்கி வாளுளைப்
புரவியிற் பொருவில்செண் டாடிப் போர்க்கலை
தெரிதலிற் பொழுதுபோஞ் சிலர்க்கச் சேனைகர்.

இதுவும் அது

175 நந்தன வனத்தலர் கொய்து நவ்விபோல்
வந்திளை யவரொடும் வாவி யாடிவாய்ச்
செந்துவ ரழிதரத் தேறன் [1]மாந்தித்தூ
துந்தலிற் பொழுதுபோஞ் சிலர்க்கவ் வொண்ணகர்.

வேறு

கோடிகளின் வருணனை

176 நாஞ [1]விதமா நளிமா திர வீதி யோடி
மீனுறு வேலைப் புனல்வெண் முகி லுண்ணு மாபோல்
ஆனுத மாடத் திடையாடு கொடிகண் மீப்போய்
வானுறு நண்ணிப் புனல்வற்றிட நக்கு மன்றே.

---

173. குரம் - குளம்பு இவுளி - குதிரை. பழங்கணை - துன்பத் தால். வழங்கல் - பயன் கருதாமற் கொடுத்தல்; திருச்சிற். 127, பேர்.
(பி - ம்.) 1 'முன்பி னூரவும்' (கூஎ)

174. யானைப்போர்: குறள், 758; புற - வெ. 350. வால் - வெண் மை. உளை - தலையாட்டம். பொரு இல் - ஒப்பற்ற. குதிரைச் செண்டா டல்; 'வாவுறுஞ் செண்டியங்கு பரி' (உ. 9: 11); 'நிலச் செண்டும் பரிச் செண்டும் வீசி' (பெரிய. கழறிற் 126.) சேண் - பரந்த. ஆடவர்க்குப் பொழுதுபோகும் ஆற்றைத் தெரிவிப்பது இது. (கூஅ)

175. நவ்வி - மான். இளையவர் - மகளிர். செந்துவ ரழிதர: 88, 1074. தூது உந்தல் கணவர் பால்; 1075 - 6. கொய்து, ஆடி, மாந்தி என்ற முறை பின்னுள்ள பூக்கொய், நீர் விளையாட்டு, உண்டாட்டுப் படலங் களை நினைப்பிக்கின்றன. மகளிர்க்குப் பொழுதுபோகும் விதத்தைக் கூறுவது இது.
(பி - ம்.) 1 'மாந்திச்சு' (கூக)

176. நாஞவிதம்; நாஞ - பல. நளி - பெருமை. நாஞவிதமாம் மாதிர வீதி - பலவகையான ஆகாய வீதிகளில். மீன்நாறு - மீன்கள் தோன்றுகின்ற. உப்பை ஒழித்து நன்னீரையே மேகம் பருகுமாதலால் 'வேலைப்புனல்' என்றார். புனல் - உண்ணீர். (பி - ம்.) 1 'விதமாய்' (எ0)

நகரமாந்தர் சிறப்பு

177 [1]வன்மேரு ரணங்கள் புணர்வாயி லும்வானி னூடு
சென்மேங்கு மேலோ ரிடமின்றெனச் செய்பொ னிஞ்சி
குன்மேங்கு தோளார் குணங்கூட்டிசைக் குப்பை யென்ன
ஒன்மேரு டிரண்டு முயர்ந்தோங்கிய [2]வும்பர் நாண.

178 காடும் புனமுங் கடலன்ன கிடங்கு மாதர்
ஆடுங் குளமு மருவிச்சூழக் குன்று மும்பர்
வீடும் விரவு மணைப்பந்தரும் வீணை வண்டு
பாடும் [1]பொழிலு மலநல்லறப் பள்ளி மன்னே.

179 தெள்வார் மழையுந் திரையாழியு முட்க நாளும்
வள்வார் முரசம் மதிர்மாநகர் வாழ மாக்கள்
கள்வா ரிலாமைப் பொருள்காவலு மில்லை யாரும்
கொள்வா ரிலாமைக் கொடுப்பார்களு மில்லை மன்னே.

180 கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்வி முற்ற
வல்லாரு மில்லை யவைவல்லரல் லாரு மில்லை
எல்லாரு மெல்லாப் பெருஞ்செல்வமு மெய்த லாலே
இல்லாரு மில்லை யுடையார்களு மில்லை மன்னே.

---

177. தோரணங்கள் - தோரணக் கம்பங்கள்; 1270; கு. 9: 15, 11: 21. 'வன்மேரல் புணர்ந்த மணிவாயில்' என்ற பாடத்திற்கு வலிய யானைகள் சேர்ந்த ஆராய்ச்சி மணியையுடைய வாயிலெனக்கொள்க. குணம் கூட்டு இசை குப்பை - குணங்கள் தேடித்தரும் கீர்த்தியின் மிகுதி. இஞ்சியின் உயர்வு புகழின் உயர்வுக்கு 'கோடுறழ்ந்தெடுத்த' என்று தொடங்கும் (பதிற். கசு) பாடலை நோக்குக. ஒன்மேருடிரண்டு - மூன்று. மூன்று மதில்: புறநகர், இடைநகர், அகநகர் என்னும் மூன்றின் மதில்கள். உம்பர் - விண். 'வாயிலும் ஒன்மேரு இரண்டும் நாண ஓங்கிய' எனக் கூட்டுக.

(பி - ம்.) 1 'வன்மேருரணங்கள் புணர்வாயிலும் வானினும்பர்', 'வன்மேரல் புணர்ந்த முனிவாயிலும் வானினூடு', வன்மேரல் புணர்ந்த மணிவாயிலும் வானினும்பர்' 2 'வோங்கணை.' (எக)

178. காடுமுதல் பொழிலிறுதியாக வுள்ளன அல்லாதன அறப் பள்ளி. அறப்பள்ளி - தரும சத்திரங்கள். உம்பர்வீடு - மேல்வீடு; செய்குன்றின் மேலிடம் 'இலை எல்லாம் மலர்ப் பல்லவப் பள்ளிகள்.' (பி - ம்.)

(பி - ம்.) 1 'பொழிலும் மலர்ப்பல்லவப்' (எஉ)

179. மழை - மேகம். வள்வார் முரசம்; முரசு அதிர்நகர்: 336. முரசம் கடலுக்கு; பு. வெ. 37. கொள்வார்.....மன்னே: 98. (எங)

180. அவை: கற்பன பலவாதலால் கல்வியை அவை என்றார். செல்வம் எட்டு, பதினெறு என்று கூறுவார் மதம்பற்றி 'எல்லாச் செல்வமும்' என்றார்.

181 ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி
ஆகம் முதற்றிண் பணைபோக்கி யருந்த வத்தின்
சாகந் தழைத்தன் பரும்பித் தருமம் மலர்ந்து
போகங் கனியொன்று பழுத்தது போலு மன்றே.

4. * அரசியற் படலம்

வேறு

182 அம்மா ணகருக் கரச னரசர்க் கரசன்
செம்மாண் டனிக்கோ லுலகேழினுஞ் செல்ல நின்றான்
இம்மாண் கதைக்கோ ரிறையாய விராம னென்னும்
மொய்ம்மாண் கழலோற் றருநல்லற மூர்த்தி யன்னான்.

183 [1] ஆதிம் மறையும் மருளும் மறனும் மமைவும்
ஏதில் மிடல்வீர முமீகையு மெண்ணில் யாவும்
நீதிந் [2] நிலையு மிவைநேமியி னோர்க்கு நின்ற
பாதிம் முழுது மிவற்கேபணி கேட்ப மன்னோ.

---

* சில பிரதிகளில் இது நகரப் படலத்துள் அடங்கும்.

181. ஏகம்முதல் - ஒரு முதல்; என்றது விதையை. பணை - கிளைகள். போக்கி - மேலோங்கவிட்டு. சாகம் - இலை. போலும்: அசை நிலை. கல்விக்கு விதை, கேள்விக்கு அடிமரமும் கிளையும், தவத்துக்கு இலை, அன்புக்கு அரும்பு, தருமத்துக்கு மலர், போகத்துக்குக் கனி உவமை. போகம் - பேரின்பம். (எரு)

கீழ்வரும் இரண்டு செய்யுட்கள் நகரப்படலத்தின் இறுதியிற் சில ஏடுகளிற் காணப்படுகின்றன:

'எங்கும் பொலியும் பரஞ்சுட ராகி யெவ்வுயிரும்
மங்கும் பிறவித் துயரற மாற்று நேசம்
தங்குந் தருமத் துருவாகித் தரணி மீது
பொங்குங் கருணைப்புத் தேள்கருத்தி யாமெவன் புகல்வோம்',
'வேத மதனுள் விளைபொருள் விகற்பத்து ளடங்காச்
சோதி மயமாய்த் துலங்கித் தொல்லுயிர்த் தொகைபலவாய்
ஓது புவன முதரத்து ளொடுக்கியே பூக்கும்
ஆதி முதல்வ னமரிட மயோத்திமா நகரம்.'

182. உலகேழ் என்றது ஏழு தீவுகளை; 1240. தனிக்கோல்..... செல்ல நின்றான்: 812. இராமபிரானை முற்கூறினார் கதாநாயகனாதலின்; 'சீவகனை முற்கூறினார் கதைக்கு நாயகனாதலின்' (சீவக. 6. ந.) தசரதன் அறவடிவினன்: 'தன்னை நல்கியத் தரும நல்கினான்' (உ: 9: 123.) (க)

183. ஒற்றுக்கள் சந்த நோக்கி விரிந்தன. அருளும் அறனும்: 112. ஏதில்; ஏது=ஏதம் - குற்றம்; கடைக்குறை; 1193. நேமியினோர் என்றது தசரதன் அல்லாத பிற மன்னர்களை. நேமியினோர்க்குப் பாதிப் பணி கேட்ப; முழுதும் இவற்கே கேட்ப. இவை: எழுவாய்; கேட்ப: பயனிலை.

[illegible] 1 'ஆதிம் மறையும் மருளு' 2 'நிலையும் மிவை' (உ)

184 மொய்யார் கலிசூழ் முதுபாரின் [1] முகந்து தானக்
கையார் புனலா னனையாத னை கையு மில்லை
மெய்யாய வேதத் துறைவேந்தருக் கேய்ந்த [2] யாரும்
செய்யாத யாக மிவன்செய்து மறந்த மாதோ.

185 தாயொக்கு மன்பிற் றவமொக்கு நலம்ப யப்பிற்
சேயொக்கு முன்னின் றுருசெல்கதி யுய்க்கு நீரால்
நோயொக்கு மென்னின் மருந்தொக்கு துணங்கு கேள்வி
ஆயப் புகுங்கா லறிவொக்கு மெவர்க்கு [1] மன்னன்.

186 ஈய்ந்தே கடந்தா னிரப்போர்கட லெண்ணி [1] னன்னூல்
ஆய்ந்தே கடந்தா னறிவென்னு மளக்கர் வாளாற்
சாய்ந்தே கடந்தான் பகைவேலை கருத்து முற்றத்
தோய்ந்தே கடந்தான் [2] றிருவிற்றொடர் போக பௌவம்.

---

184. மொய் - வலிமை. ஆர்கலி - கடல். கை ஆர்புனல் - தசரதன் தன் கைவழி பொருளொடு கொடுக்கும் நீர். கையும் இல்லை ; கை - அந்தணரின் கை ; ஏற்றல் அவர்க்கே உரியதாதலின். மறந்த - அவனுக்குப்பின் புரிவோர் இன்மையின் இப்பொழுது அவை மறந்தவையாயின. தசரதன் பல யாகங்கள் செய்தமை : உ. 1: 36. தசரதன் மன்னர்க்குரிய எல்லா யாகங்களையும் செய்து முடித்தானென்பது கருத்து.

(பி - ம்.) 1 'முகந்த தானக்' 2 'யாவும்' (ங)

185. தாய் ஒக்கும் அன்பு : 1146, கூ. 3: 19, 82. நலம் பயப்பில் தவம் ஒக்கும் ; 'வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம், ஈண்டு முயலப் படும்' (குறள், 265.) ஒன்றை ஆராய்வாருக்கு அறிவுபோன்றவன் தசரதன்.

(பி - ம்.) 1 'மன்னே' (ச)

186. ஈய்ந்தே.....கடல் : 1; 'வறியோர் தனமே' (உ. 4: 31.) 'இல்லோர் புன்கணீகையிற் றணிக்க வல்லான்' (கலி. சுள: 5.) அளக்கர்-கடல். தசரதனது கல்வியறிவு : 'சொற்றுறை யறிபெருமையான்' (உ. 1: 12.) போகம் - அனுபவம். 'திருவின்றொடர் போக பௌவம்' என்ற பாடத்திற்குத் திருவினது தொடர்பையும் போக பௌவத்தையும் என்க.

(பி - ம்.) 1 'னுண்ணூல்' 2 'றிருவின் றொடர்' (ஞ)

இப்பாடலுக்குப் பின் ஒரு பிரதியிற் காணப்படும் பாடல் வருமாறு:

'விரிகதிர் பரப்பிமெய்ப் புவன மீதிருள்
பருகுறும் பரிதியங் குலத்திற் பார்த்திபன்
இரகுமற் றவன்மக னயனென் பானவன்
பெருகுமா தவத்தினிற் பிறந்த தோன்றலே.'

வேறு

187 வெள்ளமும் பறையையும் விலங்கும் வேசையர்
உள்ளமு மொருவழி யோட நின்றவன்
தள்ளரும் பெரும்புகழ்த் தசர தப்பெயர்
வள்ளல்வள் ளுறையயின் மன்னர் மன்னனே.

188 நேமிமால் வரைமதி லாக நீள்புறம்
பாமமா கடல்கிடங் காகப் பன்மணி
வாமமா ளிகைமலி யாக மன்னர்க்குப்
பூமியு மியோத்திமா நகரம் [1]போன்றதே.

189 [1]யாவரும் வன்மைநே [2]ரெறிந்து தீட்டலான்
மேவருங் கையடை வேலுங் தேயுமால்
கோவுடை நெடுமணி மகுட கோடியால்
சேவடி யடைந்தபொற் கழலுந் தேயுமால்.

190 மண்ணிடை யுயிர்தொறும் வளர்ந்து தேய்வின்றித்
தண்ணிழல் பரப்பவு மிருளைத் தள்ளவும்
அண்ணறன் குடைமதி யமையு மாதலால்
விண்ணிடை மதியினை மிகையி [1]தென்பவே.

---

187 வெள்ளமும்.....வேசையர் உள்ளமும் ஒரு வழியோட: 'மாரியுந் திருவு மகளிர் மனமும், தக்குழி நில்லாது' (பெருங். க. 35: 156-7.) புள் ஒரு நாட்டை நீத்தல் உற்பாத மாதலின் அவன் நாட்டில் பழம்புள் நீங்கல் இலதாயிற்று. உயிர் தம்மால் வரும் அச்சந் தீர்ப்பான் மன்னனுதல் பற்றி 'விலங்கும் ஒரு வழியோட' என்றார். வெள்ளம் முதலியவற்றால் வரும் தீமையை ஈதிபரதை என்பர் வடநூலார். வள்ளுறை அயில் மன்னர் மன்னன்: அயிலை உறையினின்று எடுக்காமலே பகைவரை அடக்கினன் என்பது கருத்து; 729. 748; உ. 1: 57; சூ. 2: 84; புறநா. கூஉ: 7. 'உறை கிறுத்திய வாளினுற் பகையிருளொதுக்கி' (திருவிளை. நாடு. 1.) (சூ)

188 நேமிமால்வரை: 130, 127. பரமம்-ஆழம்; 'பாமமாகடல்' (790.) வாமம் - அழகு. பூமி - அயோத்தி; 'நாடெலாமொரு நன்னக ராயதே' (1204.) ஒப்பு: ரகுவம்சம், சருக். 1.

(பி - ம்.) [1]'போலுமே' (எ)

189 யாவர் வன்மையும் நேர்எறிந்து: உம்மை பிரித்துக் கூட்டப்பட்டது; நேர் எறிதலாவது, எதிர்நின்று அழித்தல். 'எறிந்து தேயும், தீட்டலாற்றேயும்' என்க. கோவுடை - அரசர்களுடைய.

(பி - ம்.) [1]'ஆவரும்' [2]'ரறந்து தீண்டலான்' (அ)

190 குடை ஆட்சியைக் குறிக்குமாதலின் வளர்ந்து என்றார். 'வளர்ந்து தேய்வின்றி. மண்ணிடை நிழல் பரப்பவும் இருளைத் தள்ளவும்' என்று கூட்டுக.

191 வயிரவான் பூணணீ மடங்கன் மொய்ம்பினுன்
உயிரெலாந் தன்னுயி ரொப்ப வோம்பலால்
இசயிரிலா வுலகினிற் சென்று நின்றுவாழ்
உயிரெலா முறைவதோ ருடம்பு மாயினுன்:

192 குன்றென வுயரிய குலவுத் தோளினுன்
வென்றியந் திகிரிவெம் பருதி யாமென
ஒன்றென வுலகிடை யுலாவி மீமிசை
நின்றுநின் றுபிர்தொ றுறெடிது காக்குமே.

193 எய்யென வெழுபகை யெங்கு மின்மையால்
[1]மொய்பெறுத் தினவுறு முழவுத் தோளினுன்
வையக முழுவதும் வறிஞ ணேம்புமோர்
செய்யெனக் காத்தினி தரசு செல்கின்றுன்.

அண்ணல்தன். அமையும் - பேரதும்.

(பி - ம்.) [1]'தென்னவே' (கூ)

191 குடிகள் உயிரைத் தன் உயிரொப்பக் ஓம்பல்: 395; 'மண்ணில் வாழ்தரு மன்னுயிர்க்கெலாம், கண்ணு மாவியு மாம்பெருங் காவலான்' (பெரிய. திருவாரூர்ச். 14.) உயிரெலா முறைவதோருடம்பு; 'வைய மன்னுயி ராகவம் மன்னுயிர், உய்யத் தாங்கு முடலன்ன மன்னனுக்கு' (உ. 2: 17); 'நெல்லு முயிரன்றே.....மன்னனுயிர்த்தே மலர்தலை யுல கம்' (புறநா. கஅசு.) ஆயினுன் - ஒத்தான். தசரதன் நாடு உபசாரத்தால் உல கெனப பட்டது. இவன் ஆளுதலினுல் செயிரிலாவுலகென்றுர். சென்று வாழ் உயிர் - விலங்கு முதலிய ஜங்கம உயிர். நின்று வாழுயிர் - தாவரங் கள். (கo)

192 வென்றியந்திகிரி - ஆஞ்ஞாசக்கரம்; 409; பதிற். கச: 18. 9. திகி ரிக்குச் குரியன்: தக்க. 1. (கக)

193 [எய்யென வெழுபகை -விரைந்து வரும் பகை.] மொய்-போர். தோள்தினவு: 1369; கூ. 6: 44, 63. வறிஞன் ஓம்பும் ஓர்செய்: 'நெஞ்சே, ஈரப்பட்ட செவ்விப் பைம்புனத்தோரே குழவன் போலப், பெருவிதுப் புற் றன்றுல்' (குறுந். கஉக: 3-6); 'மிடிய னெரு செய்யாளனச் செய்வினேயக் காக்குஞ் செயல்போல' (பிரபு. மாயை யுற்பத்தி. 49.)

(பி - ம்.) [1]'மெரய்பொரு' (கஉ)

5. திருவவதாரப் படலம்*

194 ஆயவ னொருபக லயனை யேநிகர்
தூயமா [1]முனிவரற் றொழுது தொல்குலத்
[2]தாயருந் தந்தையுந் தவமு மன்பினான்
மேயவான் கடவுளும் பிறவும் வேறுநீ.

195 எங்குலத் தலைவர்க ளிரவி தன்னினும்
தங்குலம் [1]விளங்கிடத் தரணி தாங்கினார்
மங்குந ரில்லென வரம்பில் வையகம்
[2]இங்குநின் னருளினா னினிதி னோம்பினேன்.

196 அறுபதி னாயிர மாண்டு மாண்டுற
உறுபகை [1]யொடுக்கியிவ் வுலக மோம்பினேன்
பிறிதொரு குறையிலை யெற்பின் வையகம்
[2]மறுகுறு மென்பதோர் மறுக்க முண்டரோ.

---

*ஒரு பிரதியில் 194 முதல் 223-ஆம் செய்யுள் வரையில் **திருவாக்குரைத்த படலம்** என்றும், 224 முதல் 273 வரை உள்ள பகுதி **கலைக்கோட்டுமுனி படலம்** என்றும், எஞ்சியுள்ள பகுதி **திருவவதாரப் படலம்** என்றும் இந்தப் படலம் மூன்றாக உள்ளது.

194. ஆயவன் - அத்தகைய பெருமை வாய்ந்த தசரதன். அயன் - பிரமன்; தசரதனுடைய தந்தையாகிய அஜனது பெயர் தொனிப் பொருளால் பெறப்படும். முனிவரன் - முனிவர்களுள் மேலானவன். தாயரும்.....பிறவும் மற்றவர்க்கு வேறு வேறாகும்; எனக்கு இவை எல்லாம் நீயே என்பது கருத்து 'எந்தை நீ யாயு நீ யெம் முனீதவம், வந்தனைத் தெய்வ நீ மற்று முற்றுநீ' (சூ. 2: 73.)

வசிட்டர் கடவுள்: 'மன்னவன் காவலி லாணைசெய் கடவுள்' (உ.க:7.)

(பி - ம்) [1]'முனிவரத் தொழுது', 'முனிவனைத் தொழுது' [2]'தாயுநற் றந்தையுந் தமரு' (க)

195. உ. 1: 64. நின் அருளினால்: வசிட்டரின் துணை தசரதனுக்கு: 272; உ. 1: 44.

(பி - ம்.) [1]'விளங்குறத்' [2]'இங்குனதருளினா' (உ)

196. அறுபதினாயிரம் ஆண்டு: 'வைபவம் அறுபதினாயிரமாண்டு மாண்டவன்' (உ. 12: 72.) ஆண்ட வருடத்தொகை **வான்மீகத்தில்** வேறு. மகா சக்ரவர்த்திகளுக்கு எல்லாம் அறுபதினாயிரம் என்ற கணக்கு: **சீவசம்போதனை**; க. 757, உ. 1: 13; 12: 72. 'எற்பின் வையகம் மறுகுறும்' என்று இங்கே கூறியதற் கேற்ப, 271 - ஆங்கவியில், 'நின்னருளிற் பூத்தவென், னான்ற தொல் குலமினி யரசின் வைகுமால்'' என்கிறான். மறுக்கம்-வருத்தம்.

(பி - ம்) [1]'யடக்கியே' [2]'மறுகுவதென்பதோர்' (ங)

197 அருந்தவ முனிவரும் மந்த ணாளரும்
வருந்துத லின்றியே வாழ்வின் வைகினர்
பெருந்துய [1]ருழக்குவ தெற்பி னென்பதோர்
அருந்துயர் வருத்துமென் னகத்தை யென்றனன்.

கவி 222 வரை வசிட்ட முனிவர் நினைத்த நிகழ்ச்சி

198 முரசறை செழுங்கடை முத்த மாமுடி
அரசர்தங் கோமக னணைய கூறலும்
விரைசெறி கமலமென் பொகுட்டு மேவிய
வரசரோ ருகன்மகன் மனத்தி னெண்ணினான்.

199 அலைகட னடுவணே ரனந்தன் [1]மீமிசை
மலையென விழிதுயில் வளரு மாமுகில்
கொலைதொழி லரக்கர்தங் கொடுமை தீர்ப்பனென்
றுலைவுறு மமரருக் குரைத்த [2]வாய்மையே.

200 சுடுதொழி லரக்கராற் றொலைந்து வானுளோர்
கடுவமர் களனடி கலந்து கூறலும்
படுபொரு ளுணர்ந்தவப் பரமன் [1]யானினி
அடுகில னெனமறுத் தவரொ டேகினான்.

---

197 அந்தணரும் முனிவரும் வேறு வேறு. வாழ்வு-மகிழ்வு. எற்பின்-எனக்குப்பின்.

இதன்பின் உள்ள ஓர் அதிகப் பாடல் வருமாறு :

'பொறையிலா வறிவுபோகப் புணர்ப்பிலா விளமைமேவத்
துறையிலா வனச வாவி தூசிலா போலத் தூய்மை
நிறையிலா மலருங் கல்வி நலமிலாப் புலமை நன்னீர்ச்
சிறையிலா நகரும் போலச் சேயிலாச் செல்வமென்றான்.'

(பி - ம்.) [1] ருழக்குந' (சு)

198 முரசறைகடை: 336. முத்த மாமுடி: இது முத்துக்கொண்டை யென வழங்கும்; கிரீடத்தின் நுனியிலும் முகத்தின் புறத்திலும் முத்துக் கொத்துக்கள் அமைந்திருக்கும். வரசரோருகன் மகன் - சிறந்த பிரமனுடைய மகன்; உ. 1: 34; 12: 69. 'எண்ணினான் வாய்மையே' (199) என இயைக்க; வினைமுற்றை முன்கூறிச் செயப்படுபொருளைப் பின்கூறுவது கம்பர் இயல்பு; 264-5. (கு)

199 மலையெனத்துயில்; 204. முகில் - திருமால். கொலைத்தொழில் எதுதை பற்றிக் கொலை தொழில் என இயல்பாயிற்று.

வாய்மை - அபயமொழி; உ. 13 : 4.

(பி - ம்.) [1] 'மீக்கரு' [2] 'வாய்மையை' (சு)

200. கடு அமர்களன் - விடம் அமைந்த கழுத்தினன்; 238; உருத்திர மூர்த்தி. அடுகிலனென்றது வரம்கொடுத்தது பற்றி; அரக்கர்கள் உருத்திர மூர்த்தியைப் பூசிக்கிறது பற்றியுமாம்.

(பி - ம்.) [1] 'யாமினி, யவெதில் லெனமறுத் தவரோ டேகினர்'

யாவரும் நான்முகனிடம் அரக்கரின் கொடுமையைத் தெரிவித்தல்

201 வடவரைக் குடுமியி னடுவண் மாசறு
சுடர்மணி மண்டபந் துன்னி நான்முகக்
கடவுளை யடிதொழு [1]தமரர் கண்டகர்
இடிநிகர் வினையம தியம்பி ஞரோ.

202 பாகசா தனன்றனைப் பாசத் தார்த்தடன்
மேகநா தன்புகுந் திலங்கை மேயநாட்
போகமா மலருறை [1]புனித வொல்லியின்
ஏகிநீ மீட்டமை யியம்ப வேண்டுமோ.

யாவரும் திருமாலிடம் சேறல்

203 இருபது கரந்தலை யீரைந் தென்னுமத்
திருவிலி [1]வலிக்கொரு செயலின் றெங்களால்
கருமுகி லெனவளர் கருணை யங்கடல்
பொருதிடர் தணிக்கிலுண் டெனும்[2]பு ணர்ப்பினுல்.

இதற்குப்பின் சில பிரதிகளில்மட்டும் கீழ்வரும்பாடல் காணப்படுகிறது.

'[1]கறைமிடறு றிறைவனுங் கடவுளோர்களும்
மறைமுதற் கிழவனை வந்து நண்ணலும்
முறைமையிற் [2]கடன்முறை முற்றி முண்டகத்
திறைவனு மவரோடு மினிதி னேகினன்.'

(பி - ம்.) [1]'கறையடிக்கிறைவனுங்', 'கறைமிடற்றண்ணலுங்' [2]செய்கடன்' (எ)

201 மேருவின் உச்சியில் பிரமன் வாழ்தல்: கூ. 23: 49. அமரர் எழுவாய். வினையம் - சூழ்ச்சி; வினையமது: 25.

(பி - ம்.) [1]'தமர கண்டகர்' (அ)

202 பாகசாதனன் - இந்திரன். மேகநாதன் - இந்திரஜித்து; இவன் இராவணன் மகன். போகம் - அகலம், மலர்ச்சி; ஆபோகம் என்பதன் முதற் குறை. 'சொல்லினுரோ' என்ற பாடத்துக்கு எழுவாய் அமரர்.

சில பிரதிகளில் இச்செய்யுளின்பின் அடியில் உள்ள செய்யுள் காணப்படுகிறது :

'என்றுதம் மிடர்முழு தியம்பி யெங்ஙணும்
கன்றிய நிருதரை யழித்துக் காத்தியேல்
லென்றிய வுலகமு முயிர்கள் யாவையும்
இன்றுநீ படைத்தன லென்றியம்பி ஞரோ.'

(பி - ம்.) [1]'புனிதன் மீட்டமை தோகைபா கற்குறச் சொல்லி ஞரோ' (கூ)

203 இருபது.....திருவிலி: இத்தொடரையே பின்னும் கூறுவர் கம்பர்; கூ. 4: 29. திருவிலி; திரு - அருட்செல்வம்; 'அருட்செல்வஞ் செல்வத்துட்செல்வம்' (குறள், 241.) புணர்ப்பு - சூழ்ச்சி.

204 [1]திரைகெழு பயோததித் துயிலுந் தெய்வவான்
மரகத மலையினை வழுத்தி நெஞ்சினும்
கரகம லங்குவித் திருந்த காலையிற்
பரகதி யுணர்ந்தவர்க் குதவும் பண்ணவன்.

205 கருமுகி றுமரைக் காடு பூத்துநீ
டிருசுட ரிருபுறத் தேந்தி [1]யேடவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினான்.

இதற்குப்பின் அடியிற்கண்ட மூன்று பாடல்கள் அதிகமாக உள்ளன:

(1) 'ஆயவ ரயன்முத லமர ரீறிலா
நாயக னிருபத நயந்து சிந்தைமீ
தோய்விலா தவனரு மறைக ளோதியே
நேயமோ டிருந்திவை நிகழ்த்தன மேயினர்.'

(2) 'காத்தி நீயெமைக் காக்கிலர் தம்மையாம்
ஏத்தி யேயிளைத் தோமிறை வாவிடர்ப்
பார்த்தி யோதிருப் பாற்கடற் பள்ளியின்
மூர்த்தி யேமுதல் வாமுகின் மேனியாய்.'

(3) 'அந்த காரத் தரக்கர்செய் தீமையால்
நொந்து ளோமிறை வாநொடிப் போதினில்
வந்து மாற்றிடும் வண்ண மெமக்கருள்
எந்தை யேகரு ணாகர னேயெனா.'

தேவர்கள் பிரமதேலரை யடைந்து பின் திருமாலை யடைந்தனரென்பது வான்மீகத்தில் இல்லை; மந்திரிகளையும் வசிட்டரையும் நோக்கித் தசரதன் தனக்குப் பிள்ளையில்லாக் குறையைக் கூறினன் என்பது வான்மீகம்.

(பி - ம்.) [1]'தனைத்தெறுஞ்' [2]'டெனும்புணர்ப்பினர்' 'டெனப் புகன்றனன்' (கo)

204 பயோததி-பாற்கடல். உணர்ந்தவர் - ஞானிகள். பண்ணவன் - கடவுள். உணர்ந்தவர்க்குப் பரகதியுதவும் பண்ணவன். தேவர்கள் ஒன்று கூடித் திருமாலைக் கண்டு பேசியது தசரதனுடைய யாகசாலையின்கண் என்பர் வான்மீகி முனிவர்.

இதன்பின் கீழ்வரும் பாடல் ஒரு பிரதியிலுள்ளது:

'அறிதுயி லெழுந்தன னமரர் கூப்பிடு
மறைமொழித் துதியொலி வந்தி சைக்கவே
நிறைகுணத் தமரர்க ணினைத் தழைப்பதை
யிறையனுந் திருவுளத் தறிந்தங் செய்தவே'

(பி - ம்.)[1]'திரைதவழ் பாற்கடற்றுயிலும் தேவனே' (கக)

205 தாமரை - செந்தாமரை. காடு - தொகுதி (சீவக. 2336, நச்.) தாமரைக்காடு: 1124. கருமுகில் தாமரைக்காடு பூத்து: 'நீலக்கார்முகில் கமலம் பூத்து.....வருவதே போலும்' (சு. 5: 75; பாகவதம், 859.) சந்திர

206 [1]எழுந்தனன் கறைமிடற் றிறையுந் தாமரைச்
செழுந்தவி சுகந்தவத் தேவுஞ் சென்றெதிர்
விழுந்தன ரடிமிசை விண்ணு ளோரொடும்
தொழுந்தொறுந் தொழுந்தொறுங் [2]களிது லங்குவார்.

207 ஆடினர் பாடின ரங்கு [1]மிங்குமாய்
ஓடின ருவகைமா றறவுண் டோர்கிலார்
வீடின ரரக்கரென் றுவக்கும் விம்மலால்
சூடினர் முறைமுறை துளவத் தாண்மலர்.

208 பொன்வரை யிழிவதோர் புயலின் பொற்புற
என்னையா ஞடையவன் றேரிற் றெம்பிரான்
சென்னிவான் றடவுமண் டபத்திற் சேர்ந்தரி
தன்னுபொற் பீடமேற் பொலிந்து தோன்றினன்.

209 விதியொடு முனிவரும் விண்ணு ளோர்களும்
மதிவளர் சடைமுடி மழுவ லாளனும்
அதிசய முடனுவந் தயலி ருந்துழிக்
கொதிகொள்வே லரக்கர்தங் கொடுமை கூறுவார்.

சூரியர் சங்கு சக்கரங்களுக்கு: 'இருவேறு மண்டிலத்திலக்கம் போல, நேமியும் வளையு மேந்திய கையால்' (பரி. கூ: 8-9); 'அழகொடு திருக்கைவளை திகிரிகளி ஞெப்புடைய வலர்கதி ரிரட்டை தருவோம்' (குலோத். பிள்ளைத். முத்தப். 16); 'சங்கு திகிரி-சந்த்ர சூரியர்' (தக்க. 700.) இரு சுடரேந்திய மேகம் திருமாலுக்கு: சிலப். கச: 41-51. பொன்மலைமேல் ஏறும் மேகம்: 208; 'பொன்மலை மேலெழுந்த மாமுகில் போன்றுளர் வந்து காணீர், அஞ்சிறைப் புள்ளு மொன்றேறி வந்தார்' (திவ்.)வருவ - வருதல்; தொழிற் பெயர்.

(பி - ம்.) 'யேடலர்த்' (கஉ)

206 கறை மிடற்று இறை - உருத்திரன். கறையடி (பி - ம்)—ஐராவதம். தேவு - பிரமதேவன். சில பிரதிகளில் இப்பாடல் இல்லை.

(பி - ம்.) [1]'எழுந்தனர் கறையடிக் கிறையுந்' [2]'களிதுளங்கினர்' (கூ)

207 உவகை மாறறவு: 'உவகையின் னறவை யுண்டுணர்கிலர்' (சு. 2: 143); 'காதலென் றதுவுமோர் கள்ளிற் றேன்றிற்றே' (சு. 35:253.) விம்மல் - மகிழ்ச்சி. ஒப்பு: 299; சு. 143.

(பி - ம்.) [1]'மிங்குகின்றேடினர்' (கச)

208 என்னை யாளுடையவன்: கம்பர் மதம். இங்கே கருடாழ்வாரை 'என்னை யாளுடையவன்' என்றார். (கடி)

209 விதி - பிரமன். 'கூறினவர் சிவபெருமானும் பிரமனும்' (ஓர் உரை.) பின் 'எங்கள் நீள் வரங்களால்' (211) என்று வருதலினாலும் வரங் கொடுத்தோர் சிவனும் பிரமனுமே ஆதலினாலும் இவ்வுரை பொருந்தும். (கசு)

210 ஐயிரு தலையினை [1]னனுச னுதியாம்
மெய்வலி யரக்கரால் விண்ணு மண்ணுமே
செய்தவ [2]மிழந்தன திருவி னையக
உய்திற மில்லையென் றுயிர்ப்பு வீங்கினர்.

211 [1]எங்கணீள் வரங்களா லரக்க ரென்றுளார்
பொங்குமூ வுலகையும் புடைத்த ழித்தனர்
செங்கணு யகவினித் [2]தீர்த்தி யில்லையேல்
நுங்குவ [3]ருலகெலா நொடியி னென்றனர்.

திருமால் அபயம் அளித்தல்

212 [1]என்றன ரிடருழந் திறைஞ்சி யேத்தலும்
மன்றலந் துளவினன் வருந்தல் [2]வஞ்சகன்
தன்றலை யறுத்திடர் தணிப்பன் மூரணிக்
கொன்றுநீர் கேண்மென வுரைத்தன் மேயினன்.

திருமால் கூற்று

213 வானுளோ ரனைவரும் வான ரங்களாக்
கானினும் வரையினுங் கடித டத்தினும்
சேனையோ டவதரித் திடுமின் சென்றென
ஆனன மலர்ந்தன னருளி னுழியான்.

214 மசரத மனையவர் வரமும் வாழ்வுமோர்
நிசரத கணைகளா னீறு செய்யயாம்
கசரத [1]துரகமாட் கடல்கொள் காவலன்
தசரதன் மதலையாய் வருதுந் தாரணி.

---

210 அனுசன் - தம்பி; கும்பகர்ணன். இதன்பின்,
'வானவ ரம்முறை வழங்க மாமதி
தேனுறு மிதழியந் தெரியல் வேணியான்
ஆனவர் தமைக்கர மமைத்தங் கையனைத்
தான்முக நோக்கிய சாற்றன் மேயினன்.
என்ற செய்யுள் ஒரு பிரதியில் உள்ளது.
(பி - ம்) [1]'னனுசராதியா' [2]'மிழந்ததும்' (கஎ)

211 தீர்த்தி - தீர்ப்பாய். நுங்குவர் - விழுங்குவர்; 54.
(பி - ம்) [1]'எங்கணல்' [2]'தீர்த்தலில்' [3]'ருலகையோர்' (கஅ)

212 வருந்தல்: வியங்கோள். (வஞ்சகர் தன்றலை (பி - ம்.) யென்றதில், ஒருமை பன்மை மயக்கம்.) காரணிக்கு இடர் தணிப்பன்.
(பி - ம்) [1]'என்றபின் னமரர்களிறைஞ்சி' [2]'வஞ்சகர்' (கக)

213 கடிதடம் - காவலையுடைய உயர்ந்த இடம். ஆழி - கடல். (உ0)

214 மசரதம் அனையவர் - கானல் நீரைப்போன்ற அரக்கர். நிசரத கணை: நிசம் - சத்தியமாகிய. ரதம் - ரத்தம் என்பதன் இடைக்குறை: இலக்

215 வளையொடு திகிரியும் [1]வடவை தீதர
விளைதரு கடுவுடை விரிகொள் பாயலும்
[2]இளையவ னெனவடி பரவ வேகிநாம்
வளைமதி லயோத்தியில் வருது மென்றனன்.

எல்லோரும் மகிழ்தல்

216 என்றவ னுரைத்தபோ தெழுந்து துள்ளினர்
நன்றிகொண் மங்கல நாதம் பாடினர்
மன்றலஞ் செழுந்துள வணியு மாயனர்
இன்றெமை யளித்தன ரென்னு மேம்பலால்.

வேறு

217 போயதெம் பொருமல் லென்ன
விந்திர னுவகை பூத்தான்
தூயமா மலரு ளோனுஞ்
சுடர்மதி சூடி னனும்
சேயுயர் விசும்பு ளோருந்
தீர்ந்ததெஞ் சிறுமை யென்றார்
மாயிரு ஞால முண்டோன்
கலுழன்மேற் சரணம் வைத்தான்.

குத் தவறுத இரத்தம் படிந்த கணை. (மசரதம் - பேய்த்தேர். ரதகணை - பாவகாரிகள் ஊனுண்டு இளைமை கண்டகணை.) கசரத.....காவலான்: 812. ஆள் - காலாள். (பி - ம்.) [1]'துரகமாக் கடல்' (உக)

215 திருமாலே நான்கு பாகங்களாகப் பிரிந்து அவதாரம் செய்தன ரென்பது வான்மீகம். வடவைதீதர - வடவா முகாக்கினியும் தீயும்படி. பாயல் - ஆதிசேடன். வளையின் அமிசம் சத்துருக்கனன். திகிரியின் அமிசம் பரதன்.

(பி - ம்.) [1]'வடவைதீர்தர', 'வடவைத் தீத்தர', 'வடவைத் தீயென' [2]'இனையர்களென' (உஉ)

216 எம்பல் - மகிழ்ச்சி. (உங)

217 பொருமல் - துக்கம் சிறுமை - துன்பம். சரணம் - பாதங்கள்; சரணம் வைத்தான் - சென்றார் என்றபடி. திருமாலின் வருகையை வருணித்தவர் இங்கே இங்ஙனம் சருங்கக் கூறியது தேவர் எதிர்பார்த்த பயன் நிறைவேறிவிட்டமையால் என்க. (உச)

218 என்னையா ளுடைய வையன்
கலுழன்மே லெழுந்து போய
பின்னர்வா னவரை நோக்கிப்
பிதாமகன் பேசு கின்றான்
முன்னரே யெண்கின் வேந்தன்
யானென [1]மொழிகின் றுன்மற்
றுன்னவா றெவரு நீர்போ
யவதரித் திடுமி னென்றான்.

219 தருவுடைக் கடவுள் வேந்தன் சாற்றுவா னெனது கூறு
மருவலர்க் கசனி யன்ன வாலியு மகனு மென்ன
இரவிமற் றெனது கூறங் கவற்கிலை யவனென் றோத
அரியுமற் றெனது கூறு நீலனென் றறைந்திட் டானால்.

220 வாயுமற் றெனது கூறு
மாருதி யென்ன மற்றோர்
காயுமற் கடங்க ளாகிக்
காசினி யதனின் மீது
போயிடத் துணிந்தோ மென்றார்
புராரிமற் [1]றியானுங் காற்றின்
சேயெனப் புகன்றான் மற்றைத்
திசையுளோர்க் கவதி யுண்டோ.

---

218 என்னை யாளுடைய ஐயன்; 320, 324, 487. பிதாமகன் - பிரம தேவர். எண்கின் வேந்தன் - கரடிகளுக்கு அரசனான ஜாம்பவான். பிரம தேவரின் கொட்டாவியிற்றோன்றின னென்று வான்மீகி இவனைக் கூறுவர். வாமனாவதாரத்தின் போதே ஜாம்பவான் இருந்தமை: 828.

(பி - ம்.) [1]'மூடுகினுன்மற்' (உடு)

219 அசனி - இடி. மகன் - அங்கதன். அங்கவற்கு - வாலிக்கு. ரிக்ஷ ராஜனி என்ற வானரன் ஒரு மடுவில் மூழ்கிப் பெண் ஆனான்; அப்பெண்ணை இந்திரனும், சூரியனும் காமுறப் பிறந்தவர்கள் வாலியும் சுக்கிரீவனும் என்பர். இந்திரன், 'நான் அங்கதனுகவும் பிறக்கிறேன்' என்றது வான்மீகத்தில் இல்லை. அரி - அக்கினிதேவன். (உசு)

220 காயும் - கோபிக்கின்ற. மற்கடம் - குரங்கு. கர்மபூமியில் அவதரித்தல் கஷ்டமென்பது தோன்ற, 'துணிந்தோம்' என்றார். புராரி - சிவபெருமான். அனுமான் உருத்திராம்சமென்பர்; சிவபெருமான், 'நானே அனுமனுவேன்' என்று சொன்ன செய்தி வான்மீகத்தில் இல்லை. அவதி - எல்லை.

(பி - ம்.) [1]'றியானே வாதசேய்' (உஎ)

தேவர்களின் அவதாரமும் யாவரும் தம் இருக்கை சேறலும்

221 அருடருங் கமலக் கண்ண னருண்முறை யலரு ளோனும்
இருடரு மிடற்றி னோனு மமரரு மினைய ராகி
மருடரு [1]வனத்தின் மண்ணின் வானர ராகி வந்தார்
பொருடரு [2]மிருவர் தத்த முறைவிடஞ் சென்று புக்கார்

மக்கட்பேற்றின் உபாயத்தை வசிட்டர் கூறுதல்

222 ஈதுமுன் னிகழ்ந்த வண்ண
மெனமுனி யிதயத் தெண்ணி
மாதிரம் பொருத திண்டோண்
மன்னநீ வருந்த லேழேழ்
பூதல [1]முழுதுந் தாங்கும்
புதல்வரை யளிக்கும் வேள்வி
தீதற [2]முயலி னைய
சிந்தைநோய் தீரு மென்றான்.

மேற்கொண்டு செய்யவேண்டியவற்றை மன்னன் வேண்டல்

223 என்னமா முனிவன் கூற
வெழுந்துபே ருவகை பொங்க
மன்னவர் மன்ன னந்த
மாமுனி சரணஞ் சூடி
உன்னையே புகல்புக் கேனுக்
குறுகண்வந் தடைவ துண்டோ
அன்னதற் கடியேன் செய்யும்
[1]பணியினை யளித்தி யென்றான்.

---

221 கமலக்கண்ணன் - திருமால். மருள்தரு - மயக்கத்தைத் தரு கின்ற. பொருடருமிருவர் - சிறந்த வரங்களே அளிக்கவல்ல சிவனும் பிரம னும்.

(பி - ம்.) [1]'மனத்தின்' [2]'மிறைவர் தத்தம்', 'மேவருந்தத்தம்' (உஅ)

222 ஈது முன் நிகழ்ந்த வண்ணம்: 'இவ்வண்ணம் நிகழ்ந்தவண்ணம்' (563.) மாதிரம் - மலை; மதுரைக். 10, நே. 'மாதிரம் பொருத - திசை அனைத்தும் சென்றுவென்ற' என்று பொருள் கூறுவாருமுளர்; 261. பூத லம் என்றது உலகமென்னும் துணையாய் நின்றது. பதினெலுலகம் அளிக்கும் புதல்வர்த்தரும் மகம்; 275, 741; இது புத்திரகாமேஷ்டி யென்பது.

(பி - ம்.) [1]'முழுதுங் காக்கும்' [2]'முதலிலுன்றன்' (உக)

223 உறுகண் - துன்பம்.

(பி - ம்.) [1]'பணியினி தளித்தி' (ஊ0)

வசிட்டர் கூறிய உபாயம்

224 மாசறு [1]சுரர்க ளோடு
மற்றுளோர் தமையு மீன்ற
காசிப னருளு மைந்தன்
விபாண்டகன் கங்கை சூடும்
ஈசனும் புகழ்தற் கொத்தோ
னிருங்கலை பிறவு மெண்ணிற்
றேசுடைத் தந்தை யொப்பான்
றிருவருள் பூண்ந்த மைந்தன்.

225 [1]வருகலை யறிவு நீதி
மனுநெறி [2]வரம்பு வாய்மை
தருகலை மறையு மெண்ணிற்
சதுமுகற் குவமை சான்றோன்
திருகலை யுடைய விந்தச்
செகத்துளோர் தன்மை தேரா
ஒருகலை [3]முகத்துச் சிங்க
வுயர்தவன் வருதல் வேண்டும்.

223 பாந்தளின் மகுட கோடி
பரித்தபா ரிதனின் வைகும்
மாந்தர்கள் விலங்கென் றுன்னு
மனத்தன் மா[1]தவத்த னெண்ணிற்
பூந்தவி சுகந்து ளோனும்
புராரியும் புகழ்தற் கொத்த
சாந்தனுல் வேள்வி [2]முற்றிற்
றூணேயர்க ளுளரா மென்றோன்.

---

224 அருளும் - பெற்ற. தந்தை - காசிபன். ஈசனுல் புகழப்படுதலின் சிறப்பு: 226. இதுமுதல் 'உலப்பில் பல்லாண்டு' (274) வரையில் கலிக் கோட்டுமுனி படலம் என்று ஒரு பிரதியிற் காணப்படுகிறது. கலைக்கோட்டு முனிவரின் வரலாற்றைச் சுமந்திரர் கூறுவதாக வான்மீகம் கூறும்.

(பி - ம்.) [1]'சுராரினோடு' (கூக)

225 சதுமுகன் - பிரமன். திருகலையுடைய சகம்; திருகு - மாறுபாடு; பாயிரம், 1. சிங்கம் - சிருங்கம். உயர்தவன்: 264.

(பி - ம்.) [1]'வருகலை பிறவு' [2]'யாவும்' [3]'மூக்கச்சிருங்கவுயர்' (கூ உ

226 மாந்தரை விலங்கென்று உள்ளல்: 230, 233. மாதரை விலங்கென்று உள்ளல்: 233, 739.

(பி - ம்.) [1]'தவத்தி' [2]'முற்றத்தூணேயர்க' (கூகூ)

கலிக்கோட்டு முனிவரைக் கொணரும் விதத்தை மன்னன் விளைதல்

227 ஆங்குரை யினைய கூறு
மருந்தவர்க் கரசன் செய்ய
பூங்கழ லிறைஞ்சி வாழ்த்திப்
பூதல மன்னர் மன்னன்
தீங்கறு குணத்தான் மிக்க
செழுந்தவன் யாண்டை யுள்ளான்
ஈங்கியான் [1]கொணருந் தன்மை
யுயம்புதி யிறைவ வென்றான்.

கவி 248 முடியக்கலிக் கோட்டு முனிவர் வரலாறு

வேறு

உரோமபதன் இயல்பு

228 புத்தான கொடுவினைபோ டருந்துயரம்
போயொளிப்பப் புவனந் தாங்கும்
[2]சத்தான குணமுடையோன் [3]றயையோடுந்
தண்ணளியின் சாலை போல்வான்
எத்தானும் வெலற்கரியான் மனுகுலத்தே
வந்துதித்தோ னிலங்கு மௌலி
உத்தான பாதனரு ளுரோமபத
னென்றுளனிவ் வுலகை யாள்வோன்.

மழை பெய்யும் வகை நாடிய உரோமபதனுக்கு முனிவர்கள் கூறுதல்

229 அன்னவன்றன் புரந்தளிக்குந் திருநாட்டு
ணெடுங்கால மளவதாக
மின்னியெழு முகிலின்றி வெந்துயரம்
பெருகுதலும் வேத நன்னூல்

---

227 அருந்தவர்க்கரசன் - வசிட்டமுனிவர். செழுந்தவன்; செழுமை-மிகுதி. (பி - ம்.) [1]'புரியும்தன்மை யருளுதி' (நடை)

228 புத்தான கொடுவினை - புத் என்னும் நரகம் செல்லுதற்குக் காரணமான கொடிய தீவினை. 'யார்க்கும், புத்தீர்த்திட் டலையாமற் புலவர்நாதெவுவது புனிதமான, அத்தீர்த்தம்' (சு. 10: 21.) சத்தான குணம்; [சத்து - ஞானம்.] தயை - அன்பு. அளி - அருள்; 'அருளென்னுமன்பீன் குழவி' (குறள், 757.) தண்ணளியின் சாலை - குளிர்ந்த கருணையின் உறைவிடம். எத்தானும்-எதனாலும்; உபாயங்கள் நான்கனுள் ஒன்றாலும். உரோமபதன் ஆண்டது அங்கநாடென்று வான்மீகம் கூறும்.

(பி - ம்.) [1]'புத்தாய' [2]'சத்தாய' [3]'றயாவோடுந்', 'றயைபிறழாத்' (நடை)

மன்னுமுனி வரையழைத்து மாதானம்
[1]கொடுக்கவும்வான் வழங்கா தாகப்
[2]பின்னுமறை யவர்க் கேட்பக் கலைக்கோட்டு
முனிவரின்வான் பிலிற்று மென்றார்.

வேசையர் கலைக்கோட்டு முனிவரை அழைத்து வருவோம் எனல்

230 ஓதநெடுங் கடலாடை யுலகினில்வாழ்
மனிதர்விலங் கெனவே யுன்னும்
கோதில்குணத் தருந்தவனைக் கொணரும்வகை
யாவதெனக் குணிக்கும் வேலை
சோதிநுதற் கருநெடுங்கட் டுவரிதழ்வாய்த்
தரளநகைத் துணைமென் கொங்கை
மாதரெழுந் தியாமேகி யருந்தவனைக்
கொணர்துமென வணக்கஞ் செய்தார்.

வேசையர் விடைபெற்று உரோமபதனிடம் சேல்லல்

231 ஆங்கவரம் மொழியுரைப்ப வரசன்மகிழ்ந்
தவர்க்கணிதூ சாதி யாய
பாங்குளமற் [1]றவையருளிப் பனிப்பிறையைப்
பழித்தநுதற் பணைத்த வேய்த்தோள்
ஏங்குமிடை தடிக்குமுலை யிருண்டகுழன்
மருண்டவிழி யிலவச் செவ்வாய்ப்
பூங்கொடியீ ரேகுமெனத் தொழுதிறைஞ்சி
யிரதமிசைப் போயி னாரே.

---

229 மன்னும் - நிலைபெற்ற. பிலிற்றும் - துளிக்கும்; பொழியும் என்ற படி.

(பி - ம்.) [1]'கொடுத்தலும்வான்' [2]'பின்னுமுனி வரர்க்கேட்ப' (ஈசு)

230 மனிதரை விலங்கென்று உன்னுதல்: 226, குறிப். குணிக்கும் வேலை - யோசிக்கும் சமயம். துவர் - செந்நிறம். துணை - இரண்டு. மச்ச ளாதல்பற்றி அவயவங்களைக் கோசாதிபாத முறையிற் கூறினர். மாதர்: இவர் பரத்தையர்; 739. (ஈஎ)

231 ஆயவற்றையும், மற்றவற்றையும். பாங்கு - நன்மை. பணைத்த - பெருத்த. ஏங்கும் - வருந்தும். தொழுதிறைஞ்சல் விலைமகளிர் தொழில்.

(பி - ம்.) [1]'றவர்க் களித்துப்' (ஈஅ)

வேறு

வேசையரின் செயலும் கலிக்கோட்டு முனிவர் அவர்கள் வசமாதலும்

232 ஓசனை பலகடந் தினியோ ரோசனை
ஏசறு தவனுறை யிடமி தென்றுழிப்
பாசிழை மடந்தையர் பன்ன சாலைசெய்
தாசறு மருந்தவத் தவரின் வைகினர்.

233 அருந்தவன் [1]றந்தையை யற்ற நோக்கியே
கருந்தடங் கண்ணியர் கலிவல் லாளனிற்
பொருந்தினர் [2]பொருந்துபு விலங்கெ னுப்புரிந்
திருந்தவ ரிவரென வினைய செய்தனன்.

234 அருக்கிய முதலினெ டாச னங்கொடுத்
திருக்கென [1]விருந்துபி னினிய கூறிய
முருக்கிதழ் மடந்தையர் முனிவ னைத்தொழாப்
பொருக்கென வெழுந்துபோய்ப் [2]புரையுட் புக்கனர்.

235 திருந்திழை யவர்சில தினங்க டோ்ந்துழி
மருந்தினு மினியன வருக்கை வாழைமாத்
[1]தருங்கனி பலவொடு தாழை யின்கனி
அருந்தவ வருந்தென வருந்தி ணைரோ.

---

232 ஓசனை - பத்துநாழிகை வழி என்பர்; வடமொழிச் சிதைவு; 241; சீவக. 98, 953. ஏசு - இகழ்ச்சி. ஆசு - குற்றம். அருந்தவஞ்செய்பவரைப் போல். (கூ)

233 அற்றம் - சமயம்; 557. தந்தை - விபாண்டகன். விலங்கெனுப் புரிந்து - விலங்கென்று பிறர் கருதும்படி தவஞ்செய்து; 'முசுக்குல மனைய மெய்ம் முனிவர்' (வி. பா. குருகுலச். 65.) அவ்வேசையரை மூலிக்கோட்டு விலங்கென்று, கருதித் தொடர்ந்ததாக மேலே கூறுவர்; 739. பொருந்தின மகளிர், தாங்கள் 'மார்பினிற் கோடுபூத்த செறிதவ முனிவரென்ன முனிவனை மயக்கம்' செய்ததாகக் கூர்மபுராணம் கூறும்; இராமனவதரித்த. 5.

(பி-ம்.) [1] 'றனைத்தொழுமற்ற' [2] 'ரிவரெனத்தொழு திறைஞ்சினர்' (சு)

234 அருக்கிய முதலியன: 247. முருக்கு - முள்முருங்கை. புரை - ஒரு குடிசை. (பி - ம்.) [1] 'விருந்தபினினிய கூறலும்' [2] 'புரைகள்' (சக)

235 இனியன - இனியவையாகிய. வருக்கை - பலா. மாத்தருங்கனி - மாம்பழம். தாழையின்கனி - தேங்காய்; தெங்கம்பழம் என்று நூல்களிற் குறிக்கப்படும்.

(பி - ம்.) [1] 'தருத்தருங் கனியொடு தாழை யின்பலம்' (சஉ)

முனிவரை வேசையர் உரோமபதன் நாட்டுக்கு அழைத்துப்போதல்

236 இன்னன பலபக லிருந்த பின்றிரு
நன்னுதன் மடந்தையர் நவையின் மாதவன்
தன்னையெம் மிடத்தினுஞ் சார்தல் வேண்டுமென்
றன்னவர் தொழுதலு மவரொ டேகினன்.

237 விம்முறு முவகையர் வியந்த நெஞ்சினர்
[1]அம்மவிவ் விதுவென வகலு நீணெறி
செம்மைய முனிவரன் றொடரச் சென்றனர்
தம்மன மெனமருட் டைய லார்களே.

மழை போழிந்து வளன் சுரத்தல்

238 வளநகர் முனிவரன் வருமுன் வானவன்
களனமர் கடுவெனக் கருகி [1]வான்முகில்
சளசள வெனமழைத் தாரை கான்றன
குளனெடு நதிகடங் குறைக டீரவே.

239 பெரும்புன னதிகளுங் கிளனும் பெட்பறக்
கரும்பொடு செந்நெலுங் கவின்கொண் டோங்கிட
இரும்புயல் ககனமீ திடைவி டாதெழுந்
தரும்புனல் [1]சொரிந்தபோ தரசு ணர்ந்தனன்.

அரசனது நினைப்பு

240 காமமும் வெகுளியுங் [1]களிப்புங் கைத்தவக்
கோமுனி யிவணடைந் தனன்கொல் கொவ்வைவாய்த்
தாமரை மலர்முகத் தரள வாணகைத்
தூமமென் குழலியர் புணர்த்த சூழ்ச்சியால்.

---

236 நவை இல் - குற்றமில்லாத. (சாங)

237 அம்ம: இடைச்சொல்; வினவுவோருக்குக் கூறும் சொல். இவ் விது - இந்த இது. என - என்று அம்மகளிர் கூற. அகலும் - நீண்டவரும். மருள்தையலார் - மயக்கத்தையுடைய பரத்தையர்.

(பி - ம்.) [1] 'அம்மவிதுவென', 'அம்மவீதுவென' (சஎ)

238 வானவன் - சிவன். களன் அமர்கடு - மிடற்றில் அமைந்த விடம். (பி - ம்.) [1] 'வான்மிசை' (சஅ)

239 பெட்புஅற - ஆசைதீர. கரும்பும் நெல்லும் சேர்த்துக் கூறப்படுதல்: நான்மணிக். 11; பு. வெ. 56. ககனம் - விண்.

(பி - ம்.) [1] 'சொரிதரவரசு' (சஉ)

240 களிப்பு - மயக்கம். காமம், வெகுளி மயக்கம்: 'காமம் வெகுளி மயக்க மிவை.....நோய்' (குறள், 360.) கைத்த - வெறுத்த. தூமமென்

உரோமபதன் செயல்

241 என்றெழுந் தருமறை முனிவர் யாரொடும்
சென்றிரண் டோசனை சேனை சூழ்தர
மன்றலங் குழலியர் நடுவண் மாதவக்
குன்றினை யெதிர்ந்தனன் குவவுத் தோளினான்.

242 வீழ்ந்தன னடிமிசை விழிக ணீர்தர
வாழ்ந்தன னினியென மகிழுஞ் சிந்தையான்
தாழ்ந்தெழு மாதரார் தம்மை நோக்கிநீர்
போழ்ந்தனி ரெனதிடர் புணர்ப்பி னென்றான்.

கலைக்கோட்டு முனிவரின் வெகுளியும் தணிவும்

243 அரசரு முனிவரு மடைந்த வாயிடை
வரமுனி வஞ்சமென் றுணர்ந்த மாலைவாய்
வெருவினர் விண்ணவர் வேந்தன் வேண்டலாற்
கரையெறி யாதலை கடலும் போன்றனன்.

244 [1]வள்ளுறு வயிரவாண் மன்னன் பன்முறை
எள்ளறு முனிவனை யிறைஞ்சி யாரினும்
தள்ளருந் துயரமுஞ் சமைவுஞ் சாற்றலும்
[2]உள்ளுறு வெகுளிபோ யொளித்த தாமரோ.

கூந்தல் - புதையூட்டிய கூந்தல்; 281; 'அகிலி னுவி தேக்கிடுங் குழல்' (சீவக. 2495.) சூழ்ச்சி - வஞ்சனை. (பி - ம்.) [1] 'களவுங் கைத்தெழு' (சஎ)

241 மாதவக் குன்று. குன்று என்றது வலிமை புலப்பட நின்றது. (குன்றன்னார் குன்ற மதிப்பின்' (குறள், 898.) யாரொடும்-எல்லாரோடும். குவவு - திரட்சி. (சஅ)

242 வீழ்ந்தனன் - அடியற்ற மரம்போல் வீழ்ந்தான். இடர்: 263. புணர்ப்பு - சூழ்ச்சி. (சக)

243 மாலை - சமயம்; காலைபோல. கரை யெறியாத கடல்: 'ஏற்றந் தொடங்காக் கடலிற்றணி வெய்தி நின்றான்' (2-4: 141.) (சo)

244 வள் - கூர்மை. சமைவு - இல்லையாதல், ஒழிவு; 'தானையு முலந்த தைவர் தலைவருஞ் சமைந்தார்' (சி. 10: 67); 'எப்புடவியுஞ் சமைய வந்து தகர', 'வசுக்களைத் தழுவிச் சமைத்தே' (தக்க. 398, 483.) இக்கவி சில பிரதிகளில் இல்லை.

(பி - ம்.) [1] 'வள்ளுறை' [2] 'உள்ளுறை' (சச)

முனிவரை மன்னன் அழைத்துப்போய் அரண்மனையில் செய்த உபசாரம்

245 அருள்சுரந் தரசனுக் காசி யுங்கொடுத்
துருடரு தேரின்மே லொல்லை யேறினன்
பொருடரு முனிவருந் தொடரப் போயினன்
மருளொழி யுணர்வுடை வரத மாதவன்.

246 அடைந்தனன் வளநக ரலங்க ரித்தெதிர்
மிடைந்திட முனியோடும் வேந்தன் கோயில்புக்
கொடுங்கலில் பொற்குழாத் துறையு ளெய்தியோர்
மடங்கலா சனத்தின்மேன் முனியை வைத்தனன்.

247 அருக்கிய முதலிய கடன்க ளாற்றிவே
றுரைக்குவ [1]திலதென வுவந்து தானருள்
[2]முருக்கிதழ்ச் சாந்தையா முகந லாடினை
இருக்கொடு விதிமுறை யினிதி னீந்தனன்.

நாடு நலமுறுதல்

248 வறுமைநோய் தணிதர வான்வ ழங்கவே
உறுதுயர் [1]தவிர்ந்ததவ் வுலகம் வேந்தருள்
செறிகுழல் போற்றிடத் திருந்து மாதவத்
தறிஞனுண் டிருக்குந ரரச வென்றனன்.

---

245 பொருடருமுனி; பொருள் - அருளும் தருமமும். (நுஉ)

246 ஒடுங்கல் இல் - விசாலமான. பொற்குழாத்து உறையுள்; குழாம் - திரட்சி; 'தெவ்வர் தந்த நீணிதி சேர்ந்த செம்பொன் மாடமும்' (சீவக. 153.) (நுங)

247 அருள் - பெற்றெடுத்த. முருக்கு - முள்முருங்கை. நலாள்தனை. இருக்கு - வேத மந்திரம்.

(பி - ம்.) [1] 'தில்லென' [2] 'முருக்கித ழிளமுலை முக' (நுச)

248 அவ்வுலகம் - அந்த நாடு; உலகின் கூறுகளையும் உலக மென்றல் மரபு; 253; 653; தொல். அகத். சூ. 6. என்றவர் வசிட்டர்.

(பி - ம்.) [1] 'தணிந்ததவ்' (நுடு)

வேறு

கலைக்கோட்டு முனிவரை அழைத்துவரத் தசரதன் பயணம் ஆதல்

249 என்றலுமே முனிவரன்ற னடிபிறைஞ்சி
யீண்டேகிக் கொணர்வ னென்னுத்
துன்றுகழல் முடிவேந்த ரடிபோற்றச்
சுமந்திரனே [1]முதலா வுள்ள
வன்றில்சே [2]ரமைச்சர்தொழ மாமணித்தே
ரேறுதலும் வானோர் வாழ்த்தி
இன்றெமது வினைமுடிந்த தெனச்சொரிந்தார்
மலர்மாரி யிடைவி டாமல்.

250 காகளமும் பல்லியமுங் கனைகடலின்
மிகமுழங்கக் கானம் பாட
மாகதர்க ளருமறைநூல் வேதியர்கள்
வாழ்த்தெடுப்ப மதுரச் செவ்வாய்த்
தோகையர்பல் லாண்டிசைப்பக் கடற்றானை
புடைசூழச் சுடரோ னென்ன
[1]ஏகியருந் தவரொடும்போ யுரோமபதன்
றிருகாட்டை யெதிர்ந்தா னன்றே.

உரோமபதன் தசரதனை எதிர்கொண்டு செய்த உபசாரம்

251 கொழுந்தோடிப் படர்கீர்த்திக் கோவேந்த
னடைந்தமைசென் றுற்றார் கூறக்
கழுந்தோடும் வரிசிலைக்கைக் கடற்றானை
புடைசூழக் கழற்கால் வேந்தன்
செழுந்தோடும் பலகலனும் வெயில்வீச
மாகதர்கள் திரண்டு [1]வாழ்த்த
எழுந்தோடு முவகைபொடு மோசனைசென்
றனனரசை யெதிர்கோ ளெண்ணி.

---

249 முனிவரன்தன் - வசிட்ட முனிவருடைய. வினை - தீவினை.
(பி - ம்.) [1] 'முதல்வராய' [2] 'ரமைச்சரொடு' (நகூ)

250 காகளம்-சின்ன மென்னும் வாத்தியம். பல்லியம்-பலவித வாத்தியங்கள். மாகதர்கள் கானம்பாட; 251; மாகதர்-இருந்து ஏத்துவார். மகளிர் பல்லாண்டு இசைத்தல்; 254, 893, 1202, 1336. சுடரோன் - சூரியன். சூரிய வமிசத்தினனைச் சூரியனென்றார், ஒளிமேம்பாட்டினால்.
(பி - ம்.) [1] 'ஏகியரு நெறிநீங்கி' (நுஎ)

251 கீர்த்தியின் கொழுந்து: 1201. கழுந்து: தனியன் 10, அடிக். தோடு - ஆடவரின் காதணி; 'தோடுடைய செவியன்' (தே. திருஞா.)
(பி - ம்.) [1] 'பாட' (நுஅ)

252 எதிர்கொள்வான் வருகின்ற வயவேந்தன்
றனைக்கண்ணுற் றிறுமிலி காண
அதிர்கின்ற பொலந்தேர்நின் றரசர்பிரா
னிழிந்துழிச்சென் றடியின் வீழ
முதிர்கின்ற பெருங்காத றழைத்தோங்க
வெடுத்திறுக முயங்க லோடும
கதிர்கொண்ட சுடர்வேலான் றனைநோக்கி
யிவையுரைத்தான் களிப்பின் மிக்கான்.

253 யான்செய்த மாதவமோ விவ்வுலகஞ்
செய்தவமோ யாதோ விங்ஙன்
வான்செய்த சுடர்வேலோ யடைந்ததென
[1]மிகமகிழா மணித்தே ரேற்றித்
தேன்செய்த தார்பவுலித் தேர்வேந்தைச்
செழுநகரிற் கொணர்ந்தான் றெவ்வர்
ஊன்செய்த சுடர்வடிவே லுரோமபத
னெனவுரைக்கு மூரவுத் தோளான்.

254 ஆடகப்பொற் சுடரிமைக்கு மணிமாடத்
திடையோர்மண் டபத்தை யண்மிப்
பாடகச்செம் பதுமமலர்ப் பாவையர்பல்
லாண்டிசைப்பப் பைம்பொற் பீடத்
தேடுதற்ற வடிவேலோன் றனையிருத்திக்
கடன்முறைகள் [1]யாவு நேர்ந்து
தோடுதற்ற மலர்த்தாரான் விருந்தளிப்ப
வினிதுகந்தான் சுரர்நா டுந்தான்.

---

252 பொலந்தேர் - பொற்றேர். அடிவீழ்ந்தவன் உரோமபதன். முயங்குதல் - தழுவுதல். உரைத்தவன் - உரோமபதன். (நிக)

253 யான் செய்த மாதவம்: 333. உலகம் - உரோமபதன் நாடு; 248, அடிக். தேர்ஏற்றி - தன் இரதத்தில் ஏற்றிக்கொண்டு; புதிதாக வந்த வரை எதிர்கொள்வோர் தம் இரதத்தில் ஏற்றி வருவது மரபு; 267. இரு வரும் ஒரே தேரில் வருதல், 1134.

(பி - ம்.) [1] 'மனமகிழ்ந்து' (சுஎ)

254 ஆடகப்பொன்: நால்வகைப் பொன்னில் ஒன்று; மற்றவை கிளிச் சிறை, சாதரூபம், சாம்பூநதம். பாடகம் - காலணிகளில் ஒன்று. எதேற்ற - இதழ்கள் நெருங்கிய. ஏடு - இதழ்; இது மலர்களுக்காகி அம்மலர்களாலான மாலைக்கு ஆகுபெயராயிற்று; வேலுக்கு மாலை அணிதல் வழக்கு. வடி - கூர்மை. தோடு - இதழ். சுரர்நா டுந்தான்: 257,335.

(பி - ம்.) [1] 'யாவுமீந்து' (சுக)

முனிவரை அனுப்புவதாக உரோமபதன் கூறத் தசரதன் அயோத்தி மீளல்

255 [1]செவ்வி நறுஞ் சாந்தளித்துத் தேர்வேந்தன்
றனைநோக்கி யிவணீ சேர்ந்த
கவ்வையுரைத் தருள்தியென நிகழ்ந்தபரி
சரசர்பிரான் கழற லோடும்
அவவியநீத் துயர்ந்தமனத் தருந்தவனைக்
கொணர்ந்தாங்கண் விடுப்ப னான்ற
செவ்விமுடி யோயெனலுந் தேரேறிச்
சேனையொடு மயோத்தி சேர்ந்தான்.

உரோமபதன் முனிவரை உடன்படுத்தி அனுப்புதல்

256 மன்னர்பிரா னகன்றதற்பின் வயவேந்த
னருமறைநூல் வடிவு கொண்ட
தன்னமுனி வரனுறையு டனையணுகி
யிணையடித்தா மரைக ளம்பொன்
மன்னுமணி முடியணிந்து வரன்முறைசெய்
திடவிவணீ வருதற் கொத்த
தென்னையென வடியேற்கோர் [1]வரமருளு
மடிகளென யாவ தென்றான்.

257 புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க
பெருந்தகைதன் புகழிற் பூத்த
வறனொன்று திருமனத்தா னமரர்களுக்
கிடர்விளைக்கு மவுண ராயோர்
திறலுண்ட வடிவேலோன் றசரதனென்
றுயர்கீர்த்திச் செங்கோல் வேந்தன்
விறல்கொண்ட மணிமாடத் தயோத்திநக
ரடைந்திவணீ மீள்க வென்றான்.

---

255 செவ்வி - அழகு. கவ்வை - காரியம்; சூ. 35:198. பரிசு - விதத்தை. அவ்வியம் - பொறாமை.

(பி - ம்.) [1] 'சவ்வி' (சூஉ)

256 வயவேந்தன் - உரோமபதன். மறைநூல் வடிவங்கொண்ட முனி: 259, 266, 269-70.

(பி - ம்.) [1] 'வரமருள்க வடிக' (சூங)

257 புறவொன்றின்.....பெருந்தகை : 731; சூ. 4: 110, 15:355; புறநா. ௩௭ : 5-6; சிலப். 20 : 52; விக்கிரம. 11; குலோத். 17; இராசராச, 6. மணிமாடத்தயோத்தி : 334. (சூச)

258 அவ்வரந்தந் தனமினித்தேர் கொணர்திபென
வருந்தவத்தோ [1]னருள லோடும்
வெவ்வரந்தின் றயில்படைக்குஞ் சுடர்வேலோ
னடியினைஞ்சி வேந்தர் வேந்தன்
[2]கவ்வையொழித் துயர்ந்தனனென் றதிர்குரற்றேர்
கொணர்ந்தனனிக் கலிவல் லாளன்
செவ்விதுதற் றிருவினெடும் போந்தேறு
கெனவேறிச் சிறந்தான் மன்னே.

வேறு

முனிவரின் புறப்பாடு

259 சூனிகிலை [1]யரசனுங் கரங்கள் கூப்பிடத்
தனியறு முனிவரர் தொடர்ந்து சூழ்வர
வனிதையு மருமறை வடிவு போன்றெழிர்
முனிவனும் பொறிமிசை நெறியை முன்னினர்.

தேவர்களின் மகிழ்ச்சி

260 அந்தர துந்துமி முழங்கி யாய்மலர்
சிந்தினர் களித்தன [1]ரறத்திற் றேவரும்
வெந்தெழு [2]கொடும்பிணி [3]வீழ்க்கு மெய்ம்முதல்
வந்தெழ வருடரு வானென் றெண்ணியே.

---

258 அரந்தின்றயில் படைக்கும் சுடர்வேல்: 180; கு. 12:2; 'வாளரந் துடைத்த வைவேல்', 'அரந்தினப் பிறந்த பைம்பொன்' (சீவக. 461, 1507.) அயில் - கூர்மை. கவ்வை - துன்பம். செவ்விதுதற்றிரு: சாந்தை. 'முகலாள்' (247.)

(பி - ம்.) [1] 'னறைத லோடும்' [2] 'கவ்வையொழித்து' (சுசு)

259 தனியறு - ஒருவருடனும் வெறுப்பில்லாத; 'தனிமில் காட்சி முனிவர்' (முருகு 137.) கலேக்கோட்டு முனிவர் வேத வடிவினர்; 269-70. பொறி - தேர், இந்திரியங்கள்: சிலேடை.

(பி - ம்.) [1] 'வயவனுங்' (சுசு)

260 மெய்ம்முதல் - பரம் பொருளாய இராமன். அறத்தின் - தருமம் களித்ததைப் போல. கொடும்பிணி - அரக்கராற் பீடிக்கப்படும் கொடிய

தசரதன் மகிழ்ச்சி

261 தூதுவ ரவ்வழி யயோத்தி துன்னினர்
மாதிரம் பொருததோண் மன்னர் மன்னன்முன்
ஓதினர் முனிவரா வோத வேந்தனும்
காதலென் றளவறு கடலு ளாழ்ந்தனன்.

தசரதன் எதிர்கொளச் செல்லுதல்

262 எழுந்தனன் பொருக்கென விராத மேறினன்
பொழிந்தனர் மலர்மழை யாசி பூத்தன
மொழிந்தன பல்லிய முரச மார்த்தன
விழுந்தன தீவினை வேரி னோடுமே.

263 பிதிர்ந்ததென் மனத்துயர்ப் பிறங்க லென்றுகொண்
டதிர்ந்தெழு [1]முரசுடை யரசர் கோமகன்
முதிர்ந்தமா தவமுடை [2]முனியை யன்பினே
டெதிர்ந்தனன் யோசனை யிரண்டொ டொன்றினே.

264 நற்றவ மனைத்துமோர் நவையி லாவுருப்
பெற்றிவ ணடைந்தெனப் பிறங்கு வான்றனைச்
சுற்றிய சீரையு முழையின் றோற்றமும்
முற்றுறப் பொலிதரு மூர்த்தி யான்றனை.

265 அண்டர்க டுயரமும் மரக்க ராற்றலும்
விண்டிடப் பொலிதரு வினைவ லாளனைக்
குண்டிகை குடையொடுங் குல்வு நூன்முறைத்
தண்டொடும் பொலிதரு தடக்கை யான்றனை.

(பி - ம்.) [1] 'ரதமுந் தேவரும்' [2] 'கொடுவினை' [3] 'வீட்டு மெய் முதல்' (சுஎ)

261 மாதிரம் - திசை; நெடுநல். 72, ந. முனிவரவு ஓதினர். காதல் என்ற அளவறுகடல் : 'ஆயபே ரன்பெனு மளக்கர்' 2.2 : 52. (சுஅ)

262 மொழிந்தன பல்லியம் : 'புகன்ற தீங்குழல்' (சீவக. 1940.) (சுக)

263 பிதிர்ந்தது - தூளாயது. துயர்ப் பிறங்கல் - துன்பமலை. மூன்று யோசனைத் தூரத்தினெதிர்ந்தனன்.

(பி - ம்.) [1] 'கடலுடை' [2] 'முனியைக் கண்களால்' (எ0)

264 நற்றவம் உருவெடுத்தல் : 651. நவை - குற்றம். சீரை - மரவுரி. உழையின் தோற்றம் : 225. மூர்த்தி - வடிவுடையவன். (எக)

265 1-2 : 744. குண்டிகை முதலியன : தொல். மரபு. சூ. 70; கலி. கூ : 1-4 நூல் முறை - நூல்களிற் கூறிய முறைப்படியே. முடிபு: எதிர்ந்தனன் 263, மூர்த்தியான்றனை 264. தடக்கை யான்றனை 265. வினைமுற்றை முன்கூறிச் செயப்படு பொருளைப் பின் கூறுவது கம்பர் இயல்பு; 198-9. (எஉ)

கலேக்கோட்டு முனிவரின் ஆசியை மன்னன் பெறுதல்

266 இழிந்துபோ யிரதமாண் டிணைகொ டாண்மலர்
விழுந்தனன் வேந்தர்தம் [1]வேந்தன் மேன்மையால்
மொழிந்தன ஞசிகண் முதிய நான்மறைக்
கொழுந்துமேற் படர்தரக் [2]கொழுகொம் பாயினுன்.

மன்னன் முனிவரை அழைத்துப் போதல்

267 அயல்வரு முனிவரு மாசி கூறிடப்
[1]புயல்பொழி தடக்கையாற் றொழுது பொங்குநீர்க்
கயல்பொரு விழியொடுங் கலேவ லாளனே
இயல்பொடுங் கொணர்ந்தன னிரத மேற்றியே.

268 அடிகுரன் முரசதி ரயோத்தி மாநகர்
முடியுடை வேந்தனம் முனிவ னோடுமோர்
கடிகையி னடைந்தன கமல வாண்முக
வடிவுடை மடந்தையர் வாழ்த்தெ டுப்பவே.

வசிட்டர் முதலியோர் சபைக்கு வருதல்

269 கசட்டறு வினைத்தொழிற் கள்வ ராயுழல்
அசட்டர்க ளேவரை [1]யறுவ ராக்கிய
வசிட்டனு மருமறை [2]வடிவு போன்றெளிர்
விசிட்டரும் வேத்தவை பொலிய மேவினர்.

---

266 நான்மறைக் கொழுந்து - நால் வேதமாகிய கொடியின் கொழுந்து.

(பி - ம்.) [1] 'வேந்தன் மெய்ம்மையான்', 'வேந்தனீதியான்' [2] 'கொள் கொம் பாயினுன்' (எங)

267 புயல்பொழி தடக்கை: 1, குறிப். கயல் பொருவிழி; சாந்தை; பன் மொழித் தொடர். இரதம் - தசரதனது இரதம்.

(பி - ம்.) [1] 'புயல் பொரு தடக்கையாற்', 'புயல் பொழி தாநதி பெருகு பொங்கு நீர்க்' (எச)

268 அயோத்தி மாநகர்: மா: உலோகமா பாலனென்பதிற் போல; சீவக. 395, நே. வாழ்த்து - பல்லாண்டு. (எடு)

269 கசடு - கீழ்மை. அசட்டர்கள்: திறமையற்றவர்கள். 'அசட்டுருக்கள்' (திருப்புகழ், குறித்தமணிப்.); 'சளத்திற் பிணிப்பட்ட சட்டுக்ரியைக்குள்' (கந்தரலங். 7.) ஐவர் - பஞ்சேந்திரியங்கள். அறுவர் - அற்றவர்; ஐவரை ஆறு பேராக்கிய என்பது வேறு பொருள். ஐவரை யகத்தடைத்துள. (பி - ம்.): 397. விசிட்டர் - வேறு முனிவர்; கலேக்கோட்டு முனிவர் என்பாருமுளர். விசிட்டம் - மேன்மை. [கசட்டறுவினை - தீயவினை. அசட்டர் - பொல்லாதவர். விசிட்டர் - பெரியோர்.]

(பி- ம்.) [1] 'யகத்தடைத்துள' [2] 'வழக்கு நீங்கலா' (எசு)

தசரதர் முனிவரை உபசரித்தல்

270 மாமணி மண்டப மன்னி மாசறு
தூமணித் தவிசிடைச் சுருதி யேங்கிகர்
கோமுனிக் கரசனே யிருத்திக் கொள்கடன்
ஏமுறத் திருத்திவே றினைய செப்பினன்.

271 சான்றவர் சான்றவ தருமை மாதவம்
போன்றெழிர் புனிதநின் னருளிற் பூத்தவென்
ஆன்றதொல் குலமினி யரசின் வைகுமால்
யான்றவ முடைமையு மிழப்பின் றுமரோ.

கலிக்கோட்டு முனிவரின் கூற்று

272 என்னலு முனிவர னினிது நோக்குரு
மன்னவர் மன்னகேள் [1]வசிட்டனென்னுமோர்
நன்னெடுந் தவன்றுணை நவையில் [2]செய்கைய
நின்னையிவ் வுலகினி னிருபர் நேர்வரோ.

273 என்றிவை பலபல [1]வினிய கூறினன்
குன்றுறழ் வரிசிலைக் குவவுத் தோளினாய்
நன்றிகொ [2]ளரிமக நடத்த வெண்ணியோ
இன்றெனை யழைத்ததிங் கியம்பு வாயென்றான்.

---

270 மன்னி - அடைந்து. சுருதி - வேதம். ஏமுற - சக்தோஷிக்க. (எஎ)

271 சான்றவர் சான்றவ - பெரியோர்களுக்குப் பெரியோய். பூத்த - விளங்கிய. என் ஆன்ற .....வைகுமால் : 196. இழைப்பு இன்றும் - அழிதல் இல்லையாம். (எஅ)

272 துணை - துணையையுடைய. வசிட்டரின் துணை : 195, அடிக். நேர்வரோ - ஒப்பாவரோ.

(பி - ம்.) [1] 'வசிட்டன்றனெனும்' [2] 'செய்கைநீ', 'செய்கையாய்' (எக)

273 அரிமகம் - அசுவமேதம்.

(பி - ம்.) [1] 'வினிமை' [2] 'னருமக'

இதன்பின் சில பிரதிகளில் கீழ்வரும் பாட்டுக் காணப்படுகிறது. அப் பாட்டினடியில் 'கலிக்கோட்டு முனிபடலம் முற்றும்' என்ற தொடரும் உள்ளது.

'எனக்கலி மாமுகச் சிருங்க னிவ்வுரை
தனைச்சொலத் தரணிபர்க் கரசன் முன்மகிழ்ந்
தனைத்துல குயிரொடு மறங்க ளுய்யத்தன்
மனத்துய ரகன்றிட வணங்கிக் கூறுவான்.' (அ0)

தனக்கு மைந்தருண்டாக அருளும்படி மன்னன் வேண்டல்

274 உலப்பில்பல் லாண்டெலா முறுக ணின்றியே
தலப்பொறை யாற்றினேன் றணையர் வந்திலர்
அலப்புநீ ருடுத்தபா ரளிக்கு மைந்தரை
நலப்புகழ் பெறவினி நல்க வேண்டுமால்.

புத்திர காமேஷ்டிக்கு எழும்படி முனிவர் கூறுதல்

275 என்றலு மரசநீ யிரங்க லிவ்வுல
கொன்றுமோ வுலகமீ ரேழு மோம்பிடும்
வன்றிறன் மைந்தரை யளிக்கு மாமகம்
இன்றுநீ யியற்றுதற் கெழுக வீண்டென்றான்.

வேள்விக்கு வேண்டுவனவற்றை மன்னன் சித்தம் செய்தல்

276 ஆயதற் குரியன கலப்பை யாவையும்
ஏயெனக் [1]கொணர்ந்தன னிருபர்க் கேந்தலும்
தூயநற் புனல்படூஇச் சுருதி நூன்முறை
சாய்வறத் திருத்தியே சாலை துன்னினான்.

யாகத்தின் நிகழ்ச்சி

277 முழங்கனன் மும்மையும் முடுகி யாகுதி
வழங்கியே யீரறு திங்கள் வாய்த்தபின்
[1]றழங்கிய துந்துமி முழங்கத் தாவில்வான்
விழுங்கினர் விண்ணவர் வெளியின் றென்னவே.

---

274 உலப்பு - ஒழிவு. அலப்பு நீர் : வலித்தல் விகாரம்; அலம்பல் - ஆரவாரம் செய்தல். (அக)

ஒரு பிரதியில் இதுமுதல் திருவவதாரப் படலம் என்றுள்ளது.

275 ஈரேழு உலகமும் ஓம்பிடும் மைந்தரை அளிக்கும் வேள்வி : 222, 741. மாமகம் - அசுவமேதம்; அரிமகம், 273; வான்மீகமும் அசுவமேத யாகத்தைக் கூறும். (அஉ)

276 கலப்பை - உபகரணங்கள் ; 'வரைமுதற் கலப்பைகள் மாடு நாட்டி' (ச. 7: 97); 'காசில் போகக் கலப்பை' (சீவக. 864.) ஏயென: 279.

(பி - ம்.) [1] 'கொணர்தலி னிருபர்க் கேந்தலே' (அங)

277 அழன் மும்மை - மூன்று தீ; 'நாற்சதுரமும் முச்சதுரமும் வில் வடிவுமாகிய மூன்று வகையைக் கருதின ஆகவனீயம், தக்கிணாக்கினி, காருகபத்தியம்' (முருகு 181, ந.); 'மூன்று தீயாவன : ஒன்று வேதத்தை வழங்கவும், ஒன்று தேவர்கட்குத் தட்சிணை கொடுக்கவும், ஒன்று பூலோகத்தை ரட்சை பண்ணவும்' (முருகு 181, வேறுரை.) ஈரறு திங்கள் - பன்னிரண்டு மாதம்; பன்னிரண்டு மாதம் ஆகுதி செய்தல் பாபநிவர்த்தியின் பொருட்டாம். அசுவமேத யாகம் ஒரு வருஷ காலத்திற் செய்வது.

(பி - ம்.) [1] 'றழங்கின துந்துபி தாவில் வானகம்' (அச)

முனிவர் கனலில் ஆகுதி வழங்கல்

278 முகமல ரொளிதர மொய்ந்து வானுளோர்
[1]தொகைவிரி நறுமலர் தூவி யார்த்தெழத்
தகவுடை முனியுமத் தழலி னுப்பணை
மகவரு ளாகுதி வழங்கி னனரோ.

வேள்வித் தீயில் பூதத்தின் தோற்றம்

279 ஆயிடைக் கனலினின் றம்பொற் றட்டமீத்
தூயகற் சுதைநிகர் பிண்ட மொன்றுசூழ்
தீயெரி பங்கியுஞ் சிவந்த கண்ணுமாப்
ஏயெனப் பூதமொன் றெழுந்த தேந்திழை.

பூதத்தின் மறைவும் கலைக்கோட்டு முனிவரின் கட்டளையும்

280 வைத்தது தரைமிசை மறித்து மவ்வழித்
தைத்தது பூதமத் தவனும் வேந்தனை
உய்த்தரல் லமிர்தினை யுரிய மாதர்கட்
கத்தகு மாபினி லளித்தி யாலென்றான்.

மன்னன் கவுசலைக்கு ஒரு கூறு அளித்தல்

281 மாமுனி யருள்வழி மன்னர் மன்னவன்
தூமமென் [1]சுரிகுழற் றொண்டைத் தூயவாய்க்
[2]காமரொண் கவுசலை கரத்தி னேர்பகிர்
[3]தாமுற வளித்தனன் சங்க மார்த்தெழ.

---

278 மகவருள் ஆகுதி : 285; புத்திரகாமேஷ்டி யாகம்; ஒரு தினத்திற் செய்வது. தசரதன் அசுவமேதத்தையும் புத்திரகாமேஷ்டியையும் கலைக் கோட்டு முனிவரைக் கொண்டு செய்தான்.

(பி - ம்.) [1]'அகவிரை' (அடு)

279 பிண்டம்: பிண்டமென்றது வெண்சோற்றுத்திரளை; 742. வான்மீகி பாயஸம் என்பர். தீஎரி - தீயைப்போல் எரிகின்ற. பங்கி-குடுமி. (அசு)

280 தைத்தது - (திரும்பப் புகுந்தது.) உய்த்த - சேர்த்த. உரிய மாதர் - பட்டத் தேவியர். மாபினில் அளித்தல்: 743. பூதம் பாயஸத்தைத் தசரதன் கையில் கொடுத்ததாகவும் அப்போது அவனை நோக்கிச் சில சொற்கள் பேசியதாகவும் வான்மீகம் கூறும். (அஎ)

281 தூமமென் கருங்குழல்: 240, குறிப். [காமுற (பி -ம்) - விருப்ப முற.] சுரிகுழல் - சுரிந்த கூந்தல். தாம் உற; தாம் - தாகம்; கலி. 12: 5, நி. 'தாஅம் படுநோக்கு' (யா. வி. மேற்.) சங்கம் ஆர்த்தெழல் நன்னிமித்தமாகிப் பின்வரும் வெற்றியைக் குறிக்கும்.

(பி - ம்.) [1]'கருங் குழற்' [2]'காமுறக்' [3]'தாமுறை யளித்தனன்' (அஅ)

கைகேயிக்கு அளித்தல்

282 கைகயன் றனையதன் கரத்து மம்முறை
செய்கையி னளித்தனன் றேவ ரார்த்தெழப்
பொய்கையு நதிகளும் பொழிலு மோதிமம்
வைகுறு கோசல மன்னர் மன்னனே.

சுமித்திரைக்கு அளித்தல்

283 நமித்திரர் நடுக்குறு நலங்கொண் மொய்ம்புடை
நிமித்திரு மாபுளான் முன்னர் நீர்மையிற்
சுமித்திரைக் களித்தனன் சூரர்க்கு வேந்தினிச்
[1]சமித்ததென் பகையெனத் தமரொ டார்ப்பவே.

மீட்டும் சுமித்திரைக்கு அளித்தல்

284 பின்னரப் பெருந்தகை பிதிர்ந்து [1]வீழ்ந்தது
தன்னையுஞ் சுமித்திரை தனக்கு நல்கினன்
ஒன்னலர்க் கிடமும்வே றுலகி னேங்கிய
மன்னுயிர் தமக்குநீள் வலமுந் துள்ளவே.

வேள்வியின் முடிவும் மன்னனது செயலும்

285 வாம்பரி வேள்வியு [1]மகாரை நல்குவ
[2]தாம்புரை யாகுதி பிறவு மந்தணன்
ஓம்பிட முடித்தபி னுலகு காவலன்
ஏம்பலோ டெழுந்தனன் யாரு மேத்தவே.

---

282 தேவரார்த் தெழ : 297. பரதன் பூமியைத் தாங்கப் பிறந்தவன் என்ற குறிப்பை உட்கொண்டு, 'கோசல மன்னர் மன்னன்' என்றார். (அக)

283 நமித்திரர் - பகைவர். நிமி - நிமி யென்னும் சக்கரவர்த்தி. சமித்தனன் - ஒழித்தனன். இலக்குமணன் இந்திரஜித்தைக் கொல்லப் பிறந்தவனுதல் பற்றி, இந்திரனுக்கு மகிழ்ச்சி.

(பி - ம்.) [1] 'சமித்தனன் பகையென வமரர் சாற்றினர்' (கo)

284 ஒன்னலர் - பகைவர். வலம் இடம் துள்ளினது ஆண்பாலார்க்கே; இடப்புறம் துள்ளல் தீமையைக் காட்டும் உற்பாதம்; வலம் துடித்தல் நன்மைக்கு அறிகுறி; பெண்களுக்கு இம் முறை வேறு; கு. 3 : 32-5.

(பி - ம்.) [1] 'வீழ்ந்தவை' (கக)

285 பரிவேள்வி - அசுவமேதம்; 273. புத்திரகாமேஷ்டி அசுவமேதம் இரண்டும் செய்தான் தசரதன். ஆகுதி : 278, 780, 1338- ஓம்பல் - பாதுகாத்தல். ஏம்பல் - மகிழ்ச்சி.

(பி - ம்.) [1] 'மகவை நல்குவ' [2] 'தாம்புரியாவுதி' (கூ)

286 முருடொடு பல்லிய முழங்கி யார்த்தன
இருடரு முலகமு மிடரு நீங்கின
தெருடரு வேள்வியின் கடன்க ளூர்ந்துழி
அருடரு மவையின்வந் தரச னெய்தினன்.

287 செய்ம்முறை [1]கடனவை திறம்ப லின்றியே
[2]மெய்ம்மறைக் கடவுளர்க் கீந்து விண்ணுளோர்க்
கம்முறை யளித்துநீ டந்த ணாளர்க்கும்
கைம்முறை [3]பொழிந்தனன் கனக மாரியே.

288 வேந்தர்கட் கரசொடு வெறுக்கை தேர்பரி
வாய்ந்தநற் றுகிலொடு வரிசைக் கேற்பன
ஈந்தனன் பல்லியங் கவைப்ப வேகிநீர்
தோய்ந்தனன் சரயுநற் றுறைக்க ணெய்தியே.

289 [1]மூரசொலி கறங்கிட முத்த வெண்குடை
[2]விரசிமே னிழற்றிட வேந்தர் சூழ்தர
அரசவை யடைந்துழி யயனு நாணுற
உரைசெறி முனிவர்தா ளிறைஞ்சி யோங்கினன்.

மன்னன் கலைக்கோட்டு முனியை உபசரித்து அனுப்புதல்

290 அரியநற் றவமுடை வசிட்ட ஞாணையால்
இரலைநற் [1]சிருங்கணை யிறைவன் றொழாஅ
[2]உரியநற் பலவுரை பயிற்றி யுய்ந்தனன்
பெரியநற் றவினிப் பெறுவ திபாதென்றான்.

---

286 முருடு - பத்தல், மத்தளமுமாம்; கூ. 6 : 28; சிலப். க : 46, உரை. அருள்தரும் அவை - நல்லவை; அவை - சபை; 'காட்சிக் கெளியன்.....னிலம்' (குறள், 386.) (கூஎ)

287 'மறைக் கடவுளர்க்கு' என்ற பாடத்தில்: கடவுளர் - முனிவர்; முனிவரைக் கடவுளென்றல்: மதுரைக். 41; கலி. கூஉ : 11.3; சிலப். 5; 11: பெருங். 2.11: 150, சூ. 10 : 153; சீவக. 96, 1124. நீடல் - நிலைத்தல்.
(பி - ம்.) [1]'கடன்முறை' [2]'மெய்ம்முறை' [3]'வழங்கினன்' (கூச)

288 வேந்தர் - தன் கீழுள்ள சிற்றரசர்கள். அரசு - ஆட்சி. நீர் தோய்ந்தனள்: யாக தீக்ஷை மேற்கொண்டவர் அந்த யாகத்தின் முடிவில் செய்யும் ஸ்நானம் இது; வடமொழியில் 'அவப்ருதம்' என்று வழங்கும்; திவ். 920. (கூடி)

289 விரசல் - நெருங்கல். உரை செறிமுனிவர், உரை - சாபானுக்ரஹச்சொல்; செறிவு - நிறைவு.
(பி - ம்.) [1]'மூரசினங்' [2]'விரசிடு நிழறர' (கூசு)

290 இறைவன் - தசரதன். தாள்தொழா. பயிற்றி - கூறி, உய்ந்தனன் - தன்யனானேன். 'இனிப் பெறுவது இப்புத்திரப் பேற்றைவிடச் சிறந்த தொன்றில்லை' என்றபடி.

291 வாங்கிய துயருடை மன்னன் பின்னரும்
[1]பாங்குறு கடன்முறை பலப யிற்றல்கொண்
டோங்கிய [2]வுவகையி னுகி யோடெழா
[3]நீங்கின னிருந்தன னேமி வேந்தனே.

கோசலை முதலியவர்களின் சூற் பருவம்

292 தெரிவையர் மூவருஞ் சிறிது நாட்செலீ
மருவிய வயாவொடும் வருத்தத் துய்த்தவர்
பொருவருந் திருமுக மன்றிப் பொற்புநீ
டுருவமு மதியமோ டொப்பத் தோன்றினர்.

ஸ்ரீ ராமர் ஜனனம்

293 ஆயிடைப் பருவம்வந் [1]தடைய மேடமும்
மாயிரும் [2]புவிமட மாதும் மாமதி
வேய்புனர் பூசமும் விண்ணு வளார்களும்
தூயகற் கடகமு மெழுந்த துள்ளவே.

(பி - ம்.) [1] 'சிருங்க மா விறைவன்' [2] 'உரியபற்'

சில பிரதிகளில் இதன் பின் கீழேயுள்ள ஒரு பாட்டுக் காணப்படுகிறது:

'எந்தை நின் னருளினு [1]லிடரு நீங்கியே
[2]உய்ந்தன னடியனென் றுரைப்ப வொண்டவன்
[3]சிந்தையின் மகிழ்ச்சியால் வாழ்த்தித் தோமிசை
வந்தமா தவரொடும் வழிக்கொண் டேகினன்.'

(பி - ம்.) [1] 'லிடரி னீங்கியே' [2] 'உய்ந்தன னடியனே னென்ன வொண்டவன்' [3] 'சிந்தையுண்'

(கள)

291 வாங்கிய துயர் : வடமொழி நடை. வாங்கிய - நீங்கின; 46. பாங்கு - நன்மை. பயிற்றல் - செய்தல். நீங்கினவர் கலைக் கோட்டு முனிவர்.

(பி - ம்.) [1] 'பாங்குடை முனிவர்தாள் பழிச்சியேத்தல் கொண்' [2] 'வுவகைய ராகி' [3] 'நீங்கின நிருந்தனன்'

(கஅ)

292 வயாவும் வருத்தமும்; வயவு - கருப்ப மூற்றிருக்கையில் கொள்ளும் ஆசை; 'வயாவும் வருத்தமு மீன்றக்கா லேவும், கவர்அன் மகற் கண்டு தாய்மறந் தாஅங்கு' (நாலடி. 201.) உருவம் வெளுத்துப் போனமையின் 'மதிய மோடொப்ப' என்றார். சூல்கொண்ட மகளிரின் நலத்தைலவு: சீவக. 231-ஆம் செய்யுளால் தெரிய வரும்.

(கக)

293 பருவம் : தேவியர் கர்ப்பந் தரித்திருந்தது 12 மாத மென்பர் வான்மீகி. மேடம் - மேட மாதம்; சித்திரை. வேய் - புனர் பூசத்தின் பெயர்; வேய் புனர்பூசம்; இரு பெயரொட்டு; எதுகை நோக்கி இயல்பாயிற்று; மாமதி வேய் புனர் பூசம் - சந்திரனைத் தழுவிய புனர்பூசம் எண்ணலுமாம். புனர்வசு இராமபிரான் திருவவதாரம் செய்த நட்சத்திரம். கற்கிட'

(பி - ம்.) [1] 'தடைந்த வெல்லையின்' [2] 'புவிமகண் மகிழ்வொ டோங்

(கஉ)

294 சித்தரு மியக்கருந் தெரிவை மார்களும்
வித்தக முனிவரும் விண்ணு ளோர்களும்
நித்தரு முறைமுறை நெருங்கி யார்ப்புறத்
தத்துற லொழிந்துநீ டரும மோங்கவே.

295 ஒருபக லுலகெலா முதரத் துட்பொதிந்
தருமறைக் குணர்வரு மவணி யஞ்சனக்
கருமுகிற் கொழுந்தெழில் காட்டுஞ் சோதியைத்
திருவுறப் பயந்தன டிறங்கொள் கோசலை.

பரதன் ஜனனம்

296 ஆசையும் விசும்புநின் றமர ரார்த்தெழ
வாசவன் முதலினர் வணங்கி வாழ்த்துறப்
பூசமு மீனமும் பொலிய நல்கிஞர்
மாசறு கேகயன் மாது மைந்தனை.

இலக்குவன் ஜனனம்

297 தலையவிழ் தருவுடைச் சயில கோபனும்
கிலையுமந் தரமிசைக் கெழுமி [1]யார்த்தெழ
அலைபுகு மரவினை டவலன் வாழ்வுற
[2]இலையவற் பயந்தன ளிலைய மென்னொடி.

சத்துருக்கனன் ஜனனம்

298 படங்கிளர் பஃறலைப் பாந்த ளேந்துபார்
நடங்கிளர் தரமறை நவில நாடகம்
மடங்கலு மகமுமே வாழ்வி னேங்கிட
விடங்கிளர் விழியிணை மீட்டு மீன்றனள்.

---

294 வித்தகம் - அறிவுச் செல்வம்; 3. நித்தர் - நித்தியசூரிகள். (கo5)

295 ஒரு பகல் - பிரளயகாலத்தில்; 'பொருளற்றிடமுற் றுறுமப் பகலில்' (2.4:32.) சோதி: ஈண்டு திருமாலை; சோதி என்றமைக்கு ஏற்பப் பின் பரத இலக்குவ சத்துருக்னர்களையும் ஒளி என்பர்; 310-12. திரு - இப் பர மோட்ச சாதனமாகிய செல்வம் (கo6)

296 ஆசை - திசைகள். விசும்பு - ஆகாயம். வாசவன் - இந்திரன். (கo7)

297 சயில கோபன் - மலைகளை வெகுண்டவன்; இக்திரன். கிளை - தேவர். அலைபுகும் என்பதனை அலவனுக்கும் கூட்டுக; சாதியடை. அரவு - ஆயிலியம். அலவன் - கற்கடகம். இலையவன் - இலக்குவன்.
(பி - ம்.) [1] 'யார்ப்புற' [2] 'இலையவள் பயந்த னனிலைய வீரனே' (கo8)

298 பஃறலைப் பாந்தள் ஆதிசேடன். பார் - பூமிதேவி. நடம்கிளர் தர - மகிழ. மறை நாடகம் நவில. மடங்கல் - சிங்க ராசி. மகம் - ஒரு நட்சத்திரம். (கo9)

தேவாதியரின் மகிழ்ச்சி

299 ஆடின ரரம்பைய ரமுத வேழிசை
பாடினர் இன்னரர் தூவைத்த பல்லியம்
வீடின ரரக்கரென் றுவக்கும் விம்மலால்
ஓடின ருலாவின ரும்பர் முற்றுமே.

மக்கள் பிறந்தமையை அரசன் உணர்தல்
அந்தணளர் நாளும் கோளும் நன்று எனல்

300 ஓடின ராசன்மாட் டுவகை கூறிநின்
றூடினர் சிலதிய ரந்த ணாளர்கள்
கூடினர் நாளொடுங் கோளு நின்றமை
நாடின [1]ருலகினி னவையின் றென்றனர்.

தசரதன் குழந்தைகளின் முகத்தை நோக்குதல்

301 மாமுனி தன்னொடு மன்னர் மன்னவன்
ஏமுறு புனல்படீஇ விதத்தொ டின்பொருள்
தாமுற வழங்கிவெண் சங்க மார்ப்புறக்
கோமகார் திருமுகங் குறுகி நோக்கினன்.

---

299 இன்னரர் பாடினர்; இன்னரர் - பதினெண் கணத்துள் ஒரு பிரிவினர். விம்மல் - மகிழ்ச்சி உம்பர் - நித்ய சூரிகள். மு. நிவ். 'வண்ண மாடங்கள்' (2) (கoசு)

300 சிலதியர் - குறுந்தொழில் மகளிர்; பெருங். க. 33 : 24; சீவக. 197. நாள் - இருபத்தேழு நட்சத்திரங்களுக்குப்பெயர். கோள் - கிரகங்கள்.
(பி - ம்.) [1] 'ருலகினி னவை'
இச்செய்யுளுக்குப் பின் பிரதிகளிற் காணப்படும் அதிகப் பாடல்கள் :
(1) 'மேடமா மதிதிதி நவமி மீன்கழை
[1]நீடுநாண் மாலிகற் கடக நீதிசேர்
[2]ஓடைமா களிறனை னுதய ராசிகோள்
நாடினே காதசர் [3]நால்வ ருச்சரே'.
நால்வர் - சுக்கிரன், வியாழன், சனி, செவ்வாய்; சூரியனையும் சேர்த்து ஐவர் என்பர் வான்மீகி.
(பி - ம்.) [1] 'நீறெறு' [2] 'ஆடவர் திலகனுதய' [3] 'உச்சர் கால்வரே'
(2) 'என்றனர் சாதக [1]மீசர்க் கேனையர்
தந்தமக் குந்தகு முறையிற் றுந்தெரிந்
தொன்றிய தமனியத் தெழுதி யோதினர்
வன்றிறற் சுரர்குரு வாழ்த்தெ டுப்பவே'.
ஈசன் - இராமன்; 'ஆர்த்தவோசை யீசனுண்ட வண்டமுற்று முண்டதே' (க. 5 : 2.) தமனியத்து - பொன் ஓலையில்.
(பி - ம்.) [1] 'மிறைவர்ச்' (கoஎ)

301 வித்தொடு - தானியங்களோடு. மாமுனி.....நோக்கினன்; 'சிறப்பாவன பிறந்த புதல்வன் முகங் காண்டலும்' (தொல். கற்பு. 5, நச்.):

முரசறையுமாறு அரசன் இட்ட கட்டளை

302 இறைதவிர்ந் [1]திடுகபா ராண்டொ ரேழ்நிதி
நிறைதரு சாலைதா ணீக்கி யாவையும்
முறைகெட வறியவர் முகந்து கொள்கென
அறைபறை யென்றன னரசர் கோமகன்.

303 படையொழிந் திடுகதம் பதிக ளேயினி
விடைபெறு [1]குகமுது வேந்தர் வேதியர்
கடையுறு நியமமு நவையின் றுகுக
[2]புடைகெழு விழாவொடு பொலிய வெங்கணும்.

304 ஆலயம் புதுக்குக வந்த ணுளர்தம்
சாலையுஞ் சதுக்கமுஞ் சமைக்க சந்தியும்
[1]காலையு மருள்புரி கடவு ளோர்க்கணி
மாலையுந் தூபமும் வழங்க வென்றனன்.

'செறுவர் நோக்கிய கண்தன், சிறுவனை நோக்கியுஞ் சிவப்பா னுவே' (புறநா. கoo: 10-11.)

இதன்பின் உள்ள அதிகப் பாடல்:

'நோக்கினன் களிப்பெழ நுணங்கு கேள்விநூல்
ஆக்கிய முனிவனை வணங்கி யையவென்
பாக்கியம் பலித்ததிப் பால னென்றுபார்
காக்குறு மரசனுங் கழறன் மேயினான்.' (கoஅ)

302 ஏழாண்டு இறை தவிர்தல் ஒரு மரபு: 'ஏழாண்டு தேயத் தீட்டும், இறை விடுமின்' (திருவிளை. தடா. 28.) நிதிச் சாலை - பண்டாரம். பறை அறை என்றது வள்ளுவனை நோக்கி மொழிந்தது; 305. தாள் - தாழ்ப்பாள். ஒப்பு: 302-4; பெருங். இ. 6: 48-59; சீவக: 306-8; திருவிளை. தடா. 28-31.

(பி - ம்.) [1] 'திகெ பார் யாண்டொ ரேழொ டேழ், நிறை நிதிச் சாலை', 'திகெபார்யாண்டொ ரேழினின் நிறைதரு சாலைதா ணீக்கி' (கoக)

303 பெறுகுக; கு: சாரியை. முது வேந்தர் - சிறையிலிருந்து முதுமையுற்றவர்; நீண்ட காலம் சிறையிலிருந்தார்க்கும் விடுதலை கிடைத்தது.

(பி - ம்.) [1] 'குகமுடி' [2] 'கடவுளர் விழவொடு களிப்ப' (ககo)

304 சாலை - அக்கிரகாரம்; யாகசாலையுமாம், சதுக்கம் - நான்கு தெருக்கள் கூடுமிடம்; 'சதுக்கமும் சந்தியும்' (முருகு. 225.) சந்தி - காலையும் மாலையும்; காலை - மத்தியானம்.

(பி - ம்.) [1] 'காலையு மாலையுங்' (ககக)

நகர மாந்தரின் மகிழ்ச்சி

305 என்புழி வள்ளுவர் யானை மீமிசை
[1]நன்பறை யறைதர நகர மாந்தரு
மின்பிறழ் நுசுப்பினர் தாமும் விம்மலால்
இன்பமென் [2]றளக்கரு மளக்க ரெய்தினர்.

306 ஆர்த்தனர் முறைமுறை யன்பி னலுடல்
போர்த்தன புளகம்வேர் [1]பொழிந்த நீணிதி
தூர்த்தன ரெதிரெதிர் சொல்லி னூக்கெலாம்
தீர்த்தனென் [2]றறிந்ததோ வவர்தஞ் சிந்தையே.

307 பண்ணையு மாயமுந் திரளும் பாங்கரும்
கண்ணகன் நிருநகர் களிப்புக் கைமிகுந்
தெண்ணெயுங் களபமு மிழுது நானமும்
சுண்ணமுந் தூவினர் வீதி தோறுமே.

வேறு

வசிட்டர் நாமகரணஞ் செய்தல்

308 இத்தகை மாநக ரீரறு நாளும்
சித்த முறுங்களி யோடு சிறந்தே
தத்தமை யொன்று [1]முணர்ந்திலர் தாவின்
மெய்த்தவ னுமய் விதிப்ப [2]மதித்தான்.

309 காமலை யத்தளர் கைக்கரி யெய்த்தே
அராவணை யிற்றுயில் வோயென வந்நாள்
விராவி யளித்தருண் மொய்ப்பொரு ளுக்கே
இராம னெனப்பெய ரீந்தன னன்றே.

---

305 இன்ப மென்றளக்கரும் : அகரம் தொகுத்தல். அளக்கரு மளக்கர்-அளத்தற்கு அரியகடல், மடக்கு.
(பி - ம்.) [1] 'வன்பறை' [2] 'றளப்பரு மளக்க' (ககஉ)

306 வேர் - வியர்வை. தீர்த்தன் - திருமால்.
(பி - ம்.) [1] 'பொடித்த' [2] 'றறிந்தவர்க் கவர்தம் சிந்தைகள்' (ககங)

307 பண்ணை - ஆடவர் கூட்டம். ஆயம் - மடவார் கூட்டம். திரள் - தோழிமார் கூட்டம். பாங்கர் - வேறு இடங்களிலும். இழுது - நெய், வெண்ணெய். நானம் - கஸ்தூரி. சுண்ணம் - வாசனைப் பொடி. மு. (தி.வ.) 'வண்ணமாடங்கள்.' (ககச)

308 இராமன் பிறந்தபின் பன்னிரண்டு நாள் திருவிழா. "பத்து நாளுங் கடந்த விரண்டாநாள்' (பெரியாழ் 1 : 1 : 8.) தாவுஇல் - அழிவில்லாத. (பி - ம்.) [1] 'முணர்ந்திலதாவர்' [2] 'மதிப்பான்' (ககடு)

309 காம - மூதலை. எய்த்து - இளைத்து. மெய்ப்பொருள் - யானை ஆதி மூலமே என்றது தம்மையே என்றெண்ணி வந்ததை நினைத்துத் திருமாலே மெய்ப் பொருள் என்றார். இதுமுதல் நான்கு கவிகளில் பெயருக்கேற்ற எதுகை அமைந்தது நயம். (ககசு)

310 கரதல முற்றெளிர் நெல்லி கடுப்ப
விரத மறைப்பொருண் மெய்ந்நெறி கண்ட
வரத [1]னுனித்திட மற்றைய வொளியைப்
பரத னெனப்பெயர் பன்னின னன்றே.

311 உலக்குநர் வஞ்சக [1]ரும்ப ருயர்ந்தார்
நிலக்கொடி யுந்துயர் நீத்தன ளிந்த
விலக்கரு மொய்ம்பின் விளங்கொளி நாமம்
இலக்குவ னென்ன விசைத்தன னன்றே.

312 முத்துருக் கொண்டுசெம் முளரி யலர்ந்தால்
ஒத்திருக் கும்மெழி லுடையவிவ் வொளியால்
எத்திருக் குங்கெடு மென்பதை யெண்ணிச்
சத்துருக் கன்னெனச் சாற்றின னுமம்.

மன்னன் தானம் அளித்த சிறப்பு

313 பொய்வழி யின்முனி புகறரு மறையால்
இவ்வழி பெயர்க ளிசைத்துழி யிறைவன்
கைவழி [1]நிதிபொழி நதிகலே மறையோர்
மெய்வழி யுவரி [2]நிறைந்தன மேன்மேல்.

---

310 கரதல முற்றெளிர் நெல்லி கடுப்ப : 'கையுறு நெல்லியங்கனியிற் காண்டியால்' (ஞா. 5 : 25.) [நுனித்திடம் - வேத நுனியிற்றிடமாகிய; நுனித்த இடம் நுனித்திடமென நின்றதுமாம். மற்றைய ஒளியை - மிஞ்சிய ஒளியை.] வரதன் பரதனெனப் பெயரிட்டான். வரதன் - வசிட்டன். 'வரதன் உதித்திடு' என்ற பாடத்துக்கு, 'திருமால் அவதரித்த பிறிதோர் ஒளியை' என்பது பொருள். மெய்ந் நெறிகண்ட வரதன்: 'மெய்ந்நெறி நோன்மையன்' (6) இங்கே பரதனே ஒளி என்றமைக் கேற்ப இராமபிரானே 295-ஆம் செய்யுளிலும் இலக்குவனையும் சத்ருக்கனனையும் முறையே 311-2-ஆம் செய்யுட்களிலும் கம்பர் ஒளி என்பார்.

(பி - ம்.) [1] 'னுதித்திடு' (ககஎ)

311 உலக்குநர் - அழிபவர். நிலக்கொடி - பூமிதேவி. சக்கரரேகை என்ற அடையாளத்துடன் கூடியவனுகலால் இலக்குமணன் என்ற பெயரை யுடையவனுனன் என்று கூறுவர். (உத்தர புராணம். பருவம், 67, சுலோகம், 152); 'மறுவொடு பெயரிய மதலை' (பெருங். ஈ. 24 : 92.)

(பி - ம்.) [1] 'ரும்பரு மூய்ந்தார்' (ககஅ)

312 சத்துருக்கனன் நிறம் வெள்ளை; 746. பாஞ்சசன்னியத்தின் அமிசமாதல் பற்றி வெள்ளை நிறம். [முத்தானது ஒரு வடிவெடுத்து அநேகஞ் செந்தாமரை பூத்தாற்போலும் அழகையுடைய ஒளியை.] திருக்கு - மாறுபாடு. (ககக)

313 மறையோர் மெய்வழி யுவரி - மறையோர் அறிவாகிய கடல்; மெய் - அறிவு; புறநா. உடு: 11, உரை; தசரதன் தானம் : 184.

(பி - ம்.) [1] 'நிதி யெனு நதி' [2] 'நிறைத் தனன்மென்மேல்' (கஉ0)

தசரதன் இராமரை உயிரென மதித்தல்

314 காவியு மொளிதரு கமலமு மெனவே
ஓவிய வெழிலுடை யொருவனை யலதோர்
ஆவியு முடலமு மிலதென வருளின்
மேவின னுலகுடை வேந்தர்தம் வேந்தன்.

மக்கள் நால்வரும் வளர்தல்

315 அமிர்துகு குதலையொ டணிநடை பயிலா
திமிரம தறவரு தினகர னெனவும்
தமரம [1]துடன்வரு சதுமறை யெனவும்
குமரர்க ணிலமகள் குறைவற வளர்நாள்.

கலைகளைப் பயிலல்

316 சவுளமொ [1]டுபநய னமுமுறை தருகுற்
றிவளவ தெனவொரு [2]குறைபிறி திலவாய்
[3]உவளரு மறையினெ டொழிவற கலையும்
தவண்மதி புனைபர னிகர்முனி தரவே.

317 ஆனையு மிரதமு மிவுளியு முதலா
ஏனைய பிறவுமவ் வியல்பினி [1]னடைகற்
றானுறு படைபல சிலையொடு பயிலா
வானவர் தனிமுதல் கிளையொடு வளர.

---

314 காவி - நீலோற்பலம். ஓவிய எழிலுடை ஒருவன்: 'ஓவியஞ் சுவை கெடப் பொலிவதோ ருரு' (1139); 'ஓவியத் தெழுத வொண்ணு உருவத்தாய்' (சு. 5 : 78.) இராமபிரான் தசரதருக்கு உயிர் : 337, 347, 1139; 2.3 : 20, 32; 5 : 60; இராமன் தசரதருக்கு வெளியில் உலாவும் பிராணன் என்பர் வான்மீகி. (கஉக)

315 அமிர்து உகு குதலை. திமிரம் - இருள். திமிரமது; அது: பகுதிப் பொருள் விகுதி. தினகரன் - சூரியன்; அரசர்க்கு உவமை: புறநா. சு : 15-6; ஙி; பெரிய. மனுநீதி, 19. தமரம் - ஓசை. நால்வர்க்கும் காலு வேதம் உவமை : 747, 1145, 'மறை நான் குருவெடித் தென்ன' (பாகவத 523.)

(பி - ம்.) [1] 'துடன் வளர்' (கஉஉ)

316 தருகுற்று - செய்வித்து. இ அளவதுஎன - இந்த அளவின தென்று. உவள் - நடுக்கம். தவள் = தவளம் - வெண்மை. வசிட்டர் நால்வருக்கும் வித்யா குரு; 748; உ. 12 : 123.

(பி - ம்.) [1] 'பெநயம் விதிமுறை' [2] 'கரைபிறி' [3] 'உவடறு' (கஉங)

317 இவுளி - குதிரை. மற்றப் படைகளிலும் வில்லுக்குச் சிறப்புத் தோன்ற, 'சிலை யொடு பயிலா' என்றார். கிளை - சகோதரர்.

(பி - ம்.) [1] 'னடையுற்' (கஉச)

மக்களைப்பற்றி முனிவராதியோரின் நம்பிக்கை

318 அருமறை முனிவரு மமரரு மவனித்
திருவுமிந் நகருறை செனமுநம் மிடரோ
டிருவினை துணிதரு [1]மிவர்களி னிவணின்
றிருபொழு தகல்கில முறையென வுறுவார்.

இராமரும் இலக்குவனும் பிரியாமற் பழகுதல்

319 ஐயனு மிளவலு மணிநில மகடன்
செய்தவ முடைமைச டெரிதர [1]வனமும்
மைதவழ் பொழில்களும் வாவியு மருவி
நெய்குழ லுறுமிழை யெனநில திரிவார்.

பரதனும் சத்துருக்கனனும் சேர்ந்தொழுகுதல்

320 பரதனு மிளவலு மொருநொடி பகிரா
திரதமு மிவுளியு மிவரினு மறைநூல்
உரைதரு பொழுதினு மொழிகில ரெனையாள்
வரதனு மிளவலு மெனமரு வினரே.

பல்லோரின் மகிழ்ச்சியும் வாழ்த்தும்

321 வீரனு மிளைஞரும் வெறிபொழில் களின்வாய்
ஈரமொ [1]டுரைதரு முனிவர ரிடைபோய்ச்
சோர்பொழு [2]தணிதரு துறைநக ரெதிராக்
கார்வர வலர்பயிர் பொருவுவர் களியால்.

---

318 சனமும் என்பது மோனை நோக்கிச் செனமும் என்று வந்தது. உறை - உறைதல்.

(பி - ம்.) [1] 'மிவரினி திவணின்' (கஉடு)

319 ஐயனும் இளவலும் - இராமலட்சுமணர்கள். செய்தவம் உடைமைகள் - தவத்தினாற் பெற்ற வளங்கள். ஐயனும் இளவலும் தெரிதர திரிவார். 'பூமியினுடைய செய்தவத்தின் உடைமைகள் இராமலக்குமணர்க்கென்பது உலகத்துக்குத் தெரிய' என்றலுமாம். நெய் குழலுறும் இழையென - நெய்யும் குழலுடனே பொருந்தி, விடாது திரியும் நூலிழை போல; 'பாவிடை யாடி குழல்போற் சுரந்து' (திருவா. அடைக்கலப். 8); 'பாவிடு குழலி னுயிடைத் திரிதர' (பெருங். ச. 4:39); 'பாவிற் குழல் போல, நின்றழலுங் கொள்கைத்தே நெஞ்சு' (நள. சுயம். 77).

(பி - ம்.) [1] 'நதியும்' (கஉக)

320 பரதனும் இளவலும்: உ. 2:57. பகிராது - பிரியாமல். எனையாள் வரதன் : 218, குறிப். (கஉஎ)

321 வீரன் - இராமபிரான்; மகாவீரனென்று வழங்கப்படுவார். ஈரம் - அருள். முனிவருக்குப் பயிர் உவமை.

(பி - ம்) [1] 'டுறைதரு' [2] 'தணிநகர் துறுகுவ ரெதிர்வார்' (கஉஅ)

322 ஏழைய ரேனவரு மிவர்தட முலேதோய்
கேழ்கிளர் மதுகையர் கிளேகளு மிளேயார்
வாழிய ரெனவவர் மனனுறு கடவுட்
டாழ்குவர் கவுசலே தசரத னெனவே.

இராமருக்கும் இலக்குவனுக்கும் உவமை

323 கடறரு முகிலொளிர் கமலம தலரா
வடவரை யுடன்வரு செயலென மறையும்
தடவுத லறிவரு தனிமுத லவனும்
புடைவரு மிளவலு மென[1]நிகர் புகல்வார்.

இராமரின் நலம் உசாவும் இயல்பு

324 எதிர்வரு மவர்களே யெனேயுடை யிறைவன்
முதிர்தரு கருணேயின் முகமல ரொளிர
எதுவினே யிடரிலே யினிதுறும் மனேயும்
மதிதரு குமரரும் வலியர்கொ லெனவே.

---

322 ஏழையர் - பெண்கள். இவர்தடமுலே தோய் மதுகையர் என்றது அம்மாதர்களின் கணவர்களே. மதுகை - வெற்றி. இளேயார் - இளேயவர் களாகிய இந்நான்கு மக்களும். அந்நகரத்திலுள்ள ஆணும் பெண்ணும் தச ரதனேயும் கோசலேயையும் ஒத்தனர்; 2.3:66. (கஉசு)

323 கமலம் பூத்த முகில் இராமபிரானுக்கு : 205, குறிப். பொன்னிற மாதல் பற்றி வடவரை இலக்குவனுக்கு உவமை. இராமருக்குக் கமலம் பூத்த கடலும் இலக்குவனுக்கு வடவரையும் : 'மார்க் கடஞ் சூழ்ந்த வைப்பி னிளேயவன் மருங்கு காப்ப, நாற்கட லுதித்த பாரி ளுயகன் புதல்வனுமப் பாற்கடல் சுற்ற விற்கை வடவரை பாங்கு நிற்பக் கார்க்கடல் கமலம் பூத்த தெனப்பொலி வானேக் கண்டான்' (சு. 4:132); 'வில்லேந்து மெனிற் செம் பொற் பருவரையு நெடுவெள்ளிப் பருப்பதமும் போல்வார்கள், இருவரையு மிருவர்க்கங் கிளேயாளு மீன் றெடுத்தாள்' (746.)

(பி - ம்.) [1] 'நனி புகல்வார்' (கஉ0)

324 எனேயுடை யிறைவன் : 218. குறிப்பு. எதுவினே - என்னல் உமக்கு ஆகவேண்டிய வினேயாது? உம் தொழில் யாது? என்றலுமாம். இட ரிலே என்றதன் பின் கொல் என்பதனேக் கூட்டுக. ஒருவரைச் சந்தித்து அவர் பேசுவதற்கு முன் குசலம் விசாரிக்கின்றவர் பூர்வபாஷி எனப் பெறு வர்; வான்மீகி இராமபிரானே இங்ஙனம் கூறுவர். பால. சர்க்கம், 18. (கஉக)

உசாவப்பட்டவரின் மறுமொழி

325 அஃதைய நினையெம தரசென வுடையேம்
இஃதொரு பொருளல வெமதுயி ருடனேழ்
மகிதல முழுதையு முறுகவி மலரோ
னுகுபக லளவென வுரைசனி [1]பகர்வார்.

வேறு

தசரதனது பெருமகிழ்ச்சி

326 இப்பரி சணிநக ருறையும் யாவரும்
மெய்ப்புகழ் புனைதர விளைய வீரரும்
தப்பற வடிமலர் தழுவி யேத்துற
[1]மூப்பரம் பொருளினு முதல்வன் வைகுறும்.

327 அரசர்தம் பெருமக னகிலம் யாவையும்
விரசுறு தனிக்குடை விளங்க வென்றிசேர்
முரசொலி கறங்கிட முனிவ ரேத்துறக்
கரைசெய லரியதோர் களிப்பின் வைகுநாள்.

திருவவதாரப் படலம் முற்றும்.

---

325 அஃது - அப்படியே; சீவக. 1834, 2344. இ மல ரோன் - இம் மலரோன்; பிரமன் பலராதலின் இம்மலரோன் என்றார்; மலரோன் உகு பகல் அளவு - பிரம கற்பம் வருமளவும்.

(பி - ம்.) [1] 'புரிவார்' (கஙஉ)

326 மூப்பரம் பொருளினு முதல்வன் - திரிமூர்த்திகளுள் முதல்வனாகிய இராமன் : 1317.

(பி - ம்.) [1] 'மூப்பரம் பொருளுக்கு முதல்வன்' (கஙஙஉ)

327 பெருமகன் அரசன், தசரதன்; சீவக. 183. அகிலம் யாவையும் விரசுறு தனிக்குடை : 190. கரை - சொல்; 'அறங் கரை நாவின்' (தொல். பாயிரம்.) கரை செயல் - சொல்லுதல், வரம்பு கட்டுதல்; 336, 1207, 1268 கரை செயலரியதோர் களிப்பு : 1393. (கஙச)

—:o:—

6. கையடைப் படலம் *

328 நனைவருங் கற்பக நாட்டு நன்னசர்
அனைவரு [1]மனிதர வயிர்க்குஞ் சிந்தையால்
நினையவு மரியது விசும்பி னீண்டதோர்
புனைமணி மண்டபம் பொலிய மேயினான்.

தசரதன் வீற்றிருந்த சிறப்பு

329 தூயமெல் லரியணைப் பொலிந்து தோன்றினான்
சேயிரு விசும்பிடைத் திரியுஞ் சாரணர்
நாயக னிவன் கொலென் றயிர்த்து நாட்டமோர்
ஆயிர மில்லையென் றையு நீங்கினார்.

---

*கையடை - அடைக்கலமாக ஒப்புவித்தல். 'உம்மகன்கையடை நோக்கு மீங்கென்னான்'; 'தொழிலுந் தூயன்.....புலவ மற்றான், கையடையாகும்'; 'சிற்கிவள் கையடை' (உ. 1:87, சு. 5:151, 7:92.) ஓர் ஏட்டில் இப்படலத்தின் தொடக்கத்தில்,

'அப்பெரும் திருவொடு மகில நாதனென்
றெப்பெரும் புவனமு மிறைஞ்சி யேத்தவே
தப்பருந் தருமமுந் தயாவுந் தாங்கியே
ஒப்புர வுடனவ னுவந்து வாழுநாள்'

என்ற செய்யுள் காணப்படுகிறது.

328. நனை - பூமொட்டு; தேனுமாம். அயிர்க்கும் - 'இம் மண்டபம் இந்திரனுடைய சுதன்மையோ' என்று ஐயங் கொள்ளுதற்குக் காரணமான. அயிர்க்கும் மண்டபமென இயைக்க.

(பி - ம்.) 1 'மனிதரு மயிர்க்குஞ்' (க)

329. சாரணர் - துதி செய்து திரியும் தேவர்கள். தேவர் தசரதனை இந்திரன் என்று அயிர்த்தல்: 897. இந்திரன் உவமை; 1197, 1290.

3—4: 'இந்திர னென்னி னிரண்டே கண்ணோ ரூர்ந்த. அந்தரத்தா னென்னிற், பிறையில்லை - அந்தரத்துக், கோழியா னென்னின் முக மொன்றே கோதையை, ஆழியா னென்று ணரற் பாற்று' 'தொல். உவம. 32, பேர். மேற்.) (உ)

கோசிகர் வருகை

330 மடங்கல்போன் மொய்ம்பினன் முன்னர் மன்னுயிர்
அடங்கலு முலகும்வே றமைத்துத் தேவரோ
டிடங்கொணன் முகனையும் படைப்ப னீண்டெனத்
[1]தொடங்கிய தனியுறு முனிவன் றோன்றினன்.

வேறு

தசரதன் ஆற்றிய உபசாரம்

331 வந்துமுனி யெய்ததலு மார்பிலணி யாரம்
அந்தர தலத்திரவி யஞ்சவொளி விஞ்சக்
கந்தமல ரிற்கடவு டன்வரவு காணும்
இந்திர னெனக்கடி தெழுந்தடி பணிந்தான்.

332 பணிந்துமணி செற்றபு குயிற்றியவிர் பைம்பொன்
அணிந்ததவி சிட்டதி னருத்தியொ டிருத்தி
இணைந்தகம லச்சர ணருச்சனைசெய் தின்றே
துணிந்ததென் வினைத்தொட ரெனத்தொழுது சொல்லும்.

333 நிலஞ்செய்தவ மென்றுணரி னன்றுநெடி யோயென்
நலஞ்செய்வினை யுண்டெனினு மன்றுநகர் நீயான்
வலஞ்செய்து [1]வணங்கவெளி வந்ததிது முந்தென்
குலஞ்செய்தவ மென்றினிது கூறுமுனி கூறும்.

---

330 அடங்கலும் - முழுதும். இடம் - செல்வம்; பெருமை; 97. மன்னுயிரடங்கலு..... .....முனிவன்: 684; ச. 1: 5, கூ. 2:86. முனி - மௌனசீலன், திரிகால ஞானி.

விசுவாமித்திரர் வரும்போது தசரதன் தன் குமாரரின் மணத்தைக் குறித்துச் சபையில் ஆலோசித்து வந்தான் என்று வான்மீகம் கூறும். (பி - ம்.) [1]'தொடங்கிய நனியுறு', 'தொடங்கிய கோசிக' (கூ)

331 எய்ததலும்; உம்: உடனிகழ்ச்சி. விரிவு பற்றி மார்புக்கு ஆகாயம் உவமை. அஞ்ச - தோற்ப; பிங்கலம். பிரமன் கோசிகருக்கு உவமை; 422; இது வான் மீகத்தில் உள்ளது. (ச)

332 செற்றபு - நெருக்கி. குயிற்றி - பதித்து. அருத்தி - ஆசை. இணைந்த - ஒன்றை ஒன்று ஒத்த. (ஞ)

333 தொடர் - கட்டு. நெடியோய்: பெரியோய் என்ற பொருளது. எளிவந்ததிது - என் முயற்சி இன்றி எளிதாக வந்த இது. மு; 253. (பி - ம்.) [1]'வணங்க விவண்' (கூ)

வேறு

கோசிகரின் புகழுரை

334 என்னனைய முனிவர்களு மிமையவரு மிடையூறென்
றுடைய ராணைப்
பன்னகமு நகுவெள்ளிப் பனிவரையும் பாற்கடலும்
பதும பீடத்
தன்னகருங் கற்பகநாட் [1]டணிநகரு மணிமாட
வயோத்தி யென்னும்
பொன்னகரு மல்லாது புகலுண்டோ விகல்கடந்த
புலவு வேலோய்.

335 இன்றளிர்க்கற் பகநறுந்தே னிடைதுளிக்கு நிழலிருக்கை
யிழந்து [1]போந்து
நின்றளிக்குந் [2]தனிக்குடையி னிழலொதுங்கிக் குறையிரந்து
நிற்ப நோக்கிக்
குன்றளிக்குங் [3]குலமணித்தோட் சம்பரனைக் குலத்தோடுந்
தொலைத்து நீகொண்
டன்றளித்த வரசன்றே புரந்தரனின் றுள்கின்ற
தரச வென்றோன்.

---

334 முனிவரை முற்கூறியது, அவர்கள் தேவரினும் சிறப்புப் பெற்றுள்ளமையின். 'யாக தீட்சையிலுள்ள யான் இடையூறு செய்யும் அரக்கரைச் சபித்தால் என் விரதம் கெட்டுவிடும்; ஆதலால் வரும் இடையூற்றை நீக்க உன்னை நாடி வந்தேன்' என்று வான்மீகம் கூறுவதை உட்கொண்டு, 'என்னனைய முனிவரரும்' என்றார். பல மலைகளை ஏளனஞ் செய்யும் வெள்ளிப் பனி வரை. பன்னகமும் என்பதை இடையூறு நீக்கும் இடங்களில் ஒன்றாகக் கொண்டு முருகக் கடவுளின் இருப்பிடமான பல மலைகள் என்று பொருள் கூறுவாருமுளர். புலவுவேலோய்: சாதியடை.

(பி - ம்) [1]'டணிகவரு மணிமாட' (எ)

335 நின்தளிக்கும் குடை - உனது செழித்த குடை; நின்று அளிக்கும் குடை-நிலைத்து நின்று உயிர்களைக் காக்கும் உன் குடை. சம்பரனைத் தசரதன் தொலைத்தது: உ. 2:81, 9:52: கூ. 4:23, 8:198; சூ. 2:82.

(பி - ம்) [1]'போத்துன்' [2]'தனிக்குடைக் கீழதிலொதுங்கி' [3]'குருமணித் தோட்' (அ)

முனிவர் இடும் பணியாது என்று மன்னன் கேட்டல்

336 [1]உரைசெய்த வளவிலவன் முகநோக்கி யுள்ளத்தி
னுருவ ராலும்
[2]கரைசெய்தற் கரியதொரு பேருவகைக் கடல்பெருகக்
கரங்கள் கூப்பி
அரைசெய்தி யிருந்தபய னெய்தினன்மற் றினிச்செய்வ
தருளு கென்று
முரைசெய்து கடைத்தலையான் முன்மொழியப் பின்மொழியு
முனிவ னுங்கே.

கோசிகரின் கூற்று

337 தருவனத்துள் யானியற்றுந் [1]தவவேள்விக் கிடையூறுத்
தவஞ்செய் வோர்கள்
வெருவரச்சென் றடைகாம வெகுளியென நிருதரிடை
விலக்கா வண்ணம்
செருமுகத்துக் காத்தியென [2]நின்சிறுவர் நால்வரினுங்
கரிய செம்மல்
ஒருவனைத்தந் திடுதியென [3]வுயிரிரக்குங் கொடுங்கூற்றி
னுளையச் சொன்னன்.

---

336 'உரை - தோத்திரம்' (ஓர் உரை.) முகநோக்கி மொழிதல்: உ. 12:69. கரை செய்ய வரிய உவகைக்கடல்: 327, குறிப். முரைசு-முரசு. முரை செய்து கடைத்தலை: 198. கடைத்தலை - தலைக்கடை. (கூ)

337 தருவனம் - மரமடர்ந்த வனம்; சித்தியைத் தரும் வனம்; ஸித்தவனம் என்பது வடமொழியிற் கண்டது. தவஞ் செய்வார்க்குக் காமம் வெகுளி விலக்கென்பது விசுவாமித்திரரின் ஸ்வானுபவம். காமம் வெகுளி போன்றூர் மாரீசனும் சுபாகுவும். முனிவரின் வேள்விக்குத் தாடகை இடையூறு செய்கிறாள் என்று வான்மீகர் குறிக்கவில்லை. அங்ஙனமே கம்பரும் குறிப்பினால் மாரீச சுபாகுகளை மட்டும் குறிப்பித்தார். தாடகையும் தம் யாகத்துக்கு இடையூறு செய்பவள் என்பர் பின்; 394. காம வெகுளிகளைக் கூறியதனால் உபலட்சணத்தால் மயக்கமும் பெறப்படுமென்று சிலர் கூறுவர்; மயக்கம் தாடகைக்கு. கரிய செம்மல்: 418, 564; உ. 2:55. உயிர் இரக்கும் கூற்று; இராமபிரான் தசரதனுக்கு உயிர்; 314, குறிப்.

இராமபிரானை அனுப்ப வேண்டுமென்று கேட்கும் சந்தர்ப்பத்தில் விசுவாமித்திரர் இராமருடைய பராக்கிரமத்தையும், அனுப்புவதால் அவருக்கு வரக்கூடிய மேன்மையையும் கூறிக் கேட்கிறார் என்பது வான்மீகம்.

(பி - ம்.) [1]'தகைவேள்விக்' [2]'நின்சிறுவரானவரினும்' [3]'வுயிரிழுக்குங்' (கூ)

மன்னவன் வருத்தம்

338 எண்ணிலா [1]வருந்தவத்தோ னியம்பியசொன் மருமத்து
ளெறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையிற் கனனுழைந்தா லெனச்செவியிற்
புகுத லோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த வாருயிர்நின்
றாச லாடக்
கண்ணிலான் பெற்றிழிந்தா னெனவுழந்தான் கடுந்துயரங்
கால வேலான்.

மன்னன் தான் வருவதாகக் கூறல்

339 தொடையூற்றுந் தேன்றுளிக்கு நறுந்தாரா ளொருவண்ணந்
துபர நீங்கிப்
படையூற்ற [1]மிலன்சிறிய னிவன்பெரியோய் பணியிதுவேற்
பனிநீர்க் கங்கை
புடையூற்றுஞ் சடையானும் [2]புரந்தரனு நான்முகனும்
புகுந்து செய்யும்
இடையூற்றுக் கிடையூறு யான்காப்பென் பெருவேள்விக்
கெழுக வென்றான்.

---

338 எண் - ஆலோசனை, அளவு: 'எண் நிலா' என்றுமாம். மருமம் - உயிர் நிலை. புண் என்றது ஒரு முனிவன், 'உன் மைந்தன் பிரிவினால் நீ உயிர் விடுக' என்று தசரதனுக்கு இட்ட சாபத்தாலுண்டான துன்பம்; உ 4:73-83. வேல் பாய்ந்த புண்ணிற் கனல் பாய்ந்தாலென்ன: உத்தர. 14:18; நற். கூ. 1-2; கலி. அஉ: 30; தஞ்சை. 113. ஊசலாடல் - போவதும் வருவதும் ஆதல்; புதல்வன் தசரதன் கண்ணுக்கு: 'என் மகனென் கண்', 'விழிக்குங்கண் வேறில்லா.....என் கான்முளையை', 'விழிபோயிற் றின்றென்னூர்' (உ. 3:32, 4:49, 86.) கண்ணிலான் பெற்றிழிந்தான்: உத்தர. 14:18.

(பி - ம்.) [1]'வருங்குணத்தோ னியம்பிய' (கக)

339 தொடை - தேனடை; 'தீந்தேன் றொடை கீறி' (சீவக. 31.) சிறியன் - பதினாறு பிராயமும் முற்றப் பெறாதவன்; அப்பொழுது இராமனுக்குப் பிராயம் 12 என்பர் வான்மீகியார்.

திருமால் இங்கே கூறுமல் விட்டது அவர் வேள்வி முற்றுவித்து உலகங் காத்தலின் என்பர். இடையூற்றுக் கிடையூறு: 'இடும்பைக் கிடும்பை படுப்பர்' (குறள், 623.)

(பி - ம்) [1]'மிலன்சிறிய னவர் பெரியோர்' [2]'புரந்தரனும் வெகுண்டெழுந்து' (கஉ)

கோசிகரின் சினம்

340 என்றனனென் றலுமுனிவோ [1]டெதிர்ந்தனன்மண் படைத்தமுனி
யிறுதிக் காலம்
அன்றெனவா மெனவிமையோ ரயிர்த்தனர்மேல்
வெயில்கரந்த தங்கு மிங்கும்
நின்றனவுந் திரிந்தனமே னிவந்தகொழுங்
கடைப்புருவ நெற்றி முற்றச்
சென்றனவந் தனநகையுஞ் சிவந்தனகண்
ணிருண்டனபோய்த் திசைக ளெல்லாம்.

வேறு

வசிட்டர் தசரதனுக்குக் கூறுதல்

341 கறுத்த மாமுனி கருத்தை யுன்னிநீ
பொறுத்தி யென்றவற் புகன்று நின்மகற்
[1]குறுத்த லாகலா வுறுதி யெய்துநாள்
மறுத்தி யோவெனு வசிட்டன் கூறுவான்.

342 பெய்யு மாரியாற் பெருகும் வெள்ளம்போய்
மொய்கொள் [1]வேலிவாய் முடுகு மாறுபோல்
அய்ய நின்மகற் களவில் விஞ்சைவந்
தெய்து [2]காலம்வந் தெதிர்ந்த தென்னவே.

---

340 மண்படைத்த முனி: 330. அங்குமிங்கும்: சு. 2:143. இறுதிக் காலம் - யுகாந்தம். 'மண்படைத்த முனி' என்பதற்குப் பிரமன் என்று பொருள் கொண்டு 'அப்பிரமன் இறுதிக்காலம் அன்றென இமையோர் ஆம் என' என்று பொருள் கொள்வாருமுண்டு. வருடக் கணக்கு முடியாமையின் அன்றெனவும் ஊழிக் காலத்துக்குரிய செயல்கள் நிகழ்ந்தமையின் ஆம் எனவும் இமையோர் அயிர்த்தனர். நின்றனவும் திரிந்தனவும் - சராசரங்கள்; இவை மண்ணிலும் விண்ணிலும் உள்ளவை. புருவம் நெற்றியிற் செல்லல்: 1071. நகை - வெகுளிநகை; தொல். மெய். சூ 4, பேர். 'எடுத்த சீற்றம்' என்பர் பின்; 345. இச் செய்யுள் தொடை முரண். ஒப்பு: 496-7.

(பி - ம்.) [1] 'டெழுந்தனன் பண்டடைந்த முனி' (கஙு)

341 கறுத்த - கோபித்த. உன்னி - ஆராய்ந்து. உறுதி - பயன்; மந்திரமும் அஸ்திரமும் பெறுதலும் சீதையை மணத்தலும் பயன்.

(பி - ம்.) [1] 'குறுத்தலாதலாலுறுதி' (கசு)

342 (பி - ம்.) [1] 'வேலிமேல்' [2] 'காலமின் றெதிர்ந்த' (கடு)

தசரதன் கட்டளைப்படி இராமன் சபைக்கு வருதல்

343 குருவின் வாசகங் கொண்டு கொற்றவன்
திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்றென
வருக வென்றன ரென்னி லோடும்வந்
தருகு சார்ந்தன னறிவி னும்பரான்.

மன்னன் மக்களிருவரையும் கையடை வழங்கல்

344 வந்த நம்பியைத் தம்பி [1]தன்னெடும்
முந்தை நான்மறை முனிக்குக் காட்டிநற்
றந்தை நீதனித் தாயு நீயிவர்க்
கெந்தை தந்தன னியைந்த செய்கென்றான்.

கோசிகர் வாழ்த்தி விடை கொள்ளல்

345 கொடுத்த மைந்தரைக் கொண்டு [1]சிந்தை முந்
தெடுத்த சீற்றம்விட் டினிது வாழ்த்திமேல்
அடுத்த வேள்விபோய் [2]முடித்து நாமெனு
நடத்தன் மேயினு னவைக்க ணீங்கினான்.

இராமர் ஆயுதம் தாங்குதல்

346 வென்றி வாள்புடை விசித்து மெய்ம்மைபோல்
என்றுந் தேய்வுறுத் தூணி யார்த்திரு
குன்றம் [1]போன்றுயர் தோளிற் கொற்றவில்
ஒன்று தாங்கினு லுலகந் தாங்கினான்.

---

343 திருவின் கேள்வன்: உ. 1:29, இங்ஙனம் சொன்னது வசிட்டர் கூறிய வார்த்தையை நினைந்து. கொணர்க என்றது ஏவலாளரை நோக்கி. அறிவின் உம்பரான்: 439, கூ. 1:1. (கசு)

344 வந்த நம்பியைத் தம்பி தன்னெடும்: 319—20; உ. 11:68. தந்தை நீ: 819, அடி 3-4; அடைக்கல மொழி. இப் படலத்தின் உயிர் நிலைச் செய்யுள் இது. கொடுக்கும்போது கோசலையும் உடனிருந்தனள் என்பது வான்மீகம். (கஎ)

345 நவைக்கண் - குற்றத்திலிருந்து; உருபு மயக்கம்.
(பி - ம்.) [1]'சிந்தை வந்தெடுத்த' [2]'முடிப்பதாமெனு' [3]'னவைகணீங்கினான்' (கஅ)

346 தேய்வுறு - கேடில்லாத; தேய்வுறுத் தூணி: 'தொலைவிறாணிகள்' (கூ. 7:54); இதனை அட்சயத்தூணி என்பர். இரு குன்றம் போன்றுயர் தோளிற் றூணியார்த்து; தூணி இரண்டென்பர் வான்மீகியும். வில்லைத் தாங்கியது இடக்கையில்; 396. உலகந் தாங்கினான் - ஊழி முடிவில் திரு வயிற்றில் வைத்துத் தாங்கினான்.
(பி - ம்.) [1]'போன்றுள தோளிற்' (கக)

அரச குமாரர் முனிவரைத் தொடர்ந்து செல்லல்

347 அன்ன தம்பியுந் தானு [1]மையனும்
மன்ன னின்னுயிர் வழிக்கொண் டாலெனச்
[2]சொன்ன மாதவற் றொடர்ந்த சாயைபோற்
பொன்னின் மாநகர்ப் புரிசை நீங்கினர்.

மூவரும் சரயு நதியை அடைதல்

348 வரங்கண் மாசறத் [1]தவஞ்செய் வார்கள்வாழ்
புரங்க ணேரிலா நகரி நீங்கிப்போய்
அரங்கி லாடுவார் சிலம்பி னன்னநின்
றிரங்கு வார்புனற் சரயு வெய்தினர்.

மூவரும் ஆற்றைக் கடத்தல்

349 தாழு மாமழை தவழு நெற்றியாற்
சூழி யானையிற் றோன்று மால்வரைப்
பாழி மாமுகட் டெச்சிப் பச்சைமா
ஏழு மேறப்போ யாறு மேறினர்.

---

347 அன்ன தம்பி என்றது, இராமபிரானுடைய போர்க்கோலம் போன்ற போர்க்கோல முடையவனென்றபடி. ஐயன் - தந்தை. உயிர் இராமன்: 314. குறிப். வழிக்கொண்ட உயிர் மீட்டும் வந்து கூடுவது 1139 ஆம் செய்யுளிற் கூறப்படும். சொன்ன மாதவன் 'அடுத்த வேள்வி போய் முடித்தும்' எனச் சொன்ன விசுவாமித்திரரை. சாயைபோல் தொடர்ந்துச் செல்லல்: 'நிழலினீங்கான்' (நன். சிறப்.); 1195; சாயை என்ற தனால் இராம லட்சுமணர் முனிவருக்கு முன் போகவில்லை என்பது குறிப்பு. முதலில் முனிவரும் இடையில் இராமனும் பின்னால் இலக்குவனுமாகச் சென்றார்கள் என்பது வான்மீகம்.

(பி - ம்.) [1]'மையன்பின்' [2]'துன்னுமாதவற்' (உ0)

348 'வரங்களைப் பெற்று' என ஒரு சொல் வருவிக்க. புரங்கள் - அளகை, அமராவதி முதலியன. புரங்கள் நேரிலா நகரம் இது: 107. சிலம்பின் ஒலி அன்னக் குரலுக்கு: 171, குறிப். அரங்கின் ஆடுவார் - நாடகக் கணிகையர். (பி - ம்.) 'தவம் செய்தோர்கள் வாழ்' (உக)

349 மேகம் மூடபடாத்துக்கு உவமை: பெருங். உ. 27:118. மால் வரை - அஸ்தகிரி. பச்சை மா ஏழு: உ. 6:53, வி. பா. வசந்த. 1. ஆறு - சரயு. கோசிக முனிவர் இராசகுமாரர்களுக்குப் பலை அதிபலை என்ற மந்திரங்களை உபதேசித்தது சரயு நதிக் கரையில் என்பர் வான்மீகி. (உஉ)

மூவரும் ஒரு சோலையில் தங்குதல்

350 கரும்பு கால்பொரக் கமுகின் வார்ந்ததேன்
வரம்பின் மீதிடு மருத வேலிவாய்
அரும்பு கொங்கையா ரம்மெ லோதிபோற்
சுரும்பு [1]சூழ்வதோர் சோலை [2]வைகினர்.

இராமர் அச்சோலையின் வரலாற்றை வினவல்

351 தேவு மாதவற் றொழுது தேவர்தந்
நாவு ளாகுதி நயக்கும் வேள்வியாய்த்
தாவு மாபுகை தவழுஞ் சோலைகண்
டியாவ தீதென்ற னெவர்க்கு மேனின்றான்.

---

350 கால்பொர - காற்று அடித்தலால். கமுகின் வார்ந்ததேன்: 54, குறிப். அம்மெல்லோதி: சீவக. 3026. சோலைக்குக் கூந்தல்; வாசனை, இருள், வண்டுகளின் ஆரவாரம் இவை பொதுத் தன்மைகள்; திருவால. 312; வி. பா. சூது போர். 116.

(பி - ம்.) [1]'வாழ்வதோர்' [2]'எய்தினர்'

சில பிரதிகளில் 349-50 ஆம் கவிகள் முன்பின் மாறியுள்ளன. (உரை)

351 தேவு மாதவன்: தேவ விருடி; தேவு-தெய்வத்தன்மை; சீவக. 1. தேவர்தம் நா - அக்கினி. நயக்கும் - விரும்பிக் கொடுக்கும்.

ஓர் ஏட்டில் பின்வரும் ஒன்பது பாடல்கள் இச் செய்யுளின் பின் காணப்படுகின்றன:

1. 'இனைய சோலைமற் றியாவ தென்றுமா
முனிவ கூறென முதல்வன் கூறலும்
பனுவல் வேதநூல் பகரு மாதவன்
தனுவ லாயிதன் றன்மை கேளெனை.

2. 'சம்ப ரப்பெயர்த் தான வன்னுடன்
உம்பர் கோமக னமரு டன்றநாள்
வெம்பி மற்றவன் வெற்றி கொண்டபோ
தம்ப ரம்மிழந் தவனி வந்தனன்.

3. 'அவனி வந்துமன் னவரி டந்தொறும்
தவன தென்னவே தானு ழன்றறிந்
திவனில் வேறுமற் றில்லை யெற்கெனை
உவன்வி ரும்பிவந் துந்தை நாடுரை.'

4. 'இந்த விவ்விடத் தெய்தி யிந்திரன்
சந்த வார்பொழிற் றருவெவா ரைந்தையும்
வந்து நிற்கென மன்னி னேன்கவே
மூந்த வந்துமா முரல நின்றவால்.

5. 'நின்ற சோலைவாய் நியம நித்தமும்
குன்ற லின்றியே செய்து கொண்டவன்
அன்றி யாவிருந் தரசை நண்ணியே
துன்று சோலைதா னுறைதல் சொல்லினன்.

6. 'உருவ மாறிவே றுருவ மாகியே
நிருப னன்குடை நிழலி னிற்றலும்
பரிவி னேக்கினீ பகர்தி யாரெனத்
தருவி னையகன் முன்வி ளம்பினன்.

7. 'சதம கன்னெனைச் சம்ப ரன்னெனும்
மதம கன்றுரந் தரசு வவ்வினன்
கதமி குந்திறற் காவ லாளவென்
விதம கன்றுவந் துன்னை மேவினேன்.

8. 'என்ற போதுதன் னிரத மேறியே
சென்று மற்றவன் சேனை யோடுகக்
கொன்று வாசவ னரசு கொள்ளவே
அன்ற ளித்துமீண் டயோத்தி யெய்தினன்.'

9. 'அன்ன தாதலி னவனில் வந்தகா
வென்னு நாமமிச் சோலை யென்றலும்
மன்னர் மன்னவன் மதலை நன்றெனப்
பின்னை நின்றுயிர்ப் பிரிய மாயினன்.'

(கையடைப் படலம் முற்றும்.) (2-ச)

7. தாடகை வதைப் படலம்

அங்கநாடு காமனுச்சிரம வரலாறுகளை விசுவாமித்திரர் கூறல்

352 திங்கண்மே வுஞ்சடைத் தேவன்மேன் மாரவேள்
[1]இங்குநின் றெய்யவு மெரிதரு நுதல்விழிப்
பொங்குகோ பஞ்சுடப் பூளைவீ யன்னதன்
அங்கம்வெந் தன்றுதொட் டனங்கனே யாயினுன்.

353 வாரணத் துரிவையான் மதனனைச் சினவுநாள்
ஈரமற் றங்கமிங் குதுதலா லிவனைலாம்
ஆரணத் துறையுளா யங்கநா டிதுவுமக்
காரணக் குறியுடைக் காமனுச் சிரமமே.

354 பற்றவா வேதொடும் பசையறப் பிறவிபோய்
முற்றவா வுணர்வுமேன் முடுகிஞ ரறிவுசென்
றுற்றவா னவனிருந் தியோகுசெய் தனனெனிற்
சொற்றவா மளவதோ மற்றிதன் றாய்மையே.

அன்று மூவரும் அங்கே தங்கி மறுநாள் ஒரு பாலை நிலம் அடைதல்

355 என்றவந் தணனியம் பலும்வியந் தவ்வயிற்
சென்றுவந் [1]தெதிர்தொழுஞ் செந்நெறிச் செல்வரோ
டன்றுறைந் தலர்கதிர்ப்[2] பருதிமண் டிலமகன்
[3]குன்றினின் றிவரவோர் சுடுசுரங் குறுகினர்.

---

352 வீ - மலர். பூளைமலர் மென்மைக்கு உவமை, சு. 14:256. அங்கம் - உடல்; 353.

இது முதல் 386 வரை சுரம்புகு படலம் என்று ஒரு பிரதியிலிருக்கிறது.

(பி - ம்.) [1] 'எங்கண்மே லெய்யவு மரிய வம்பெய்தவன்' (க)

353 வாரணத்து உரிவையான் - யானைத்தோலைப் போர்த்துள்ள சிவபெருமான். மதனன் - களிப்பைச் செய்பவன். மதனனது அங்கத்தைத் தன்பாற் பெற்றிருத்தலின் அங்கநாடு. அங்கம் - எலும்பு. (உ)

354 பற்றுஅவா : பற்று - அகங்கார மமகாரம்; அவா - ஆசை; 'பற்று உள்ளதன் மேற்று; ஆர்வம் பெறக்கடவதன் மேற்று' (சீவக. 946. நச்.) வாலுணர்வு - தூய அறிவு; (குறள், 2) 1-2 ஒப்பு : 366. வானவன் : சிவபெருமான். யோகு - யோகம். (ங)

355 செந்நெறிச் செல்வர் - முனிவர்கள். குன்று - உதயகிரி.

(பி - ம்.) [1] 'தெதிரெழுஞ்' [2] 'பகுதி' [3] 'குன்றின் வந் தணைய வோர்' (ச)

இதுமுதல் கவி 367 முடிய, பாலைநில வருணனை

356 பருதிவா னவனிலம் பசையறப் பருகுவான்
விருதுமேற் [1]கொண்டுலாம் வேனிலே யல்லதோர்
இருதுவே றின்மையா [2]லெரிசுடர்க் கடவுளும்
கருதில்வே முள்ளமுங் காணில்வே நயனமும்.

357 படியின்மேல் வெம்மையைப் பகரினும் பகருநா
முடியவே முடியமூ டிருளும்வான் முகடும்வேம்
விடியுமேல் வெயிலும்வே மழையும்வே மின்னினோ
டிடியும்வே மென்னில்வே றியாவைவே வாதவே.

358 விஞ்சுவான் மழையின்மே லம்பும்வே லும்படச்
[1]செஞ்செவே [2]செருமுகத் தன்றியே திறனிலா
வஞ்சர்தீ வினைகளான் மானமா மணியிழந்
[3]தெஞ்சினார் நெஞ்சுபோ லென்றுமா றாதரோ.

359 [1]பேய்பிளந் தொக்கநின் றுலர்பெருங் கள்ளியின்
தாய்பிளந் துக்ககா [2]ரகில்களுந் தழையிலா
வேய்பிளந் துக்கவெண் டரளமும் விடவரா
வாய்பிளந் துக்கசெம் மணியுமே வனமெலாம்.

---

356 பருதிவானவன் - சூரியன். விருது - அடையாளம். வெற்றி. வேனில் - முது வேனிற் பருவம். கருதில் வேமுள்ளம்: 2.7:38; நற். கஅச: 6, குறுந். கஉ, கரு0; குறள், 1207. 'நானிலம் வாய்க்கொண்டு நன்னீரற மென்று கோது கொண்ட, வேனிலஞ் செல்வன் சுவைத்து மிழ் பாலை (திவ். திருவிருத்தம், 26.)

(பி - ம்.) [1]'கொண்டுலாய்' [2]'லெரிமுதற் கடவுளும்' (ரு)

357 படியின்மேல் - பூமியின்மீது. நாவேம்: சீவக. 1186. முடிய - முற்றிலும். (சு)

358 மழையின் - மழையைப் போல. செஞ்செவே - மிகச் செவ்வையாக; 985, 1220. மானமாமணி: 'மான வருங்கலம்' (நாலடி. 40.) எஞ்சினார் - பிழைத்திருப்போர். மானம் இழத்தலுக்குக் காரணம் வஞ்சனையால் சிறை புகுதலோ அரசை இழத்தலோ.

(பி - ம்.) [1]'செஞ்சவே' [2]'செருமுகத் தமர்செயுந் திறனிலா வஞ்சர்' [3]'தஞ்சினார் நெஞ்சுபோ' (எ)

359 கள்ளிக்குப் பேய்; கலிங்கத். 88. கள்ளியில் அகில் தோன்றுதல்: நான்மணிக். 4; கோடீச்சர. 91. வேய் - மூங்கில். 'வெடித்த கழை விசை தெறுப்பத் தரைமேன் தாமுத்தம்' (கலிங்கத். 93.)

(பி - ம்.) [1]'பிளந்துக்க நின்' [2]'ரகிலுமோ தழையிலா' (அ)

360 பாருமோ டாதுநீ டாதெனும் பாலதே
சூருமோ டாது[3]கூ டாதரோ சூரியன்
தேருமோ [2]டாதுமா மாகமீ தேறினோர்
காருமோ டாதுநீள் காலுமோ டாதரோ.

361 கண்கிழித் துமிழ்விடக் கனலரா வரசுகார்
விண்கிழித் தொளிருமின் னனையபன் மணிவெயில்
மண்கிழித் திடவெழுஞ் சுடர்க்கண்மண் மகளுடற்
புண்கிழித் திடவெழுங் குருதியே போலுமே.

(வேறு)

362 புழுங்குவெம் பசியொடும் புரளும் போரரா
விழுங்கவந் [1]தெழுந்தெதிர் விரித்த வாயின்வாய்
[2]மூழுங்குதிண் கரிபுகு முடுகி மீமிசை
வழங்குவெங் கதிர்சுட மறைவு தேடியே.

---

360 பாரும் ஓடாது நீடாதெனும் பாலதே - 'அந்த நிலமானது அக் கினியிலே வெந்து வரவரச் சுருங்கிப்போம்; மேடாய் வளர மாட்டாது' (ஓர் உரை); அசரமாதலால் பாரும் ஓடாதென்றார். சூர் - பாலை நிலத்தின் தெய்வ மாகிய தூர்க்கை; சூருக்கும் ஓடிப்போக இடம் வேறில்லை என்பது கருத்து. தேருமோடாது; ஓடாது - பாலை வனத்தின் வெம்மைக்கு அஞ்சி உச்சியிலே ஓடாது. கார் மாகம்மீதுஏறின் நேர்ஓடாது; கார் - மேகம்; மாகம் - விண்; பாலையின் நேராக மாகமீது ஓடாது. கால் - காற்று.

(பி - ம்) [1] 'கூடாததோர் சூரியன்' [2] 'டாது மா மாகமீ தேரினோர்', 'டாதுமெய் தேரினோர் மூரிவெங்' (கூ)

361 கண்விழித்.....லராவரசு - கண்ணில் விடமுடைய பாம்பு; இது திட்டிவிடர், அழற் கணுகம், நஞ்சு விழி யரவு எனக் கூறப்படும்; இதன் விழிக்கு எதிர்ப்பட்டன அழியும்; 1265; சூ. 15:80; மணி. க:49, கக : 100, உக : 40, உங : 69, உஙு: 84; விடம் நான்குவகை: ஆசிவிஷம், தந்தவிஷம், திருஷ்டி விஷம், வாயு விஷம் (சித்தராரூடம்.) அராவரசு என்றது ஆதிசே டனை. மண் கிழித்திட - வெப்பத்தினால் பூமி பாதாள மட்டும் வெடித்திட. 3-4 : திருவிளை. நாட்டு, 19. செம்மணியின் ஒளிக்குக் குருதி உவமை.

சில பிரதிகளில் இதன்பின் பின்வரும் பாடல் காணப்படுகிறது :

'திருகிக் காய்சுரஞ் சிந்திக்கச் சிந்தைவெந்
துருகிப் போமென் னுரைசெய வேண்டுமோ
கருகிக் கண்சிவந் தண்டபின் கான்றுமண்
பருகி வெண்ணெயும் பாற்கடல் துஞ்சுமால்.' (கo)

362 யானையை விழுங்கும் நாகம் : 2.8:4, 35; சூ.7:20; 'மைந்துமலி சினத்த களிறுமத னழிக்கும், துஞ்சு மரங் கடுக்கு மாசுணம்' (மலைபடு. 260-61); 'களிறு பாந்தட் பட்டென', 'களிறகப் படுத்த பெருஞ்சின மாசு ணம்' (நற். கச: 8, உசுர: 6); 'பரிய களிற்றை யரவு விழுங்கி மழுங்க' (திருஞா. தே.); பாம்புக்கு அஜகரம் என்ற ஒரு பெயர் உண்டு. கரிமறைவு தேடி அரவின் வாய்ப்புகும். (பி-ம்.) [1] 'தெதிரெதிர்' [2] 'முழுங்கி வெங்' (கக)

363 ஏகவெங் கனலா சிருந்த காட்டிடைக்
காகமுங் கரிகளுங் கரிந்து [1]சாம்பின
மாகவெங் [2]கதிரெனும் வடவைத் தீச்சுட
மேகமுங் கரிந்திடை விழுந்த போலுமே.

364 கானகத் தியங்கிய கழுதின் றேர்க்குலம்
[1]தானகங் கரிதலிற் றலைக்கொண் டோடிப்போய்
மேனிமிர்ந் தெழுந்திடின் விசும்பு வேமெனு
வானவர்க் கிரங்கிநீர் வளைத்த [2]தொத்ததே.

365 ஏய்ந்தவக் கனலிடை யெழுந்த கானற்றேர்
[1]காய்ந்தவக் கடுவனங் காக்கும் வேனிலின்
வேந்தனுக் கரசுவீற் றிருக்கச் செய்ததோர்
பாய்ந்தபொற் காலுடைப் பளிக்குப் பீடமே.

366 தாவரு மிருவினை செற்றுத் தள்ளரு
[1]மூவகைப் பகையரண் [2]கடிந்து முத்தியிற்
போவது புரிபவர் மனமும் பொன்னிலைப்
பாவையர் மனமும்போற் பசையு மற்றதே.

367 பொரிபரற் [1]படர்நிலம் [2]பொரிந்து கீழுற
விரிதலிற் பெருவழி விளங்கித் தோன்றலால்
அரிமணிப் பணத்தர வரச னுட்டினும்
எரிகதிர்க் கினிதுபுக் கியங்க லாயதே.

---

363 ஏகவெங்கனல் - அக்கினிதேவன். சாம்பின - வாடின. மாக வெங்கதிர் சூரியன். காக்கைக்கும் யானைகளுக்கும் கரிந்த மேகம் உவமை.

(பி - ம்) [1]'சாய்ந்தன' [2]'கனலெனும்' (கஉ)

364 கழுதின் தேர் - கானல்; 365. தான் - பாலை நிலம். அகம் - இடம். தலைக்கொண்டோடல் - அதிகப்பட்டு மேலேறுதல். கழுதின் தேர்க்குலம்.....நீர்வளைந்த தொத்தது.

(பி - ம்) [1]'தானகத் தெழுதலாற்' [2]'தொத்தவே' (கங)

365 வேனிலின் வேந்தன்: சிலப். கச: 124. வீற்றிருக்க-வேறொருவர்க்கு இல்லாத பெருமையோடிருக்க. பாய்ந்த - பரவிய.

(பி - ம்) [1]'காய்ந்தநற்' (கச)

366 தாவரு மிருவினை - நல்வினை, தீவினை; தா - கேடு. மூவகைப் பகை அரண் - காமம், வெகுளி, மயக்கங்கள். புரிபவர் - முமுட்சுக்கள்; 354; 'மூதிரகம் நற்றுறவி' (பெரும். சு. 8:51.)

(பி - ம்) [1]'மூவகை யரணமுங்' [2]'கடந்து' (கடு)

367 பொரிபரல் - பொரிந்த பருக்கைக் கற்கள். பொரிந்து பொருக் காகி. நிலம் பொரிந்து விரிதல்: 361. பணம் - படம். கதிர் - சூரியன்.

(பி - ம்) [1]'படுநிலம்' [2]'பொடிந்து' (கக)

பிரமன் வரம் அளித்தல்

375 முந்தின னருமறைக் கிழவன் முற்றுகின்
சிந்தனை யென்னெனச் சிறுவ ரின்மையால்
நொந்தன னருள்கென நுணங்கு கேள்வியாய்
மைந்தர்க ளிலையொரு மதலுண் டாமென்றான்.

376 பூமட மயிலினைப் பொருவும் பொற்பொடும்
ஏமுறு மதமலை யீரைஞ் ஞூறுடைத்
[1]தாமுறு வலியொடுந் [2]தனயை தோன்றுநீ
[3]போமதி யெனவயன் புகன்று போயினன்.

சுகேதுவின் பெண்ணுகிய தாடகையைச் சுந்தன் மணத்தல்

377 ஆயவ [1]னருள்வழி யலர்ந்த தாமரைச்
சேயவ ளெனவளர் செவ்வி கண்டிவட்
[2]காயவர் யாவரென் றுய்ந்து தன்கிளை
நாயகன் [3]சுந்தனென் பவற்கு நல்கினான்.

சதிபதிகள் இன்பம் நுகர்தல்

378 காமனு மிரதியுங் கலந்த காட்சியீ
தாமென வியக்கனு மணங்க ளுளும்வே
றியாமமும் பகலுமோ [1]ரீறின் றென்னலாய்த்
தாமுறு பெருங்களிச் சலதி மூழ்கினர்.

---

375 நுணங்கு கேள்வியாய்: 'நுணங்கிய கேள்வியர்' (குறள், 419.) (உச)

376 பொருவும் - ஒப்பாகும். ஏம்உறும் - களிப்புள்ள. மதமலை - யானை. சாபத்துக்குமுன் தாடகை பொற்பும் வலியும் பெற்றிருந்தாள். தாம்: அசை. போமதி; மதி: முன்னிலை யசை.

(பி - ம்) [1]'தாமிகுவலி' [2]'தனையள்' [3]'போவென மலரயன்' (உடு)

377 சுந்தன் ஓர் இயக்கன்; 380.

(பி - ம்) [1]'னருள்வழிப் பிறந்த வாயிழை' [2]'காயவன் யார் கொலென்' [3]'சுகந்தனென்' (உசு)

378 சலதி - கடல். காமத்தாற் பாழுது இடை தெரியாமை: குறிப்பு உஉ; ஒப்புமைப்.

(பி - ம்) [1]'ரீறின் றென்னலாற் முழுது' (உஎ)

மாரீசன் சுபாகு ஜனனம்

379 பற்பலநாட் செலீஇப் பதுமை [1]போலொளிர்
பொற்பினுள் வயிற்றிடை புவன மேங்கிட
வெற்பணி புயத்துமா [2]ரீசன் வென்றிசேர்
மற்பெருஞ் சுவாகுவும் வந்து தோன்றினர்.

மக்கள் இருவரின் இயல்பு

380 [1]மாயையும் வஞ்சமும் வரம்பி லாற்றலும்
தாயினும் பழகினர் [2]தமக்குந் தேர்வொணை
தாயவர் வளர்வுழி யவரை யீன்றவக்
காய்சினத் தியக்கனுங் களிப்பின் மேன்மையான்.

சுந்தன் அகத்தியருக்குச் செய்த அபசாரம்

381 தீதுறு மவுணர்க டூமை தீர்தர
மோதுறு கடலெலா மொருகை மொண்டிடு
மாதவ னுறைவிட மதனின் வந்துநீள்
பாதவ மனைத்தையும் பறித்து வீசினன்.

அகத்திய முனிவரால் சுந்தன் அழிதல்

382 விழைவுறு மாதவம் வெஃகி னோர்விரும்
புழைகலை யிரலையை யுயிருண் டோங்கிய
வழையொடு மரனெலா மடிப்ப மாதவன்
தழலெழ விழித்தனன் சாம்ப ராயினன்.

சுபாகு மாரீசரும் தாயும் அகத்தியர் முன் செய்த ஆரவாரம்

383 மற்றவன் விளிந்தமை மைந்தர் தம்மொடும்
பொற்றொடி கேட்டுவெங் கனலிற் பொங்குறூ
முற்றுற முடிக்குவன் முனியை யென்றெழா
நற்றவ னுறைவிட மதனை [1]நண்ணினள்.

---

379 நாட்செலீஇ: 388. வெற்பணி புயத்து; அணி: உவமவுருபு; சீவக. 223. சுபாகு - அழகிய தோளுடையவன். தாடகை மாரீசனை மட்டும் பெற்றாள் என்று வான்மீகம் கூறும்.

(பி - ம்) [1].போலிய', 'யாமெனும்' [2]'ரீசனும் விறல்' (உஅ)

380 மாயை - மந்திரமகிமை யாற்செய்வது. வஞ்சம் - புத்தி பூகத்தாற் செய்வது. இயக்கன் - சுந்தன்.

(பி - ம்) [1]மாயமும்' [2]'தமக்குஞ் சார்கொணை' (உக)

381 மாதவன் - அகத்திய முனிவர். கடலை உண்டது: 572. பாதவம் - மரம். (உ0)

382 விழைவுறு மாதவம் - வீடுபேற்றை விரும்பிய பெரிய தவம். வெஃகினோர் - விரும்பினோர். உழை, கலை, இரலை - மான்வகைகள். மான்கள் இருடிகளுள்ள விடத்தில் வசித்தல்: புறநா. 2. வழை: சுரபுன்னை. (உக)

383 முனி - அகத்தியர். எழா - எழுந்து. (பி - ம்) [1]'நண்ணினர்' (உஉ)

384 இடியொடு மடங்கலும் வளியு மேங்கிடக்
கடிகெட வமரர்கள் கதிரு முட்கிடத்
தடியுடை முகிற்குலஞ் சலிப்ப வண்டமும்
வெடிபட வதிர்த்தெதிர் விழித்து மண்டவே.

அகத்தியர் அம்முவரையுஞ் சபித்தல்

385 தமிழெனு மளப்பருஞ் சலதி தந்தவன்
உமிழ்கனல் விழிவழி யொழுக வுங்கரித்
தழிவன செய்தலா லரக்க ராகியே
இழிகென வுரைத்தன னசனி யெஞ்சவே.

அவர்கள் அரக்கர் ஆதல்

386 வெருக்கொள வுலகையும் விண்ணு ளோரையும்
முருக்கியெவ் வுயிருமுண் டுழலு மூர்க்கராம்
அரக்கர்க ளாயின [1]ரக்க ணத்தினில்
உருக்கிய செம்பென வுமிழ்கட் டீயினர்.

மூவரும் சுமாலியைச் சார்தல்

387 ஆங்கவன் வெகுளியு மறைந்த சாபமும்
தாங்கின ரெதிர் செயுந் தருக்கி லாமையால்
நீங்கினர் சுமாலியை [1]நேர்ந்து நிற்கியாம்
ஓங்கிய புதல்வரென் றுறவு [2]கூர்ந்தனர்.

---

384 மடங்கல் - ஊழித்தீ. வளி - காற்று. கடி - சிறப்பு. தடி - மின்னல். இவையாவும் ஊழிக்காலத்துச் செயல்கள். (கூ)

385 தமிழெனும் .....தந்தவன் - அகத்தியன்; சலதி - கடல்; கூ-3:41. 'அகத்தியன் பயந்த செஞ்சொல் லாரணங்கு' (வி. பா: பாயிரம்). உங்கரித்து--ஹுங்காரம் செய்து. அசனி - இடி.

ஒரு பிரதியில் இதனையடுத்துப் பின்வரும் ஒரு பாடலும் அதன் கீழ் 'சுரம்புகு படலம் முற்றும்' என்ற குறிப்பும் காணப்படுகின்றன. அப்பிரதியில் இதனை யடுத்துள்ளது தாடகை வதைப் படலம்.

'ஆங்கவர் போன பின்னவ் வரக்கியிவ் வனத்தி லெய்தி
ஓங்கிய முனிவரோடு முற்றதோர் பகையை யுன்னித்
தீங்கரு ணைத்தான் மிக்க சிறப்புடை யவர்கள் தம்மோ
டேங்கிமற் றுயிர்க ளெல்லா மிறந்திடத் திரிய லுற்றாள்'. (கூச)

386 முருக்கல் - அழித்தல். தீயினர் : எருவாய். உருக்கிய செம்பு கண்ணுக்கு : கூ: 6: 145.

(பி-ம்) [1]ரரைக் கணத்தினில்' (கூடு)

387 ஆங்கவன் : ஒருசொல்; (திருச் சிற்.) தருக்கு - வீரம். சுமாலி - இராவணனுடைய தாயாகிய கேகசியின் தந்தை; மாலி, மாலியவான் என்பவர்களுடைய சகோதரன். புதல்வர் என்று உறவு பாராட்டியவர் மாரீசனும் சுபாகுவும்.

(பி-ம்) [1]'நெருக்கி நிற்குளம்' [2]'கூறியே' (கூசு)

இவர்களுக்கும் இராவணனுக்கும் உள்ள தொடர்பு

388. அவனெடு பாதலத் தனேக நாட் [1]செலத்
தவனுறு தசமுகன் றனக்கு மாதுலர்
இவரெனப் புடைத்தழித் துலக மெங்கணும்
[2]பவனனிற் றிரிகுநர் பதகி மைந்தர்கள்.

தாடகை அங்கே வருதல்

389. மிகுந்திறன் மைந்தரை [1]வேறு நீங்குறுத்
தகுந்தொழின் முனிவரன் சலத்தை யுள்ளியே
[2]வகுந்துவின் வடவெரி வதிந்த திவ்வனம்
புகுந்தன [3]ளழலெழப் புழுங்கு நெஞ்சினள்.

தாடகையின் கொடிய இயல்பு

390. மண்ணுருத் தெடுப்பினுங் கடலே வாரினும்
விண்ணுருத் திடிப்பினும் வேண்டிற் செய்கிற்பாள்
எண்ணுருத் தெரிவரும் பாவ மீண்டியோர்
பெண்ணுருக் கொண்டெனத் திரியும் பெற்றியாள்.

391. பெருவரை யிரண்டொடும் பிறந்த நஞ்சொடும்
உருமுறழ் முழக்கொடு [1]மூழித் தீயொடும்
இருபிறை [2]செறித்தெழுங் கடலுண் டாமெனின்
வெருவருந் தோற்றத்தண் மேனி மானுமே.

---

388. செல - கழிய. தவனுறு - தவத்தையுடைய. பவனன் - வாயு.
(பி - ம்.) 1 'செலீ இத்' 2 'பவனெனத் திரிகுநர்' (ஈஎ)

389. நீங்குறு - நீங்கி. தகுந்தொழில் - தவச்செயல். முனிவரன் - அகத்தியன். சலம் - கோபம். வகுந்து - வழி; (மலைபடு. 242.) வட வெரி - வடவாமுகாக்கினி. 'வசுவரி' என்ற பாடத்துக்குச் சிகைகளோடு கூடிய நெருப்பு என்பது பொருள்.
(பி - ம்.) 1 'வெறிது' 2 'வகுந்துபின்வசுவரி' 3 'ளழலெனப்' (ஈஅ)

390. மண் - பூமி. உருத்து - சினங்கொண்டு. எண் உரு - அளவும் வடிவமும்; இத்தன்மையதென்று அறிய முடியாத பாவம் தாடகைக்கு உவமை. (ஈக)

391. வரை நகில்களுக்கு. நஞ்சு விழிகளுக்கு. உரும் - இடி. உறழ் - ஒத்த. இடியோசை பேச்சுக்கும், ஊழித்தீ தலை மயிருக்கும்; 397; விழிகளுக்கும் ஆம்; 399. பிறை - கோர தந்தங்களுக்கு; கடல் உடலுக்கு. மு. 399.
(பி - ம்.) 1 'மூழிக்காற்றெழும்' 2 'செறிந்தெழு' (சஅ)

392. சூடக வரவுறழ் சூலக் கையினள்
[1]காடுறை வாழ்க்கையள் கண்ணிற் காண்பரேல்
ஆடவர் பெண்மையை யவாவுந் தோளினுய்
தாடகை யென்பதச் சழக்கி நாமமே.

393. உளப்பரும் [1]பிணிப்பரு வுலோப மொன்றுமே
அளப்பருங் குணங்களோ யழிக்கு மாறுபோற்
கிளப்பருங் கொடுமைய வரக்கி கேடிலா
அளப்பரு மருதவைப் [2]பதீன மாற்றினுள்.

வேறு

394. இலங்கைய ரி[1]சன்பணிய மைந்தொரிடை யூறுய்
விலங்கல்வலி கொண்டெனது வேள்விநலி கின்றுள்
அலங்கல்முகி லேயிவளிவ் வங்கநில மெங்கும்
குலங்களொ டடங்கநனி கொன்றுதிரி கின்றுள்.

395. முன்னுல களித்துமுறை நின்றவுயி ரெல்லாம்
[1]தன்னுயி ரெனக்கருது தன்மையினன் மைந்த
என்னினி யுணர்த்துவ தினிச்சிறிது நாவில்
மன்னுயி ரீனத்தையும் வயிற்றிலிடு மென்றுன்.

இராமனுடைய கூற்று

396. [1]அங்குறுவ னிப்பரி சுரைப்பவது கேளாக்
[2]கொங்குறை நறைக்குல மலர்ச்செனி துளக்கா
எங்குறைவ தித்தொழி லியற்றுபவ னென்றுன்
சங்குறை கரத்தொரு தனிச்சிலை தரித்தான்.

---

392. கைவலையாக அவள் அணிந்த அரவைப்போன்ற சூலம் என்க. அரவு சூலத்திற்கு. சூலம்; 416. ஆடவர் பெண்மையை அவாவும் தோளினுய். சீவக. 1528; சழக்கி - சழக்கு: மாறுபாடு.
(பி - ம்.) 1 'காடுறு' (சக)

393. உளப்பு=உலப்பு - கெடுதல். பிணிப்பு - பற்று. உலோபக் கொடுமை: 455; திருவிளை. மூர்த்தி. 14. மருதவைப்பு: இந்திரனது பிரமஹத்தி தோஷம் தீரும் பொருட்டுத் தேவ நிர்மிதமான மலதம், களுசம் என்ற இரண்டு தேசங்களைத் தாடகை அழித்துச் சுரமாக்கினுள் என்பது வான்மீகம்.
(பி - ம்.) 1 'பிணிப் புரு' 2 'பழித்து மாற்றினுள்' (சஉ)

394. விலங்கல் வலி - மலைபோன்ற பலம். நலிவு - அழிவு.
(பி - ம்.) 1 'பெயரினமைந்' (சங)

395. தன்னுயிரெனக் கருது தன்மையவன்: தசரதன்; 191, குறிப்.
(பி - ம்.) 1 'தன்னுணவெனக் கருது தன்மையினண்மைந்தா' (சச)

396. உறுவன் - மிக்கோன்; விசுவாமித்திர முனிவர்; 'உறற்பால நீக்க லுறுவற்கு மாகா' (நாலடி. 104.) சங்கு உறைகரம் - இடக்கை. சிலை தரித்தான்: 'சிலையிராமன்' (தனியன்.) இராமபிரான் திருமால்: 416

தாடகை வருகை

397. கைவரை யெனத்தகைய காலையுரை கேளா
ஐவரை யகத்திடை யடைத்தமுனி யையா
இவ்வரை யிருப்பதவ ளென்பதனின் முன்போர்
மைவரை நெருப்பெரிய வந்ததென வந்தாள்.

398. சிலம்புகொள் சிலம்பிடை செறித்தகழ லோடும்
நிலம்புக [1]மிதித்திட நெளித்தகுழி வேலைச்
சலம்புக வனற்றறுக ணந்தகனு மஞ்சிப்
பிலம்புக [2]நிலைக்கிரிகள் பின்றொடர வந்தாள்.

அவளது தோற்றமும் செயலும்

399. இறைக்கடை துடித்தபுரு வத்தளெயி றென்னும்
பிறைக்கடை [1]பிறக்கிட மடித்தபில வாயள்
[2]கறைக்கடை யரக்கிவட வைக்கன லிரண்டாய்
நிறைக்கடன் மூளைத்தென நெருப்பெழ விழித்தாள்.

400. கடங்கலுழ் [1]தடங்களிறு கையொடுகை தெற்றி
[2]வடங்களி னுடங்குமுலை யாண்மறுகி வாளோர்
இடங்களு நெடுந்திசையு மேழுலகும் யாவும்
அடங்கலு நடுங்கவரு மஞ்சனனி யார்த்தாள்.

முதலியன. (பி - ம்.) 1 'அங்கிறைவ னப்பரிசு' 2 'கொங்கு கமழுங்குல மலர்க்குழ றுளக்கா' (சகு)

397. கைவரை - யானை; வெளிப்படை. ஐவர்—பஞ்சேந்திரியங்கள்; 269. தாடகையின் தலை மயிருக்கு நெருப்பும் உடலுக்கு மலையும் உவமை; 391. (சசு)

398. சிலம்புகொள் சிலம்பு - மலைகளைப் பரல்களாகக் கொண்டுள்ள சிலம்பென்னும் அணி. வீரர் அணியும் கழலைத் தாடகையும் அணிந்திருந்தாள். நெளித்த குழி - கால் பதிந்ததால் உண்டான குழிகளில். வேலைச்சலம் - கடல்நீர். தறுகண் - அஞ்சாமை. அந்தகன் அஞ்சிப் பிலம்புக; பிலம் - குகை. (பி - ம்.) 1 'மிதித்தன ணெளித்த' 2 'நிலக்கிரி' (சஎ)

399. இறை - சிறிது காலம். எயிறு - கோரைபற்கள்; இவைகளுக்குப் பிறை உவமை. கடை பிறக்கிட - கடைவாயினின்று வெளிப்பட்டு விளங்க. கறை - இவ்வுலகத்துக்குக் கறை போன்றவள்; கறை - மாசு, விடம். கடை - கடைப்பட்டவள். உடலுக்குக் கடலும் விழிகளுக்கு வடவைத்தீயும் உவமை.

(பி - ம்.) 1 'பிறங்கிட' 2 'மறைக்கடை' (சஅ)

400. கடம் கலுழ் - மதத்தைச் சொரிகின்ற. தெற்றி - பின்னி: யானைகளைத் துதிக்கையோடு துதிக்கையை முடிந்து போட்டிருக்கும் மாலைகளை மார்பிலே உடையவள். மறுகி - மனம் சுழன்று. உரும் - இடி.

(பி-ம்.) 1 'கடுங்களிறு' 2 'வடங்கொள முடங்குமிடை (சசு)

401. ஆர்த்தவரை நோக்கிநகை செய்தெவரு மஞ்சக்
கூர்த்தநுதி மூத்தலை யயிற்கொடிய கூற்றைப்
பார்த்தெயிறு [1]தின்றுபரு வாய்முழை திறந்தோர்
வார்த்தையுரை [2]செய்தன ளிடிக்குமழை யன்னாள்.

அவள் கூற்று

402. கடக்கரும் [1]வலித்தெனது காவலிதில் யாவும்
[2]கெடக்கரு வறுத்தன னினிச்சுவை கிடக்கும்
விடக்கரி தெனக்கருதி யோ [3]விதிகொ டுந்தப்
படக்கருதி யோபகர்மின் வந்தபரி சென்றாள்.

403. மேகமவை யிற்றுக விழித்தனள் புழுங்கா
மாகவரை [1]யற்றுக வுதைத்தனண் மதித்திண்
பாகமெனு முற்றெயி றதுக்கியயில் பற்று
ஆகமுற [2]வுய்த்தெரிவ னென்றெதி ரழன்றாள்.

அவளை ஐயன் பேண் என நினைந்து வாளா இருத்தல்

404. அண்ணல்முனி வற்கது கருத்தெனினு மாவி
உண்ணென வடிக்கணை தொடுக்கில னுயிர்க்கே
துண்ணெனும் வினைத்தொழி றொடங்கியுள னேனும்
பெண்ணென [1]மனத்திறை பெருந்தகை நினைந்தான்.

வேறு

கோசிகர் இராமனுக்கு வற்புறுத்திக் கூறியவை

405. வெறிந்த செம்மயிர் வெள்ளெயிற் [1]முகையில்
எறிந்து கொல்வனென் றேற்கவும் பார்க்கிலாச்
செறிந்த தாரவன் சிந்தைக் கருத்தெலாம்
அறிந்த நான்மறை யந்தணன் கூறுவான்.

---

401. ஆர்த்து அவரைநோக்கி. கூர்த்த - கூரிய. மூத்தலை அயில்: 392; கூ. 1: 6. வீரர் தம் ஆயுதத்தை நோக்குதல்: 471; இ. 4: 73, 12: 5; கலி. நெய்: 22; அகநா. நெய்: 12; சீவக. 266; சூளா. அரசியற்: 35. (பி-ம்.) 1 'தின்றுபகு' 2 'செய்தனள்மலைக்குவமை' (நெ)

402. எனது காவல் கடக்கரும் வலித்து; காவல் - காவலிலுள்ள காடு; வலித்து - வன்மையை யுடையது. விடக்கு - மாமிசம். கரு அறுத்தனன் - கருவையும் அறுத்தேன். (பி - ம்.) 1 'வனத்தெனது' 2 'கெடக்கரிசறுத்தன' 3 'விதியினுலோ' (நக)

403. மாகவரை - விண்ணில் ஓங்கியமலை. எயிற்றுக்கு மதியின் பாகம். ஆகம் - உடல். உய்த்து எறிதல் - வீசி எறிதல். (பி - ம்.) 1 'யுற்றுக' 2 'வுற்றெறிவ' (நஉ)

404. அது - கொல்லுதல். உயிர்க்கே - பிராணிகளுக்கே. இறை - ஒரு சிறிது. (பி - ம்.) 1 'மனத்திடை' (நங)

405. வெறிந்த - செறிந்த; 'வெறிந்த செம்மயிர் வெள்ளெயிற்

406. தீதென் றுள்ளவை யாவையுஞ் செய்தமைக்
கோதென் றுண்டில ளித்தனை யேகுறை
யாதென் றெண்ணுவ திக்கொடி யாளையும்
மாதென் றெண்ணுவ தோமணிப் பூணினாய்.

407. நாண்மை யேயுடை [1]யார்பிழைத் தார்நகும்
வாண்மை [2]யேயிடை வன்றிற லாடவர்
தோண்மை யேயிவள் பேர்சொலத் [3]தோற்குமேல்
ஆண்மை யென்னுமி [4]தாரிடை வைகுமோ.

408. இந்தி ரன்னிடைந் தானுடைந் தோடினர்
தந்தி ரம்படத் தானவர் வானவர்
மந்த ரம்மிவ டோளெனின் மைந்தரோ
டந்த ரம்மினி யாதுகொ லாண்மையே.

409. [1]கறங்க டற்றிகி ரிப்படி காத்தவர்
[2]பிறங்க டைப்பெரி யோய்பெரி யோரொடும்
மறங்கொ டித்தரை மன்னுயிர் மாய்த்துநல்
அறங்கெ டுத்தவட் காண்மையும் வேண்டுமோ.

ரூடவர்' (சு. 14: 79.) எற்கவும் - எதிர்த்து வரவும். 401-ஆம் கவியினுல் அவள் அயில் எறிந்து கொல்ல நினைத்தது புலனுகும்.

(பி - ம்.) 1 'ரூடனை' (இசை)

406. கோதென்றுண்டிலள். 'கோதென்று கொள்ளாதாங் கூற்று' (நாலடி. 116.) (இஙி)

407. நாண்மை - நாணம்; மை பகுதிப்பொருள் விகுதி. நாண முடையவரே இவளாற் கொல்லப்படாமற் பிழைத்தார். வாண்மை - வாட்டிறல். தோண்மை - தோளின் வன்மை. தோற்குமேல் - தோற்கு மாஞல். ஆண்மை ஆரிடம் வைகும்: 711; உ. 3: 39.

(பி - ம்.) 1 'யார் பிழைத்தார் நகும்' 2 'யேபெற்ற வன்றிற' 3 'தோற்பரேல்', 'தோற்குமால்' 4 'தார்வசத் தாகுமோ', 'தார் குணத் தாகுமோ' (இசு)

408. தந்திரம் - சேனை. மந்தரம் - மந்தரமலை. அந்தரம் - வேறு பாடு. (இஎ)

409. கறங்கு - சுற்றுகின்ற. அடல் - வலிமை; கொல்லுதலுமாம். திகிரி - ஆஞ்ஞா சக்கரத்தினுல். படி - பூமி. பிறங்கடை - வழித்தோன றல்; 'கரும்பிவட்டந் தோன் பெரும்பிறங் கடையே' (புறநா. கூஉ: 21.) மறம் கொடு - வலிமையை மேற்கொண்டு; பாவத்தைக் கொண்டு எனலு மாம்.

(பி - ம்.) 1 'கறங்கிடத் திகிரிப்' 2 'பிறங்கிட' (இஅ)

410. சாற்று நாளற்ற தெண்ணித் தருமம்பார்த்
தேற்றும் விண்ணென்ப தல்ல திவளைப்போல்
நாற்றங் கேட்டலுந் தின்ன நயப்பதோர்
கூற்ற முண்டுகொல் கூற்றுறழ் வேலினாய்.

411. [1] மன்னும் பல்லுயிர் வாரித்தன் வாய்ப்பெய்து
[2] தின்னும் புன்மையிற் றீமைய தோவையா
பின்னுந் தாழ்குழற் பேதைமைப் பெண்ணிவள்
என்னுந் தன்மை [3] யெளிமையின் பாலதே.

---

410. கூற்று சாற்றும் நாளற்ற.....ஏற்றும் வின்: கு. 4: 43; புறநா. சக: அடிக். கூற்றுறழ் வேல்: 'காலவேலான்' (338.)

இச்செய்யுளுக்குப் பின் சில பிரதிகளில் கீழேயுள்ள நான்கு பாடல்கள் அதிகமாகக் காணப்படுகின்றன:

1 'மன்னர் மன்னவன் காதல மற்றுமொன்
றின்னம் யாணுரைக் கின்றதி யாதெனில்
முன்னெர் கால நிகழ்ந்த முறைமையீ
தென்ன வோதலுற் றுன்றவத் தீறிலான்.

2 'வான கத்தினின் மண்ணினின் மன்னுயிர்
போன கத்தெனக் கொன்றுணும் புந்தியாள்
தான [1] வன்சும திப்பெய ராடூஉ
ஊனெ ழித்தனன் வச்சிரத் தும்பர்கோன்.'

(பி. ம்.) 1 'வொண் சுமதிப் பெய'

3 'பிருகு வெணும்பெரு குந்தவன் றன்மனை
வருக யற்கட் கியாதிவல் லாசுரர்க்
குருகு காத [1] லுறவுற வாதலே
கருதி யாவி கலைந்தன னேமியான்.'

(பி - ம்.) 1 'லுறவுல கோர்தலாற்'

4 'ஆத லாலரிக் காகண்ட லன்றனக்
கோது கீர்த்தியுண் டாயதல் லாலிடை
ஏத மென்பன வெய்திய தோசொலாய்
தாத டர்ந்து தயங்கிய தாரினாய்.'

இச்செய்தி வான்மீகத்திற் கூறப்படுகிறது. (நிகழ)

411. புன்மை எத்தீமையின் பாற் படுமோ? எளிமை - கோழைத் தன்மை.

(பி - ம்.) 1 'மன்னுந் தன்னுயிர்' 2 'தின்னுந் தன்மையிற்' 3 'யிருமையின்'

(சுo)

412. ஈறி னல்லறம் பார்த்திசைத் தேனிவட்
சீறி நின்றிது செப்புகின் றேனலேன்
ஆறி நின்ற தருளன் றரக்கியைக்
கோறி [1]யென்றெதி ரந்தணன் கூறினன்.

இராமனது பணிவுரை

413. அய்ய னங்கது கேட்டற னல்லவும்
எய்தி னுலது செய்கவென் றேவினன்
மெய்ய நின்னுரை வேத மெனக்கொடு
செய்கை யன்றே வறஞ்செயு மாறென்றான்.

தாடகை சூலத்தை இராமன் மீது எறிதல்

414. கங்கைத் தீம்புன லுடன் [1]கருத்தையம்
[2]மங்கைக் கூற்றனை யாளு மனக்கொளாச்
செங்கைச் சூலவெந் தீயைய [3]தீயதன்
வெங்கட் டீயொடு மேற்செல வீசினாள்.

415. புதிய கூற்றனை யாள்புகைந் தேவிய
கதிர்கொண் மூவிலைக் காலவெந் தீமுனி
விதியை மேற்கொண்டு நின்றவன் மேலுவா
மதியின் மேல்வருங் கோளென வந்ததே.

ஐயன் சூலத்தைப் பொடியாக்கல்

416. மாலு மக்கணம் வாளியைத் தொட்டதும்
கோல விற்கால் குனித்ததுங் கண்டிலர்
கால னைப்பறித் தக்கடி யாள்விட்ட
சூல மிற்றதன் றுண்டங்கள் கண்டனர்.

---

412. ஈறில் நல்லறம் : 'அறத்துக் கீறுண்டோ' (தி. 3: 68.) சீறி நின்றிது செப்புகின் றேனலேன் : 'காய்வதன்கண் ணுற்ற குணந்தோன்றூ தாகும்' (அறநெறிச். 23); 'தீரக் காய்ந்துழி நல்லவுந் தீயவாம்' (சீவக. 888.) 'ஆறி.....அருளன்று': 'கொலையிற் கொடியாரை வேந்தொறுத் தல் பைங்கூழ், களைகட் டதனொடு நேர்' (குறள், 550). கோறி . கொல் லுக.

(பி - ம்.) 1 'யென்றன னன்னெறி' (சுக)

413. எய்தினுல் - வருவதாயினும். ஏவினுல் - கட்டளையிட்டால். மெய்ய : விளி. கோசிகர் கூறுவன யாவும் அறமே எனக்கருதி மெய்ய என்றார். (சுஉ)

414. நாடன் - இராமன். மங்கையாகிய தீயனையாள்.

(பி - ம்.) 1 'கருத்தெலாம்' 2 'மங்கைத்தீயனை' 3 'தீயவள்' (சுங)

415. கூற்றனையாள் : 372 ஆங் கவிக்குப் பின்னுள்ள அதிகப்பாடல் பார்க்க. விதி-கட்டளை. கோள் கேது. இராமனுக்கு மதி உவமை. (சுச)

416. தொட்டதும் - தொடுத்தவுடனே. கடியாள் - கொடியவள். இராமன் வின்மை : 788. கண்டிலர், கண்டார் ; காரண வொழிப்பு. (சுஙி)

தாடகை யெறிந்த கற்களை ஐயன் அம்புகளால் விலக்கல்

417. அல்லின் மாரி யனைய நிறத்தவள்
சொல்லு மாத்திரை யிற்சுட மூர்ப்பதோர்
கல்லின் மாரியைக் கைவகுத் தாளது
வில்லின் மாரியின் வீரன் விலக்கினன்.

வேறு

தாடகை வதம்

418. சொல்லொக்குங் கடிய வேகச் சுடுசரங்
கரிய செம்மல்
அல்லொக்கு நிறத்தி ணெண்மேல் விடுதலும்
வயிரக் குன்றக்
கல்லொக்கு நெஞ்சிற் றங்கா தப்புறங்
கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன [1] பொருளெனப்
போயிற் றன்றே.

---

417. அல்லின் மாரி - இருண்டமேகம். கல் - மலை. இதன் பின் ஓர் அதிகப்பாடல் உள்ளது :

'ஏக்க மோட விமையவ ரெங்கணும்
வாக்கின் முந்துற மாயை வளர்ப்பவள்
மூக்கும் வார்செவி யும்முறை போயிடத்
தாக்கும் வள்ள லிளவலுந் தாக்கினன்.'

இஃது இராமன் தாடகையின் காதையும் மூக்கையும் அரிந்த செய்தி வான்மீகத்திற் காணப்படுகிறது. (சுசு)

418. சொல் ஒக்கும் சரம் : 8, அடிக் ; 'வில்லேருழவர் பகை கொளினுங்கொள்ளற்க, சொல்லேருழவர் பகை' (குறள், 872.) சுடு சரம்: 560 ; ச. 7: 86. மறையெனப் போயிற்று (பி மி.) : 'அறை பறை யன்னார் கயவர்தாங் கேட்ட, மறைபிறர்க் குய்த்துரைக்க லான்' (குறள், 176.) தாடகை மார்பிற் சரம் : கூ. 5: 73. தாடகை வீழ்ந்தது ஓரம்பினால் ; 750; 'எம்பிக்கும்மென் னன்னைதனக்கு மிறுதிக்கோ,ரம்புய்க்கும் போர்வில்லி' (கூ. 7: 186); தாடகையின் உடல் அணியாக இராமன் அவ்வுடலில் பல அம்புகளைச் செலுத்தினன் என்பர்: 'பொய்யாத தவமுனிபின் போயருளித் தாடகைதன், மெய்யாவ ணிகரென்ன வெஞ்சரத்தா லழுத்தியபின்' (வி. பா. 12 ஆம்போர். 1.)

(பி - மி.) 1 'மறையெனப்' (சுஎ)

[1]தாடகை வீழ்ந்த வருணனை

419 பொன்னெடுங் குன்ற மன்னன் புகர்முகப்
பகழி யென்னும்
அன்னெடுங் கால வன்காற் றடித்தலு
மிடித்து வானிற்
கன்னெடு மாரிபெய்யக் கடையுகத்
தெழுந்த மேக
மின்னெடு மசனி யோடும் வீழ்வதே
போல வீழ்ந்தாள்.

420 பொடியுடைக் கான மெங்குங் குருதிநீர்
[1]பொங்கி வீழத்
தடியுடை யெயிற்றுப் பேழ்வாய்த் தாடகை
தலைக டோறும்
முடியுடை யரக்கற் கன்ஞாண் முந்தி [2]யுற்
பாத மாகிப்
படியிடை யற்று வீழ்ந்த வெற்றியம்
பதாகை யொத்தாள்.

421 [1]கான்றிரிந் தாழி யாகத் தாடகைக்
கடின மார்பத்
தூன்றிய பகழி வாயு டொழுகிய
குருதி வெள்ளம்
[2]ஆன்றவக் கான மெல்லா மாயின
தந்தி மாலை
தோன்றிய செக்கர் வானந் தொடக்கற்று
[3]வீழ்ந்த தொத்தே.

---

419. புகர் முகப்பகழி - கூர்மையான தலையையுடைய அம்பு. அல் - இருள். காலவன் காற்று - ஊழிக்காலத்துக் கொடிய காற்று. காற்று இராமனுடைய அம்புக்கு உவமை. (கூஅ)

420. பொடி - புழுதி. தடி - மாமிசம். 3-4. தீ நிமித்தம். அரக்கன் - இராவணன். உற்பாதம் - துன்பத்தை முன்னதாகத் தெரிவிக்கும் குறிகள். பதாகை - துவசம்; தாடகை வீழ்ச்சிக்கு இராவணனது வெற்றிப்பதாகை அற்றுவீழ்தல். சூர்ப்பநகை பங்கமுற்றதை இவ்வனமே வருணிப்பர்; கூ. 5:96.
(பி - ம்.) [1]பொங்க வீழ்ந்த' [2]'யுற்பாதமாக' (கூக)

421. குருதி வெள்ளம் செக்கர்வானம் வீழ்ந்த தொத்தது. காதென் தன்மை வேறுபட்டு ஆழியாக ஆயினது. குருதி வெள்ளத்துக்குச் செக்கர் வானம் உவமை: 967. தாடகை வீழ்ந்தது அந்திக் காலத்துக்குச் சற்று முன் என்பர் வான்மீகி. 3-4: 'பருதிசெல் வானம் பரந்துருகி யன்ன, குருதியா றுவதுகொல் குன்று' (பு. வெ. 70.)
(பி-ம்.) [1]'தான்றிரிந்' [2]'ஆன்றபே ருலகமெங்கு' [3]'வீழ்ந்த தொத்த' (எ0)

யமனுக்கு முதல் விருந்து

422 வாசநாண் மலரோ னன்ன மாமுனி
பணிம ருத
காசுலாங் கனகப் பைப்பூண் காகுத்தன்
கன்னிப் போரிற்
[1]கூசிவா ளரக்கர் தங்கள் குலத்துயிர்
குடிப்ப வஞ்சி
யாசையா லுழலுங் [2]கூற்றஞ் சுவைசிறி
தறிந்த தன்றே.

விண்ணவர் செயல்

423 [1]யாமுமெம் மிருக்கை [2]பெற்றே முனக்கிடை
யூறு மில்லைக்
கோமகற் [3]கினிநீ தெய்வப் படைக்கலங்
கொடுத்தி யென்று
மாமுனிக் குரைத்துப் பின்னர் விற்கொண்ட
மழையன் னன்மேற்
பூமழை பொழிந்து வாழ்த்தி விண்ணவர்
போயி னரே.

---

422. கோசிகருக்குப் பிரமன் உவமை: 331. ககுத்த வம்சத்தில் உதித்தவன் காகுத்தன்; இராமபிரான். கன்னிப் போர்-முதற் போர் :சீவக. 448, 806, சூளா. அரசியல், 76; பெரிய. கண்ணப்ப. 47.

(பி - ம்.) [1]கூசுவாளரக்கர்' [2]'கூற்றஞ்' (எக)

423. விற்கொண்ட மழை - இந்திர வில்லைக் கொண்ட மேகம்; 'நீலநீக் கார்மூலை.....வரிவிலேந்தி வருவதே போலும் மால்' (சு. 5: 75.)

(பி - ம்.) [1]யாமு மேயி' [2]பெற்றே மெமக்', 'பெற்றேம் பணிக்கிடை' [3]இனிய தெய்வப்' (எஉ)

தாடகை வதைப் படலம் முற்றும்

—:o:—

8. வேள்விப் படலம் *

கோசிகர் இராமபிரானுக்கு அஸ்திரங்களை வழங்கல்

424 விண்ணவர் போய பின்றை விரிந்தபூ மழையி னூலே
தண்ணெனுங் கான நீங்கித் தாங்கருந் தவத்தின் மிக்கோன்
[1]மண்ணவர் வறுமை நோய்க்கு [2]மருந்தெனுஞ் சடையன் வெண்ணெய்
அண்ணறன் சொல்லே யன்ன படைக்கலம் அருளி னானே.

படைகள் இராமரிடம் வந்தமைக்கு உவமை

425 ஆறிய வறிவன் கூறி யளித்தனு மண்ண றன்பால்
ஊறிய வுவகை யோடு மும்பர்த்தம் படைக ளெல்லாம்
தேறிய மனத்தான் [1]செய்த நல்வினைப் பயன்க ளெல்லாம்
மாறிய பிறப்புத் தேடி வருவபோல் வந்த வன்றே.

படைகளின் செயல்

426 மேவினம் பிரித லாற்றேம் வீரநீ விதியி னெம்மை
ஏவின செய்து நிற்று மிளையவன் போல வென்று
தேவர்தம் படைகள் செப்பச் செவ்விதென் [1]றவனு நேரப்
பூவைபோ னிறத்தி னுற்குப் புறத்தொழில் புரிந்த வன்றே.

---

*சில பிரதிகளில் இப்படலத்தின் 424—38 செய்யுட்கள் கவுசிகையாற்றுப்படலம் என்றும், செய்யுட்கள் 439-61 மாவலி யரணப் படலம் என்றும், செய்யுட்கள் 462—82 வேள்விப் படலம் என்றும் காணப்படுகின்றன.

424. தண்ணெனுங் கானம்: தாடகை இறந்தவுடன் அச்சுரம் பழைய படி செழிப்புற்ற தென்றபடி. வான்மீகியும் இக்கருத்தினையே கூறுவர். சடையன் சொல்லே யன்ன படை. பிரதிபேதத்திற் கண்ட அண்ணல் - இராமபிரான். இராமருடைய சொல்லுக்கு அவரது அம்பு.

(பி - ம்.) [1]'கண்ணெனு முகமுங் கையுங் கால்களுங் கமலம் பூத்த, அண்ணறன்' [2]'மருந்தன' (க)

425. ஆறிய - ஐம்பொறிகள் அடங்கிய; 'ஆறமைம்பொறி நின்னையும்' (கு. 6:19.) கூறியளித்தலும் - அந்த அந்தப் படைக்குரிய மந்திரத்தை உபதேசித்துக் கொடுத்தலும். உம்பர்த்தம் படை - தேவாஸ்திரங்கள். நல்வினை மாறிய பிறப்பிற் றேடிவருதல்: 42, அடிக்:

'பல்லாவு ளூய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு' (நால. 101.)

(பி - ம்.) [1]'நல்வினை யுதவி செய்வாள்' (உ)

426. ஏவின வற்றைத் தடையின்றி முடித்தலால் ஆயுதங்களுக்கு இலக்குவன் உவமை. படைகள் ஏவினசெய்தல்: 752. புறத்தொழில்: 1195.

இராமபிரான் விஞ்வும் கோசிகன் விடையும்

427 இனைய னிகழ்ந்த பின்னர்க் காவத மிரண்டு சென்றூர்
அனையவர் காண வாண்டோ [1]ரவம்வந் தணுகித் தோன்ற
மூனைவவீ தியாவ தென்று முன்னவன் [2]வினவப் பின்னர்
வினையற நோற்று நின்ற மேலவன் விளம்ப லுற்றான்.

428 மானச மடுவிற் ரோன்றி வருதலாற் சரயு வென்றே
மேன்முறை யமரர் போற்றும் விழுநதி யிதனி ஞடு
மான [1]கோ மதிவந் தெய்து மரவம தென்ன வப்பால்
போனபின் பவங்க டீர்க்கும் புனிதநீர் நதியை யுற்றூர்.

கௌசிகை யாற்றின் வரலாறு

429 சுரர் தொழு திறைஞ்சற் கொத்த தூநதி யாவதென்று
[1]வரமுனி தன்னை யண்ணல் வினவுற மலருள் வைகும்
பிரமனன் [2]றளித்த வென்றிப் பெருந்தகைக் குசனென் ரோ
[துமி
[3]அரசர்கோ னளித்த மைந்த ரருமறை யனைய நால்வர்.

குசன் மைந்தர்கள்

430 குசன் குசநாபன் கோதில் [1]குணத்தின தூர்த்தன் கொற்றத்
திசைகெழு வசுவென் ரோது மிவர்பெய ரிவர்க டம்முள்
[2]குசன்கவு சாம்பி நாபன் குளிர்மகோ தயம தூர்த்தன்
வசையிறன் மவன மற்றை வசுகிரி விரசம் வாழ்வார்.

செவ்விது - நல்லது; உடன் பாட்டுக் குறிப்பு. கோசிகர் கொடுத்த படைகளின் பெருமை: சு. 2:86. (பி - ம்.) [1]'றமலன் கூறப்' (கூ)

427. அரவம் - ஓசை. முன்னவன் - இராமர்.

(பி - ம்.) [1]'ரகனதி யணுகித்', 'ராறுவந்' [2]'மொழிப்ப' (சு)

428. சரயுவின் உற்பத்தி: 37, குறிப். கோதமி (கௌதமி) பவங்கள்-மேல்வரும் பிறப்புக்களை. புனிதநீர் நதி - கௌசிகி.

(பி - ம்.) [1] கோமதி' (கு)

429. குசன் பிரமபுத்திரன்; இவன் மனைவி வைதர்ப்பி. நால்வருக்கும் நான்மறை: 315.

கௌசிகியின் வரலாறு முதனூலில் யாக ரட்சணத்தின் பின் கூறப் படுகிறது.

(பி - ம்.) [1]'வரநதி' [2]'றளிக்க' [3]'ஒரு மனைவி தன்பா லளித்தவர் நால்வ ராகும்' (சு)

430. குசன் என்பது குசாம்பன் என்பதன் திரிபு. நாபன் - குசநாபன்; நாமைகதேசம்.

இவர்களுடைய ஊர் முறையே கௌசாம்பி, மகோதயம், தர்மாரண்யம், கிரிவிரஜம் என்பன. இவ்வாறே வான்மீகமும் கூறும்.

(பி - ம்.,) [1]'குணத்தவ' [2]'குசன்கிரி விரசனன்பன் கொள்கவு சாம்பி மன்னன்; இசைகெழு மாரணம்பின் வசுபதி வசுவைக் கேய்ந்த' (எ)

குசநாபரின் நூறு புதல்வியர் வரலாறு

431 அவர்களிற் குசநா பற்சே யையிரு பத்தி னஞ்சொல்
துவரிதழ்த் தெரிவை நல்லார் தோன்றினர் வளரு நாளில்
இவர் பொழி றற்றலைக்க ணையத் தெய்துபு வாயு வெய்திக்
கவர்மனத் தினனு யந்தக் கன்னியர் தம்மை நோக்கி.

432 [1]கொடித்தலை மகரங் கொண்டோன் குனிசிலைச் சரத்தா
னெஞ்தேன்
[2]வடித்தடங் கண்ணீ ரென்னை மணத்திரென் றுரைப்ப
வெந்தை
அடித்தலத் துரைத்து நீரோ டளித்திடி னணைவ மென்னு
ஞடித்தனன் வெரிசை வீழ்ந்தா ரொளிவளை [3]மகளிசெல்
[லாம்.

433 சமிரண னகன்ற தற்பின் றையலார் தவழ்ந்து சென்றே
அமிர்துகு குதலை மாழ்கி யரசன்மாட் டுரைப்ப வன்னன்
நிமிர்குழன் மாதர்த் தேற்றி நிறைதவன் சூளி நல்கும்
திமிரறு பிரம-தத்தற் களித்தனன் றிருவ ணரை.

காதியின் அவதாரம்

434 அவன்மலர்க் [1]கைக ளுண்டக் கூனிமிர்ந் தழகு வாய்த்தார்
புவனமு றற்றுடைய கோவும் புதல்வரில் லாமல் வேள்வி
[2]தவனனி றற்புரித வோடுந் [3]தகவுறத் தழலி னுப்பண்
கவனவே [4]கத்துரங்கக் காதிவந் துதயஞ் செய்தான்.

---

431. ஐயிருபத்து - நூறு. துவர் - செந்நிறம். ஆயம் - மகளிர் கூட்டம். கவர் மனம் - காதலால் பேதிக்கப்பட்ட மனம்; கவரப்பட்ட மனமுமாம். (அ)

432. கொடித்தலை - கொடியினிடத்தே. கொண்டோன் - மன்மதன். வடி - கூர்மை. அடித்தலத்து - முன்னே; 'தந்தை தலைபத்தாள்' (பெருங். க. 32:24, அடிக்.) வெரிந் - முதுகு.

(பி - ம்.) [1]'கொடித்தனி' [2]'வடித்தடங்கண்ணீ' [3]'யார்க ளெல்லாம்' (கூ)

433. சமிரணன் - வாயு; குறுக்கல் விகாரம். நிமிர் குழல் - நீண்ட கூந்தல். திமிர் = திமிரம் - இருட்டு. (கo)

434. தவனன் - சூரியன். மன்னவர்க்குச் சூரியன் உவமை. தகவு - பெருமை. 'தகைவற' என்ற பாடத்துக்குத் தளர்ச்சி நீங்க என்பது பொருள். கவனவேகம் - மிகுந்த விரைவு. துரங்கம் - குதிரை. காதியின் குலப்பெருமை தோன்ற 'உதயஞ் செய்தான்' என்றார்.

(பி - ம்.) [1]'கைகணீவ' [2]'தவர்களிற்' [3]'தகைவறத்' [4]'கத்தின்மிக்க' (கக)

தாமும் கௌசிகையும் காதிக்குப் பிறந்தமையைக் கோசிகர் கூறல்

435 அன்னவன் றனக்கு வேந்த னரசொடு முடியுமீந்து
பொன்னக ரடைந்த பின்னர்ப் புகழ்மகோ தயத்தில் வாழும்
மன்னவன் காதிக் கியானுங் கவுசிகை யென்னு மாதும்
முன்னர்வந் துதிப்ப வந்த முடியுடை வேந்தர் வேந்தன்.

கௌசிகை நதியான விருத்தாந்தம்

436 பிருகுவின் மதலை யாய பெருந்தகை பிதாவு மொவ்வா
இருசிக னென்பவற்கவ் வேந்திழை யாளை யீந்தான்
அருமறை யவனுஞ் சின்ன ளறும்பொரு ளின்ட முற்றி
விரிமலர்த் தவிசோன் றன்பால் விழுத்தவம் [1]புரிந்து
[மீண்டான்.

437 காதலன் சேனி னீங்கக் கவுசிகை தரிக்க லாற்றாள்
மீதுறப் படர்த லுற்றாள் விழுநதி வடிவ மாகி
மாதவர்க் கரச னெங்கி மாநிலத் துறுக [1]ணீக்கப்
போதுக [2]நதியா யென்னப் பூமக னுலகம் புக்கான்.

சித்தாச் சிரமத்தைப் பற்றிமுனிவர் கூறத் தொடங்கல்

438 எம்முனை ங்கை யிந்த [1]விருநதி யாயி னாளென்
றம்முனி புகலக் கேளா வதிசய மிகவுந் தோன்றச்
செம்மலு மிளைய கோவுஞ் சிறிதிடந் தீர்ந்த பின்னர்
மைம்மலி பொழில்யா தென்னமாதவன் கூறலுற்றான்.

கோசிகர் சித்தாச்சிரம வரலாற்றைக் கூறல்

439 தங்கணை [1]யகரித் தெய்வந் தான்பிறி தின்றென் றெண்ணும்
மங்கைமார் சிந்தை போலத் தூயது மற்றுங் கேளாய்
எங்களுண் மறைக்குந் தேவ ரறிவிற்கும் பிறர்க்கு மெட்டாச்
செங்கண்மா லிருந்து மேனாட் [2]செய்தவஞ் செய்த தன்றே.

---

435. அரசொடு முடியும் ஈதல்; 'முடியும் ..... படியும் யாவையும் வழங்கி' (வி. பா. க. குருகுலச். 25.) வேந்தர் வேந்தன் - காதி. (கஉ)

436. பிதா - பிரமதேவர். பெருந்தகையாய இருசிகன். இருசிகன்: வான்மீகம் 'ரீசிகர்' என்று கூறும் இப்பெயர் விருசிக னென்றும் வழங்கும். 'மீண்டான்' என்பது சென்றான் என்னும் பொருளது. சென்றது சத்திய லோகத்துக்கு.

(பி - ம்.) [1]'புரிய வேண்டி' (கங)

437. சேனி னீங்க - பிரம லோகம் செல்ல. மாதவர்க்கரசன்: இருசிகன். உறுகண் - துன்பம். (பி-ம்.) [1]'ணீக்கிப்' [2]'பதிநீ' (கச)

438. (பி - ம்.) [1]'விருநதி' (கரு)

439. நாயகரில் தெய்வம் பிறிதின்று: 'இறந்த கற்பினுட் கெய்வம் படரன்மின், சிறந்தானை வழிபடூஉச் சென்றனள், அறந்தலைப் பிரியா வாறு

440 பாரின்பால் விசும்பின் பாலும் [1]பற்றப் படிப்ப தன்னை
[2]பேரென்ப தவன்செய் மாயப் [3]பெரும்பிணக் கொருங்கு
[தேர்வார்
ஆரென்பா னமல மூர்த்தி கருதியூ தறித றேற்றும்
ஈரைம்ப தூழிகால [4]மிருந்தவ மியற்றி விட்டான்.

வேறு

(கோசிகர் வாமனவதார வரலாற்றைக் கூறுதல்)

மாவலின்யின் செயல்

441 ஆனவ னிங்குறை கின்றவந் நாள்வாய்
ஊனமில் ஞால [1]மொடுங்கு மெயிற்றின்
ஏனனை னுந்திறல் மாவலி யென்பான்
வானமும் வையமும் வவ்வுதல் செய்தான்.

442 [1]செய்தவர் வானவ ருஞ்செய லாற்ரூ
நெய்தவழ் வேள்வியை முற்றிட நின்ரூன்
ஐய்யமில் சிந்ஷதய னந்தணர் தம்பால்
வையமும் யாவும் வழங்க வலித்தான்.

மற்றதுவே' (கலி. சு; 22-4); 'தெய்வந் தொழாஅள் கொழுநற் ரெழுதெழு வாள்' (குறள், 55); 'குலமகட்குத் தெய்வம் கொழுநனே' (நீதிநெறி. 27.) 1—2: இது கற்பினர் சிந்தையிற் றூயது. மால் தவஞ் செய்தது; 'ஒக்கநின் றுலகளித் தியோகி னெய்திய, சக்கரத்தவனென்' (உ. 1:3.) நால் மறைக்கும் தேவ ரறிவுக்கும் பிறர்க்கும் எட்டாமல்: 'சூடுகின்ற தழாய் முடியோன் சுரருடனே முனிவர்களுஞ் சுருதி நான்கும், தேடுகின்ற பதஞ்சிவப்ப..... தூது செல்ல வேண்டா' (வி. பா. திருட்டிணன், 19.) செய்தவம்: பாயிரம், 8; 442. இத்த இடம் சித்தவனம், தாருவனம் என்றும் பெயர் பெறும்.

(பி - ம்.) [1]'யகரிற் றெய்வந் தவம் பிறிதில்லை யென்னும்', 'தங்கணைய கரே தெய்வம் தமக்காலில்லை யென்னும்' [2]'செய்தனன் யோகமிப்பால்' (கசு.)

440. என்பான் (பி - ம்): அசை. அவன் பேர் படிப்பது பற்றுவதற்கு. ஈரைம்பதூழி - நூறு சதுர் யுகங்கள். 'அவர் மாயா விலாசத்தை ஒருவரும் அறிய முடியாமையிஞலே, 'அவர் தவம் செய்யும் திருவுள்ளக் கருத்து நமக்குத் தெரியாது' என்பது கருத்து.

(பி - ம்.) [1]'பற்றற்ற வடிவந் தன்னைப்' [2]'பேரென் பானவன்' [3]'பெரும் பணிக்', 'பெரும்பிணக்கார தோர்வார்' [4]'இருந்தனன் யோகத்திப்பால்' (கஎ)

441. ஞாலம் ஒருங்கும் எயிற்றின் ஏனம்-பூமி ஒருவகத்தக்க கொம்பை யுடையஆதிவராகம்; 'பாரிடந்த வெம்பன்றி' (சு. 2:81); 'கடல் புக்கு மண் ணெடுத்த காரேன கோட்டின், மிடல்பெரி தெய்தின மாதோ - தொடலைக், கரந்தை மறவர் கருதார் குழாஅந், துரந்து நிரைமீட்ட தோள்' (தொல். பொ ருள். 58. ந. மேற்.) (பி - ம்) [1]'மொருங்கு' (கஅ)

442. செய்தவர் - இருடிகள். வலித்தல் - துணிதல்.

(பி - ம்.)[1]'செய்தவம் வானவருஞ் செயலாற்ரூர்.....வேள்வியும்' (கக)

வானவர் வேண்டுகோட்குத் திருமால் உடன் படல்

443 ஆய தறிந்தனர் வானவ ரந்நாள்
மாயனை வந்து வணங்கி யிரந்தார்
தீயவன் வெந்தொழி [1]றீரென நின்றூர்
நாயக னும்மது செய்ய நயந்தான்.

வாமன மூர்த்தியின் அவதாரம்

444 கால நுனித்துணர் காசிப னென்னும்
வாலறி வற்கதி திக்கொரு மகவாய்
நீல நிறத்து நெடுந்தகை வந்தோர்
ஆலமர் வித்தி னருங்குற ளானான்.

வாமனர் மாவலிபாற் சேல்லல்

445 முப்புரி நூலினன் முஞ்சியன் விஞ்சை
கற்பதொர் [1]நாவலொடு புற்படு கையான்
அற்புத னற்புத ரேயறி யுந்தன்
[1]சிற்பற மொப்பதோர் மெய்க் கொடு சென்றான்.

மாவலியின் உபசார மோழிகள்

446 அன்றவன் வந்த தறிந்துல கெல்லாம்
வென்றவன் மூந்தி வியந்தெதிர் கொண்டான்
[1]நின்றுணை யந்தண ரில்லை நிறைந்தோய்
என்றனி [2]லுய்ந்தவ ராருள ரென்றான்.

---

443. (பி - ம்.) [1]'றீர்கென' (உ9)

444. வாலறிவன் - மெய்யுணர்வினையுடையவன் 354; குறள், 2. ஆலமர் வித்து வாமன மூர்த்திக்கு உவமை; ஆலமும் வித்துமொத்தடங்கு பான்மையான்' (சூ. 3:74); 458-ஆங் கவியையும் அதன் குறிப்பையும் இத னுடன் ஒப்பிடுக. (உக)

445. முப்புரிநூல்: 'ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்' (முருகு 183) மூஞ்சியன் - தருப்பையாலியன்ற அரைஞாணை யுடையான். விஞ்சை - இங்கே வேதம். அற்புதன் - ஞானமே திருமேனியாக வுடை யவன். புற்படுகையன்; புல் - பவித்திரம்; ஆகுபெயர். அந்தணரியல்பை நூல்கள் இங்ஙனமே கூறும்.

(பி - ம்.) [1]'நாவி னனற்பொதி', 'நாவனனற்படு' [2]'சிற்பத' (உஉ)

446. நின்றுணையந் தணரில்லை. 451, 3—4. ஒப்பு; 'உன்னின் யாருள ருன்னரு ளெய்திய, என்னின் யாருள ரிற்பிறந் தாரென்றான்' (கூ. 3:30.)

(பி - ம்.) [1]'நின்றனி லந்தணர்' [2]'லுயர்ந்தவ ரானினி யென்றான்' (உங)

வாமனரின் மறுமொழி

447 ஆண்டகை யவ்வுரை கூற வறிந்தோன்
வேண்டினர் வேட்கையின் மேற்பட வீசி
நீண்டகை யாயினி நின்னுழை வந்தோர்
மாண்டவ ரல்லவர் மாண்பில ரென்றான்.

மாவலி மூவடி மண் வழங்க உடன்படுதலும் வேள்வியின் செயலும்

448 சிந்தை யுவந்தெதி ரென்செய வென்றான்
அந்தணன் மூவடி மண்ணரு ளுண்டேல்
வெந்திற லோயிது வேண்டு மெனுமுன்
தந்தன னென்றனன் வெள்ளி தடுத்தான்.

449 கண்ட திறத்தது கைதவ மைய
கொண்ட னிறக்குற ளென்பது கொள்ளேல்
[1]அண்டமு மற்றை யகண்டமு மேனுள்
உண்டவ னீய துணர்ந்துகொ ளென்றான்.

ஈகையின் மேன்மையையும் தடுப்பதன் தீமையையும் மாவலி வேள்விக்கு எடுத்துரைத்தல்

450 [1]நினைக்கில்லை யென்கை நிமிர்ந்திட வந்து
தனக்கிய லாவகை [2]தாழ்வது [3]தாவில்
கனக்கரி யானது கைத்தல மென்னின்
எனக்கிதன் மேனலம் யாதுகொ லென்றான்.

---

447. வீசுதல் - தனக்கென்று கருதாது தாராளமாக வழங்குதல்; 1324. மாண்டவர் - மாட்சிமை யுள்ளோர். அல்லவர் - நின்பால் இரத்தற்கு வாராதோர்; 'இரத்தலு மீதலே போலுங் கரத்தல், கனவிலுந் தேற்றாதார் மாட்டு' (குறள், 1054.) (உச)

448. அருள் உண்டேல் - கொடுப்பது உண்டானால். வெள்ளி - அசுர குருவான சுக்கிராசாரியர்; இவர் மாவலிக்கு மந்திரி என்பர் பின்; 457. (உரு)

449. கைதவம் - வஞ்சனை.

(பி - ம்.) 1 'அண்டமு முற்று மகண்டமு', 'அண்டமு முற்ற வகண்டமு' (உசு)

450. நினைக்கில்லை - நீ நினைத்துப் பார்க்கவில்லை. இயலாவகை - தகுதிக்குத் தகாத வகையில். தாவில் - அழிதலில்லாத. கனக்கரியான் என்றது கைம்மாறு கருதாமற் பிறாக்கு வழங்குபவன் என்ற கருத்தோடு கூடியது; கனம் - மேகம். தாழ்வது: எழுவாய். கைத்தலம்: பயனிலை.

(பி - ம்.) 1 'நினைக்கிலை' 2 'தாழ்வன' 3 'தாழ்வில்' (உஎ)

451 துன்னினர் துன்னல ரென்பது சொல்லார்
முன்னிய நன்னெறி நூலவர் முன்வந்
துன்னிய தான முயர்ந்தவர் கொள்க
என்னி லிவன்றுணை யாவ ருயர்ந்தார்.

452 வெள்ளியை யாதல் விளம்பினு மேலோர்
வள்ளிய [1]ராக வழங்குவ தல்லா
தெள்ளுவ தென்சில வின்னுயி ரேனும்
கொள்ளுத றீது கொடுப்பது நன்றால்.

453 மாய்ந்தவர் மாய்ந்த வல்லர்கண் மாயா
தேந்திய கைகொ டிரந்தவ ரெந்தாய்
வீய்ந்தவ ரென்பவர் வீய்ந்தவ ரேனும்
ஈய்ந்தவ ரன்றி யிருந்தவர் யாரே.

454 அடுப்ப வரும்பழி செய்ஞரு மல்லர்
கொடுப்பவர் முன்பு கொடேலென நின்று
தடுப்பவ ரேபகை தம்மையு மன்னர்
கெடுப்பவ ரின்னதோர் கேடிலை யென்றான்.

---

451. துன்னினர் - நண்பர். துன்னலர் - பகைவர். நூலவர் என்பது சொல்லார் கொள்க என்னில்; என்னில் - என்று கூறுவாரே யாயின். (உஅ)

452. வெள்ளியை - அறிவின்மையை யுடையாய்; வெண்மை - அறியாமை; 98. குறிப். 3—4: 'நல்லா றெனினுங் கொளதீது மேலுலகம், இல்லெனினு மீதலே நன்று' (குறள், 222); 'ஈயென விரத்தலோ வரிதே', 'ஈயென விரத்த லிழிந்தன்று ..... கொள்ளே னென்ற லதனினு மூயர்ந்தன்று' (புறநா. கடுசை, 8, உஅசை : 1—4.)

(பி - ம்.) 1 'ராகி' (உக)

453. மாய்ந்தவர் - இறந்தோர். வீந்தவ ரென்பவர் மாயாது இரந்தவர் என்று கூட்டுக; 'இரந்து மூயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து, கெடுக உலகியற்றி யான்' (குறள், 1062.) ஈய்ந்தவரே இருந்தவர்: 'சாதலி னின்னாத தில்லை யினிதூஉம், ஈதல வியையாக் கடை' (குறள், 230.) இருந்தவர்-புகழுடம்போடு இருந்தவர்; 'இரப்பார்க்கொன் றீவார்மேல் நிற்கும் புகழ்' (குறள், 232.) (உஎ)

454. அடுப்ப வரும்பழி - தம்மைச் சேரவரும் பழியை. ஒருவருக்குப் பழி செய்பவர் பகைஞரல்லர்; கொடுப்பது விலக்குபவரே பகைவர். தம்மையும் - விலக்குவோராகிய தங்களையும். இன்னது - இத்தகையதைக் காட்டிலும். (உக)

455 [1]கட்டுரை யுத்தம கைத்துள போதே
இட்டிசை கொண்டற னெய்த [2]முயன்மூர்க்
குட்டெறு வெம்பகை யாவது லோபம்
விட்டிட லென்று [3]விலக்கினன் மாதோ.

வேறு

456 எடுத்தொரு வருக்கொருவ ரீவதனின் முன்னம்
தடுப்பது நினக்கழகி தோ[1]தகவில் வெள்ளி
கொடுப்பது விலக்கு[2]கொடி யோர்தமது சுற்றம்
உடுப்பதுவு முண்பதுவு [3]மின்றியொழி யுங்காண்.

வேறு

மாவலி நீரோடு வழங்கியது

457 முடியவிம் மொழியெலா மொழிந்து மந்திரி
கொடியனென் னுரைத்தசொல் லொன்றுங் கொண்டிலன்
அடியொரு மூன்றுநீ யளந்து கொள்கெனை
நெடியவன் குறியகை [1]நீரை நீட்டினன்.

---

455. கட்டுரை - உறுதிச்சொல். உத்தம என்றது வெள்ளியை; இகழ்ச்சிக்குறிப்பு. கைத்துளபோதே: 'என்னனு மொன்றுதங் கையுறப் பெற்றக்கால், பின்னவ தென்று பிடித்திரா - முன்னே கொடுத்தா ருயப் போவர்', 'மற்றறிவா நல்வினை யாமிகாய மென்னுது கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்மின்' (நாலடி. 5, 19.) இட்டு இசைகொண்டு: 'ஈத லிசைபட வாழ்தல்' (குறள், 231.) உட்டெறு வெம்பகை - அரிஷ்ட வர்க்கங்களுள் ஒன்று உலோபம். முயன்மூர்க்குப் பகை உலோபம். உலோபக் கொடுமை: 393, குறிப். விட்டிடல் - விட்டு விடுக; வியங் கோள்.

(பி - ம்) 1 'கட்டுரை யிற்றம' 2 'முயன்மூர் உட்பெறு' 3 'விலக் கினர் தாமே' (கூஉ)

456. தகைவில் என்ற பாடத்துக்கு 'ஈவது விலக்கும் இக்குண மொழிய மற்ற குணங்களில் தளர்ச்சியில்லாத' என்பது பொருள். வெள்ளி: இகழ்ச்சிக்குறிப்பு. 3—4: 'கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉம், உண்பதூஉ மின்றிக் கெடும்' (குறள், 166.)

இச் செய்யுள் சில பிரதிகளில் இல்லை. இது கம்பர் வாக்கன்று என்பர் பலர். இச் செய்யுளின்றியும் கதைப் போக்கின் தொடர்ச்சி கெட வில்லை.

(பி - ம்.) 1 'தகைவில்' 2 'கொடியோ யுனது சுற்றம்' 3 'மின்றி விடுகின்மோய்' (கூஉ)

457. முடிய - முற்றிலும். மந்திரி - இரகசியாலோசனை சொல் பவன் என்ற பொருளது. எனை - என்று சொல்லி. கை - கையில்.

(பி - ம்.) 1 'நீரி னீட்டினன்'

திரிவிக்கிரமாவதாரம்

458 கயந்தரு நறும்புனல் கையிற் றீண்டலும்
பயந்தவர் களுமிகழ் குறளன் பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பி னேங்கினன்
உயர்ந்தவர்க் குதவிய வுதவி யொப்பவே.

திருமால் மூன்றடி அளந்து கொண்டமை

459 கின்றகான் மண்ணெலா நிரப்பி யப்புறம்
சென்றுபா [1]வியதிலைச் சிறிது பாரெனு
[2]ஒன்றவா னுலகெலா மொடுக்கி யும்பரை
வென்றகான் மீண்டது வெளிபெ றுமையே.

460 உலகெலா முள்ளடி [1]யடக்கிற் றோரடி
அலகிலா வவ்வடிக் கமைந்த [2]மெய்யனேல்
இலகுலாந் தழாய்முடி யேக நாயகன்
சிலகுலாந் தோளினுய் சிறியன் சாலவே.

இக்கவிக்குப் பின் குறுங்குடிப் பிரதியில்,

'குறியவன் கையினீர் விழாமற் குண்டிகை
மறிபட வாமனன் மலர்க்கைத் தருப்பையாற்
செறிவது நீக்கிடச் சிதைந்து கண்ணுடைந்
துறுதுயர் வெள்ளியு மொதுங்கிப் போயினன்'

என்ற செய்யுள் காணப்படுகிறது. வேறு சில பிரதிகளில் இச்செய்யுளுக்குப் பிரதியாக,

'நீட்டிய வேலியின் நீரை மாற்றினன்
நாட்டம தகத்துளான் சிலம்பி னுமத்தான்
ஓட்டினன் தருப்பையை யுடைகண் ணீர்விழ
வாடடமில் லந்தணன் மலர்க்கை நீட்டினன்'

என்ற செய்யுள் இருக்கிறது. இவற்றிற் கண்ட செய்தி வான்மீகத்தில் இல்லை. (நூசு)

458. உயர்ந்தவர்க் குதவிய உதவி : 30, குறிப். ஒப்பு : 'நேமியொடு வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை, நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்' முல்லை. 1—3.) (நுரு)

459. பார் - பூமி. வெளி - இடம்.

(பி . ம்.) 1 'விற்றிலை' 2 'ஒன்றிவா' (நுசு)

460. எலாம் - பூலோகமும் மேலுலகமும். மெய்யனேல் - திருமேனியை யுடையனுனல். ஏக நாயகன் சாலச் சிறியன் ; சிறியன்: 'சிறிய னென் றென்னினுஞ் சிங்கத்தை யிகழேல் கண்டாய், சிறுமையின் பெருமையை மாவலியிடைச் சென்றுகேள்' (திவ். பெரியாழ். க. 5:8.)

(பி - ம்.) 1 'யடக்கி யோரடிக் கலகிலா' 2 'மெய்யதாம்' (நுஎ)

விண்ணுலகை இந்திரனுக்கு ஈந்து திருமால் பாற்கடல் சென்றது

461 உரியதிந் திரற்கிதென் றுலக மீந்துபோய்
விரிதிரைப் பாற்கடற் பள்ளி மேவினன்
கரியவ னுலகெலாங் கடந்த தாளினை
திருமகள் கரந்தொடச் சிவந்து காட்டவே.

கோசிகர் சித்தாச்சிரமத்திலேயே யாகம் தொடங்கல்

462 ஆதலா லருவினை யறுக்கு மாரிய
காதலாற் கண்டவர் பிறவி காண்குறார்
வேதநூன் முறைமையால் வேள்வி முற்றுவேற்
கீதலா தில்லிவே றிருக்கற் பாலதே.

463 ஈண்டிருந் தியற்றுவன் யாகம் யாவனை
நீண்டபூம் பழுவத்தை நெறியி னெய்திப்பின்
வேண்டுவ கொண்டுதன் வேள்வி மேவினன்
காண்டகு குமரரைக் காவ லேவியே.

இராம லட்சுமணர் யாகத்தைக் காத்தல்

464 எண்ணுதற் காக்கரி திரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற விமையிற் காத்தனர்.

அரக்கர் வருவதென்றென்று இராமன் வினதல்

465 காத்தனர் திரிகின்ற காலை வீரரின்
மூத்தவன் முழுதுணர் முனியை [1]முன்னிநீ
தீத்தொழி லியற்றுவ ரென்ற தீயவர்
ஏத்தருங் குணத்தினாய் வருவதென் றென்றான்.

---

461. கரியவன் - கண்ணன். (சுஅ)

462. ஆதலால் அறுவினை அறுக்கும்: மங்கைமார் சிந்தை போலத் தூயது, செங்கண் மால் செய்தவம் செய்தது: 439. ஆதலால் இந்தச் சித்தாச்சிரமம் இருவினைத் தொடர்பையும் அறுத்துவிடும். இராமபிரானைத் திருமாலெனக்கொண்டு 'இருவினை யறுக்கும் ஆரிய' என்றார் என்னலுமாம். கண்டவர் - இந்த ஆச்சிரமத்தைக் கண்டவர்கள். (சுக)

463. பழுவத்தை - காட்டை. வேண்டுவ கொண்டு: 'வேண்டுவ வெல்லாயி னியற்றி' (உ. 2:3.) (சுo)

464. எண்ணுதற்கும் ஆக்குவதற்கும் அருமையான வேள்வி. இரண்டு மூன்று நான். ஆறு தினங்கள். ஆறு நாட்கள் யாகம் நடந்ததாக வான்மீகம் கூறும். ஈற்றடிக்கு விசேடப் பொருளைக் கூறுவர் பலர். (சுக)

465. முன்னி - எதிர்நோக்கி.
(பி - ம்.) 1 'முன்னியத்' (சுஉ)

முனிவர் மௌனமும் அரக்கர் தோற்றமும்

466 வார்த்தைமா றுரைத்திலன் முனிவன் மவுனியாய்ப்
போர்த்தொழிற் குமரனுந் தொழுது போந்தபின்
பார்த்தனன் விசும்பிடைப் பருவ மேகம்போல்
ஆர்த்தன ரிடித்தன [1]ரசனி யஞ்சவே.

அரக்கர் செயல்

467 எய்தன ரெறிந்தன ரெரியு நீருமாய்ப்
பெய்தனர் பெருவரை பிடுங்கி வீசினர்
வைதனர் தெழித்தனர் [1]மழுக்க ளோச்சினர்
செய்தன ரொன்றல தீய மாயமே.

468 ஊனகு படைக்கல முருத்து [1]வீசின
கானக [2]மறைத்தன கால மாரிபோன்
மீனகு திரைக்கடல் விசும்பு போர்த்தென
வானக [3]மறைத்தன வலைந்த சேனையே.

469 வில்லொடு [1]மின்னுவாண் மிடைந்து [2]ரவிடப்
[3]பல்லியங் கடிப்பினி லிடிக்கும் பல்படை
ஒல்லென [4]வுரறிய வூழிப் பேர்ச்சியின்
வல்லிவர் தெழுந்ததோர் மழையும் போன்றதே.

இராமன் அரக்கரை இலட்சுமணனுக்குக் காட்டல்

470 கவருடை யெயிற்றினர் கடித்த வாயினர்
துவர்நிறப் பங்கியர் சுழல்கட் டீயினர்
பவர்சடை யந்தணன் பணித்த தீயவர்
இவரென விலக்குவற் கிராமன் காட்டினான்.

---

466. அசனி - இடி. அரக்கர் இடையூறு செய்ய வந்தது யாகந் தொடங்கிய ஆறும் காளிலென்பர் **வான்மீகி**. (பி - ம்.) 1 'ரசனி யென்ன' (சஎ)

467. (பி - ம்.) 1 'மழுக்கொண் டோச்சினர்' (சஅ)

468. உருத்து - கோபங் கொண்டு. வானக மறைத்தன : அரக்கர் அருகில் வாராதிருக்க முனிவர் ரக்ஷோக்ன மந்திரத்தை உச்சரிக்கிற படியினால் அவ்வரக்கர் வானிலேயே நின்றனர் என்பது **வான்மீகத்தால்** அறியக் கிடைப்பது.

(பி - ம்.) 1 'வீசினர்' 2 'மறைத்தனர். 3 'மறைத்தது மறங் கொள்' (சடு)

469. ஊழிக்காலத்து மேகம் அரக்கர் சேனைக்கு.

(பி - ம்.) 1 'பகழிவாண்' 2 'மீதுலாய்ப்' 3 'பல்லியத் திடிப்பன' 4 'உரப்பிய' (சசு)

470. கவர் - பிளவு. பங்கி - ஆடவர் மயிர்முடி. பவர்சடை; பவர் - கொடி. பணித்த - சொன்ன. (சஎ)

இலட்சுமணன் செயல்

471 கண்டவக் குமரனுங் கடைக்கண் டூயுக
விண்டலை நோக்கித்தன் வில்லை [1]நோக்குழி
அண்டர்நா யகவினிக் காண்டி யீண்டிவர்
துண்டம்வீழ் வனவெனத் தொழுது சொல்லினான்.

இராமன் சரக்கூடம் அமைத்தல்

472 தூமவே லரக்கர்தம் நிணமுஞ் சோரியும்
ஓமவெங் கனலிடை யுகுமென் றுன்னியத்
தாமரைக் கண்ணனுஞ் சரங்க ளேகொடு
கோமுனி யிருக்கையோர் கூட மாக்கினான்.

முனிவர்கள் இராமனைச் சரண்புகல்

473 நஞ்சட வெழுதலு நடுங்கி நாண்மதிச்
செஞ்சடைக் கடவுளை யடையுந் தேவர்போல்
வஞ்சனை யரக்கரை வெருவி மாதவர்
அஞ்சன வண்ணனின் னபயம் யாமென்றார்.

இராமன் முனிவர்களுக்கு அபயமளித்து அரக்கரோடு போர்புரிதல்

474 கவித்தனன் கைத்தலங் கலங்க னீரெனச்
செவித்தல நிறுத்தினன் சிலையின் றெய்வநாண்
புவித்தலங் குருதியிற் புணரி யாக்கினன்
குவித்தன னரக்கர்தஞ் சிரத்தின் குன்றமே.

சுபாகு மாரீசர்களின் கதி

475 திருமக ணையகன் றெய்வ வாளிதான்
வெருவரு தாடகை பயந்த வீரர்கள்
இருவரி லொருவனைக் கடலி லிட்டதவ்
வொருவனை யந்தகன் புரத்தி லுய்த்ததே.

---

471. வில்லை நோக்கல் : 401, குறிப். இலக்குவன் தன் வில்லைப் பார்த்தது அத்துணைப் பேரையும் கொல்லத் துணிந்த குறிப்பு.
(பி - மீ.) 1 'நோக்கினான்' (சஅ)
472. தூமம் - புகை. புகைகின்றவேல், புகை போன்ற கருநிற வரக் கருமாம். சோரி - இரத்தம். கோமுனி - சிறந்த முனிவர். கூடம் - சரக்கூடம், மறைந்த இல்; வி. பா. காண்டவ. 36.
(பி - மீ.) 1 'பிணமுஞ்' (சக)
473. இதுவும் அடுத்த கவியும் சில பிரதிகளில் இல்லை. (நo)
474. (பி - மீ.) 1 'சிலையின் றெய்ய நாண்' (நக)
475. ஓரம்பு மாரீசனைக் கடலிலும் சுபாகுவை அந்தகன் புரத்தும் உய்த்தது ; 751. சுபாகுவுக்குத் தனியாக ஓர் அம்பை எவினரென்பர்

இராமன் மற்ற அரக்கரை ஓட்டிக்களம் கொள்ளல்

476 துணர்த்தபூந் தொடையினன் பகழி தூவினன்
கணத்திடை விசும்பினைக் கவித்துத் [1]தூர்த்தலால்
பிணத்திடை நடந்திவர் பிடிப்ப ரீண்டெனை
உணர்த்தின ரொருவர்முன் னெருவ ரோடினர்.

477 ஓடின வரக்கரை யுருமின் வெங்கணை
கூடின குறைத்தலை [1]நிறைத்துக் கூத்துகின்
ருடின வலகையு மையன் கீர்த்தியைப்
பாடின பரந்தன பறவைப் பந்தரே.

விண்ணவர் செயல்

478 பந்தரைக் கிழித்தன பரந்த பூமழை
அந்தரத்துந்துபி[1]முகிலி னார்த்தன
இந்திரன் முதலிய வமர ரீண்டினர்
சுந்தர வில்லியைத் தொழுது வாழ்த்தினர்.

வேறு

சராசரங்களின் மகிழ்ச்சியும் கோசிகர் கூற்றும்

479 புனித மாதவ [1]ராசியம் பூமழை பொழிந்தார்
அனைய [2]கானத்து மரங்களு மலர்மழை [3]சொரிந்த
மூனியு மவ்வழி வேள்வியை [4]முறைமையின் முற்றி
இனிய சிந்தைய னிராமனுக் கினையன விசைத்தான்.

பின்; கூ. 7:186. இராமபிரான் மாரீசன்மேல் மானவாஸ்திரமும் சுபாகுவின்மேல் ஆக்கினேயாஸ்திரமும் பிரயோகித்ததாக வான்மீகம் கூறும். (நுஉ)

476. துணர்த்த - பூங்கொத்துக்களையுடைய. கவித்துத் தூர்த்தலால் - மறைத்து நிறைத்ததால். இக்கவி கம்பரின் நகைச்சுவைக்கு உதாரணம்.

(பி - மி.) 1 'தூர்த்தது' (நுஊ)

477. உருமின் - இடியை ஒத்த. குறைத்தலை கூத்தாடின; அலகை பாடின; பந்தர் பரந்தன.

(பி - மி.) 1 'பிறைத்துக்', 'பிடைந்து' (நுஎ)

478. தொழுது வாழ்த்தல் கண்ணெச்சிற் படாமைக்கு. வாழ்த்தி யீண்டினர்.

(பி - மி.) 1 'முங்கி யார்த்தன' (நுஏ)

479. ஆசியம் பூமழை - ஆசிமொழிகளாகிய மழை. துஷ்டர் ஒழிந்ததனால் கானகத்து மரங்களும் தளிர்த்து மலர்ந்தன என்றபடி.

(பி - மி.) 1 'ராசியின்' 2 'காலத்து' 3 'பொழிந்த' 4 'முறை நெறி' (நுஐ)

480 பாக்கி யம்மெனக் குளதென நினைவுறும் பான்மை
போக்கி நிற்கிது பொருளென [1]வுணர்கிலன் புவனம்
ஆக்கி மற்றவை யனைத்தையு மணிவயிற் றடக்கிக்
காக்கு நீயொரு வேள்விகாத் தனையெனுங் கருத்தே.

தாம் செய்யவேண்டிய பணியை இராமர் வினவுதல்

481 என்று கூறிய பின்னரவ் வெழின்மலர்க் கானத்
தன்று தானுறைந் தருந்தவ முனிவரோ டிருந்து
குன்று போற்குணத் தானெதிர் கோசலை குரிசில்
இன்று நான்செயும் பணியென்கொல் பணியென விசைத்
தான்.]

கோசிக முனிவரின் மறுமொழி

482 அரிய யான்சொலி [1]னையநிற் கரியதொன் றில்லைப்
பெரிய காரிய மூளவவை முடிப்பது பின்னர்
விரியும் வார்புனன் மருதஞ்சூழ் மிதிலையர் கோமான்
புரியும் வேள்வியுங் காண்டுநா மெழுகென்று போனார்.

---

480. பாக்கியம் - நல்வினை. போக்கி - அல்லாமல். மணிவயிறு: 'உய்யவுலகு படைத்துண்ட மணிவயிறு' (பெரியாழ். 1. 5:1.); அணி வயிறுமாம். இராமபிரானைத் திருமாலாகக் கொண்டு கூறியது இது; 489.

(பி - ம்.) [1] நினைகிலன்' (நுஎ)

481. குன்றுபோற் குணத்தான் - கோசிகர்; 'குணமென்னுங் குன்றேறி நின்றூர்', 'குன்றன்னார்' (குறள், 29, 898); 'ஆன்றூர் போலத், துளக்கமில்லாத் திருத்தகு நிலைமைய' (பெருங். க. 10: 4-5); 'மல்லன் மலையனைய மாதவர்' (சீவக. 2789); மலையனைய நிலையுடைய மாதவர்கள்' (மேரு. சமவ. 50.) பணியென - கட்டளை யிடுகவென்று கேட்க. இசைத்தவன் கோசிகர் (நுஅ.

432. பெரிய காரியம் - இராவண சங்காரம் முதலியன; வில்வளைத்தல் முதலியவை என்றல் இராமரின் பெருமைக்கு இழுக்காகும். வேள்வியுங் காண்டும்: 722, 724.

(பி - ம்.) [1] 'னையனுக்கரிய' (நுக)

வேள்விப் படலம் முற்றும்.

9. அகலிகைப் படலம். *

மூவரும் சோணையை அடைதல்

483 அலம்பு மாமணி யாரத்தோ [1]டகிலளே புளின
நலம்பெய் பூண்முலை நாகிள வஞ்சியா மருங்குல்
புலம்பு மேகலைப் புதுமலர்ப்பு னையறற் கூந்தற்
சிலம்பு சூழுங்காற் சோணையாந் தெரிவையைச் சேர்ந்தார்.

சூரியாஸ்தமனம்

484 நதிக்குள் வந்தவ ரெய்தலு மருணன்ற னயனக்
கதிக்கு முந்துறு கலினமான் றேரொடுங் கதிரோன்
உதிக்குங் காலையிற் றண்மைசெய் வான்றன துருவிற்
கொதிக்கும் வெம்மையை யாற்றுவான் போற்கடற் குளித்
[தான்.]

---

* பல பிரதிகளில் இவ்வொரு படலம் மூன்று படலங்களாக உள்ளது. செய். 483—513 துருவாசர் சாபப் படலம், மாலை வரலாற்றுப் படலம், சமுத்திர மதனப் படலம் என்பதும், செய். 514—544 கங்கை வரலாற்றுப் படலம் என்பதும், செய். 567 முடிய எஞ்சியுள்ள பகுதி அகலிகைப் படலம் என்பதும் பல பிரதிகளாற் றெரியும் செய்தியாகும்; வேறு சில பிரதிகளில் இஃது அகலிகை சாபந்தீர் படலம் என்றும் காணப்படுகிறது.

483. அலம்புதல் - ஒலித்தல். மணி - முத்தும் இரத்தினங்களும். ஆரம் - சந்தனம். புளினம் - மணற்குன்றுகள். புளினம் நகில்களுக்கு உவமை. மணி ஆரம் அகில்களை அளைதல் புளினத்துக்கும் நகில்களுக்கும் பொது. வஞ்சி - கொடி. புலம்பு - ஒலிக்கின்ற ஒலி. ஆற்றின் ஒலி மேகலையின் ஒலிக்கு. புதுமலர் மேகலைக்கு. அறல் - கருமணல். சிலம்பு - மலை, நூபுரம். கார் சோணை - கால்களையுடைய சோணை. கால் - வாய்க்காலும் காலென்னும் உறுப்பும்: 'பல காலி னோடியுங் கண்டதில்லை' (105.) வான்மீகத்தில் கங்கை வரலாற்றுக்குப்பின் சமுத்திர மதனச்செய்தி கூறப்படுகிறது.

(பி - ம்.) [1] 'டகிலணி' (க)

484. கலின மான் - குதிரைகள். சூரியாஸ்தமயம்: 349; 628; 'அந்த நெடுஞ்சுரத்தின் மீதேக வாங்கழலும், வெந்தழலே யாற்றுவான் மேற்கடற்கே - எந்தை, குளிப்பான் போற் சென்றடைந்தான் கூரிருளாற் பாரை, ஒளிப்பான் போற் பொற்றே ருடன்' (நள. உ:89.) (உ)

மூவரும் ஒரு சோலையில் தங்குதல்

485 கறங்கு தண்புனற் கடிநெடுந் தாளுடைக் கமலத்
[1]தறங்கொ ணுண்மலர்க கோயில்க ளிதழ்க்கத வடைப்பப்
பிறங்கு தாமரை வனம்விட்டுப் பெடையொடுங் களிவண்
டுறங்கு கின்றதோர் நறுமலர்ச் சோலைபுக் குறைந்தார்.

அச்சோலையில் திதி தவம்செய்த வரலாற்றைக்
கோசிகர் கூறுதல்

486 இனைய சோலைமற் றியாதென வினவ
வினையெ லாமற நோற்றவன் விளம்புவான் மேனாட்
டனைய ரானவர்க் கிறங்கியே காசிபன் றனது
மனையு ளாடவம் புரிந்தன ளிவணென வலித்தான்.

விஞ்சையர் மகள் இலக்குமியிடம் மாலைபெறல்

487 அண்ட கோளகைக் கப்புறத் தென்னையா [1]ருடைய
கொண்ட னீள்பதத் தெய்தியோர் விஞ்சையர் கோதை
புண்ட ரீகமென் [2]பதத்தியைப் புகழ்ந்தனள் புகழ
வண்ட ருமது [3]மாலிகை கொடுத்தனன் மகிழ்ந்து.

அவள் அம்மாலையைத் துருவாசருக்கு அளித்தல்

488 அன்ன மாலையை யாழிடைப் பிணித்தய னுலகம்
கன்னி மீடலுங் [1]கசடறு முதியெதிர் காணு

---

485. கறங்கு - ஒலிக்கின்ற. கடி - மணம். தாமரை வனம் - தாமரைப் பொய்கை; வனம் - நீர்; தாமரைக் காடுமாம்.

(பி - ம்.) [1]'இறங்குவன மலர்க்' (கூ)

486. இதுமுதல் 503 ஆங் கவிமுடிய ஒரு தொடர். வினையெலாம் அற நோற்றவன் - கோசிகர். தனையர் - அசுரர். மனையுளாள் - திதி. வலித்தான் - சொன்னான். (சு)

487. அண்ட கோளகை: 542. கொண்டல் - திருமால். பதம் - வைகுண்டம். புண்டரீக மென்பதத்தி : திருமகள்.

(பி - ம்.) [1]'ளமலன்' [2]'பதத்தியை யெய்தினள் புகழ்' [3]'மாலைகைக்' (நு)

488. மாலையை வீணையிற் சூட்டுதல்: 'நரந்தப் பல்காழ்க் கோதை சுற்றிய, ஐதமை பாணி வணர் கோட்டுச் சீறியாழ்' (புறநா. கூஅ: 4-5); சிலப். எ:க; சீவக. 1466. கசடு அறுமுனி - குற்றமற்ற துருவாசர்; சினமிகுந்த வராதல் பற்றிப் பல பிரதிகளில் இந்த இடத்தில் இவர் கசடறுமுனி, கசட் டறுமுனி போன்ற தொடராலேயே குறிக்கப்படுகிறார். 'சாபத்தாலுஞ்

என்னை யாளுடை நாயகிக் [2]கிசையெடுப் பவளென்
றன்ன டாளினை வணங்கிநின் றேத்துற வினையாள்.

489 உலகம் யாவையும் [1]படைத்தளித் துண்டுமி ழொருவன்
இலகு மார்பகத் திருந்துயிர் யாவையு மீன்ற
திலக வாணுதல் சென்னியிற் சூடிய தெரியல்
அலகின் மாமுனி பெறுகென வளித்தன ளளியாள்.

துருவாசர் விண்ணுல கடைதல்

490 தெய்வ நாயகி சென்னியிற் சூடிய தெரியல்
ஐய யான்பெறப் புரிந்ததைத் தவமென [1]வாடி
வெய்ய மாமுனி சென்னியிற் சூடியே வினைபோய்
[2]உய்யு மாறிதென் றுவந்துவந் தும்பர்நா டுற்றான்.

இந்திரன் பவனிவரல்

491 பெய்யு மாமுகில் வெள்ளியம் பிறங்கன்மீப் பிறழும்
செய்ய தாமரை யாயிர [1]மலர்ந்துசெங் கதிரின்
மொய்கொள் சோதியை மிலைச்சிய முறைமைபோன் [2]றெளிரு
மெய்யி னோடையி ராவதக் களிற்றின்மேல் விளங்க.

492 அரம்பை மேனகை திலோத்தமை யுருப்பசி யனங்கன்
சரம்பெய் தூணியிற் றளிரடி நூபுரந் தழைப்பக்
கரும்பை யுஞ்சுவை [1]கைப்பித்த [2]சொல்லிபர் விளரி
நிரம்பு பாடலோ டாடினர் வீதிக ணெருங்க.

சாபமொழி தன்னுல் வளருந் தவத்தாலும், கோபத்தாலும் பேர்படைத்த கொடிய முனிவன் துருவாசன்' (வி. பா, துருவாசச். 1.) என்னை யாளுடைய நாயகி: கம்பர் மதம்.

(பி - ம்.) [1]'கசட்றை', 'கசடறை', 'கட்டரை' [2]'இசைபுணர்ப் பவ', 'இசையெழுப் பவ' (சு)

489. ஒப்பு: 480; திருவாய்மொழி, 4.5:10.

(பி - ம்.) [1]'படைத் திடந்துண்டுமி' (எ)

490. ஐய: ஆச்சரியக் குறிப்பி. சூடி - தலையில் தாங்கி, ஏற்று.

(பி - ம்.) [1]'வழியா' [2]'உய்யுமா றரி தென்று போயும்பர்' (அ)

491. கார்மேகம் இந்திரனுக்கும் வெள்ளிமலை ஐராவதத்துக்கும் உவமை. தாமரை ஆயிரம் இந்திரனுடைய கண்களுக்கு; செங்கதிர் அவன் முடிக்கு; ஆபரணங்களுக்குமாம்.

(பி - ம்.) [1]'மலர்ந்த செங்' [2]'றணிசேர்' (கூ)

492. இதுவும் அடுத்த கவியும் சில பிரதிகளில் முன் பின்னை மாறி உள்ளன. பெண்கள் அடிக்கு மன்மதன் தூணி. விளரி: யாழுக்கு ஆகுபெயர்; இரங்கற்பண் அன்று.

(பி - ம்.) [1]'கற்பித்த' [2]'குதலையர்' (கo)

493 நீலமால்வரை தவழ்தரு நிறைமதிக் கற்றை
போல [1]வேயிரு புடையினுஞ் சாமரை புரளக்
கோல மாமதி குறைவற நிறைந்தொளி குலாவி
[2]மேலு யர்ந்தென வெள்ளியந் தனிக்குடை விளங்க.

494 தழங்கு பேரியுங் குறட்டொடு பாண்டிலுஞ் [1]சங்கும்
வழங்கு கம்பலை மங்கல கீதத்தை மறைப்ப
முழங்கு நான்மறை மூரிநீர் முழக்கென வுலகை
விழுங்க [2]மால்வரும் விழாவணி கண்டுளம் வியந்தான்.

இந்திரன் சேருக்கு

495 தனையொவ் வாதவன் மகிழ்ச்சியால் வாசவன் [1]றன்கை
வனையு மாலையை நீட்டலுந் தோட்டியால் வாங்கித்
துனைவ லத்தயி ராவதத் தெருத்திடைத் தொடுத்தான்
பனைசெய் கையினும் பறித்தடிப் படுத்ததப் பகடு.

முனிவரின் கோபம்

496 கண்ட மாமுனி விழிவழி யொழுகுவெங் கனலால்
அண்ட கூடமுஞ் சாம்பரா [1]யொழியுமென் றஞ்சி
விண்டு நீங்கினர் விண்ணவ ரிருசுடர் [2]விளங்கா
தெண்டி சாமுக மிருண்டது சுழன்றதெவ் வுலகும்.

497 புகையெ ழுந்தன [1]வுயிர்த்தொறு மெயில்பொடித் தவனின்
நகையெ ழுந்தன நிவந்தன புருவ[2]நன் னுதலிற்
சிகையெ ழுஞ்சுடர் விழியின னசனியுந் திகைப்ப
மிகை[3]யெ ழுந்திடு சதமக னெளென வெகுண்டான்.

---

493. இந்திரனுக்கு நீலமால்வரை உவமை.

(பி - ம்.) [1]:வேறிரு' [2]:மேல் நிவெந்தெனக் கொற்றவெண்' (கக)

494. குறடு . ஒரு வாத்தியம். பாண்டில் - கஞ்சதாளம்; 'இடிக்குரன் முரச மிழுமென் பாண்டில்' (சிலப். உசு : 194.) சதி (பி-ம்)-தாள வொத்து; 'நன்மாதர் சதிபட மாநட மாடி' (தே. திருஞா.) கம்பலை- ஓசை. மூரிநீர் - கடல். நான்மறையாகிய மூரிநீர் முழக்கு. மால் - இந்திரன்.

(பி - ம்.) [1]'சதியின்' [2]'மால்பெரு', 'வாசவன் விழாவணி முனிகண்டு வியந்தான்' (கஉ)

495. தோட்டி -- அங்குசம். தொடுத்தான் - வைத்தான், மாட்டினான்; அலங்கரித்தான் என்றலும் ஆம் பனைமரம். ஆனையின் துதிக்கைக்கு உவமை. பகடு - யானை. (பி - ம்.) [1]:றனக்கு' (கூ)

496. (பி ம்.) [1]:யெரியுமென் றயிரா' [2]:மீண்ட வெண்டிசா' (கசு)

497. உயிர்த்தொறும் - உயிர்க்குந் தோறும். 'உயிர் தெறும்' என்ற பாடத்துக்கு உயிர்களை அழிக்கின்ற என்பது பொருள். எயில் - முப்புரங்கள்.

துருவாசர் சாபமிடல்

498 பூதநாயகன் புவிமக ணுயகன் [1]பொருவில்
வேத நாயகன் மார்பகத் தினிதுவீற் றிருக்கும்
ஆதி நாயகி விருப்புறு தெரியல் கொண்[2]டணைந்த
மாத ராள்வயிற் பெற்றனன் முயன்றமா தவத்தால்.

499 இன்று நின்பெருஞ் செவ்விகண் டுவகையி னீந்த
மன்ற லந்தொடை [1]யிகழ்ந்தனை யுனதுமா நிதியும்
ஒன்ற லாதபல் வளங்களு முவரிபுக் கொளிப்பக்
குன்றி நீதுய ருறுகென வுரைத்தனன் கொடியோன்.

சாபத்தின் விளைவு

500 அரம டந்தையர் கற்பக நவநிதி யமிர்தம்
சுரபி வெம்பரி மதமலை முதலிய தொடக்கத்
தொருபெ ரும்பொரு ளின்றியே [1]யுவரிபுக் கொளிப்ப
வெருவி யோடினர் விண்ணவர் வெண்ணெய்மே வாரின்.

அசனியுந் திகைப்ப: 'இடியுரு மேற்றிற் சீறி' (சீவக. 1087); 'இடியு மாறு கொள் நெடுமொழி யயாதி' (வி. பா. குருகுலச். 25.) மிசை - வரம்பு கடந்த செயல்; சீவக. 281. ஒப்பு: 340.

(பி - ம்.) [1]'வுயிர் தெறு' [2]'நண்ணுதல்' [3]'யெழுந்தழல்' (கரு)

498. (பி - ம்.) [1]'புணர்ந்தே' [2]'டணிந்திடு' (கசு)

499. செவ்வி-சிறப்பு. கொடியோன்: வி. பா. துருவாச. 1. துருவாசரின்சாபம்: 'பூவாலிடையூறுபுகுந்த பொழுத நெஞ்சின், கோவா முனி சீறிட வாரி குளித்த வெல்லாம்' (ரு. 1:46.)

(பி - ம்.) [1]'யிகந்தனை' [2]'குணத்தோன்' (கஎ)

500. சுரபி - காமதேனு. பரி - உச்சைச்சிரவம் என்னும் குதிரை. மதமலை - ஐராவதம். யாவும் கடலில் ஒளித்தமை: 1019; பகைவர் கடலிற் புக் கொளித்தல் மரபு; பெருந்தொகை, 1159.

(பி - ம்.) [1]'யுள்ளன வெல்லாம், வெருவியோடிப்புக் கொளித்தன வீரி திரைக் கடல்வாய்' [2]'கண்ணன் வாழ்வெண்ணெய்' [3]'வெண்ணெய்வாழ் கண்ணன்'

சில பிரதிகளில் இதன் பின் கீழ்வரும் செய்யுள் காணப்படுகிறது:

'அந்த வேலையி லிந்திரன் சிந்தைநொந் தழிந்து
வந்து வானவர் முனிவனை வழிபட்டு வழுத்த
நந்து நின்பெருஞ் செல்வமா லருளினு னயக்க
முந்து மென்றுசா பத்தினின் மோக்குமு மொழிந்தான்.' (கஅ)

தேவர் முதலியோர் திருமாலை அடைதல்

501 வெய்ய மாமுனி வெகுளியால் விண்ணக முதலாம்
வையம் யாவையும் வறுமைநோய் நலியவா னோரும்
தையல் பாகனுஞ் சதுமுகக் கடவுளுங் கூடிச்
செய்ய தாமரைத் திருமறு மார்பனைச் சேர்ந்தார்.

திருமால் அவர்களுக்கு அபயம் வழங்கல்

502 வெஞ்சொன் மாமுனி வெகுளியாய் விளைந்தமை விளம்பிக்
கஞ்ச நாண்மலர்க் கிழவனுங் கடவுளர் பிறரும்
தஞ்ச மில்லைநின் [1]சரணமே சரணெனச் சலியா
அஞ்ச லஞ்சலென் றுரைத்தன னுலகெலா மளந்தோன்.

திருமால் கூறிய யோசனையும் அமரர் செயலும்

503 மத்து மந்தரம் வாசுகி கடைகயி [1]றடைதூண்
மெத்து சந்திரன் சுராசுரர் [2]வேறுவே றுள்ள
கொத்தி ரண்டுபால் வலிப்பவ ரோடதி கொடுத்துக்
கத்தும் [3]வாரிதி மறுகுற வமிர்தெழக் கடைமின்.

504 யாமு மவ்வயின் வருதுநீர் கதுமென வெழுந்து
போமி னென்றருள் புரிதலு மிறைஞ்சினர் புகழ்ந்து
நாம மின்னெனக் குனித்தனர் நல்குர வொழிந்த
தாமெ னும்பெருங் களிதுளக் குறுதலா லமரர்.

505 மலைபி டுங்கினர் வாசுகி பிணித்தனர் மதியம்
நிலைபெ றும்படி நட்டன [1]ரோடதி நிறைத்தார்

---

501 மாமுனி - துருவாசமுனிவர். வெகுளி - கோபம். நலிய - வருத்த. தையல்பாகன் - சிவபெருமான். சதுமுகக்கடவுள் - பிரமதேவன். செய்ய தாமரைத்திதிருமறு மார்பன் - திருமால். (கக)

502. சரணம் - பாதம். சரண் - அடைக்கலம்.

(பி - ம்.) [1]'சரணெமக் கரணெனத் தளரா' (உ0)

503. கொத்து - தொகுதி; 'தமிழ்க் கொத்து' (தக்க. 814.) ஓடதி - மூலிகை. வாரிதி - கடல். துருவாசர் சாபத்தால் இந்திரலோகப் பொருள்கள் கடலில் மறைந்ததாக இங்கே வான்மீகம் கூறவில்லை. பிணி பசி மூப்பற்று வாழவிரும்பித் தேவாசுரர் கடல் கடைந்ததாக அதில் கூறப்படுகிறது.

(பி - ம்.) [1]'றிடுதூண்' [2]'வேறிடு வெள்ளமொத் திரண்டு பாலுரத்தெறும் பிடித்தெதிர் வலித்தே' [3]'வாருதி' (உக)

504. நாமம் - அச்சம், 'நாமவேற்றுரை நளன்' (நள. க:11); உரிச் சொல் ஈறு திரிந்தது. அமரர்: தேவரென்னும் தூணையது. (உஉ)

505. மலை - மந்தரமலை. பயோததி - பாற்கடல்.

அலைபெ றும்படி பயோததி கடைந்தன ரவனி
[2]நிலைத ளர்ந்திட வனந்தனுங் கீழுற நெளித்தான்.

திருமால் கூர்மமாய் மந்தரம் தாங்கல்

506 திறல்கொ ளாமையாய் முதுகினின் மந்தரந் திரிய
விறல்கொ ளாயிரந் தடக்கைமள் பரப்பிமீ வலிப்ப
[1]மறமு லாமுனி வெகுளியான் மறைந்தன வரவே
அறனி லாமனத் தடைகலா நெடுந்தகை [2]யமைந்தான்.

அமரர் அமிர்தம் துய்த்தல்

507 இறந்து நீங்கின யாவையு மெம்பிரா னருளாற்
பிறந்த வவ்வயிற் சுராசுரர் தங்களிற் பிணங்கச்
சிறந்த மோகினி மடந்தையா லவுணர்தஞ் செய்கை
துறந்து [1]மாண்டன ராரமிர் தமரர்க ளுய்த்தார்.

திருமாலின் செயல்

508 வெருவு மாலமும் [1]பிறையும்வெள் விடையவர்க் கீந்து
தருவும் வேறுள தகைமையுஞ் சதமகற் களித்து
மருவு தொல்பெரு வளங்களும் வேறுற வழங்கித்
[2]திருவு டன்மணி யணிந்தனன் சீதர மூர்த்தி.

தேவரைக் கொல்ல ஒருமைந்தனை அருளும்படி திதி காசிபரை வேண்டல்

509 அந்த வேலையிற் றிதிபெருந் துயருழந் தழிவாள்
வந்து காசிபன் மலரடி வணங்கியென் மைந்தர்
இந்தி ராதியர் புணர்ப்பினு லிறந்தன ரெனக்கோர்
மைந்த னீயரு ளவர்தமை மடித்தலுக் கென்றாள்.

(பி - ம்.) [1]'ரோட்டிசின் றிழுத்தே' [2]'நிலைதளர்ந்திட வயர்ந்தனள் கீழுற நெளித்தாள்' (உசு)

506. அறன் இலா மனத்து. அடைகலா - சென்று சேராத. நெடுந்தகை : திருமால்.

(பி - ம்.) [1]'மறனிலா முனி' [2]'அமைத்தான்' (உச)

507. மாண்டனர் : அசுரர் மாண்டனரென்று கம்பர் பின்னும் கூறுவர்; 509. (உடு)

508. விடையவர்க்கு ஈந்து : திருமாலின் ஆணைப்படிச் சிவமெருமான் ஆலமுண்டதாக முதனூல் கூறும். மணி - கௌத்துவ மணி; ஆரம் என்ற பாடத்துக்குக் கௌத்துவ மாலை என்பது பொருள். இச் செய்யுள் சில பிரதிகளில் இல்லை.

(பி - ம்.) [1]'பிறையும் வெவ்' [2]'திருவு மாரமு மணிந்தனன்' (உசு)

509. வேலை - சமயம். திதி - காசிபருடைய மூத்த மனைவி. புணர்ப்பு - வஞ்சனை. (உஎ)

காசிபர் கட்டளையின்படியே திதி தவம் செய்தல்

510 என்று கூறலு மகவுனக் களித்தன னினிநீ
சென்று பாரிடைப் பருவமோ ராயிரந் தீர
நின்று மாதவம் புரிதியே னினைவுமுற் றுதி யென்
றன்று கூறிடப் புரிந்தன ளருந்தவ மனையாள்.

இந்திரன் செயல்

511 கேட்ட வாசவ னன்னவட் கடிமையிற் [1]கிடைத்து
[2]வாட்ட மாதவத் துணர்ந்தவன் வயிற்றுறு மகவை
வீட்டி யேயெழு கூறுசெய் திடுதலும் விம்மி
நாட்ட நீர்வர மருத்தெனு நாமமு நவின்றான்.

சரவணமும் சமீபித்தது என்று முனிவர் இராமனுக்குக் கூறல்

512 ஆய [1]திவ்விட மப்புறத் தவிர்மதி யணிந்த
தூய வன்றனக் [2]குமைவயிற் றோன்றிய தொல்லை
வாயு வும்புனற் கங்கையும் பொறுக்கலா வலத்த
சேய்வ ளர்ந்தருள் சரவண மென்பதுந் தெரித்தான்.

கதிரவன் தோற்றம்

513 காலன் மேனியிற் கருகிருள் கடிந்துல களிப்பான்
நீல வார்கலித் தேரொடு நிறைகதிர்க் கடவுண்
மாலின் மாமணி [1]யுந்தியின் வளரொடு வந்த
மூல தாமரை [2]முழுமுதன் முளைத்தென முளைத்தான்.

---

510. பருவம் - வருடம். அனையாள்: திதி. (உஅ)

511. இந்திரன் சீடனாக வேடந்தரித்து வந்து அடிமையிற் கிடைத்து; கிடைத்து - கிடைக்கப் பெற்று. வாட்டம்: படுக்கையில் தலையிருக்க வேண்டிய இடத்திற் காலும் கால் இருக்க வேண்டிய இடத்தில் தலையுமாகத் தலை மயிர் காலில் சுற்றிக் கிடக்கப் பகலிலே துயின்ற வாட்டம். மாதவத்து உணர்ந்து - இந்திரன் தன் தவ மகிமையால் உணர்ந்து கொண்டு. மருத்து: இந்திரன். மாருத: (அழாதே) என்று சொன்னமையால் அக்குழந்தைகள் இப்பெயர் பெற்றனர். மருத்துக்கள் எழுவர்.

(பி - ம்.) [1]'கிடைப்ப' [2]'வாட்டு மாதவத் திருந்தவள்' (உக)

512. ஆயது - அது. முருகக் கடவுள் உமையிடம் தோன்றியது: தோன்றிய சேயென்க. பரி. டு: 25–30. சரவணம் - சரவணப் பொய்கை. முருகக் கடவுளின் அவதாரம் முதனூலில் 37-ஆவது சருக்கத்தில் விரிவாகக் கூறப்பெறுகிறது.

(பி - ம்.) [1]'திப்புற மப்புறத்', 'திவ்விடம் பிறைமதி கூவிள மணிந்த' [2]'குரிமையிற்', 'சுரிவயிற் (கூ0)

513. இருளுக்குக் காலன்மேனி. கடிந்து - நீக்கி. ஆர்கலி - கடல். மூலதாமரை - காரணமான தாமரை; 529. தாமரை முழு முதல் - பிரமன்.

கோசிகர் முதலிய மூவரும் கங்கையைக் காணல்

514 அங்கு நின்றெழுந் தயன்முதன் மூவரு மனையார்
செங்க ணேற்றவன் செறிசடைப் பழுவத்து நிறைதேன்
பொங்கு கொன்றையீர்த் தொழுகலாற் [1]பொன்னியைப்
[பொருவும்
கங்கை யென்னுமக் கரைபொரு திருநதி கண்டார்.

கங்கை வரலாற்றை இராமர் வினவக் கோசிகர் கூறுதல்

சகரனும் அவன் மைந்தரும்

515 இந்த மாநதிக் குற்றுள தகைமைய யாவும்
எந்தை கூறுகென் றிராகவன் வினவுற வெனையாள்
மைந்த நின்றிரு மரபுளா னயோத்திமா நகர்வாழ்
விந்தை சேர்புயன் சகரனிம் மேதினி புரந்தான்.

516 விறல்கொள் வேந்தனுக் குரியவ ரிருவரில் விதர்ப்பை
பொறையி னல்கிய [1]வசமஞ்சற் கஞ்சுமான் புதல்வன்
பறவை வேந்தனுக் கிளையமென் சுமதிமுன் பயந்த
[2]அறனின் [3]மைந்தர்க ளறுபதி னாயிரர் வலத்தார்.

கடலுக்குத் திருமால், பொற்றேருக்கு மூலதாமரை, சூரியனுக்குப் பிரமன் உவமை. பிரமனுடைய நிறம் சிவப்பு. முடிபு: கதிர்க் கடவுள் அளிப்பான் கடிந்து மூளாத்தான்.

(பி - ம்.) [1]'யுந்தியி னயனெடு மலர்ந்த', 'யுந்தியி னயனெடு வந்த' [2]'முழு மலர்' (கக)

514. பிரமன் விசுவாமித்திரருக்கும், திருமால் இராம பிரானுக்கும் உருத்திரன் இலக்குவனுக்கும் உவமை. கொன்றைக்குப் பொன்: 'கார் விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்' (அகநா. கடவுள். க.) பொன்னி - காவிரி; 576; உ. 11: 1; சு. 10:29.

(பி - ம்.) [1]'பொன்னியல்' (கஉ)

515. மைந்த - வலிமையையுடையாய்; விளி; க. 13:10. விந்தை - வெற்றி மகள். (கங)

516. விதர்ப்பை - விதர்ப்ப நாட்டுப் பெண்; கேசினி என்பது இவள் பெயர். பொறை - கர்ப்பம். அசமஞ்சன்: தகுதியற்றவன். அபோசன னென்ற பாடத்துக்கு நீருக்கு உணவாக்குகிறவன் என்பது பொருள். சிறு குழந்தைகளை இவன் நீரில் வீசி யெறிந்து கொல்வதை வினோதமாகக் கொண் டிருந்தான் என்பர் வான்மீகி. இத் தீச்செயலின் காரணமாக இவன் நாட்டை விட்டுத் தந்தையால் துரத்தப் பட்டான். பிறகு தன் யோக மகிமையால் இவன் இறந்த குழந்தைகளைப் பிழைப்பித்தான். அம்சுமான் ஒளியை யுடையவன்; அம்சு - கிரணம். சுமதி: இவள் காசிபருக்கு விந்தையிடம்

சகரனது பரி வேள்வியும் இந்திரன் குதிரையை ஒளித்தமையும்

517 திண்டி றற்புனை சகரனுந் தனையர்சே வகங்கள்
கண்டு முற்றிய வயமகம் புரிதலுங் கனன்று
வண்டு துற்றுதார் வாசவற் குரைத்தனர் வானோர்
ஒண்டி றற்பரி கபிலன திடையினி லொளித்தான்.

குதிரை காணுமையை அஞ்சுமான் சகரனுக்கு அறிவித்தல்

518 வாவும் வாசிபின் சென்றன னஞ்சுமான் மறுகிப்
பூவி லோரிட மின்றியே நாடினன் புகுந்து
தேவர் கோமகன் கரந்தமை யறிந்திலன் றிகைத்து
மேவு தாதைதன் முதைபா லுரைத்தனன் மீண்டு.

சகரன் தன்மைந்தர் அறுபதினாயிரவரை ஏவலும் அவர்கள் செயலும்

519 கேட்ட வேந்தனு மதலையர்க் கம்மொழி கிளத்த
வாட்ட மீக்கொளச் சகரர்கள் வடவையின் மறுகி
நாட்டம் வெங்கனல் பொழிதர நானிலந் தடவித்
தோட்டு துங்கினர் புவியினைப் பாதலந் தோன்ற.

520 நூறு யோசனை யகலமு மாழமு [1]நுடங்கக்
கூறு செய்தன ரென்பரால் வடகுண திசையின்
ஏறு மாதவக் கபிலனி லிவுளிகண் டெரியிற்
சீறி வைதனர் செருக்கினர் நெருக்கினர் செறுத்தார்.

பிறந்தவள். அறனின் - அறத்தொடு கூடிய. ஆறயுதர் (பி-ம்)-அறுபதினாயிரவர்; அயுதம் - பதினாயிரம்; 521. அவன் (பி - ம்) - அமஞ்சன்.

(பி - ம்.) [1]'வசமஞ்ச னென்றொரு புதல்வன்', 'வபோச னனென்றொரு' [2]'அறனுள்' [3]'மைந்தரா றயுதர்மற் றஞ்சுமான வன்சேய்' (கூசு)

517. சேவகம் - வீரம். அயமகம் - அசுவமேதம். துற்று - தேனை யுண்ணும். கபிலனிருந்த இடம்: 519-20. (பி - ம்.) [1]'தனையர் செய்திறங்கள்' (கூடு)

518. வாவும் வாசி - தாவுகின்ற குதிரை. பூவில் - உலகில். தாதை தன்தாதை - பிதாமகனை சகரன். (கூசு)

519. சகரர்கள்: 525, 541, 543. தடவி - தேடிப் பார்த்து. தோட்டு - தோண்டி. நுங்கினர் - விழுங்கினர். மண்ணை விழுங்கியது பூமியிற் போட இடமில்லாமையினால். சகரர் பூமியைத் தின்றமை: 'இன்று பிலனீதிடையி னேறரி தெனிற்பார், தின்று சகரர்க் கதிக மாகினனி சேறும்' (ச. 11:44.) சகரர் தோண்டினமையின் தொடுகடலாயிற்று; 'குணதிசையுரை பொரு தொடுகடற் குணக்கும்' (புறநா. சு:3) (கூஎ)

520. நுடங்க - குழிவடையும்படி. ஏறு மாதவம் - உயர்ந்த மாதவம்; 522. இவுளி - குதிரை. (பி - ம்.) [1]'தூணங்க' (கூஅ)

கபிலரின் சினத்தால் மைந்தர் சாம்பரானமையைச் சகரன் அறிதல்

521 மூளும் வெஞ்சினத் தருந்தவன் முனிந்தெரி விழிப்பப்
பூளை சூடிதன் னகையினி லெயில்பொடிந் தனபோல்
ஆளு [1]மைந்தரா றுபதருஞ் சாம்பரா யவிந்தார்
வேள்வி [2]கண்டநல் வேந்தனுக் குரைத்தனர் வேய்கள்.

சகரன் செயல்

522 உழைத்து வெந்துயர்க் [1]கூ றுகாண் கிலனுணர் வழியா
அழைத்து மைந்தன்றன் மைந்தனை யவர்கழிந் தனரேல்
இழைத்த வேள்வியின் றிழப்பதோ வென்றன னெழுந்து
தழைத்த மாதவக் கபிலன்வாழ் பாதலஞ் சார்ந்தான்.

523 விண்டு நீங்கின ருடலுகு பிறங்கல்வெண் ணீற்றைக்
கண்டு துண்ணென்ற மனத்தினன் கபிலமா முனிதன்
புண்ட ரீகநற் றொழு தெழுந்தனன் [1]புகழக்
கொண்டு போகநின் னிவுளியென் றுற்றதுங் குறித்தான்.

524 பழுதி லாதவ னுரைத்தசொற் கேட்டலும் பரிவாற்
றொழுது வெம்பரி கொணர்ந்தவி [1]சுரர்களுக் கீயா
முழுதும் வேள்வியை முற்றுவித் தரசனு முடிந்தான்
எழுது [2]கீர்த்தியாய் மைந்தனுக் கரசிய லீந்து.

பகீரதன் பிறப்பு

525 சகரர் தோட்டலாற் சாகர மெனப்பெயர் தழைப்ப
மகர வாரிதி சிறந்தது மகிதல முழுதும்
நிகரின் மைந்தனே புரந்தன னவனெடு மரபிற்
பகிர தன்னெனும் பார்த்திபன் [1]வந்தவ தரித்தான்.

---

521. பூளைசூடி - சிவபெருமான்; பூளை - சிறு பூளைப்பூ; ஆறுபதர் - அறுபதினாயிரவர்; 516. எயில் - மூப்புரங்கள். வேய்கள் - ஒற்றர்கள்.

(பி - ம்.) [1]'மைந்தர்க ளறுபதினாயிர ரவிந்தார்' [2]'கொண்டநல்' (ஈக)

522. உழைத்து - வருந்தி; 'உழைத்தவல் லிருவினைக் கூறு காண்கிலா தது' (ச. 5. 22.) உணர்வு அழியா - அறிவு கெட்டு. சார்ந்தவன் அஞ்சுமான். (பி - ம்.) [1]'கீறு காண்கில' (சஅ)

523. பிறங்கல் வெண்ணீறு - மலை போன்ற வெண்ணிறச் சாம்பல். (பி - ம்.) [1]'புகலக்' (சக)

524. மைந்தன் - வழித்தோன்றல்; 554. அஞ்சுமான் மகன் திலீபன்; அவன் மகன் பகீரதன். (பி - ம்.) [1]'சுரர்பதி' [2]'கீர்த்தியான்' (சஉ)

525. (பி - ம்.) [1]'பரிதி யொத்துதித்தான்' (சஈ)

அவன் தன் முன்னோரை நரகத்தினின்றும் மீட்க வசிட்டர் யோசனைப்படி நான்முகனைக் குறித்துத் தவம் செய்தல்

526 உலகம் யாவையும் பொதுவறத் திகிரியை யுருட்டி
இலகு மன்னவ னிருந்துழி [1]யிறந்தவர் சரிதம்
அலகி றென்முனி [2]யாங்கவற் குரைத்திட வரசன்
நிலக மண்ணுற வணங்கிநின் றிருமொழி செப்பும்.

527 கொடிய மாமுனி வெகுளியின் மடிந்தவெங் குரவர்
முடிய நீணிர யத்தினின் [1]முந்துறு முறைமை
கடியு மாறெனக் கருந்தவ [2]மமைக்குறு கருமம்
அடிகள் சொற்றுக வென்றலு மந்தண னறைவான்.

528 வைய மாளுடை மன்னவர் மன்னவ மடிந்தோர்
உய்ய நீடவ மொழிவறு பகலெலா மொருங்கே
[1]செய்ய நாண்மலர்க் கிழவனே நோக்கிநீ செய்தி
நைய லின்றென நவின்றன னவையறு முனிவன்.

529 ஞாலம் யாவையுஞ் சுமந்திரன் றன்வயி னல்கிக்
[1]கோலு மாதவத் திமகிரி மருங்கினிற் குறுகிக்
கால மோர்பதி ஞயிர மருந்தவங் கழிப்ப
[2]மூல நான்மறைக் கிழவனும் வந்திவை மொழிவான்.

நான்முகன் கூற்று

530 நின்பெ ருந்தவம் வியந்தன னினதுநீள் குரவர்
முன்பி றந்தவ ரருந்தவன் முனிவினு தலினால்
மன்பெ ரும்புவி யதனின்வா [1]னதிநடந் தணுகி
என்பு தோயுமே லிருங்கதி பெறுவரென் றிசைத்தான்.

---

526. தொன்முனி - வசிட்டர். அரசன் - பகீரதன்.

(பி - ம்.) [1]'யிறந்தன விவை' [2]'நிகழ்ந்தன' (சச)

527. குரவர் : குலமுன்னோர்கள். நிரயம் - நரகம். வெகுளியான் மடிந்தவர் நரக மடைவர்; 530. கடிதல் - நீக்குதல்.

(பி - ம்.) [1]'அழுந்திடு' [2]'மதற்குறு'; 'மியிற்றுறு' (சஞ)

528. செய்ய நாள் மலர் - செந்தாமரை. பிரமன் இருப்பது வெண் டாமரை என்பது பெரு வழக்கு. (பி - ம்.) [1]'செய்ய நான் மறைக்' (சசு)

529. அரசர் வேறு காரியமாகச் செல்லும் போது இராச்சியத்தை மந்திரி கையில் ஒப்புவித்தல் வழக்கு. சுமந்திரன்: தொழில் பற்றி வந்த பெயர். காலம் - வருடம்.

(பி-ம்.) [1]'கோல மாதவத்' [2]'மூல தாமரை முழுமுதற் கிழவன்முன்'(சஎ)

530. (பி - ம்.) [1]'நதி மகிழ்ந்', 'நதி கடிந்' (சஅ)

531 மாக மாநதி புவியிடை நடக்கின்மற் றவடன்
வேக மாற்றுதல் விடையவற் கன்றிவே றரிதால்
தோகை பாகனே நோக்கிநீ யருந்தவந் தொடங்கென்
றேகி னனுல கனைத்துமெவ் வுயிர்களு மீன்றான்.

பகீரதன் சிவபெருமானைத் தரிசித்தபின் கங்கையை நோக்கித் தவம் செய்தல்

532 மங்கை பாகனே நோக்கிமுன் மொழிந்தன வருடம்
தங்கு மாதவம் [1]சரித்தலுந் தழனிறக் கடவுள்
அங்கு வந்துநின் கருத்தினே முடித்துமென் றகன்றான்
கங்கை யைத்[2]தொழக் காலமை யாயிரங் கழித்தான்.

கங்கையின் கூற்றும் அதன்பின் பகீரதன் செயலும்

533 ஒரும டக்கொடி யாகவந் துனதுமா தவமென்
பொருபு னற்கொடி வரிலவள் வேகமார் பொறுப்பார்
அரனு ரைத்தசொல் வினேதமற் றின்றுநீ யறிந்து
பெருகு நற்றவம் புரிகென [1]வரநதி பெயர்ந்தாள்.

534. கரந்தை மத்தமோ டெருக்கலர் கூவிளங் கடுக்கை
நிரந்த பொற்சடை நின்மலக் கொழுந்தினே நினேயா
அரந்தை யுற்றவ [1]னிரண்டரை யாயிர மாண்டு
புரிந்து நற்றவம் பொலிதர [2]வரைமகள் புனிதன்.

535 எதிர்ந்து நின்னினே வெஃகினை விறைஞ்சியெம் பெருமை
அதிர்ந்து கங்கையீ தறைந்தன னென்றலு மஞ்சல்
பிதிர்ந்தி டாவகை காத்துமென் றேகிய பின்னே
முதிர்ந்த மாதவ மிரண்டரை யாயிர முடித்தான்.

---

531. மாகம் - விண். (சகூ)

532. தொழா - தொழுது. தொழ என்ற பாடத்துக்கு, தரிசிக்க என்பது பொருள். (பி - ம்.) [1]'புரிதலுந்' [2]'தொழக்' (சுo)

533. தவம் என்? புனற் கொடி - கங்கை. கங்கை தன்னை வேறு படுத்திக் கூறியது இது; வினேதம் - வேடிக்கை.
(பி - ம்.) [1]'வானதி' (சுக)

534. கடுக்கை - கொன்றை. 'கரந்தையும் வன்னியு மத்தமுங் கூவி ளம் .....யம்மானே' (சுந்தர. தே.) நிரந்த - வரிசையாக அமைந்த. அரந்தை - துன்பம்.
(பி - ம்.) [1]'னேயிரண்டாயிர' [2]'வரை யுறை' (சுஉ)

535. அதிர்ந்து - முழங்கி. முதிர்தல் தேறுதல். (சுங)

536 பெருகு நீரொடு [1]பூதியும் வாயுவும் பிறங்கு
சருகும் வெங்கதி ரொளியையுந் துய்த்தது தனையும்
பருக லின்றியே மூப்பதி ஞயிரம் பருவம்
உருகு காதலின் மன்னவ னருந்தவ முழன்றான்.

இழிந்த கங்கையைச் சிவபிரான் சடையில் மறைத்தல்

537 உந்தி யம்புயத் துதித்தவ னுறைதரு முலகும்
இந்தி ராதிய ருலகமும் வெருவுற விரைந்து
வந்து தோன்றினள் வானதி மலைமகள் கொழுநன்
சிந்தி டாதொரு சடையினிற் கரந்தனன் சேர.

சிவபிரான் பகீரதன் வேண்டுகோளின்படிக் கங்கையைச் சிறிது விடல்

538 புன்னு னித்தரு பனியென வானதி புனிதன்
சென்னி யிற்கரந் தொளித்தலும் வணங்கினன் றிகைத்து
மன்ன னிற்றலும் வருந்தனஞ் சடையள்வா னதியென்
றென்ன விட்டன ளிருசிறி தவனிபோந் திழிந்தாள்.

கங்கை சன்னு முனிவரால் கண்டிக்கப் பெற்றுப் பின் சகரர்தம் சாம்பரிற் பாய்தல்

539 இழிந்த கங்கைமுன் மன்னவன் விரைவொடு மேகக்
கழிந்த மன்னவர் கதிபெற முடுகிய கதியால்
ஆழுந்து மாதவச் சன்னுவின் வேள்வியை யழிப்பக்
கொழுந்து விட்டெரி வெகுளியன் குடங்கையிற் கொள்ளா.

---

536. மூப்பதிஞயிர வருடம்: பிரமனைக் குறித்துப் பதிஞயிரம், சிவபெருமானைக் குறித்துப் பதிஞயிரம், கங்கையைக் குறித்து ஐயாயிரம், மீட்டும் சிவபெருமானைக் குறித்து இரண்டரை யாயிரம், மறுபடியும் கங்கையைக் குறித்து இரண்டரையாயிரம் ஆகப் பகீரதன் தவமியற்றிய ஆண்டு மூப்பதிஞயிரம் என்றபடி. வான்மீகம் இங்ஙனம் கூறவில்லை. கதிரொளி: 'பருகு நீர் துறந்து காற்றும் வெவ்வெயிலும் பாதபங்களின் சினையுதிர்ந்த சருகுமே யொழிய' (வி. பா. அருச்சுனன்றவநிலை. 77.) 'நீரொடு.....கதிரொளியையும்' முறையே நான்கு தவங்களிலேயும் துய்த்து, ஐந்தாம் தவத்தில் அதுவும் பருகலின்றி. (பி - ம்.) [1]பூழ்தியும்' (ருசு)

537. கங்கையை ஒரு சடையிற் கரந்தனன்: 'கதமாக் கங்கை பாய வொர் வார்சடையை, நீட்டி நின்றுன்றிரு நின்ற நெய்த் தானத் திருந்தவனே' (திருநா. தே); 'மாக வெள்ள நதி கொண்ட தோர்சடை' (தக்க. 652.) (ருடு)

538. புன்னுனித் தருபனி: 'புன்னுனைப் பனி நீர்' (எ. 17:58;) 'புன்னுனிமே னீர்போல்' (நாலடி. 29.) (ருசு)

539. அழுந்து - மனமழுந்திய; 'அழுந்துபட், டிருந்த பெரும்பாணிருக்கையும்' (மதுரைக். 342.) குடங்கை - உள்ளங்கை. (ருஎ)

540 உண்டு வந்தனன் மறைமுனிக் கணங்கள்கண் டுவப்பக்
கண்ட வேந்தனும் வணங்கிமுன் னிகழ்ந்தன கழறக்
கொண்டு போகெனச் செவிவழிக் கொடுத்தனன் குதித்து
விண்டு நீங்கின ருடலுகு பொடியின்மே வினரே.

சகரர்கள் கதிபெறுதலும் பகீரதன் நாடு திரும்பலும்

541 நிரய முற்றுழல் சகரர்க ணெடுங்கதி செல்ல
விரைம லர்பொழிந் தார்த்தன விண்ணவர் வியந்தார்
முரச முற்றிய பல்லிய முறைமுறை துவைப்ப
அரச னப்பொழு தணிமதி லயோத்திமீண் டடைந்தான்.

பகீரதன் கொணர்ந்தது இக்கங்கை என்று முனிவர் கூறுதல்

542 அண்ட கோளகைக் கப்புறத் தாதியன் றளந்த
புண்ட ரீகமென் மலரடிப் பிறந்துபூ மகனூர்
கொண்ட தீர்த்தமாய்ப் பகிரதன் றவத்தினுங் கொண்ட
மண்ட லத்தின்வந் தடைந்ததிம் மாநதி மைந்த.

பாகீரதி சானவி என்ற பெயர்க்காரணங்களை முனிவர் கூறுதல்

543 சகரர் தம்பொருட் டருந்தவ [1]நெடும்பகற் றள்ளிப்
பகிர தன்கொணர்ந் திடுதலாற் பகிரதி யாகி
மகித லத்திடைச் சன்னுவின் செவிவழி வரலால்
நிகரில் சானவி யெனப்பெயர் படைத்ததிந் நீத்தம்.

விசாலையைக் கடந்து செல்லல்

544 என்று கூறலும் வியப்பிலே டுவந்தன ரிறைஞ்சிச்
சென்று தீர்ந்தனர் கங்கையை விசாலவாழ் சிகரக்

---

540. உண்டு உவந்தனன் - குடித்துக் களித்தான். மறைமுனிக்கணங்கள் - வேதம் வல்ல முனிவர் கூட்டங்கள். கழற - சொல்ல. செவிவழி - காதின் வழியாக. கொடுத்தனன் - நதியைச் கொடுத்தருளினன்; நீரைப் பெருக விட்டான் என்றபடி. (நிஅ)

541. (பி - ம்.) [1]'நிரய முற்றிய' [2]'குழாங்கள்' (நிக)

542. கங்கை திருமாலின் பாதங்களிற் பிறந்தது: 'நாளு நங்குல நாயக னறைவிரி கமலத், தாளி னல்கிய கங்கையை' (உ. 1:67.) (சுo)

543. பகிரதி - பாகீரதி; குறுக்கல் விகாரம்

(பி - ம்.) [1]'நெடும்பக லாற்றி' (சுக)

544. விசாலை - ஒரு நகரம்; சூரிய வமிசத்தோர் ஆளுவது; இக்ஷ்வாகுவுக்கு அலம்புஸை என்பாள் வயிற்றிடை யுதித்த விசாலன் நிருமித்தது இந்நகரம். அரசன் - சுமதி என்பவன். கோசிகர் முதலிய மூவரும் விசாலை

குன்று போற்புயத் தரசன்வந் திணையடி குறுக
நின்று நல்லுரை விளம்பிமற் றவ்வயி னீங்கா.

கோசிகர் முதலிய மூவரும் விதேகநாடு அடைதல்

545 பள்ளி நீங்கிய பங்கயப் பழனநன் னுரை
[1]வெள்ள வான்கலை தடவுறுங் கடைசியர் மிளிர்ந்த
கள்ள வாணெடுங் கண்ணிழல் கயலெனக் கருதா
[2]அள்ளி நாணுறு மகன்பணை விதேகநா டணைந்தார்.

விதேக நாட்டு வளம்

546 வரம்பில் வான்சிறை மதகுகள் முழவொலி வழங்க
அரும்பு நாண்மல ரசோகுக ளலர்விளக் கெடுப்ப
நரம்பி னுன்றதேன் முரைகொ ணறுமலர் யாழின்
சுரும்பு பாண் செயத் தோகைநின் றாடுவ சோலை.

547 பட்ட வாணுதன் மடந்தையர் பார்ப்பெனுந் தூதால்
எட்ட வாதரத் தழல்பவ ரிதயங்கள் கொதிப்ப
வட்ட நாண்மரை மலரின்மேல் வயலிடை மள்ளர்
கட்ட காவியங் கட்கிடை காட்டுவ கழனி.

யிற்றங்கிச் சுமதி மன்னரால் உபசரிக்கப் பெற்று மிதிலை நோக்கிப் புறப் பட்டார்கள் என்பது வான்மீகம். (சுஉ)

545 பள்ளி - தாமரை மலராகிய பள்ளி; துயிலும் ஆம். மகளிர் கண் நிழலை நாரை கயலெனக் கருதுதல். இது முதல் ஏழு கவிகள் விதேக நாட்டு வளம்.

(பி - ம்.) [1]'வெள்ள' [2]'உள்ள நாணுறு மகன்பணை மிதிலைநா டுற்றார்' (சுங)

546 மத கொலிக்கு முழவொலி உவமை. அசோக மலருக்கு விளக்கு உவமை. 'பூந்தளம் பிண்டி யெரிபோல் விரியும் பொழிவிடமே' (இறை. மேற்.) யாழ் நரம்புக்குத் தேனெழுக்கு உவமை; 'தீந்தேன், அணி பெற வொழுகி யன்ன வமிழ் தூறழ் நரம்பினல் யாழ்' (சீவக. 722.) மலரில் என உருபு விரிக்க. வண்டு யாழ் செய மயில் ஆடும்: 49. மயிலை ஆடமகளிர் என்று கூறுது வாளா விடுத்தார். சோலை ஓர் அரங்கு. மு. அகநா. அஉ: 1-10. (சுச)

547 பட்ட வாள் நுதல் - பட்டத்தை அணிந்த ஒளி பொருந்திய நெற்றியை யுடைய. மடந்தையர் - வயல்களில் தொழில் செய்யும் கடை சியர். பார்ப்பு - அன்னக்குஞ்சுகள் முதலியன. எட்ட - அடையும்படி. மடந்தையராகிய உழல்பவ ரென்க. கட்ட காவி - கலோபறித்த நீலோற் பல மலர். கட்கிடை - கண்ணுக்கு ஒப்பு; கிடை - ஒப்பு; சீவக. 731, 2263. தாமரைமேல் காவிகள் கிடப்பன பெண்களின் முகத்தில் விழிகள் இருப் பதற்கு உவமை. தாமரை மீது குவளை மலர்கள் பறித்தெறிய பட்டமை யைக் கடைசியர் கண்டு தங்கள் காதலர்களை வசீகரப்படுத்த வந்த பெண் களின் முகங்களோ இவை என்று எண்ணிக் கொதித்தனர். உழல்பவர்

548 தூவி யன்னந்தம் மினமென்று நடைகண்டு தொடரக்
கூவு மென்குயிற் குதலையர் குடைந்ததண் புனல்வாய்
ஓவில் குங்குமச் சுவடுறு வொன்றொடொன் றாடிப்
பூவு நங்கினும் புள்ளுறங் காதன பொய்கை.

549 முறையி [1]னின்முது மேதியின் முலைவழி பாலும்
துறையி னின்றுயர் மாங்கனி தூங்கிய சாறும்
அறையு மென்கரும் பாட்டிய வமிர்தமு மழிதேன்
நறையு மல்லது நளிர்புனல் பெருகல நதிகள்.

550 இழைக்கு நுண்ணிடை யிடைதர முகடுயர் கொங்கை
மழைக்கண் மங்கைய ரரங்கினின் [1]வயிரியர் முழவம்
முழக்கு மின்னிசை வெருவிய மோட்டிள [2]வெருமை
உழக்க வாளைகள் பாளையிற் குதிப்பன வோடை.

551 படைநெ டுங்கண்வா ளுறைபுகப் படர்புனன் மூழ்கிக்
கடையு முன்கடற் செழுந்திரு வெழும்படி காட்டி
மிடையும் வெள்வளை புள்ளொடு மொலிப்பமெல் லியலார்
குடைய வண்டினங் கடிமலர் குடைவன குளங்கள்.

என்பதை மள்ளர்களுக்காக்கி அம்மள்ளர் குவளைகள் கிடக்கப் பெற்ற தாமரை களைத் தங்கள் காதலிகளின் முகமோ என்று ஐயுற்றுப் பிறகு உண்மை யறிந்து வெறுப்புற்றனர் என்பாரும் உளர். முன்னதே சிறப்புடையது. (சுரு)

548 குங்குமச் சுவடு; சுவடு - குறி. சேவல் பெடைகளில் ஒவ்வொன் றும் தன்பால் சுங்குமச் சுவடு இருப்பதை உணராது, மற்றைய தன் உடலிற் கண்டு வேறு பறவையுடன் புணர்ந்ததால் இது வந்த தென்று ஊடிற்று.

சில பிரதிகளில் 'செய்யவாய்' (1036) என்ற செய்யுள் இதனையடுத்துக் காணப்படுகிறது. (சுசு)

549 முறையின் - ஒன்றன்பின் ஒன்றாக. அறைதல் - வெட்டுதல். ஆட்டிய - ஆலையில் ஆட்டிய; 'கரும்பாட்டிக் கட்டி சிறு காலைக்கொண்டார்' (நாலடி. 35.) அல்லது - பெருகுவதல்லது. 'பாலும், நறையும் முறையினின் பெருகுவதல்லது' என்று கூட்டுக. (பி - ம்.) [1]'னின்சுரு' (சுஎ)

550 இழைக்கும் - நூல் இழையைக் காட்டிலும். முகடு - சிகரம்; மலைக்கு ஆகுபெயர். மழைக்கண் - குளிர்ச்சி பொருந்திய கண். வயிரியர் - கூத்தர்; 'மண்ணைமை முழவின் வயிரியர்' (புறநா. கசுச:12.) மூரி என்ற பாடத்துக்குக் காளை என்பது பொருள்; மலை நாட்டு வழக்கு. வாளைகமுகிற் பாய்தல்: 69. (பி - ம்.) [1]'மகரயாழ்' [2]'மூரி' (சுஅ)

551 படை - படுத்தல். கண்வாள் - கண்ணுகியவாள். உறை - நீர். வாள் உறையிலே புக என்றது ஒரு நயம். புள் - நீர் வாழும் பறவைகள்; ஒருவகை வளை யெனினும் ஆம்; 'புட்கை போகிய புன்றலை மகார்' (மலைபடு. 253.) (சுக)

கல்லுருவாய்க் கிடந்த அகலிகையை மூவருங் காணல்

552 இனைய நாட்டிடை யினிதுசென் றிஞ்சிசூழ் மிதிலைப்
புனையு நீள்கொடிப் புரிசையின் புறத்துவந் திறுத்தார்
மனையின் மாட்சியை [1]யழித்திழி மாதவப் பன்னி
கனையு மோட்டுயர் கருங்கலோர் வெள்ளிடைக் கண்டார்.

அகலிகை கல்லுருமாறி எழுதல்

553 கண்ட கன்மிசைக் காகுத்தன் கழற்றுகள் கதுவ
உண்ட பேதைமை மயக்கிட வேறுபட் டுருவம்
கொண்ட மெய்யுணர் பவன்கழல் கூடிய தொப்பப்
பண்டை வண்ணத்தி னின்றனண் மாமுனி பணிப்பான்.

வேறு

இவள் அகலிகை என்று கோசிகர் இராமரிடம் கூறல்

554 மாயிரு விசும்பிற் கங்கை மண்மிசை [1]யிழித்தோன் மைந்த
மேயின வுவகையோடு மின்னென [2]வொடுங்கி நின்றுள்
தீவினை நயத்தல் செய்த தேவர்கோ மாற்குச் செங்கண்
ஆயிர மளித்தோன் பன்னி யகலிகை யாகு மென்றான்.

---

552. இஞ்சி, புரிசை: ஒரு பொருட் சொற்கள். பல மதில்கள் சூழ்ந் துள்ளன என்றபடி. கொடிப் புரிசை; 568. மனையின் மாட்சி-கற்பு; மனை மாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை, எனைமாட்சித் தாயினு மில்' (குறள், 52.) பன்னி: பத்தினி என்பதன் திரிபு. கனையும்-கெருங்கின. அகலிகை கல்லாகிக் கிடந்தது கௌதமரின் பழைய ஆச்சிரமத்தில் என்பர் வான்மீகி. (பி-ம்) [1]:யழித்தயர்' (எ0)

553. 2-3: 'அவள் பெண்ணுருவாய் நின்றது எப்படி யிருந்த தென் றால், சித்து ரூபமாய் இருந்த ஆத்மாவானது மாயையினாலே சனன மரணங் களுக்குள்ளாகிப் பின்பு பழைய வினைகளை நீங்கிப் பூர்வமான கர்த்தாவி னுடைய திருவடியைச் சேர்ந்து பரிசுத்த ஆத்மாவாக நின்றது போலிருந் தது' (ஓர் உரை.) கம்பர் சமயம். (எக)

554 மைந்தன்-வழிவந்தவன்' மேயின-பொருந்திய. நயத்தல் செய்த-(தீவினை யென்பதை அறிந்திருந்தும்) அதனை விரும்பிய. செங்கண் ஆயிரம் அளித்தமை வான்மீகத்தில் இல்லை.

மிதிலைக்குச் செல்லும் வழியில் பாழடைந்த ஓர் ஆச்சிரமத்தை இரா மர் கண்டு அதன் வரலாற்றைக் கேட்க, விசுவாமித்திரர் அகலிகையின் விருத்தாந்தத்தைக் கூறி, இராமரை அதனுள் இட்டுச் சென்று 'இவள் சாபத்தைத் தீர்ப்பாயாக' என்றதாக வான்மீகம் கூறும். இந்திரனுக்குக் கௌதமர் அலித்தண்மை யெய்து மாறு சாப மிட்டா ரென்றும் பிறகு இந் திரன் பிதிர் தேவதைகளால் ஆட்டின் அண்டத்தைப் பெற்றான் என்றும் முதல்நூல் கூறும்; இந்திரனுக்கு மேஷவிருஷணன் என்ற பெயர் உண்டு.

(பி-ம்.) [1]:தந்தோன்' [2]:வொதுங்கி' (எஉ)

அகலிகைக்கு இஃதுரைத்தது எதுபற்றி என்று இராமர் வினவல்

555 பொன்னேர் சடையான் கூறக் கேட்டலும் பூமி கேள்வன்
என்னையே யென்னையேயிவ் வுலகிய லிருந்த வாறே
முன்னையூழ் வினையி னுலோ [1]நடுவொன்று முடிந்த தண்டோ
அன்னையே யனையாட் கிவ்வா றுரைத்தவா றருளு கென்றான்.

அவர் சாபவரலாற்றை முனிவர் கூறல்

இந்திரன் காமுகனானது

556 அவ்வுரை யிராமன் கூற வறிஞனு மவனை நோக்கிச்
செவ்வியோய் கேட்டி மேனாட் செறிசுடர்க் குலிசத் தண்ணல்
அவ்விய மவித்த சிந்தை முனிவனை யற்ற நோக்கி
நவ்விபோல் விழியினுடன் வனமுலை [1]நயத்த லுற்றான்.

அவன் கோதமர் உருவில் அகலிகைபால் சென்றது

557 தையலாள் நயன வேலு [1]தனிமதன் சரமும் பாய
உய்யலா முறுதி [2]நாடி யுழல்பவ னெருநா ளுற்ற
மையலா லறிவு நீங்கி மாமுனிக் கற்றஞ் செய்து
பொய்யிலா வுள்ளத் தான்ற னுருவமே கொண்டு புக்கான்.

இந்திரனென்றறிந்தும் அவள் உடன்பட்டிருப்பக் கோதமர் வருதல்

558 புக்கவ ளோடுங் காமப் புதுமண மதுவின் றேறல்
ஒக்கவுண் டிருத்தலோடு முணர்ந்தன ளுணர்ந்த பின்னும்
தக்கதன் [1]றென்னத் தேறு டாழ்ந்தன விருப்பத் தாழா
முக்கண னனைய வாற்றன் முனிவனு முடுக வந்தான்.

---

555 பொன்னே ரேர்சடை: (திருச்சிற். 189.) அன்னையே யனையாள்: 565. (பி - ம்.) [1]'வேறொன்று' (எஙி)

556 அறிஞன் - காலம் உணர்பவன்; குலிசத்து அண்ணல் - இந்திரன்; குலிசம் - வச்சிராயுதம். அவ்வியம் - பொறாமை. அற்ற நோக்கி: 233. நவ்வி-மான் (பி - ம்.) [1]'நணுகலுற்றான்' 'நச்சலுற்றான்' (எசி)

557 நயனவேல்: 26. அற்றம் - பிரிவு.
(பி -ம்.) [1]'மன்மதன்' [2]'நாடித் திரிபவன்' (எடி)

558 தக்கதன் றென்ன - 'தக்கது என்ன அன்று என்ன' என இரண்டாலும் ஆம். முக்கணன் அனைய முனி: 562. புணர்வதற்கு முன்னரே அகலிகை தன்பால் முனிவர் வேடத்தில் வந்தவன் இந்திரன் என்பதை உணர்ந்திருந்தாள் என்று முதல்நூல் கூறும். மு: கம்பர் திறமை.
(பி - ம்) [1]'றென்ன வோராத் தாழ்ந்தன' (எசு)

அகலிகையின் நாணமும் இந்திரன் பூனைவடிவில் ஓடலும்

559 சரந்தருஞ் சாபமல்லாற் றடுப்பருஞ் சாபம் வல்ல
வரந்தரு முனிவ னெய்த வருதலும் வெருவி மாயா
நிரந்தர முலகி னிற்கு நெடும்பழி பூண்டா ணின்றுள்
புரந்தர னடுங்கி யாங்கோர் பூசையாய்ப் போக லுற்றான்.

கோதமர் இருவரையும் சபித்தல்

560 தீவிழி சிந்த நோக்கிச் செல்ததை யுணர்ந்து [1]செய்ய
தூயவ னவளை நின்கைச் சுடுசர மனைய சொல்லால்
ஆயிர மாதர்க் குள்ள வறிகுறி யுனக்குண் டாகென்
றேயின னவையெ லாம்வந் தியைந்தன விமைப்பின் முன்னர்.

561 எல்லியி ணை மெய்தி யாவர்க்கு நகைவந் தெய்தப்
புல்லிய் பழியி னோடும் புரந்தரன் போய பின்னை
மெல்லிய லாளை நோக்கி விலைமக ளனைய நீயும்
கல்லிய லாதி யென்றான் கருங்கலாய் மருங்கு வீழ்வாள்.

அகலிகைக்கு முனிவர் அருளிய சாப முடிவு

562 [1]பிழைத்தது பொறுத்த லென்றும் பெரியவர் கடனே
[யென்பர்
அழற்றருங் கடவு ளன்னப் முடிவெனக் கருளு கென்னத்
தழைத்துவண் டிமிருந் தண்டார்த் தயரதராம னென்பான்
கழற்றுகள் கதுவ விந்தக் கல்லுருத் தவிரு மென்றான்.

---

559 சாபம் - வில், சாபமொழி; சிலேடை. எய்த வருதல் - கிட்ட வருதல். எய்த - விரைய என்னலுமாம். மாயா - அழியாமல். 3: 'எஞ்ஞான்றும் விளியாது நிற்கும் பழி' (குறள், 145.) புணர்ச்சிக்குப் பின் அகலிகை, 'முனிவர் வருவதற்கு முன் நீ போய்விடுக' என்று இந்திரனுக்குக் கூறினளென்று முதல் நூல் கூறும். இந்திரன் பூனையாகச் சென்றமை: 'இந்திரன் பூசையிவ ளகலிகை' (பரி. கக: 50.) பூனைவடிவில் இந்திரன் ஓடியது வான் மீகத்தில் இல்லை: தன்வடிவிலேயே சென்றான் என்று அது கூறும். (எஎ)

560. சுடுசரம் அனைய சொல்: 418, குறிப்பு. (பி-ம்.) [1]வெய்ய' (ஏஅ)

561. அகலிகை கல்லாகியது. பரி. 19: 51-2. (எக)

562. பிழைத்தது .. ..கடன்: 'சிறியவர் செய்த தீமை புலம்பலர் பொறுப் பரன்றே பெரியவர்' (சீவக 2088); 'பொறுப்ப ரன்றே பெரியோர் சிறு நாய்கடம் பொய்யினையே' (திருவா. கீத்தல். 6); 'பேதையர் பிழைத்தது பொறுக்கல் வேண்டுமால்' (தூளா. அரசியற். 80.) அழல் தரும் கடவுள் - சிவன்; கோதமருக்கு உவமை; 553. அகலிகை சாபவிடை கேட்டதாக முதல்நூல் கூறவில்லை.

(பி - ம்.) [1]பிழைத்தனன் பொறுக்கை யென்றும் பெரியவர் தகைமை யென்பால்'

கோசிகர் இராமரை வியத்தல்.

563 இவ்வண்ண நிகழ்ந்த வண்ண மினியிந்த வுலகுக் கெல்லாம்
உய்வண்ண மன்றி மற்றோர் துயர்வண்ண முறுவ துண்டோ
மைவண்ணத் தரக்கி போரின் மழைவண்ணத் தண்ண லேயுன்
கைவண்ண மங்குக் கண்டேன் கால்வண்ண மிங்குக் கண்
[டேன்.

இராமர் அகலிகையைக் கோதமன்பால் அனுப்பல்

564 தீதிலா வுதவி செய்த சேவடிக் கரிய [1]செம்மல்
கோதிலாக் குணத்தான் சொன்ன பொருளெலா மனத்துட்
[கொண்டு

மாதவ [2]னருளுண் டாக வழிபடர் படருமூதே
போதிநீ யன்னை யென்னப் பொன்னடி [3]வணங்கப் போனாள்.

இதற்குப் பின் திருக்குறுங்குடிப் பிரதியில் கீழ்வரும் அதிகப் பாடல் காணப்படுகிறது:

'வண்ணவார் குழலி[1]னுட்கு மாதவர் தமக்கு மாகென்
றெண்ணிநான் செய்த குற்ற [2]முனிவநீ பொறுப்பா யென்னப்
பண்ணிய உறுப்பிற் [3]கொண்ட பத்துநூ றுவையும் போக்கி
[4]எண்ணில்விண் ணுலகை யாளிக் காயிர நயன மென்றான்.'

(பி - ம்.) [1]:னுட்கும் வானவர்' [2]:நன்முனி' [3].கோசம்.....போக,' 'கோடல்...போக' [4]'எண்ணல் நின் நயனமாக வாயிர மமைக் வென்றான்'

வேறு சில பிரதிகளில் 'வண்ணவார்' என்றும் செய்யுளுக்குப்பிரதியாக.

'அந்தவிந் திரனைக் கண்ட வமரர்கள் பிரமன் முன்னு
வந்துகோ தமனை வேண்ட மற்றவை தவிர்த்து மாறுச்
சிந்தையின் முனிவு தீர்ந்து சிறந்தவா யிரங்கண் ணுகைத்
தந்தம தலகு புக்கார் தையலுங் கிடந்தாள் கல்லாய்'

என்ற செய்யுள் காணப்படுகிறது. (அ0)

563. கைவண்ணம் கால் வண்ணம்: க. 27.5 (அக)

564. கரிய செம்மல் - இராமன்; 337. குணத்தான் - விசுவாமித்திரர். மாதவன் - கௌதமர். படர் - துன்பம். கரிய செம்மல் என்ன அகலிகை வணங்கப்போனாள். இராமலக்குமணர் தங்கள் ஜாதி தருமம் நோக்கியும் அகலிகை பளிதை ஆனமையை உலகுக்கு உணர்த்த எண்ணியும் அவளைவணங்கினதாகவும் அவள் இராமரைப் பூசித்ததாகவும் முதல்நூல் கூறும்.

(பி - ம்.) [1]'கரிய சிங்கம்', 'கடவுட் சிங்கம்' [2]'னருளுண்டாகில் வழி படாய்' [3]'வணங்கிப்' (அஉ)

மூவரும் கோதமர் ஆச்சிரமம் சென்று உபசரிக்கப் பெறுதலும் கோசிகர் அகலிகையை ஏற்றுக் கொள்வித்தலும்

565 அருந்தவ னுறையு டன்னை [1]யனையவ ரணுக லோடும்
விருந்தினர் தம்மைக் காணு [2]விம்மலால் வியந்த நெஞ்சன்
பரிந்தெதிர் கொண்டு புக்குக் கடன்முறை [3]பழுது மூமற்
புரிந்தபின் காதி செம்மல் புனிதமா தவனை நோக்கி.

566 அஞ்சன வண்ணத் தான்ற னடித்துகள் கதுவா முன்னம்
வஞ்சிபோ லிடையாள் பண்டை வண்ணத்த ளாகி நின்றாள்
நெஞ்சினும் [1]பிழைப்பிலாளை நீயளித் திடுதி யென்னைக்
கஞ்சமா [2]மலரோ னன்ன முனிவனுங் கருத்துட் கொண்
[டான்.

மூவரும் மிதிலையைக் காணல்

567 குணங்களா லுயர்ந்த [1]வள்ளல் கோதமன் கமல பாதம்
வணங்கினன் வலங்கொண் டேத்தி மாசறு கற்பின் மிக்க
அணங்கினை யவன்கை யீந்தாண் டருந்தவ [2]னேடுந் தூய
மணங்கிளர் சோலை நீங்கி மணிமதின் [3]மிதிலை கண்டார்.

---

565 அருந்தவன் - கௌதமர். காதி செம்மல் - விசுவாமித்திரர்.

(பி - ம்) [1]'யணுகின' [2]'மெய்ம்முனி வியந்த' [3]'யாவும் பண்ணிப் புரிந்தபின்' (அ)

566 பிழைப்பு - குற்றம்; 2. 11:30-

(பி - ம்) [1]'பிழைபிலாளை', 'பழுதிலாளை' [2]'முனிவனன்ன' (அ)

567 குணங்களால் உயர்ந்த வள்ளல் - இராமன்; பாயிரம், 5. அவன் கை ஈந்து: 'கருங்கல்லைப் பெண்ணாக்கியதால் இராமர் பிதாவின் தகுதியேற்றுக் கோதமன் கையில் ஈந்தார்' என்பது நயம்.

(பி - ம்) [1]'வண்ணல்' [2]'னேமெம்வாச' (அ)

அகலிகை படலம் முற்றும்.

—:0:—

10. மிதிலைக் காட்சிப் படலம்*

கோடிகள் வருணனை

568 மையறு மதரி னீங்கி யரன்செய்மா தவத்தின் வந்து
செய்யவ ளிருந்தா ளென்று செழுமணிக் கொடிக ளென்னும்
கைகளை நீட்டி யந்தக் [1]கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை யொல்லை வாவென் றழைப்பது போன்ற தன்றே.

569 நிரம்பிய மாடத் தும்பர் நிரைமணிக் கொடிக ளெல்லாம்
தரம்பிற ரின்மை யுன்னித் தருமமே தூது [1]செல்ல
வரம்பில்பே ரழகி ஞாலம்மணஞ்செய்வான் வருகின் றானென்
றரம்பையர் [1]விசும்பிலோடு மாடலி னுடைக் கண்டார்.

570 பகற்கதிர் மறைய வானம் பாற்கடல் கடுப்ப நீண்ட
துகிற்கொடி மிதிலை மாடத் தும்பரிற் றுவன்றி நின்று
முகிற்குலந் தடவுந் தோறு நனைவன முகிலிற் சூழ்ந்த
அகிற்புகை கதுவுந் தோறு மூலர்வன [1]வாகக் கண்டார்.

---

* இந்த ஒரு படலம் சில பிரதிகளில் கீழே வருமாறு பல படலங்களாக அமைந்துள்ளது: செய். 568 - 590 மிதிலைகாண் படலம்; செய். 591 - 606 சானகி திருக்காட்சிப் படலம்; செய். 607 - 649 கைக்கிளைப் படலம்; செய். 650 - 722 கோசிகப் படலம்.

568. செய்யவள் - சீதை. திருமகளே சீதை:595. கொடிகளென்னும் கை: சிலப். கூ:189-90; 'மீண்டுபோ கென்றெள் றந்த வியனகர்க் குடுமி தோறும், காண்டகு பதாகை யாடைக் கைகளாற் றடுப்ப போன்ற' (வி-பா: வாசு தேவனைப். 6.) 'கமலச் செங்கண் ஐயன்' என்றது சீதையின் முழுஅழகையும் இராமபிரான் பார்த்து மகிழ்வது கருதி. 'ஒல்லைவா' என்றது சீதை நெடுநாள் மணமின்றி யிருத்தலைக் குறிப்பித்தது.

(பி - ம்.) [1]'கன்னிமா நகரஞ் செங்கண் ஐயனை' (சு)

569 தரம் பிறர் இன்மை உன்னி - சீதையை மணக்கும் தகுதி இராம பிரானுக் கன்றிப் பிறர்க் கில்லாமையை நினைத்து. வரம்பில்பேர் அழகினாள்: 'அழகினாளைத் தவஞ் செய்து பெற்றது காண்' (772.) அரம்பையருக்குத் துவசம்.

(பி - ம்.) [1]'செப்ப' [2]'விசும்பிற் கூடியாடல் போலாட' (உ)

570 துகில் - வெள்ளையாடை: ஆதலின் பாற்கடல் உவமை. அகிற் புகைக்கு முகில்: நாளா: நகரச். 6. துகில் நனைதலும் புலர்தலும்: 'கண்களு குத்த, அப்பி னனைந்த் தருந்துய ருயிர்ப் புடையாக்கை, வெப்பி னுற்புலர்ந் தொருநிலை யுறுதலென் றுகிலாள்' (இ.3:8.)

(பி - ம்.) [1]'வாடக் கண்டார்' (கூ)

மூவரும் மிதிலைக்குட் பிரவேசம்

571. ஆதரித் தமுதிற் கோறைய்த் தவயவ மமைக்குந் தன்மை
யாதெனத் திகைக்கு மல்லான் மதனற்கு மெழுத லாகாச்
சீதையைத் தருத லாலே திருமக ளிருந்த செய்ய [கார்.
போதெனப் பொலிந்து தோன்றும் பொன்மதின் மிதிலைப் புக்

தெரு வருணனை

572. சொற்கலை முனிவ னுண்ட சுடர்மணிக் கடலுந் துன்னி
அற்கலந் திலங்கு பன்மீ னரும்பிய வானும் போல
[1] விற்கலை நுதலி னொரு மைந்தரும் வெறுத்து நீத்த
பொற்கலன் கிடந்த மாட நெடுந்தெரு [2] வரிதிற் போனார்.

573. [1] தாறுமாய் தறுகட் குன்றந் தடமத வருவி தாழ்ப்ப
ஆறுமாய்க் கலின மாவி லாழியு மிழிந்தோ ராரூய்ச்
சேறுமாய்த் தேர்க ளோடத் துகளுமா யொன்றே டொன்று
மாறுமா றுகி வாளாக் கிடக்கிலா மறுகிற் சென்றார்.

---

571 அமுதில் கோல் தோய்த்து மன்மதன் அவயவம் அமைத்தல்: 'தேவு தெண்கட லமுதுகொண் டனங்கவேள் செய்த, ஓவி யம்புகை யுண் டதே யொக்கின்ற வுருவாள்' (இ.3:11.) நகருக்குத் தாமரைப்பூ: பெரும் பாண். 403-4; பரி. திரட்டு, 7; பெருங். உ. 3:50-114. (சு)

572 சொற்கலை முனிவன் - அகத்தியர். பொன்னுபரணம் சிந்திய வீதிக்கு மணிகள் நிறைந்த வற்றிய கடலும் மீன்பூத்த வானமும். வில்லும் கலையும் நுதலுக்கு உவமை. கலை - பிறைச் சந்திரனுக்கு ஆகுபெயர். 'வில் லுக்கும் எட்டாம் பிறைச் சந்திரனுக்கும் ஒப்பாகிய நெற்றியை யுடைய பெண்கள்' (ஔ உரை.) விற்கலை-ஒளியையுடைய கலை யெனினுமாம். நுதலி னொரும் மைந்தரும் கலன்களை வெறுத்து நீத்தது ஊடலினால்; 'கொல்லுலை வேற்க ணல்லார் கொழுநரோ டேதி நீத்த, வில்லுமிழ் கலன்கள்' (நைடத. காடு. 27) அரிதிற் சென்றது கால்களை அக்கலன்கள் பொதுக்கு மென் றஞ்சி என்க. (பி-ம்.) [1] 'விற்குல' [2] 'வதனிற்' (இ)

573 தாறுமாய் - இரும்பு முள்ளோடு கூடிய தாற்றுக் கோலை முறிக் கின்ற. யானையைக் குன்றம் என்பதற் கேற்ப மதத்தை அருவி என்றார். யானை தாற்றுக் கோலுக்கும் அடங்காமை: 907; 'காழோர் கையற மேலோ ரின்றி' (மணி. சு:35.) கலினம் - கடிவாளம். விலாழி - குதிரையின் வாய் நுரை. ஓர் ஆறாய்-ஒருவகையாக. மதநீரில் நுரை கலந்து இரண்டும் சேறு யின; 'குதிரைகளை வையாளி விடுகிற போது வாயிலிருந்து விழுகிற நுரை களாற் சேறாகியும், தேர்களோட அவை புதைந்து புழுதியாகியும்' (ஔ உரை) தேர் ஓடத் துகளுமாய்: 'சோறுவாக்கிய கொழுங்கஞ்சி, யாறு போலப் பரந் தொழுகி, ஏறு பொரச் சேறாகித், தேரோடத் துகள் கெழுமி' (பட்டினப். 44-7.) (பி-ம்.) [1] 'சாறுபாய் தறுகண் யானை' (சு)

574. தண்டுத லின்றி யொன்றித் [1] தலைத்தலை சிறந்த காதல்
[2] உண்டபின் கலவிப்போரி லொசிந்தமென் மகளி ரேபோல்
பண்டருங் கிளவி யார்தம் புலவியிற் பரிந்த கோதை [ரூர்.
வண்டொடு கிடந்து தேன்சோர் மணிநெடுந் தெருவிற் சென்

இதுமுதல் 16 கவிகள் மிதிலையில் அவர்கள் கண்ட காட்சிகள்

நாடகசாலை

575. நெய்திர ணரம்பிற் றந்த [1] மழலையி னியன்ற பாடல்
தைவரு மகர வீணை தண்ணுமை தழுவித் தூங்கக்
கைவழி நயனஞ் செல்லக் கண்வழி மனமுஞ் செல்ல
[2] ஐயதுண் ணிடையா ராடு [3] மாடக வரங்கு கண்டார்.

கடைகள்

576. [1] வரப்பறு மணியும் [2] பொன்னு மாரமுங் கவரி வாலும்
[3] சுரப்புடை யகிலு மஞ்ஞைத் தோகையுந் தும்பிக் கொம்பும்
[4] குரப்பணை நிரப்பு மள்ளர் குவிப்புறக் கரைக டோறும்
[5] பரப்பிய பொன்னி யன்ன வாவணம் பலவுங் கண்டார்.

---

574 ஒன்றி.....உடை: ஒத்த காமம் இது. சிறந்த - மிகுந்த. கலவிப் போரில் ஒசிந்த மகளிர்: 'சுரதந்தனி லிளைத்த கோதை' (தனிப்.) கலவியிற் சோர்ந்த மகளிர்க்கு வாடிய மாலை உவமை: 'பொய்வலாளன் மெய்யுறன் மீஇ,.....குவளை, வண்டுபடு மலரிற் சாஅய்' (குறுந். உ0: 2-5.)

(பி-ம்.) 1 'தலைத்தலை' 2 'உண்டகன்' (எ)

575 நெய்திரள் நரம்பு; நெய் - தேன்: 532; 'தீந்தேன், அணிபெற வொழுகி யன்ன வமிழ்துறழ் நரம்பி னல்யாழ்' (சீவக. 722.)

(பி - ம்.) 1 'மழலையி னின்ற', 'மழலையாழ் நிறை' 2 'நையநுண்' 3 'நாடக' (அ)

576 வரம்பு அறு - அளவற்ற. ஆரம் - சந்தனம்; மூங்கிலிலும் யானையின் மருப்பிலும் தோன்றிய முத்துக்களும் ஆம். சுரப்புடை - பாலை நிலத்தின் கண். கள்ளி பாலையின் கருப்பொருள். அதன்கண் தோன்றுவது அகில்; 'கள்ளி வயிற்றி னகில் பிறக்கும்' (நான்மணிக். 6.) குரப்பணை - குரம்பாகிய அணை, செய்கரை. இருகரையும் ஆறும் போன்றன இரண்டு பக்கத்தின் கடைகளும் தெருவும். பொன்னியன்ன ஆவணம்: மதுரைக். 359; நெடுநல் 30; மலைபடு. 481; நற். உ00: 3; பெருங். உ. 7:7, கு 7: 23. பொன்னி: 514, குறிப்.

(பி - ம்.) 1 'வரைப்படு' 'வரம்பறு' 2 'பொன்னும் முத்தமுங் கொழித்து வாரிச், சுரத்திடை' 3 'சுரும்பிடை' 4 'குரம்பணை' 5 'பரம்பிய' (கூ)

ஊசலாடல்

577. பூசலி னெழுந்த வண்டு மருங்கினுக் கிரங்கப் பொங்கி
மாசறு பிறவி போல வருவது போவ தாகிக்
காசறு பவளச் செங்காய் மரகதக் கமுகிற் பூண்ட
ஊசலின் மகளிர் மைந்தர் [1]சிந்தையோ லுலாவக் கண்டார்.

குதிரைச் சாரி

578. கொட்புறு கலினப் பாய்மாக்[1] குயமகன் முடுக்கி விட்ட
மட்கலத் திகிரி போல [2] வாளியின் வருவ மேலோர்
நட்பினி லிடைய ருத ஞானிக ளுணர்வி னொன்றுய்க்
கட்புலத் தினைய வென்றுந் தெரிவில தியக் கண்டார்.

யானைப்போர்

579. தயிருறு மத்திற் காம சரம்படத் தலைப்பட் டோடும்
உயிருறு காத லாரி னொன்றையொன் றுருவு கில்லாச்
செயிருறு மனத்த வாகித் தீத்திரள் செங்கண் சிந்த
வயிரவான் [1] மருப்பி யானை மலையென மலையக் கண்டார்.

---

577 மருங்கினுக்கிரங்க - இடை ஒடிந்து விடுமோ வென்று இரங்க. காசு-குற்றம். மைந்தர் சிந்தை போல்: அப்பெண்களைக் கண்ட மைந்தர் களின் சிந்தை ஊசலாடுதல் போல். இளைஞர் சிந்தை: 97. கமுக ஊசல்: 1188; ச: 12-22; சீவக. 922. (பி - ம்.) 1 'சிந்தையோடுலவக்' (க0)

578 கொட்பு - சுழற்சி. வாளியின் - வட்டமானகதியில். சுழற்சியின் விரைவு அவை ஒரு நிலையில் நிற்கிற பாவனையாகத் தோன்றிற்று என்பது கருத்து. பம்பரம் விரைவாக ஆடுவதைத் தாங்குவது என்ற வழக்கு இங்கே நோக்கத்தக்கது. குதிரைக்குக் குயவன் திகிரி: 'கூட்டுறை முறுக்கி விட்ட குயமகன் றிகிரிபோல, வாட்டிறற் றேவதத்தன் கலினமா..... திரியுமன்றே' (சீவக. 786.) மேலோர் நட்பு இடையறுமை: 'நிறைநீர நீரவர் கேண்மை (குறள், 782.) உணர்வின் ஒன்றுய் - உணர்வைப் போல் ஒரு தன்மை யுடையனவாகி. மு: இருவகைச்சாரியும்.....ஒரு கணத்தினே' (திருவிளை.)

(பி - ம்.) 1 'குலான்மகன்' 2 'வயின் வயின்வருவ' (கக)

579 காமசரம் மத்துக்கும் காதலர் மனம் தயிருக்கும் உவமை. தலைப் படல்-எதிர்ப்படல். இரண்டு யானைகள் எதிர்த்துப் போர் செய்தலுக்குக் காதலர் இருவர் ஒருவரை யொருவர் பிரியாமல் ஊடுதல் உவமை: பெருங். க. 32: 34-8. வயிரம் - கோளகை என்னும் தந்தப்பூண், சீவக. 645, 2275; 'நிறை வயிரக் கோட்டானிலவும்' (தண்டி. 59, மேற்) யானைப்போர்: 174.

(பி - ம்.) 1 'கணையத்' (கஉ)

பெண் எழில்

580. வாளரம் பொருத வேலு மன்மதன் சிலையும் வண்டின்
கேளொடுங் [1] கிளைத்த நீலச் சுருளுஞ்செங் கிடையுங் [2] கொண்டு
நிளிருங் களங்க நீக்கி நிரைமணி மாட நெற்றிச்
சாளரந் தோறுந் தோன்றுஞ் சந்திர வுதயங் கண்டார்.

581. பளிக்குவள் ளத்து வாக்கும் பசுநறுந் தேறன் மாந்தி
[1] வெளிப்படு நகைய வாகி [2] வெறியன மிழற்று கின்ற
ஒளிப்பினு மொளிக்க வொட்டா வூடலை யுணர்த்து மாபோல்
களிப்பினை யுணர்த்துஞ் செவ்விக் கமலங்கள் பலவுங் கண்டார்.

582. வள்ளுகிர்த் தளிர்க்கை நோவ மாடகம் பற்றி வார்ந்த
கள்ளென நரம்பு வீக்கிக் [1] கண்ணெடு மனமுங் கூட்டி
வெள்ளிய முறுவ றோன்ற விருந்தென மகளி ரீந்த [ரூர்.
[2] தெள்விளிப் பாணித் தீந்தேன் செவிமடுத் தினிது [3] சென்

583. மெய்வரும் போக மொக்க வுடனுண்டு விலையுங் கொள்ளும்
பையர வல்கு லார்த முள்ளமும் பளிங்கும் போல
மையரி நெடுங்க ணோக்கம் [1] படுதலுங் கருகி வந்து
கைபுகச் சிவந்து காட்டுங் சுந்துகம் பலவுங் கண்டார்.

---

580 வாளரம்-ஒருவகை அரம்; சீவக. 461. வேல் கண்ணுக்கு; சிலை புருவத்துக்கு. நீலச்சுருள் - கூந்தல். செங்கிடை - இதழ்: 'தித்தி யாநின்ற செங்கிடை வாய்ச்சியர்' (ஈ. 8:21.) சந்திரவுதயம் - பெண்களின் முகத் தோற்றம். ழ: 'வாளரத்த வேல் வண்டொடு கெண்டைகண் மயங்கச், சாள ரத்தினும் பூத்தன தாமரை மலர்கள்' (உ. 1:54.)

(பி - ம்) 1 'கிடந்த', 'கிடக்கும்' 2 'காட்டி' (கஉ)

581 தேறல் - கள். நகை - சிரிப்பு. வெறியன - மயக்கத்தை யுடைய னவாய். கமலங்கள் - பெண்களின் முகங்கள்.

(பி - ம்) 1 'வெளிப்படுந் தகைய' 2 'வெறியினை' (கச)

582 மாடகம் - முறுக்காணி. கள்ளென நரம்பு; 575. தெள்விளிப் பாணி - இசைப் பாட்டு.

(பி - ம்.) 1 'கையொடு மனமுங்' 2 'தெள்ளிய பண் செய்தீந்தேன்' 3 'தினிதி னுண்டார்' (கடு)

583 ஒக்கவுண்டு; 558. அல்குலார் தம் உள்ளம்: 31, குறிப். எதிர்ப் பட்டவருடைய மனத்துக்கியைய நடத்தல் வேசையர் இயல்பு. தன்னை யடுத்த பொருளின் நிறத்தைக் காட்டல் பளிங்கின் இயல்பு. கந்துகம் - பந்து; அதன் இயல்பான நிறம் வெண்மை.

(பி - ம்.) 1 'படுந்தொறுங்' (கசு)

584. பங்கயங் குவளை யாம்பல் படர்கொடி வள்ளை நீலம்
செங்கிடை தரங்கங் கெண்டை சினைவரா லனைய தேம்பத்
[1] தங்களோ டுவமை யில்லா வவயவத் தகைமை சாலும்
மங்கையர் விரும்பி யாடும் வாவிகள் பலவுங் கண்டார்.

585. கடகமுங் குழையும் பூணு மாரமுங் [1] கலிங்க நுண்ணூல்
வடகமு மகர யாழும் [2] வட்டினி கொடுத்து வாசத் [டுப்
தொடையலங் கோதை 3 சோரப் பளிக்குநாய் சிவப்பத் தொட்
படைநெடுங் 4 கண்ணு ராடும் பண்ணைகள் பலவுங் கண்டார்.

ஆண் எழில்

586. இயங்குறு புலன்க ளங்கு மிங்குங்கொண் டேக வேகி
மயங்குபு திரிந்து நின்று மறுகுறு முணர்வி தென்னப்
புயங்களிற் கலவைச் சாந்தும் புணர்முலைச் சுவடு நீங்கா
[1] வயங்கெழிற் குமரர் வாளாட் டாடிடம் பலவுங் கண்டார்.

587. [1] வெஞ்சின வுருவிற் றென்னு மேனியர் வேண்டிற் றீயும்
நெஞ்சின ரீசன் கண்ணி னெருப்புரு வனங்க னன்னர்
செஞ்சிலைக் கரத்தர் மாதர் புலவிக [2] டிருத்திச் சேந்த
[3] குஞ்சியர் சுழலா நின்ற மைந்தர் தங் குழாங்கள் கண்டார்.

---

584 குவளை வேறு, நீலம் வேறு; 632. பங்கயம் முதலியன நீர்க்குள் இருப்பன: பெண்களின் அவயவங்களுக்குப் புலவரால் வழக்கமாக உவமை கூறப்படுவன. தேம்புதல் வாவிகளில் நீராடி மங்கைமார் அவயவங்களுக்கு நேராகாமையின். (பி - ம்.) 1 'தங்களை யுவமை யான', 'தங்கள் வேறு வமை' (கஎ)

585 கலிங்கம் - ஆடை. நுண்ணூல் வடகம் - மேற் போர்வை விசேடம்: சீவக 462. வட்டினி-பந்தயம். பளிக்கு நாய்-சொக்கட்டான். பண்ணைகள் விளையாட்டு. நாய்-சூதாடு கருவியுள் ஒன்று; 'நரைமூ தாளர் நாயிடக் குழிந்த, வல்லி னல்லக நிறைய' (புறநா. நெடு: 14-5.) பரத்தையர் சூதாடல்: 'கருவிச்சூ தாடி வென்றுங் கைப்பொருள் கவர்தல் செய்வார்' (திருவிளை. நகர. 48.)

(பி - ம்.) 1 'கனகநூலும்' 2 'வட்டித்தற்', 'வடிதரக்' 3 'சோரத் தோகை சேர் மயிலின் சாயல்' 4 'கண்ணுர் வட்டாட் டாடிடம்' (கஅ)

586 உணர்வு புலன்வழிச் சேர்வ தென்ன: புலன்களால் மறுகுறும் உணர்வு வாளுக்கு உவமை.

(பி - ம்.) 1 'பயங்கெழு குமரர் பந்தாட்', 'வயங் கெழிற்குமரர் வட்டாட்' (கக)

587 சுழலா நின்றது விற்போரில். சேந்தமைக்குக் காரணம் மாதரடியிற் பூசிய செம்பஞ்சுக் குழம்பு படுதல். சினத்தின் உரு இத்தன்மையது.

வேறு

அரண்மனையை அடுத்துள்ள பொழில்

588. பாகொக் குஞ்சொற் பைங்கிளி யோடும் பலபேசி
மாகத் தும்பர் மங்கையர் நாண மலர்கொய்யும்
தோகைக் கொம்பி னன்னவர்க் கன்ன நடைதோற்றுப்
போகக் கண்டே வண்டின மார்க்கும் பொழில்கண்டார்.

அரண்மனையைச் சுற்றியுள்ள அகழி

589. உம்பர்க் கேயு மாளிகை [1]யோளி நிழல்பாய
இம்பர்த் தோன்று நாகர்த நாட்டி னெழில்காட்டிப்
பம்பிப் பொங்குங் கங்கையி ஞழ்ந்த படைமன்னன்
அம்பொற் கோயிற் பொன்மதில் சுற்று மகழ்கண்டார்.

கன்னி மாடத் தருகில் நிற்றல்

590. பொன்னின் சோதிப் போதினி னுற்றம் பொலிவேபோல்
தென்னுண் டேறற் றீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்
கன்னிம் மாடத் தும்பரின் மாடே [1]கழிபேடோ
டன்னம் மாடு முன்றுறை கண்டங் கயனின்றூர்.

(பி - ம்.) 1 'வெஞ்சின வுருமி தென்னு', 'வெஞ்சுடருரு வுற்றன்ன' 2 'டிருத்தித் தேய்ந்த' 3 'குஞ்சியர் குணத்தான் மிக்க குமரர்தம்', 'குஞ்சிய ரிளமைச் செல்வ மைந்தர்தங்', 'குஞ்சியர் சூழ நின்ற'

இதன்பின் ஒருபிரதியில்,

'இன்னபல் வளங்க ளெல்லா மினிதுற நோக்கி யார்க்கும்
முன்னவ னுய தேவு முனிவனு மிகூய கோவும்
பொன்னக ரிறையு மற்றுப் பூதலத் தரசு மொவ்வா
மன்னவன் சனகன் கோயில் மணிமதிற் புறத்தைச் சேர்ந்தார்'

என்ற செய்யுளும் 'மிதிலைகாண் படலம் முற்றும்' என்ற தொடரும் காணப்படுகின்றன. (உ0)

588 மாகம் - விண். உம்பர் மங்கையர்-தேவ ஸ்திரீகள். கிளியொடும் பலபேசி மலர் கொய்யும் கொம்பின் அன்னவர்க்கு வண்டினம் ஆர்த்தல் அன்னங்கள் தோற்ற மையைக் கண்டு: தோற்றோரைக் கண்டு ஆர்த்தல் மரபு. 'தோகைக் கொம்பின்' ஒற்று சந்த நோக்கி விரிந்தது. (உக)

589 ஓளி-வரிசை. நாகர் தம்நாடு. அமராவதி, போகவதி. நாகர்தம் நாட்டின் எழில் காட்டும் அகழ்: 'மடவில் வானகருருவு காட்டியது போன் மதிள் சூழ், கடிகொண் மாநக ரந்நிழல் கதுவிடா தகன்ற புடைகொ ளந்நக ருடுத்தலைப் பொங்குபே ரகழி' (நைடத. நகரப். 1.) அகழ் புறமதிலைச் சூழ்ந்தது. (பி - ம்.) 1 'யோங்கி,' 'மீதி' (உஉ)

590 பொன்னின் சோதி: 1233. இன்பமென்றது சீதையை; 'எண்ணி நோக்கி யியம்பரு மின்பத்தை' (உ. 6:11.) மாடத்தின் மேல் அன்னமாடும் முன்றுறை என்றதனால் நீர் இருப்பது பெறப்படும். பெடையோடு ஆண் அன்னத்தின் மன ஒருமைக்குப் பொன்னின் சோதி முதலியன உவமை.

சீதை திரு மகளே

591. செப்புங் காலைச் செங்கம லத்தோன் முதல்யாரும்
எப்பெண் பாலுங் கொண்டுவ மிப்போ ருவமிக்கும்
அப்பெண் டானே யாயின போதிங் கயன்மற்றோர்
ஒப்பெங் கேகொண் [1]டெவ்வகை நாடி யுரைசெய்கேன்.

இது முதல் 10 கவிகள் சீதையின் வருணனை

592. பொன்சேர் [1]மென்காற் கிண்கிணி யாரம் புனையாரம்
கொன்சே ரல்குன் மேகலை தாங்குங் [2]கொடியன்னார்
தன்சேர் [3]கோலத் தின்னெழில் காணச் சதகோடி.
மின்சே விக்க மின்னர சென்னும் படிநின்றாள்.

59 . வென்றம் மானைக் [1]காயயில் வேலுங் கொலைவாளும்
பின்றம் [2]மானப் பேர்கய லஞ்சப் பிறழ்கண்ணாள்
குன்றம் [3]மாடக் கோவி னளிக்குங் கடலன்றி
அன்றம் மாடத் தும்ப ரளிக்கு மமுதன்னாள்.

தென்-வண்டுகள்; தேன் என்பதன் விகாரம். இரண்டாம் அடியை முதலடியாகக் கொண்டால் பொருள் எளிதில் விளங்கும். கன்னி மாடத்தில் அன்னமாடும் துறைக்கருகில் சீதையைக் கண்டமை: 'அன்னமா டுந்துறைக் கருகுநின் றாளையக், கன்னிமா டத்திடைக் கண்டதுங் கழறுவாய்' (சு. 10:67.) அன்னம் என்பதனைச் சீதை யாக்கிப் பொன்னின் சோதி..... பொலிவே போல் அன்னம் ஆடும் முன்றுறை என்று இயைத்துப் பொருள் கொள்வாருமுண்டு. (பி - ம்.) 1 'பெடையோடும்' (உஉ)

591 உவமிப்போ ருவமிக்கும் அப்பெண் - திருமகள். தானே அப் பெண் ஆயினபோது; தான் - சீதை. (பி - ம்.) 1 'டேவரை' (உச)

592 ஆரம் - இரத்தினமாலை. புனையாரம் - பூமாலை. கோலத்து இன் னெழில் - அலங்காரத் தாலுண்டான இனிய அழகு. தோழிகள் மின்னல்; சீதை மின்னரசு. கொடியன்னார் எழிலைக்காணும்படி. பெண்கள் விரும்பும் அழகினள் சீதை.

(பி - ம்.) 1 'ரங்காற்' 2 'கொடியன்னாள்' 3 'வோக்கத் தன் னெழில்' (உடு)

593 அம்மானை வென்று; அம்மானை - அழகியமானை. பின்ற - பின் னிட்டோட. மானப் பேர் கயல்-மிகப் பெரிய கயல்மீன்; மானம்-பெருமை. குன்றம் ஆட-மந்திரமலை சுழல. கோவின்-தேவலோகத்திற்கு.

(பி - ம்.) 1 'தாரயில்' 2 'மானீர்ப் பேர் கய' 3 'வானத் தும்ப ரளிக்கு' (உசு)

594. உமையா ளொக்கு மங்கைய ருச்சிக் [1]கரம்வைக்கும்
கமையாண் மேனி கண்டவர் காட்சிக் கரைகாணூர்
இமையா நாட்டம் பெற்றில மென்ரு நிருகண்ணுல்
அமையா தென்ரு ரந்தர வானத் தவரெல்லாம்.

595. 1 பெருந்தே ரல்குற் பெண்ணிவ ளொப்பா ளொருபெண்ணைத்
தருந்தா னின்ன நான்முக னென்ரூற் ரரலாமோ
அருந்தா [2]வந்தே தேவ நிரந்தா லமுதென்னும்
மருந்தே யல்லா லென்னினி நல்கு மணியாழி.

596. அனையாண் மேனி கண்டபி னண்டத் தரசாளும்
1 வினையோர் மேவு மேனகை யாதி மிளிர்வேற்கண்
இனையோ ருள்ளத் [2]தின்னலி னேர்தம் முகமென்னும்
பனிதோய் வாளின் வெண்மதிக் கென்றும் பகலன்றே.

597. மலர்மே னின்று மங்கையிவ் வையத் திடைவைகப்
பலகா லுந்தம் மெய்ந்நனி வாடும் படிநோற்ரூர்
அலகோ வில்லா வந்தண ரோநல் லறமேயோ
உலகோ வாழ்ஞ் வும்பர்கொ லோவீ துணரேமால்.

---

594 கமையாள்-பொறுமையுடையவள். காட்சிக் கரைகாணூர் - அழகின் எல்லையை முற்றிலும் காணுதவர்களாய். இமையா நாட்டம் பெற்றில மென்றவர் இவ்வுலக மங்கையர். அந்தரவானத்தவர்-இமையா நாட்டம் பெற்றுள்ள தேவகணங்கள். ஒப்பு: 1224, 1234; 'சேயிதழ்த் தாமரைச் சேக்கை தீர்ந்திவண், மேயவள் மணிநிற மேனிகாணுதற், கேயுமே யிருப திங்கிமைப்பி னுட்டங்கள், ஆயிர மில்லையென் றல்ல லெய்தினன்'(கூ.8:29.)

(பி - ம்.) 1 'கரம்வைத்தே', 'கரம்வைப்பக்' (உஎ)

595 நான்முகன் தான் இன்னந்தரும் என்ரூல் தரலாமோ-அந்நான்முகனுல் தரல் ஒல்லுமோ? அருந்தா-அருந்தாமல். மணியாழி-மணிகளைப் பெற்றுள்ள கடல்; கடலுக்கு இரத்தினகரம் என்பது பெயர். பாற்கடல் மீட்டும் ஒருகால் தேவர் வேண்டினும் சீதையைப் போன்ற பெண்ணைத் தர வல்லதன்று என்பது கருத்து.

(பி - ம்.) 1 'பெருந்தே னின்சொற்' 2 'வந்தத்' (உஅ)

596 மேவும் விரும்புகின்ற. இன்னலினேர்-துன்ப முடையாரானர். பகல்-சூரியன்: அன்னர்தம் முகம் பகற் சந்திரனைப்போல் ஒளி மழுங்கும் என்றவாறு. பகல் சீதையின் மேனிக்கு.

(பி - ம்) 1 'வினையோ ராரும்' 2 'இன்னலுள்ளார்தம்' (உக)

597 அலகு - அளவு. உலகோ - பூவுலகமோ. நோற்ரூர் அறமோ உலகோவாழ்ஞ்: சிறப்பினுல்அஃறிணை உயர்திணையோடுமயங்கியது. (கூ0)

598 தன்னே ரில்லா மங்கையர் செங்கைத் தளிர்மானே
அன்னே தேனே யாரமு தேயென் [1]றடிபோற்ற
முன்னே முன்னே மொய்ம்மலர் தூவி முறைசாற்றப்
[2] பொன்னே சூழும் பூவி னெதுங்கிப் பொலிகின்றாள்.

599 கொல்லும் வேலுங் கூற்றமு மென்னு மிவையெல்லாம்
வெல்லும் வெல்லு [1]மென்ன மதர்க்கும் விழிகொண்டாள்
சொல்லுந் தன்மைத் தன்றிது குன்றுஞ் சுவருந்திண்
கல்லும் புல்லுங் கண்டுரு கப்பெண் கனிநின்றாள்.

வேறு

600 வெங்களி விழிக்கொரு விழவு மாயவர்
கண்களிற் காணவே களிப்பு நல்கலான்
மங்கையர்க் கனையதோர் மருந்து மாயவள்
எங்கணு யகற்கினி யாவ தாங்கொலோ.

---

598. செங்கைத் தளிர்மான் - சிவந்த கைகளாகிய தளிர்களையுடைய மான். அன்னே - தாயே. முன்னே.....முறைசாற்ற - 'முன்னே நடப்பதற்கு (பட்டாடையை விரித்து) அனிச்சப் பூவைப் பரப்பிக் கையை யிரண்டு பக்கமும் தாங்கிக்கொண்டு வர' (ஓர் உரை); 'அம்மெல்லனிச்சம் மலரு மன்னத் தூவியும், வெம்மையா மென்றஞ்சி மெல்ல மிதியாத,பொம் மென் னிலவப்பூம் போதரின் னடிபோற்றி, இம்மென் கலேயா ரிடுவென் றேத்த வொதுங்கினாள்' (சீவக. 2454); 'பங்கய முகத்தவர் பல்லாண்டு பல கூறி, நங்கையடி போற்றியென நங்கை நடைகற்றாள்', 'அணிதயங்கு சோபான வீதிவா யணங்களனையா ரடியீடேந்த' (தூளா. கல்யாண. 35, சுயம்வர. 247.) பூவினெதுங்கி - பூக்களின்மேல் அடியெடுத்து வைத்து.

(பி - ம்.) 1 'றடிபோற்றி' 2 'பொன்னேர் சோதிப்பூவின் விளங்கிப்' (கக)

599. மதர்க்கும் - செருக்கிய. அழகு சொல்லுந் தன்மைத் தன்று உருக - அழகைக்கண்டு உருக.

(பி - ம்.) 1 'மென்பதனுக்கே', 'யென்னுமதற்கே' (கஉ)

600. வெங்களி விழிக்கு - விருப்பத்தோடு கூடிய களிப்பையுடைய (மங்கையர்களின்) கண்களுக்கு. 'விழிக்கு விழவு: 'விழவு மேம்பட்ட வென்னலம்' (குறுந். கஉடு.) அவர் - பிராட்டியாரைச் சூழ்ந்து நிற்கும் பெண்கள். பெண்களுக்கே இங்ஙனமாயின் ஆடவனாகிய எம்பெருமானுக்கு என்னவதோ. பெண்களும் விரும்பும் அழகு: 1224; 1234; 'கண்பிற பொருளிற் செல்லா கருத்தெனி னஃதே கண்ட. பெண்பிறந் தேனுக் கென்ரு லென்பதும் பிறருக் கென்றாள்' (கூ. நி: 60); 'பெண் மகிழ்வுற்ற.....மகளிர்' (மதுரைக். 555); 'பெண்டிரு மாண்மை வெஃகிப் பேதுறு முலையினாள்' 'வான்மதர் மழைக்க ணேக்கி.....சிகழிகைப் படியு நோக்கி, ஆண்விருப்புற்று நின்ரு ரவ்வனத் தோளினாரே'

601 இழைகளுங் குழைகளு [1]மின்ன முன்னமே
[2] மழைபொரு கண்ணிணை மடந்தை மாரொடும்
பழகிய வேனுமப் பாவை தோன்றலால்
அழகெனு [3]மதுவுமோ ரழகு பெற்றதே.

காட்சியுங் காதலும்

602 எண்ணரு நலத்தினா ளினைய ணின்றுழி
கண்ணொடு கண்ணிணை கதுவி யொன்றையொன்
[1] றுண்ணவுண் ணிறையொடு முணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினா னவளு நோக்கினாள்.

603 நோக்கிய நோக்கெனு நுதிகொள் வேலிணை
ஆக்கிய மதுகையான் றோளி லாழ்ந்தன
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும்
தாக்கணங் கனையவ டனத்திற் றைத்தவே.

(சீவக. 587, 2447.) இன்ன-இப்படிப்பட்ட ஆபரணங்கள். ஒரு பிரதியில் இச்செய்யுள் :

'நங்கையர் விழிக்குநல் விழவு மாயவர்
இங்கிதத் தொடுதொழு திறைஞ்சுந் தேவுமாய்
அங்கவர்க் கமுதுமாய் வந்த சானகி
எங்கணா யகற்கினி யாவ தாங்கொலோ'

என்று காணப்படுகிறது. (௩௩)

601. முன்னமே பழகிய வேனும் - முன்பு அழகினைத் தந்து பழக்கம் பெற்றனவேனும். அழகெனும் அதுவும் - அணி என்ற பெயரையுடைய அந்நகைகளில் ஒவ்வொன்றும். 'அழகிவளைத் தவஞ்செய்து பெற்றது காண்'(772); 'அழகினுக் கழகு செய்தாள்' (ச. 12:33.)

(பி ம்.) 1'மிலங்க வின்புறு' 2 'மழைதரு' 3 'மழகு மோரழகு' (௩௪)

602. உணர்வு - அறிவு. அகப் பொருட் சிறப்புப் பற்றி இராமபிரான் முன்னோக்கியதாகக் கூறினார். தனுர் பங்கத்துக்கு முன் இவ்விருவர் சந்தித்த செய்தி முதனூலில் இல்லை. 'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள், என்ன பயனு மில' (1100) என்றகுறட்பாவின் கருத்தை உட்கொண்டது இது.

(பி - ம்.) 1 'றுண்ணவு நிலைபெறா துணர்வு' (௩௫)

603. நுதி - கூர்மை. மதுகையான் - வலிமையை யுடையவன். தாக்கணங்கு - தீண்டி வருத்தும் பெண் தெய்வம். 'நேரிழை நெடிய நம்பி, தோளின்கண் மனம்வைத் தன்ன' (௩. 5:4.)

ஒப்பு : 'கழிபெருங் காத லாள்கட் கருவிளை மலர்கள் வெய்ய, மழவிடை யனையான் செய்ய மணிப்புய வரையிற் பூத்த, விழைவொடு மகிழ்ச்சி கூரும் வேனில்வே ளனையான் செங்கண், முழுநெறிக் கமலமன்னாண் முலைத்தடத் தலர்ந்த மாதோ' (நைடத. நளன்றூதுப், 102.) (௩௬)

604 பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்
தொருவரை [1]யொருவர்தம் முள்ள மீர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்க ணங்கையும்
இருவரு மாறிப்புக் கிதய மெய்தினர்.

605 மருங்கிலா நங்கையும் வசையி லெயனும்
[1] ஒருங்கிய விரண்டுடற் குயிரொன் றுயினர்
கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினுற் பேச வேண்டுமோ.

இராமன் முனியோடும் மறைதல்

606 அந்தமி லழகனை யணைகி லாமையிற்
பைந்தொடி யோவியப் பாவை போன்றனள்
சிந்தையு ணிறையுமெய்ந் நலனும் பின்செல
மைந்தனு முனியொடு மறையப் போயினன்.

607 [1] பிறையெனு நுதலவள் பெண்மை யென்படும்
நறைகம ழலங்கலா னயன கோசரம்
மறைதலு மனமெனு மத்த யானையின்
நிறையெனு மங்குச நிமிர்ந்து போயதே.

---

604. இருவரு மாறிப்புக் கிதய மெய்தினர்: 'ஒருவே னுள்ளுளே யாகி னுய்தியால், இருவே முன்னிரு வேமி ருந்திலேம்' (சு. 6:10); 'வெஞ் சின விடலையொடு நெஞ்சுமா றுடி', 'உழலுமென் னெஞ்சினைப், பல்லி தழ்க்கோதை பதுமா பதியெனும், மெல்லியற் கோமகண் மெல்லென வாங்கித், தன்பால் வைத்துத் தானுந் தன்னுடைத், திண்பா னெஞ்சினைத் திரிதலொன்றின்றி, என்னுழை நிறீஇத் திண்ணிதிற் கலந்த, காம வேட்கையள்' (பெருங். உ. 6:76. 8: 92-98.) (உஎ)

605. ஒருங்கிய - ஒன்றுபட்ட. இரண்டுடற் குயிரொன் றுயினர்: 'காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர், ஆகத்து ளோருயிர் கண்டனம் யாம்' (திருச்சிற். 71); 'பாவியேற், காவியொன் றிரண்டெம்பு' (சீவக. 1017); 'காவிபோற் கண்ணிக்குங் கண்ணியந்தோட் காளைக்கும், ஆவிபோ லாடையுமொன் றுனதே' (நள. உ:86.) கருங்கடற் பள்ளி: திருமால் கருங்கடலிற் கண்வளர்கிறார் என்பது 'நீலக் கடலுள் நெடுங்காலங் கண் வளர்ந்தான்' (திவ்.) என்பதனால் உணரப்படும்.

(பி - ம்.) 1 'ஒருங்குற' (உஅ)

606. நிறையு நலனும் பின்செல: 622; 'யானே யீண்டையேனே யென்னலனே.....கானக நாடனெ டூண்டொழிந் தன்றே' (குறுந். நெச, கஎ, கஉநி); 'நாடன், உற்றோர் மறவா நோய்தந்து, கண்டோர் தண்டா நலங்கொண் டனனே' (ஐங். உஎஅ); 'தம்மொடு தானே சென்ற நலனும்' (அகநா. கoஉ: 13-4) ஓவியப் பாவைபோல் நிற்றல்: கூ. 5:27, (உக)

607. பெண்மை என்படும் - பெண்களுக்குள்ள நாணம் மடம் முதலியவற்றைத் தேவியார் விட்டு விட்டார் என்பது கருத்து; 622.

608 மாலுற வருதலு மனமு மெய்யுந்தன்
னூலுறு மருங்குல்போ னுடங்கு வாணெடுங்
காலுறு கண்வழி புகுந்த காமநோய்
பாலுறு பிரையெனப் பரந்த தெங்குமே.

609 நோமுறு நோய்நிலை நுவல கிற்றிலள்
ஊமரின் மனத்திடை யுன்னி [1]விம்முவாள்
காமனு மொருசரங் கருத்தி னெய்தனன்
வேமெரி யதனிடை விறகிட் டென்னவே.

610 நிழலிடு குண்டல [1]நிரப்பி நீங்குரு
[2] அழலிட மிளிர்ந்திடு மயில்கொள் கண்ணிளள்
[3] சுழலிடு கூந்தலுந் துகிலுஞ் சோர்தரத்
தழலிடு வல்லியே போலச் சாம்பினள்.

நயன கோசரம் : கோசரம் - விஷயம். நிறையெனும் அங்குசம் நிமிர்ந்து போயதே - அறிவாகிய அங்குசத்திஞலே கொத்தி இழுக்கும்போது அந்த அங்குசம் நிமிர்ந்து போய்விட்டது ; பிராட்டியாரின் மனமாகிய யானை இராமன் பின்னே ஓடிவிட்டது என்றபடி. அங்குசம் நிமிரல் ; 881, 907; 'எழின் மருப்பெழில் வேழ மிகுதரு கடாத்தாற், ரெழின் மாறித் தலை வைத்த தோட்டிகை நிமிர்ந்தாங், கறிவு நம் மறிவாய்ந்த வடக்கமு நாணெடு, வறிதாகப்.....என்னெஞ்ச மென்னெடு நில்லாமை நனி வெளவித், தன்னலங் கரந்தாளே' (கலி. கடவு: 1 - 7); 'துடக்குவரை நில்லாது தோட்டி நிமிர்ந்து, மதக்களி றிரண்டுடன் மண்டி யாஅங்கு' (பெருங். க. 32:37-8.)

(பி - ம்.) 1 'பிறை நிகர்' (சஂ)

608. மால் - மயக்கம். மனமும் மெய்யும் மருங்குல் போல் நுடங்கு வாள்: 1160 ; 'மென்ம ருங்குல் போல் வேறுள வங்கமு மெலிந்தாள்' (ரு: 3. 3.) காலுறுகண் - நீண்ட தூரம் செல்லும் பார்வையையுடைய கண்; கால் - நீட்சி ; கண்வழி புகுந்த காமநோய் ; 'கண்டர வந்த காம வொள் ளெரி' (குறுந். 305: 1.) பாலுறு பிரை பரத்தல்; 'பிரையுறு பாலென நிலையிற் பின்றிய, உரையினர்' (ரு. 7. 35); 'சீரிய பாலின் வேலை சிறு பிரை தெறித்த தன்ஞன்' (ரு. 2: 96); 'குடப்பாற் சில்லுறை போலப், படைக்கு நோயெல்லாந் தாஞ யினனே' (புறநா. உஎசு); 'பிரைசேர் பாலினெய் போல' (திருவா. கோயின் மூத்த. 5) (சக)

609. நோம் - வருந்துவாள். ஊமரின்.....யுன்னி விம்முவாள்: 'உயர்திணை யூமன் போலத், துயர்பொறுக் கல்லேன் ரோழி நோய்க்கே' (குறுந். உஉச: 5-6); 'கையினுற் சொலக் கண்களிற் கேட்டிடு, மொய் கொள் சிந்தையின் மூங்கையு மாயினேன்' (சீவக. 997); 'இது சிதைவு பிறர்க்கின்மை, புறத்தார்க்குப் புலனுகாமை நெஞ்சினில் நிறுத்தலின் (ஷை உரை.) ஒரு சரம் - மன்மதபாணம் இரண்டு வகையில் தாமரை அல்லது சந்தாபம். எரியிடை விறகிட்டது : 'நெய்யா லெரிநுதுப்பேம்' (குறள். 1148.)

(பி - ம்.) 1 'விம்மினன்' (சஉ)

610. குண்டல நிரப்பி நீங்குரு.....கண் - காதளவும் அகன்றகண். அழலிட.....கொள்கண் - தீயிலிட ஒளிபொருந்தி விளங்கும் வேல்போன்ற

611 1 தழங்கிய கலைகளு நிறையுஞ் சங்கமும்
2 மழுங்கிய வுள்ளமு மறிவு 3மாமையும்
4 இழந்தவ ளிமையவர் கடைய யாவையும்
வழங்கிய கடலென வறிய ளாயினள்.

612 1 கலங்குழைந் துகநெடு நாணுங் கண்ணற
நலங்குழைந் தாணகின் முகத்தி லேவுண்டு
மலங்குழை யெனவுயிர் வருந்திச் சோர்தரப்
பொலங்குழை மயிலைக்கொண் டரிதிற் போயினர்.

613 காதொடு 1குமிழ்பொரு கடைக்க ணங்கைதன்
பாதமுங் கரங்களு மனைய பல்லவத்
2 தாதொடுங் குழையொடு மடுத்த தண்பனிச்
சீதநுண் டுளிமல ரமளி சேர்த்தினர்.

கண். பிரதிபேதப்படி நெய்யிடா அயில்கொள் கண் என்க. சுழலிடு கூந்தல் - முடித்திருந்த கூந்தல். துகிலும் குழலும் சோர்தல் : தொல். மெய்ப். சூ. தழலிடுவல்லி : 615; 'தீயுறு தளிரி னடுங்கி' (குறுந். 383 : 5.)

(பி - ம்.) 1 'மதனி னெய்யிடா' 2 'அழலிடா', 'அழலிடை வயங்குறு' 3 'சுழலளிக்' (சங)

611. தழங்கிய கலைகள் - ஒலிக்கின்ற மேகலாபரணங்கள். நிறை - மன உறுதி. சங்கம் - வளையல்கள். அழுங்கிய - கெட்ட. மாமை - தலைவியின் பாலுள்ள பேரெழில்; காதல் நோய் வர மாமை அழியும்; 'கான நாடன் பிரிந்தெனத், தானும் பிரிந்தன் றென்மாமைக் கவினே' (தொல். களவு. 21, நி. மேற்); 'தற்கண்டு மாமைத் தகையிழந்த - எற்காண' (பு. வெ: 307.)

(பி - ம்.) 1 'கழன்றன கலையொடு நிறையுஞ்' 2 'அழுந்தின' 3 'வாய்மையும்' 4 'இழந்தனள்' (சச)

612. குழைந்துக - நெகிழ்ந்து சிந்த. நெடுநாண்; 'சேணுமெம் மொடு வந்த, நாணும் விட்டேன்' (நற். கடு: 9 - 10. நலம் குழைந்தாள் - அழகழிந்தாள். ஏவுண்டு - அம்பு பாய்ந்து. மன்மதபாணம் மூலை முகட்டிற் பாய்தல் : 'செப்புநேர் முலைக்கண் வேனில் வேடொடுத்த தேமலர், அப்புமாரி காம வெம்மை செய்ய வாற்ற லாமையால்' (நைடத. கைக்கிளைப். 2); நகில்மேல் தொடுத்தது மாம்பூவாளி. மலங்கு உழை - வருந்துகிற மான். ஏவுண்டு மலங்குழை : 'ஏப்பெற்ற மான்பிணைபோ லேங்குவார்' (சீவக. 2965.)

(பி - ம்.) 1 'கலங்குழை யுறநெடு நாணங் கையற', 'கலுங்கழிந்துக கண்ணற' (சஞ)

613. பல்லவம் - தளிர்.

(பி - ம்) 1 'குழைபொரு' 2 'தாதொடுந் தாதியர் பரப்பித்தண் பனிச்' (சச)

614 [1] நாளுலா நறுமல ரமளி நண்ணினாள்
பூவீவீ புரைபனிப் புயற்குத் தேம்பிய
தாளதா மரைமலர் தைந்த பொய்கையும்
வாளரா துங்கிய மதியு மென்னவே.

615 கம்பமில் கொடுமனக் காம வேடன்கை
அம்பொடு சோர்வதோர் மயிலு மன்னவள்
வெம்புறு மனத்தனல் வெதுப்ப மென்மலர்க்
கொம்பென வமளியிற் குழைந்து சாய்ந்தனள்.

616 மலைமிசைத் தடத்துகு மழைக்க ணலிபோன்
முலைமுகட் டிதிர்ந்தன நெடுங்கண் முத்தினம்
சிலைநுதற் [1]கடையுறச் செறிந்த வேர்வுதன்
உலைமுகப் [2]புகைநிக ருயிர்ப்பின் மாய்ந்தவே.

617 சொரிந்தன நறுமலர் சுறுக்கொண் டேறின
பொரிந்தன கலவைகள் பொரியிற் சிந்தின
எரிந்தவெங் கனல்சுட வீழையிற் கோத்தநூல்
பரிந்தன கரிந்தன பல்ல வங்களே.

---

614. நாளுலாம் - அன்றலர்ந்த. பனியின் நிறத்துக்குப் பூவீப்பூ. பணிக்குத் தேம்பிய தாமரை: 'தாமரை முகங்கள் வாட்டுந் தண்பனிக் காலம்'(நைடத. அன்னத்தைக் கண் 9); பிராட்டியாரின் காமாக்கினி யாலே செந்நிறப் பூக்களும் வெள்ளை மலர்களும் கருகிப்போயின என்பது கருத்து. அராநுங்கிய மதி: அகநா. கூஉ: 7; 'பையரா விழுங்கப்பட்ட பசுங்கதிர் மதியமொத்து, மெய்யெரி துயரின் மூழ்க விதிர்விதிர்த்துருகி கையும், மையிருங் குழலினாள்' (சீவக. 1540.)

(பி - ம்.) 1 'நாளுறு' (சஎ)

615. வேடன்கை - வேள்தன்கை, வேடன்கை; சிலேடை. அம்பொடு சோரும் மயில்: 'ஏவுறு மஞ்ஞையி னடுங்கி' (முல்லைப். 84.) (சஅ)

616. நகிலின் மேல் வீழும் ஆலிக்கு, மலையின்மேல் வீழும் மழைத் துளி உவமை. சிலையைப்போன்ற நுதலின் கடையில்.

(பி - ம்.) 1 'கடையுறை செறிந்த வேற்கணாள்' 2 'புகைதரு முயிர்ப்பின்' (சக)

617. சொரிந்தன - படுக்கையில் விரிப்பதற்காகச் சொரிந்தன வாகிய. சுறுக்கொண்டு ஏறின - நாற்றம் கொண்டன. கலவைகள் - சந்தனக் குழம்பு முதலியன. பொரியிற் சிந்தின - காமத்தீயில் வெந்து பொரிகளைப் போல் தெறித்துச் சிந்தின. இழையிற் கோத்தநூல் - மேகலை முதலிய ஆபரணங்களிற் கோத்தநூல். நூல் பரிந்தன; பரிந்தன அற்றன. (கo)

618 தாதியர் செவிலியர் தாயர் தவ்வையர்
மாதுய 1ருழந்துழந் தழுங்கி மாழ்கினர்
யாதுகொ லிதுவென வெண்ண றேற்றலார்
போதிலை டயினிநீர் சுழற்றிப் 2போக்கினர்.

619 அருகுகின் றசைக்கின்ற வால வட்டக்கால்
எரியினை மிகுத்திட விழையு மாலையும்
கருகுவ Iதீவன கனல்வ காட்டலால்
உருகுபொற் பாவையு மொத்துத் தோன்றினள்.

620 அல்லினை வகுத்ததோ ரலங்கற் காடெனும்
வல்லெழு வல்லவேன் மரக தப்பெருங்
கல்லெனு மிருபுயங் கமலங் கண்ணெனும்
வில்லொடு மிழிந்ததோர் மேக மென்னுமால்.

621 நெருக்கியுட் 1புகுந்துநன் னிறையும் பெண்மையும்
உருக்கியென் னுயிரொடு முண்டு போயினன்
பொருப்புறழ் 2தோள்புணர் புணர்ணி யத்தது
கருப்புவில லன்றவன் காம னல்லனே.

---

618. தவ்வையர் - ஐவகைத் தாய் மாரின் பெண்களாகிச் சீதைக்கு மூத்த சகோதரி முறையிலுள்ளவர்; 'தாயர் தவ்வையர்' (சீவக. 184.) அயினி நீர் சுழற்றிப் போக்கினர் - ஆலத்தியாலே பரிகரித்தார்கள். அயினி நீர் சுழற்றல் திருவிழாவில் பரிகாரத்தின் பொருட்டு, 'ஆயிரங் கோடி மாத ரயினிநீர் சுழற்றிப் போனர்' (நைடத. மணம்புரி. 27.)

(பி - ம்.) 1 'ரொடுமெவர் மறுகி மாழ்கியே', 'ழுந்தனர் விழுந்து மாழ்கினர்' 2 'போற்றினர்' (நக)

619. ஆல வட்டக்கால் - விசிறியினால் எழுங்காற்று.

(பி - ம்.) 1 'தவழ்ந்தனல் கதுவக்' (நஉ)

இதன்பின் கீழேயுள்ள செய்யுள் சில பிரதிகளிற் காணப்படுகின்றது.

'தீங்குசெய் யரக்கர் தம் வருக்கந் தீயவும்
ஓங்கிய தவங்களு முலகும் வேதமும்
தாங்கிமேல் வளரவுந் தழைத்த சானகி
ஆங்கவன் வடிவினை யகத்தி னின்னுவாள்'

620. அல் - இருள். அலங்கற் காடு என்றது குடுமியை; அலங்கல் - மாலை; 623, 802. வல்எழு - வலிமை பொருந்திய கணையமரம். கல் - மலை. வில்லொடும் - இந்திரவில்லோடும். கோதண்டமும் கையுமாக இருத்தலின் இங்ஙனம் கூறினள். (நங)

621. நிறை: 'மறைத்ததொரு காரியம் பிறர் அறியாமல் ஒழுகுதல்' (கலி. கஙஉ: 12, ந.) உயிருண்டல்: 623, 802.

(பி - ம்.) 1 'புகுதரு நிறையும்' 2 'புயத்தவன் கையிற் போற்றும் வில்' (நச)

622 பெண்வழி நலனெனும் பிறந்த நாணெனும்
எண்வழி யுணர்வுதா னெங்குங் காண்கிலேன்
மண்வழி நடந்தடி வருந்தப் போனவன்
[1] கண்வழி நுழையுமோர் கள்வ னேகொலாம்.

623 இந்திர நீலமொத் திருண்ட குஞ்சியும்
சந்திர வதனமுந் தாழ்ந்த கைகளும்
சுந்தர மணிவரைத் தோளு மேயல
முந்தியென் [1]னுயிரையம் முறுவ லுண்டதே.

624 படர்ந்தொளி பரந்துயிர் பருகு மாகமும்
தடந்தரு தாமரைத் தாளு மேயல
சுடந்தரு மாமதக் களிநல் யானைபோல்
[1] நடந்தது கிடந்ததென் னுள்ள நண்ணியே.

625 உரைசெயிற் றேவர்த மூலகு ளானலன்
[1] பெருவிழித் தாமரை யிமைக்கும் பெற்றியால்
வரிசிலைத் தடக்கையன் மார்பி னூலினன்
அரசிளங் [2]குமரனே யாதல் வேண்டுமால்.

626 பிறந்துடை நலனிறை பிணித்த வெந்திரம்
கறங்குபு திரியுமென் கன்னி மாமதில்
எறிந்தவக் குமரனை யின்னுங் கண்ணிற்கண்
டறிந்துயி ரிழக்கவு [1]மாகு மேகொலாம்.

---

622. நலனழிவு : 606, குறிப். பிறந்த நாண் : 'நாணே டுடன் பிறந்த நான்' (முத்தொள்.) கள்வனே கொல் : 1244; 'யாருமில்லை தானே கள்வன்' (குறுந். உடு); 'என்னுள்ளங் கவர் கள்வன்' (தே. திருஞா. 1); 'கள்வன் கொண்ட வுள்ளம்', 'காட்சிக் கொத்த கள்வ 'னுதலின்' (பெருங். க. 33: 151, 34:241); 'கள்வன்கொல் யானறியேன் கரியானெரு காளை' (பரியதிரு. 3. 7:1.) எண்வழி உணர்வு - எண்ணத்தின் வழியே செல்லும் அறிவு.

(பி - ம்.) 1 'கண்வழி நடக்குமோர்' (நுடு)

623. குஞ்சிக்கு இந்திர நீலமணி; 'சுரிவளர்.....மணிநிறங் கொண்ட மாயிருங் குஞ்சி' (குறிஞ்சிப். 107-12); 'நீலமாய்ச் சுரிந்தகுஞ்சி, (சீவக. 1722.) மணி - நீலமணி. (பி - ம்.) 1 'னுயிரினை முறுவ' (நுசு)

624. ஆகம் - மார்பு. கடம் - யானைக் கன்னத்துளை; 'ஒருங்கட மூவெயில்' (திருச்சிற். 55.) யானைபோல் நடந்தது கிடந்தது : 806.

(பி - ம்.) 1 'நடந்தசீர்' (நுஎ)

625. வில்லாலும் தூலாலும் அரசிளங்குமர னென்ற றிந்தாள்.

(பி - ம்) 1 'விரை செறி தாமரை யிமைக்கும் மெய்ம்மையால்' 2 'குமரனென் றுயிர்க்க' (நுஅ)

626. நலனும் நிறையும் பிணித்த; நலன் - நாணம் முதலிய நான்கு. பிறந்துடை நலன்; 622, குறிப், எந்திரம் - மதிலின்மேலுள்ள பொறிகள்,

627 என்றிவை யினையன [1]விளம்பும் வந்தெதிர்
நின்றன னிவணெனு நீங்கி ஞனெனுங்
கன்றிய மனத்துறு காம வேட்கையால்
ஒன்றல பலநினைந் துணங்கு காலையே.

628 அன்னமென் னடையவ ளமைத்த காமத்தீத்
தன்னையுஞ் [1]சுடுவது தரிக்கி லானென
நன்னெடுங் கரங்களோ யோடிப்போய்
முன்னைவெங் கதிரவன் கடலின் மூழ்கினன்.

அந்தி மாலை வரவும் பிராட்டியாரின் இரங்கலும்

629 விரிமலர்த் தென்றலாம் வீசு பாசமும்
எரிநிறச் செக்கரு மிருளுங் காட்டலால்
அரியவட் கனறரு மந்தி மாலையாம்
கருநிறச் செம்மயிர்க் காலன் றோன்றினன்.

630 [1]மீதறை பறவையாம் பறையுங் கீழ்விளி
ஓதமென் [2]சிலம்பொடு முதிரச் செக்கரும்
பாதக விருள்செய்கஞ் சுகமும் பற்றலாற்
[3]சாதக மென்னலாந் தகைத்தம் மாலையே.

கறங்குபு - சுழன்று. கன்னி மாமதில் - கன்னிப் பருவமாகிய மதில்; 1251, ஆங் குறட்பாவையும், அதன் பொருளையும் நோக்குக. 3-4: ஒப்பு: 710.

(பி - ம்.) [1]'மாகவேண்டுமால்' (ருக)

627 வந்தெதிர் நின்றனனென்றது உருவெளித்தோற்றத்தை எனும் - என்று சொல்லுவாள். கன்றிய - நைந்த. காலையே கடலின் மூழ்கி ஞனெனமுடிக்க. (பி - ம்.) [1]'விளம்பு மேல்வையின்' (சுo)

628 அமைத்த-தன் மனத்தில் அமைத்த. (பி-ம்.) [1]'சுடுமெனத்' (சுக)

629 செக்கர் வானம் செம்மயிருக்கு. அந்தி மாலையாம் எமன்: 631; 'தோற்றஞ்சால் செக்கருட் பிறைநுதி யெயிறுக.....கூற்றுநக் கதுபோலு முட்குவரு கடுமாலை' (கலி. கஉo: 7-9.) (சுஉ)

630 பறவையின் ஒலி பறைக்கு. கீழ்விளி ஓதம்-கீழேயுள்ள ஓசையையுடைய கடல். சிலம்பு - பாதச்சிலம்பு, உதாரமாகிய செவ்வான். இருள் செய் கஞ்சுகம்—இருப்புச் சீரா. சாதகம்-பூதம்; 'நிவந்தவான் குறுதியி னீத்த நீத்திலமெய், சிவந்தசா தகமொடு சிறுகட் கூளியும்' (உ. 12:35;) 'ஒன்றே யெயிற்ற தொடுவெரும் பேயுலகம் விழுங்க வவ்காந்து, நின்றுற் போல நிழலுமிழ்ந்து நெடுவெண்டிங்க ளெயிறிலங்க. இன்றே குருதி வான வாயங்காந் தென்னை விழுங்குவான், என்றே வந்த திமமாலை யளியேனுவி யாதாங்கொல்' (சீவக. 1660); 'சாதகர் - ஆயுத சாதகம் பண்ணி வருகிறவர்கள்' (ஓர்உரை.)

வேறு

631 கயங்க ளென்னுங் கனமுழ்ந்து
கடிநாண் மலரின் விடம்பூசி
இயங்கு தென்றன் மன்மதவே
ளெய்த புண்ணி னிடைதுழைய
உயங்கு முணர்வு நன்னலமு
முருகிச் சோர்வா ளுயிருண்ண
மயங்கு மாலை வரநோக்கி
யிதுவோ கூற்றின் வடிவென்றாள்.

632 கடலோ [1]மழையோ முழுநீலக்
கல்லோ காயா நறும்போதோ
படர்பூங் குவளை [2]நாண்மலரோ
நீலோற் பலமோ பானலமோ
இடர்சேர் மடவா ருயிருண்ப
தேதோ வென்று தளர்வாண்முன்
[3]மடல்சேர் தாரா னிறம்போலு
மந்தி மாலை வந்ததுவே.

633 மைவா னிறத்து [1]மீனெயிற்று
வாடை யுயிர்ப்பின் வளர்செக்கர்ப்
பைவா யந்திப் படவரவே
[2]யின்ன விளித்துப் பகைத்தியால்

(பி - ம்.) [1]மீதெழு பறவையின்' [2]சிலம்பரு' [3]'சாத்த ரென்னவும்'
(சுஉ)

631 மலரின் விடம் - மகரந்தப் பொடியாகிய விடம். தென்றலுக் குரிய குளிர்ச்சியும், மணமும் கூறப்பட்டன: கு: 2:124. நன்னலம்: 626. மாலைக்காலம் எமனுக்கு: 629. அடிக். வேளெய்த புண்ணினிடை தென்றல் தோய்ந்து பூசி நுழைய: கு: 4:14. (சுச)

632 குவளை வேறு நீலோற்பலம் வேறு: 584. குவளை - கருவிளம்பூ (ஓர்உரை.) பானலம் - கருநெய்தல்; அம்: சாரியை. கடலோ.....பானல மோ: இவை ஒவ்வொன்றும் இராமபிரானது திருமேனிக்கு; 657. மடவார் உயிர் உண்ப தேதோ: காமமுற்ற மகளிர் பெண்பிறப்பை இகழ்வர். இராம பிரானது கருமை நிறம் உயிருண்ணுங் கால் அவன் நிறம் போன்ற அந்தி மாலையும் வந்தது.

(பி - ம்.) [1]'மலையோ' [2]நறு மலரோ பசிய நீலோற் பலந்தானே [3]'அடல் சேர் திருதர் நிறம்', 'அடல்சே ரசுரர் நிறம்.....அடைந்ததுவே'
(சுகு)

633 வாடை என்றது காற்று என்னும் மாத்திரையாய் நின்றது. உயிரு மொன்றே யினியில்லை. பழி - பெண் கொலையாகிய பழி.

எய்வா னெருவன் கையோயா
னுயிரு மொன்றே யினியில்லை
[3]உய்வான் வழியிற் பழிபூண
வுன்னை டெனக்குப் பகையுண்டோ.

இருளை நோந்து இரங்கல்

634 ஆல முலகிற் பரந்ததுவோ
[1]வாழி கிளர்ந்த தோவவர்தம்
நீல நிறத்தை யெல்லாரு
நினைக்க வதுவாய் நிரம்பியதோ
கால னிறத்தை யஞ்சனத்திற்
கலந்து குழைத்துக் [2]காயத்தின்
மேலு நிலத்து மெழுதியதோ
விளைக்கு மிருளாய் விளைந்ததுவே.

அன்றிலை நோந்து இரங்கல்

635 வெளிநின் றவரோ போய்மறைந்தார்
விலக்க வொருவர் தமைக்காணேன்
எளியன் பெண்ணென் றிரங்காதே
யெல்லி [1]மாயத் திருளுடே
ஒளியம் பெய்யும் மன்மதனு
[2]ருனக்கு மாற்ற முரைத்தாரோ
அளியன் செய்யுந் [3]தீவினையே
யன்றி லாக வந்தாயோ.

(பி - ம்.) [1]:மின்னெயிற்று' [2]:யெனைநாவளைத்துப் பருக வந்தாய் [3]:உய்யேன் வழியிற் பகைபூண்டா யுனக்கென் னுடன் பழியம்மா', 'உய் வானுறவிப்' (கூசு)

634 காயத்து மேலும் - ஆகாயத்தின் மேலும்; காயம் - ஆகாயம்; முதற் குறை; 'வறிது நிலைஇய காயமும்' (புறநா. உ0:4) விளைக்கும்-காமநோயை உண்டு பண்ணும்.

(பி - ம்.) [1]:வர்ழிப் பெருக்கோ வாங்கவன்றன்' [2]:காசமென்னும்', 'காசத்து மேலு நிலத்து' (கூஎ)

635 வெளி நின்றவர் - உருவெளியாக நின்றவர். அளியன்-எளியேன்

(பி - ம்.) [1]:யாமத்திரு' [2]:ருனக்கு மாய' [3]:தீவினையா லன்றிலாரும் வந்தாரோ' (கூஅ)

தாதியர் செயல்

636 ஆண்டங் கனையா ரினையநினைந்
தழுங்கும் வேலை யகல்வானைத்
தீண்ட நிமிர்ந்த பெருங்கோயிற்
[1]சீத மணியின் வேதிகைவாய்
நீண்ட சோதி நெய்விளக்கம்
வெய்ய வென்றங் கவைநீக்கித்
தூண்டல் செய்யா மணிவிளக்கின்
சுடரா [2]லிரவைப் பகல்செய்தார்.

சந்திரன் தோற்றம்

637 பெருந்தி ணெடுமால் வரைநிறுவிப்
பிணித்த பாம்பின் மணித்தாம்பால்
விரிந்த திவலை பொதிந்தமணி
விசும்பின் மீனின் மேல்விளங்க
அருந்த வமரர் கலக்கியநா
ளமுது நிறைந்த பொற்கலசம்
இருந்த திடைவந் தெழுந்ததென
வெழுந்த தாழி வெண்டிங்கள்.

638 வண்டா யயனுன் மறைபாட
[1]மலர்ந்த செந்தா மரைப்போது
பண்டா லிலையின் மிசைக்கிடந்து
பாரு நீரும் பசித்தவன்போல்

---

636 அங்கனை - பெண்; அங்கா என்பதன் திரிபு; சிறப்பு நோக்கி ஆள் விகுதி சேர்க்கப் பெற்றது. அகல் வானம் - 'தன்னே யொழிந்த நான்கு பூதமும் தன்னிடத்தே அன்று விரிதற்குக் காரணமாகிய பெரிய ஆகாயம்' (பெரும்பாண். 1, ந; மதுரைக். 266-7, ந); 'அனைத்தும் வழிபோம் விண்ணுநீ' (தக்க. 717.) கோயில் - இங்கே கன்னிமாடம். சீதமணியின் வேதிகை - குளிர்ந்த சந்திரகாந்தக் கற்களாலான மேடை. மணிவிளக்கு - மணிகளாகிய தீபங்கள்.

(பி - ம்.) [1] 'நிகழ்ந்த' [2] 'விருளைப்' (கூ)

637 மால்வரை - பெரியமலை; என்றது மந்தரகிரியை. அமுதத் திவலைகளும் பொதிந்த மணிகளும் கலக்குவதனால் சிதறுண்டு விண்மீன்களிலும் மிக்கனவாய் ஒளியுடையனவாய் விளங்க. மதிக்குப் பொற்குடம்: 'திங்கள் விதியின் மாலையாந் துணைவியை வீங்கிருட் டலைவன், வதுவையாற்றுவான் வைத்தபொற் குடமென வயங்கும்' (நைடத. நிலாத்.3.) (எ0)

638 பாட - பாடும்படி. பசித்தவன் போலுண்டவன்: 'உறுபசி யொன்றின்றியே யுலகடையவுண்டனையே' (சிலப். ஆய்ச்சியர் குரவை.) 'உந்திக்

உண்டா னுந்திக் கடல்பூத்த
தோதக் கடலுந் தான்வேறூர்
வெண்டா மரையின் மலர்பூத்த
தொத்த தாழி வெண்டிங்கள்.

639 புள்ளிக் குறியிட் டெனப்பன்மீன்
பூத்த வானம் பொலிகங்குல்
நள்ளிற் சிறந்த விருட்பிழம்பை
நக்கி நிமிர்ந்த நிலாக்கற்றை
கிள்ளைக் கிளவிக் கென்னுங்கொல்
கீழ்பாற் றிசையின் மேல்வைத்த
வெள்ளிக் கும்பத் திளங்கமுகின்
பாளை போன்று விரிந்துள தால்.

640 வண்ண மாலை கைபரப்பி
யுலகை வளைத்த விருளெல்லாம்
உண்ண வெண்ணித் [1]தண்மதியத்
தொளிருங் கிரண வெண்ணிலவு
விண்ணு மண்ணுந் திசையனைத்தும்
விழுங்கிக் கொண்ட விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணெய்ச் சடையன்றன்
புகழ்போ லெங்கும் பரந்துள தால்.

641 நீத்த மதனின் மூளைத்தெழுந்த
நெடுவெண் டிங்க ளெனுந்தச்சன்
மீத்தன் கரங்க ளவைபரப்பி
[1]விரிந்த நிலவின் வெண்சுதையாற்

கடல் அயன் நான்மறை பாட மலர்ந்த செந்தாமரைப் போது பூத்தது' என்று கூட்டுக. தாமரையிலுள்ள வண்டு மதியின் கறைக்கு.

(பி - ம்.) [1]மலர்ந்த தொரு தாமரைப்' (எக)

639 நள்ளில்-நடுப்பொழுதில். குடத்திற் பாளை வைத்தல்: 'தேசொளி விளங்கு பாளை செறிநிறை கரகம் வைத்து' (திருவால. சு:18.) கமுகம் பாளை சந்திர கிரணங்களுக்கு. வெள்ளிக் குடம் மதிக்கு. (எஉ)

640 வண்ணம் - இங்கே செந்நிறம். பண்ணை - வயல்கள். புகழின் நிறம் வெண்மை. நிலாக்கற்றை பரவுதல் புகழ் பரவுதலுக்கு.

(பி - ம்.) [1]'தண்மதிய மதனுள் ளெழுந்த நெடுநிலா' (எஙு)

641 நீத்தம் - கடல். திங்களெனும் தச்சன்; தச்சன் - சுதை தீற்று பவன்; கொத்து வேலை செய்பவனைத் தச்சன் என்றார். கண்ணன் - திருமாலினுடைய. திங்களின் கிரணம் வெண்சுதைக்கு; 133.

காத்த கண்ணன் மணியுந்திக்
கமல நாளத் திடைப்பண்டு
பூத்த வண்டம் பழையதென்று
புதுக்கு வானும் போன்றுளதால்.

642 விரைசெய் கமலப் [1]பெரும்போது
விரும்பிப் புகுந்த திருவிஞ்சை
குரைசெய் வண்டின் குழாமிரியக்
கூம்பிச் சாம்பிக் குவிந்துளதால்
உரைசெய் திகிரி கனையுருட்டி
யொருகோ லோச்சி யுலகாண்ட
அரைசு ஞெதுங்கத் தலையெடுத்த
குறும்பர் போன்ற தரக்காம்பல்.

சந்திரோபாலம்பனம்

643 நீங்கா [1]மயலே யெமக்களித்தே
னிறமே தோற்றுப் புறமேபோய்
ஏங்கா நின்ற வெறிகடற்கு
[2]மெனக்கு மிகலா யெய்தினையோ
ஓங்கா நின்ற விருளாய்வந்
தலகை விழுங்கி மேன்மேலும்
வீங்கா நின்ற கருநெருப்பி
னிடையே யெழுந்த வெண்ணெருப்பே.

(பி - ம்.) [1]மிகு வெண்ணிலவாம்' (எசு)

642 குரை ஒலி. கூம்பல் - ஒடுங்கல். குறும்பர் - சிற்றரசர். 3-4: 'பொருவி லாழி யொன்றுருட்டியெப் புவனமும் விளக்கும், இரவி மன்னவ னிறத்தலு மெதிர்ந்தபுன் மாலை, பரவை மாநில முழுவதும் பரிப்பவ னிறப்ப. விரவு வெஞ்சொழிற் குறுநில வேந்துபோன் றுளதே' (நைடத. மாலை: 5.)

(பி - ம்.) [1]'பெரும் போதின்', 'பெரு மலரின்' (எடு)

643 கடல் புறம் போதலும் எங்குதலும் இராமபிரானின் நிறத்துக்குத் தோற்றதனால். இராமபிரானைக் கண்டு கடல் காமுற்று ஏங்கியதென்று கூறினுமாம்; 1259; 'யாரணங் குற்றனை கடலே' (குறுந். கசுஉ); 'பாய்திரைப் பாடோவாப் பரப்பு நீர்ப் பனிக்கடல்..... எம்போலக், காதல்செய் தகன் ஞாலை யுடையையோ நீ' (கலி. கஉக: 8 - 11); 'மணிநிற நெய்த லிருங்கழிச் சேர்ப்பன், அணிநல முண்டகன்ற னென்றுகொ லெம்போற், றிணிமண லெக்கர்மே லோதம் பெயரத், துணிமுந்நீர் துஞ்சா தது' (ஐந். எழு. 60); 'ஓங்கணை மேவிப் புரண்டு விழுந் தெழுந் தோலமிட்டுத், தீங்கணைத் தோரல் லுந் தேறுய் கலவுகிச் செறிகடலே, ஆங்கணைத் தோர்நின் னேயுமுள

வேறு

644 கொடியை யல்லநீ யாரையுங் கொல்கிலாய்
[1]வடுவி னல்லமு.தத்தொடு வந்தனை
பிடியின் மென்னடைப் பெண்ணெடென் றுலெனைச்
சுடுதி யோகடம் றேன்றிய திங்களீ.

விரகதாபம்

645 மீது மொய்த்தெழு விண்ணில வின்கதிர்
மோது மத்திகை மென்முலை மேற்பட
ஓதி மப்பெடை வெங்கன லுற்றெனப்
போது மொய்த்தம லிப்புரண் டாளரோ.

646 நீக்க மின்றி [1]நிரந்த நிலாக்கதிர்
தாக்க வெந்து [2]தளர்ந்து சரிந்தனள்

ரேரசென் றகன்றவரே' (திருச்சிற். 179); 'காசற்றகையறலோடு' (திவ். 2787.) திங்கள் வெண் நெருப்பு 'நெருப்பு வெண்மை யென்பது நன்னியாயர் நின்னைக் குறித்தன்றே' (பிரபு. பிரபுதேவர்வந்த. 60.) கடலுக்கு மதி கொடியது என்றது: சந்திரனைக் கண்டதும் கடல் கொந்தளிப்பதனால்: மதுரைக் கலம். 502.

(பி - ம்.) [1]'மாமை பவர்தமக்கு' [2]'மெனக்குங் கொடியை யாலுயே' சில பிரதிகளில் இதனையடுத்துப் பின்வரும் பாடல் காணப்படுகிறது:

'அப்புறத் தலைகட லயர்ந்த தாமரை
ஒப்புற விந்துவென் றுதித்த வொள்ளழல்
வெப்புறு வெங்கதிர் பரப்ப விண்ணெலாம்
கொப்புளங் கொண்டென வுடுக்கள் கூர்ந்தவே'.

(எசு)

644 வடு; - குற்றம் மடிவில் என்ற பாடத்துக்குப் பாற்கடலில் என்பது பொருள்

(பி - ம்.) [1]'மடிவிலின்னமு', 'மடிவினல்லமு', 'வடிவிலின்னமு', 'மடிவினல்லமு'

சில பிரதிகளில் இந்தக் கவியையடுத்து 648ஆம் பாட்டு காணப்படுகிறது. (எஎ)

645 மத்திகை - சம்மட்டி; கதிராகிய மத்திகை. போது - தாமரை மலர்கள் மொய்த்த அமளி. சீதையின் படுக்கையில் விரிக்கப் பெற்றவை தாமரை மலர்கள்; தாமரை பரப்பிலுள்ள அமளிக்கு வெங்கனலும் சீதைக்கு அன்னமும் உவமை. அன்னம் கனலுற்றென: 'அரிமலர்ப் பங்கயத் தன்ன மெங்கணும், புரிகுழல் புக்கிடம் புகல்கி லாமையால், திருமுக நோக்கல மிறந்து தீர்துமென், றெரிபுகு வனவெனத் தோன்று மீட்டது' (சு. 1:8.) (எஅ)

646 சரிந்து - சாய்ந்து. சேக்கை - படுக்கை. பூக்கள் பட்டமைக்குக் காரணம் நிலாத்தோற்றியதும், பிராட்டியாரின் காமத்தீச் சுடுவதும். பூக்கள் பட்டது (பி - ம்)-மலர்கள்பட்ட அவத்தையை.

சேக்கை யாகி மலர்ந்தசெந் தாமரைப்
பூக்கள் [3]பட்டவப் பூவையும் பட்டனள்.

647 வாச மென்கல வைக்களி வாரிமேற்
பூசப் பூசப் புலர்ந்து புழுங்கினள்
வீச வீச வெதும்பினள் [1]மேலுமேல்
ஆசை நோய்க்கு மருந்துமுண் டாங்கொலோ.

சேடியர் செயல்

648 தாய ரிற்பரி சேடியர் தாதுகும்
வீய ரித்தளிர் மெல்லணை மேனியிற்
காயெ ரிக்[1]கரி யக்கரி யக்கொணர்ந்
தாயி ரத்தி னிரட்டி யடுக்கினர்.

கவிக்கூற்று

649 கன்னி [1]நன்மனை யிற்கமழ் சேக்கையுள்
அன்ன மின்னண மாயின [2]ளன்னவள்
மின்னின் மின்னிய மேனிகண் [3]டானெனைச்
[4]சொன்ன வண்ணலுக் குற்றது சொல்லுவாம்.

(பி - ம்:) [1]'நிமிர்ந்த' [2] சரிந்து தளர்ந்தனள்' [3]'பட்டதப்' (எக)

647 களி - குழம்பு. வீச - ஆலவட்டத்தால் வீச. பூவையும் வெதும்பின ளென்க. ஆசை நோய்க்கு மருந்து முண்டாங்கொல்: 'மோகத்துக் கோர் முடிவுமுண்டாங்கொலோ' (கூ 5:84); 'மருந்து மூண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்று மயங்கும்' (குறி. 3:15); 'மருந்து பிறி தில்லையா னுற்ற நோய்க்கே' (நற். அ0:9.)

(பி - ம்.) [1]'மென்முலை' (அ0)

648 தாயரின் - தாய்மாரைப்போல: பரிசேடியர் - அன்புகாட்டும் பாங்கிகள். தாது - பூந்தாது. வீ - மலர். அரித்தளிர்; அரி - மெண்மை; 'அரிமலர்': சீ 1:8. அணை - அணையில். 'மேனியில் காய் எரி' என்றது காமத்தழலே. எரியால் கரியக் கரிய.

(பி - ம்) [1]'கதுவிக் கரியக் கொணர்ந்தாயிரத்', 'கரியக் கொணர்ந் தாரவர்' (அ)

649 கன்னி நன் மனை - கன்னிமாடம். 'நகர்' என்ற பாடத்துக்கு வீடு என்பது பொருள்.

(பி - ம்.) [1]நன்னகர்' [2]'ளன்றவள்' [3]'டாசையால்' [4],,உன்னு மண்ணலுக் குற்றதைப்பின் சொல்வாம்' (அ2)

கோசிகர் முதலிய மூவரும் ஒரு விடுதியில் தங்குதல்

650 ஏகி மன்னனைக் கண்டெதிர் கொண்டபின்
ஓகை யோடு மினிதுகொண் டுய்த்திடப்
போக பூமியிற் பொன்னக ரன்னதோர்
மாக மாடத் தனைவரும் வைகினர்.

சதானந்தர் வருகை

651 வைகு மவ்வழி மாதவம் யாவுமோர்
செய்கை கொண்டு நடந்தெனத் தீதறு
மொய்கொள் வீரன் முளரியந் தாளிணை
மெய்கொ ணங்கை யருண்முனி மேவினன்.

இராமலக்குமணர் அவரை வணங்கி ஆசிபெறுதல்

652 வந்தெ திர்ந்த முனிவனை [1]மைந்தரும்
சிந்தை யார வணங்கலுஞ் சென்றெதிர்
அந்த மில்குணத் தானெடுத் [2]தாசிகள்
தந்து [3]கோசிகன் றன்னொடுஞ் சார்ந்தனன்.

சதானந்தர் கோசிகருக்கு முகமன் கூறுதல்

653 கோத மன்றரு கோமுனி கோசிக
மாத வன்றனை மாமுக நோக்கியிப்
போது நீயிவண் போதவிப் பூதலம்
ஏது செய்த தவமென் றியம்பினன்.

---

650 போக பூமி - சுவர்க்க லோகம். பொன்னகர் - அமராவதி; 'பொன்னகர் தழீஇய புதுக்கோப்போல' (பெருங். உ. 9:197.) மாக மாடம் - விண்ணை அளாவிய மாடம். சனகன் மூவரையும் எதிர்கொண்டு உபசரித்து, இராம லட்சுமணர்களைப் பற்றிக் கோசிக முனிவரை வினவ, அவர், 'இவர்கள் தசரதர் புதல்வர்; நின்வேள்வி காண வந்தவர்; வில்லையும் வளைத்தல் கூடும்' என்று கூறியதாக முதனூல் கூறும். (அநு)

651 தாளிணை மெய்கொள் - திருவடி படுதலால் பழைய வடிவத்தைக் கொண்ட; மொய் கொள் வீரன் - இராமன். முனி - சதானந்தர். மாதவம் கொண்டு நடந்தென மேவினன், 264: 1-2. (அசை)

652 அந்தமில் - முடிவற்ற. குணத்தான் - சதானந்தர்.

(பி - ம்) [1]'வள்ளலும்' [2]'தாசி சொற்றந்து' [3]'கோசிகற் சார்வுறச் சாற்று வான்' (அநு)

653 இப்பூதலம் - இந்த விதேக நாடு. பூதலம் ஏது தவம் செய்தது: 253; 'பாத தூளி படுதலாலிவ் வுலகம் பாக்கியஞ் செய்ததே' (திவ்.); 'நீ யெய்துதற் கென்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடி லென்றான்' (வி: பா. கிருட்டினன். 80.) (அசை)

கோசிகர் கூற்று

654 பூந்தண் சேக்கைப் [1]புனிதனே யெபொரு
ஏய்ந்த கேண்மைச் சதானந்த னென்றெனும்
வாய்ந்த மாதவன் மாமுக நோக்கி நூல்
தோய்ந்த சிந்தைக் கவுசிகன் சொல்லுவான்.

655 வடித்த மாதவ கேட்டியிவ் வள்ளுரன்
இடித்த வெங்குரற் றூடகை [1]யாக்கையும்
அடுத்த வேள்வியு நின்னணை சாபமும்
முடித்தெ னெஞ்சத் திடர்முடித் தானென்றான்.

சதானந்தர் விசுவாமித்திரரைப் பாராட்டல்

656 என்று கோசிகன் கூறிட வீறிலா
வன்ற போதனன் மாதவ நின்னருள்
[1]என்ற நன்குள தேலரி தேதிந்த
வென்றி வீரற் கெனவும் விளம்பிமேல்.

அவர் கௌசிகர் வரலாற்றை இராமபிரானுக்குக்
கூறத் தொடங்கல்

657 எள்ளில் பூவையு மிந்திர நீலமும்
அள்ளல் வேலையு மம்புத சாலமும்
விள்ளும் வீயுடைப் பானலும் [1]போன்றமை
வள்ள றன்னை மதிமுக நோக்கியே.

---

654 சேக்கை - ஆசனம். சதானந்தமுனிவருக்கு அயன் உவமை. கேண்மை - கேள்வித்தன்மை. தோய்ந்த என்பதனால் நூலைக் கடலெனக் கொள்க.

(பி - ம்.) [1] புனிதனைப் போலநூல், ஆய்ந்த கேள்விச் சதானந்த னென்றபோர்' (அ)

655 வடித்த - திருந்திய, தீங்கினீங்கிய; முடித்து - அழித்து; மூற்று வித்து நீங்கி; சிலேடை.

(பி - ம்.) 'யாக்கையை மடித்தென் வேள்விமற்றுன் னன்னை' (அ)

656 மாதவ - என்றது விசுவாமித்திரரை. நன்கு - நன்மை. குறள், 719.

(பி - ம்.) [1] 'இன்று தானுள தேவரி தேதிந்த' (அ)

657 எள் இல் - பழுதுதலில்லாத. பூவை - காயாமலர். அள்ளல் வேலை - சேற்றையுடைய கடல். அம்புத சாலம் - மேகக் கூட்டம். விள்ளும் வீ - மலர் இன்ற பூ. இவை இராமபிரான் தேனிக்கு உவமைப் பொருள்கள், 682.

(பி - ம்.) [1] ஏயு மெய்' (அ)

658 நறுமல ரத்தொடை நாதனை நோக்கியொன்
றறிவு றுத்துவெ னிற்கிவ் வருந்தவன்
இறையெ னப்புவிக் கீறில்பல் லாண்டெலாம்
முறையி னிற்புரிந் தேயருண் முற்றினன்.

வேட்டைமேற் சென்ற கோசிக மன்னன்
வசிஷ்டாச்சிரமம் அடைதல்

659 அரசின் வைகி யறனி னமர்ந்துழி
[1]விரைசெய் கானிடைச் சென்றனன் வேட்டைமேல்
உரைசெய் மாதவத் தோங்கு [2]வசிட்டனைப்
பரசு வானவன் [3]பாலனைந் தானரோ.

வேறு

வசிஷ்டர் கோசிக மன்னருக்கு விருந்திடல்

660 அருந்ததி கணவன் வேந்தற்
கருங்கடன் முறையி னாற்றி
[1]இருந்திடிங் கிவணீ யென்ன
விருந்திமற் றிறைவ னிற்கே

---

658 அருள் முற்றினன். அரசர்க்கு அருள் இன்றியமையாமை: 'அருளுமன்பு நீக்கி நீக்கா, நிரயங் கொள்பவரோ டொன்றுது காவல், குழவி கொள்பவரி னேம்புமதி' (புறநா. கு: 5-7.) முற்றுதல் - முதிர்தல். இக் கவிக்கு முடிபு 704 இல் உள்ளது.

கோசிகர் கூறி முடித்ததும் சதானந்தர் இராமரைப் பார்த்து, 'உமது வருகை நல்வரவாகுக. இந்த விசுவாமித்திரரை முன்னிட்டு வந்த உமக்குப் பெருமை குறையாது' என்று கூறி அம்முனிவரது வரலாற்றைத் தொடங்குவதாக முதனூல் கூறும். (கூ)

659 விரைசெய் - நல்ல வாசனையைச் செய்கின்ற. 'விரசுகான்' என்ற பாடத்துக்கு மரம் நெருங்கிய காடு என்பது பொருள். பரசுவான் - வணங்க வேண்டி. அவன் பால் - வசிட்டன் பால். 'வசிட்டனைப் பரசு வானவன்' என்ற பாடத்துக்கு. பரசு-யாவாலுட 'வணங்கத்தக்க, வானவன்-மேலோன்; கடவுள் போன்றவன் என்பது பொருள்

சதானந்தர் விசுவாமித்திரரின் குலப் பெருமையை முறைப்படக் கூறி அவர் வரலாற்றைத் தொடங்குவதாக முதனூல் கூறும். கோசிகர் பூமியை வலம் செய்யப் புறப்பட்ட போது வசிட்டரது ஆசிரமம் அடைந்தார் என்பர் வான்மீகி

(பி - ம்.) [1] 'விரசு' [2] 'வசிட்டனை' [3] 'பாடனைந்தானரோ' (கூ)

660 அருந்ததி கணவன் - வசிட்டமுனிவர். சுரபி - காமதேனு. அமிர்தம் - உணவு. 662.

(பி - ம்.) [1] 'இருந்தரு டருதி யென்ன விருந்துழி யினிது' (கூ)

விருந்தினி தமைப்ப னென்னுச்
சுரபியை விளித்து நீயே
சுரந்தரு ளமிர்த மென்ன
வருண்முறை சுரந்த தன்றே.

661 அறுசுவைத் தாய வுண்டி
யரசனின் னனிகத் தோடும்
பெறுகென [1]வளிப்ப வேந்தோ
டியாவரும் துய்த்த பின்றை
நறுமலர்த் தாரும் வாசக்
கலவையு நல்க லோடும்
உறுதுயர் தணிந்து மன்ன
னுய்த்துணர்ந் துரைக்க லுற்றான்.

காமதேனுவைத் தரும்படி கோசிகர் வசிஷ்டரை வேண்டலும் அவர் அது தம்மால் ஆவதன்று என்றலும்

662 மாதவ வெழுந்தி லாய்நீ
வந்தவெம் படைகட் கெல்லாங்
கோதறு வமுத [1]மிக்கோ
வுதவிய கொள்கை தன்னுல்
தீதறு குணத்தான் மிக்க
செழுமறை தெரிந்த நூலோர்
மேதகு பொருள்கள் யாவும்
வேந்தருக் கென்கை தன்னுல்.

663 நிற்கிது தகுவ தன்று
னீடருஞ் சுரபி தன்னை
எற்கரு ளென்ற லோடு
மியம்பலன் யாதும் பின்னர்
வற்கலை யுடையோன் யானை
வழங்கலன் வருவ தாகிற்
கொற்கொள்வே லுழவ நீயே
கொண்டக லென்று கூற.

---

661 அனிகம் - சேனை; அநீகம் என்ற வடமொழிச் சிதைவு. உறுதுயர் - அலைந்து வந்ததனுல் உற்ற துன்பம்; மிக்க துயருமாம். உணவின் பின்பு கலவை அளித்தல் மரபு. (பி - ம்.) [1] 'வளித்து' (கூசு)

662 எழுந்திலாய் - இடம்விட்டுப் பெயர்ந்திலாய். கோ - பசு. குணத்தான் மிக்க நூலோர் என்றும் கூட்டலாம். என்கை - என்று சொல்லுதல் (பி - ம்.) [1] 'வுண்டி கோவருள்' (கூடு)

663 நிற்கு - முனிவனாகிய உமக்கு. இது - இப்பசு. வற்கலை - மரவுரி. கொல் கொள் வேல்; கொல்-கொலைத் தொழில்; கொல்லனது தொழிலுமாம்.

தேனுவை அரசன் பிணிக்கச் சொல்லலும்
தேனுவின் செயலும்

664 பணித்தது புரிவ னென்னப்
பார்த்திப னெழுந்து பொங்கிப்
பிணித்தனன் சுரபி தன்னைப்
பெயர்வுழிப் பிணையை வீட்டி
மணித்தடந் தோளி னுற்குக்
கொடுத்தியா மறைகள் யாவுங்
கணித்தவெம் பெருமை வென்னக்
கலைமறை முனிவன் சொல்வான்.

665 கொடுத்திலன் [1]நின்னை யானிக்
குரைகழல் வேந்தன் றானை
[2]பிடித்தன னென்னைக் கோவும்
பெருஞ்சினங் கதுவ நெஞ்சோ
டிடித்தெழு முரச வேந்தன்
[3]சேனையை யானே யின்று
முடிக்குவன் காண்டி யென்ன
மொய்ம்மயிர் சிலிர்த்த தன்றே.

அரசனுடைய சேனையின் அழிவும்
அவன் மைந்தரின் மாய்வும்

666 [1]பப்பரர் யவனர் சீனர்
சோனகர் [2]முதல பல்லோர்
கைப்படை [3]யதனி னேடுங்
கபிலைமாட் டுதித்து வேந்தன்

'நீயே கொண்டகல்' என்று முனிவர் கூறினதாக முதனூலில் இல்லை. கோசிக மன்னன் தான் மதிப்புள்ள பல பொருள்களை அளிப்பதாகவும், அதற்குப் பிரதியாகத் தேனுவை வழங்கும்படியும் வசிட்டரைக் கேட்க அவர் 'யாமோ எவருக்கும் கொடுப்பதில்லை' என்று மறுத்து விட்டதாக அதிற் காணப்படுகிறது. (கசு)

664 பணித்தது – 'நீயே கொண்டகல்' என்று முனிவர் கட்டளை யிட்டதை. கலைமறை – கலைகளுக்கு ஆதாரமான மறை; 671. (கஎ)

665 நெஞ்சோடு – நெஞ்சில்; நெஞ்சிற் சினங்கதுவ. 'கோசிகன் சேனையை நான் அழித்து வருகிறேன்' என்று காமதேனு வசிட்டரிடம் விண்ணப்பஞ் செய்ய அவர், 'நீ பல படைகளைப் படைத்து அப்படியே செய்' என்று கட்டளை யிட்டதாக முதனூல் கூறும்.

(பி – ம்.) [1]'யாளை மற்றக் குடைகெழு' [2]'பிடித்தக லுற்ற னென்னப்' [3]'சேனைமற் றடங்க வின்றே' (கஅ)

666 பப்பரர்: அரிச்சந்திர. சூழ்வினை 39. கபிலை-பசு. தப்பு-வலிமை. (பி – ம்.) [1]'பப்பர ரெயினர்' [2]'பற்பல்லோர்கள்' [3]'கொண்டேயந்தச்' (கக)

துப்புடைச் சேனை யாவுந்
துணித்தனர் துணித்த லோடும்
வெப்புடைக் கொடிய மன்னன்
றனையர்கள் வெகுண்டு மிக்கார்.

667 சுரபியின் வலிய தன்றாற்
சுருதிநூ லுணர வல்ல
வரமுனி வஞ்ச மென்னா
மற்றிவன் சிரத்தை யின்னே
அரிகுது மென்னப் பொங்கி
யடர்ந்தன [1]ரடர வன்னான்
எரியெழ விழித்த லோடு
மிறந்தனர் குமர ரெல்லாம்.

கோசிகர் வசிஷ்டரை எதிர்த்துப்பின் க்ஷத்திரியபலம் ஒருபலமன்று என்ற தீர்மானத்துடன் தவமேற் செல்லல்

668 ஐயிரு பதின்மர் மைந்த
ரவிந்தமை யரசன் காணா
[1]நெய்சொரி கனலிற் காந்தி
நெடுங்கொடித் தேர்க டாவிக்
கைதொடர் கணையி னோடுங்
கார்முகம் வளைய வாங்கி
எய்தனன் முனியுந் தன்கைத்
தண்டினை யெதிர்க வென்றான்.

669 கடவுளர் படைக ளீறாக்
கற்றன படைகள் யாவும்
விடவிட [1]முனிவன் றண்டம்
விழுங்கிமேல் விளங்கல் காணா
வடவரை வில்லி தன்னை
வணங்கியே [2]வழுத்த வீசன்
அடலுறு படையொன் றீயா
வன்னவ [3]னாற்ற லோடும்.

---

667 வரம் - மேன்மை. அடர - பொர. பி-ம். [1]'ரடர்ப்ப' (க௦௦)

668 நெய் சொரி கனல்: க. 19:27; 'நெய் பெய்தீயி னெதிர்கொண்டு' (குறுந். க௦௬); 'நெருப்பழற் சேர்ந்தக்கா னெய் போல்வதூஉம்' (நாலடி. 124 ௬) காந்தி - சினந்து. கடாவி - செலுத்தி. கார்முகம் - வில். கைத்தண்டு - பிரமதண்டம். (பி - ம்) [1]'நெய்பொழி கனலிற் பொங்கி' (க௦௫)

669 வடவரை வில்லி - மேருமலையை வில்லாகக் கொண்ட சிவபெருமான். படை ஒன்றீயா - அஸ்திரமொன்றை ஈந்து; தேவாசுரர்கள் வைத்

670 விட்டனன் படையை வேந்தன்
விண்ணுளோ ருலகை யெல்லாம்
சுட்டனை னென்ன வஞ்சித்
துளங்கினார் முனியுந் தோன்றிக்
கிட்டிய படையை யுண்டு
[1]விளங்கினன் கிளரு மேனி
முட்டிவெம் பொறிகள் சிந்தப்
பொருபடை [2]மூணுந் தீர.

671 கண்டன னரசன் [1]கண்ணுற்
கலிமறை [2]யவர்கட் கல்லால்
திண்டிறல் வலியுந் தேசு
[3]முளவெனல் சீரி தன்றால்
மண்டல முழுதுங் காக்கும்
[4]மொய்ம்பொரு வலனன் றென்னு
ஞண்டவம் புரிய வுன்னி
யும்பர்கோன் றிசையை யுற்றான்.

இந்திரன் திலோத்தமையை ஏவல்

672 [1]மாண்டமா தவத்தோன் செய்த
வலனையே மனத்தி னுன்னிப்
பூண்டமா தவத்த னுகி
யரசர்கோன் பொலியு நீர்மை

திருக்கும் அத்திரங்களையும், தனுர் வேதத்தின் முழு அறிவையும் சிவபெருமானிடம் கோசிகர் கேட்டுக் கற்றார் என்று முதனூல் கூறும்.

(பி - ம்.) [1]வேந்தன் றண்டம்' [2]வழுத்தலோடு' [3]'னகன்றனன்றே' (கஉ)

670 முரண் - வலிமை. வசிட்டர் கோசிகன் விட்ட படையை உண்டார் என்ற செய்தி வான்மீகத்திலில்லை. கோசிகனது செயலைக் கண்டு அஞ்சிய முனிவர்களே 'அஞ்சன்மின்' என்று கூறி வசிட்டர் வெளிப்போந்து கோசிகனை நோக்கி, 'கூத்திரிய பலம் பிரமபலத்தின்முன் நிற்க முடியாது' என்று கூறித் தம் பிரம தண்டத்தினாற் கோசிகன் விட்ட அத்திரங்களைக் கவர்ந்து கொண்டதாக வான்மீகம் கூறும்.

(பி - ம்.) [1]'கிளர்ந்தன' [2]முரணகற்ற' (கஉ)

671 கண்டன னரசன் கண்ணால்: 'காண்டி யையநின் மெய்யுணர் கண்களால்', 'கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்' (கு. 6: 24, 15: 58); 'ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து, வேந்தனும் வேந்து கெடும்' (குறள், 899.) உளவெனல் - பிறர்க்கு உள்ளன வென்றல். உம்பர் கோன் றிசை - இழக்கு. கோசிகர் சென்றது தென்றிசை என்று வான்மீகம் கூறும்.

(பி - ம்.) [1]'ணாணு' [2]'முனிவர்' [3]'முளவெனிற் சீரிதல்ல' [4]'வலிமை யென்ன' (கஉ)

காண்டலு மமரர் வேந்தன்
[2]றுணுக்குறு கருத்தி னோடும்
தூண்டின னரம்பை மாரிற்
றிலோத்தமை யெனுஞ்சொன் மானை.

கோசிகர் திலோத்தமையால் தவம் அழியப்பெற்று அவளுக்குச் சாபம் கொடுத்துவிட்டுத் தென்றிசை ஏகுதல்

673 அண்ணவண் மேனி காணு
வனங்கவேள் சரங்கள் பாயத்
தன்னுணர் வழிந்து காதற்
சலதியி னழுந்தி வேந்தன்
பன்னரும் பகறீர் வுற்றுப்
பருணிதர் தெரிந்த நூலின்
நன்னய முணர்ந்தோ னுகி
நஞ்செனக் கனன்று நக்கான்.

674 விண்முழு தாளி செய்த
வினையென வெகுண்டு நீபோய்
மண்மக ளாதி யென்று
மடவர [1]றன்னைச் சீறிக்
கண்மலர் சேப்ப வுள்ளங்
கறுப்புறக் கடிதி னேகி
எண்மரின் வலிய னுய
யமன்றிசை யதனை யுற்றான்.

குருமொழி கொள்ளாமையால் திரிசங்கு நீசனுதல்

675 தென்றிசை [1]யிருந்து மன்னன்
செய்தவஞ் [2]செய்யு நாளில்
வன்றிற லயோத்தி வாழு
மன்றிரி சங்கு வென்பான்

---

672 மாண்ட - மாட்சிமை தங்கிய. சொல்மான்; சொல்-புகழ்; சீவக. 3. (பி - ம்.) [1]'மாண்டரு வசிட்டன் மாமுவலிதனை' [2]'வணக்குறு', 'ஐயுறுங் கருத்தனுகித்' (கஅடு)

673 சலதி - கடல். வேந்தன் காணு அழிந்து அழுந்தி. பருணிதர் - பக்குவ முற்ற அறிவினர்; 1186, கு. 2:198. (கஅசு)

674 யமன்றிசை - தென்திசை. யமன் வலியன்: 'மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி' (பொரு ந. 140); 'காலமுன்ப' (புறநா. உங:17); 'ஆற்றல், காலனே டொக்கும்' (பெருங். க. 36:100-101.)
(பி - ம்.) [1]'றன்னை யேவிக்' (கஅஎ)

675 செய்தவம் - செய்யத்தக்க தவம். குரு - வசிட்டர். தனு - உடல்.

தன்றனைக் குருவை நண்ணித்
தனுவொடு துறக்க மெய்த
இன்றெனக் கருளு கென்ன
[3]பானறிந் திலன தென்றான்.

676 நினக்கொலா தாகி னேய
நீணிலத் தியாவ ரேனு
மனக்கினி யாரை நாடி
வகுப்பன்யான் வேள்வி யென்னச்
சினக்கொடுந் திறலோய் முன்னர்த்
தேசிகற் றப்பி வேறோர்
நினக்கித ஞடி நின்றாய்
நீசனாய் விடுதி யென்றான்.

677 [1]மலரிலோன் மைந்தன் [2]சீறி
வழங்கிய சாபந் தன்னால்
அலரியோன் றானு நாணு
மொளியிழந் தரசர் கோமான்
புலரியங் கமலம் போலும்
முகத்தினிற் பொலிவு நீங்கிப்
பலருமாங் கிகழ்தற் கொத்த
படிவம்வந் தற்ற தன்றே.

ஈண்டு இறந்து எதுக (பி-ம்.) - இவ்விடம் விடடு நீங்கு உடலோடு துறக்கம் புகும தகுதியின்மை நோக்கி வெளுளியால் இங்ஙனம் கூறினர்.

(பி-ம்) [1]'யதனை நண்ணிச் செய்தவஞ்செலுத்தும்வைகல்'' [2]செய்யுஞ் செவ்வி' [3]யாண்டிறந் தெய்துகெ', 'வீண்டிறந் தேகு கென்றான்' (கo அ)

676 தேசிகன் - குரு. இதன் - இஷ்டன். வசிட்ட முனிவர் மறுக்கவே, திரிசங்கு அவருடைய புத்திரரை நாடி யடைந்து, தன்னை உடலோடு சுவர்க்க மேற்ற வசிட்டர் மறுத்தமையை அவர்களிடப் கூறித் தன் கருத்தை நிறைவேற்றுமாறு விண்ணப்பிக்க அவர்களும மறுக்கவே, மன்னன் தான் வேறொரு குருவை நாடித் தன் எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்வ தாகச் சாற்றவே, 'குருவை அவமதித்ததால் நீ நீசனாக' என்று அவர்கள் சபித்ததாக முதனூல் கூறும். (கoக)

677 மலர் இலோன் - தாமரை மலரை இடமாக வுடைய பிரமன். அவன் மைந்தன் - வசிட்ட முனிவன். அலரியோன் - சூரியன்; சூரிய வமி சத் திரிசங்கு. "செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ (புறநா. சு:16) புலரியங் கமலம்-சூரிய உதயத்தில் அலரும் கமலம். படிவம் - வடிவம்.

(பி - ம்.) [1]'மலருளோன்' [2]'மைந்தின்' (கo0)

678 காசொடு முடியும் பூணுங்
கரியதாங் கனகம் போன்றுந்
தூசொடு முந்நூல் மாலை
[1]தாமுமத் தோற்ற மாக
மாசொடு கருகி மேனி
வனப்பழிந் திடவூர் வந்தான்
சிசியென் ரூரு மெள்ளத்
திகைப்பொடு பழுவஞ் சேர்ந்தான்.

திரிசங்கு கோசிகரிடம் நிகழ்ந்தவற்றைக் கூறல்

679 கானிடைச் சிறிது வைகல்
கழித்தொர்நாட் கவுசிகப்பேர்க்
கோனிருந் [1]தவஞ்செய் கானிற்
குறுகினன் குறுக [2]வன்ஞன்
ஈனநீ யாவ [3]னென்னை
நேர்ந்ததிவ் விடையி னென்ன
மேனிகழ் பொருள்கள் யாவும்
விளம்பினன் வணங்கி வேந்தன்.

கோசிகன் திரிசங்குவை விண்ணுலகேற்ற மேற்கொண்ட செயல்களும், அவற்றின் விளைவும்

680 இற்றதோ வென்ன நக்கிங்
கியானிரு வேள்வி [1]முற்றித்
தற்றிய தனுவி னோடு
மேற்றுவன் சுவர்க்க மென்ஞ
மற்றுமா தவரைக் கூவ
வந்தனர் வசிட்டன் மைந்தர்
கற்றில மரசன் வேள்வி
கனற்றுறை புலையற் கீவான்.

---

678 காரிதாம கனகம் – இரும்பு; இது கரும்பொன் என்று வழங்கும். பழுவம் – காடு.

(பி – ம்.) [1] விளங்கில தோல்கள் போல', 'தோற்றம் போன்று' (கக்க)

679 அன்ஞன் – கோசிகர். இடை – இடம். பொருள்கள் – செய்திகள்

(பி – ம்.) [1] தறையுஞ் சோலை' [2] லோடும்' [3] 'யாவன் போந்ததிவ் விடை யென்மு னென்ன' (கக்உ)

680 இற்றதோ – இவ்வளவுதானோ. தனு – உடல். ஈவான் – ஈதலை;

681 என்றுனக் கியாங்க ளொல்லோ
[1]மென்றன சென்னப் பொங்கிப்
புன்றொழிற் கிராத ராகிப்
போகெனப் புகற லோடும்
அன்றவ ரெயின ராகி
யடவிக டோறுஞ் சென்றூர்
நின்றுவேள் வியையு முற்றி
[2]நித்தரை வருக வென்றான்.

682 அரைசனிப் புலியற் கின்னே
யனற்றுறை [1]வேள்வி முற்ற
விரைசுக வல்லை யென்றல்
[2]விழுமிதென் றிகழ்ந்து நக்கார்
புரைசைமா களிற்றின் வேந்தைப்
போகநீ துறக்கம் யானே
உரைசெய்தேன் றவத்தி னென்ன
வோங்கினன் விமான நும்பர்.

683 ஆங்கவன் றுறக்க மெய்த
வமரர்கள் வெகுண்டு நீச
ஈங்குவந் தடைவ தென்னே
யிருநிலத் திழிக வென்னத்

ஈவான் என்பதைக் கற்றிலம் என்று ஒருசொல் தந்து முடிக்க. கனற்றுறை வேள்வியீவான் என்று மாற்றுக.

(பி - ம்.) [1]'தன்னுல் மற்றுல களிப்ப னென்னு மாதவர் தம்மைக் கூவச், சுற்றுற முனிவர் யாரும் தொக்கனர்' (ககஙு)

681 கிராதர் - வேடர். நித்தர் - அழிவில்லாதவர்; என்றது அவிர்ப் பாகத்தைப் பெறும் தேவர்களை. வசிட்டரின் மக்கள் நூற்றுவருடன் மகோ தயர்என்றமுனிவர் ஒருவரும் கோசிகரின்செயலை இகழ்ந்த தாகவும் கோசிகர் வசிட்ட புத்திரர்கள் நீசராகிப் பல சென்மங்கள் உழலும்படியும் மகோதயர் வேடராகிஇறுதியில் நரகவேதனையுற்றுழல்க வென்றும் சபித்ததாக முதனூல் கூறும்.

(பி - ம்.) [1]'மென்றவ ரிகழப்' [2]'நிராசனர்' (ககச)

682 வல்லை விரைசுக - விரைந்து கலக்க. நக்கார் - சிரித்தனர்; எள்ளல் நகை; நகைத்தவர் நித்தர் என்க. புரைசை - யானைக் கழுத்திடு கயிறு.

(பி - ம்.) [1]'முற்றி யெம்மை' [2]'விழுமிய தாமோ வென்ன' (ககடு)

683 உரும் ஒக்க - இடியை நிகர்ப்ப. நகை என்னல் பற்றியது.

(பி - ம்.) [1]'தாங்கலில் கவிழ்வான் மற்றுத்' [2]'ஓங்கின னின்னி லென்ன வுரைத்த' (ககஎ

[1]தாங்குத லின்றி வீழ்வான்
ரூபத சரண மென்ன
[2]ஓங்கிநீ நில்லு நில்லென்
றுரைத்துரு மொக்க நக்கான்.

684 [1]பேணல ரிகழ்ந்த விண்ணோர்
பெரும்பத முதல மற்றைச்
சேண்முழு தமைப்ப னென்னச்
செழுங்கதிர் கோண் டிங்கள்
மாணெளி கெடாது தெற்கு
வடக்கதாய் வருக மற்றைத்
தாணுவோ டுவ [2]யாவுஞ்
சமைக்குவ னென்னும் வேலை.

685 நறைத்தரு வுடைய கோனும்
நான்முகக் கடவு டானும்
கறைத்தரு [1]களனு மற்றைக்
கடவுளர் பிறருந் தொக்குப்
பொறுத்தருண் முனிவ நின்னைப்
புகல்புகுந் தவனைக் காத்தல்
அறத்திற னென்று தாரா
[2]கணத்தவ னமர வென்றூர்.

தவம் புரிந்த கோசிகர் மேல்பால் அடைந்தமை

686 அரசமா தவனீ யாதி
யைந்துநா டென்பால் வந்துன்
புரைவிளக் கிடுக வென்னுக்
கடவுளர் போய பின்றை

---

684 பேணலர் இழ்ந்த - ராசிகரின் சொல்லை மதியாதவராக இகழ்ந்த. பெரும் பதம் - பெரிய பதவிகள். சேண் - விண்ணுலகம். கோள் - நவக்கிரகங்கள். நாள் - அச்சுவினி முதலிய இருபத்தேழு நட்சத்திரங்கள். தாணு - அசையாப் பொருள்கள் ஊர்வ - அசையும் பொருள்கள். வேலை - சமயம். விசுவாமித்திரர் படைப்பு: 330, அடிக்.

(பி - ம்.) [1]பேணலா திழ்ந்த' [2]செல்வ' (கக எ)

685 நறைத்தரு - தேனெடு கூடிய கற்பகமரம். கறை - விடம். களன் - கழுத்தையுடையவன். தாராகணம - விண்மீன்களின் கூட்டம்.

(பி - ம்.) [1]களன்மால் மற்றைக் கடவுளர் யாருந்' [2]'கணத்தொடு மமைய வன்ஞன்' 'கணத்தொடு மமைக வென்றூர்' (க அ)

686 அரசமாதவன் - ராஜரிஷி. ஐந்து நாள் - அனுஷம் முதலிய ஐந்து நட்சத்திரங்கள். புரை - உயர்ச்சி. நிரைதவன் - முறையே செய்த

நிரைதவன் விரைவி னெய்தி
நெடுங்கடற் கரசன் வைகும்
உரவிட மதனை நண்ணி
யுறுதவ முஞற்றுங் காலை.

அம்பரீடன் தான்புரிய வெண்ணிய புருடமேதத்தில்
பலியிட ஒருவனை நாடிச் செல்லல்

687 குதைவரி சிலைவாட் டானைக்
கோமக னம்ப ரீடன்
சுதைதரு மொழியன் வையத்
துயிர்க்குயி ராய தோன்றல்
வதைபுரி புருட மேதம்
வகுப்பவோர் [1]மைந்தற் கொள்வான்
சிதைவில கனகந் தேர்கொண்
டடவிக டருவிச் சென்றான்.

அம்பரீடன் சுனச்சேபனைப் பெற்று மீளல்

688 நற்றவ நிசிகன் வைகு
நனைவரும் பழுவ நண்ணிக்
கொற்றவன் வினவ லோடு
மியைந்தனன் குமரர் தம்முட்
பெற்றவ ளிளவ லெற்க
யென்றனள் பிதாமுன் னென்றான்
மற்றைய மைந்த னக்கு
மன்னவன் முன்னை நோக்கி.

தவத்தை யுடையவன். கடற்கரசன் - வருணன். உரவிடம் - பரந்த இடம்; மேற்கு. (688)

687 குதை - வின்னாண். சுதை அமுதம். வையத்துயிர்க் குயிராய தோன்றல்: 731. 'மன்னனுயிர்த்தே மலர்தலை யுலகம்' (புறநா. 186) 'உலகிற்கோர் உயிர்ப் பெற்றியான்' (தூளா. நகர. 16) 'மன்னுயிர் ஞாலத்தின்னுயி ரொக்கு மிறை (பெருங்.க. 11: 17-8) புருடமேதம் - மனிதரைப் பலிகொடுத்துச் செய்யும் வேள்வி. அம்பரீடன் செய்யத் தொடங்கிய அசுவமேதயாகத்தில் விடப்பட்ட குதிரை காணாமற் போகவே, அதனைப் பரிகரிக்க அவன் புருடமேதம் செய்தான் என்று முதனூல் கூறும். சிதைவு - குற்றம். (பி - ம்.) [1]'மகவு' (687)

688 நிசிகன் - கோசிகையின் கணவர். பழுவம் - காடு. முன் - மூத்தவன். மற்றையமைந்தன் இடையிலுள்ள சுனச்சேபன். பெற்றவளின ...னைரூள்: மூத்த மைந்தனைப் பிதாவி நபலும் இளைய மைந்தனைத் தாய் விருமபலும் வழக்கு'. தக்க. 295 உரை); 'மூத்தம. னிடத்தாவ மீன்றெடுத்த பிதாவினுக்கு முதிரும்' (விநாயகபு. கடவுள். 6.) (688)

689 கொடுத்தருள் வெறுக்கை வேண்டிற்
[1]றொற்கமாம் விழுமங் குன்ற
எடுத்தெனை வளர்த்த தாதைக்
[2]கென்றவ னியம்ப வேந்தன்
தடுப்பருந் தேரி னேற்றித்
[3]தடையிலா தேக வல்லைச்
சுடர்க்கதிர்க் கடவுள் வானத்
துச்சியஞ் சூழல் புக்கான்.

சுனச்சேபன் கோசிகரைக் கண்டு உற்ற துரைத்தல்

690 அவ்வயி னிழிந்து வேந்த
னருங்கடன் முறையி னற்றச்
செவ்விய குருசி றனுஞ்
சென்றன னியமஞ் செய்வான்
அவ்விய மவித்த சிந்தை
முனிவனை யாண்டுக் காணக்
கவ்வையி னோடும் பாத
கமலம துச்சி சேர்த்தான்.

691 [1]விறப்பொடு வணக்கஞ் செய்த
விடலையை யினிது நோக்கிச்
சிறப்புடை முனிவ னென்னே
தெருமரல் செப்பு கென்ன
அறப்பொரு ளுணர்ந்த மேலோ
யன்னையு மத்தன் றனும்
உறப்பொருள் கொண்டு வேந்தற்
குதவின [2]ருவகை யோடும்.

---

689 வெறுக்கை - செல்வம். ஒற்கம் - வறுமை. விழுமம் - துன்பம். அவன் இயம்ப; அவன் - சுனச்சேபன்.

(பி - ம்.) [1]'றொற்கமா மிழுக்கம்' [2]'கென்றவற் றொழுது' [3]'தாவினன் கடவ வெய்ய' (கஉஉ)

690 குருசில் - பெருமையிற் சிறந்தோன்; சுனச்சேபன். நியமம்-செய் கடன்; முனிவன் - கோசிகர். அவ்வியமவித்த சிந்தைமுனி. 556. கவ்வை-துன்பம். (கஉங)

691 விறப்பொடு - அசசத்தோடு; 'விறப்பே வெரூஉப் பொருட்டு மாகும்' தொல் உரி. சூ. 51. தெருமரல் - வருந்துதல்.

(பி - ம்.) [1]'இறப்பொடு' [2]'ருவகை வேண்டி', 'ரென்னை யென்றான்' (கஉச)

கோசிகர் தம் மைந்தர்க்கு இட்ட கட்டளையும் சாபமும்

692 மைத்துன னோடு முன்னுள்
வழங்கிய [1]மாற்றங் கேளாத்
தத்துற லொழுகீ யானே
தடுப்பனின் னுயிரை யென்னுப்
புத்திரர் தம்மை நோக்கிப்
போகவேந் தோடு மென்ன
அத்தகு முனிவன் கூற
வவர்மறுத் தகல்கை காணு.

693 [1]எழுங்கதி ரவனு நாணச்
சிவந்தன னிருக ணெஞ்சம்
புழுங்கினன் வடவை தீய
மயிர்ப்புறம் பொறியிற் றுள்ள
அழுங்கலில் சிந்தை [2]யானீ
ரடவிக டோறுஞ் சென்றே
ஒழுங்கறு புளின ராகி
யுறுதுய ருறுக வென்றான்.

முனிவர் சுனச் சேபனுக்கு இரண்டு மந்திரங்களை அருளுதல்

694 மாமுனி வெகுளி தன்னுன்
மடிகலா மைந்தர் நால்வர்
தாமுறு சவரா ராகச்
சபித்தெதிர் சலித்த சிந்தை
ஏமுற லொழிக வின்னே
பெறுகென விரண்டு விஞ்சை
[1]கோமரு கனுக்கு நல்கிப்
பின்னருங் [2]குறிக்க லுற்றான்.

---

692 முன்னுள் - தமக்கை. வழங்கிய மாற்றம் - கொடுத்தா என்ற சொல்லை. 'முறைமை' என்ற பாடத்துக்கு ஒழுங்கு என்பது பொருள். புத்திரர் - தம்முடைய புதல்வர். (பி - ம்.) [1]'முறைமை' (கஉஙி)

693 மயிர்ப்புறம் பொறியில் துள்ள-மயிர்க் கால்கள் தீப் பொறிகளால் விளங்க. அழுங்கலில் சிந்தையால் - இரக்கமில்லாத மனத்தின் காரணமாக. புளினர் - வேடர்.

(பி - ம்.) [1]செழுங் கதிரவனு' [2]யீர் நீரடவி' (கஉசு)

694 மாமுனி - வசிட்டர். சவரர்-வேடர். சலித்த - துடித்த. சிந்தை ஏமுறல் - மனத்துன்பத்தை. இரண்டு விஞ்சை - இந்திரனையும் உபேந்திரனையும் எச்சுதற்கு என்பர் வான்மீகி; ஒன்று யாகம் நிறைவேறுவதற்கும் மற்றொன்று சுனச்சேபனுடைய உயிருக்காகவும்.

(பி - ம்.) [1]கோம்ரு மகற்கு' [2]குணிக்கலுற்றான்' (கஉஎ)

சுனச் சேபனை அவர் அணுப்புதல்

695 அரசனே டேகி யூபத
தணையுங்கான மறைய யோதின்
விரசுவர் விண்ணு ளோரும்
[1]விரிஞ்சன்மால் விடைவ லோனும்
உரைசெறி வேள்வி [2]முற்று
முனதுயிர்க் கீறுண் டாகா
பிரசமென் ரூரா யென்னப்
பழிச்சொடு பெயர்ந்து போனான்

அம்பரீடன் வேள்வியையும் சுனச்சேடன் உயிரையும்
அமரர் காத்தமை

696 மறைமுனி யுரைத்த வண்ண
மகத்துறை மைந்த னுயச்
சிறையுறு கலுழ னன்னஞ்
சேமுதற் பிறவு மூரும்
இறைவர்தொக் கமரர் சூழ
விளவறன் னுயிரும் வேந்தன்
முறைதரு மகமுங் காத்தார்
வடதிசை முனியுஞ் சென்றான்.

வடதிசையில் கோசிகரின் கடுந்தவம்

697 வடதிசை முனியு நண்ணி
மலர்க்கர நாசி வைத்தாங்
கிடாவுபிங் கலேதா னைய
விதயத்தூ டெழுத்தொன் றெண்ணி

---

695 யூபம் - யாகப் பசுவைக் கட்டும் தூண். அணையுங் கால் - கட்டும் போது. இம்முறையை - இந்த இரண்டு விஞ்சைகளை. விரசுவர் - வருவார்கள். விரிஞ்சன் - பிரமன். விடைவலோன் - சிவபெருமான். மூவர்: 696. பிரசம் - தேன். பழிச்சு - தோத்திரம்.

(பி - ம்.) [1]'விழுஞ்சனும்.' [2]'முற்றிரி யுன்னுயி ருவந்து காப்பர்' (கஉஅ)

696 மறைமுனி - கோசிகர்; மேல் மறைமுனியாகப் போவதை யுட்கொண்டு (702) கூறியது. மகத்துறை - வேள்வியினிடத்தில். ஆய என்பதற்கு அந்த இரண்டு விஞ்சைகளை என்ற செயப்படு பொருளைத் தருக. சிறை - சிறகுகள். கலுழன் - கருடன். சே - காளை. (கஉக)

697 வடாதிசை - வடக்கு நீட்டல் விகாரம். இடாவு - இடை யென்னுங்கலை. பிங்கலையால் - பிங்கலையோடு; உருபு மயக்கம். நைய - அடங்க.

விடாதுபல் பருவ நிற்ப
மூலமா முகடு விண்டு
தடாதிருட் படல மூடச்
சலித்ததெத் தலமுந் தாவி.

வேறு

698 எயிலெ ரித்தவன் யானை [2]யுரித்துமெய்
[2]பயிலு றத்தனி போர்த்தநன் பண்பெனப்
புயல்வி ரித்தெழுந் தாலெனப் பூதலம்
குயிலு றுத்திக் கொழும்புகை விம்மவே.

699 தமந்தி ரண்டுல கியாவையுந் தாவுற
நிமிர்ந்து [1]வெங்கதிர்க் கற்றையு நீங்குறக்
கமைந்து மாதிரக் காவலர் கண்ணெடும்
சுமந்த நாகமுங் கண்சும் புளித்தவே.

700 திரிவ நிற்ப செகதலத் தியாவையும்
வெருவ வுற்றன வெங்கதிர் மீண்டன
கருவி யுற்ற ககனமெ லாம் [1]புகை
துருவி யுற்றிட வும்பர் துளங்கினர்.

எழுத்தொன்று - ஓங்காரம். மூலம் - மூலாக்கினியினுல். முகடு - உச்சி. மூலமா முகடு - பிரமரந்திரமுமாம். இருட் படலம் - புகைப்படலம். இருட் படலம் தாவிமூட எத்தலமும் சலித்தது. (கஙo)

698 எயில் - முப்புரங்கள். மெய் - உடல். தாருகாவனத்து ரிஷிகள். எவின யானையைச் சிவபிரான் உரித்து அதன் தோலைப் போர்த்துக் கொண் டார் என்பது வரலாறு. குயிலுதல் - செறிதல்.

(பி - ம்) [1]'யுரித்த நாள்' [2]'பயிலுரத்துரி' (கஙக)

699 தமம் - இருள். வெங்கதிர்க் கற்றை - சூரிய கிரணங்களின் தொகுதி. கமைந்த - நிறைந்த; உரிச் சொல்லடியாகப் பிறந்தது. மாதிரக் காவலர் - திக்குப் பாலர்களுடைய. சுமந்த நாகம் - இவ்வுலகைச் சுமந்த அஷ்ட நாகங்கள். திக்குப் பாலரையும் நாகங்களையும் கூறினமையால் மேலுலகும் கீழுலகும் என்றபடி. சும்புளித்தல் - கூசுதல்; சிம்புளித்தல் என்று வேறு நூல்களில் காணப்படுகிறது; சிம்மாந்து சிம்புளித்து. (தே. 1617): 'சிம்புளித்தடித்தும்' (பெருங். ச. 12:240); 'விண்டஞ்சு மென்ன வீரிந்த குடை நாட்கோள் கண்டஞ்சிச் சிம்புளித்தார்கண்' (தொல். பொருள். சூ. 140, நூ. உரை. மேற். 'பகலெறிப்பது')

(பி - ம்.) [1]'வெங்கனற்' (கஙஉ)

700 திரிவநிற்ப - இயங்கியற் பொருள், நிலையியற் பொருள்கள். வெம் கதிர்-சூரியகிரணங்கள். கருவி-மேகத்தொகுதி. துருவி - சாணிடமும் விடாமற் பரவி. துளங்கினர் - நடுங்கினர்.

(பி - ம்.) 'புகைந்துருவி' (கஙஙு)

கோசிகர் பிரமரிஷி என்ற பட்டம் பெறுதல்

701 புண்ட ரீகனும் புட்டரு பாகனும்
குண்டை யூர்தி குலிசியு மற்றுள
அண்டர் தாமும்வந் தவ்வயி [1]னெய்தியே
எண்ட போதனன் முன்னே யெதிர்ந்தனர்.

702 பாதி மாமதி சூடியும் பைந்துழாய்ச்
சோதி யானுமத் தூய்மல ராளியும்
வேத பாரகர் வேறிலர் நின்னலால்
மாத போதன வென்ன வழங்கினர்.

703 அன்ன வாசகங் கேட்டுணர் ந்தணன்
சென்னி தாழ்த்திரு செங்கரந் தான்குவித்
துன்னு நம்வினை யுற்றதென் றேங்கினன்
தன்னு தேவர் தஞ் சூழலிற் போயினர்.

---

701 புள் - கருடன். குண்டை - காளை. குலிசி - வச்சிராயுதனான இந்திரன். எதிர்தல் - சந்தித்தல்.

((பி - ம்.) [1]"ஞற்றுறும் ஒண்ட[2]வன்றனைக் கண்டுவந் தேத்தினர்" (கஉச)

702 வேத பாரகர் - வேதங்களைக் கரைகண்டவர். 3–4: 'பிரமரிஷியாவாய் என்றனர்' என்பது கருத்து. (கஉரு)

703 அந்தணன் - விசுவாமித்திரர். கோசிகர் வரலாற்றின் பின்பாகம் வான்மீகத்தில் கீழுள்ளவாறு காணப்படுகிறது: அம்பரீடன் சென்ற பின் பிரமன் கோசிகர் முன்வந்து 'நீ இன்னும் நெடுங்காலம் தவம் செய்க' என்று சொல்லிச் செல்லக் கோசிகர் அங்ஙனமே தவஞ் செய்து வருங்கால் மேனகையால் அவர் தவம் சிறைந்து வடதிசை சென்றார். அங்கே அவருக்கு நான்முகனால் மகரிஷி என்ற பேறு கிடைத்தது. மேலும் கோசிகர் தவம் செய்து வருங்கால் இந்திரனால் அனுப்பப்பட்ட அரம்பையைக்கண்டு தம்மை அவள் மயக்க வந்தமைக்காக அவளைச் சினந்து சபித்துத் தம் சினத்தினால் தவமிழந்தமைக்கு இரங்கி, அங்கு நின்றும் கீழ்த்திசைக் கேகித் தவஞ் செய்யும் இடையில், இந்திரன் செய்த சோதனையினால் கோபங் கொள்ளாமல் மேலுங் கடுந்தவஞ் செய்ய, அந்தத் தவத்தினின்று எழுந்த தழலைச் சகிக்க மாட்டாத தேவர் முதலியவர்களின் வேண்டுகோளின்படி பிரமன் இம்மூனிவர் மூன் தோன்றி, 'நீ பிரமரிஷியாவாய்' என்றனர். அதனைக் கேட்ட விசுவாமித்திரர், அம்மொழியை வசிஷ்டர் வாயால் கேட்க விரும்பத் தேவர்கள் வசிட்டரை அங்கே யழைத்துவந்து அவர் வாயால் இவரைப் பிரமரிஷி யென்று சொல்லச் செய்தார்கள். (கஉக)

சதானந்தர் இராமரைப் பாராட்டுதல்

704 ஈது முன்ன நிகழ்ந்த திவன்றனை
மாத வத்துயர் மாண்புடை யாரிலை
நீதி [1]விந்தக நீயிவற் சேர்ந்தனை
யாது னக்கரி தென்றன னீறிலான்.

அவர் விடை பெற்றேகல்

705 என்று கோதமன் காதலன் கூறிட
வென்றி வீரர் [1]வியப்பொடு வந்திட
துன்று மாதவன் றுடொழு தேங்கிய
பின்றை யம்முனி பேர்ந்தனன் றன்னிடம்.

இராமபிரானது விரகதாபம்

706 முனியுந் [1]தம்பியும் போய்முறை யாற்றமக்
கினிய பள்ளிக ளெய்திய பின்னிருட்
கனியும் போல்பவன் கங்குலுந் திங்களும்
தனியுந் தானுமத் தையலு மாயினன்.

707 விண்ணி னீங்கிய மின்னுரு விம்முறை
பெண்ணி னன்னலம் பெற்றதுண் டேகொலாம்
எண்ணி னஃதல தெண்ணறி யேனிரு
கண்ணி னுள்ளுங் கருத்தினுங் காண்பனல்.

---

704 ஈறிலான்; ஈறு-எல்லை, முடிவு. சதானந்தர் இரகு நந்தனரை நோக்கி, 'நீயிவற் சேர்ந்தனை யாதுனக்கரிது' என்று தொடங்கி, கோசிக ருடைய விருத்தாந்தத்தைக் கூறுவதாக முதனூல் கூறும்; 51-ஆம் சருக்கம். (பி-ம்.) [1]'வித்தகன் றனக்கு ணேர்ந்தனிர் யாதுமக்கரி' (கஙஎ)

705 முனி - சதானந்தர். சனகரது சபையில் இந்த வரலாறு கூறப் பட்டதென்றும், அரசனும் உடனிருந்து அதனைக் கேட்டு வந்து பிறகு கோசிக முனிவரை யாகசாலைக்கு மறுநாள் இராம லக்குமணரையும் அழைத்து வரும்படி கூறிச் சென்றதாகவும் முதனூல் கூறும்.

(பி - ம்.) [1]'வியப்பொடுங் கேட்டவந், தன்று மாதவ னேத்தொழு தன்பினல், பின்றை யேத்தப்'

சில பிரதிகளில் இச் செய்யுளோடு கோசிகப் படலம் முடிவுறும். ஒரு பிரதியில் மேல் வரும் 17 கவிகள் (706–722) 'கைக்கிளைப் படலம்' என்ற தலைப்பின் கீழே தரப்பெற்றுள்ளன. இங்கேயுள்ள கைக்கிளை ஆண்பாற் கைக்கிளை யாகும். (கஙஅ)

706 இராமபிரானுக்குப் பள்ளி இனிமை யாகாமையைப் புலப்படுத்த 'முனியுந்தம்பியும் இனிய பள்ளிக ளெய்தியபின்' என்றார். இருட்கனியும்: உம்மை இசை நிறை. (பி - ம்:) [1]'தம்பியு மொய்முறை' (கஙக)

707 அஃதலது - அந்தப் பெண்ணின் நன்னலம் அல்லாமல் பிறி தொன்றை. இராமர் சீதையை நினைந்து இங்கே விரக தாபங் கொள்வது வான்மீகத்தில் இல்லை. (கஙஎ)

708 வள்ளற் [1]செங்கைக் கரியவன் வைகுமவ்
வெள்ளப் பாற்கடல் போன்மிளிர் கண்ணிஞள்
அள்ளற் பூமக ளாகுங்கொ லோவென
துள்ளத் தாமரை யுள்ளுறை கின்றதே.

709 அருளி லாளெனி னும்மனத் தாசையால்
வெருளு நோய்விடக் கண்ணின் விழுங்கலால்
தெருளி லாவுல கிற்சென்று நின்றுவாழ்
பொருளெ லாமவள் பொன்னுரு வானதே.

710 பூணு லாவிய பொற்கல சங்களென்
ணெணி லாகத் தெழுதல வென்னினும்
வாணி லாமுறு வற்கனி [1]வாய்மதி
காண லாவதொர் காலமுண் டாங்கொலோ.

711 [1]கன்னல் வார்சிலை கால்வளைத் தேமதன்
[2]பொன்னின் மின்னிய பூங்கணை [3]மாரியால்
என்னை யெய்து தொலைக்குமென் றுளினி
வன்மை யென்னுமி தாரிடை வைகுமோ.

---

708 வள்ளற் செங்கைக் கரியவன்: 'வள்ளற்கைத்தல மாந்தரின்' (சீவக. 36.) கருவிழிக்குத் திருமால். விழியின் வெண் பரப்புக்குப் பாற் கடல். விடமும் அமுதும் ஒருங்கே தோன்றிய பாற்கடலைச் சீதையின் கண் ணுக்கு உவமை கூறியது நோயையும் நோய்க்கேற்ற மருந்தையும் தரவல் லன அவளுடைய கண்கள் என்று கொண்டு. 'மாயோனையும் பாற்கடலையும் முகத்தே வைத்தாற் போன்ற தன்மையவாய் மகிழ்ச்சி செய்வனவாய்த் துன் பத்தாலும் இன்பத்தாலும், நஞ்சும் அமுதும் போலும் குணத்தவாகியகண்' (சீவக. 167, ந.) அள்ளற்பூ - தாமரை மலர்; அள்ளல் - சேறு; பங்கயமென் றபடி. (பி - ம்.) [1]'சேக்கை', 'செங்கட்' (கசக)

709 தமக்கு இன்னும் அருளாதது பற்றி 'அருளிலாள்' என்றார். வெருளுநோய் விடக்கண் - அஞ்சத்தக்க காம நோயைத் தருகின்ற நஞ்சை யுடைய கண். விழுங்கலால் - அவள் விழுங்கியதனால்; ஈற்றடி தசாவஸ்தை களில் 'நோக்குவ வெல்லாம் அவையே போறல்' என்பதனைத் தெரிவிக் கிறது; 634:2; 'காடுஞ் செடியுமவளாகத் தோன்றுமென் கண்களுக்கே' (அசதிக்.) (கசஉ)

710 ஏண் - பெருமை, வலிமை. நகில்களைத்தோயும் பாக்கியம் இல்லை யென்று கருதி 'எணிலாகம்' என்றார்; 4:626. (பி - ம்.) [1]'வாயிதழ்' (கசங)

711 'கன்னல் வார்சிலை பூங்கணை வாளி' என்றதனால், மதனது வில் லம்புகளின் எளிமை கூறியபடி. தொலைத்தல்-தோற்கச் செய்தல். வன்மை யாரிடை வைகும்: 406.

(பி - ம்.) [1]'கன்ன லின்கருப் புச்சிலை யான்விரை' [2]'பொன்னை மூன் னிய' [3]'வாளியால்' (கசச)

712 கொள்ளை கொள்ளக் கொதித்தெழு பாற்கடற்
பள்ள வெள்ள மெனப்பட ருக்மிலா
உள்ள முள்ளுற் றுயிரைத் [1]துருவுமால்
வெள்ளை வண்ண விடமுமுண் டாங்கொலோ.

713 வண்ண மேகலைத் தேரொன்று வாணெடுங்
கண்ணி ரண்டு [1]கதிர்மூலை தாமிரண்
டுண்ணி வந்த நகையுமுண் டாமெனில்
எண்ணுங் கூற்றினுக் கித்தலை வேண்டுமோ.

714 [1]ஆகு நல்வழி யல்வழி யென்மனம்
ஏகு [2]மோவிது வேயதன் காரணம்
பாகு சேர்மொழிப் பைந்தொடி கண்ணியே
[2]ஆகு மாமதற் கையுற வில்லையே.

---

712 பள்ளம் - ஆழம். நிலாவுக்குப் பாற்கடல். 'தெரிந்தொளிர் திங்கள் வெண்குடத்தி ஞற்றிரை, முரிந்துயர் பாற்கடன் முகந்து மூரிவான், சொரிந்ததே யாமெனத் துள்ளி மீளுமும், விரிந்தது வெண்ணிலா மேலும் கீழுமே' (இரா. 2:55) வெள்ளை விடம்: இரகுவம்சம்.

(பி - ம்.) [1]'தொடருமால்' (கசடு)

713 மேகலைத் தேர் என்றது அல்குலை. உள்நிவந்த கதிமூலை என்ற பாடத்திற்குக் கதி-எழுதல், சிறத்தல். பெண்ணைக் கூற்று என்றல்: 'பெண்ணே அவளல்லள் பெண்ணுருவு கொண்டிருந்து, மண்ணோர்களை யெல்லாம் மாய்க்க வருங்கூற்றே' (எ. 8. 177); 'நல்லா ருறுப்பெலாங் கொண்டி யற்றியான் கொல் வெறுப்பினுல், வேண்டுருவங் கொண்டதோர் கூற்றங் கொல்' (கலி. நெய்: 7-9); 'பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன், பெண்டகையாற் பேரமர்க் கட்டு' (குறள், 1083); 'பல்லுயிர் பருகும் பகுவாய்க் கூற்றம் .....பெண்மையிற் றிரியும் பெற்றியு முண்டென', 'வினை மீளுணங்கற் பொருட்டாக வேண்டுருவங் கொண்டு வேறோர். கொலைவெனெடுங்கண் கொலைக் கூற்றம் வாழ்வது' (சிலப். இரா. 219–23; எ:10); 'கோமகனுருவமாய்க் கூற்றம் போந்தது' (சீவக 2451.) (பி-ம்.) [1]'கதிமூலை' (கசசு)

714 அதன் காரணம் - என்மனம் அவள் மேற்சென்றதன் காரணம். ஒப்பு: சாகுந்தலம், அங்கம், க: சுலோகம், 20.

(பி - ம்.) [1]'ஆகு நல்வழி யன்றெனில்', 'ஏகு நல்வழி' [2]'மோவிதெய்ய', 'மோவதற்காகிய' [3]'ஆகும் வேறிதற்'

இதன்பின் சிலபிரதிகளில்,

'காதலா லொருத்தியை நினைப்பக் கண்டுயில்
மாதரா ளவன்றிற மறுப்பக் கங்குன்மான்
ஏதிலான் றமியனென் றேக லேனென
வாதலா லிருந்தன னளிய னென்செய்வான்'

என்ற செய்யுள் காணப்பெறுகிறது. (கசஎ)

சந்திராஸ்தமனம்

715 கழிந்த கங்கு லரசன் கதிர்க்குடை
விழுந்த தென்னவு மேற்றிசை யாள்சுடர்க்
கொழுந்து சேர்ந்து தற் கோதறு சுட்டிபோய்
அழிந்த தென்னவு மாழ்ந்தது திங்களே.

716 வீசு கின்ற நிலாச்சுடர்[1] வீழ்ந்ததால்
[2]ஈசு ணுமதி யேகலுஞ் சோகத்தால்
பூசு மென்கல வைப்புனை சாந்தினை
ஆசை மாத ரழித்தன ரென்னவே.

வேறு

சூரியோதய வருணனை

717 தையுமலர்த் தாரண்ண லிவ்வண்ண
மயலுழந்து தளரும் வேலை
சிதையுமனத் திடருடையச் செங்கமல
முகமலரச் செய்ய வெய்யோன்
புதையிருளி னெதிர்கின்ற புகர்முகயா
னையினுரிவைப் போர்வை போர்த்த
உதயகிரி யெனுங்கடவு ணுதல்கிழித்த
விழியேபோ லுதயஞ் செய்தான்.

718 விசையாடற் பசும்புரவிக் குரமிதிப்ப
வுதயகிரி விரிந்த தூளி
பசையாக மறையவர்கை [1]மலர்நறையு
நிறைபுனலும் பரந்து பாய

---

715 திங்களுக்குச் சுட்டி. சந்திரன் மறைவு: 1117. (கசஅ)

716 நிலாச்சுடர் - நிலவாகிய ஒளி. ஈசனுமதி; ஈசன் - இரவுக்குத் தலைவன். ஆசை மாதர் - திசைகளாகிய பெண்கள்; விருப்பமுள்ள மாதர் என்பது ஒரு நயம். அழித்தன ரென்ன நிலாச்சுடர் வீந்தது.
(பி - ம்) [1]'வீழ்ந்ததால்' [2]'ஏகிலா' (கசசு)

717 தையும் - சிதைந்த. வேலை - சமயம். சிதையு மனத்திடர் - சிதையை நினைத்து வருந்தும் மனத்துன்பம். உடைய - நீங்க வேண்டி. செங்கமல முகம்: தாமரைகள் மலர்வது 719-ஆம் கவியிற் கூறப்படும். செய்ய - செம்மையுள்ள. புகர்முகவாரணம் புள்ளிகளையுடைய முகத்தோடு கூடிய யானை. இருள் போர்த்துள்ள உதயகிரிக்கு யானைத் தோல் போர்த் துள்ள சிவபெருமான். நெற்றிக் கண்ணுக்குச் சூரியன். (கஙம)

718 பசும்புரவி - சூரியன் தேரிற் பூட்டியுள்ள ஏழு பச்சைக் குதிரை கள்; 349. குரம் - குளம்பு. மலர் நறை - பூசைக்காக அந்தணர் பறித்த மலர் களில் உள்ள தேன். நிறை புனல் - அம்மறையவர் சூரியனுக்கு அருக்கியம்

அசையாத நெடுவரையின் முகடுதொறு
மிளங்கதிர்சென் [2]றணவ வேய்ந்த
திசையாளு [3]மதகரியைச் சிந்தூர
மப்பியபோற் றீகழு மாதோ.

719 பண்டுவருங் குறிபகர்ந்து பாசறையும்
பொருள்வயினும் பரிந்து போன
வண்டுதொடர் நறுந்தெரிய லுயிரனைய
கொழுநர்வர மணித்தே ரோடும்
கண்டுமனங் களிசிறப்ப வொளிசிறந்து
[1]மெலிவகலுங் கற்பி னூர்போல்
புண்டரிக முகமலர வகமலர்ந்து
பொலித்தனபூம் பொய்கை யெல்லாம்.

720 எண்ணரிய மறையிலெடு கின்னரர்க
ளிசைபாட வுலக மேத்த
விண்ணவரு முனிவர்களும் வேதியருங்
கரங்குவிப்ப வேலை யென்னும்
மண்ணுமணி முழவதிர வானரங்கி
னடம்புரிவா னிரவி யென்னும்
கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரித்தா
னெனவிரிந்த கதிர்க ளெல்லாம்.

கொடுக்கும் நீர். எய்ந்த திசை - கிழக்கு. திகழுமென்பதற்குச் சூரியன் தோன்ற வெழுவாய்.

(பி - ம்.) [1]'நறைமலரு' [2]'றளைந்து வெய்யோன்' [3]'மதகரிகள்' (கடுக)

719 குறி - குறிப்பு. பாசறை - பகைமேற் சென்றோர் தங்குமிடம்; படை வீடு எனவும் பெறும். பொருள் வயினும்.....கொழுநர்வர: 'பொருடரப் போயினர்ப் பிரிந்த பொய்யுடற், குருடரு தேர்மிசை யுயிர்கொண் டெய்த்தலால்', 'விழைவுறு பொருடரப் பிரிந்த வேந்தர்வந், தழையுற வுயிருற வுயிர்க்கு மாதரின்' (ச. 7: 22, 25.) கொழுநர் உயிர்: 'ஆடவ ருயிரென வருகு போயினர்', 'ஐயா நீயென, தாவி யென்பது பொய்யோ' (841, ச. 6 : 9); 'இன்னுயி ரன்ன பிரிவருங் காதலர்' (நற். உஉ:3); 'மனையுறை மகளிர்க் காடவருயிர்' (குறுந். கஉ:2.)

(பி - ம்.) [1]'மெலிவ கற்றுங்' (கடுஉ)

720 செக்கர் வானம் சிவன் சடைக்கு. திருச்சிற். 67, பேர். சூரியனுக்குச் சிவன். மு. 'மாயிருஞாலத் துயிர்காண வானரங்கிற், பாயிரு ளென்னும் படாம் வாங்கிச் - சேய்நின், றறைந்தா ரணம்பாட வாடிபோய் வெய்யோன் மறைந்தான் குடபால் வரை' (நள. க: 98.) (கடுக)

இராமபிரானது நிறமை

721 கொல்லாழி நீத்தங்கோர் குனிவயிரச்
சிலைதடக்கைக் கொண்ட கொண்டல்
[1]எல்லாழித் தேரிரவி யிளங்கரத்தா
லடிவருடி யனந்த நீர்ப்ப
அல்லாழிக் கரைகண்டா ஞயிரமா
மணிவிளக்க மழலுஞ் சேக்கைத்
தொல்லாழித் துயிலாதே [2]துயராழிப்
பெருங்கடலிற் றுயில்கின் றனே.

இராமபிரானின் செயல்

722 ஊழிபெயர்ந் தெனக்கங்கு லொருவண்ணம்
புடைபெயர வுறக்க நீத்த
சூழியா னையினெழுந்து தொன்னியமத்
துறைமுடித்துச் சுருதி யன்ன
வாழிமா தவம்பணிந்து மனக்கினிய
தம்பியொடும் வரம்பின் மாலை
[1]தாழுமா மணி [2]மௌலித் தார்ச்சனகன்
பெருவேள்விச் சாலை சார்ந்தான்

---

721 கொல் ஆழி - சக்கரப்படை. எல் ஆழித்தேர் - விளக்கத்தை புடைய ஒற்றைச் சக்கர முடைய தேர். அடிவருடி அனந்தல் தீர்த்தல் உ. 2:43; வி-பா. வாசுதேவனைப். 10. அனந்தல் – தூக்கமயக்கம்; 2.12:44,3:57; சீவக 1249, 2083. கொண்டல் ஆழிநீத்துச் சிலை கொண்டதென்பது ஒருநயம். அல் ஆழி - இரவு என்னும் கடல்; 'கங்குல் வெள்ளங் கடலினும் பெரிதே'. (குறுந். 5அள); 'நிறை புணையா யாம நெடுங்கட னீந்துவேன்', 'இருண்மா லை வெள்ளத்துள்' (பு-வெ. 298, 328). சேக்கை-ஆதிசேடனாகிய படுக்கையில்; தொல் ஆழி - தனக்குப் பழைமதாகிய பாற்கடல்; 'மாயிரும் பரப்பகம் புதையப் பரம்பின் ஆயிர மணிவிளக் கழலுஞ் சேக்கை' (மார்க்கண்டேயனூர் காஞ்சி); 'மின்னவிர் சுடர் மணி யாயிரம் விரித்த, கவைநா வருந்தலைக் காண்பின் சேக்கை' (பரி. கஉ: 27-8.)

(பி - ம்.) [1]'செல்லாழித்' [2]'துயராழித் துயிலாதே' (கஞ்ச)

722 ஊழி - யுகம். சூழி - நெற்றிப் பட்டம். இராமருக்கு யானை யுவமை. மாலை தாழும் வேள்விச்சாலையென இயைக்க. தார்-மாலை.

(பி - ம்.) [1]'தாழுமா நெடு' [2]'மௌலி வாசமலர்த் தார்ச்சனகன் சாலை' (கஞ்ஞ)

மிதிலைக்காட்சிப் படலம் முற்றும்.

11. குலமுறை கிளத்து படலம்.*

சனகன் சபாமண்டபம் அடைதல்

723 முடிச்சனகர் பெருமானு [1]முறையாலே
பெருவேள்வி முற்றிச் சுற்றும்
இடிக்குரலின் முரசியம்ப விந்திரனிற்
சந்திரன்றேர் கோயி லெய்தி
எடுத்தமணி மண்டபத்து ளெண்டவத்து
முனிவரொடு மிருந்தான் பைந்தார்
வடித்தகுனி வரிசிலைக்கை மைந்தனுந்தம்
பியுமருங்கி னிருப்ப மாதோ.

இராம லட்சுமணர்களைக் குறித்துச் சனகர் வினவவே கோசிகர் கூறத் தொடங்கல்

724 இருந்தகுலக் குமரர்தமை [1]யிருகண்ணுன்
முகத்தழகு பருக நோக்கி
அருந்தவனே யடிவணங்கி [2]யாரிவர்க
ளுரைத்திடுமி [3]னடிக ளென்ன
விருந்தினர்க ணின்னுடைய வேள்விசா
ணியவந்தார் வில்லுங் காண்பார்
பெருந்தகைமைத் தயரதன்றன் [4]புதல்வரென
வவர்தகைமை பேசலுற்றான்.

---

* சில பிரதிகளில் இது வரலாற்றுப்படல மென்றும், வேறு சில பிரதிகளில் சூரியகுலப்படல மென்றும் காணப்படுகிறது.

723. சனகர் - சனக குலத்தார். இந்திரனின் எய்தி. எடுத்த - உயரக்கட்டிய. எண் - மதிப்பு. வடித்த - பயின்ற ; 'வார்சிலை வடிப்ப வீங்கி' (சீவக. 1450.)

(பி - ம்.) 1 'முறையாக மறைநியம முடித்த பின்னர்' (க)

724. இரு கண்ணுலும் என உம்மையை விரிக்க. நோக்கி அழகு பருக - அழகைப்பருகுதல் : 1324. பருக நோக்கி : 'பருகுவனள்போல... மதரரி நெடுங்கண் வேற்கடை கான்ற' (பெரும். க. 33 : 121-3.) வில்லுங் காண்பார் - வில்லின் வலிமையைக் காணக் கூடியவர் என்பதைக் குறிப் பித்தபடி ; 814. வில் முறிவுக்குப்பின் தசரதன் வேண்டுகோளின்படி விசுவாமித்திரர் இக்குலமுறையைக் கூறுவதாக வான்மீகத்தில் உள்ளது ; பால. சர்க். 70.

(பி - ம்.) 1 'யிரு விழியு முகந்தழகு', 'யிரு கண்ணுன் முகந்து' 2 'யாரிவரே' 3 'னறிய வென்ன' 4 'சிறுவரென்றுங் கவர்தன்மை' (உ)

வேறு
மனுவும் பிருதுவும்

725 ஆதித்தன் குலமுதல்வன் மனுவினையா ரறியாதார்
பேதித்த வுயிரனைத்தும் பெரும்பசியால் வருந்தாமற்
1 சோதித்த வரிசிலையா னிலமடந்தை மூலசுரப்பச்
சாதித்த பெருந்தகையு மிவர்குலத்தோர் தராபதிகாண்.

இட்சுவாகு

726 1 பிணியரங்க வினையகலப் பெருங்காலந் தவம்பேணி
2 மணியரங்க நெடுமுடியாய் மலரயனே வழிபட்டுப்
3 பணியரங்கப் பெரும்பாயற் பரஞ்சுடரை யாங்காண
அணியரங்கந் 4 தந்தானை யறியாதா ரறியாதார்.

ககுத்தன்

727 தான்றனக்கு வெலற்கரிய தானவரைத் 1 தலைதுமித்து
2 வான்றருகிற் றிகொலெனக் குறையிரப்ப வரங்கொடுத்தாங்
கேன்றெடுத்த சிலையினரு யிகல்புரிந்த விவர்குலத்தோர்
தோன்றலப்பண் 3 டிந்திரனே கொல்லேறச் சுமந்தான்காண்.

---

725. ஆதித்தன் குல முதல்வன்; தனியன், 1, குறிப். இராமன் மனு மரபு: கூ.9: 92. பேதித்த - பலவகையாக வேறுபட்ட. சோதித்த - பழகிய. பெருந்தகை - பிருது சக்கரவர்த்தி; 'அடல்படைத் தவனியைப் பெருவளந் தருகவென் றருளினனும்' (சூ. 2: 83); 'தொல்லார் கலிவலயம், தோள் வலிய முன்றிருந்த, வில்லா னவெள்ள வெற்பெடுத்தோன்' (குலோத். உலா, 16.) பிருதுவால் வளம் பெற்றதால் நிலம் பிருதிவி என்று பெயர் பெற்றது.

(பி - ம்.) 1 'சோதித்தன்' (கூ)

726. அரங்க - அழிய; 'பஞ்சரங்கு தீயின்' (804.) 'பிணியரங்கு வினை' என்ற பாடத்துக்குப் பிணியும் யாவற்றையும் அழிக்கின்ற வினையும் என்பது பொருள். மணி அரங்கு அம்நெடுமுடி; அரங்கு - பதிக்கப் பெற்ற. பணி அரங்கம் - ஆதிசேடனது உடலிடம். அணியரங்கம்; அரங்கம் - அரங்க விமானம்; அழகிய திருவரங்கம் என்னும் தலம் என்னலும் ஆம். அரங்க நாதரை அயோத்திக்கு எழுந்தருளு வித்தவன் இட்சுவாகு.

(பி - ம்.) 1 'பிணியரங்கு' 2 'மணியரங்கு' 3 'பணியரங்கும் பெரும்பாயற் பரஞ்சுடருக் கரங்கான' 4 'தந்தானு மிவர்குலத்தோ ராண்டகைகாண்' (சு)

727. தருகிற்றி கொல் - தரவல்லையோ. வரம் - அனுக்கிரகம். என்று - பொருத்தி. தோன்றல் - ககுத்தன். புரஞ்சயன் என்பது இவனது மற்றொரு பெயர். ககுத்தன் - முசுப்பின் மேல் இருந்தவன்; காரணப் பெயர்; 'மிடல்படைத் தொருவனு யமரர்கோன் விடையதாய் வெரிநின் மேலாய், உடல்பதைத் தவுணரா யினரெலா மடியவா ளுருவி னனும்' (சூ. 2: 83); 'இக்குவாகுவின் மகன் புதல்வனை வுரவோன், இகலு வோனிக லுரஞ்செய்து புரந்தரனெனுஞ், சக்கு வாயிரமுடைக் களிறுவா கனமெனத் தானிருந்து பொரு தானவரை வென்ற சயமும்' (கலிங்கத்.

728 அரசனவன் பின்னுரை யென்னுழு மளப்பரிதால்
உரைகுறுக நிமிர்கீர்த்தி யிவர்குலத்தோ னொருவன்காண்
[1]நரைதிரைமூப் பிவை [2]யெய்தி யிந்திரனு நந்தாமற்
குரைகடலே நெடுவரையாற் [3]கடைந்தமுதங் கொடுத்தானும்.

மாந்தாதா

729 [1]கருதரிய பெருங்குணத்தோ [2]ரவர்பின்பு கணக்கிறந்தோர்
திரிபுவன முழுதாண்டு சுடர்நேமி செலநின்றூர்
[3]பொருதுறைசேர் வேலினுய் புலிப்போத்தும் புல்வாயும்
ஒருதுறையி னீருண்ண வுலகாண்டோ [4]னொருவன்காண்.

தேவலோகங் காத்தவன்

730 [1]மறைமன்னு மணிமுடியு மாரமும்வா ளொடு [2]மின்னப்
பொறைமன்னு வானவருந் தானவரும் [3]பொருதநாள்
விறன்மன்னர் தொழுகழலா யிவர்குலத்தோன் விற்பிடித்த
அறமென்ன வொருதனியே [4]யமைந்தமரா பதிகாத்தான்.

இராச: 11); 'பேராப் பெரும்பகை தீரப் பிறவேந்தர், ஊராக் குலிச விடை யூர்ந்தோன்' (குலோத். உலா, 3.)

(பி - ம்) 1 'தலை துமித்தோன், வானவர்தந் தவமியற்றிக்' 2 'வான் றரக் கிற்றிகொ லென்று', 'வான்றனக்கின் றீதியெனக்' 3 'டிந்திரன் காண் விடையேறுச்', 'டிந்திரன்றன் விடையேறுய்ச்' (கு)

728. உரைகுறுக நிமிர் கீர்த்தி: 'மண்டேய்த்த புகழினுன்' (சிலப். க : 36.); 'மொழியைக் கடக்கும் பெரும் புகழான்' (இராமாநுச அந்தாதி, 7.) நந்தாமல் - மரணமடையாமல். கடல் கடைந்தவன்: 'கடல் கலக்கவெழு மின்னமுது தன்னே யொருவன் கடவுள் வானவர்க ளுண்ண வருள் செய்த கதையும்' (கலிங்கத். இராசபா. 13); 'தோளிணையால், கோழியிற் சோழ குலத்தொருவன் முன்கடைந்த, ஆழியிற் கொண்ட வரம்பையரும்' (இராச ராச. 71-2.)

(பி - ம்.) 1 'நரைதிரையென் றிவை' 2 'நீக்கி', 'மாற்றி' 3 குடைந் தமிழ்த்து' (சு)

729. 'கருதலரும்' என்ற பாடத்துக்கு நினைக்கவும் அரிய என்பது பொருள். நேமி - ஆஞ்ஞா சக்கரம். உறைசேர் வேல்: 187, குறிப். உலகாண்டோன் - மாந்தாதா. 'ஒரு துறைப் புனல் சினப்புலியு மானு முடனே, உண்ணவைத்த உரவோன்' (கலிங்கத். இராசபா. 12); 'பைந் தடத் தாதுறையி லடுபுலியும் புல்வாயுங், கூடநீ ரூட்டிய கொற்றவனும்', 'பழக்கத்தாற், போந்த புலியுடனே புல்வா யொருதுறைநீர், மாந்த வுலகாண்ட மாந்தாதா', 'வாவியிற், புக்க துறையிற் பகைப்புலியும் புல்வாயு மொக்க வொருகாலத் தூட்டினேன்' (முவநூலா. க : 5, உ : 7, ங : 5.)

(பி - ம்.) 1 'கருதலரும்' 2 'நிவர் முதலோர்' 3 'பொருதிறல் சேர்', 'பொருதடரும் செவ்வேலோய்' 4 'னொருவனுளன்' (எ)

730. நந்த (பி-ம்)-அழிய; சீவக. 2564, முன்பு விறலியுடைய மன்னர். அறம் - தருமதேவதை. அமராபதி காத்தான் - காத்தவன்

சிபிச் சக்கரவர்த்தி

731 இன்னுயிர்க்கு மின்னுயிரா [1]யிருநிலமுன் காத்தளித்த
பொன்னுயிர்க்குங். [2]கழலவரை யாம்போலும் புகழ்கிற்பாம்
மின்னுயிர்க்கு நெடுவேலோ யிவர்குலத்தோன் [3]மென்புறவின்
மன்னுயிர்க்குந் தன்னுயிரை மாறுக வழங்கினனுல்.

சகர புத்திரர்கள்

732 [1]இடரோட்ட வெனநெடிய வரையுருட்டி [2]யிவ்வுலகம்
[3]திடரோட்ட மெனக்கிடந்த [4]வகைதிறம்பத் தெவ்வேந்தர்
உடரோட்ட நெடுவேலா யிவர்குலத்தோ ருவரிநீர்க்
கடரோட்டா ரெனின்வேரோர் கட்டுரையும் வேண்டுமோ.

திலீபன்; இவன் இந்திரனெடு ஓர் ஆசனத்தில் இருந்தமை; 'வெயில் காட்டும், அவ்வானவர்கோ னெருமணி யாசனத்தி லொவ்வாம லேத்த வுடனிருந்தோன்' (குலோத். உலா, 5) என்பதனலும், 'வெயிலெக்காட்டும் கடவுள் மணியாசனத்திலே அவ்வானவர் கோனும் முகந்தாழ்க்கத் தேவர் உலகம் பரவ உடனிருந்தவன்; இவன் திலீபன்' என்ற அதன் பழைய உரையாலும் அறியலாம். காத்தவன் முசுகுந்தன் என்பாருமுண்டு; 'வீங்குநீர் வேலி யுலகாண்டு விண்ணவர்கோன் ஓங்கரணங் காத்த வுரவோன்' (சிலப், உசு: அம்மானைவரி, 1-2.)

(பி - ம்.) 1 'நறைமன்னு மலர்முடியு' 2 'நந்தப்' 3 'பொருமொரு நாள்' 4 'திரிந்தமரா' (அ)

731. இன்னுயிர்க்கு அரசன் இன்னுயிர்: 687, குறிப். புகழ்கிற்பாம் யாம் போலும் - புகழவல்லவர் நாமா? வழங்கினவன் சிபி. 257, குறிப்.

(பி - ம்.) 1 'யிருநிலங்காத் தருளுடைய', 'யிருநிலங் காத்தவ ரென்று' 2 'கழலரசர் புகழையெவன் புகலுதும்யாம்' 3 'மேற்பறவை' 'மேற்புறவின்' (கு)

732. இடறு ஓட்ட என - இடரையுள்ள தடைகளைப் போக்க வென்று; யாகப்பசுவைப் பித்துக் கட்டித் தடைசெய்த அரசர்களை வெல்லுவதற்காக. இடறு - இடர் என்ற சொல்லின் வேரையுள்ளது. இடறு தலை ஓட்டவென்று பொருள் கூறுவாரும் உளர். நெடியவரை யுருட்டி - பெரிய மலைகளைப் பெயர்த்துப் போக்கி. திடல் தோட்டம் எனக் கிடந்தவகை திறம்ப; திடல் - மேட்டுநிலம் (காடு); தோட்டம் தோண்டித் தாழ்த்திய பள்ள நிலங்கள் (நாடு); திறம்ப - மாறுபட; அதாவது சகரர் தோண்டிய மேட்டு நிலங்கள் பள்ளமாகவும், பள்ளமாக உள்ளவை மண்குவியலால் மேடாகவும் மாறுபடும்படி என்பதாம். தோட்டல் - தோண்டுதல்; தொடி: பகுதி; துளைத்தலுமாம். இதன் முதனிலை தோள் என்பது; இதனைத் தோளாமொழி என்பதில் எதிர் மறைவினையால் அறியலாம். தெவ்வேந்தர் உடல் தோட்ட நெடுவேலாய் என்றது சனகனை. இங்கும் தோட்டல் துளைத்தலே. கடல் தோட்டார் - கடலைத் தோண்டினர். கடல் - கீழ்கடல்; 'குணஅது கரை பொரு தொடுகடற் குணக்கும்' (புறநா. சு: 3) என்பதும், 'கீழ்க்கண்ணது

பகீரதன்

733 தூநின்ற சுடர்வேலோ [1]யனந்தனுக்குஞ் சொல்லரிதே
யானின்று புகழ்ந்தேத்தற் கெளிதோவே டவிழ்கொன்றைப்
பூநின்ற [2]மவுலியையும் புக்களைந்த புனற்கங்கை
வானின்று கொணர்ந்தானு மிவர்குலத்தோர் மன்னவன்காண்.

நூறு வேள்வி செய்தவன்

734 கயற்கடல்சூ ழுலகெல்லாங் கைநெல்லிக் கனியாக்கி
இயற்கைநெறி முறையாலே யிந்திரற்கு மிடரியற்றி [ருவன்
முயற்கறையின் மதிக்குடையா யிவர்குலத்தோன் முன்னெ
செயற்கரிய பெருவேள்வி யொருநூறுஞ் செய்தமைத்தான்.

735 சந்திரனே வென்றருளு முருத்திரனைச் சாய்த்தானும்
[1]துந்துவெனுந் தானவனைச் சுடுசரத்தாற் றுணித்தானும்
வந்தகுலத் திடைவந்த ரகுவென்பான் [2]வரிசிலையால்
இந்திரனே வென்றுதிசை யிருநான்குஞ் [3]செலுத்தினன்.

கரையைப் பொருகின்ற சகரரால் தோண்டப்பட்ட சாகரத்தின் கிழக்கும்' என்னும் அதன் உரையும் ஈண்டு அறிதற் பாலன.

முடிபு: வேலாய்! இவர் குலத்தோர் ஓட்டவென உலகம் கிடந்த வகை திறம்பக் கடல் தோட்டா ரெனின் வேண்டுமோ.

(பி - ம்.) 1 'இடரோட்டியென' 2 'யிவ்வுலகின்' 3 'திடரோட்டு'' 'திடரோட்டியெனக்' 4 'வகைக்கிரங்கித்', 'தெனவிரித்தார்' (கo)

733. ஆயிரம் நாவைப் பெற்றிருத்தலின் அனந்தனுக்கும் சொல்லரிது என்றார்; அனந்தன் - ஆதிசேடன். மவுலி - சிவபெருமானது சடாமகுடம். கொணர்ந்தான் பகீரதன்.

(பி - ம்.) 1 'யனந்தனே சொல்லானேல்' 3 'சடைமௌலி மேற் பொலியும்' (கக)

734. கைநெல்லிக்கனி: கு. 6:70. இந்திரற்கும்; உம்மை: சிறப்பு. முயலென்று சொல்லப்படும் கறையில்லாத சந்திரன் குடைக்கு உவமை; மதியிலுள்ள மறுவை முயல் என்றல் கவி மரபு; சீவக. 254. நூறு வேள்வியும் செய்தவன் நகுஷன் என்பர்; நகுஷன் என்பான் சந்திர வமிசத்தவன் என்று பாரதம் கூறும். (கஉ)

735. சந்திரனே வென்றருள் - திலீபன். உருத்திரனைச் சாய்த்தவன் - பகீரதன். துந்து வென்னும் அசுரனைக் கொன்றவன் - துந்துமாரன். இவ்விவரம் கவித்தலம் துரைசாமி மூப்பனாரது கம்பராமாயண அருங்கவி விளக்கத்தில் உள்ளது.

(பி - ம்.) 1 'துந்துமியாந்' 2 'சிலைவலியால்' 3 'செருவென்றான்'

அஜமகாராஜன்

736 வில்லென்னு நெடுவரையால் வேந்தென்னுங் கடல்கலக்கி
எல்லென்னு மணிமுறுவ லிந்துமதி யெனுந்திருவை
அல்லென்னு மணிநிறத்த வரியென்ன வயனென்பான்
மல்லென்னுந் திரள்புயத்துக் கணியென்ன வைத்தனன்காண்.

கோசிகர் 'இராமலட்சுமணரின் சிறப்பை ஒருவாறு கூறுகிறேன்' என்றல்

737 அயன்புதல்வன் றயரதனே யறியாதா ரில்லையவன்
பயந்தகுலக் குமரரிவர் தமையுள்ள பரிசெல்லாம்
நயந்துரைத்துக் கரையேற ஞன்முகற்கு [1] மரிதாம்பல்
இயைந்துவைத்த கடைத்தலையா யானறிந்த படிகேளாய்.

தசரதன் மகப் பேறின்றி வருந்துதல்

738 துனியின்றி யுயிர்செல்லச் சுடராழிப் படைவெய்யோன்
பனிவென்ற படியென்னப் பகைவென்று படிகாப்போன்
தனுவன்றித் துணையில்லான் றருமத்தின் கவசத்தான்
மனுவென்ற நீதியான் மகவின்றி [1] வருந்துவான்.

கலைக்கோட்டு முனிவரைக் கொண்டு அவன் மகப்பேறடைய நினைத்தல்

739 சிலைக்கோட்டு நுதற்குதலைச் செங்கனிவாய்க் கருநெடுங்கண்
விலைக்கோட்டும் பேரல்குன் மின்னுடங்கு மிடையாரை
முலைக்கோட்டு [1] விலங்கென்று தொடர்ந்தணுகி முன்வந்த
கலைக்கோட்டுப் பெயர்முனியாற் றுயர்நீங்கக் கருதினான்.

---

736. எல்லென்னும் மணிமுறுவல்; எல் - ஒளி. மணி - முத்து. அரியென்ன - பாற்கடலை மந்தர மலையாற் கலக்கித் திருமகளை யடைந்து அவளை மார்பில் அணிந்த திருமாலைப் போல. (கச)

737. தசரதன் நிகழ்காலத்து மன்னனுதல் பற்றி அவன் சம்பரனைக் கொன்றது முதலிய வீரச்செயல்களைக் கோசிகர் கூறுமல், 'தயரதனை யறியாதாரில்லை' என்று கூறினர். இயம் - மும்முரசுகள். இயந் துவைத்த கடைத்தலையாய்: 'முறை செய்து கடைத் தலையான்' 336.

(பி - ம்.) 1 'மறி வரிதால்', 'மரிதாகுமியந்' (கடு)

738. துனி - வெறுப்பு. ஆழிப்படை - ஆஞ்ஞாசக்கரத்தால். படி - உலகம். தருமத்தின் கவசத்தான்: 'தனியறத்தின்னுயே' (உ. 12:60.)

(பி - ம்.) 1 'வருந்து நாள்' (கசு)

739. கோட்டெநுதல் - வளைந்த நெற்றி. விலைக்கு ஓட்டும்...இடையார் என்றது வேசையரை. முலைக்கோட்டு விலங்கு - முலைகளாகிய கொம்புகளை யுடைய விலங்கு. மனிதரை விலங்கென்று உன்னும் முனி: 226, குறிப்.

(பி - ம்.) 1 'விலங்கென்றங் குடனணுகி முன்னின்ற' (கஎ)

கலைக்கோட்டு முனிவரை அவன் வேண்டிக் கோள்ளல்

740 தார்காத்த நறுங்குஞ்சித் [1] தனயர்களென் றவமின்மை
வார்காத்த வனமுலையார் [2] மணிவயிறு வாய்த்திலரால்
நீர்காத்த கடல் [3] புடைசூழ் நிலங்காத்தே னென்னிற்பின்
பார்காத்தற் குரியாரைப் பணிநீயென் றடிப்பணிந்தான்.

முனிவர் உடன்பட்டு வேள்விக்குச் சித்தம் செய்யச் சொல்லல்

741 அவ்வுரைகேட் டம்முனியு மருள்சுரந்த வுவகையினால்
இவ்வுலக [1] மன்றியுமற் றேழுலகு மினிதளிக்கும்
செவ்வி [2] யிளஞ் சிறுவர்களைத் தருகின்றே னினித்தேவர்
வவ்வினுகர் பெருவேள்விக் குரியவெலாம் வருகென்றான்.

வேள்வியில் அமுது எழுதல்

742 காதலரைத் தருவேள்விக் குரியவெலாங் கடிதமைப்ப
மாதவரிற் பெரியோனு மற்றதனை முற்றுவித்தான்
சோதிமணிப் பொற்கலத்திற் சுதையனைய வெண்சோறூர்
பூதகணத் தரசேந்தி யனனின்றும் புறப்பட்ட.

தசரதன் அமுதை மனைவியர் மூவருக்கும் வழங்கல்

743 பொன்னின்மணிப் பரிகலத்திற் புறப்பட்ட வின்னமுதைப்
பன்னுமறைப் [1] பொருடேர்ந்த பெரியோன்றன் பணியினால்
தன்னனைய நிறைகுணத்துத் தயரதனும் [2] முறையாலே
நன்னுதலார் மூவருக்கு நாலுகூ றிட்டளித்தான்.

---

740. குஞ்சி - ஆண்களது மயிர்முடி. வார் - கச்சு. வனம் - அழகு. தவமின்மை - முற்பிறப்பிற் செய்த தவம் இல்லாமையினால். மணிவயிறு வாய்த்திலரால். 'மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே' (பெருமாள் திருமொழி: 8: 1.) என்னிற்பின் - எனக்குப்பின்.

(பி - ம்.) 1 'தயரதன்றன் றகைமைந்தர்' 2 'மணிவயிற்றில் வந்திலரால்', 'வயிற்றகத்து' 3 'காத்த நிலம்' (கஅ)

741. செவ்வி - அழகு. ஒப்பு: 275.

(பி - ம்.) 1 'மன்றியே யெவ்வுலகுங் காத்தளிக்கும்' 2- 'யிளங்குரிசிலரைத்' (கக)

742. பொற்கலம்: 279 'தப்தஜாம்பூநதமயீம்' என்பர் வான்மீகி. சுதை - அமிர்தம். புறப்பட்ட - புறப்பட்டது; தொகுத்தல் விகாரம்.

(பி - ம்.) 1 'சோதிநிறப் பரிகலத்துச்' (உ0)

743. தன் அனைய - தனக்குத்தானே ஒப்பான.

(பி - ம்.) 1 'பொருடெரிந்த', 'பொருளறிந்து பற்றறுத்த முனி பணியால்' 2 'வரன்முறையால்', 'தகைமுறையால்', 'தனக்குரிய' (உக)

இராமன் அவதரித்தல்

744 [1] விரிந்தகொடு வினைசெய்த வெவ்வியதீ வினையாலும்
அருங்கடையின் [2] மறையறைந்த வருள்பெருகு மறத்தாலும்
இருங்கடகக் கரதலத்திவ் வெழுதரிய திருமேனிக்
கருங்கடலைச் செங்கனிவாய்க் கவுசலையென் பாள்பயந்தாள்.

பரதன் அவதாரம்

745 தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளமெனுந் தகையானைப் பரதனெனும் பெயரானை
எள்ளரிய குணத்தாலு மெழிலாலு மிவ்விருந்த
வள்ளலையே யனையானைக் கேகயர்கோன் மகள்பயந்தாள்.

இலக்குவன் சத்துருக்கன் அவதாரம்

746 அருவலிய திறலினரா யறங்கெடுக்கு மடலரக்கர்
வெருவருதிண் [1] டிறலாரை வில்லேந்தி வருமேருப்
பருவரையு நெடுவெள்ளிப் பருப்பதமும் போல்வார்கள்
இருவரையு [2] மிவ்விருவர்க் கினையாளு மீன்றெடுத்தாள்.

---

744. கொடுவினை செய்ததீவினை : 'தவஞ்செயத் தவஞ்செய்த தவனென்கின்றுள்', 'தவஞ்செய்த தவமாந் தையல்' (சூ-ர: 18, இ. 15:64) போன்றது. கடையில் மறை - முடிவில்லாத வேதம். எழுதரிய திருமேனி : 779; 'ஓவியத்தெழுத வொண்ணு வுருவத்தாய்' (சு. 5:78.); பின் பரதனையும் 'தீட்டரு மேனி மைந்தன்' என்பர் ; உ. 11 : 34.

(பி - ம்.) 1 'விரிந்திடுதீ வினைபெயர மெய்ம்மை செய்தல்' 2 'மறை தெரிந்த வறஞ்செய்த வறத்தாலும்', 'மறையறிந்த யறஞ்செய்த தவத்தாலும்'

745. மண்டும்.....பள்ளம் - கடல். பள்ளத்திற் செல்லும் புனல் பரதனுக்கு : 'பள்ளநீர் வெள்ள மன்ன பரதனை' (உ. 12 : 118) இவ்விருந்த - இங்கே இருந்த ; 'இந்நின்ற குரிசில்', 'இந்நின்றுன்' (உ. 11 : 66, 70.) வள்ளலையே அனையான் : 320; 'நம்பியுமென் னுயகனை யொக்கின்றுன்' (உ. 11 : 30.)

(உங)

746. இலக்குமணன் பொன்னிறம் ஆதல்பற்றி மேருமலையும்' சத்துருக்கன் வெள்ளிநிற மாதல் பற்றி வெள்ளிமலையும் உவமையாயின ; 312, 323. இலக்குவற்கு வில்லொடு கூடிய வடவரை : 'விற்கை வட வரை பாங்கு நிற்ப' (சூ. 4 : 132.)

(பி - ம்.) 1 'டிறலார்கள் வில்லேந்து மெனிற்செம்பொன்மேருவெ னும்' 2 'மிருவர்க்கங்', 'மற்றிருவர்க்'

(உச)

திருக்குமரர் நால்வரும் வளர்ந்தமை

747 [1]கலையாயும் பேருணர்விற் [2]கலைமகட்குந் தலைவராய்ச்
சிலையாயுந் தனுவேதந் தெவ்வரைப்போற் பணிசெய்யக்
கலையாழிக் கதிர்த்திங்க ளுதயத்திற் கலித்தோங்கும்
அலையாழி யெனவளர்ந்தார் மறைநான்கு மணையார்கள்.

வசிட்டர் வளர்த்த சிறப்பு

748 திறையோடு மரசிறைஞ்சுஞ்
செறிகழற்காற் றசரதனும்
பொறையோடுந் தொடர் மனத்தான்
[1]புதல்வரெனும் பெயரேகாண்
உறையோடு நெடுவேலா
யுபநயன விதிமுடித்து
மறை[2]யோது வித்திவரை
வளர்த்தானும் வசிட்டன்காண்.

தாடகை வதம்

749 ஈங்கிவரா லெண்வேள்விக் கிடையூறு கடிதியற்றும்
தீங்குடைய கொடியோரைக் கொல்விக்குஞ் சிந்தையனுய்ப்
[1]பூங்கழலா யுடன்கொண்டு வனம்புக்கேன் புகாமுன்னம்
தாங்கரிய பேராற்றற் றுடகையே தலைப்பட்டாள்.

---

747 சிலை - வில்லை; 'சிலையிராமன்' ஆதலின் அதனைக் கூறினர். தனுர்வேதம் பணிசெய்தல் : 426, 752. கலை ஆழிக் கதிர்த் திங்கள் - கலைகளோடு கூடிய வட்ட வடிவினதான, கிரணங்களையுடைய சந்திரன். திங்களைக் கண்டு கடல் கலித் தோங்கல் (882); 'தண்ணென் கதிர் வரவாற் பொங்குங் கடல்' (நன்னெறி, 18.) நால்வர்க்கும் நான்மறை : 315, குறிப்.

(பி - மி.) [1]'தலையாய' [2]'தரை மகட்குத்' (உடு)

748 திறை - கப்பம். அரசு - சிற்றரசர். உறையோடும்வேல் : 187, குறிப்.

(பி - மி.) [1]'புதல்வர்க்குப் பெயர் மொழிந்தே' [2]'யோடு வித்தவரை' (உசு)

749 (பி - மி.) [1]பூங்கழலாய் கொண்டுபோய்', 'பூங்கழலார்தமைக் கொடுபோய்' (உஎ)

750 அலையுருவக் கடலுருவத் தாண்டகைதன் னீண்டுயர்ந்த
நிலையுருவப் புயவலியை நீயுருவ நோக்கையா
உலையுருவக் கனலுமிழ்கட் டாடகைதன் னுரமுருவி
மலையுருவி [1]வானுருவி மண்ணுருவிற் றொருவாளி.

இராமபிரான் சுபாகு மாரீசருடன் செய்த போர்

751 செக்கர்நிறத் தெரிகுஞ்சிச் சிரக்குவைகள் பொருப்பென்ன
உக்கனவோ முடிவில்லை யோரம்பி [1]னொடுமரக்கி
மக்களிலங் கொருவன்போய் வான்புக்கான் மற்றையவன்
புக்கவிட மறிந்திலேன் போந்தனனென் வினைமுடித்தே.

கோசிகர் வழங்கிய படைகள் பணியாற்றுதல்

752 [1]ஆய்ந்தோர்க்கு முணர்வரிய வயற்கேயு மறிவரிய
காய்ந்தேவி னுலகனைத்துங் கடலோடு மலையோடும்
தீய்ந்தேறச் சுடுகிற்கும் படைக்கலங்கள் செய்தவத்தால்
ஈய்ந்தேனு மனமுட்க விவற்கேவல் செய்குனவால்.

---

750 அலை உருவு - அலைகள் தோன்றுகின்ற. அக்கடல் - அத்தன்மைத் தாகிய கடல். உருவத்து ஆண்டகை; உருவம் - நிறம். நிலை - உறுதி. உருவப்புயம் - அழகிய தோள். உருவ நோக்குதல்-நன்றாகப் பார்வை படும்படி நோக்குதல். கண்ணுக்கு உலை உவமை. உலை போல உமிழும். உருவக் கனல் - அச்சந் தரும் தீ. வாளி - அம்பு. இராமனது வின்மையை இக்கவி குறிக்கும். ஓரம்பு பலவற்றை ஊடுருவிச் செல்லும்படி அம்பெய்யும் வில்வல்வில்; 775, குறிப்; குறுந். கoo, ஒப்புமைப்; 'தாதையைத் தம்முனைத் தம்பியைத் தனிக் காதலைப் பெயரனை மருகனைக் களத் தூதையி னொருகணை யுருவ மாண்டனர்' (சூ. 17:117); புறநா. கருஉ: 1-6; யா. கா. 11, மேற். 'வல்வி லிராமனிடம்' (பெரிய திரு. 5 : 1 : 4.) 'மறித்தோடிற்று' என்ற பாடத்துக்கு அந்த அம்பு மீட்டும் இராமர் பால் வந்தடைந்தது என்பது பொருள்.

(பி - ம்.) [1]'மரனுருவி', 'மண்ணுருவி மறித்தோடிற்' (உஅ)

751 சிரக்குவைகள் பொருப் பென்ன உக்கன : 474. வான் புக்கவன் சுபாகு.

(பி - ம்.) [1]'னரக்கிபெறு' (உகூ)

752 அரிய : முற்று. அயற்கு - நான்முகனுக்கு. காய்ந்து ஏவின் - சினந்து செலுத்தினால். உட்க - நாண. படைகள் ஏவல் செய்தன : 426, 747.

(பி - ம்.) [1]'ஆய்ந்தேற வுணரைய' (௩௦)

அகலிகை சாப விமோசனம்

753 கோதமன்றன் பன்னிக்கு
முன்னியுருக் கொடுத்தவன்
[1]போதுவென்ற தெனப்பொலிந்த
பொலங்கழற்காற் பொடிகண்டாய்
காதலென்ற னுயிர்மேலு
மிக்கரியோன் பாலுண்டால்
சதிவன்றன் வரலாறும்
புயவலியு மெனவுரைத்தான்.

---

753 பன்னி - பத்தினி. புயவலி : 116, குறிப்.

சில பிரதிகளில் இச்செய்யுள் கீழ்வருமாறு காணப்படுகிறது:

'கோதமன்றன் மனைக்கிழத்திக்
குரைத்தகொடுஞ் சாபமெனும்
ஓதருங்கல் லுருத்தவிர்த்து
முன்னியுருக் கொத்தவன்
பாதமிசைத் துவண்டெழுந்த
பசும்பொடிமற் றதுகண்டாய்
சதிவன்ற னருள்வடிவும்
வரலாறு மெனவுரைத்தான்.

(பி-ம்.) [1]போதுநின்ற' (கூ.க)

குலமுறை கிளத்து படலம் முற்றும்.

12 கார்முகப் படலம்

இராமன் வில்வளைத்தால் என்துன்பம் நீங்கும் என்று சனகன் கூறுதல்

754 [1]மாற்றம்யா துரைப்பது மாய விற்குநான்
தோற்றவா றெனமனந் துளங்கு கின்றதால்
நோற்றன ணங்கையு நொய்தி னியன்வில்
ஏற்றுமே லிடர்க்கட லேற்று மென்றனன்.

சனகன் வில்லைக் கோணரக் கட்டளையிடல்

755 என்றன னென்றுதன் னெதிர்நின் றுரையக்
குன்றுறழ் வரிசிலை கொணர்மி னீண்டென
நன்றென வணங்கினர் நால்வ ரோடினர்
பொன்றிணி கார்முகச் சாலை புக்கனர்.

சனகன் கட்டளையை நால்வர் மற்றவர்களுக்கு அறிவித்தல்

756 புக்கன ரவர்களைப் பொருந்த நோக்கியிம்
முக்கணன் வில்லினை மொய்ம்பி னூற்றலோ
டிக்கணத் தளித்திரென் றெம்மை யாளுடை
மிக்குறு சனகனும் விளம்பி னனென்றார்.

---

754 மாற்றம் யாது உரைப்பது: இராமபிரானது குலப்பெருமை முதலியவற்றைக் கேட்டதனால் சனகன் சீதைக்கு இராமபிரானே எவ்வகையிலும் ஏற்றவன் என்பதைக் கொண்டும் பரமசிவனது வில்லைத் தான் கன்யா சுல்கமாக வைத்திருப்பது நினைந்தும் இங்ஙனம் கூறினன். துளங்குகின்றது - சஞ்சலப் படுகின்றது. நோற்றனள் - முன்பிறப்பில் தவம் செய்தனள் ஆவள். நொய்தின் - விரைவில். 'ஏற்றுமேல் நோற்றனள்; இடர்க்கடல் ஏற்றும்' என்று கூட்டுக. இடர்க்கடல் ஏற்றல்: 'கங்கை யாற்றினேற்றினையாயி னெம்மை; வெவ்விடர்க் கடலினின் றேற்றி வேந்தன்பால் விடுத்த தென்றான்' (2. 11:44.)

(பீ - மீ.) [1]'மாற்றமா துரைப்பது', 'மாற்றம் யாமுரைப்பதென்' (க)

755 என்று - உடன்பட்டு; 'வில்லுங்காண்பார் (724) என்று சோசிகர் சொன்னதை மேற்கொண்டு அதனைக்கொணர உடன்பட்டு. உறழ்-போன்ற. பொன்திணி: வில்லுக்கு அடை. (உ)

756 புக்கனர் - புகுந்த நால்வர். அவர்களை - அங்கேயிருந்த எவலாளரை. மொய்ம்பு - வலிமை. ஆற்றல் - திறமை. அளித்திர் - கொண்டு வாருங்கள். மிக்குறு - மேம்பாட்டையுடைய.

ஆழ்வார் திருநகரிப் பிரதிகள் எல்லாவற்றிலும், ஐயரவர்களது கைப் பிரதியிலும் இச்செய்யுள் காணப்படுகிறது. இக்கவி இல்லையேல் மேற்செய்

அறுபதினாயிரவர் வில்லைக் கொணர்தல்

757 உறுவலி [1]யானையை யொத்த [2]மேனியர்
செறிமயிர்க் கல்லெனத் திரண்ட தோளினர்
அறுபதி னாயிர ராவி லாற்றலர்
தறிமடுத் திடையிடை தண்டிற் றுங்கினர்.

758 நெடுநில மகண்முது காற்ற நின்றுயர்
தடநிமிர் வடவரை தானு நாணுற
இடமிலை யுலகென வந்த தெங்கணும்
கடல்புரை திருநக ரிரைத்துக் காணவே.

கண்டார் கூற்று

759 சங்கொடு சக்கரந் தரித்த [1]செங்கையச்
[2]சிங்கவே றல்லனே லிதனைத் தீண்டுவான்
எங்குள னொருவனின் றேற்றி னிச்சிலை
மங்கைதன் [3]றீருமணம் வாழுமா லென்பார்.

யுளுக்கும் அடுத்த செய்யுளுக்கும் தொடர்பு இல்லாது போதல் கூடும். சில பிரதிகளில் இது,

'புக்கனர் சனகர்கோன் பொருவி னீர்கடாம்
ஒக்கவே வில்லினை யுரத் தடுத்தெடுத்
திக்கணத் தெய்துவி ரென்ற னன்னென
மிக்கபே ரவ்வுரை விளம்பி ஞரோ'

என்று காணப்படுகிறது. (கூ)

757 உறுவலி - மிக்க பலத்தையுடைய. கல் - மலை. செறிமயிர்த் தோளினர்; திரண்டதோளினர் என்க. தோளில் மயிர் செறிந்திருப்பது வீரத்துக்கு அழகு. மடித்து - கொடித்து. தண்டு - வில்லைத்தாங்கி நிற்கும் குறுக்குக் கொம்புகள்; பல்லக்கின் தண்டைப் போன்றது. தண்டினை ஒரு தோளிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றிக் கொள்ளும்போது அதனை முட்டுக் கொடுத்து நிறுத்தப் பயன்படுவது தறி.

எட்டுச் சக்கரங்கள் பூட்டிய எஃகுப் பேழையொன்றில் வில் இருந்த தென்றும் அதனை ஐயாயிரவர் இழுத்து வந்தனரென்றும் வான்மீகம் கூறும். (பி - ம்.) [1]'யனைவரு' [2]'காட்சியர்' (சு)

758 முதுகு ஆற்ற - நெடுநாள் தாங்கியிருந்த வலியை ஆற்றிக் கொள்ள. ஆற்றிக்கொள்ளும்படி நின்றது மேருமலை. முதுகாற்றல்: 65; உ. 12: 34. மேலே 'நிலமுது குளுக்கி' (764) என்பர். தட - பெருமை. செல்வமிகுதிக்கும் இரைச்சலுக்கும் பரப்புக்கும் கடல் நகருக்கு உவமை: 791. (டு)

759 செங்கை - சிவந்த கைகளையுடைய. சங்கொடு.....சிங்கவேறு - திருமால்; சங்கரேகையும் சக்கரரேகையுமுடைய இராமர் என்பாரும் உளர்: 'சங்கு சக்கரக்குறியுள தடக்கையிற் முளில்' (சு. 2: 117.) வாழும்-மகிழும்.

760 கைதவந் [1]தனுவெனல் கனகக் குன்மென்பார்
செய்ததத் திசைமுகன் றீண்டி யன்றுதன்
மொய்தவப் பெருமையின் முயற்சி யாலென்பார்
எய்தவன் யாவனே வேற்றிப் பண்டென்பார்.

761 திண்ணெடு மேருவைத் திரட்டிற் றேவென்பார்
அண்ணல்வா ளரவினுக் கரச னேவென்பார்
வண்ணவான் கடல்பண்டு கடைந்த மத்தென்பார்
விண்ணிடு நெடியவில் வீழ்ந்த தோவென்பார்.

762 என்னிது கொணர்கவென் றியம்பி னனென்பார்
மன்னவ ருளர்கொலோ மதிகெட் டாரென்பார்
[1]முன்னையூழ் வினையிலன் முடிக்க லாமென்பார்
கன்னியு மிச்சிலை காணு மோவென்பார்.

763 இச்சிலை [1]யுதைத்தகோற் கிலக்கம் யாதென்பார்
நச்சிலை நங்கைமே னாட்டும் வேந்தென்பார்
நிச்சய மெடுக்குங்கொ னேமி யானென்பார்
சிற்சிலர் விதிசெய்த தீமை யாமென்பார்.

(பி - மீ.) [1]'செங்கைய', 'கையுடைச்' [2]'துங்கமக லன்றிமற்றதனைத் தூண்டுவென்' [3]'திருமனம்' (சு)

760 கைதவம் - வஞ்சனை. திசைமுகன் – பிரமன். வில் பிரமன் செய்தது: 1377. அத்திசைமுகன் கையிலுள் தீண்டிச் செய்ததன்று, தவப்பெருமையின் முயற்சியால் செய்தது. ஏற்றி - நாணேற்றி. சில பிரதிகளில் ஈற்றடி இரண்டாமடியாக உள்ளது.

(பி - மீ.) [1]'தனுவல' (எ)

761 வில்லுக்குப் பாம்பு உவமை: 'அரவுறழஞ்சிலை' (குறிஞ்சி. 158); 'விடுபொறி யரவென விளங்கு வெஞ்சிலை', 'அரவின் றோற்றமே போலுஞ் சிலை' (சீவக. 1850, 2158.) வில் - இந்திரவில். (அ)

762 சனகனைப் போல் மதிகெட்டார். 'சீதைக்கு மணம் நிறைவேற வேண்டும் என்றவிதி வலிமை இருப்பின் இதனை ஒருவன் வளைக்கலாம்' என்பது மூன்றாமடியின் கருத்து. சிலையைக்காணலாவது அதனை வளைத்தலைக் காணுதல்.

(பி - மீ.) [1]'முன்னைய விதியினல்' (க)

763 கோல் - அம்பு. நச்சிலை - பொருந்திய வில்; ந - பெருமை; நக்கீரர், நச்செள்ளையார் என்பவற்றுள் உள்ள நகரம் போன்றது: நாட்டும் - கன்யாசுல்கமாக நாட்டும். 'திருமாலைப் போன்ற இராமர் இதனை எடுப்பாரா' என்றும் பொருள் கூறுவர்.

(பி - மீ.) [1]'யுகைத்த' (கo)

சனகன் சபைக்கு வில் வந்தமை

764 மொய்த்தன ரின்னண மொழிய மன்னன்முன்
உய்த்தனர் நிலமுது குளுக்கிக் கீழுற
வைத்தனர் [1]வாங்கினர் யாவ ரோவெனக்
கைத்தலம் விதிர்த்தனர் கண்ட வேந்தரே.

சதானந்தர் வில்லின் வரலாற்றைக் கூறல்

765 போதக மனையவன் பொலிவு நோக்கியவ்
வேதனை தருகின்ற வில்லை நோக்கித்தன்
மாதினை நோக்குவான் மனத்தை நோக்கிய
கோதமன் காதலன் கூறன் மேயினான்.

766 இமையவில் வாங்கிய வீசன் பங்குறை
உமையினை யிகழ்ந்தன னென்ன வோங்கிய
கமையறு [1]சினத்தனிக் கார்மு கங்கொளாச்
சமையுறு [2]தக்கனூர் வேள்வி சாரவே.

---

764 மொய்த்தனர் - திரண்டு நின்றவர்கள். உளுக்கி - வலிபொருமல் வெளிந்து; 'விண்முது குளுக்கவும்' (உ. 12:34); 'உவத்தவன் கழுதுயிர் சுமந்துள்க்கிய தும்பர்' (கூ. 6:87); 'நிலமுது குளுக்கு நீ' (பாகவத. 544.) கீழுறல் - கிழிந்து போதல். வாங்கினர் - மூன்பு வளைத்தவர்.

(பீ - மீ.) [1]'வாங்குநர்' (கக)

765 போதகம் - யானைக்கன்று. போதக மனையவன் - இராமன். பொலிவு - அழகு. சனகன் அழகுள்ள இராமனைத் தான் நினைத்தபடி சீதைக்கு மணஞ்செய்து கொடுப்பதற்குத் தடையாக உள்ளது அவ்வில் ஆதலால் 'வேதனை தருகின்ற வில்' என்றார். மாதினை நோக்குவான்; இங்கே நோக்குதல் நோக்கல் நோக்கம்; மனத்தால் நோக்குதல். இராமருக்குப் பொலிவு வில்லைக் கண்டதால் ஏற்பட்டதென்று கொண்டு, 'போதக மனையவன் பொலிவு நோக்கிக் கோதமன் காதலன் கூறன் மேயினான்' என்று கூறுவாருமுளர். கூறினது கோசிகரிடம்; 769, 773. (கஉ)

766 இமையவில் வாங்கிய ஈசன்: 'செவ்விடைப் பாகன் திரிபுரஞ் செற்றுழிக், கல்லுயர் சென்னி யிமையவிலுணுகி' (பரி. திரட்டு. க:76-7); 'இமையவில் வாங்கிய வீர்ஞ்சடை யந்தணன்' (கலி. கூ. 8:1.) மேரு, இமயம், மந்தரம் இம்மூன்றையும் வேறு பாடின்றிக் கூறுவதுண்டு. 'இமய நாட்டரவு சுற்றி, அத்தலையறை முந்நீர் கடைந்தவர்' (சீவக. 963); 'மந்தர, வில்லி னந்தணன் விட்ட, தீவாயம்பு' (பெருங். க. 43 : 120 - 21.) ஈசன்: எழுவாய். கமை = கூமை - பொறுமை, சமை - அழிதல்; தக்க. சங்காரக் கதை : 825.

(பீ - மீ.) [1]'நுதல்விழி' [2]'தக்கனல்' (கஙு)

767 உக்கன பல்லொடு [1]காங்கள் வீழ்ந்தன
புக்கனர் வானவர் புகாத சூழல்கள்
தக்கனல் வேள்வியிற் றழலு [2]மாறின
முக்கணெண் டோளவன் முனிவு மாறினன்.

சனகனுடைய முன்னோரில் ஒருவனுக்குச்
சிவபெருமான் அவ்வில்லைக் கொடுத்தமை

768 தாளுடை வரிசிலை சம்பு வும்பர்தம்
நாளுடை மையினவர் நடுக்க நோக்கியிக்
கோளுடை விடையனன் குலத்துட் டோன்றிய
வாளுடை யுழவனொர் மன்னன்பால் வைத்தான்.

சீதையின் வரலாற்றையும் கேளுங்கள் என்று
சதானந்தர் கோசிகருக்குக் கூறுதல்

769 கார்முக வலியையான் கழறல் வேண்டுமோ
வார்சடை யானிகர் வரத நீயலால்
யாருள ரறிபவ [1]ரிவற்குத் தோன்றிய
தேர்முக வல்குலாள் செவ்வி கேளெனா.

---

767 உக்கன - சிந்தினவான; வினையாலணையும் பெயர். பல்லுக்கது சூரியனுக்கு. காங்கள் வீழ்ந்தது அக்கினிக்கு. யாக குண்டங்கள் பலவாதல் பற்றி, 'தழலு மாறின' என்றார். இந்த வில்லால் சிவபிரான் தக்கன் வேள்வியை அழித்ததாக 75-ஆம் சருக்கத்திலும் முப்புரங்களை அழித்ததாக 75-ஆம் சருக்கத்திலும் பின்னே வான்மீகம் கூறும்.

(பி - மீ.) [1]'கதிர்களோடினர்', 'காங்கள் வீழ்ந்தனர்' [2]'மாய்ந்தன' (கஉ)

768 தாள் - வில்லின் மூனை; மேலே 'கால்' என்பர்; 782, 785. கோள் - வலிமை. விடையனன் - காளை போன்றவன்; சனகன். வாளுடை யுழவன்: 'வாளேருழவ' (புறநா. 368 : 13); 'வில்லே ருழவர்' (குறள், 882) 'அஞ்சுவருதானை.....கடையாவிடர்' (பு. வெ. 159.) மன்னன் - தேவராதன் என்பவன். சிவபெருமான் அந்த வில்லைத் தேவரிடம் சேர்ப்பிக்க அவர்கள் சனகனுடைய முன்னோரில் தேவராதன் என்பவனுக்குக் கொடுத்தார்கள் என்பது வான்மீகம்; சருக்கம். 66. சிவபெருமான் அதைத் தேவர்கோன் கையிற் கொடுத்தமை : 1381. (கடு)

769 கழறல் - கூறல். வரதன் - விசுவாமித்திரர். தேர்முகம் - தேர்த் தட்டு. செவ்வி - நிலை.

(பி - மீ.) [1]'ரதற்குத்' (கக)

வேறு

சனகன் நிலம் உழுதது

770 இரும்பனைய கருநெடுங்கோட்
டிணையேற்றின் பணையேற்ற
பெரும்பியலிற் பளிக்குதுகம்
பிணைத்ததனை டணைத்தீர்க்கும்
வரம்பின்மணிப் பொற்கலப்பை
வயிரத்தின் கொழுமடுத்திட்
டுரம்பொருவி [1]னிலமகளை
யலகில்பல சாலுழுதேம்.

771 உழுகின்ற கொழுமுகத்தி
னுதிக்கின்ற [1]கதிரினொளி
பொழிகின்ற புவிமடந்தை
[2]திருவெளிப்பட் டெனப்புணரி
எழுகின்ற தெள்ளமுதோ
டெழுந்தவளு [3]மிழிந்தொ துங்கித்
தொழுகின்ற நன்னலத்துப்
[4]பெண்ணரசி தோன்றினாள்.

சீதா பிராட்டியின் ஏற்றம்

772 குணங்களையென் கூறுவது
கொம்பினைச்சேர்ந் தவையுய்யப்
பிணங்குவன வழகிவளைத்
தவஞ்செய்து பெற்றதுகாண்
கணங்குழையா ளெழுந்ததற்பின்
கதிர்வானிற் கங்கையெனும்
அணங்கிழியப் பொலிவிழந்த
வாறெத்தார் வேறுற்றார்.

---

770 இரும்பனைய .....ஏறு-எருமைக்கடா; 'இரும்பியன் றண்ணகருங் கோட்டெருமை' (அகநா. 56: 3.) பணை ஏற்ற - பருமையான. பியல் - பிடரி. உரம் - பொறுமையாகிய வன்மை; 'வன்மையுள் வன்மைமடவார்ப் பொறை' (குறள், 153.)

(பி - மீ.) [1]'னிலம் வேள்விக் கலகில்' (கஎ)

771 புவிமடந்தை திரு - பூமி தேவியின் செல்வம்.

(பி - மீ.) [1]'கதிரொளி போல்' [2]'யுருவெளிப்' [3]'மிழிந்தொதுங்க' [4]'பெண்ணமுது' (கஅ)

772 கொம்பு - பூங்கொம்பு போன்ற சீதை. குணங்கள் சீதையைச் சார்வதற்குப் பிணங்குகின்றன. அழகு இவளைத் தவஞ்செய்து பெற்றது;

புவிமன்னர்கள் சீதையை மணம் பேசிவரல்

773 சித்திரமிங் [1]கிது வொப்ப
தெங்குண்டு செய்வினையால்
வித்தகமும் விதிவசமும்
வெவ்வேறே புறங்கிடப்ப
அத்திருவை யமரர்குல
[2]மாதரித்த தெனவறிஞ
இத்திருவை நிலவேந்த
[3]ரெல்லாரு மாதரித்தார்.

இவ்வில்லை வளைத்தவனே சீதைக்குரியவ னென்று சனகன் தீர்மானித்தல்

774 கலித்தானைக் கடலோடுங்
கைத்தானக் களிற்றரசர்
[1]ஒலித்தாளி யெனவந்து
[2]மணமொழிந்தார்க் [3]கெதிருருத்த

புலித்தானைக் களிற்றுரிவைப்
போர்வையான் [4]போர்வில்லை
வலித்தானை மங்கைதிரு
மணத்தானென் றியாம்வலித்தேம்.

601, 1225; 'தவஞ் செய்த தவமாந்தையல்' (ரு, 15: 64.) ஆறு - மற்ற ஆறுகள். வேறுற்றூர் - வேறுமகளிர். (கக)

773 சித்திரம் - ஆச்சரியமானது. வித்தகம் - திறமை. செய்வினையால் - முன்செய்த நல்வினையால். அத்திரு - இலக்குமி. ஆதரித்தது - விரும்பியது. அறிஞ: விளி.

(பி - மீ.) [1]'இதுவென்னத் தேக்குண்டு' [2]'மாதரித்தாரெனத் துலங்கும்' [3]'ரெல்லோருங்காதலித்தார்' (உ0)

774 கலிதானை கடல் - ஆரவாரத்தையுடைய சேனைக்கடல். கைதானக் களிறு - கையையும் மதத்தையுமுடைய ஆண்யானை. ஒலித்து - ஆரவாரித்து. ஆளி - ஒருவிலங்கு. வலித்தானை - வளைத்தவனை. வலித்தல் - நிச்சயித்தல்.

(பி - மீ.) [1]'ஒலித்தாழி' [2]'மகண்மொழிந்தார்க்' [3]'ரெதிருருத்த' [4]'வரிசிலையை' (உக)

வளைக்கும் செயலற்ற மன்னர்கள் போர் செய்யத் தொடங்கல்

775 வல்வில்லுக் காற்றூர்கண்
மாரவேள் வளைகரும்பின்
மெல்வில்லுக் காற்றூர்கள்
தாமெம்மை விளிகுற்றூர்
கல்வில்லோ [1]டுலகளித்த
கனங்குழையைக் காதலித்துச்
[2]சொல்வில்லா லுலகளிப்பாய்
போர்செய்யத் தொடங்கினர்.

எதிர்த்து வந்தார் செயல் பயனற்றுப் போனமை

776 இம்மன்னன் பெருஞ்சேனை
யீவதனை மேற்கொண்ட
செம்மன்னர் [1]புகழ்வேட்ட
பொருளேபோற் றேய்ந்ததால்
பொம்மென்ன வண்டலம்பும்
புரிகுழலைக் காதலித்த
அம்மன்னர் சேனைதம
தாசைபோ லாயினவால்.

---

775 வல்வில்; 750, குறிப்; 781. விளிகுற்றூர் - கெடுதலுற்றாராய். அழைத்தது போருக்கு. உலகளித்த - பூமிதேவி பெற்ற. சொல் வில்லால் உலகளிப்பான் - கோசிகமுனிவர்; 'சொல்லேருழவர்' (குறள், 882.) 'கல்வில்லோடு போர் செயத் தொடங்கினர்' என்று கூட்டுக. 'கல்வில்லோடுடன் கலந்த கனங்குழையை' என்று பாடங்கொண்டு, 'இமயவில்லோடு தொடர்பு பெற்ற சீதையை' என்று பொருள் கூறுவாரு முளர்.

(பி - ம்.) [1]டுலகீன்ற', 'டுடன்கலந்த' [2]'சொல்வில்லாற் றெரிலந் தரசர்' (உ உ)

776 இம்மன்னன்: சனகன். ஈவதனை - கொடையை. 1 - 2. ஈபவன் பொருள் அழியும்: 'கல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சிற், கடப்பாட்டாள னுடைப்பொருள் போலத், தங்கு தற்குரிய தன்று' (குறுந். கசுஉ: 4 - 6.) தேய்ந்தது - குறைந்தது. பொம்மென்ன: ஒலிக்குறிப்பு. அலம்பும் - ஒலிக்கும். புரிதல் - முறுக்குண்ணுதல். ஆசை போலாதல் - ஆசை பெருகுதல் போலப் பெருகுதல். சேனை: பால்பகா அஃறிணைப் பெயர்.

777 மற்காக்கு மணிப்புயத்து
மன்னனிவன் மழவிடையோன்
விற்காக்கும் வாளமரின்
மெலிகின்ற னெனவிரங்கி
எற்காக்கு முடிவிண்ணோர்
படையீந்தா னெனவேந்தர்
அற்காக்கை கூகையைக்கண்
டஞ்சினவா மெனவகன்றூர்.

இராமன் வில்லேற்றின் சீதையின் நலம் பழுதாகாது என்று சதானந்தர் கூறுதல்

778 அன்றுமுத லின்றளவு
[1]மாருமிந்தச் சிலைமருங்குச்
சென்றுமிலர் போயொளித்த
தேர்வேந்தர் திரிந்துமிலர்
என்றுமினி மணமில்லை
யென்றிருந்தோ மிவனேற்றின்
நன்றுமலர்க் குழற்சீதை
நலம்பழுதா காதென்றான்.

(பி - மீ.) [1]'பொருளே போற் செகம்புகழச் சிறந்தன வாய்', 'பொருளே போற் புகழேயாய்ச் சிறந்ததால்' (உக)

777 'மன்னனிவன் அமரின் மெலிகின்றனென வின்னோர் படையீந்தார்' எனப்பகை வேந்தர் நினைத்து அஞ்சி அகன்றார் என்றபடி. அல்-இரவில். அற்காக்கை கூகையைக் கண்டஞ்சுதல்: 'பகல் வெல்லுங் கூகையைக் காக்கை' (குறள், 481.) 'பகைவர் மிதிலையை ஒரு வருட காலம் வளைத்து முற்றுகையிட்டாராக நகரில் பண்டங்கள் குறைய மக்கள் வருந்தியதைக் கண்ட சனகன் தன் தவத்திறமையால் விண்ணோரை மகிழ்வித்து நால்வகைப் படைகளைப் பெற்றுப் பகைவரை அழித்தான்' என்று வான்மீகம் கூறும். (உச)

778 திரிந்தும் - திரும்பியும்; 'அவளுமவனைத் தேற்றி நின்றாள் மனைத் திரிவா னென்றாள்' (உ. 4: 52.) இவன் - இராமன். நன்றும் - பெரிதும். வில் சபைக்கு வருமுன் இந்த இரண்டு வரலாறுகளும் சனகனால் சொல்லப்பட்டனவென்று வான்மீகம் கூறும்.

(பி - மீ.) [1]'யாவரு மிச்சிலையருகு' (உடி)

கோசிகரின் குறிப்பறிந்து இராமர் மேற்கொண்ட செயல்

779 நினைந்தமுனி பகர்ந்ததெல்லா
நெறியுன்னி [1]யருந்தவனும்
புனைந்தசடை முடிதுளக்கிப்
போரேற்றின் முகம்பார்த்தான்
வனைந்தனைய திருமேனி
வள்ளலுமம் மாதவத்தோன்
[2]நினைந்ததனை நினைந்தந்த
நெடுஞ்சிலையை நோக்கினனே.

வேறு

கண்டார் செயல்

780 பொழிந்தநெய் யாகுதி வாய்வழி பொங்கி
எழுந்த கொழுங்கன லென்ன வெழுந்தான்
அழிந்தது வில்லென விண்ணவ ரார்த்தார்
மொழிந்தன ராசிகள் முப்பகை வென்றீர்.

இராமனைக் கண்டு மங்கையர் பலர் காதல்கோள்ளல்

781 தூய தவங்க டொடங்கிய தொல்லோன்
[1]ஏயின வல்வி லிறுப்பதன் முன்னம்
சேயிழை மங்கையர் சிந்தைதொ றெய்யா
ஆயிரம் வல்வி லனங்கனிறுத்தான்.

மாதர்களின் கூற்று

782 காணு நெடுஞ்சிலை கால்வலி தென்பார்
நாணுடை நங்கை நலங்கிளர் செங்கேழ்
பாணி யிவன்படர் செங்கை படாதேல்
வாணுதன் மங்கையும் வாழ்வில ளென்பார்.

---

779 முனி - சதானந்தர். நெறி - முறையே. அருந்தவன் - கோசிகமுனி. போரேறு - இராமன். வனைந்தனைய - சித்திரத்தில் எழுதினைப் போன்ற. வனைந்தனைய திருமேனி வள்ளல் : 744, குறிப். 4: குறிப்பறிந்து ஒழுகல். ஒப்பு, ந. 4: 39.

(பி - மீ.) [1]:யறிந்தவனும்', 'யறிவனுன்றன்' [2]'நினைந்தவெலா நினைந்தந்த', 'நினைத்த நினைவறிந்தந்த' (உசு)

780 உலகைக் காக்கும் வேள்வித்தீ இராமபிரானுக்கு உவமை. நெய் யாகுதி கோசிக முனிவரிட்ட கட்டளைக்கு. முப்பகை - காமம் வெகுளி மயக்கம். (உஎ)

781 தொல்லோன் ஏயின - கோசிகமுனிவரால் ஏவப்பட்ட. எய்யா- எய்து. இறுத்தான் - (மலரம்புகளை எய்யும் விசையில்) ஒடித்துப் போகட் டான். (பி - மீ.) [1]:ஏயென' (உஅ)

782 கால் - வில்லின் கால்; 768, குறிப். நாணுடை - நாணத்தை

783 கரங்கள் குவித்திரு கண்கள் [1]பனிப்ப
இருங்களி றிச்சிலை யேற்றில ளுயின்
நரந்த நறைக்குழ னங்கையு நாமும்
முருங்கெரி யுட்புக மூழ்குது மென்பார்.

784 வள்ளன் மணத்தை மகிழ்ந்தன னென்றுல்
கொள்ளென முன்பு கொடுப்பதை யல்லால்
[1]வெள்ள மணத்தவன் வில்லை யெடுத்திப்
பிள்ளைமு னிட்டது பேதைமை யென்பார்.

785 ஞான முனிக்கொரு நாணிலை யென்பார்
கோனிவ னிற்கொடி யோரிலை யென்பார்
மானவ னிச்சிலை கால்வளை யானேற்
பீன தனத்தவள் பேறில ளென்பார்.

இராமனுடைய நடையழகு

786 தோகைய ரின்னன சொல்லிட நல்லோர்
ஓகை விளம்பிட வும்ப ருவப்ப
மாக மடங்கலு மால்விடை யும்பொன்
நாகமு நாகமு நாண நடந்தான்.

யுடைய. செங்கேழ் பாணி-செந்நிற முள்ள கை. இது முதல் ஐந்து கவிகள் பெண்கள் கூற்றென்பது 786-ஆங் கவியால் விளங்கும்.

(உக)

783 பனிப்ப - நீர் பெருக. களிறு ஏற்றிலன் ஆயின்: திணைவழு வமைதி. நரந்தம் - நாரத்தையின் பூமணம் 'நரந்த நறைக்குழல்': 'நரந்த நாறுங் குவையிருங் கூந்தல்' (குறுந். நூஉ: 3); 'நரந்த நாறிருங் கூந்தல் (கலி. நுசு: 5.) முருங்கு எரி-யாவற்றையும் அழிக்க வல்ல தீ. குவித்துப் பனிப்ப இங்ஙனம் கூறினர். 'எம் கண்களில் ஆனந்தக் கண்ணீர் தோற்றும் படி இருங்களிறு இச்சிலை ஏற்றில னுயின்' என்று பொருள் கூறுவாருமுளர்.

(பி - மீ.) [1]'களிப்ப' (ஙo)

784 வள்ளல் - இராமன். கொள் - இவளை ஏற்றுக்கொள். வெள்ளம்-கங்கையின் பெருக்கை; 1211. 'வெள்ளமனத்தவன்' என்ற பாடத்துக்கு 'அறிவில்லா மனத்தையுடைய சனகன்' என்பது பொருளாகும்.

(பி - மீ.) [1]'வெள்ளை மனத்தவன்' (ஙக)

785 ஞானமுனி - விசுவாமித்திரர்; புகழ்தலைப் போற் பழித்தல். கோன் - சனகன். மானவன் - பெருமை பொருந்தியவன். கால் - சிலையின் தண்டு. பீனம் - பருமை. சீதையின் பருவ நலத்தினை நகில்களால் குறிப் பித்தார். (ஙஉ)

786 ஓகை - மகிழ்ச்சியுடைகளுக்கு ஆகுபெயர். மாகம் மடங்கலும்-ஆகாயத்தே எழும் சிங்கமும்; 'மகம் என்ற நாளையுடைய சிங்கமும்' என்பாரு

இராமன் வில்லையெடுத்த சிறப்பு

787 ஆடக மால்வரை யன்னது தன்னைத்
தேடரு மாமணி சீதையெ னும்பொற்
சூடக வால்வளை சூட்டிட நீட்டும்
ஏடவிழ் மாலையி தென்ன வெடுத்தான்.

இராமனது வில்வன்மை

788 தடுத்திமை யாம லிருந்தவர் தாளின்
மடுத்தது நாணுதி வைத்தது நோக்கார்
[1]கடுப்பினை யாருமி றிந்திலர் கையால்
எடுத்தது கண்டன ரிற்றது கேட்டார்.

வேறு

வில்முறிந்த ஒலிகாரணமான நிகழ்ச்சிகள்

789 ஆரிடைப் புகுது நாமென்
றமரர்கள் கமலத் தோன்றன்
பேருடை யண்ட கோளம்
பிளந்ததென் றேங்கி நைந்தார்
பாரிடை யுற்ற தன்மை
பகர்வதென் பாரைத் தாங்கி
[1]வேரெனக் கிடந்த நாக
மிடியென வெருவிற் றன்றே.

முளர். மால் விடை - பெரிய காளை. பொன் நாகம் - மேருமலை. நாகம் - யானை. (நஉ)

787 ஆடகம் - பொன்; மணியாகிய சீதை. சூடகம்–கையணி விசேடம்; 392. வால்வளை - வெள்ளிய சங்கு வளையல்; வால்வளை என்றது சீதையை. சீதையை மணப்பதற்கு அவ்வில் காரணமாக இருந்தமையால் அதனைச் சீதைக்குச் சூட்டும் மாலையாகக் கூறினர். எழுந்தான் (780), நடந்தான் (786), எடுத்தான் (787) என்பவற்றிலுள்ள நயம் படித்து இன்புறற் பாலது (நச)

788 தடுத்து - இயல்பாக இமைத்தலைத் தடுத்து. மடுத்ததும் - வில் மூனையை மிதித்ததையும். நுதி வைத்ததும் - (மற்றொரு) மூனையில் வைத்ததையும். நோக்கார் - காணாதவர்களாய். கடுப்பு - வேகம்.

(பி - ம்.) [1]'கடுப்பினில்' (நஙு)

789 புகுதும் - அடைக்கலம் புகுவோம். பேருடை - பெருமையை யுடைய. நைந்தார் - வருந்தினார்கள்; 814. பகர்வதென்: கூர்மமலே விளங்கும் என்பது கருத்து. 'வேரிடை' என்ற பாடத்துக்கு 'பூமியின் அடிப்புறத்தில்' என்பது பொருள். நாகம் - ஆதிசேடன். சேடனுக்குப் பூமியின் வேர் உவமை. நாகம் இடியோசை கேட்டு வெருவும்.

(பி - ம்.) [1]'வேரிடைச்' (நஙூ)

எங்கும் மகிழ்ச்சிக்குரிய செயல்கள்

790 பூமழை சொரிந்தார் விண்ணோர்
பொன்மழை பொழிந்த மேகம்
[1]பாமமா கடல்க ளெல்லாம்
பன்மணி தூவி யார்த்த
கோமுனிக் கணங்க ளெல்லாங்
கூறின வாசி கொற்ற
நாமவேற் [2]சனக னின்றே
நல்வினை பயந்த தென்றான்.

791 மாலையு மிழையுஞ் சாந்துஞ்
சுண்ணமும் வாச நெய்யும்
வேலைவெண் முத்தும் பொன்னுங்
காசுநுண் டுகிலும் வீசிப்
பால்வளை [1]வயிர்க ளார்ப்பப்
பல்லியந் துவைப்ப முந்நீர்
ஒல்கிளர்ந் துவாவுற் றென்ன
வொண்ணகர் கிளர்ந்த தன்றே.

792 நல்லியன் மகர வீணைத்
தேனுக நகையுந் தோடும்
வில்லிட வாளும் வீச
வேல்கிடந் தனைய நாட்டத்
தெல்லியன் மதிய மன்ன
முகத்திய ரெழிலி தோன்றச்
சொல்லிய பருவ நோக்குந்
தோகையி னுடி னூரே.

---

790 பாமம் - ஆழம். நாமம் - அச்சம்.

(பி - மீ.) [1]'பாமரு' [2]'சனகற்கின்று நல்வினை பயந்ததென்றார்' (நூஎ)

791 இழை - அணிகலம். சுண்ணம் - வாசனைப் பொடி. வாசநெய் - மயிர்ச் சாந்து வகையுள் ஒன்று; புழுகு என்பாருமுளர். காசு - மணிகள். பால்வளை - வெள்ளிய சங்குகள். வயிர்கள் - கொம்புகள். பல்லியம் - பல வகை வாத்தியங்கள். ஒல் - முழக்கம்; கடைக்குறை. உவா - பௌர்ணமி நாள். பௌர்ணமியன்றைக் கடல் முழக்கம் மகிழ்ச்சியிற் சிறந்த நகர் முழக்கத்துக்கு; 758.

(நூஅ)

792 நல்இயல் - நல்ல இலக்கணம் அமைந்த. தேன் உக : 'இசைத் தேன் சிந்த' (887.) நகை - பற்கள். தோடு - காதணி. நகை வில்லிட, தோடு வாளும் வீச; வில்வாள் ஒளிகளைக் குறிப்பன. கண்ணுக்கு வேல் உவமை. எல் இயல் மதி - இரவில் இயங்கும் சந்திரன். எழிலி - மேகம்,

793 உண்ணற வருந்தி னுரிற்
சிவந்தொளிர் கருங்கண் மாதர்
புண்ணுறு புலவி நீக்கிக்
கொழுநரைப் புல்லிக் கொண்டார்
வெண்ணிற மேக மேன்மேல்
விரிகடல் பருகு மாபோல்
மண்ணுறை வேந்தன் செல்வம்
வறியவர் முகந்து கொண்டார்.

794 வயிரியர் மதுர கீதம்
மங்கைய ரமுத கீதம்
செயிரியர் மகர யாழின்
றேம்பிழி தெய்வ கீதம்
பயிர்கிளை வேயின் கீத
மென்றிவை பருகி விண்ணோர்
உயிருடை யுடம்பு மெல்லா
மோவிய மொப்ப நின்றார்.

795 ஐயன்வில் லிறுத்த வாற்றல்
காணிய வமரர் நாட்டிற்
றையலா ரிழிந்து பாரின்
மகளிரைத் [1] தழுவி நின்றார்
[2]செய்கையின் வடிவி னுடல்
பாடலிற் றெளித றேற்றார்
மையரி மலர்க்க [3]ணேக்கி
யிமைத்தலு [4]மயங்கி நின்றார்.

கூந்தல். சொல்லிய–புகழ்ந்த. தோகையின்–மயிலைப் போல். கார்காலத் தியல்பை. 'உக, வில்லிட, வாளும் வீச, எழிலி தோன்ற' என்றுகூறினர்; வில் - வானவில். வாள் - மின்னல்; இரண்டா மடியில் வில் வாள் வேல் என்ற சொற்கள் பயின்றுள்ளமை ஒரு நயம். (கூ)

793 உண்ணறவு - உண்ணத்தக்க மது; மது அருந்தக் கண் சிவத்தல் இயல்பு. புண்-கணவன் தகாததைப் புரிந்தான் என்ற வருத்தம். வில்முறிந்த ஓசையின் காரணமாக எழுந்த அச்சம் புலவிநீக்கும் மருந்தாயிற்று. வறிய வர்களுக்கு நீர்ப்பசையற்ற வெண்ணிற மேகம் உவமை. (சா)

794 வயிரியர்-இசைபாடுவோர். செயிரியர்-கூத்தர்; மகரயாழ்வாசிப் போர்கள்; 'நல்யாழ்ச் செயிரியர்', 'செயிரியரிசைத் தேன்சிந்த',(880, 887.) மகரயாழின் தேம்பிழி கீதம்: 'தேம்பிழி மகரயாழ்' (49.) பயிர்-ஒலிக்கின்ற. கிளைத்தவேய். வேயின் -. புல்லாங்குழலின். (சக)

795 பாரின் மகளிரைத் தழுவியது அவர்கள் தம்மைப்போல் தேவமாத ரோ வென்று கருதி. (பி - ம்.) [1]'தழுவிக் கொண்டார்' [2]'செய்கையினுடல்'

796 தயரதன் புதல்வ னென்பார்
தாமரைக் கண்ண னென்பார்
புயலவன் மேனி யென்பார்
பூவையும் பொருவு மென்பார்
[1]மயலுடைத் துலக மென்பார்
மானிட னல்ல னென்பார்
கயல்பொரு கடலுள் வைகுங்
கடவுளே காணு மென்பார்.

797 நம்பியைக் காண நங்கைக்
காயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந் தோறும்
குரிசிற்கு மன்ன தேயால்
தம்பியைக் காண்மி னென்பார்
தவமுடைத் துலக மென்பார்
[1]இம்பரிந் நகரிற் றந்த
முனிவனை யிறைஞ்சு மென்பார்.

கவிக் கூற்று—சீதையின் நிலையைக்
கூறுவோமெனல்

798 [1]இற்றிவ ணின்ன தாக
மதியொடு மெல்லி நீங்கப்
பெற்றுயிர் பின்னுங் காணு
மாசையிற் சிறிது பெற்ற
சிற்றிடைப் பெரிய கொங்கைச்
சேயரி கரிய வாட்கட்
பொற்றொடி மடந்தைக் கப்பா
லுற்றது புகல லுற்றேன்.

பாடல் வடிவினிற்' [3]'ணேக்க விழைத்தலு' [4]'மயக்கந் தீர்ந்தார்' (சஉ)

796 புயல் - மேகம். பூவை-காயாம்பூ. மயல்-மயக்கம். உலகம் மயலுடைத்து: 'பரவைஞால மேழைமையுடைத்து' (1208.) காணும்: அசை. (பி - மீ.) [1]'பயனுடைத்.....பாரின னல்ல' (சஙு)

797 காணும் ஒவ்வொரு சமயமும் புதிய அழகினைப் பயப்பதால், 'காணுந் தோறும்' என்றார். இத்தகையவரைப் பெற்றமையால் இவ்வுலகம் தவமுடையது. இம்பர் - இவ்வுலகில். (பி - மீ.) [1]'இம்பரி லிவரைத் தந்த' (சசு)

798 இற்று - இது. எல்லி-இரவு. வருத்திய மதியொடு எல்லி நீங்க. பின்னும் காணும் ஆசையால் உயிர் பெற்று: 'ஆழி யானை யடைந்தனள் பின்னையும் வாழ லாமெனு மாசை மருந்தினே', 'பொறை யிருந் தாற்றியென், னுயிரும் போற்றினென், அறையிருங் கழலவற் காணு மாசையால்' (கூ. 5:

சீதை ஒரு பளிக்கு மேடையை அடைந்தமை

799 ஊசலா டுயிரி னோடு
முருகுபூம் பள்ளி நீங்கிப்
பாசிழை மகளிர் சூழப்
போயொரு பளிக்கு மாடக்
காசிறு மரையின் பொய்கைச்
சந்திர காந்த மீன்ற
[1]தேசுநீ ரளிக்கு மென்பூஞ்
[2]சேக்கையை யரிதிற் சேர்ந்தாள்.

அவள் இரங்கல்

800 பெண்ணிவ [1]ணுற்ற வாறு
பேணியே கருமை யான
வண்ணமு மிலக ளாலே
காட்டலால் வாட்டந் தீர்த்த
தண்ணறுங் கமலங் [2]காளென்
றளிர்நிற முண்ட [3]கண்ணின்
ஒண்ணிறங் [4]காட்டி னீரென்
னுயிர்தர வுலோவி னீரே.

85; ஞ. 5:11.) (பி - மீ.) [1]'இற்றிவ னின்ன ஞக', 'இற்றிவ னின்ன தாக' 'இற்றிவ ணின்ன ராக' (சடு)

799 ஊசலாடுயிர்: 'ஆருயிர்நின் றூசலாட' (338.) உருகு பூம் பள்ளி - உருகி உருகி வருந்துவதற்குக் காரணமாகிய மலர்கள் விரித்த படுக்கையினின்றும். காசு இல் - குற்றமற்ற.

(பி - மீ.) [1]'சீதநீ' [2]'சேக்கைய தருகு 'சேர்ந்தாள்', 'சேக்கைசேர்ந்தகத்துட் டோவார்'. (சசு)

800 பெண் - அபலையாகிய நான். உற்றவாறு பேணி - அடைந்த இந்த நிலையை நோக்கி இரக்கங் கொண்டு. இராமன் திருமேனிக்குத்தாமரையிலே: 'அக்கமலத் திலேபோலுந் திருமேனி யடிநளுக்கே' (திருவாய் 9. 7:31); தாமரை இலை மகாவிஷ்ணுவின் திருமேனியின் சோதிக்கு ஒப்பு: தக்க. 278, உரை; பரி. 13: 50-51, பரிமேல். உண்ட - கவர்ந்து சென்ற. இலைகளால் அவருடைய மேனி நிறமும் மலர்களால் கண்ணின் நிறமும் காட்டின; நீங்கள் அவரைக்காட்டி என் உயிரைத்தர உலோபஞ் செய்தீர்; 'வண்ண நறுந்தா மரைமலரும் வாசக் குவளை நாண்மலரும்...தரும் பொய்காய், கண்ணு முகமும் காட்டுவாய் வடிவு மொருகாற் காட்டாயோ, ஒண்ணு மென்னி னஃதுதவா துலோவி னீரு முயர்ந்தாரோ' (சு 1:25.)

(பி - மீ.) [1]'ணுற்றதென்னும் பெருமையா லருமையான', 'ணுற்ற தென்னு...லருமையான' [2]'காணீர்' [3]'கண்ணன்' [4]'காட்டி நீரென்' (சஎ)

வேறு

801 நாணுலாவு மேருவோடு நாணுலாவு பாணியும்
தூணுலாவு தோளும்வாளி யூடுலாவு தூணியும்
வாணிலாவி னூலுலாவு மார்பமார்பு மீளவும்
காணலாகு மாகிஞவி காணலாகு மேகொலாம்.

802 விண்டலங்க லந்திலங்கு
திங்களோடு மீதுசூழ்
வண்டலம்ப லங்கறங்கு
பங்கியோடும் வார்சிலைக்
கொண்டலன்றி ரண்டுகண்ணின்
மொண்டுகொண்டென் ஞவியை
உண்டதுண்டெ னெஞ்சி னின்று
முண்டதென்று முண்டரோ.

---

801 நாணுலாவு மேரு என்றது இராமனுடைய வில்லை; நாண் - வில்லின் நாண். அடுத்த கவியில் 'வளைக்கலாதவில்' என்பதனைக் காண்க. பாணி - கை. 'மேரு உலாவு பாணி', 'நாண் உலாவு பாணி' எனக் கூட்டிப் பொருள்கொள்க. தூண் உலாவு தோள் - தூணைப் போன்ற தோள். உலாவு: உவம வாசகம். வாளி - அம்பு. தூணி - அம்புப்புட்டில். பிராட்டியார், முன்பு இராமனது பின்னழகைப் பார்த்து, உவந்ததனால் தூணியைக் குறித்தார்; பின்னழகை வியத்தல்: 'அன்பணைத்தஞ் சொல்லிபின் செல்லு மாடவனீடவன்றன், பின்பணைத் தோளிவரும்' (திருச்சிற். 219) என்பதனையும், 'சிறு புறமும் அசை நடையும் கண்டபற்கு அன்பான் அணைத்து அழகிய சொல்லையுடையாளது பின்னே ஆடவன் ஒருகால் செல்லா நின்றான் முன்செல நாணிப்புறக் கொடையும் வலிச் செலவும் காண அவனது பின்னே வேய்போலும் தோள்களை யுடையாள் ஊரும் பொழுது செல்லா நின்றாள்' என்ற உரையையும் காண்க. வாள் நிலாவின் - ஒளியையுடைய நிலாவைப்போல. நூல் - மார்பிலணிந்த முந்நூல்; 625, 807. ஆவி காணலாகும்: 'கொங்கைமேல்.....ஒரு நாள் தங்குமேல் என்னுவி தங்கும்' (நாச்சியார், மேக. 7.)

இது முதல் 809 முடிய இடத்துக்கு ஏற்ற சந்தம்; ஒப்பு: கூ. 7:90-95. (சஅ)

802 திங்கள் என்றது இராமபிரானது முகத்தை. அலம்பு - ரீங்காரம் செய்கின்ற. அலங்கல் - மாலை. பங்கி - குடுமி. திங்களையும் சிலையையும் உடைய கொண்டல் இராமபிரானுக்கு உவமை. உண்டது உண்டு - பருகினது உண்மை. அது என் நெஞ்சின் இன்றும் உண்டு; என்றும் உண்டு. (சகூ)

803 இலேக்கலாத கொங்கைகா ளெழுந்துவிம்மி [1]யென்செய்தீர்
மூலேக்கலா மதிக்கொழுந்து போலும்வாண்மு கத்தினன்
வலேக்கலாத விற்கையாளி வள்ளன்மார்பி னுள்ளுறத்
திலேக்கலாகு மாகிலான செய்தவங்கள் செய்ம்மினே.

804 பஞ்சரங்கு தீயிலுவி [1]பற்றநீடு கொற்றவில்
வெஞ்சரங்க ணெஞ்சரங்க வெய்யகாம னெய்யவே
சஞ்சலங்க லந்தபோது தையலாரை யுய்யவந்
தஞ்சலஞ்ச லென்கிலாத வாண்மையென்ன வாண்மையே.

805 எங்குநின்றெ ழுந்ததிந்த விந்துவந்தெ [1]னெஞ்சுலாய்
அங்கியன்ற னங்கனெய்த வம்பின்வந்த சிந்தைநோய்
பொங்குகின்ற கொங்கைமேல்வி டம்பொழிந்த தென்னினும்
கங்குல்வந்த திங்களன்ற கங்களங்க மில்லையே.

806 அடர்ந்துவந்த னங்கனெஞ்ச முன்றுசிந்து மம்பெனும்
விடங்குடைந்த மெய்யுணின்று வெந்திடா [1]தழுந்தவே
கடந்துதைந்த காரியானை யன்னகாளை [2]பின்னடந்
துடன்றொடர்ந்து போனவாவி [3]வந்தவாறெ னுள்ளமே.

---

803 இலேக்கலாத - சாயாத. மூலேக்கலாமதி - பிறையாயிருந்து படிப் படியாய் வளராமல் என்றும் ஒரு படித்தாயுள்ள சந்திரன். வலேக்கலாத வில் - மற்றவரால் வலேக்க முடியாத வில்; 'நாணுலாவு மேரு' என்று முன் கவியிற் கூறியது இதுபற்றியே. திலேத்தல்-இடைவிடாமல் அனுபவித்தல். தவஞ்செய்தல்: 'மலேயி னிலேடவில்' (தண்டி. 59, மேற்.); சீவக; 465.

(பி - மி.) [1]'யென்செய்வீர்' (கூ0)

804 அரங்கு - அழிக்கின்ற. ஆவி பற்ற - உடம்பிற் பற்றுமல் உயிரிலே பற்ற. நெஞ்சு அரங்க. தையலார் - இளேயமகளிர். 'கொற்றம் வாய்' என்ற பாடத்துக்கு 'வெற்றி வாய்த்த' என்பது பொருள்.

(பி - மி.) [1]'பற்றியோடு கொற்றம் வாய்' (கூக)

805 பிராட்டி இராமபிரான் முகத்தை உருவெளித் தோற்றத்திற் கண்டு அதனைச் சந்திரனென்று மயங்கிக் கூறியது இது. இந்து - சந்திரன். 'அனங்கன் என் நெஞ்சு உலா அங்கு இயன்று எய்த' என்று கூட்டிப் பொருள் கொள்க; உலா - உலாவுதல். அனங்கன் - அங்கமில்லா மன்மதன். இயன்று - தங்கி; விடம் பொழிதல் இரு சந்திரர்களுக்கும் ஒக்கும். இதற்கு அகம் களங்கமில்லை. சூரியனைத் திங்களென்று சீதை மயங்கிக் கூறியதாகக் கொண்டு பொருள் கூறுவாருமுளர். (பி-மி.) [1]'நெஞ்சிலாம்', 'நெஞ்சுலாம்' (கூட)

806 விடம் குடைந்த - விஷமானது துளேத்த; 'விடத்தில் மூழ்கிய' என்று பொருள் கொள்ளலும் ஒன்று. கடம் துதைந்த - மதம் மிகுதியாகப் பொருந்திய. இராமனுக்கு யானே உவமை: தனியன் 1, குறிப்பு; 624. போன ஆவி வந்தவாறு என் என்பது நயம். உள்ளமே:விளி.

807 விண்ணுளேயெ ழுந்தமேக மார்பினூலின் மின்னெடிம்
மண்ணுளேயி ழிந்ததென்ன வந்துபோன [1]மைந்தனூர்
எண்ணுளேயி ருந்தபோதும் யாவரென்று தேர்கிலேன்
கண்ணுளேயி ருந்தபோதும் மென்கொல்[2]காண்கி லாதவே.

808 பெய்கடற்பி றந்தயல் [1]பெறற்கொணுமை ருந்துபெற்
றையபொற்க லத்தொடங்கை [2]விட்டிருந்த வாதர்போல்
[3]மொய்கிடக்கு மண்ணுறுண்மு யங்கிடாது [4]முன்னமே
கைகடக்க விட்டிருந்து கட்டுரைப்ப தென்கொலோ.

809 என்றுகொண்டு நைந்துநைந்தி
ரங்கிவிம்மி விம்மியப்
பொன்றிணிந்த கொங்கைமங்கை
யிடரின்மூழ்கு போழ்தின்வாய்க்
[2]குன்றமன்ன சிலைமுரிந்த
கொள்கைகண்டு குளிர்மனத்
தொன்றுமுண்கண் மதிமுகத்தொ
ருத்திசெய்த துரைசெய்வாம்.

(பி - மீ.) [1]'தழுந்தவெங்', [2]'தாளடைந்', 'தாள்தொடர்ந் துடைந் துடைந்து போன' [3]'யுய்ந்த வாவென்', 'யுய்ந்த வாறென்' (நூ)

807 'மார்பிலுள்ள நூலாகிய மின்னெடி வந்துபோன' என்று கூட்டுக. நூல் மின்னலுக்கு உவமை. எண்ணுள் - மனத்தில். 'காணலாயதே' என்ற பாடத்துக்கு, 'கண்ணிலே இருந்தும் காணவேட்கை கொண்டது என்கொல்' என்பது பொருளாகும்.

(பி - மீ.) [1]'மன்னனூர்' [2]'காணலாயதே' (நூ)

808 பெய்கடல் - கற்பகதரு முதலிய பல பொருள்களைச் சொரிந்த கடல். அயல்பெறற்கு ஒணு - வேறிடத்தில் பெறுதற்கு முடியாத. பெற்றும். ஐய - அழகிய. ஆதர் - அறிவிலிகள். மொய் - வலிமை. தோள் மூயங்கிடாது - தோள்களைத் தழுவிக் கொள்ளாமல். கைகடக்க - நம் சுவாதீனத்திலிருந்து கடந்து போகும்படி. இருந்து - தனியேயிருந்து

(பி - மீ.) [1]'பிறக்கொணு' [2]'வைத்திருந்த', 'வைத்திடாத வாறுபோல்' [3]'மொய்கடக்கு' [4]'முன்னமென்' (நூ)

809 பொன் திணிந்த - தேமல் மிகுதியாகப் படர்ந்த. குன்ற மன்ன - மலையைப் போன்ற.

ஒரு பிரதியில் இச்செய்யுள் பின்வருமாறு காணப்படுகிறது:

'என்றுமாத ராணிணைந்திவ் விடரின்மூழ்கு போதினிற்
குன்றுபோ லெழுந்தகொங்கை மங்கைகொம்பை யன்னவள்
வென்றிவீர னிங்குவந்து வில்லிறுத்த மேன்மையைச்
சென்றுகூறு வோமெனத் தெளிந்துசிந்தை மூழ்குவாள்.'

(பி - மீ.) [1]'ணைந்து', 'ளைந்துளைந்' [2]'குன்ற மொன்று' (நூ)

வேறு

பிராட்டியிடம் நீலமாலை வருதல்

810 வடங்களுங் குழைகளும் வான வில்லிடத்
[1]தொடர்ந்துபூங் குழல்களுந் துகிலுஞ் சோர்தர
துடங்கிய மின்னென நொய்தி னெய்திளள்
நெடுந்தடங் கிடந்தகண் நீல மாலையே.

நீலமாலையின் உவகைக்குரிய செயல்களும்
பிராட்டியின் விளவும்

811 வந்தடி [1]வணங்கிலள் வழங்கு மோதையள்
அந்தமி லுவகைய ளாடிப் பாடினள்
சிந்தையுண் மகிழ்ச்சியும் புகுந்த செய்கையும்
சுந்தரி சொல்லெனைத் தொழுது சொல்லுவாள்.

இராமன் பெருமையையும் வில்லிறுத்த திறனையும்
நீலமாலை விவரித்தல்

812 கயரத துரகமாக் [1]கடல்கொள் காவலான்
தயரத னெனும்பெயர்த் தனிச்சென் னேமியான்
புயல்பொழி தடக்கையான் புதல்வன் பூங்கணை
மயல்தரு மதனற்கும் வடிவு மேன்மையான்.

---

810 வடங்கள் - மாலைகள். வானவில் லிடல் - பலநிற ஒளிகளை வீசுதல்; 1026; 'மாமகரக் குழைத்திருவில்' (சீவக. 339); 'பொலங் குழைதிருவில் வீச' (நைடதம், மணம், 46.) குழல்கள் - கூந்தல்; ஐம்பால் என்பதை நீனைந்து பன்மையாற் கூறினர். தடம் கிடந்தகண் - விசாலமான கண். நீல மாலை, இராமன் வில் முறித்ததைச் சீதைக்குச் சொல்லவந்த ஒரு சேடியின் பெயர். (பி - மீ.) [1] 'தொடர்ந்துபூங் கலைகளுங் குழலும்' (நிஎ)

811 ஓதையள் - ஆரவாரத்தை யுடையவள். சுந்தரி: விளி.

(பி - மீ.) [1] 'பணிந்திவண் மனத்து ளோங்கிய', 'வணங்கலின்' (நிஅ)

812 கயரததுரக மாக்கடல்; 214. தனிச் செல் நேமியான் - ஏகசக்ராதிபதி என்றபடி; தசரதன்; 182. தசரதன் கொடை பாயிரம் 1, குறிப்; 184. (பி - மீ.) [1] 'கடலன் கல்வியான்' (நிக)

813 மராமர மிவையென [1]வளர்ந்த தோளினன்
அராவணை யமலனென் றுயிர்க்கு மாற்றலான்
இராமனென் பதுபெய ரிளைய கோவொடும்
பராவரு முனியொடும் பதிவந் தெய்தினன்.

814 பூணியன் மொய்ம்பினன் புனித னெய்தவில்
காணிய வந்தன னென்னைக் காவலன்
ஆணையி னடைந்தவில் லதனை யாண்டகை
நாணினி தேற்றின னடுங்கிற் றும்பரே.

815 மாத்திரை யளவிற்[1]றண் மடுத்து முன்பயில்
சூத்திர மிதுவெனத் தோளின் வாங்கினன்
ஏத்தின ரிமையவ ரிழிந்த பூமழை
வேத்தவை நடுக்குற முறிந்து வீழ்ந்ததே.

பிராட்டியின் மகிழ்ச்சி

816 கோமுனி யுடன்வரு கொண்ட [1]லென்றபின்
தாமரைக் கண்ணினை னென்ற தன்மையால்
ஆமவ னேகொலென் றைய நீங்கினள்
[2]வாமமே கலையினுள் வளர்ந்த தல்குலே.

அவள் கோண்டவுறுதி

817 இல்லையே நுசுப்பென்ப ருண்டுண் டென்னவும்
[1]மெல்லிய முலைகளும் விம்ம விம்முவாள்
சொல்லிய குறியினைத் தோன்ற லேயவன்
அல்லனே லிறப்பனென் றகத்தி லுன்னுவாள்.

---

813 தோளுக்கு மராமரம் உவமை. தோளே முற்கூறியது பெண்களைக் கவர்வன அவை யாதலான்; 603, 1170. அமலனென்பது ஏனைப் பெரும் பான்மை யாதலின் ஐயத்துள் ஒருதலையே கூறப்பட்டது. (பி-ம்.) [1]'வலிய' (கூ0)

814 பூணியல் மொய்ம்பினன் - இராமன்; பூண் - வாகுவலயம்; திருச்சிற். 41, பேர். மொய்ம்பு - தோள். புனிதன் - சிவபெருமான். சாணிய வந்தனன் என்ன: 724. இனிது - அநாயாசமாக. நடுங்கிற் றும்பர்: 789. (கூக)

815 மாத்திரை - நுண்ணிய கால அளவு. (பி - ம்.) [1]'ரூள்வலித்து' (கூஉ)

816 வாமம் - அழகு. மேகலை - எண்ணாவை மணியாலியன்ற ஓர் அணி.
(பி - ம்.) [1]'லென்றமத்' [2]'வாமமே கலையினும்' (கூங)

817 நுசுப்பு - இடை; முன்பெல்லாம் நுசுப்பு இல்லை என்று கூறியவர்கள் இப்பொழுது உண்டு என்று அனுமானத்தால் கூறவும் என்பது முதலடிக்குப் பொருள்; திருச்சிற். 59. விம்முவாள் - உடலும் மனமும் பூரிப்

சனகன் கோசிகரை வினவியது

818 [1]ஆசையா லயர்பவ ளன்ன ளாயினள்
பாசடைக் கமலத்தோன் படைத்த வில்லிறும்
ஓசையிற் பெரியதோ ருவகை [2]யெய்தியக்
கோசிகற் கொருமொழி சனகன் கூறுவான்.

819 உரைசெயெம் பெருமவுன் புதல்வன் வேள்விதான்
விரைவினின் ரெருபகன் முடித்தல் வேட்கையோ
[1]முரைசெறிந் ததிர்கழன் முழங்கு தானையவ்
வரைசையு மிவ்வழி யழைத்தல் வேட்கையோ.

கோசிகர் மொழிப்படி சனகன் தயரதருக்கு
ஓலையும் தூதும் போக்கல்

820 மல்வலா னவ்வுரை பகர மாதவன்
ஒல்லையி லவனும்வந் தூறுத னன்றென
எல்லையி லுவகையி னிசைந்த வாறெலாஞ்
சொல்லுகென் ரோலையுந் தூதும் போக்கினன்.

பாள். குறியின் - அடையாளங்களால்.

(பி - ம்.) [1]'மெல்லியள்' (சுச)

818 அயர்பவள் - வருந்துகின்ற சீதை. பாசடை - பசுமையான இலைகள். நான்முகன் படைத்தவில்: 760. ஓசையில்: ஓசையினும் சனகனது உவகை அதிகம். 'பிஞ்ஞகன் படைத்தவப் பெருவில், இற்றவன்றினு மெறி மழு வாளவ னீழுக்கம், உற்ற வன்றினும் பெரியதோ ருவகையலனென்' (உ. 1: 42.) (பி - ம்.) [1]'ஆசையுற் றயர்பவ' [2]'யெய்தியே' (சுரு)

819 உரைசெய் - கூறுவாயாக. உன்புதல்வன்: ஞானபுத்திரன் ஆதல் பற்றி மாணிக்கனைப் புதல்வன் என்றல் மரபு; 344; 'சன்மதி முனியருள், பவணந்தி' (நன். சிறப். உரை.) அவ்வரசு - தசரதன்.

(பி - ம்.) [1]'மூரசறைந் ததிர் குரல்' (சுசு)

820 மல் - மற்போர். ஒல்லையின் - விரைவில். இசைந்த ஆறு - பொருந்திய விதமாக. போக்கினது தசரதரிடம். சனகன் அமைச்சரைத் தூதனுப்பியதாக வான்மீகம் கூறும். (சுள)

(கார்முகப் படலம் முற்றும்)

———

13 எழுச்சிப் படலம்

தூதுவர் ஆசார வாசலை அணுகியது

821 கடுகிய தூதருங் காலிற் காலிற்சென்
றிடிகுரன் முரசதி ரயோத்தி யெய்தினர்
அடியிணை தொழவிட மின்றி மன்னவர்
முடியொடு முடிபொரு வாயின் முன்னினர்.

தசரதனைத் தூதுவர் கண்டு கூறியது

822 முகந்தனர் திருவருண் முறையின் முன்னினர்
திகழ்ந்தொளிர் கழலிணை தொழுது செல்வனைப்
புகழ்ந்தன ரரசனின் புதல்வர் போனபின்
நிகழ்ந்ததை யிதுவென நெடிது கூறினர்.

தசரதன் ஓலையை வாசிக்க ஏவல்

823 கூறிய தூதருங் கொணர்ந்த வோலையை
ஈறில்வண் புகழினி யிதுவ தென்றனர்
வேறொரு புலமகன் விரும்பி வாங்கினன்
மாறதிர் கழலினன் வாசி யென்றனன்.

---

821 கடுகிய - விரைந்த. காலிற் காலிற்சென்று - காற்றைப்போல் கால் நடையாக விரைந்து சென்று. வாயில் - ஆசாரவாசல்: 'முன்வந்த மன்னர் முடிவணங்குஞ் சேவடியான்' (பு.வெ. 214.) தூதுவர் மூன்றுநாள் இடையில் தங்கி நான்காம் நாள் அயோத்தியை யடைந்தார் என்று வான்மீகம் கூறும். (க)

822 'முகந்தனர் திருவருள்' என்றது தசரதரது அருளுக்குப் பாத்திரராக உள்ளே அழைக்கப் பெற்றனர் என்றபடி. அருளின் மிகுதி நோக்கி 'முகந்தனர்' என்றார். நிகழ்ந்ததை; ஐ:சாரியை. நெடிது-விரிவாக. (உ)

823 கூறிய - நெடிது கூறிய. இது அது - இந்த ஓலை நாங்கள் கூறிய செய்தியைக் கொண்டது. புலமகன் - அறிஞன்; புலம் - அறிவு. ஓலையைப் பிறரிடம் கொடுத்துப் படிக்கக் கேட்டல்: வி.பா. சூது போர். 63.

இப்பாடலுக்குப் பின் பல பிரதிகளில் பின்வரும் பாடல்கள் காணப் பெறுகின்றன. ஆயினும் இவை மிகையாகவே தோற்றுகின்றன:

(1) 'ஒது நீதியின் கோசிக மாமுனி யோலை
தாது சேர்தொடைத் தயரதன் காண்கதற் பிரிந்து
போது கானிடைத் தாடகை பொருப்பெனப் புகுந்து
வாது செய்துநின் றிராகவன் வாளியான் மாண்டாள்.'

(2) 'சிறந்த வேள்வியொன் றமைத்தன னதுதனைச் சிதைக்க
இறந்த தாடகை புதல்வரா மிருவர்வந் தெய்தி
அறங்கொள் நெஞ்சின னிராகவன் வாளியா லாவி
குறைந்து போயின ளொருவன்மற் றவன்கடல் குளித்தான்.'

தசரதர் மகிழ்ச்சி

824 இலைமுகப் படத்தவ னெழுதிக் காட்டிய
தலைமகன் சிலைத்தொழில் செவியிற் சார்தலும்
நிலைமுக வலயங்க ணிமிர்ந்து [1]நீங்கிட
மலையென வளர்ந்தன வயிரத் தோள்களே.

மன்னவன் கூற்று

825 வெற்றிவேன் [1]மன்னவன் றக்கன் வேள்வியில்
கற்றைவார் சடைமுடிக் கணிச்சி வானவன்
முற்றவே [2]முலகையும் வென்ற மூரிவில்
இற்றபே ரொலிகொலா மிடித்த தீங்கென்றான்.

---

(3) 'கூட மேவுபோ ரரக்கரை யிளையவன் [1]கொன்றான்
நீடு வேள்வியுங் குறைபடா [2]வகைநின்று நிரப்பிக்
கேடில் காற்றுகள் கதுவலிற் கிளர்ந்தவப் பெருமைப்
பாடற் கோதமன் பன்னிசா பத்தையு மகற்றி.'

(பி - மீ.) [1]'கொன்று' [2]'வகையது நிரப்பிக்' [3]'பாடன் மாமறைக் கவுத மன் பன்னிதன் சாபம் ஆடன் மாமலர்ச் சோலையி னிராகவ னகற்றி', 'பாட லுன்மறைக் கோதமன் பன்னிசாபத்தையு மகற்றி.'

(4) 'பொருவின் மாமதின் மிதிலையிற் புகுந்துபோ நிராமன்
மருவு வார்சிலை முறித்தலிற் சனகன்றன் மகளைத்
தருவன் யானென விசைந்தனன் முனிந்தவ விரைவின்
வருக வென்பதாம் வாசகங் கேட்டுள மகிழ்ந்தான்.'

(5) 'பன்னு மாமறை வகிட்டனும் பராவரு முனிக்கும்
அன்னை மார்க்குந்தன் [1]மைந்தர்க்குஞ் சோபன மறிவித்
தின்ன வாசக வோலையங் கிட்டதூ தருக்குச்
சொன்ன மாயிர கோடியுந் தூசுடன் சொரிந்தான்.'

(பி - மீ.) [1]'ணமைச்சர்க்குஞ்' (கூ)

824 இலைமுகப் படம் - திருமுகம்; இலை என்றது பனையோலையை; 'தோட்டின் மூடங்கல்' (உ. 9:6.) அவன் - சனகன். தலைமகன் - மூத்த மகன்; இராமன். நிலைமுக வலையங்கள் - நிலைத்த இடம் பெற்ற தோள் வளைகள். நிமிர்ந்து - வளைவு நீங்கி. மலையென...தோள்: 826.

(பி - மீ.) [1]'நீங்கி', 'வீங்கின' (சு)

825 தக்கனது யாகம்: 766—7. கணிச்சி - மழுப்படை. முற்ற - முழுதும். மூரி - வலிமை.

(பி - மீ.) [1]'மன்னன் முன்' [2]'முலகெலாமுனிந்த' (டு)

மன்னவன் தூதருக்கு வரிசை யளித்தல்

826 என்றுரைத் தெதிரெதி ரிடைவி டாதுநேர்
தன்றிய கனைகழற் றூதர் கொள்கெனப்
பொன்றிணி கலன்களுந் தூசும் போக்கினன்
குன்றென வுயரிய குவவுத் தோளினன்.

பிரயாணத்தைக் குறித்து
முரசறைய மன்னவன் கட்டளை

827 [1]வானவர் செய்தவந் தவத்தி னல்வரும்
வேனில்வே ளிருந்தவம் மிதிலை நோக்கினம்
சேனையு [2]மாதருஞ் செல்க மூந்தென
ஆனமே லணிமுர சறைகென் றேவினன்.

வள்ளுவன் முரசறைதல்

828 வாம்பரி [1]வீரிதிரைக் கடலை வள்ளுவன்
தேம்பொழி தூழாய்முடிச் செங்கண் மாலவன்
ஆம்பரி சுலகெலா மளந்து கொண்டநாள்
சாம்புவன் றிரிந்தெனத் திரிந்து சாற்றினன்.

---

826 என்று எதிர் எதிருரைத்து; எதிர்-முன்னிலையில்; எதிருரைத்து-மறுமொழி பகர்ந்து. நேர்-ஒன்றோடொன்று ஒத்த. தூசு-ஆடை. போக்கினன்-அதிகமாகக் கொடுத்தான்; போக்குதல்-விரிவுறச் செய்தல்; 'உறக்தை போக்கி' (பட்டினப். 285.) இச்செய்யுள் சில பிரதிகளில் இல்லை. (சு)

827 வானவன் என்ற பாடத்துக்குச் சூரியன் என்பது பொருள். வேனில்வேள்-மன்மதன் என்ற பொருளது; இங்கே இராமனைக் குறிக்கும். அறைக: பிறவினைப் பொருளில் வந்தது.

தூதர் வந்ததும் தசரதன் சபையோரைப் பார்த்து, 'சனகர் மரபும் செயலும் நமக்குச் சம்பந்திக்க நல்லனவா என்று ஆலோசித்து அவர்களின் உடன் பாட்டைப் பெற்றதாக வான்மீகம் கூறும்; சர்க்கம், 68.

(பி-மீ.) [1]'வானவர் செய்த மாதவத்தி', 'வானவன் குலத்தென் மாதவத்தி'; 'வானவன் குலஞ்செய் மாதவத்தி' [2]'மரசருஞ்' (எ)

828 கடலை-கடலில்; வேற்றுமை மயக்கம். வள்ளுவன்-முரசறைபவன். மணி. க. ஆம்பரிசு-தம் அடிக்குள் அடங்கும் விதத்தால். திரிந்தென-திரிந்தது என்ன. திருமால் உலகளந்த நாளில் சாம்புவன் பறையடித்துச் சுற்றித் திரிந்தமை: 'வேதமனைத்துந் தோற்ற வொட்டாவொரு மெய்யன், பூதல முற்று மீரடி வைத்துப் பொலி போழ்தியான், மாதிர மெட்டுஞ் சூழ்பறைவைத்தே வரமேரு, மோத வீசாத்தே தாளுலை வுற்றேன் விறன் மொய்ம்மீர்' (சு 14. 5.) 'வள்ளுவன் கடலைத் திரிந்து சாற்றினன்' என இயைக்க. (பி-மீ.) [1]'தருதிரைக் கடலின்'

சில பிரதிகளில் இச்செய்யுளுக்குப் பின் :—

சேனையின் எழுச்சி

829 விடைபொரு நடையினன் சேனை வெள்ளமோர்
இடையிலை யுலகினி லென்ன வீண்டிய
கடையுக முடிவினி லெவையுங் கால்படப்
புடைபெயர் கடலென வெழுந்து போயதே.

தேரும் யானையும் எழுதல்

830 சில்லிட முலகெனச் செறிந்த தேர்கடாம்
புல்லிடு சுடரெனப் பொலிந்த [1]வேந்தரால்
எல்லிடு [2]கதிர்மணி யெறிக்கு மோடையால்
வில்லிடு முகிலெனப் பொலிந்த வேழமே.

குடையும் கொடியும்

831 [1]கானிமிர்ந் தொளிர்குடை கணக்கி லோதிமம்
பால்விரிந் [2]திடையிடை பறப்ப போன்றன
மேல்விரிந் தெழுகொடிப் [3]படலம் விண்ணெலாம்
தோலிரிந் [4]துகுவன போன்று தோன்றுமே.

'சாற்றிய முரசொலி செவியிற் சாருமுன்
கோற்றொடி மகளிருங் கோல மைந்தரும்
வேற்றருங் குமரரும் வென்றி வேந்தரும்
காற்றெறி கடலெனக் களிப்பி னேங்கினர்'

என்ற செய்யுளும் 'கார்முகப் படலம் முற்றும்' என்ற தொடரும் காணப் படுகின்றன. (அ)

829 விடைபொரு - காளையைப் போன்ற. நடையினன் - தசரதன். உற்சாக மிகுதியினால் விடைபோல் பெருமிதமாக நடந்தனன். இடை - இடம். எவையும் - கரி, பரி, தேர் முதலிய எவையும். கால்பட - சண்ட மாருதம் வீசுவதனால்; கடலென எவையும் எழுந்து போயதே; ஒருமை பன்மை மயக்கம். (கு)

830 உலகு சில் இடம் என; சில் இடம் - சிறிய இடம்; இடம்: பெயர்ப் பயனிலை. வேந்தர்க்குச் சூரியன் உவமை: புறநா: 4:14-6. வேந்தரால் செறிந்த ஓடை - யானையின் நெற்றிப் பட்டம். ஓடையிற் பல மணிகள் பதித் திருத்தலால் இந்திரவில் உவமை.

(பி - ம்.) [1]'வேந்தர்கள்' [2]'சுடர்மணி', திரண்மணி' (கூ)

831 கால் நிமிர்ந்து - காம்பினின்றும் எழுந்து. பால் விரிந்து - வெண்மை நிறம் பரவி. குடைக்கு அன்னம். கொடிக்கு விண்ணின் தோல்.

(பி - ம்.) [1]'கால் விரிந்தெழு' [2]'ததுவெனப்' [3]'படலை மேனிவான்' [4]தனவெனப் பொலிந்து' (கூ)

கொடிகளின் தோற்றம்

832 நுடங்கிய துகிற்கொடி நூழைக் கைம்மலைக்
கடங்கலுழ் சேனையைக் கடலி தாமென
இடம்பட வெங்கணு மெழுந்து வெண்முகில்
தடம்புனல் பருகிடத் தாழ்வ போன்றவே.

பீலிக்குடைகளும் பேரிகையும்

833 இழையிடை யிளவெயி லெறிக்கு மவ்வெயில்
தழையிடை நிழல்கெடத் தவழு மத்தழை
மழையிடை யெழில்கெட மலரு மம்மழை
குழைவுற முழங்கிடுங் குழாங்கொள் பேரியே.

குதிரைகளையும் பெண்யானைகளையும் மகளிர் ஊர்தல்

834 [1]மன்மணிப் புரவிகண் மகளி ரூர்வன
அன்னமுந் தியதிரை யாறு போன்றன
பொன்னணி புணர்முலைப் புரிமென் கூந்தலார்
மின்னென மடப்பிடி மேகம் போன்றவே.

---

832 நுடங்கல்-அசைதல். நூழைக்கை-துவாரத்தை யுடைய துதிக்கை. கைம்மலை - யானை. இடம்பட - விசாலமாக; 'இடம்பட மெய்ஞ் ஞானம் கற்பினும்' (நாலடி. 116.) யானைகள் கடலுக்கும் அவற்றின் மீதிருந்தார் பிடித்த வெண்கொடிகள் வெண்மேகங்களுக்கும். முகில் நீருண்ணக் கடலிற் சூழல்: 'இரும்பல்யானை, யுடலுருட்க வீங்கிக் கடலென, வானீர்க்கூக்கும்' (புறநா. கஎ. 35-7.) புனல் - நன்னீர். (கஉ)

833 இழை - ஆபரணங்கள். 'தழை - மயிற்பீலி'; 'விழிக்குந் தழைப் பீலி' (தே. சுந்தா. அறத்துறை.) 'தழையுலாங்கையர்' (திருவிளை. 23:1.) தழை என்றது இங்கேபீலியாலியன்ற விருது விசேடத்தை. தழைபிடை வெயில் தவழும். தழை தன் நிறத்திலுல் மேகத்தின் அழகு கெடும்படி மல ரும்; திவ். 254. இடியோசையை எழுப்பும் மேகமும் நாணத்தாற் குழை யும்படி கூட்டமான பேரிகள் முழங்கும். (கங)

834 மன்மணிப்புரவிகள் - பொருந்திய கிண்கிணி மணிகளையுடைய குதிரைகள். மகளிர் குதிரை யூர்தல்: 851, 860, 874, 895. குதிரை களுக்கு அலைகளும், அவைகளை ஊர்ந்த மகளிருக்கு அன்னப் பறவைகளும் உவமை. குதிரைகளின் அணிக்கு அலைகள்: 895. யானைகள் மேகங்களுக்கும் மின்னல் அவற்றையூரும் பெண்களுக்கும் உவமை. பெண்கள் பிடியின் மேற் செல்லல்: 858, 881; கலிங்கத்துப். 287.

(பி - ம்.) [1]'மன்னிய', 'மன்னணி' (கச)

அவர்கள் சென்ற வழியின் தோற்றம்

835 இணையெடுத் திடையிடை நெருக்க வேழையர்
துணைமுலைக் குங்குமச் சுவடு மாடவர்
மணிவரைப் புயங்களிற் சாந்து மாகிமெல்
அணையெனப் பொலிந்ததக் கடல்செ லாறரோ.

நகில்களின் சிறப்பு

836 முத்தினுன் முழுநிலா வெறிக்கு மொய்ம்மணிப்
பத்தியா லிளவெயில் பரப்பும் [1]பாகினும்
தித்தியா நின்றசொற் சிவந்த வாய்ச்சியர்
[2]உத்திரா சங்கமிட் டொளிக்குங் கூற்றமே.

ஆண்மக்கள் களிறுகளில் செல்லல்

837 வில்லினர் வாளினர் வெறித்த குஞ்சியர்
கல்லினைப் பழித்துயர் [1]கனகத் தோளினர்
வல்லியின் மருங்குலார் மருங்கு மாப்பிடி
புல்லிய களிறென மைந்தர் போயினர்.

சிவிகைகள் வருணனை

838 மன்றலம் புதுமலர் மழையிற் சூழ்ந்தெனத்
[1]துன்றிருங் கூந்தலார் முகங்க டோன்றலால்
ஒன்றல பலமதி [2]யூருமானம் போல்
சென்றன தரளவான் சிவிகை யீட்டமே.

---

835. இணை எடுத்து - இரண்டாகக் கொண்டு; இரண்டென்றது ஒன்றை ஒன்று நெருக்கும் இரண்டு உறுப்புக்களை. மெல் அணை - மெல்லிய படுக்கை. கடல் - சேனைக்கடல். கடல் செல்லும் ஆறென்றது நயம். ஆறு - வழி. வழிமெத்தென்றிருந்ததனால் அணை என்றார். கடல் செல் ஆறு குங்குமச் சுவடும் சாந்தும் ஆகி அணையெனப் பொலிந்தது. (சிவ)

836 மணி - மாணிக்கம். பத்தி - வரிசை. வாய்ச்சியர் - வாயையுடைய பெண்கள்; 'தித்தியா நிறச் செங்கிடை வாய்ச்சியர்' (ச. 8:21.) உத்திராசங்கம் - உத்தரீயம். மேலாக்கு. ஒளிக்கும் கூற்றம் - நகில்கள். கூற்றம் நிலவெறிக்கும் வெயில் பரப்பும்.

(பி - மீ.) [1]'பாங்கினும்' [2]'உத்தரீகத்திடை யொளிக்குங்' (சசு)

837 வெறித்த குஞ்சியர் - நெருங்கிய சிகையை யுடையவர், 'வெறித்த செம்மயிர் வெள்ளெயிற்றுள்' (405); மணக்கும் குஞ்சியர் என்று பொருள் கூறுவாருமுளர். கல் - மலை. வல்லியின் மருங்குலார் - கொடிபோன்ற இடையையுடைய பெண்கள். (பி - மீ) [1]'கவின்கொள்' (சஎ)

838 மன்றல் அம் புதுமலர் - வாசனையுடைய அன்றலர்ந்த அழகிய மலர்கள். மழை - மேகம். மானம் - விமானம்; முதற்குறை. தரளவான்

யானைகளின் வருணனை

839 மொய்திரைக் கடலென முழங்கு மூக்குடைக்
கைகளிற் றிசைநிலைக் களிற்றை யாய்வன
மையலுற் றிழிமத மழைய ருமையால்
[1]தொய்யலைக் கடந்தில சூழி யானையே.

குதிரைகளின் வருணனை

840 சூருடை நிலையெனத் தோய்ந்துத் தோய்கிலா
வாருடை வனமுலை மகளிர் சிந்தைபோல்
தாரொடுஞ் சதியொடுந் தாவு மாயினும்
பாரிடை மிதித்தில பரியின் பந்தியே.

ஊடன் மகளிர் வருணனை

841 ஊடிய மனத்தின ருருத நோக்கினர்
நீடிய வுயிர்ப்பினர் [1]நெரிந்த நெற்றியர்
தோடவிழ் [2]கோதையுந் துறந்த கூந்தலார்
ஆடவ ருயிரென வருகு போயினர்.

சிவிகை - முத்துப் பல்லக்கு. வெள்ளிய விமானத்துள் இருந்தபடி திரை நீக்கிப் பார்க்கும் பெண்கள் முகம் மதிக்கு உவமை.

(பீ - மீ.) [1]'துன்றிய கோதையர்' [2]:பூர்விமானம்' (கஅ)

839 மூக்குடைக்களிறு: தே 'நெடுமூங்கிற்கைக்கரி (ஆனைக்காப். கடவுள்.) திசை நிலைக்களிற்றை - எட்டுத் திக்குகளிலும் நிலையாக உள்ள யானைகளை. ஆய்தல் போர் செய்வதற்கு என்க: விக்கிரம:உலா 60-62. தொய்யல் - சேறு; மதநீரால் உண்டானது. சூழி - முகபடாம். ஆனை மையலுற்றுக் கைகளில் களிற்றை ஆய்வன.

(பீ மீ.) [1]'தொய்யிலைக் கடிந்தில' (கக)

840 சூருடை நிலை - தெய்வத்தின் தன்மை. வார் - கச்சு. வனம் - அழகு. முலைமகளிர் - வேசையர். தோய்ந்தும் தோய்கிலா சிந்தை - புறத்தே உடம்பாற் பொருந்தும் மனத்தாற் கலவாத மனம். தார் - கிண்கிணி மாலை. சதியொடு தாவல் - தாள ஒத்துக்கு ஏற்பத்தாவுதல். குதிரைகள் பூமியை மிதியாமைக்குத் தெய்வத்தின் கால்கள் பூமியிற் பதியாமையும் வேசையர் உள்ளத்தில் அன்பு பதியாமையும் உவமை. (உ0)

841 உருத நோக்கினர் - அயலார் நோக்கி மாறு போன்ற நோக்கினையுடையவர்; 'செருஅச்சிறு சொல்லுஞ் செற்றூர் போலுங்கும், உருஅர் போன் றுற்றூர் குறிப்பு' (குறள், 1097.) நெரிந்த - வளைந்த. தோடவிழ் கோதை - இதழ்கள் விரிந்த மாலை. ஆடவர் உயிர் என - தம் கணவரே தமக்கு உயிர் என்று எண்ணினவராய்; ச. 6:9; 7:22, 25; 'இன்னுயிரன்ன பிரிவருங் காதலர்' (நற். உஉஎ:3); 'மனையுறை மகளிர்க் காடவருயிரென' (குறுந். கஉடு:உ.)

(பீ - மீ.) [1]'நெளித்த' [2]:தொடையலுந்' (உச)

யானைகள் செல்லுதல்

842. மாறெனத் தடங்களைப் பொருது மாமரம்
ஊறுபட் டிடையிடை [1]யொடியச் சாய்த்துராய்
ஆறெனச் [2]செல்வன வருவி பாய்கவுட்
[3]டாறெனக் கனலுகு தறுகண் யானையே.

சேனையின் மிகுதி

843 உழுந்திட விடமிலை யுலக மெங்கணும்
[1]அழுந்தலி லுயிர்க்கெலாங் [2]கொழுகொம் பானவன்
எழுந்தில னெழுந்திடைப் படருஞ் சேனையின்
கொழுந்துபோய்க் கொடிமதின் மிதிலை கூடிற்றே.

மகளிர் ஊரும் பண்டிகள்

844 கண்டவர் [1]மனங்கள்கை கோப்பக் காதலின்
வண்டிமிர் கோதையர் வதன ராசியால்
பண்டிகழ் பண்டிகள் பரிசிற் செல்வன
புண்டரீ கத்தடம் போவ போன்றவே.

---

842 மாறுஎன - மாறுனவை என்று கருதி. தடம் - கரை, மலைப் பக்கம். உராய்தல் - உரிஞ்சல். அருவி - மதஅருவி. கவுள் - கன்னம். தாறுஎன - தாறுஎன்று பாகர் சொன்ன மாத்திரையில்; தாறு - இருப்புமுள். தறுகண்மை - அஞ்சாமை.

தடங்களைப் பொருதலும், மரங்களை ஒடித்தலும் சாய்த்தலும், உராய்ந்து செல்லலும் ஆற்றுக்கும் இயல்பு; செம்மொழிச் சிலேடை.

(பி - மீ.) [1]'யொடித்துச்' [2]'சென்றன' [3]'சேறெனக் கனலுமிழ் சிறுகண்' (உஉ)

843 உலகம் - இடைநிலம். அழுந்தலில் உயிர்கள் - துன்பத்துள் வருந்துதல் இல்லாத உயிர்கள். தசரதன் கொழுகொம்பாக இருத்தலினால் அழுந்துதல் இல்லையாயிற்று. தசரதன் எழுந்திலன்; சேனையின் கொழுந்து மிதிலைநகர் வாயிலை எட்டியது.

(பி - மீ.) [1]'அழுந்திய' [2]'அருட்கொம்பாயினன்' (உங)

844 கண்டவர் - பார்த்த ஆடவர்களுடைய. கைகோப்ப - கூடிக் கொள்ள. வண்டு இமிர் கோதையர் - வண்டுகள் ஒலிக்கின்ற கூந்தலை யுடைய பெண்கள். வதனராசி - முகங்களின் தொகுதி. பண்டிகழ் பண்டிகள் - அலங்கரிக்கப் பட்ட (பாண்டில் என்ற) வண்டிகள். பரிசு - முறையே. பண்டிகள் தடாகங்களுக்கும் அவற்றில் உள்ள மகளிரின் வதனராசி தடங்களில் மலர்ந்துள்ள தாமரை மலர்களுக்கும் உவமை.

(பி - மீ.) [1]'மனங்களி கொடுப்ப', 'மனங்கள் கைகொடுப்ப வேறிய' (உச)

ஒரு பெண்ணின் கடைக்கண் நோக்கம்

845 பாண்டிலின்[1] வையத்தோர் பாவை தன்னெடும்
சண்டிய வன்பினே டேகு வானிடை
காண்டலு நோக்கிய கடைக்க ணஞ்சனம்
ஆண்டகைக் கினியதோ ரமுத மாயதே.

தன் காதலியைப் பிரிந்து தனியே செல்கின்ற ஆடவன் நிலை

846 பிள்ளைமா னோக்கியைப் பிரிந்து போகின்றான்
அள்ளனீர் மருதவைப் பதனி னன்னத்தின்
புள்ளுமத் தாமரைப் பூவு நோக்கினன்
உள்ளமுந் தானுநின் றாச லாடினன்.

வேறு

பேரிகையும் சங்குகளும் முழங்குதல்

847 அங்கண் ஞாலத் தரசு மிடைந்தவர்
பொங்கு வெண்குடை சாமரை போர்த்தலால்
கங்கை யாறு கடுத்தது காரெனச்
சங்கு பேரி முழங்கின தானையே.

---

845 பாண்டிலின் வையம் - எருது பூண்டவண்டி: 'பாண்டில் வையம் பண்ணி' (பெரும். கூ. 5:65.) 'ஆண்டகை பாவை தன்னெடு வையத்து எகும்' என்க. இங்ஙனம் அன்றி 'வைத்ததோர்' என்ற பாடம் கொண்டு, 'பாண்டிலிற் செல்லும் பாவையைத் தொடர்ந்து நடந்து எகுவான் ஆண்டகை' என்று கூறுவாரும் உளர்.

அடுத்த கவி பிரிந்து போகின்றானைக் குறிப்பதால் இது சேர்ந்து போகின்றானையே குறிக்கும் என்னல் பொருந்தும்.

(பி - மி.) [1] 'வைத்ததோர்' (உடு)

846 பிள்ளைமான் - மான் கன்று. அள்ளல் - சேறு. ஊசலாடியது 'அன்ன நடையோ அவள் நடையோ, எது சிறந்தது; தாமரை மலரோ அவள் பாதமோ எது மென்மையது' என்று நினைந்து நினைந்து என்க; அன்றி அவள் நடந்து வருதலை நினைந்து வருந்தியதனால் என்க; பெண் நடந்து வருதல்: 852. உள்ளமும் தானுமே ஊசலாடினன்: தலைமை பற்றி உயர்திணை முடிபேற்றது. (உசு)

847 அரசு - அரசர்கள். மிடைந்து - மிடைய; நெருங்க. அவரது. கடுத்தது - ஒத்தது. கார் - மேகம். வெண்குடையும் வெண்சாமரையும் வெள்ளை நிறமுள்ள கங்காநதிக்கு உவமை. சங்கு பேரி: உம்மைத் தொகை. சங்கும் பேரியும்: உ. 9:9. தானை போர்த்தலால் கடுத்தது. (உஎ)

சேனை போர்க்களம் போன்றமை

848 அமர[1]ரஞ்சொல் லணங்கனை யாருயிர்
கவருங் கூர்நுதிக் கண்ணெனுங் காலவேல்
குமரர் நெஞ்சு குளிப்ப வழங்கலால்
சமர பூமியு மொத்தது தானையே.

பெருக்கமான வீரர்களின் சிறப்பு

849 தோண்மி டைந்தன [1]தூண மிடைந்தென
வாண்மி டைந்தன [2]வான்மின் மிடைந்தெனத்
தாண்மி டைந்தன [3]தம்மி மிடைந்தென
ஆண்மி டைந்தன வாளிமி டைந்தென.

காமுகராகிய பலவீரர்களின் தனித்தனிச் செயல்கள்

850 வார்கு லாமுலை வைத்தகண் வாங்கிடப்
போர்கி லாது பிறங்கு முகத்தினன்
தேர்கி லானெறி யந்தரிற் சென்றொரு
மூரி மாமத யானையை முட்டினன்.

851 சுழிகொள் பாய்பரி [1]துள்ளவோ ரஞ்சொலாள்
வழுவி வீழ்தலும் ருளேயோர் [2]வள்ளருன்
எழுவி னீள்புயத் தாலெடுத் தேந்தியே
தழுவி [3]நின்றதல் லாற்றரை மேல்வையான்.

---

848 நுதி - முனை. கால வேல் - இறுதியைச் செய்யும் வேல். சமர பூமி - போர்க்களம். உம்மை இறந்தது தழுவிய எச்ச உம்மை. அணங்கு அனையார் வேல் வழங்கலால் தானை சமரபூமி ஒத்தது.

(பி - ம்;) [1]'ரஞ்சவுணங்' (உஅ)

849 மிடைந்தன - நெருங்கின. தூணம் - தூண். வாள் - கத்திகள். வான்மின் - ஆகாயத்திலுள்ள மின்னல்கள். தாள் - பாதங்கள். தம்மி- தாமரை; தெலுங்குமொழி. ஆள் - காலாட் படைகள். ஆளி - சிங்கம்.

(பி - ம்.) [1]'தூணி' [2]'மின்னின் வயங்கிட' [3]'தம்மின் மயங்கிட', 'தம்மின் மிடைந்தென' (உக)

850 வார்குலாம் - கச்சு வளைந்த. வாங்கிட - மீட்க. பிறங்கு- விளங்குகின்ற. நெறி - வழி. அந்தரில் - குருடரைப் போல். மூரி- வலிமை. (உ0)

851 சுழிகொள் - நல்ல சுழிகளைக் கொண்ட. பாய்பரி - பாய்ந்து செல்லும் குதிரை. எழுவின் - கணைய மரத்தைப் போன்ற.

(பி - ம்.) [1]'தாவவோர் சோர்குழல்' [2]'மைந்தன்றன்', 'வள்ளல் வந்தெழுவி' [3]'நின்றெழியான்', 'நின்றெழிந்தான்', 'நின்றெழி வான் றரைத்தான் வையான்' (உக)

852 துணைத்த தாமரை நோவத் தொடர்ந்தடை
கணைக்க ருங்கணி ணுளேயோர் காளைதான்
பணைத்த வெம்முலைப் பாய்மத யானையை
அணைக்க நங்கைக் ககலிட மில்லென்றான்.

853 சுழியுங் குஞ்சி மிசைச்சுரும் பார்த்திடப்
பொழியு மாமத யானையிற் போகின்றான்
கழிய கூரிய வென்றொரு காரிகை
விழியை நோக்கித்தன் வேலையு நோக்கினான்.

854 தரங்க [1]வார்குழற் றுமரைச் சீறடிக்
கருங்கண் [2]வாளுடை யாளையோர் காளைதான்
நெருங்கு பூண்முலை நீள்வளைத் தோளினீர்
மருங்கு லெங்கு [3]மறைந்தது நீரென்றான்.

855 கூற்றம் போலுங் கொலைக்கண்ணி னுலன்றி
மாற்றம் பேசு கிலாளையோர் மைந்தன்றான்
ஆற்று நீரிடை யங்கைக ளாலெடுத்
தேற்று வாருமை யாவர்கொ லாமென்றான்.

---

852 துணைத்த - இரண்டாகியுள்ள. தாமரை என்றது பாதங்களை. கணைக்கருங்கணினுள் - அம்பைப் போன்ற கரிய கண்களை யுடையவள். அணைக்க - கட்டுவதற்கு. அகலிடம் - மார்பு. நகில்களின் பரப்பு மிகுதி கூறியவாறு. (நூ)

853 சுழியும் குஞ்சிமிசை - சுழித்து முடித்த மயிர் முடியில். கழிய கூரிய வென்று - மிகவும் கூர்மையானவை என்று நினைத்து. விழியை நோக்கி வேலையும் நோக்குதல்: 'செங்கை வேல் பைம்புனத்துப், பண்ணுலா மழலைப் பசுங்கிளவி யெயினர்பொற் பாவைவிழி வேலொடொப்புப், பார்க்கும்' (குமர. பிரபந்த. 383.) (நூ)

854 தரங்க வார்குழல் - அலைகளைப் போல் சுருண்டு நீண்ட கூந்தல். சீறடி - சிறிய பாதங்கள். கண்வாளுடையாளை - கண்களாகிய வாளை யுடைய ஒரு பெண்ணை. மருங்குல் - இடை. இடையின் நுட்பத்தை நோக்கி இங்ஙனம் கூறினான்; 'புனத்தைக், கரும்போத கங்கலே மேய்வதென் றேகடி தோட்டுதற்கு, வரும்போது கொண்டு வரமறந் தீர்கொன் மருங்கினையே' (குலோத். கோவை. 90.); 'இடையெங்கு; வைத்து மறந்துவந் தீரஃ தியம்புமினே' (சீகாழிக்: 108.)

(பி - மி.) [1]'வார்புனற்' [2]'வாளனையாளை', 'வாள் சுழல் வாளை' [3]'மறந்து வந்தீர்' (நூ)

855 கண்ணுற் பேசல்: உ. 10:4; கண்ணெறி கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனுமில' (குறள், 1100); 'சொல்லு மாடுப கண்ணினுனே' (தொல். களவு. 23, நி. மேற்.). அவளைத் தொட்டு எடுத்துக் கரை யேற்றுவோர் பாக்கியம் செய்தவராவர் என்பைத உட்கொண்டு இங்ஙனம் வினவினான். (நூ)

ஒட்டகங்களின் இயல்பு

856 தள்ள ரும்பரந் தாங்கிய வொட்டகம்
தெள்ளு தேங்குழை யாவையுந் தின்கில
உள்ள மென்னத்தம் வாயு மூலர்ந்தன
கள்ளுண் மாந்தரிற் கைப்பன தேடியே.

பப்பரர் செல்லும் வருணனை

857 அரத்த நோக்கின ரற்றிரண் மேனியர்
பரித்த காவினர் பப்பர ரேகினர்
திருத்து கூடத்தைத் திண்கணை யத்தொடும்
எருத்தின் மாக்களி றேந்திய தென்னவே.

பிடியின்மேற் செல்லும் மகளிர் செயல்

858 பித்த யானை பிணங்கிப் பிடியிற்கை
வைத்த [1]மேலிருந் தஞ்சிய மங்கையர்
எய்த்தி டுக்கணுற் றூர்புதைத் [2]தார்க்கிரு
கைத்த லங்களிற் கண்ணடங் காமையே.

சிந்தர்கள் செல்லும் வருணனை

859 வாம மேகலை யாரிடை வாலதி
பூமி தோய்பிடிச் சித்தரும் போயினர்
காமர் தாமரை நாண்மலர்க் கானத்துள்
ஆமை மேல்வருந் [1]தேரையி னுங்கரோ.

---

856 பரம் - பாரம், சுமை; 857 [1]. தேன்குழை-இனிமையான தளிர்கள். மாந்தரில் - மாந்தரைப் போல். கைப்பன - கசக்கும் வேம்பு முதலிய வற்றை. ஒட்டகத்துக்கு வேம்பினிடம் விருப்பம் அதிகம். தேடி உள்ள மென்ன வாயும் உலர்ந்தன. (கூ)

857 அரத்தம் நோக்கினர் - செந்நிறத்தோடு கூடிய கண்களையுடைய வர்கள். அல்திரள் மேனி - இருள் திரண்டாலொத்த கரிய உடல். பரித்த காவினர் - சுமக்கும் காவடியை யுடையவர்கள். கூடம் - சம்மட்டி. கணையம் - எழுமரம்; இது மதயானையைத் தடுக்கும் மரம். பப்பரருக்கு யானை உவமை. (கூ)

858 பித்த யானை - மதவெறி கொண்ட களிறுகள். பிடியில் - பெண் யானைகளின் மேல். வைத்த - வைத்தன. எய்த்து - மனம் மெலிவுற்று. இடுக்கண் உற்றூர் - வருந்தினர்கள். புதைத்தாராகிய மங்கையர்க்கு அடங் காமையால் எய்த்து இடுக்கணுற்றூர். அச்சமுற்றோர் கண்களை மூடிக் கொள் ளுதல் இயல்பு. கண்களின் விரிவு கூறியபடி.
(பி - மீ.) [1]'போதங் கிருந்திடு மங்கைமார்' [2]'தாரிடு' (கூ)

859 வாம மேகலை - அழகிய மேகலாபரணம். வாலதி - வால். யானை களுக்கு வால் பூமியில் தோயும்படி நீண்டிருத்தல் உத்தம இலக்கணமென்பர். சித்தர் - மூன்றடி உயரமே உள்ளவர்கள்; இவர்கள் அந்தப்புர ஏவலாள

ஒருபெண் ஊர்ந்த குதிரையின்செயல்

860 இம்பர் நாட்டின் றரமல்ல ளீங்கிவள்
உம்பர் கோமகற் கென்கின்ற தொக்குமால்
கம்ப மாவரக் கால்கள் வளைத்தொரு
கொம்ப னாளைக்கொண் டோடுங் குதிரையே.

மகிழ்ச்சியோடு பெண்கள் செல்லுதல்

861 சந்த வார்குழல் சோர்ந்தவை தாங்கலார்
சிந்து மேகலை சிந்தையுஞ் செய்கிலார்
எந்தை வில்லிறுத் தானெனு மின்சொலை
மைந்தர் பேச மனங்களித் தோடுவார்.

அந்தணர் செல்லுதல்

862 குடையர் குண்டிகை தூக்கினர் குந்திய
நடையர் நாசி புதைத்தகை நாற்றலர்
கடக ளிற்றையுங் காரிகை யாரையும்
அடைய வஞ்சிய வந்தணர் முந்தினார்.

ராவர். காமர் - அழகிய. பெண்கள் கூட்டத்துக்குத் தாமரைக் கானமும், பெண்யானைக்கு ஆமையும், சிந்தருக்குத் தேரையும் உவமை. சிந்தருக்குத் தேரை: 'தேரை நடப்பன போற் குறள் சிந்தினோ, டோரு நடந்தன வொண் டொடி முன்னமே' (சீவக. 631); 'தேரையாய்க் குறளுஞ் சிந்துமி தந்தன' (சூளா. சுயம். 124.) தேரையின் சிந்தரும் போயினர். ஆங்கு அரோ: அசை.

(பி - ம்.) ''தேரையினாயினார்' (௩௯)

860 இம்பர் நாடு - இவ்வுலகம். ஈங்கிவள்: ஒரு சொல் நீர்மையது. உம்பர் கோமகன் - இந்திரன். கம்பமா - யானை; கம்பம்- கட்டுத்தறி. தன்மேல் ஒரு பெண்ணை ஏற்றிக்கொண்டு குதிரை ஓடுவது இவள் தேவேந்திரனுக்கு உரியவள் என்று கூறி விண்ணுலகுக்குச் செல்வது போலும். (௪௦)

861 சந்தம் - அழகு. சோர்தல் - அவிழ்தல். சிந்தையும் செய்கிலார்- நினைக்கவும் மாட்டார். எந்தை - சீராமன். (௪௧)

862 குண்டிகை தூக்கினர் - கமண்டலத்தை ஏந்தியவர். நிலத்தில் ஊரும் சிறிய ஜந்துக்களுக்குத் தீமை நிகழாமலிருக்கவும், அசுசிகளை மிதியா மற் செல்லவும் குந்தி நடப்பவர்கள்: 'பார்ப்பாராயிற் குந்தி மிதித்துக் குறு நடைகொண்டு வந்து தோன்றலும் (தொல். மெய்ப். 12, பேர்.) நாசிபுதைத்தல் பிராணாயாமத்துக்காக. கை நாற்றலர் - கைகளை இடைக்குக் கீழே தொங்க விடாதவர்கள்; அங்ஙனம் தொங்க விட்டால் அவை அசுசியாகி விடும் என்பர். காரிகையாரை அஞ்சுதல் புலன்களைக் கலக்கி விடுவாரென்று. (௪௨)

பெண்களின் செயல்

863 நாறு பூங்குழ னங்கையர் [1]கண்ணினீர்
ஊறு நேர்வந் துருவு வெளிப்பட
மாறு [2]கொண்டனை வந்தனை யாகில்வந்
தேறு தேரெனக் கைக ளிழிச்சுவார்.

பலவித ஒலிகள்

864 குரைத்த தேருங் களிறுங் குதிரையும்
நிரைத்த வார்முர [1]சுந்நிறைத் தெங்கணும்
இரைத்த பேரொலி யாலிடை யாவரும்
உரைத்து ணர்ந்தில ரூமரி னேகினர்.

பெண்கள் கூட்டத்துக்குப் போய்கை

865 நுட்சி லம்பி வலந்தன நுண்டுகிற்
கட்சி லம்பு கருங்குழ லார்குழு
உட்சி லம்பு சிலம்ப வொதுங்கலால்
புட்சி லம்பிடு பொய்கையும் போன்றதே.

ஆடவரின் கண்கள் வண்டுகள் இவற்றின் செயல்

866 தெண்டி ரைப்பர வைத்திரு வன்னவர்
நுண்டி ரைப்புரை நோக்கிய நோக்கினைக்
கண்டி ரைப்பன வாடவர் கண்களே
வண்டி ரைப்பன வானை மதங்களே.

---

863 நீர் ஊறு - நீர் ஊறுதலில். உரு - தம் காதலரின் உருவெளித் தோற்றம். மாறுகொண்டனை - பகைமை கொண்டு போனாய். கைகளைத் தாழ்த்தல் உருவெளித் தோற்றத்திற் கண்ட காதலரைத் தேரேற்ற.

(பி. மீ.) [1]'கண்ணி னின்றூறு' [2]'கொண்டயல் நின்றனராகவ்' (சுரு)

864 குரைத்த தேர் - ஒலித்த தேர். நிரைத்த - வரிசைப் படுத்தியுள்ள. இரைத்த - சத்தித்த. (பி-மீ.) [1]'சுந்நிமிர்ந்', 'சுந்நெளிந்' (சச)

865 நுண் சிலம்பி - நுட்பமான சிலந்திப் பூச்சி. வலந்தஅன = வலந்தன - சூழ்ந்தாற் போன்ற. 'சிலம்பி வலந்தன துகில்' (பெரும்பாண். 235-6; நெடுநல். 59; பதிற். நகக: 13-4; அகநா. தகக: 5; சீவக: 340; தக்க. 54.) கள் சிலம்பு-வண்டுகள் ஒலிக்கின்ற; கள்:வண்டினுள் ஒருவகை; திருச்சிற். 295, பேர். புள் - அன்னப் பறவை. உள் சிலம்பு - சிலம்பின் உள்ளீடாகிய பரல். பெண்களின் காற்சிலம் போசை அன்னத்தின் குரலுக்கு: 171, அடிக். (சடு)

866 பரவைத் திரு - பாற்கடலில் உதித்த இலக்குமி. திரைப்புரை - திரையின் தவாரம். இரைப்பன - மோகிப்பன; தக்க. 129. 4 ஆம் அடி: 'வரிவண்டார்க்கும் வாய்புகு கடாஅத்து.....வயக்களிற் றெருத்தல்' (அகநா. எஅ: 3-4.) (சக)

வாசனைப்பொடியும் தூளியும்

867 [1]எண்ண மாத்திர மும்மரி தாமிடை
வண்ண [2]மாத்துவர் வாய்க்கனி வாய்ச்சியர்
திண்ண [3]மாத்தொளிர் செவ்விள நீரிழி
சுண்ண மார்த்தன தூளியு மார்த்தவே.

சிலம்புகள் குதிரைகள் இவற்றின் முழக்கம்

868 உழைக லித்தன வென்ன வுயிர்த்துணை
நுழைக லிக்கரும் கண்ணியர் நூபுரம்
இழைக லித்தன வின்னிய மாயெழு
மழைக லித்தென வாசி கலித்தவே.

புருஷர் பெண்களை நோக்கிய வண்ணம் வியந்து செல்லல்

869 மண்க ளிப்ப[1]நடப்பவர் வாண்முக
உண்க ளிக்கம லங்களி னுள்ளுறை
திண்க ளிச்சிறு தும்பியெ னச்சிலர்
கண்க ளிப்பன காமன் களிக்கவே.

---

867 எண்ணம் மாத்திரமும் அரிதாம் - நினைக்கவும் (கருதலளவைக் கும்) அருமையான. வண்ணம் - நிறம். மாதுவர் - பெருமை தங்கிய பவளம். கனி வாய்ச்சியர் - கனிந்த வாயை யுடையவரது. திண்ணம் - உறுதியாக. மாத்து ஒளிர் - பெருமையால் விளங்கும்; மாத்து - பெருமை (திருச்சிற். 373.) சுண்ணம் - வாசனைப் பொடி. ஆர்த்தன - நிறைந்தன.

(பி - மீ.) [1]'எண்ணு' [2]'மார்த்தது வர்க்கனி' [3]'மார்த்தொளிர்' (சஎ)

868 உழை - ஏழிசைகளில் ஒன்று. கலித்தல் - ஒலித்தல். உயிர்த் துணை நுழை கலி கரும் கண்ணியர் - ஆடவரின் உயிரளவு ஊடுருவிச் செல்லுகின்ற வலியமைந்த கரிய கண்களையுடைய மகளிர். 'உழை கலித் தன வென்ன நூபுர இழை கலித்தன' என்க. இன்னியமாய்-அந்தச் சிலம் போசைக்குப் பக்கவாத்தியமாக. எழுமழை - வானத்தில் எழும் மேகங்கள்; ஏழு மேகங்களுமாம். வாசி-குதிரைகள். குதிரைகளின் முழக்கத்துக்கு மேக முழக்கம் உவமை. (சஅ)

869 மண் - பூமிதேவி. மண் களித்தல் மெதுவாக நடத்தலால்; அன்றி அழகிய பெண்ணின் பாதபரிசத்தால் களிப்புத் தோன்றியது என்னினும் ஆம்; 3. 5: 19. உண்களிக்கமலம் - மதுவுண்ட களிப்பைக் காட்டும் வழி களாகிய தாமரை மலர்கள்; களிப்பைத் தன்னிடம் கொண்ட தாமரையுமாம். கண்களிலுள்ள கரு மணியை வண்டு எனக் கொண்டு சில ஆடவரின் கண் கள் களித்தன. (பி - மீ.) [1]'நடப்பவோர் வாணுதல்' (சக)

வழிக்கொண்டு சென்ற ஆடவர் மகளிரின் பெருக்கம்

870 சித்தி ரத்தடந் தேர்மைந்தர் மங்கையர்
உய்த்து ரைப்ப நினைப்ப வுலப்பிலர்
இத்தி றத்தின ரெத்தனை யோபலர்
மொய்த்தி ரைத்து வழிக்கொண்டு முன்னினர்.

வேறு

எழுந்த தூளியின் வருணனை

871 சூசையுறு பரியுந் தேரும் வீரருங் குழுமி யெங்கும்
விசையொடு [1]கடுகப் பொங்கி வீங்கிய தூளி விம்மிப்
பசையுறு துளியின் முரைப் பசுந்தொளை யடைத்த மேகம்
திசைதொறு நின்ற யானை மதத்தொளை [2]செம்மிற் றன்றே.

வீரர்கள் தம் காதலிகளுக்கைப்பற்றி மதவெள்ளத்திற் செல்லுதல்

872 கேடகத் தடக்கை யாலே கிளரொளி வாளும் பற்றிச்
சூடகத் தளிர்க்கை [1]மற்றைச் சுடர்மணித் தடக்கை பற்றி
ஆடகத் தோடை யானை யழிமதத் திழுக்க லாற்றிற்
பாடகக் காலி னுரைப் பயப்பயக் கொண்டு போனர்.

மலர்களைப் பறித்துத்தருமாறு மகளிர் தம் கணவரை வேண்டுதல்

873 செய்களின் மடுவி னன்னீர்ச் சிறைகளி னிறையப் பூத்த
நெய்தலுங் [1]குமுதப் பூவு நெகிழ்ந்தசெங் கமலப் போதும்
கைகளு முகமும் வாயுங் கண்களுங் காட்டக் கண்டு
கொய்திவை தருக வென்று கொழுநரைத் தொழுகின் றனரும்.

---

870 சித்திரத் தடந்தேர் - அழகமைந்த விசாலமான தேரில்; உய்த்து உரைப்பதற்கும் நினைப்பதற்கும். உலப்பிலர் - அளவில்லாதவர். (நம)

871 சூசை - கடிவாளம். மேகம் பசை உறு தூளியின் தாரை பசு தொளை - மேகத்தின் ஈரம் பொருந்திய நீர்த்துளிகளின் தாரைகள் வருவதற் குரிய பசிய தொளைகளை. மதத்தொளை செம்மிற்று - மதம் ஒழுகும் துவாரங் களில் நெருங்கின: 4. 11: 31; நக்க. 135. செம்மிற்று - அடைத்தது; தூளி: எழுவாய். அடைத்த செம்மிற்று: பயனிலை.

(பி - மீ.) [1]'முகப்' [2]'செறிந்த வன்றே' (நிக)

872 கேடகத் தடக்கை - கேடகத்தைப் பிடித்துள்ள இடக்கை. ஆட கத்து ஓடை - பொன்னுற் செய்த நெற்றிப் பட்டம். அழிமதம் - பெருமதம்; சீவக. 1193. பாடகம் - காலணிகளுள் ஒன்று. வலக்கையிலுள்ள வாளை வீரர்கள் இடக்கைக்கு மாற்றிக் கொண்டு சூடகத்தை அணிந்த தளிர் போன்ற தம் காதலிகளின் கையை வலக் கையாற் பிடித்துக் கொண்டு யானை மத வெள்ளத்தில் மெதுவாகக் கொண்டு சென்றார்கள் என்பதாம்

(பி - மீ.) [1]'மற்றோர் தோளைத் தடக்கையாற் பற்றி' (நுஉ)

873 நீர்ச்சிறைகள் - அணை; 879. கமலப் போது கைகளுக்கும் முகத் துக்கும்; குமுதப் பூ வாய்க்கு; நெய்தல் கண்களுக்கு; எதிர் நிரனிறையணி.

யானையின் வருகையைக்கேட்ட பெண்களின் செயல்

874 பந்தியம் புரவி நின்றும் பாரிடை யிழிந்து வாசக்
குந்தள பாரஞ் சோரக் குலமணிக் கலன்கள் சிந்தச்
சந்தநுண் டுகிலும் வீழத் தளிர்க்கையா லணைத்துச் சார
வந்தது வேழ மென்ன மயிலென விரியல் போவார்.

ஒருகணத்திற் பகலும் இரவும் தோன்றல்

875 குடையொடு[1]பிச்சந் தொங்கற் குழாங்களுங்கொடியின்காடும்
இடையிடை மயங்கி யெங்கும் வெளிகரந் திருளைச் செய்யப்
படைகளு முடியும் [2]பூணு மாரமும் பகலைச் செய்ய
இடையொடு கணத்தி னுள்ளே யிரவுண்டு பகலு முண்டே.

ஆடவர் பெண்களுக்கு வழிவிட்டு விலகிச்செல்லுதல்

876 முருக்கிதழ் முத்த மூரன் முறுவலார் முகங்க ளென்னும்
திருக்கிளர் கமலப் போதிற் றீட்டிய கிடந்த கூர்வாள்
நெருக்கிடை யறுக்கு நீவிர் நீங்குமி னீங்கு மென்றென்
றருக்கனி லொளிரு மேனி யாடவ ரகலப் போனார்.

(பி - மீ.) [1]'கமலப்பூவு கிறைந்த செங்குமுதம்' (நூ)

874 பந்தி அம்புரவி - வரிசையாகச் செல்லும் அழகிய குதிரைகள், குந்தள பாரம்-கூந்தல். சந்தம் - ஒளி. வந்தது வேழம் என்ன; என்ன-என்று பிறர் சொல்ல. இரியல் போவார்-கெட்டு ஓடுவார்கள். (நூசு)

875 பிச்சம் - மயிற் பீலிக் குடை. தொங்கற், குழாங்கள் - பீலிக் குஞ் சங்களின் தொகுதிகள்; இவை ஒருவகை விருது; குலோத். உலா: 83, 132. வெளிசுரந்து - ஆகாயத்தை மறைத்து, வெற்றிட மில்லாமல் மறைத்து; இருளைச் செய்ய: 'பள்ளிப் பல தொங்கற் சோலை பகல் விலக்க' (குலோத். உலா, 83.)'தொங்கலுங் குடையுந் தோகைப் பிச்சமுஞ் சுடரை யோட்ட' (897); 'கொடிதழை கவிகைவான் றொங்கல் குஞ்சரம், படியுறு பதாகைமீ விதானம் பல்வகை, இடையிலா தெங்கணு மிசைய மீமிசை, மிடைதலி னுலகெலாம் வெயி லிழப்பவே' (கூ. 6: 48.) படை - ஆயுதம். முடி-கிரீடம். ஆரம் - பொன் முத்து மணிகளால் இயன்ற மாலைகள்.

(பி - மீ.) [1]'களிறுந்' [2]'பூணும் படர் வெயில் பரப்பிச் செல்ல' (நூஇ)

876 முருக்கு இதழ் - முள்ளு முருங்கைப் பூவை ஒத்த வாய். முத்த மூரல் - முத்துக்களைப் போன்ற பற்கள். நெருக்கு இடை அறுக்கும் - நெருக் கத்தை இடையே புகுந்து அறுக்கும். அருக்கன் - சூரியன்.

ஒப்பு; 'வாளாரந் துடைத்த வைவேலிரண்டுடன் மலைந்த வேபோல் ஆள்வழக் கொழிய நீண்ட வணிமலர்த் தடங்கண்' (சீவக. 461.) (நூசு

பெண்கள் போவது அருமை என்று நிற்றல்

877 நீந்தரு நெறியி னுற்ற நெருக்கினுற் சுருக்குண் டற்றுக்
காந்தின மணியு முத்துஞ் சிந்தின கலாபஞ் சூழ்ந்த
பாந்தளி னல்கு லார்தம் பரிபுரம் [1]புலம்பு பாதப்
பூந்தளிர் நுறைப்ப மாழ்கிப் போக்கரி தென்ன நிற்பார்.

வண்டிகளிற் பூட்டிய காளைகள் கட்டவிழ்த்துக்கொண்டு செல்லல்

878 கொற்றநல் லியங்க ளெங்குங் கொண்டலிற் றுவைப்பப்
பெற்றவே றன்னப் புள்ளிற் பேதையர் வெருவி நீங்க[பண்டிப்
முற்றுறு [1]பரங்க ளெல்லா முறைமுறை பாசத் தோடும்
பற்றற வீசி யேகி யோகியிற் பரிவு தீர்ந்த.

நீர் நிலைகளிலே படிந்த யானைகளின் செயல்

879 காற்செறி வேகப் பாகர் கார்முக வுண்டை பாரா
வார்ச்செறி கொங்கை யன்ன கும்பமு மருப்புங் காணப்
பாற்செறி கடலுட் டோன்றும் பணைக்கைமால் யானையென்ன
நீர்ச்சிறை பற்றி யேறு நின்றகுன் றனைய வேழம்.

பாணரும் விறலியரும்

880 அறலியற் கூந்தற் கண்வா ளமுதகு குதலைச் செவ்வாய்
விறலிய ரோடு நல்யாழ்ச் செயிரியர் புரவி மேலோர்
நறைசெவிப் பெய்வா ரென்ன நைவள [1]முழுதும்பாடி
முறைமுறை [2]நணுகப்போனர் கின்னர மிதுன மொப்பார்.

---

877 நீந்தரு நெறி - கடத்தற்கு அரிய நெடுவழி. சுருக்குண்டவை மணிகளும் முத்தும் கோத்த நாண். காந்து இனம்: காந்துதல் - பிரகாசித்தல். இனம் - ஒன்றுக்கு ஒன்று இனமான; காந்தின: பெயரெச்சமும் ஆம். கலாபம் - பதினாறு கோவையாகிய அணி. பாந்தள் - நாகம். பரிபுரம் - சிலம்பு. பூந்தளிர் - பாதங்கள். சிந்தின உறைப்பப் போக்கரி தென்ன நிற்பார். (பி - மீ.) [1]'புலம்பப் பைம்பொற்' (நிஎ)

878 கொற்ற நல் இயங்கள் - வெற்றி பொருந்திய நல்ல வாத்திய வகைகள். கொண்டலின் துவைப்ப - மேகங்களைப் போல் ஒலிப்ப. பண்டி பெற்ற - வண்டியிற் பூட்டிய. ஏறு - காளைகள்; எழுவாய். பரங்கள் - பாரங்கள். பாசம்-தம்மை நுகத்திற் பிணித்த கயிறு. பரிவு-துன்பம். துவைப்பப் பேதையர் புள்ளின் நீங்க ஏறு வீசி யேகி பரிவு தீர்ந்த. யோகிகள் காளைகளுக்கு உவமை. (பி - மீ.) [1]'பரிக' (நிஅ)

879 கால் செறி வேகம் - காற்றைப் போன்ற வேகம். கார்முக உண்டை - வில்லினின்றும் அடிக்கப்படும் மண் உருண்டை. யானையின் மத்தகத்துக்கும் மருப்புக்கும் கொங்கைகள் உவமை. பணைக்கை - பருத்த துதிக்கை. யானை - ஐராவதம். நீர்ச்சிறை; 873. குளம் பாற்கடலுக்கு உவமை. (நிக)

880 அறல் இயல் கூந்தல் - கருமணலை ஒத்த கூந்தல். செயிரியர் - பாணர்; 794, 886. நறை - இசையாகிய தேன். நைவளம் - நட்டபாடை;

மதங்கொண்ட யானையின்செயல்

881 [1]அருவிபெய் வரையிற் பொங்கி யங்குச நிமிர வெங்கும்
இரியலிற் சனங்கள் சிந்த விளங்களிச் சிறுகண் யானை
வரிசிறைத் தும்பி யீட்டம் வார்மதந் தோய்ந்து மாதர்
சுரிகுழற் படிய வேறும் பிடியையுந் தொடர்ந்து செல்வ.

தசரதனுடைய நேயமங்கையர் செல்லுதல்

882 நிறைமதித் தோற்றங் கண்ட நீனெடுங் கடலி தென்ன
அறைபறை துவைப்பத் தேரு மானையு மாடன் மாவும்
கரைகெழு வேற்க ணூரு மைந்தருங் கவினி யொல்லை
நெறியிடைப் படர வேந்த னேயமங் கையரெ ழுந்தார்.

கைகேயி செல்லுதல்

883 பொய்கையங் கமலக் கானிற் பொலிவதோ ரன்ன மென்னக்
கைகையர் வேந்தன் பாவை கணிகைய ரணியி னீட்டம்
ஐயிரு நூறு சூழ வாய்மணிச் சிவிகை தன்மேல்
தெய்வமங் கையரு நாணத் தேனிசை முரலப் போனாள்.

1237; சீவக. 2435. நைவளப் பாடல்: சிறுபாண். 36; குறிஞ்சி. 146; பரி. கஅ: 15-21,உரை. விறலியும் பாணனும் துயிலிடை பாடுவோர்; திருச்சிற். 375. இன்னர மிதுனம்-ஆணும் பெண்ணும் சேர்ந்திருக்கும் ஒரு சிருஷ்டி; தேவசாதி; தேவருக்கும் அப்ஸரஸ்திரீகளுக்கும் பிறந்த உயிர் என்பர். இன்னரர் மானிடவுடலும் குதிரை முகமும் பெற்ற சாதி. யாழைப் போலப் பாடுகிறவர். இசையின் தராதரத்தை அறிபவர்; 940, 947; உ. 8:12; பெரும் பாண். 494; தக்க. 114, 151, 610. பாணரும் விறலியரும்: 1279.

(பி - மீ.) [1]'வழுதப் பாடல்', [2]'பகர்ந்து' (சுo)

881 அங்குசம் நிமிர: 607, 907. சிறுகண் யானை: 842 பி-ம். யானை ஏறும்பிடிகளையும் தொடர்ந்து செல்வ.

(பி - மீ.) [1]'அருவிபாய்' (சுக)

882 அறைபறை: 1106; குறள், 1076. கவினி - அழகு அமைந்து. நேயமங்கையர்: கோசலை முதலிய மூவர். பறை முழக்கமும் தேர் முதலிய தொகுதிகளின் பெருக்கமும் சேர்ந்து கடலெனத் தோன்ற எழுந்தார். சில பிரதிகளில் இப்பாடல் இல்லை. (சுஉ)

883 கமலக் கானம் வேசியரின் விழிகளுக்கு உவமை. கணிசையர் யாவரும் கைகேயியைப் பார்த்துக் கொண்டே சென்றார் என்க; 'வாங்கு வளைக் கையார் வதன மதிபூத்த, பூங்குவளைக் காட்டிடையே போயினான்' (நள. க:19.) மங்கல மாகிய வெள்ளணி யணிந்து சென்றதனால் அன்னம் என்றார். தசரதனுடைய நேயமங்கையருட் சிறந்தவளும் இராமபிரானிடம் மிக்க அன்புடையவளும் ஆதல் பற்றிக் கைகேயியை முற்கூறினர். (சுங)

சுமித்திரை செல்லுதல்

884 [1]விரிமணித் தார்கள் பூண்ட[2]மென்பிடி வெரிநிற் றோன்றும்
[3]அரிமணித் தடங்க ணல்லா ராயிரத் திரட்டி சூழக்
குருமணிச் சிவிகை மேல்வெண் கொண்டலின் மின்னிதென்ன
இருவரைப் பயந்த நங்கை யாழிசை முரலப் போனாள்.

கஞ்சுகிகள் பெண்களைக் காத்துப்போதல்

885 காரண மின்றி யேயுங் [1]கனலெழ விழிக்குங் கண்ணர்
வீரர்வேத் திரத்தர் கேள்வி விருத்தர்கஞ் சுகத்து மெய்யர்
தாரணி புரவி மேலோர் தலத்துளோர் [2]கதித்த சொல்லர்
ஆரணங் கனைய மாத ரடிமுறை காத்துப் போனர்.

கோசலை செல்லுதல்

886 வெள்ளெயிற் றிலவச்செவ்வாய் முகத்தைவெண்மதியமென்று
கொள்ளெயிற் [1]றிரள்வான் மீன்கள் குழுமிய தனைய [2]வாகித்
தெள்ளரிப் [3]பாண்டிற் பாணிச் செயிரிய ரிசைத்தேன் சிந்த
வள்ளலைப் பயந்த நங்கை வானவர் வணங்கப் போனாள்.

---

884 வேசரி என்ற பாடத்துக்குக் கோவேறுகழுதை என்பது பொருள். வெரிந் - முதுகு. இருவர் - இலக்குமணன், சத்துருக்ஙன்.

(பி - மீ.) [1]'விரிமலர்ந்த' [2]'வெல்சரி', 'வேசரி', 'வெம்பரி' [3]'அரி மலர்த்' (சுச)

885 கனலெனக் கொதிக்கும் கண்: 'தீயுந் தண்ணெனக் கொதித்திடு செங்கண்' (கூர்ம. 36.) வேத்திரம் - பிரம்பு. கேள்வி விருத்தர் - கேள்வி ஞானமுடைய வயது முதிர்ந்தவர். கஞ்சுகம் - சட்டை. மெய்யர் - இவர்கள் அலிகள் என்ப. 'அச்சுறு நோக்கி னறுபது கழிந்த காஞ்சுகி மாக்கள்' (பெருங். உ. 5:109—10.) தலத்துளோர் - நடந்து செல்பவர். கதித்த சொல் - கோபமிக்க மொழி. முறை - முறையாக.

(பி - மீ.) [1]'கனலென' [2]'சலத்த' (சுடு)

886 பாண்டில் - தாளம். செயிரியர்: இவர்களுக்கு யாழ் உண்டு. வள்ளல் - இராமர். வானவர் வணங்கப் போனாள்: 'சுற்றத்தார் தேவரொடுந் தொழுகின்ற கோசலை' (உ. 11: 65.)

சில பிரதிகளில் இச்செய்யுளின் முதன் மூன்றடிகள், 'எள்ளுதற் கரிய தெய்வ மடந்தைய ரேழைஞ் ஞாறு, கொள்ளெயிற் கணிகை மாதர் குழாங்கள்சூழ்ந் தேக வேகும், தள்ளுதற் கரிய செம்பொற் றேரின்மேற் றருமன் னன்' என்று காணப்படுகின்றன.

(பி - மீ) [1]'சுற்றி' [2]'வூர்தி' [3]'பாணிப் பாண்டிற்' (சுசு)

மாதர் கோசலையைச் சூழ்ந்து செல்லுதல்

887 செங்கையின் மஞ்ஞை யன்னஞ் சிறுகிளி பூவை பாவை
சங்குறை கழித்த வன்ன சாமரை முதல தாங்கி
இங்கல தெண்ணுங் கான்மற் றெழுதிரைவளாகத் தெங்கும்
மங்கைய ரில்லை யென்ன மடந்தையர் மருங்கு போனர்.

அந்தப்புர ஏவலாட்கள் செல்லுதல்

888 கூனெடு குறளுஞ் சிந்துஞ் சிலதியர் குழாமுங் கொண்ட
பானிறப் புரவி யன்னப் புள்ளெனப் பாரிற் செல்லத்
தேனெடு நிமிறும் வண்டுந் தும்பியும் [1]பந்தர் செய்யப்
பூநிறை கூந்தன் மாதர் [2]புடை மடப் பிடியிற் போனர்.

தசரதனுக்குரிய அறுபதினாயிரம் மகளிர் செல்லுதல்

889 துப்பினின் மணியிற் பொன்னிற் சுடர்மர கதத்தின் முத்தின்
ஒப்பற வமைத்த [1]வைய மோவியம் [2]போல வேறி
மூப்பதிற் றிரட்டி கொண்ட வாயிர முகிழ்மென் கொங்கைச்
[3]செப்பருந் திருவி னல்லார் தெரிவையர் சூழப் போனர்.

---

887 பூவை - மைனா என்று வழங்கும் பறவை. பாவை - பொம்மை. சங்கினை உறையினின்றும் எடுத்தாற் போன்ற மிக்க வெண்மையான சாமரை. சங்கை உறையில் வைத்தல் மரபு. எழுதிரை வளாகம் - கடலாற் சூழப்பட்ட ஏழாகிய பூமிகள்; சப்தத்தீவுகள். (சுஎ)

888 சிலதியர் குழாம்-ஏவல் மகளிரின் கூட்டம். கூனெடு.....குழாமும் தலைவியைத் தொடர்ந்து வரல்: 1228; 'குறள் சிந்தினெடோரு நடந்தன வொண்டொடி முன்னே' (சீவக. 631.) புரவிக்கு அன்னப் புள் உவமை: 'செங்கா லன்னத்துச் சேவலன்ன, குரூஉ மயிர்ப் புரவி' (மதுரைக். 386-7); 'விசும்பா டன்னம் பறைநிவந் தாங்குப், பொலம்படைப் பொலிந்த வெண்டேர்' (குறுந். உ0நி:உ-3); 'நிரைபறை யன்னத் தன்ன விரை பரிப், புல்லுளைக் கலிமா', 'வயங்குசிறை யன்னத்து நிரைபறை கடுப்ப, நால்குடன் பூண்ட கானவில் புரவி' (அகநா. உநச: 3-4, நஉச: 10-11.) தேனெடு... தும்பியும்: வண்டு சாதிகள் நான்கு; 1202; 1222; 'மங்கை நல்லவர் கண்ணு மனமும் போன், றெங்கு மோடி யிடறுஞ் சுரும் புகாள், வண்டு காண்மதிழ் தேனினங் காண்மது, உண்டு தேக்கிடு மொண் மிஞிற் றீட்டங்காள்' (சீவக. 892.) புடை-பக்கங்களில்.

(பி - ம்.) [1]'தொடரச் செய்ய', 'தொடர்ந்து செல்லப்' [2]'புடை நடைப்' (சுஅ)

889 துப்பு - பவளம். வையம் - வண்டியில். மூப்பதிற் றிரட்டி கொண்ட வாயிரந் திருவி னல்லார் - அறுபதினாயிரம் மகளிர்: இவர் தசரதன் மனைவியர்; முகிழ் - தாமரை யரும்பு.

வசிட்டர் செல்லுதல்

890 செவிவயி னமுதக் கேள்வி தெவிட்டினர் தேவர் நாவின்
அவிகையி னளிக்கு நீரா [1]ராயிரத் திரட்டி சூழக்
கவிகையி னீழற் கற்பி னருந்ததி கணவன் [2]வெள்ளைச்
சிவிகையி னன்ன மூருந் திசைமுக னென்னச் சென்றான்.

பரத சத்துருக்கனர் செல்லுதல்

891 பொருகளி றிவுளி பொற்றேர் பொலங்கழற் குமரர் முந்நீர்
அருவரை சூழ்ந்த தென்ன வருகுமுன் பின்னுஞ் செல்லத்
திருவளர் மார்பர் [1]தெய்வச் சிலையினர் தேரர் வீரர்
இருவரு முனிபின் போன விருவரு மென்னப் போனர்.

தசரதன் செல்லுதல்

892 நித்திய நியம முற்றி நேமியான் பாதஞ் சென்னி
வைத்தபின் மறைவல்லோர்க்கு வரம்பறு மணியும்பொன்னும்
பத்தியா னிரையும் பாரும் பரிவொடு நல்கிப் போனான்
முத்தணி [1]வயிரப் பூணன் மங்கல முகுழ்த்த நன்னாள்.

(பி - ம்.) [1]'தேரி னேவியம்', [2]'புகழ்' [3]'செப்பருமுருவி' (கூ)

890 தெவிட்டினர் - மிகுதியாகக் கேட்டவர்கள். தேவர்நா-அக்கினி- அவிகையின் - அவியைத் தம் கைகளால். கவிகை - குடை. வெண்சிவி கைக்கு அன்னம் உவமை. வசிட்டருக்குப் பிரமன் உவமை.

(பி - ம்;) [1]'ராயிர கோடி', [2]'முத்தின்' (ஏ)

891 இவுளி - குதிரை. குமரர் - காலாட்கள். முந்நீர் - கடல். முனி- கோசிகர். பரத சத்துருக்கனருக்கு இராம லட்சுமணர் உவமை.

(பி - ம்.) [1]'தெய்வத் தேரினர் சிலேக்கை', 'செம்பொற்' (ஏக)

892 நேமியான் - அரங்கநாதன். பத்தி ஆனிரை - வரிசையாக வுள்ள பசுக்கூட்டம். பார் - பூமி. யாத்திரா தானத்தின் பொருட்டு நல்கினன். முகுழ்த்தம் - முகூர்த்தம்- மங்களகரம் ஆதல் பற்றி வெண்ணிறத்தவை யான முத்தையும் வைரத்தையும் கூறினர்.

(பி - ம்.) [1]'முழவுத் தோளான் மங்கல மொழிந்த நாளில்' (ஏஉ)

வாழ்த்தும் பல்லாண்டும்

893 இருபிறப் பாள ரெண்ணு யிரர்மணிக் [1]கலச மேந்தி
அருமறை வருக்க மோதி யறுகுநீர் தெளித்து வாழ்த்த
வரன்முறை வந்தார் கோடி மங்கையர் மழலைச் செவ்வாய்ப்
பருமணிக் கலாபத் தார்பல் லாண்டிசை பரவிப் போனார்.

அரசர் கூட்டம் எழுந்தது

894 கண்டன னென்னை யென்பார் கண்டில னென்னை மென்பார்
குண்டலம் வீழ்ந்த தென்பார் குறுகரி தினிச்சென் றென்பார்
உண்டுகொ லெழுச்சி யென்பா ரொலித்தது சங்க மென்பார்
மண்டல வேந்தர் வந்து [1]நெருக்கினர் மயங்கி மாதோ.

எழுந்த தூளியின் மிகுதி

895 ஆர்த்தது விசும்பை முட்டி யகன்பெருந் திசைக ளெல்லாம்
போர்த்ததங் கொருவர் தம்மை யொருவர்கட் புலங்கொ ளாமை
[1]சீர்த்தது செறிந்த தோடித் திரைநெடுங் கடலை யெல்லாம்
தூர்த்தது சகர ரோடும் பகைத்தெனத் தூளி வெள்ளம்.

தசரதன் சென்ற சிறப்பு

896 பொற்றொடி மகளி ரூரும் பொலங்கொடார் புரவி வெள்ளம்
சுற்றுபு கமலம் பூத்த தொடுகடற் றிரையிற் செல்லக்
கொற்றவேன் மன்னர் செங்கைப் பங்கயக் குழாங்கள் கூம்ப
மற்றொரு கதிரோ னென்ன மணிநெடுந் தேரிற் போனான்.

893 அறுகு நீர் தெளித்தல்: 'அறுகுவெண் மலரளாய வாசநீர், இறைவன் சேவடி கழுவி' (சீவக. 2248.) வரன் முறை வந்தார் - மன்னருக்குப் பல்லாண்டு கூறும் சந்ததியிற் பிறந்தவர்கள். பருமணிக் கலாபம் - பெரிய மணிகளால் இயன்ற மேகலாபரணம். மகளிர் பல்லாண்டு கூறுதல்: 250, குறிப்.(பி - மீ.) [1]'கன்னலேந்தி' (எக)

894 கண்டனன் என்றது தசரதனை. குண்டலம் - காதணி. குறுகரிது - தசரதனை நெருங்குவது எளிதன்று. வீழ்ந்த குண்டலத்தைக் குனிந்து எடுப்ப நேரந் தாழ்த்தமையின் இனிக் குறுகுதல் அரிது என்றார். எழுச்சி - புறப்பாடு. மயங்கி - தம்முள் கலந்து.

(பி - மீ.) [1]'மயங்கினர் திரிந்து' (எச)

895 ஆர்த்தது - நிரம்பிற்று. மீண்டமை அப்பாற் செல்ல இடமின்மையால். கட்புலம் - பார்த்தல். சீர்த்தது - வாய்த்தது; குறள், 490. சகரர் தோண்டிய கடலைத் தூளி தூர்த்தலால், 'பகைத்தென' என்றார். தூளி வெள்ளம்; வெள்ளம் - தொகுதி; எழுவாய்.

[பி - மீ.) [1]'தீர்த்தது' (எடு)

896 புரவிகளுக்குக் கடலும், பெண்களுக்குக் கமலமும் உவமை. தொடுகடல் - சகரர் தோண்டிய கடல். கைக் கமலங்களைக் கூம்பச் செய்வ

897 சங்கமும் பணையுங் கொம்புந் தாளமுங் காளத் [1]தோடு
மங்கலப் பேரி செய்த பேரொலி மழையை யோட்டத்
தொங்கலுங் குடையுந் தோகைப் பிச்சமுஞ் சுடரையோட்டத்
திங்கள்வெண் குடைகண் டோடத்தேவருமருளச் சென்றான்.

898 நோக்கிய திசைக டோறுந் தன்னையே நோக்கிச் செல்லும்
வீக்கிய கழற்கான் மன்னர் விரிந்தகைம் மலர்கள் [1]கூப்பத்
தாக்கிய களிறுந் தேரும் புரவியும் படைஞர் தாளும்
ஆக்கிய தூளி விண்ணு மண்ணுல காக்கப் போனான்.

பலவித ஒலிகள்

899 மந்திர கீத வோதை வலம்புரி முழங்கு மோதை
அந்தண ராசி யோதை யார்த்தெழு முரசி னோதை
கந்தடு களிற்றி னோதை கடிகையர் கவியி னோதை
இந்திர திருவன் செல்ல வெழுந்தன திசைக ளெல்லாம்.

சேனையின் பெருக்கம்

900 வீரருங் களிறுந் தேரும் புரவியு மிடைந்த சேனை
போவிட மில்லை மற்றோ ருலகில்லை பெயர்வ தாக
நீருடை யாடை யாளு நெளித்தனண் முதுகை யென்றுல்
பார்பெர்றை நீக்கி னானென் [1]றுரைத்தது பழுது மன்னோ.

தனுல், இயல்பினின்றும் வேறு பட்டது என்று கொண்டு மற்றொரு கதிர் என்றார்; இஃது அயுக்த வேது. (பி - மீ.) [1]'கூப்ப' (எசு)

897 பணை-முரசு. காளம் - திருச்சின்னம். மழை-இடி. தொங்கல்-மயிற்பீலியாற் செய்த ஒருவகை விருது. குடை-மயிலிறகாற் செய்தகுடை. தோகை பிச்சம் - மயிலின் தோகையாற் செய்த தொங்கல் போன்ற பிறிதொன்று. சுடர் - சூரியன் ஒளி. வெண்குடையைக் கண்டு திங்கள் ஓடத் தேவரும் மருளச் சென்றான்: 329. (பி-மீ.) [1]'தொடையும்' (எஎ)

898 கைம் மலர் கூப்பல்: 296. விண்ணையும் மண்ணுலகாக்க.

(பி - மீ.) [1]'கூம்ப' (எஅ)

899 மந்திர கீதம் - சாமகானம். வலம்புரி - சங்கு. கந்துஅடு - கட்டுத் தறியை முறிக்கின்ற. கடிகையர் - மங்கலப் பாடகர்; 'அரசனுக்குச் சென்ற நாழிகைக்குக் கவிசொல்லுவார்'(சிலப். கு: 49.)இந்திர திருவன்: 331. (எசு)

900 பேர்வு இடம் - பெயர்ந்து செல்லும் பிறிதோரிடம். உலகில்லை-வேறோர் உலகும் இல்லை. பெயர்வதாக - பெயர்ந்து செல்ல. பூமி முதுகை நெளித்தல்: 764. பார் பொறை நீக்கினன் என்று உரைத்தது: 65.

(பி - மீ.) [1]'றுரைப்பதெப் பரிசு' (அ0)

யாவரும் இந்திர சயிலச் சாரலில் தங்குதல்

901 இன்னண மேகி மன்னன் யோசனை யிரண்டு சென்றான்
பொன்மலை போலு மிந்து சயிலத்தின் சாரல் புக்கான்
[1]மன்மதக் களிறு மாதர் கொங்கையு மார னம்பும்
தென்வரைச் சாந்து நாறச் சேனையு மிறுத்த தன்றே.

---

901 இந்து சயிலம் - சந்திர சயிலம்; சயிலம் - மலை. மன்மதக்களிறு- மன்மதன் ஏறும் யானை; என்றது இருள். கூந்தலுக்கு ஆயிற்று. மாரன் அம்பு என்றது மலர்களை; 'காமாயுதக் கண்ணி' (நளிப்.) தென்வரை - பொதியில் மலை. கூந்தலில் மலரும் கொங்கைகளிற் சந்தனமும் நாற; நிரனிறை யணி. (பி - ம்.) [1]''வன்மதக்' (அக)

(எழுச்சிப் படலம் முற்றும்)

14. வரைக் காட்சிப் படலம்.*

வேறு

யானைகள் கட்டப் பெற்றமை

902 கோவை யார்வடக் கொழுங்குவ டொடிதர நிவந்த
ஆவி வேட்டன வரிசிலை யனங்கன்மேற் கொண்ட
பூவை வாய்ச்சியர் முலைசிலர் புயத்தொடும் பூட்டத்
தேவ தாரத்துஞ் சந்தினும் பூட்டின [1]சினமா.

கட்டிய யானைகளின் தனித்தனிச் செயல்கள்

903 கோரொ டுங்கலில் பகையினை நீதியால் வெல்லும்
சோர்வி டம்பெறு வுணர்வினன் சூழ்ச்சியே போல
[1]வாரொ டுந்தொடர் [2]கவட்டெழின் மராமரக் குவட்டை
வேரொ டுங்கொடு சிரியென நடந்ததோர் வேழம்.

---

* சில பிரதிகளில் செய். 902-931 சந்திர சயிலப் படலம் என்றும், செய். 932-978 வரைக் காட்சிப் படலம் என்றும் காணப்படுகின்றன. சந்திர சயிலப் படலமும் வரைக் காட்சிப் படலமும் வேறுவேறென்பது 932 ஆம் செய்யுளால் போதருமென்பர் சிலர்.

902 முதலிரண்டடிகள் பெண்களுக்கும் யானைக்கும் சிலேடை. கோவை ஆர் - மாலைகள் நிரம்பிய; (ஆகாயத்தை அளாவிய) வடக்குவடு - மேருமலை; (ஆலமரத்தினடி) ஆவிவேட்டன - அகிற்புகை முதலியவற்றை விரும்பினவை; 926; தம் நாயகரின் உயிரை விரும்பினவை; (தடாகங்களை விரும்பினவை) அனங்கன் மேற்கொண்ட - மன்மதன் கிரீடமாகத் தன்மேற் கொண்டவை; அல்லது மன்மதன் ஆயுதங்களாகிய கரும்பும் அம்பும் தம்மேலெழுதப் பெற்றவை. (மன்மதனைப் போன்ற வீரரைத் தம்மேற் கொண்டவை.) பூவை - மைனா. வாய்ச்சியர் தம் மூலைகளைச் சில ஆடவரின் புயத்தோடு பூட்டச் சில யானைகள் தேவதாரத்தினும் சந்தினும் பூட்டின; ஆடவர் பெண்களை யானைகளின் பிடரியினின்றும் இறக்கும்போது அப்பெண்களின் நகில்கள் ஆடவரின் மார்பிற் பட்டதை நினைத்து 'பூட்ட' என்றார். சந்து - சந்தனமரம். பூட்டின: செயப்பாட்டு வினை; 'இல்வாழ்வா னென்பான்' (குறள்; 41.) சினமா - யானை. (பி - ம்.) [1]சிலமா' (க)

903 நேர் ஒடுங்கல் இல் பகை - நேர்முகமாகச் செய்யும் போரினால் ஒடுங்குதல் இல்லாத பகைவன். உணர்வினன் - அறிவை உடையவனது. சூழ்ச்சி - உபாயம் (தந்திரம்.) பகைவரைச் சூழ்ச்சியால் வெல்வதும் அரச நீதியே என்பது மூன்றிரண்டடிகளாற் பெறப்படும். வாரொடும் தொடர் - வாரினாற் கட்டுண்ட. கவடு - கிளை. குவடு - அடிமரம். கொடு - கொண்டு.

904 திரண்ட தாணெடுஞ் செறிபணை மருதிடை யொடியப்
புரண்டு பின்வரு முரலொடு [1]போகுமால் போல
உருண்டு காறொடர் [2]பிறகிடு தறியொடு மொருங்கே
இரண்டு மாமர மிடையிற நடந்ததோர் யானை.

905 கதங்கொள் சிற்றத்தை யாற்றுவா னினியன கழறிப்
பதங்கொள் பாகனு மந்திரி யொத்தனன் பன்னூல்
விதங்க [1]ளாவன யாவையு மெல்லென விளம்பும்
இதங்கள் கொள்கிலா விறைவனை யொத்ததோர் யானை.

906 மாறு [1]காண்கில தாய்கின்று மழையென முழங்கும்
தாறு பாய்கரி வனகரி தண்டத்தைத் தடவிப்
பாறு பின்செலக் காலெனச் செல்வது பண்டோர்
ஆறு போகிய வாறுபோ [2]மாறுபோன் றதுவே.

கிரிஎன - மலையைப் போல். வாரை அறுத்துக் வொண்டு செல்ல மாட்டாமையின் மரத்தையே பெயர்த்துத் தூக்கிச் சென்றது என்க.

(பி - மீ.) [1]'காரொடுங்' [2]'கவட்டுயர்', 'கவட்டொடு' (உ)

904 தாள் - அடிமரம். செறிபணை - நெருங்கிய கிளைகள். மருது - மருத மரம். உரலொடு போகுமால் - கண்ணபிரான். கால் தொடர்பிற கிடுதறி - காலைத் தொடர்ந்து பின்னே வருகின்ற கட்டுத்தறி; தறிக்குக் கண்ணனைக் கட்டிய உரல் உவமை.

(பி -மீ.) [1]'போனவன்' [2]'பிறங்கிடு' (ஊ)

905 கதங்கொள் சீற்றம் - யானையின் மிகுகினம். பதம்கொள் பாகன் - பக்குவமாக வசப்படுத்திக் கொள்ளும் யானைப் பாகன். விளம்புவோன் - மந்திரி. இனியன கழறுதல்: 'மதக்களிறு வலியாக், கதந்தலை யழியக் கந்தொடார்த்துச் சாமகீத வோசையிற் றணிக்கும், நூலறி பாகரொடு' (பெரும். க. 44: 61-4). யானைக்கு அரசனும் பாகனுக்கு மந்திரியும் உவமை. மதச்செருக்காற் பாகன் ரோட்டியை நீவுமாறு போலக் காமக்களிப்பால் தன் அமைச்சர் கூற்றைக் கடத்தல் நோக்கிக் களிற்ஞன் என்றார்' (சீவக. 200, உரை); 'செவிசுடச் சென்றுங்...வெகுளினும் வாய் வெரீஇப் பேரா கவுண் மதத்த, கைம்மா வயத்ததோ பாகுமற் றெத்திறத்தும், அம்மாண் பினவே யமைச்சு' (நீதிநெறி. 45.)

(பி - மீ.) [1]'லாலவன் மெல்லென் மெல்லென' 'ளால்வர மெல்லென மெல்லென' (ஊ)

906 மாறு - தன் பகையை. மழை - இடி. தாறு பாய்கரி - தாற்றுக் கோலைப் பாய்கின்ற யானை. 'தாறுபாய் தறுகட் குன்றம்' (573.) வனகரி - காட்டிலிருக்கும் யானைகள். தண்டம் - யானை செல்லும் வழி. பாறு - பருந்து. காலெனச் செல்வது: கால் - காற்று; 'கால் கிளர்ந்தன்ன வேழம்' (முருகு. 82, அடிக்.) செல்லுதல் காட்டு யானையோடு போர் செய்ய. போகும் வழி தெரியப் பல உயிர்களைக் கொன்று செல்வதால், 'பாறுபின் செல'

907 பாத்த யானையின் பதங்களிற் படுமத நாறக்
காத்த வங்குச நிமிர்ந்திடக் கால்பிடித் தோடிப்
பூத்த வேழிலைப் பாலையைப் பொடிப்பொடி யாக்கிக்
[1]காத்தி ரங்களாற் றலத்தொடுங் [2]தேய்த்தமைந்தார் களிறு.

சந்திர சயிலத்துக்கும் யானைக் கூட்டத்துக்கும் உவமை

908 அலகி [1]லாமத யானையு மவற்றொடு மிடைந்த
திலக வாணுதற் பிடிகளுங் குருளையுஞ் செறிந்த
உலவை நீள்வனத் தூதமீ மொத்தன வூதத்
தலைவ னேயெனப் பொலிந்தது சந்திர சயிலம்.

தேர்கள் கற்கோப் பொன்னுரு வாக்குதல்

909 தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினு மவர்தம்
மருண்ட புன்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே
உருண்ட வாய்தொறும் பொன்னுரு வுரைத்துரைத் தோடி
இருண்ட கல்லையுந் தன்னிற மாக்கிய விரதம்.

என்னூர். ஆறு போகிய ஆறு - நதி தான் சென்ற வழியே. போமாறு போன்றது - போகும் விதத்தை ஒத்தது; யானையின் செலவுக்கு ஆற்றின் செலவு உவமை. (பி - மீ.) [1]'காணுவதாய்' [2]'மாறு சென்றதுவே' (டு)

907 பாத்த - அணியாகப் பகுக்கப்பட்ட. பதம் - கட்டிய இடம். படு-தோன்றிய. யானை மதம் நாறுதல், 'கமழ் கடாத்து... மழகளிறு' (புறநா. 22); 'புணர்மருப்பி யானையின் புயல் கொண் மும்மதம், மணமகள் கதுப் பெனை நாறும்' (சீவக. 1621.) அங்குசம் நிமிர்ந்திட நடத்தல்: 607, அடிக். கால் பிடித்து ஓடி - வாசனைக் காற்றின் வழியறிந்து ஓடி. ஏழிலைப் பாலை: 'ஏழு நிரையாக அடுக்கிய நீண்ட இலைகளையுடைய பாலை' (பரி. உசு: 13, உரை.) ஸப்தபர்ண என்பது வடமொழி; ரகுவம்சம். ச: 23. இதன் பூ யானையின் மதநாற்றமுடையது; வேங்கைப் பூவும் யானை மதநாற்றமுடைய தென்பர்; 164; 'பூ நாறு கடாம்' (மணி. ககூ: 22.) காத்திரம் - இங்கே யானையின் கால்; சீவக. 806, உரை.

(பி - மீ.) [1]'காற்றலங்களாற்' [2]'துவைத்ததோர்' (சு)

908 அலகு இல் - அளவு அற்ற. மிடைந்த - நெருங்கிய. உலவை - மரங்கள். ஊதம் = பூதம் - காட்டு யானைகளின் கூட்டம். பூதத் தலைவன் - யானைக் கூட்டத்துக்குத் தலைமை வாய்ந்த ஆண்யானை; ஒருத்தல், எந்தல் என்று இது வழங்கப்படும் (மலைபடு. 297-9, உரை); குறுந். கஅ०: 2. கலி. சசு. 3); 'பகட்டரசன்' (சீவக. 2365.) தசரதன் படையிலுள்ள யானைக் கூட்டம் காட்டு யானைக் கூட்டத்துக்கு உவமை.

(பி - மீ.) [1]'லானைக ளனேகமு மவற்றிடை' (எ)

909 தெருண்ட - தெளிந்த. மருண்ட புன்மையை - அறிவு மயங்கிய இழிகுணத்தை; 'பெரியோர் சிறியோரின் இயற்கையை மாற்றுவர்' என்பது நீதி. வாய்தோறும் - இடந்தோறும். பொன்னுருள் - தேரின்

மயில்களின் வருணனை

910 கொவ்வை நோக்கிய வாய்களை யிந்திர கோபம்
கவ்வி நோக்கின வென்றுகொல் காட்டின மயில்கள்
நவ்வி நோக்கியர் நலங்கொண்மே [1]கலைபொலஞ் சாயற்
செவ்வி [2]நோக்கின திரிவன போல்வன திரிந்த.

குதிரை யிழிந்து தங்கிய பெண்களின் போலிவு

911 உய்க்கும் வாசிக ளிழிந்துள வன்னத்தி னெதுங்கி
மெய்க்க லாபமு மிழைகளுங் குழைகளும் விளங்கத்
தொக்க [1]மென்மர நிழல்படத் துவன்றிய சூழல்
புக்க மங்கையர் பூத்தகொம் பாமெனப் பொலிந்தார்.

பளிக்குப் பாறையில் மங்கையர் துயிலல்

912 தளங்கொ டாமரை யெனத்தளி ரடியினு முகத்தும்
வளங்கொண் மாலைவண் டலமர வழிவருந் தினராய்
விளங்கு தம்முருப் பளிங்கிடை வெளிப்பட [1]வேறூர்
துளங்கு பாறையிற் றுழைய ரயிர்த்திடத் துயின்றார்.

பொன்னாலாகிய சக்கரங்கள். இருண்டகல் - கருங்கல். தன்னிறம் என்றது உருளையின் பொன்னிறம். (அ)

910 கொவ்வை நோக்கிய - கோவைப் பழம் போன்ற. இந்திர கோபம் - மழைக்காலத்திற் காணப்படும் சிவப்பு நிறமுள்ள ஒருவகைப் பூச்சி; பெண்களின் வாய்க்கு உவமை; 'கொண்டலெழ மின்னுடங்கக் கொடுஞ் சாபம் வானவுறச்செங் கோபந் தோன்ற .....சாயலார் வடிவு தொறுங், கண்டுநமக் கிளவேனிற் கார்கால மாயதெனக் களிக்கு மாலோ' (வில்லி. வசந்த. 5.) நோக்கின - அழகுடைய வாயின. காட்டு இன மயில்கள் - காட்டிற் கூட்டமாக நடமாடும் மயில்கள். நவ்வி நோக்கியர் - மானைப் போன்ற கண்களையுடைய பெண்கள். மேகலையையும் சாயலையும் நோக்கினவை களாகி. மயில்கள் மகளிரைத் தம்மினமென்று மயங்கின.

(பி - மீ.) [1]'கலைபொலி' [2]'நோக்கியே வருவன' (கூ)

911 உய்க்கும் - செலுத்திய. வாசிகள் - குதிரைகள். ஒதுங்கி - நடந்து. கலாபம் - இடையில் கட்டும் அணி. துவன்றிய சூழல் - மரநிறைந்த பொழிலில்; சூழல் - பொழில்; திருச்சிற். 17, பேர். கொம்பு - மரக்கொம்பு. இழைகள் முதலியன கொம்பின் மலர்களுக்கு உவமை.

(பி - மீ.) [1]'நன்மரச் சோலையின் நிழற்பொலி' (கo)

912 தளம் - இதழ்களை. மாலை வண்டு - கூட்டமான வண்டுகள். அலமர - சுழல. பளிங்கு - பளிங்குப் பாறை. அயிர்த்திட - ஐயங்கொள்ள. மங்கையர் ஒரு பாறையில் தூங்குகையில் அவர்கள் உருவம் மற்றொரு பளிங்குப் பாறையில் தோன்ற அவ்விரண்டிடத்தும் தம் தலைவியரின் உருவத்தைக் கண்ட தோழியர் அவர் உருவம் தெரியாது அயிர்த்தனர். முன் கவியிலுள்ள மங்கையர் எழுவாய். (பி-மீ) [1]'விரும்பித்' (கக)

யானைகளினின்றும் இறங்கிய பெண்கள் குடில்களிற் புகுந்தமை

913 பிடிபுக் காயிடை மின்னெடும் பிறங்கிய மேகம்.
படிபுக் காலெனப் படிதரப் பரிபுரம் புலம்பத்
துடிபுக் காவிடைத் திருமக டாமரை துறந்து
குடிபுக் [1]காளெனக் குடில்புக்கார் கொடியிடை மடவார்.

வேறு

குதிரைகள் வரிசையாகக் கட்டப் பெறுதல்

914 உண்ணமு தருத்தியிளை யோர்நகர் கொணர்ந்த
துண்ணெணு முழக்கின துருக்கர்தர வந்த
மண்மகடன் மார்பினணி வன்னசர மென்னப்
[1]பண்ணுறு வயப்புரவி பந்தியி னிரைத்தார்.

தங்குவதற்கு ஏற்ற ஏற்பாடுகள்

915 நீர்திரை நிரைத்ததென நீடிரை நிரைத்தார்
ஆர்கலி நிரைத்ததென வாவண நிரைத்தார்
[1]கார்நிரை யெனக்களிறு காவிடை நிரைத்தார்
மாருத நிரைத்தவென வாசிக ணிரைத்தார்.

---

913 ஆயிடை பிடிபுக்குப் படிதர - அங்கே பெண் யானைகள் புகுந்து நிலத்திலே படிய. படிபுக்காலென - பூமியில் இறங்கினலென. பெண்களைத் தம்மேற் கொண்ட யானைகள் பூமியிற் படிதற்கு மின்னெடு கூடிய மேகம் பூமியிற் படிதல் உவமை. 'துடிபுகா இடை' என்பது விகாரத்தால் 'துடிபுக்கா விடை' என வீரிந்தது. உடுக்கையும் உவமையாகாத இடை என்பது பொருள். குடில் - தங்குவதற்காக அங்கே அமைத்த கூடாரங்கள்; இவை துணிகளால் ஆனவை; 919. கொடியன (பி-ம்) - கொடி போன்ற.

(பி - ம்.) [1]'காலெனக் குடிபுக்' (கஉ)

914 உண் அமுதம்-உண்ணத் தக்க பலவித வுணவுகளை. இளையோர்-ஏவலாளர்கள். முழக்கின - கனைப்பை உடையன. துருக்கர் - யவனதேசத்தவர். வன்னசரம் - பல நிறங்களாலியன்ற ரத்தின மாலை. குதிரைகளின் வரிசை மண்மகள் அணிந்த இரத்தின மாலைக்கு உவமை. பண்ணுறு-அலங்காரம் அமைந்த.

(பி - ம்.) [1]'பண்ணிய', 'பண்ணமர்' (கரு)

915 நீர்திரை நிரைத்தது-நீர் அலைகளை வரிசையாக அமைத்தது. நீள் திரை - நீண்ட திரைச் சீலைகள். திரைச் சீலைகளுக்கு அலைகள் உவமை; 49, 923. ஆர்கலி - கடல். ஆவணம் - கடைகள். கடைகளுக்குக் கடல் உவமை. 'மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்முள், ஒலியும் பெருமையு மொக்கும் - மலிதேரான் கச்சிபடுவ கடல்படா, கச்சி கடல் படுவ எல்லாம் படும்' (தண்டி. மேற்.) 'மலய மாதவ னுண்ட மணிக்குவை, குலவு வார்

மகளிரும் வீரரும் திரிதல்; அரசர் தங்குதல்

916 நடிக்குமயி லென்னவரு [1]நவ்விவிழி யாரும்
[2]வடிக்குமயில் வீரரு மயங்கினர் திரிந்தார்
இடிக்குமுர [3]சக்குரலி னெங்குமுரல் சங்கின்
கொடிக்களி னுணர்ந்தரசர் கோநக ரடைந்தார்.

குமரர் தம்காதலிகள் மீது படிந்த தூளைத் துடைத்தல்

917 [1]மிதிக்கநிமிர் தூளியின் [2]விளக்கமறு மெய்யைச்
சுதைக்கணுரை யைப்பொருவு தூசுகொடு [3]தூய்தா
[4]உதிர்த்தலி னிளங்குமர ரோவியரி லோவம்
புதுக்கின ரெனத்தருண மங்கையர் பொலிந்தார்.

அரசர்கள் யானைகளினின்றும் இறங்கிக் கூடாரங்களிற் புகுதல்

918 தாளுயர் தடக்கிரி யிழிந்துதரை சாரும்
கோளரி யெனக்களிகள் கொற்றவரி ழிந்தார்
பாளவிரி யொத்துலவு சாமரை படப்போய்
[1]வாளெழ நிரைத்தபட மாடமவை புக்கார்.

கட னேர் சொலிற் குற்றமே, அலகில் பல் வளவாவணம், உலக முண்டருள் மால்வயி ரெருக்குமே' (நைடத. நகரப், 30.) கார்நிரை - மேகவரிசை. காஇடை - சோலைகளில். பரிக்குக் காற்று உவமை; அகநா: 384: 9.

(பி - ம்.) [1]'காரணி நிரைத்ததெனவேகரி' (கச)

916 நவ்வி விழி - மான் விழி. வடிக்கும் அயில் - கூர்மையாக்கப் பட்ட வேல். 'வடிக்கும் வயவீரர்' என்ற பாடத்தில் வடித்தல் - குற்றங் களைதல்; 'வடித்த மாதவ' (655.) மயங்கினது இடத்தின் அழகினைக் கண்டு. 'கொடிகளின்' என்பது எதுகை நோக்கிக் கொடிக்களின் என்று விரிந்தது. கோநகர் - அரசன் தங்கியுள்ள இடம். முரசக் குரலினு லும் முரலும் சங்கொலியாலும் கொடிகளினுலும் அரசர் தசரதன் தங்கி யுள்ள இடத்தை யுணர்ந்துகொண்டு போய்ச்சேர்ந்தார்கள்.

(பி - ம்.) [1]'நவ்வியனை' [2]வடிக்கும்வய' [3]'சக்குரலெழும்பவிர தத் தின், கொடித் தலிசிழந் தாசர் கூடமவை புக்கார்' (கரு)

917 மிதிக்க - யானை குதிரை முதலியன மண்ணில் மிதித்தலினுல். அறு - அற்ற. சுதைக்கண்ணுரை - பாலில் தோன்றும் நுரை. நுரையைப் பொருவு தூசு - நுரையை ஒத்ததுகில். ஓவியரில் -சித்திரக்காரரைப் போல். ஓவம் - சித்திரம். தருணம் - இளமை. குமரர் தூய்தா உதிர்த் தலின் மங்கையர் ஓவம் புதுக்கினரெனப் பொலிந்தார்.

(பி - ம்.) [1]'மதிக்க' [2]'மறைக்க மணி', 'மறைந்த மணி' [3]'தூரை', 'தூளை' [4]'உதிர்த்தனர்' (கசு)

918 தாள் - அடிமலை. கோளரி - சிங்கம்; யானையினின்றும் இறங் கிய வீரர்களுக்கு மலையினின்றும் இறங்கிய சிங்கம் உவமை. சாமரைக்குத்

கூடாரங்களில் தங்கிய மங்கையர் முகவருணனை

919 தூசிஞெடு வெண்படட முடைக்குடில்க டோறும்
[1]வாசமலர் மங்கையர் முகங்கண்மழை வானின்
மாசின்மதி யின்கதிர் [2]வழங்குநிழ லெங்கும்
வீசுதிரை வெண்புனல் விழுங்கியது போலும்.

யானையின் வருணனை

920 மண்ணுற விழுந்துநெடு வானுற [1]வயங்கும்
கண்ணுதல் பொருந்தவரு கண்ணனில் வருங்கார்
உண்ணிற [2]நறும்பொடியை வீசியொரு பாகம்
வெண்ணிற விரும்பொடி புனைந்தமத வேழம்.

குதிரைகள் வருணனை

921 தீயவ ரொடொன்றிய [1]திறத்தரு [2]நலத்தோர்
ஆயவரை யங்நிலை யறிந்தனர் துறந்தாங்
கேயவரு நுண்பொடி படிந்துட னெழுந்தே
பாய்பரி விரைந்துதறி நின்றன [3]பரந்தே.

கழுகம்பாளை விரி. வான் எழ - ஒளி தோன்றும்படி. நிரைத்த - வரிசைப் படுத்திய. படமாடம் - கூடாரம்; 925. படம் - துணி.

(பி - மி.) [1]'வாளெழில், நிரைத்த' (கஎ)

919 தூசு, படம் - துணி விசேடங்கள். குடில்கள்: 913. மழை வான் - மேகங்கள் சஞ்சரிக்கும் ஆகாயம். மாசு இல் - குற்றம் இல்லாத. நிழல் - பிரதிபிம்பம்: வீசுதிரை வெண்புனல், அசையும் துணிகளை யுடைய கூடாரங்களுக்கு. கூடாரங்களிற் றோன்றும் பெண்களின் முகங் களுக்கு வெண்புனலிற் றோன்றும் சந்திர பிம்பங்கள் உவமை.

(பி - மி.) [1]'வாச நகை' [2]'வயங்குநிழ' (கஅ)

920 மண்ணுற விழுந்து - மண்ணின் மேலே படிந்து. வானுற வயங் கும் வேழம் என்றது மிகப் பெரிய யானை என்றபடி. கண்ணன் - திருமால். கார்நிறம் உண் நறும் பொடி - தனது கரிய நிற முண்ட வாசனையுள்ள புழுதியை. வீசி - துடைத்து, ஒரு புறம் வீசி, ஒரு புறம் இரும்பொடி புனைந்த யானைக்குச் சிவபெருமானைக் கூடிய திருமால் உவமை. 'வலத்தனன் திரிபுரமெரித்தவன்' (திருவாய்மொழி, 1. 3: 9) வேழம் கண்ணனில் வரும்.

(பி - மி.) [1]'வெழுந்தே', 'வியங்கும்' [2]'நறும்பொடியு மேவுமத' (கக)

921 திறத்தரு நலத்தோர் - அரிய திறமையையுடைய நல்லவர்கள். ஆயவரை - அத்தகைய தீயவரை. துறந்தாங்கு - துறந்தாற்போல. ஏயவரு - தம்மீது பொருந்த வருகின்ற: பரந்து - பரவி.

(பி - மி.) [1]'திருந்தரு' [2]'வலத்தோர்' [3]'பரிந்தே' (உ0)

இதுவும் அது

922 மும்மைபுரி [1]வன்கயிறு கொய்யுநெறி முன்னித்
தம்மையு முணர்ந்துதரை கண்டுவிரை கின்ற
அம்மையினெ டிம்மையு மறிந்துநெறி செல்லும்
செம்மையவ ரென்னநனி சென்றன துரங்கம்.

கழங்காடும் பெண்கள் வருணனை

923 விழுந்தபனி யன்னதிரை வீசுபுரை தோறும்
கழங்குபயின் மங்கையர் கருங்கண்மிளிர் கின்ற
தழங்கு[1]வளை சிந்துதர ளம்பயி ரரங்கத்
தெழுந்திடை பிறழ்ந்தொளிர் கொழுங்கயல்க ளென்ன.

மலையாற்றில் ஊற்றுக்கள்

924 வெள்ளநெடு வாரியற [1]வீசியுள வேனும்
கிள்ளவெழு கின்றபுனல் கேளிரின் விரும்பித்
தெள்ளுபுன [2]லாறுசிறி தேயுதவு கின்ற
உள்ளதும ருதுதவும் வள்ளலெயு மொத்த.

---

922 முதல் மூன்று அடிகள் செம்மையவருக்கும் குதிரைகளுக்கும் சிலேடை. மும்மை புரிவன் கயிறு - மண் பெண் பொன் என்பனவாகிய மூன்று வித ஆசைகளைச் செய்கின்ற வலிய பாசத்தை (மூப்புரிகளாக உள்ள வலிய கயிற்றை.) கொய்யும் நெறி முன்னி - அறுக்கும் வழியை யோசித்து. தம்மை உணர்தல் - சீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்குமுள்ள தொடர்பை யறிதலால் தம்மை அறிதல் (கயிறுகளினின்று விடுபட்டதை உணர்தல்.) தரை - மோட்ச வீடு (தாம் முன்பு இருந்த இடம்.) அம்மையினெடு இம்மையை அறிந்து. குதிரைகளுக்குக் கூறுங்கால் கட்டப் பட்டிருந்த முன் நிலையையும், அறுத்துக்கொண்ட பின் நிலையையும் உணர்ந்து. நெறி-ஞான மார்க்கம் (வழியூடே.) செம்மையவர் - ஞானிகள். துரங்கம் -குதிரைகள்.
(பி - ம்.) [1] 'வன்மைசெறி மொய்கயிறு நொய்தே' (உக)

923 பனிபோல் வெள்ளியதிரை. புரை - வீடு. தழங்குவளை - ஒலிக் கின்ற சங்குகள். வளை சிந்துதாளம் - சங்குகள் சிந்திய முத்துக் கள். தரங்கம் - அலை. திரைச்சீலைக்கு அலை உவமை; 915. தரம்பயில் தரங்கம் என்ற பாடத்துக்கு 'வரிசையாக எழும் அலைகள், அல்லது 'மலை போல் எழும் அலைகள்' என்பது பொருள். திரைச்சீலைகளினிடம் பிறழும் பெண்களின் கண்களுக்கு அலைகளிற் பிறழும் கயல் மீன்கள் உவமை.
(பி - ம்.) [1] 'நுரை சிந்திய சலம் பெறு', 'தளி சிந்திய கனம்பயி', 'களி சிந்திய தரம்பயி' (உஉ)

924 வெள்ள நெடுவாரி - மிகுந்த பிரவாகத்தை. அற வீசியுள வேனும் - முற்றிலும் அற்றுப்போயிருப்பினும். வீசினது தெள்ளு புனல். கிள்ள எழுகின்ற புனல் - தோண்டத் தோன்றும் ஊற்று நீர். கேளிரின்- உறவினரைப்போல். சிறிதே உதவுகின்ற - (இப்பொழுது ஊற்று நீரால்)

வீரர் கூடாரங்களிற் புகுதல்

925 துன்றிநெறி பங்கிக [1]ளெக்கியழ லோடும்
மின்றிரிவ வென்னமணி யாரமிளிர் [2]மார்பர்
மன்றன்மண நாறுபட மாடதுழை கின்றூர்
குன்றின்முழை தோறுதுழை கோளரியை யொத்தார்.

யானைகள் நீர்நிலைகளிற் படியும் வருணனை

926 நெருங்கயி லெயிற்றிணைய செம்மயிரி னெற்றிப்
பொருங்குலிக மப்பியன போர்மணிக ளார்ப்பப்
பெருங்களி றலைப்புனல் கலக்குவன [1]பெட்டுக்
கருங்கடல் கலக்குமது கைடவரை யொத்த.

இதுவும் அது

927 ஒக்க[1]மிசை யுய்த்தவ ருரைத்தகுறி கொள்ளா
பக்கமின [2]மொத்தய லிலக்கநனி பாரா
மைக்களி மதத்தவரை மாதர்கலி யல்குல்
புக்கவரை யொத்தன புனற்சிறைக ளேறு.

சிறிதளவு புனலையே உதவுகின்றவை. 'தெள்ளு புனலாறு, வெள்ள நெடு வாரியற வீசியுளவேனும், கிள்ளவெழுகின்ற புனலைக் கேளிரின் சிறிதே யுதவுகின்ற, உள்ளது மறுது உதவு வள்ளலையும் ஒத்த' உதவுகின்ற: எழுவாய்; ஒத்த: பயனிலை. ஒப்பு. 'அற்றக் கடைத்து மகல்யா றகழ்ந்தக் காற் றெற்றெனத் தெண்ணீர் படும்' (நாலடி. 150); 'ஆறு பெருக்கில்லா தருந்திடர்தான் பட்டாலும், ஊறலமை யாதோ வுலகாற்ற' (தமிழ் நா. 13); 'ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமக் காளுமவ்வா றூற்றுப் பெருக்கா லுலகூட்டும்' (நல்வழி.) (பி - மீ) [1] 'வீசியிலதேனும்' [2] 'லூறல் சிறி' (உங)

925 துன்றி நெறி பங்கிகள் - அடர்ந்து நெறிந்த சிகைகள். நெறித்தல் - சுருட்டி முறுக்கப்படுதல். மணி ஆரத்துக்கு அழலோடு கூடிய மின் உவமை. மன்றல் மணம் - புது மணம்: ஒரு பொருட் பன் மொழி. படமாடம்; 918. (பி - மீ.) [1]'ளெங்கியெழி', 'ளெங்க வெழி' [2]'மெய்யார்' (உச)

926 நெருங்கு அயில் எயிற்று இணைய - நெருங்கிய கூரிய இரு தந்தங்களை யுடையன. செம்மயிரின் நெற்றி - சிவந்த மயிரை உடைய நெற்றியில். பொரும் - நிறத்தில் தனக்குத்தானே உவமையாகும். மணிகள் - யானையின் இரு புறங்களிலும் படும்படி இட்ட மணிகள். பெட்டு - விரும்பி. மதுகைடவர்: மதுவும் கைடவனும். இவர்கள் திருமாலின் காதுக் குரும்பியிலிருந்து தோன்றிக் கடலைக் கலக்கினார்கள் என்பது வரலாறு.

(பி - மீ.) [1]'பீடார்' (உடு)

927 ஒக்க - பொருந்தும்படி, மிசை உய்த்தவர் - கரையின் மேல் செலுத்திய பாகர். இனம் - தம் இனமாகிய வேறு யானைகள். ஒத்து - பாகரைப் போலவே. அயல் அலக்க - குளங்களினின்றும் ஏறும்படி

மடைப்பள்ளியில் எழும் புகை வருணனை

928 துகிலிடை மடந்தையரொ டாடவர் துவன்றிப்
பகலிடைய வட்டிலின் மடுத்தெரி பரப்பும்
அகலிடு கொழும்புகை [1]யழுங்கலின் முழங்கா
முகில்படு நெடுங்கடலை யொத்துளதம் [2]முந்நீர்.

வேறு
பாடிவீட்டி லுள்ளாரின் பொலிவு

929 கமருறு பொருப்பின் [1]வாழும் விஞ்சையர் காண வந்தார்
தமரையு மறியார் நின்று [2]திகைப்புறு [3]தகைமை சான்ற
குமரரு மங்கை மாருங் குழுமலால் வழுவி விண்ணின்
றமரர்நா டிழிந்த தென்னப் பொலிந்ததவ் வனீக வெள்ளம்.

மகளிர் மகிழ்வுடன் திரிதல்

930 [1]வெயிலிறை குறையச் சோதி மின்னிழல் பரப்ப முன்னாள்
[2]துயிலறு செவ்வி யோருந் துனியுறு முனிவி னோரும்
குயிலொடு [3]மிருந்து பேசிச் சிலம்பொடு [4]மினிது கூவி
மயிலினம் திரிவ தென்னத் திரிந்தனர் மகளி ரெல்லாம்.

அலைக்கவும். இனம் ஒத்த கயல் (பி - ம்.) - யானை இனத்தை ஒத்த பெரு மீன்கள். மை - கருமை பொருந்திய. களிமதத்தவரை - களிப்பையும் மதத்தையுமுடைய மலைகள்; என்றது யானைகளை. கலை - ஆடை. புக்கவர் - காமுகர். (பி - ம்.) [1]'நெறியுய்ப்பவளுரைத்த மொழிகேளா' [2]'மொத்த கயலலைக்க' (உசு)

928 துகில் இடை - ஆடைகளை அணிந்த இடையையுடைய. பகல் இடைய - சூரியன் ஒளி குறைந்துளோம் என்று அஞ்சிப் பின்னிட. அட்டில் - சமையலறை. அழுங்கல் - ஒலித்தல். கடல் படியச் செல்லும் மேகம் இடிக்காது, முழங்காத மேகம் அகிற் புகைப் படலத்துக்கு; 86. அம்முந் நீர் - அந்தச் சேனைக் கடல்; 'அனீக வெள்ளம்' என்பர் பின்; சில பிரதிகளில் இச்செய்யுளோடு சந்திர சயிலப் படலம் முடிந்துளது என்று வரையப் பெற்றுள்ளது.

(பி - ம்.) [1]'வழங்கலின்' [2]'மூதூர்' (உஎ)

929 கமர் - வெடிப்பு. காணவந்தார் - காண வந்தவர்கள்; வினையாலணையும் பெயர். தமரையும் - அழகுமிக்க தம்மவராகிய வேறு வித்யாதரரையும். அறியார் - அறியாதவராகி; வித்தியாதரரைப் போன்ற அழகினைத் தசரதன் சேனையிலுள்ள குமரரும் மங்கைமாரும் கொண்டிருத்தலினால் அவ்வித்தியாதரர் திகைப்புற்றனர். இழிந்தது என்ன - இறங்கி வந்தது போல். அனீக வெள்ளம் - சேனையின் பெருக்கம்.

(பி - ம்.) [1]'வந்த' [2]'திகைத்தனர் தன்மை சான்ற' [3]'தகையரானூர்' (உஅ)

930 இறை குறைய - சிறிது குறைய. சோதி - அணிகளின் ஒளி. மின் நிழல் - மின்னல் போன்ற ஒளியை. முன் நாள் - முன் இரவு. துயில் அறு - கணவரோடு கூடி இன்பம் நுகர்தலின் உறக்கமற்ற. துனி

வீரர் மகிழ்வுடன் திரிதல்

931 [1]தாளிடைக் கழல்க ளார்ப்பத் தாரிடை யளிக ளார்ப்ப
வாள்புடை யிலங்கச் [2]செங்கேழ் மணியணி வலய [3]மின்னத்
தோளென வுயர்ந்த குன்றின் சூழ்ல்க ளினிது நோக்கி
வாளரி திரிவ தென்னத் திரிந்தனர் மைந்த ரெல்லாம்.

கவி 'வரைக் காட்சி உரைப்பேன்' என்றல்

932 சுற்றிய கடல்க ளெல்லாஞ் சுடர்மணிக் கனகக் குன்றைப்
பற்றிய வளைந்த வெண்ணப் பரந்துவந் திறுத்த சேனை
கொற்றவர் தேவி மார்கண் மைந்தர்கள் கொம்ப ஞர்வந்
தற்றவர் காண லுற்ற வரைகிலை யுரைத்து மன்றே.

களிறுகளின் செயல்

933 பம்புதேன் மிழிறு தும்பி பரந்திசை பாடி யாடும்
உம்பர்வா னகத்து நின்ற வொளிதரு தருவி னேங்கும்
கொம்புகள் பனைக்கை நீட்டிக் குழையொடு மெடுத்துக்
தும்பிகளுயிரே யன்ன துணைமடப் பிடிக்கு கல்கும்.[கோட்டுத்

யுறுமுனிவு - ஊடல் காரணமாக வந்த சினம் அல்லது வெறுப்பு. சிலம்பு - மலை. வரையெதிர் கூவல் குறுஞ்சிமகளிர் விளையாட்டு.

(பி - மீ.) [1]வெயினிறங்' [2]துயிலுணர்' [3]மினிது கூவக் கிளியொடு மழலை கொஞ்சி' [4]நெடிது' (உக)

931 கழல் - வீரக்கழல். தார் - மலர் மாலை. புடை - பக்கத்தில். வலயம் - தோள்வளை. குன்றுக்குத் தோள் உவமை. எதிர்நிலை யுவமை. வாளரி - சிங்கம்.

(பி - மீ.) [1]தாளிணை' [2]செங்கை' [3]மின்னும்' (உ0)

932 சுற்றிய - உலகைச் சூழ்ந்துள்ள. கனகக் குன்று - மேருமலை. சேனையிறுத்த; இறுத்த - தங்கின. இந்து சயிலத்தைச் சுற்றிய சேனைக்கு மேருவைச் சுற்றிய கடல் உவமை. (உக)

933 பம்பு - நெருங்கிய; 28. தேன் முதலியன - வண்டின் வகைகள்; 888, அடிக். ஒளி தரு தரு - ஒளியைத் தருகின்ற கற்பக விருட்சம்; வண்டு மூசலால் தெய்வத்தரு அல்லவென்றும் இந்து சயிலத்தின்கண் ஆகாயத்தை அளாவியுள்ள தரு வென்றும் கூறுவாருமுளர். கொம்புகள் - கிளைகளை. பனைக்கை - பனையைப் போன்ற கை. குழை - தளிர். கோட்டுத் தும்பிகள் - கொம்புகளையுடைய ஆண் யானைகள். களிறு பிடிக்குத் தழை கல்கல்: குறுந். உஎ, அடிக். (உஉ)

வண்டுகளின் செயல்

934 பண்மலர் பவளச் செவ்வாய்ப் பனிமலர்க் குவளை யன்ன
கண்மலர்க் கொடிச்சி மார்க்குக் கணித்தொழில் புரியும்
உண்மலர் [1]வெறுத்த தும்பி புதியதே [2]னுதவு நாகத்
[வேங்கை
தண்மல ரென்று வானத் தாரகை தாவு மன்றே.

குறவர் ஐவனம் வளர்க்கும் பெருமை

935 மீனெனும் பிடிக ளோடும் விளங்குவெண் மதிநல் வேழம்
கூனல்வான் கோடு நீட்டிக் குத்திடக் குமுறிப் பாயும்
தேனுகு மடையை மாற்றிச் செந்தினைக் குறவர் முந்தி
வானநீ ராறு பாய்ச்சி யைவனம் [1]வளர்ப்பர் மாதோ.

சந்திரன் என்ற கண்ணுடியில் தம் அழகைப் பார்ப்பவர்கள்

936 குப்புறற் கருமை யாலக் குலவரைச் சாரல் வைகி
ஒப்புறத் [1]துலங்கு கின்ற வுடுபதி யாடி யின்கண்
அப்புறத் தேயுங் காண்பா ரரம்பைய ரசைந்த கோலம்
இப்புறத் தேயுங் காண்பார் குறத்திய ரிசைந்த கோலம்.

---

934 பண் மலர் வாய் - இசையைப் பாடுகின்ற வாய். கணித் தொழில் - சோதிடத் தொழில்; வேங்கை கணித்தொழில் புரிதல்: திருச் சிற். 138. உண்மலர்-தேனை முன்பு உண்டு விட்ட மலர். நாகம் - நாகமரம். தாரகை - விண் மீன்கள்.

(பி - மீ.) [1]'வெறுத்துத்' [2]'னுகந்து' (கூகு)

935 பல பிடிகளுக்கிடையே ஒரு களிறு இருத்தல்: 1030. கூன் நல்வான் கோடு; வான் - சிறந்த. கோடு என்றது பிறையின் மூனைகளை; குத்தியது மலையின் கண் உள்ள தேன் இறாலை. வான நீர் ஆறு - ஆகாய கங்கையின் நீர். ஐவனம் - மலைநெல்; 'ஐவன வெண்ணெல்' (குலி. சாகு: 4.) (நூசு)

936 குப்புறற்கு - கடந்து போவதற்கு. உடுபதி - சந்திரன்; விண் மீன்களுக்குத் தலைவன் என்ற பொருளது. அசைந்த - புனைந்த. ஆடி - கண்ணுடி. மதிக்கு ஆடி உவமை: 'அந்நலாரியல்புற வணியக், கற்றை வெண்மதி சாளரத் தாடியிற் காட்டும்' (நைட. நகரப்: 3.) சில பிரதிகளில் மூன்றாமடி 'ஆம்பையரழகுமாதோ' என்ற பிரதி பேதத்துடன் ஈற்றடியாகக் காணப்படுகிறது. ஆடியின் கண் அரம்பையர் அப்புறத்தும்; குறத்தியர் இப்புறத்தும் தம் அழகினைக் காண்பார்கள்.

(பி - மீ.) [1]'துலங்குஞ்சோதி' (நூடு)

குறவர் குறத்தியரின் நுதலுக்கு மதியை ஒப்புக் காணல்

937 உதியுறு திருத்தி யூது முலையுறு தியும் வாயின்
அதிவிட நீரு [1]நெய்யு முண்கிலா தாவி யுண்ணும்
[2]கொதிநுனை வேற்கண் மாதர்க் குறத்தியர் நுதலி னோடு
மதியினை வாங்கி யொப்புக் காண்குவர் குறவர் மாதோ.

ஒன்றுபடாதவை ஒன்றுபட்டு உறவாடல்

938 பேணுதற் கரிய [1]சீயக் குருளையும் பிடிக ளீன்ற
காணுதற் கரிய வேழக் கன்றெடு களிக்கு முன்றில்
கோணுதற் குரிய திங்கட் குழவியுங் குறவர் தங்கள்
வாணுதற் கொடிச்சி மாதர் மகவொடு தவழு மாதோ.

மலைக்கும் விஞ்சையர் குஞ்சிக்கும் அமைந்த சிறப்பு

939 அஞ்சனக் கிரியி னன்ன வழிகவுள் யானை [1]கொன்ற
வெஞ்சினத் தரியின் றிண்காற் சுவட்டொடும் விஞ்சை வேந்தர்
குஞ்சியந் தலத்து நீலக் குலமணித் தலத்து மாதர்
பஞ்சியங் கமலம் பூத்த பசுஞ்சுவ டிடைத்து மன்னே.

---

937 உதி - உலைத்துருத்தி; வாய் என்றது வேலின் தலையை. வேலைக் கூர்மைப் படுத்த உலைக்கண் இடுதலும், பகைவரைக் கணத்திற் கொல்ல விடநீரில் தோய்த்து எறிதலும், திருப்பிடியாமலிருக்க அதற்கு நெய் பூசுதலும் வழக்கு. கண்களாகிய வேல் இம்மூன்று செயல்களையும் கொள்ளாதது. கொதிநுனை - கொதிக்கின்ற கூர்மை. மாதர் - காதலையுடைய. 'குளம்' என்ற பாடத்துக்கு நெற்றி என்பது பொருள். மதி - இங்கே எட்டாம் பிறைச்சந்திரன். (பி - மீ;) [1]'நெய்யுந் தோய்ந்த பின் ஞவி, [2]கொதி பெறு வைவேலுண்கட் குறத்தியர் குணமோடாங்கு' (நூ)

938 சீயக்குருளை - சிங்கக் குட்டி. 'கோளக் குருளை' (பி - மீ.) - காட்டுப் பன்றிக்குட்டி. கோணுதற்கு உரிய - வளைவதற்குரிய. திங்கட் குழவி - பிறைச்சந்திரன்; 'குழவித் திங்களிமையவ ரேத்த' (சிலப். 2: 38.)

(பி - மீ.) [1]'கோலக்' (நூ)

939 அழிகவுள் - மதநீர் ஒழுகும் கன்னத்தையுடைய. யானை கொன்ற - யானையைக் கொன்ற. அரி - சிங்கம். சுவடு - தழும்பு. நீலக் குல மணித்தலம் - மலையின் நீல மணி போன்ற இடம். மலையின் மணித்தலத்து அரியின் காற் சுவடும் விஞ்சை வேந்தர் குஞ்சியத் தலத்து மாதர் பசுஞ் சுவடும் உள்ளன என்க. (பி - மீ.) [1]'வென்ற' (நூ)

பெண்கள் பாடும் வருணனை

940 செங்கய லனைய நாட்டஞ் செவிபுகா முறுவ றேன்ற
பொங்கிருங் கூந்தல் சோரா புருவங்க ணெரியா பூவின்
அங்கையு மிடறுங் கூட்டி நரம்புளர்ந் தமுத மூறும்
மங்கையர் பாடல் கேட்டுக் கின்னர மயங்கு மாதோ.

சுனைகள் வருணனை

941 கள்ளவிழ் கோதை மாதர் காதொடு முறவு செய்யும்
கொள்ளைவாட் கண்ணி ஞர்தங் குங்குமக் குழம்பு [1]தங்கும்
தெள்ளிய பளிக்குப் பாறைத் தெளிசுனை மணியிற் செய்த
வள்ளமு நறவு மென்ன வரம்பில பொலிவ மன்னோ.

---

940 நாட்டம் - கண். முறுவல் - பற்கள். பூவின் அங்கை - தாமரை மலர் போன்ற அழகிய கை. உளர்ந்து - தடவி. பாடும் போது மகளிருக்கு அங்க சேஷ்டை இன்மை: 'சுருள்கொடிப் புருவமேறு கயனெடு கண்ணு மாடா, வருங்கடி மிடரும் விம்மா தணிமணி யெயிறுந் தோன்ற, இருங் கடற் பவளச் செவ்வாய் திறந்திவள் பாடினோளா, நரம்பொடு வீணை நாவி னவின்றதோ வென்று நைந்தார்' (சீவக. 658); 'கண்ணிமையா கண்டங் துடியா கொடிறசையா, பண்ணளவும் வாய் தோன்ற பற்றெரியா - எண் ணிலிவை, கள்ளாற் நறுந்தெரியற் கைதவனே கந்தருவர், உள்ளாளப் பாட லுணர்' (இசை மரபு); 'வயிறது குழிய வாங்க லழுமுகங் காட்டல் வாங்குஞ், செயிறறு புருவ மேறல் சிரநடுக் குறல்கண் ணுடல், பயிறரு மிடரு வீங்கல் பையென வாயங்காத்தல், எயிறது காட்ட லின்ன வுடற் றொழிற் குற்றமென்ப' (திருவிளை. விறகுவிற்ற. 29.) அங்கையும் மிட றும் கூட்டி நரம்பு உளர்தல்: 'சீறியாழ், நரம்பு மீதிறவா துடன்புணர்ந் தொன்றிக், கடவதறிந்த வின்குறல் விறலியர்' (மலைபடு. 534 - 6.) கின்னரம் - இசையில் நல்லதையும் தீயதையும் உணரும் ஒரு பறவை; 167; கின்னரமிதுன பட்சிகள் என்பர்; 80; தக்க. 610. உரை; 'மாதர் யாழ் சடவர வந்த மைந்தர்கைக், கீதத்தான் மீண்டன கேள்விக் கின்னரம், போதரப் பாடினுள் புகுந்த போயின, தாதலர் தாரினூர் தாங்கள் பாடவே' (சீவக: 660.) காட்ட வீணையும் சாரீர வீணையும் ஒக்கக் காட்டினமையால் கின்னரம் பெண்களைத் தம்மினம் என்று மயங்கின. 'புக..... தோன் றப்..... சோரப்..... நெரியப்' என்ற பாடம் சில பிரதிகளில் காணப் படுகிறது. (நக)

941 கோதை - மாலையை அணிந்த. காதொடும் உறவு செய்யும் கண் - காதளவு நீண்ட கண். மாதராகிய கண்ணினூர். குழம்பு சுனையில் தங்குதல் குளிப்பதனால். மணி - பளிங்கு. வள்ளம் - கிண்ணம். பளிங்குப் பாறையா லியன்ற சுனைக்கு வள்ளமும் குங்குமக் குழம்பு தங்கும் நீருக்கு நறவும் உவமை;

குறுந் 193: 1–2. (பி - மீ.) [1] 'தங்கித்', 'தேங்கும்', 'கொள்ளும்' (ச0)

அரம்பைமாதர் ஊடலில் நீத்த மந்தார மாலைகளின் வருணனை

942 ஆடவ ராவி சோர வஞ்சன [1]வருவி சோர
ஊடலிற் சிவந்த நாட்டத் தும்பர்த மரம்பை மாதர்
தோடலர் கோதை நின்று துறந்தமந் தார மாலை
வாடல நறவ ருது வயின்வயின் வயங்கு மாதோ.

குறத்தியர் தேவமாதர் இவர்களின் செயல்

943 மாந்தளிர் னைய மேனிக் குறத்தியர் மாலை சூட்டிக்
கூந்தலங் கமுகின் பாளை குழலினை டொப்புக் காண்பார்
ஏந்திழை யரம்பை மாத [1]ரெழின்மணிக் கடகம் வாங்கிக்
காந்தளம் போதிற் [2]பெய்து கைகளோ டொப்புக் காண்பார்.

குரங்குகளின் செயல்

944 சரம்பயில் சாப மன்ன புருவங்க டம்மி [1]லாட
நரம்பினை டினிது பாடி நாடக மயிலோ டாடி
அரம்பையர் வெறுத்து நீத்த வவிர்மணிக் கோவை யாரம்
மரம்பயில் கடுவன் பூண மந்திகண் டுவக்கு மாதோ.

மலைவிடும் ஒளிகளின் வருணனை

945 சாந்துயிர் தடங்க டோறுந் தாதுரா கத்துச் சார்ந்த
கூந்தலம் பிடிக ளெல்லாம் குங்கும மணிந்த போலும்
காந்தின மணியின் சோதி கதிரொடுங் கலந்து [1]வீசச்
சேந்துவா னகமெப் போதுஞ் செக்கரை யொக்கு மன்றே.

---

942 அஞ்சன அருவி சோர - மை படிந்த கண்ணீர் பெருக. தோடு அவிழ் மந்தார மாலை என்று கூட்டுக; தோடு - இதழ்கள். கோதை - கூந்தல். மந்தாரமாலை தெய்வத் தன்மையாற் சுரும்பு மூசாததனால் நறவு அருத தாயிற்று. (பி - மீ.) [1]'வாரி', 'வோதி' (சக)

943 கூந்தலங் கமுகு - கூந்தற் கமுகு என்ற மரவிசேடம். பெண் களின் கூந்தலுக்குக் கமுகின் பாளை உவமை. கடகம் - கையில் அணியும் அணி. காந்தள் மலர் கைக்கு உவமை.

(பி - மீ.) [1]'ரொளிமணி', 'ரெதிர் மணி' [2]'சேர்த்துக்' (சஉ)

944 சரம்பயில் சாபம் - வில். நரம்பினெடு இனிது பாடி - கண்டமும் கருவியும் ஒக்கப் பாடி. கடுவன்-ஆண் குரங்குகள். (பி - மீ.) [1]'னெடு' (சஙு)

945 சாந்து உயர் தடங்கள் - சந்தன மரங்கள் ஓங்கி வளர்ந்துள்ள மலைச்சாரல்கள். தாதுராகம் - செங்காவிக்கல். கூந்தல் அம் பிடிகள் - பிடரியில் மயிரையுடைய அழகிய பெண் யானைகள். குங்குமம் - செந்நிற மான குங்குமக் குழம்பு. காந்து - ஒளி வீசுகின்ற. சேந்து - சிவந்து.
(பி - மீ.) [1]'மூசச்' (சச)

மலை வீழ் அருவி

946 நிலமகட் கணிக ளென்ன நிரைகதிர் முத்தஞ் சிந்தி
மலைமகள் கொழுநன் சென்னி வந்துவீழ் கங்கை மான
அலகில்பொன் னலம்பி [1]யோடி யாரஞ்சே ரருவி மாலை
உலகளந் தவன்றன் மார்பி [2]னுத்தரீ யத்தை யொத்த.

மலர் கொய்தாரும் கள்ளுண்டாருமாகிய பெண்கள் கண்ட காட்சி

947 கோடுலா நாகப் பூவோ டிலவங்க மலருங் கூட்டிச்
சூடுவார் களிவண் டோச்சித் தூநறுந் [1]தேறல் கொள்வார்
கேடிலா மகர யாழிற் கின்னர மிதுனம் பாடும்
பாடலா லூட [2]னீங்கும் பரிமுக [3]மாதர்க் கண்டார்.

இதுவும் அது

948 [1]பெருங்களி றேயு மைந்தர் பேரெழி லாகத் தோடும்
பெருந்துணைக் கொங்கை [2]யன்ன பொருவில் கோங்
[கரும்பின் மாடே
மருங்கெனக்குழையுங் கொம்பின்மடப்பெடை வண்டுந்தங்கள்
கருங்குழற் களிக்கும் வண்டுங் கடிமணம் புணர்தல் கண்டார்.

---

946 கங்கையைச் கூறியது வெண்ணிறத்துக்கும் உயரத்திலிருந்து வீழ்வதற்கும். மான: உவம உருபு. ஆரம் - முத்துக்கள். உத்தரீயம் - மேலாடை. உலகளந்த திருமாலுக்கு நீல நிறமுள்ள இந்து சயிலமும், அருவிக்கு உத்தரீயமும்; 'மீயோங்கு செம்பொன்முடி யாயிர மின்னிமைப்ப, ஓயா வருவித் திரளுத் தரியத்தை யொப்ப.....மாயோன் மகரக் கடனின் றெழு மாண்பதாகி' (சூ. 1:41); 'மாயோன் மார்பி லாரம் போல, மணி வரை யிழிதரு மணிகிள ரருவி' (தொல். செய். 35,பேர்.)

(பி - ம்.) [1]'யாரஞ் சார்ந்துவீ ழருவி' [2]'னுத்த ரீகத்தை' (சரி)

947 கோடு - கிளை. நாகம் - சுர புன்னை. 'சூடுவார் தேறல், கொள்வார்' என்ற குறிப்புப் பின் வரும் பூக்கொய் படலம் உண்டாட்டுப் படலங்களைக் குறிப்பிக்கும் என்பாரும் உளர். மகரயாழில் - மகரயாழைப்போல. கின்னர மிதுனம்: 880, குறிப். பரிமுகமாதர்: குதிரை முகமும் மானிட சரீரமும் உடையவர்கள்; உ. 8:11.

(பி - ம்.) [1]'தேறலுண்பார்' [2]'னீங்கிப் பனிமல ரமளி சேர்வார்' [3]'மாக்கள்' (சசு)

948 ஆகத்தோடும் - மார்பினுடன்; பொரும் - போர் செய்கின்ற. கோங்கின் அரும்பு நகில்களுக்கு: முருகு. 34 - 5, அடிக்; 'பொன்னீன்ற, கோங்கரும் பன்ன முலையாய்' (நாலடி. 400); 'பொன்னிறக் கோங்கின் பொங்கு முகிழ்ப்பென்ன, முன்ன ரீன்ற முலை' (பெருங். க. 41:64 - 5.) முதலிரண்டடிகள் கோங் கரும்பின் பெருமையைக் குறிக்கும். மரக்கொம்பு

படிகத்தை ஜலமென்று மயங்கிச் சென்ற பெண்களைக் கண்டு வீரர் நகைத்தல்

949 [1]படிகத்தின் றலமென் றெண்ணிப் படர்சுனை [2]முடுகப் புக்க
சுடிகைப்பூங் கமல மன்ன சுடர்மணி முகத்தி னார்தம்
வடகத்தோ டுடுத்த தூசு [3]மாசினீர் நனைப்ப நோக்கிக்
கடகக்கை யெறிந்து தம்மிற் [4]கருங்கழல் வீரர் நக்கார்.

வேறு பல காட்சிகள்

950 பூவணை பலவுங் கண்டார் பொன்னரி மாலை கண்டார்
மேவருங் கோப மன்ன வெள்ளிலைத் தம்பல் கண்டார்
ஆவியி னினிய கொண்கர்ப் பிரிந்தறி வழிந்த [1]விஞ்சைப்
பாவையர் [2]வைகத் தீய்ந்த பல்லவ சயனங் கண்டார்.

தேவமகளிர் ஊசலாடலைக் காணல்

951 பானலங் கண்க ளாடப் பவளவாய் முறுவ லாடப்
பீனவெம் முலையி னிட்ட பெருவிலை யார மாடத்
தேன்முரன் றளகத் தாடத் திருமணிக் குழைக ளாட
வானவர் மகளி ராடும் வாசநா றூசல் கண்டார்.

இடைக்கு உவமை. கொம்புகளிலுள்ள பெடை வண்டுகளும் பெண்களின் கூந்தலிலுள்ள ஆண் வண்டுகளும் கோங்கரும்புகளிற் கடிமணம்புணர்ந்தன.

(பி - மீ.) [1]'பெருங்களிப்புற்ற' [2]'யென்னப் பொலிந்த' (சள)

949 படர் - பரவியுள்ள. பளிங்குக்கு நீர்: 126, அடிக். நீர்ச் சுனையைப் படிகத்தால் இயன்ற தலம் என்று மயங்குதல்: பாகவதம், 10: சிசுபாலனைக் கொன்ற. 118. சுடிகை - நுதலில் அணியும் ஓர் ஆபரணம். வடகம் - மேலாடை. தூசு - ஆடை. மாசு இல் நீர் - மிகத் தூய நீர். கடகம் - ஒரு வித வளையல். கருமை - பெருமை.

(பி - மீ.) [1]'படிகத்தைப் புனலென்' [2]'யதனிற்' [3]'மற்றது னனையக் கண்டு' [4]'கனைகழல் வேந்தர்' (சஅ)

950 பூ அணை - மலர்களால் இயன்ற படுக்கை. மாலைகள் ஊடன் மகளிர் பிய்த்துக் கீழே போட்டவை. கோபம் - இந்திர கோபப் பூச்சி. மென்று உமிழ்ந்த வெற்றிலைப் பாக்கின் கலவைக்கு இந்திர கோபம் உவமை: 'கோபம்.....கள்ளுடை யோதியார்தங் கலவியிற் பலகாற் கான்ற, வெள்ளடைத் தம்பற் குப்பை சிதர்ந்தென விரிந்த மாதோ' (சூ.7:29.) பல்லவ சயனம் - தளிர்ப் படுக்கை. காதல் நோயால்துயில் வாராமையின், 'வைக' என்றார். (பி - மீ.) [1]'சிந்தைப்' [2]'படுக்கத்' (சக)

951 பானல் - கருங்குவளை. முறுவல் ஆடல் - மந்தகாசம் தோன்றுதல். பீனம் - பருமை. தேன் - வண்டுகள். அளகம் - கூந்தல். (நம)

கள்ளுண்டு பெண்கள் போகட்ட கிண்ணங்களைக் காணுதல்

952 சுந்தர வதன மாதர் துவரிதழ்ப் பவள வாயும்
அந்தமில் சுரும்புந் தேனு மிஞிறுமுண் டல்குல் விற்கும்
பைந்தொடி மகளிர் கைத்தோர் பசையில்லை யென்ன விட்ட
மைந்தரி னீத்த தீந்தேன் வள்ளங்கள் பலவுங் கண்டார்.

கலவியில் மாதர் வெறுத்து நீத்த பொருள்களைக் காணுதல்

953 அற்பக லாக்கும் சோதிப் பளிக்கறை யமளிப் பாங்கர்
மற்பக மலர்ந்த திண்டோள் வானவர் மணந்த கோல
[1]விற்பகை நுதலி னார்தங் கலவியின் வெறுத்து நீத்த
கற்பக மீன்ற மாலை [2]கலனொடுங் கிடப்பக் கண்டார்.

பெண்கள் அரும்பிய காந்தளையும் பூவின் உருவையும் கண்டு மயங்கல்

954 கையென மலர வேண்டி யரும்பிய காந்த ணோக்கிப்
பையர விதுவென் றஞ்சிப் படைக்கண்கள் புதைக்கின் றாரும்
[1]நெய்திரள் வயிரப் பாறை நிழலிடைத் தோன்றும் போதைக்
[2]கொய்திவை தருதிரென்று கொழுநரைத் தொழுகின் றாரும்.

---

952 துவரிதழ்ப் பவளவாய்: 'துவரிதழ்ப் பவளவாயும்' (திருமாலை.20.) கைத்து - கையினிடத்தாகிய. பசை - வருவாய். பரத்தையர் பொருள் இல்லாதவரை நீப்பது: 'காணமிலி யெனக் கையுதிர்க் கோடலும்' (மணி. கசு: 10; கஅ: 19 - 22.) 'வாயும் சுரும்பும் தேனும் மிஞிறும் உண்டு நீத்த வள்ளங்கள்' என்று கூட்டுக. (ருக)

953 அல் பகலாக்கும் - இரவைப் பகலாக்குகின்ற. மல்பக - மற்போர் உடைந்து போம்படி. மலர்ந்த - விரிந்த. கோலம் - அழகு. வில் பகை நுதல்-வில்லுக்குப் பகையாகிய நெற்றி. பெண்கள் கலவியின் மாலைகளையும் அணிகளையும் வெறுத்து நீத்தல். (பி - ம்.) [1]'விற்பகல்' [2]'கலையொடுங்' (ருஉ)

954 பெண்கள் கைபோல் மலரக் காந்தள் விரும்பியதாகக் கூறியது கவி சமத்காரம். காந்தள் மலருக்கு அரவு உவமை. பெண்கள் அச்சத்தாற் கண் புதைத்தல்: 858; 'காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள், தாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்ததனோ டொழுகலால்' (கலி. ௩௯: 1 - 2.) நெய்திரள் - நெய்ப்புக் குணம் திரண்டுள்ள. நிழ லிடை - ஒளியில். போது ஓரிடத்தும் அதன் நிழல் பாறையினிடத்தும் உள்ளவை. பாறையைச் சுனை யென்று கொண்டு அதில் தோன்றிய நிழலை மலர்ந்துள்ள பூவெனக் கருதினார் என்க. பாறையைச் சுனையென மயங்கல்: 949. ஈற்றடி: 873. (பி - ம்.) [1]'நெய்தவழ்' [2]'கொய்து நீர்' (ருங)

பெண்கள் மலர் கொய்தலும் சுனை குடைதலும்

955 பின்னங்க ளுகிரிற் செய்து பிண்டியந் [1]தளிர்கைக் கொண்ட
சின்னங்கண் முலையி னப்பித் தேமலர் கொய்கின் றூரும்
வன்னங்கள் பலவுந் தோன்ற [2]மணியொளி [3]மயிலி னல்லார்
அன்னங்கள் புகுந்த வென்ன வகன்சுனை குடைகின் றூரும்.

வேறு

அம்மலையில் உள்ள வேறு சிறப்புக்கள்

956 ஈனு மாழை யிளந்தளி ரேயொளி
ஈனு மாழை யிளந்தளி ரேயிடை
மானு வேழமு நாகமு மாதர்தோள்
மானும் வேழமு நாகமு மாடெலாம்.

957 புகலும் வாளரிக் கண்ணியர் பொற்புயம்
புகலும் வாளரிக் கண்ணியர் பூண்முலை
அகிலு மாரமு மாரவங் கோங்குமே
அகிலு மாரமு மாரவங் கோங்குமே.

---

955 பிண்டி - அசோகு. அசோகின் தளிர்களை உகிரினால் பின்னங்கள் செய்து அங்ஙனஞ் செய்த சின்னங்களை முலையில் அப்பி; முலையில் தளிர்களை அப்புதல்: முருகு: 32 - 6, அடிக். குடைதல் - குளிர்தல்.

(பி - ம்.) [1]'தளிரிற்' [2]'மணி வட முலையினில்லார்' [3]'மலையினில்லா' (நிச)

956 ஈனும் - தளிர்க்கின்ற, இவ்விடத்தும். மாழை - மரமரம்; இங்கு வகிர்ந்த மாவடு; 'மாழை யொண்கண் பரவையைத் தந்தாண்டானே', 'மாழை யொண் கண்ணுமையை மகிழ்ந்தானே' (தே. 5016, 5538.) தளிர் ஏய் ஒளி ஈனும் மாழை இளம் தளிரே - தளிரை ஒத்த ஒளியைத் தருகின்ற பொன்னினது மெல்லிய தகடுகளே. இடை - அம்மலையிடத்தில். முன்னுள்ள மான் வேழம் நாகம் என்பன முறையே, மான், யானை, பாம்பு அல்லது குரங்கு என்று பலவற்றை உணர்த்தும். தோள் மானும் - தோளை ஒத்த. வேழமும் நாகமும் - மூங்கிலும், சுரபுன்னையும். உள்ளன என்ற ஒரு சொல்லை இடை மாடெலாம் என்பவற்றோடு கூட்டுக. (நிரு)

957 (க) புகலும் புகழ்ந்து கூறும், விரும்பும். வாள் அரிக்கு அண்ணியர் - வாள்போன்ற கிங்கத்தை ஒத்த வீரர்கள்; வாள் அரி கண்ணியர் எனப்பிரித்து ஒளி பொருந்திய வண்டுகள் தங்கப் பெற்ற தலைமாலைகளையுடைய வீரர் என்னலுமாம். (உ) வாள் அரி கண்ணியர் - வாள்போன்ற செவ்வரி படர்ந்த கண்களையுடைய பெண்கள். புகலும் - புகுதலும். (ங) அகிலும் ஆரமும் ஆர அங்கு ஓங்குமே - அகிலின் கலவையும் முத்து

958 துன்ன ரம்பை [1]நெருங்கிய [2]தொல்வரை
துன்ன ரம்பைய ரூருவிற் றோன்றுமால்
கின்ன ரம்பயில் கீதங்க [3]ளென்னவாங்
கின்ன ரம்பயில் கின்றன ரேழையர்.

959 திமிர மாவுடற் குங்குமச் சேதகம்
திமிர மாவொடுஞ் சந்தொடுந் தேய்க்குமால்
அமர மாதரை யொத்தொளி ரஞ்சொலார்
அமர மாதரை யொத்ததவ் வானமே.

ஆரங்களும் நிறையும்படி அந்தப் புயங்களில் மிகுந்து தோன்றும். 'புகலும் ஒங்கும்' என்று முடிக்க. (ச) அகிலும் - மலையிலும்; தரையைக் குறிக்கும் அகிலம் என்ற சொல் ஈறு குறைந்து மலையை உணர்த்திற்று; உம்மை: இறந்தது தழுவிய எச்சம்; முன்னே கூறிய தோளுக்கு இனமான மலையும் என்றபடி. ஆரமும் ஆர அம் கோங்குமே - சந்தன மரங்களும், நிறைய அழகிய கோங்கு மரங்களுமே; மேவும் என்ற ஒரு சொல்லே வருவித்துக் கூட்டுக. (நிசு)

958 (க) தொல்வரை துன் அரம்பை நெருங்கிய - பழமையான மலையில் துன்னி நெருக்கமாக உள்ளவையான வாழைகள். (உ) துன் அரம்பையர் ஊருவில் தோன்றும் - அங்கே வந்து பொருந்தும் தெய்வ மகளிரின் தொடையைப் போல் தோன்றும். ஆல்: அசை. (ங - ச) ஏழையர் ஆங்கு இன்னரம்பயில் கீதங்கள் என்ன இன் நரம்பு அயில்கின்றனர் - அங்கே வந்துள்ள பெண்கள் கின்னர ஜாதிகள் பாடும் பாடல்கள் போன்ற இனிய வீணை இசையைச் செவி மடுக்கிறார்கள்; கின்னர ஜாதி: 880, அடிக். நரம்பு - யாழிசைக்கு ஆகு பெயர். இங்ஙனமன்றி 'என்னலாம்' என்ற பாடம் கொண்டு 'ஏழையர் கின்னரம் என்ற ஒரு வாத்தியத்தைப் பயில்கின்றனர், அதன் இசையைக் கின்னர சாதி பாடும் இசைக் கீதங்கள் என்று கூறலாம்' என்று பொருள் கூறுவாரும் உளர். (பி - மீ.) [1]'நிரம்பிய' [2]'சூழ்வரை' [3]'என்னலாங்' (நிஎ)

959 (க) திமிரமா - இருளே ஒத்த காட்டுப் பன்றி; மலைபடு. 247. திமிரம் - இருள். குங்குமச் சேதகம் - குங்குமச் சேறு. ஊடல் மகளிர் களைந்து எறிந்தது இது; 'கோதை மடவார்தங் கொங்கை மிசைத் திமிர்ந்த சீதக் களபச்செழுஞ் சேற்றுல் - வீதிவாய், மானக் கரிவழுக்கு மாவிந்தம்' (நள. க: 13.) எறிந்த சேற்றில் பன்றி புரண்டதனால் அதன் உடல் குங்குமச் சேறுயிற்று. (உ) திமிர - நிரம்ப. மாசந்து - மாமரம், சந்தன மரம். தேய்ப்பது அச்சேறு உடலினின்றும் நீங்க. (ங) அமரமாதர்-தெய்வப் பெண்கள். (ச) அமர - தங்கியதனால், மாதரை - பெரிய மலை நிலமானது. அவானமே ஒத்தது - அந்த விண்ணுலகையே போன்றது. (நிஅ)

960 பேர வாவொடு மாசுணம் பேரவே
பேர வாவொடு மாசுணம் [1]பேருமால்
ஆர வாரத்தி லோடு மருவியே
ஆர வாரத்தி லோடு மருவியே.

961 ஊறு மாகட மாவுற வுங்கெலாம்
ஊறு மாகட மாமத [1]மோங்குமே
ஆறு சேர்வன மாவரை யாடுமே
ஆறு சேர்வன மாவரை யாடுமே.

962 கல்லி யங்கு கருங்குல மங்கையர்
கல்லி யங்ககழ் காமர் கிழங்கெடா
வல்லி யங்க ணெருங்கு மருங்கெலாம்
வல்லி யங்க ணெருங்கி மயங்குமே.

---

960 (க) பேரவாவொடு - உணவை விரும்பி மிக்க ஆசையோடு. மாசுணம் - மலைப்பாம்பு. பேரவே - நகரவே. (உ) பேர - பெயரையுடைய. ஆ ஒடு-காட்டுப் பசுவுடன். மாசுணம்-பெரிய புழுதி; சுணம்: இடைக்குறை. பேரும் - இடம் விட்டு எழும். முதலடி ஈற்றிலுள்ள 'வே' என்பதனை 'வேய்' என்பதன் கடைக்குறை யாகக் கொண்டு, மூங்கிலில்பேர, ஆவொடு சுண்ணம் பேரும்' என்று பொருள் கூறுவாரும் உளர். வேய் - மூங்கில். (ங) ஆர - நிறைய. ஆரத்திலோடு - முத்துக்களோடு. மருவியே-பொருந்தி. (ச) ஆரவாரத்தின் - பெருமுழக்கத்தோடு. ஓடும் அருவியே - அருவி ஓடும்; ஏ: அசை. இரண்டாம் அடியில் பேரவே என்ற பாடம் கொண்டு அருவி (4) பேர (1) பேர (2) மருவி (3) ஓடும் (4) அருவியே என்று முடித்தலும் ஒன்று. (பி - மீ.) [1]பேரவே' (ஞக)

961 (க) ஊறுமா - கொலை செய்யும் விலங்கு; சிங்கம் முதலியன. கடமா - காட்டிலுள்ள ஒருவகை விலங்கு; நாலடி. 300; புறநா. 202:2. உற - பொருந்த. 'மாகடம் மாஊறு உற' என்று கொண்டு 'பெரிய காட்டிலுள்ள மாமரங்கள் சிதைவைப் பெற' என்று பொருள் கூறுவாரும் உளர். (உ) ஊறு - மேன் மேலும் ஊறுகின்ற. மா-மிகுந்த. கடமா - யானையின். மதம் - மதநீர். (ங) ஆறு - அந்த மத ஆற்றில். சேர்வன மாவரை-படிவன வாகிய பெரிய மூங்கில். ஆடும்-அசைந்தாடும். (ச) ஆறு—வழியை. சேர்வன-சேர்கின்றவை. மா - மிருகங்களும். வரை ஆடுமே-மலை ஆகிலுமே. (பி - மீ.) [1]மோடுமே' (ஞ0)

962 (க) கல் - மலையில். இயங்கு - ஈஞ்சரிக்கின்ற. கருங்குற மங்கையர் - கரிய நிறமுள்ள குறத்தியர். (உ) அகழ் காமர்கிழங்கு அங்கு கல்லி எடா—அகழ்ந்த அழகிய கிழங்குகளை அங்கே தோண்டி எடுத்து; எடா-எடுப்ப எனத்திரிக்க. (ங) வல் இயங்கள் நெருங்கும் மருங்கு எலாம்-வலிய வாத்தியங்கள் (பறைகள்) நெருங்கி முழங்கும் பக்க மலைகளில் எல்லாம். 'வல்லி நெருங்கு அங்கண் மருங்கு எலாம்' எனப்பிரித்து, 'கொடிகள் நெருங்கியுள்ள இடமகன்ற பக்கங்களில் எல்லாம்' என்று பொருள் கொள்ளலும் சரி. (ச) வல்லியங்கள் - புலிகள். மயங்கும்-(யாது செய்வதென்று அறியாது) மயங்கும். (ஞக)

963 கோளி பங்கய மூழ்கக் குளிர்கயம்
கோளி பங்கய மூழ்கக் குலைந்தவால்
ஆளி பொங்கு [1]மரம்பைய ரோதியே
ஆளிபொங்கு மரம்பைய ரோதியே.

964 ஆக மாலைய மாகவுள் ளாள்பொலி
வாக [1]மாலைய னின்றென லாகுமால்
மேக மாலை மிடைந்தன மேலெலாம்
மேக மாலை மிடைந்தன கீழெலாம்.

ஆடவரும் மகளிரும் அங்கங்கே தங்கி விளையாடல்

965 பொங்கு [1]தேனுகர் பூமிஞி ருமென
எங்கும் மாதரு மைந்தரு மீண்டியத்
தங்க மால்வரைச் சூழல்கள் யாவையும்
தங்கி நீங்கிலர் தாமினி தாடினர்.

---

963 (க) குளிர் கயம் - குளிர்ந்த தடாகத்தில். கோள் இபம் - கொல் லுதலை யுடைய யானைகளும்; 'சிறுகண் யானை யாள் வீழ்த்துத் திரிதரும்' (ஐங். 314.) கயம்-யானைக் கன்றுகளும். மூழ்க-மூழ்குவதனால். (உ) கோளி -பூவாமற் காய்க்கும் மரங்களும்; இவை குளக்கரையிலுள்ளவை. பங்கயம்- தாமரைகளும். மூழ்கக் குலைந்த - மூற்றிலும் குலைந்து போயின; மூழ்க - மூழுக்க; 'ஒருத்தியை யியற்றி னோக்கி யுற்றபே ரின்ப மூழ்க, வருத்தி' (ஆற்றூர்ப். பாயிரம், 13·) (ங) ஆளி பொங்கும்-சிங்கங்கள் கர்ச்சிக்கின்ற. மரம் பயர் ஓதி ஏய் - மரங்கள் பக்கத்து வளர்ந்துள்ள மலையிடனித்துப் பொருந்திய; பயர் = பயல்-பக்கம். (ச) அரம்பையர் ஓதி - தேவ மாதரின் கூந்தலில். ஆளி - வண்டுகள்; அளி என்பதன் நீட்டல் விகாரம். பொங்கும்- களிக்கும். (பி - மீ.) [1]'மருவரை யூடிழிந், தாளி' (கூ2)

964 (க) ஆகம் - திருமாலின் திருமார்பு. ஆலையமாக உள்ளாள்-கோயி லாக உள்ளவள்; இலக்குமி. ஆலயம் என்பது யமகம் நோக்கி 'ஆலையம்' என்று திரிந்தது. (உ) வாக - அழகையுடைய. மால் ஐயன்-திருமாலாகிய தலைவன்- (ங) மேகமாலை - மேகங்களின் வரிசை. மேலெலாம்-மலையின் மேற்புறம் எல்லாம். (ச) மேக = மேவ-தங்க; சாவ என்பது சாக என்றாற் போல. 'மிடைந்தன மேக' என்று கூட்டுக; மிடைந்தன-நெருங்கியவை. மாலை - மாலைக் கதிரொளி; காதலர் காதலிகள் கலவியிலும் புலவியிலும் கழற்றி எறிந்த மாலைகளும் ஆம். (பி-மீ.) [1]'மாலென லாகிய தம்மலே' (கூ3)

965 தேன்நுகர் - தேனை உண்ணுகின்ற. மிஞிறு - பூவண்டுகள். மலையின் பல பாகங்களில் தங்கியுள்ள மாதர் மைந்தர்களுக்குப் பூவை மொய்த்துக் கொள்ளும் வண்டுகள் உவமை. ஆடினர் - பல ஆட்டங்களை விளையாடினர்கள். (பி - மீ.) [1]'தேனிமிர்' (கூ4)

மக்கள் மலையினின்றும் இறங்க மனமின்றிக்
காட்சிகளில் ஈடுபட்டமை

966 இறக்க மென்பதை யெண்ணல [1]ரன்னது
[2]பிறக்க லன்னதொர் பீழைய தாதலிற்
றுறக்க மெய்திய தூயவ ரேயென
மறக்க கிற்றில ரன்னதன் மாண்பெலாம்.

வேறு

அத்தமன வருணனை

967 மஞ்சார் மலைவா ரணமொத்தது வானி லோடும்
வெஞ்சாயை யுடைக்கதிரங்கதன் மீது பாயும்
பஞ்சானன மொத்தது மற்றது பாய [1]வூறும்
செஞ்சோரி யெனப்பொலி வுற்றது செக்கர் வானம்.

செக்கரால் மலை போலிந்த காட்சி

968 திணியார் சினைமா மரம் யாவையுஞ் செக்கர் பாயத்
தணியா தகறுந் [1]தளிரீன்றன போன்று தாழ
[2]அணியா ரொளிவந்து நிரம்பலி னங்க மெங்கும்
மணியா லியன்ற மலையொத்ததம் மையில் குன்றம்.

---

966. இறக்கம் - இறங்குதல். அன்னது - அப்படி மலையை விட்டுக் கீழே இறங்குதலானது. பிறக்கல் அன்னதோர் பீழையது - இந்த உலகத்தில் வந்து பிறப்பதை ஒத்த துன்பத்தது; பிறவி ஒரு துன்பம். துறக்கம் - சுவர்க்கம். மறக்கநிற்றிலர் - மறந்தார் அல்லர். அன்னதன் - அந்த மலையினுடைய.

(பி - மீ.) [1]'ரெண்ணுங்கால்' [2]'பிறக்கு மென்பதோர்' (சுடு)

967 மஞ்சு ஆர்மலை - மேகங்கள் நிறைந்துள்ள அந்தமலை. வாரணம் - யானை. வெஞ்சாயை உடைக்கதிர் - வெப்பமுள்ள கிரணங்களையுடைய சூரியன். அங்கதன் மீது பாயும் சூரியனுக்குச் சிங்கம் உவமை: 971, 979. பஞ்சானனம் - சிங்கம். ஊறும் செஞ் சோரி - ஊறுகின்ற சிவந்த இரத்தம். செக்கர் வானத்துக்குச் சுருதி வெள்ளம் உவமை: 421.

(பி - மீ.) [1]'வேறும்' (சுசு)

968 திணி ஆர் சினை - நெருக்க முள்ள கிளைகள். மாமரம் - பெரிய மரங்கள்; மாமரங்களும் ஆம். செக்கர் பாய - செவ்வானின் ஒளி படர. தணியாத - மிகுந்த. தாழ - தணிய. மணி - செம்மணி.

(பி - மீ.) [1]'தளிர்த்தன' [2]'அணியாவொளி' (சுஎ)

திருமாலைப் போன்றது இந்துசயிலம்

969 கண்ணுக் கினிதாகி விளங்கிய காட்சி யாலும்
எண்ணற் கரிதாகி யிலங்கு சிரங்க ளாலும்
வண்ணக் கொழுஞ்சந் [1]தனச்சே தகமார் பணிந்த
அண்ணற் கரியான் றனையொத்தவ் வாசில் குன்றம்.

எல்லோரும மலையைவிட்டு இறங்குதல்

970 ஊனும் முயிரும் மனையா ரொருவர்க் கொருவர்
தேனும் மிஞிறுஞ் செறி[1]தும்பியும் பம்பி யார்ப்ப
யானை யினமும் பிடியும்மிக லாளி யேறும்
மானுங் கலையும்மென மால்வரை வந்தி ழிந்தார்.

இருள் பரத்தல்

971 கால்வா னகத்தே ருடைவெய் யவன்காய் கடுங்கட்
[1]கோல்பாய் கதிர்ப்புல் லுளைக்கொல்சினக் கோள ரிம்மா
மேல்பான் மலையிற் படவீங்கிருள் வேறி [2]ருந்த
மால்யானை யீட்ட மெனவந்து பரந்த தனமே.

---

969 சிரங்கள் - சிகரங்கள். வண்ணம் - அழகு. சந்தனச் சேதகம் - சந்தனக் குழம்பு. ஆசு இல் - குற்றம் அற்ற. குன்றம் சந்தனம் சேர்ந்து காட்சியாலும் சிரங்களாலும் அச்சந்தனம் மார்பணிந்த கரியான்றனை ஒத்தது.

ஒப்பு: 'உருவுடைக் குன்றங்கள் காணி னுலகளந்தா னென்றுள்ளும்' திருவாய். 448. (பி - மீ.) [1]தனஞ் சேர்த்தது மார்ப' (சுஅ)

970 ஊன் - உடல். அனையார் - காதலனும் காதலியும். இகல் - வலிமை. ஆளி ஏறும் - ஆளியும் அதன் ஏறும் என்று கொள்க. ஆளி - சிங்கம். ஆணுக்கு ஆண் யானையும் ஏறும் கலையும், பெண்ணுக்குப் பிடியும் ஆளியும் மானும் உவமை. வரை - சாரற் குன்றம். வந்து: சொன்னடை. (சுக)

971 கால் - சக்கரம்: இங்கே ஒற்றைச் சக்கரம் என்று கொள்க. வானகத்தே செல்லும் தேர். வெய்யவன் - சூரியன். காய் - கோபிக்கின்ற. கடுங்கண் - கடுமையான கண்களையுடைய. கோல்பாய்—(தன்மீதுவரும்) அம்புகளின் மீது பாய்கின்ற. கதிர் புல் உளை - கிரணங்களாகிய மெல்லிய புறமயிரையுடைய. கோள் - கொல்லத் தக்க வலியையுடைய. அரிம்மா = அரிமா - சிங்கம்; விரித்தல் விகாரம். வெய்யவனுகிய அரிமா என்றபடி. சூரியனுக்குச் சிங்கம்: 967. மேல் பான்மலை - அஸ்தமயகிரி. இருளுக்கு யானைக் கூட்டம் உவமை. (பி - மீ.) [1]கோல் மாய்' [2]யைந்த' (எ0)

எங்கும் விளக்கேற்றல்

972 மந்தார முந்து மகரந்த மணங்கு லாவும்
அந்தா ரரசர்க் கரசன்ற னனீக வெள்ளம்
நந்தா தொலிக்குந் நரலைப்பெரு வேலை [1]யெல்லாம்
செந்தா மரைபூத் தெனத்தீப மெடுத்த [2]வன்றே.

நட்சத்திரங்களின் நடுவில் மதியின் தோற்றம்

973 தண்ணற் கடலிற் றளிசிந்து தரங்க நீங்கி
விண்ணிற் சுடர்வெண் மதிவந்தது மீனகள் சூழ
வண்ணக் கதிர்வெண் ணிலவீன்றன வாலு கத்தோ
டொண்ணித் திலமீன் றெளிர்வால்வளை யூர்வ தொத்தே.

சேனைக்கடலீன்ற மதிகள்போல் பெண்களின் முகங்கள் விளங்குதல்

974 மீனுறு வேலை யொருவெண்மதி யீனும் வேலை
நோனு தனை நுவலற்கருங் கோடி வெள்ளம்
வானு டியரிற் பொலிமாதர் முகங்க ளென்னும்
ஆனு மதியங்கண் மலர்ந்த தனீக [1]வேலை.

---

972 மந்தாரம் - தேவலோகத்திலுள்ள ஒரு மலர். அந்த மந்தாரம் உந்தும் பூந்தாதுக்களின் மணம் வீசப்பெற்ற அழகிய மாலையை அணிந்த. அனீக வெள்ளம் - சேனையின் தொகுதியாகிய. நந்தாது - குறையாமல். நரலை - ஒலி. தாமரை மலர் விளக்கிற்கு உவமை: 49.

(பி - மீ.) [1]'நாப்பண்' [2]'தன்றே' (எக)

973 தண் நல் கடலில். தளிசிந்து தரங்கம் - துளிகளைச் சிந்துகின்ற அலைகளை. ஈன்றது அன்ன - ஈன்றன்ன; விகாரம். வாலுகம் - வெண் மணல். ஒள் நித்திலம்-பிரகாசமான முத்துக்களை. ஈன்று ஒளிர். வால்வளை -வெள்ளிய சங்கு. விண்ணுக்கு வெண்மணலும் மதிக்குச் சங்கும் நட்சத் திரங்களுக்கு அச்சங்கு ஈன்ற முத்துக்களும் உவமை.

(பி - மீ.) [1]'தண்ணக்கட' (எஉ)

974 மீன் நாறு வேலை - மீனின் புலால் நாற்றம் வீசும் கடல்; அடை இகழ்ச்சிக் குறிப்பு. ஈனும் வேலை - பெறுகின்ற சமயத்தில். அதனை நோ னாது - அதனைப் பொறுமல். நுவலற்கு அரும் - கணக்கிட்டுச் சொல்ல முடி யாத. வெள்ளமாகிய வானுடியரில். வானுடியர்-தெய்வமகளிர். ஆனு-கலை கள் என்றும் குறைதலில்லாத. அனீக வேலை-சேனைக்கடல். சேனு சமுத் திரம் பல மதியங்களை ஈன்றது. கருத்து ஒப்பு: நை:7:78.

(பி - மீ.) [1]'வெள்ளம்' (எஊ)

கூத்தரின் ஆடல்கள்

975 மண்ணும் முழவின்ஒலி மங்கையர் பாட லோதை
பண்ணுந் நரம்பிற் [1]பயில்வாரிசைப் பாணி யோதை
கண்ணும் முடைவே யிசைகண்ணுள ராட [2]றோறும்
விண்ணும் மருளும் படிவிம்மி யெழுந்த வன்றே.

மாதர் இரவுக்கு ஒரு கோலம் கொள்ளல்

976 மணியின் ஒளிநீக்கி வயங்கொளி முத்தம் வாங்கி
அணியும் முலையா ரகிலாவி புலர்த்து நல்லார்
தணியும் மதுமல் லிகைத்தாமம் வெறுத்து வாசம்
திணியும் [1]மிதழ்ப்பித் திகைக்கத்திகை சேர்த்து வாரும்.

பலவித ஒலிகள்

977 புதுக்கொண்ட வேழம் பிணிப்போர்புனை பாட லோதை
மதுக்கொண்ட மாந்தர் மடவாரின் மிழற்று மோதை
பொதுப்பெண்டி ரல்குற் புனைமேகலைப் பூச லோதை
கதக்கொண்ட யானை களியாற்களிக் கின்ற வோதை.

---

975 மண்ணும் முழவு - வாசித்தற் கேற்ப அமைக்கப்பட்ட முழவு. பண்ணும் நரம்பில் பயில்வார் - இசையையுடைய வீணையில் பயில்கின்றவர்கள். நரம்பு: ஆகுபெயர். பாணி - பாட்டின். கண்ணும் முடைவேய் = கண்ணுடையவேய் - துளையமைந்த புல்லாங்குழல்; கண்ணும்: உம்மை இசை நிறை. கண்ணுளர் - கூத்தர். கூத்தர் ஆடும்போது ஒலிக்கும் வாத்தியங்கள் கூறப்பட்டன. விண் - விண்ணுலகத்தவர். ஆடல் தோறும் ஒலி முதலியன விம்மி எழுந்தன.

(பி - ம்.) [1]'பகையாலிகற்' [2]'லோடும்', 'லோதை' (எச)

976 ஒளி நீக்கி என்றது மணியாலியன்ற நகைகளே மார்பினின்றும் களைந்து என்றபடி. வாங்கி - நீக்கி. அணியும் - கச்சினை அணியும். முலை ஆர் அகில் ஆவி - அகில்களில் நிறைந்த அகிற்புகையால். நகில்களே ஆவியால் உலர்த்தல்: 902. தணியும் - வெப்பைத் தணிக்கின்ற. இதழ் பித்திகை - இதழ்களையுடைய கரு முகை. கத்திகை - மாலை. பெண்கள் இரவில் வேறு கோலம் கொள்ளுதல்: 'இரவிற் கோர் கோலம் கொடியிடையார் தாங் கொள்ள' (சிலப். 9: 3-4.) (பி - ம்.) [1]'மிதட்பட்டிகைப் பித்திகை' (எடி)

977 புதுக்கொண்ட வேழம் - புதிதாகக் குழியிற் படுத்துப் பிடித்த யானை. பாடல் - இசைப் பாடல். இசைக்குக் களிறு வசப்படும்; 'பிடியொடு போந்த பெருங்களிற் றெருத்தலை, வீரிய வியலயர் வாரியுள் வளைஇ, மதந்தலை தெருங்கிய மதக்களிறு வலியாக், கதந்தலை யழியக் கட்டொடர்த்துச், சாமரை வோசையிற் றணிக்கும், தூலறிபாகர்' (பெரும். க. 44: 59-64); 'காழ்வரை நில்லாக் கடுங்களிற் றெருத்தல், யாழ்வரைத் தங்கி யாங்கு'

அங்கிருந்தாருக்கு இராப்பொழுது கழிந்த விதம்

978 உண்ணு வமுதன்ன கலைப்பொரு ளுள்ள துண்டும்
பெண்ணு ரமுதம் மனையார்மனத் தூடல் போர்த்தும்
பண்ணு னபாடல் செவிமாந்திப் பயன்கொ ளாடல்
கண்ணு னனிதுய்க் கவுங்கங்குல் கழிந்த தன்றே.

(கலி. 2: 26-7.) மடவாரின் - மகளிரைப்போல. பொதுப் பெண்டிர் - வேசிகள். பூசல் - போர். கதம்கொண்ட யானை - மதவெறி கொண்ட யானைகள்; கதக்கொண்ட: வலித்தல் விகாரம்; உள்ளன என்பதை வருவித்து முடிக்க. (பி - மீ.) 'புதுப்பெண்டிர்' (எசு)

978 உண்ணு அமுதன்ன கலை - காமக்கலை, பலவிதமான வேறு கலைகளும் ஆம். (எஎ)

வரைக்காட்சிப் படலம் முற்றும்

15. பூக்கொய் படலம்

சூரியோதயம்

979 மீனுடை யெயிற்றுக் கங்குற்
கனகனே வெகுண்டு வெய்ய
கானுடை நகங்க ளென்னு
மாயிரங் [1]கதிர்க ளோச்சித்
தானுடை யுதய மென்னுந்
தமனியத் தறியி னின்று
மானுட மடங்க லென்னத்
தோன்றினன் வயங்கும் வெய்யோன்.

மன்னனும் பரிவாரமும் சோணையாற்றை அடைதல்

980 முறையெலா முடித்த பின்னர்
மன்னனு மூரித் தேர்மேல்
இறையெலாம் வணங்கப் போனு
னெழுந்துடன் சேனை வெள்ளம்
குறையெலாஞ் சோலை யாகிக்
குழியெலாங் கழுநீ ராகித்
துறையெலாங் கமல மான
சோணையா றடைந்த தன்றே.

உச்சிவேளையில் யாவரும் சோலை சார்தல்

981 அடைந்தவ ணிறுத்த பின்ன
ரருக்கனு மும்பர் சேர்ந்தான்
மடந்தையர் குழாங்க ளோடு
மன்னரு மைந்தர் தாமும்

---

979 மீன் உடை எயிற்று. கங்குல் கனகனே - இரவாகிய இரணிய கசிபுவை; பொன்னிறமுள்ள இரணியனை இங்கே கருநிறமுள்ளவனுக்கு கூறியது சாதியியல்பு பற்றி. கான் - மிகுதி; சீவக. 2901. தான் உடை - தான் தோன்றும் இடமாக உடைய. உதயகிரி பொன் தூணுக்கு உவமை, சூரியனுக்கு நரசிங்கம். (பி - மீ.) [1]'கதிர்க.....கரக்க' (க)

980 முறை - காலெக்கடன்கள். மூரி - வலிமை. இறை - அரசர்கள்; சாதி யொருமை. குறை - இரண்டு ஆறுகளுக்கு இடையில் உள்ள இடம்; ஆற்றிடைக் குறை. குழி எலாம் கழுநீர்: 47. (உ)

981 அருக்கன் - சூரியன். உம்பர் - உச்சி. வண்டு குடைந்து உறையும் பூ. பூக்கொய்து நீராட: இரண்டு படலங்களின் செய்தி குறிப்பிக்கப்பட்டது. தடம் - தடாகம். மடி - மானிடர் ஆக்காத நீர்நிலை. (ஊ)

குடைந்துவண் டுறையு மென்பூக்
கொய்துநீ ராட மைதீர்
தடங்களு மடுவுஞ் சூழ்ந்த
தண்ணருஞ் சோலை சார்ந்தார்.

பெண்களைக் கண்ட மயில், அன்னங்களின் செயல்

98 திண்சிலை புருவ மாகச்
சேயரிக் கருங்க ணம்பால்
புண்சில செய்வ தென்று
போவன போன்ற மஞ்ஞை
பண்சிலம் பணிக ளார்ப்ப
நாணினுற் பறந்து போன
வண்சிலம் பரற்ற மாத
ரொதுங்குதோ ரொதுங்கு மன்னம்.

பூங்கோம்புகளுக்கும் பெண்களுக்கும்
வேற்றுமை தெரியாது மைந்தர் மயங்கல்

983 செம்பொன்செய் சுருளுந் தெய்வக்
குழைகளுஞ் சோர்ந்து மின்னப்
பம்புதே னலம்ப வொல்கிப்
பண்ணையி னடை னைக்கிக்

---

982 அம்பால் மயிலைக் கொல்லுதல்: 'எவுறு மஞ்ஞையி னெங்கி (முல்லைப். 84); 'எவுறு மஞ்ஞையி னினைந்தடி வருந்த' (மணி எ:127); பண்சிலம்பு - இராகத்தை ஒலிக்கின்ற அணிகள் - நகைகள். நாணினால் - இவர்தம் நடைக்கு ஒவ்வேம் என்ற வெட்கத்தினால் போன - போனவை. சிலம்பு அரற்றுவதைக் கேட்டுத் தம்மினம் என்று உட்கொண்டு அவர்கள் நடக்கும்போதெல்லாம் அன்னங்களும் நடக்கும். சிலம்பின் குரல் அன்னக் குரலுக்கு: 171, அடிக். 'நடக்கும் இயல்பினையுடைய அன்னம் (இப்பொழுது) ஆர்ப்ப, பறந்துபோன' என்ற இயைத்துப் பொருள் கோடலும் ஆம். ஒதுங்குதல் என்ற சொல்லுக்குப் பதுங்குதல் எனப் பொருள் கொண்டு, 'மாதர் நடக்கும் போதெல்லாம் பதுங்கும் அன்னங்கள் (இப்பொழுது) நாணினால் பறந்து போன' என்று பொருள் கூறுவாரும் உளர்.

சில அச்சுப் பிரதிகளில், 'பண்சிலம் பணிவா யார்ப்ப நாணினும் பறந்த கில்லோ' என்ற தொடர் மூன்றுமடி யாகவுள்ளது. (ச)

983 பொன்னாற் செய்த சுருள்; சுருள் - ஓலை. தளிரைக் குறிக்கும் குழை என்ற பெயர் காதணிக்கு ஆயிற்று. பம்பு - நிறைந்த. தேன் அலம்பவண்டுகள் ஒலிக்க. ஒல்கி - அசைந்து. பண்ணை - மகளிர் விளையாட்டு.

கொம்பொடுங் கொடிய ணைரைக்
குறிப்பறிந் துணர்த்த றேற்றூர்
வம்பவி முலங்கன் மார்பின்
மைந்தரு மயங்கி நின்றூர்.

பெண்களின் ஒலியைக் கேட்ட குயில்களின் செயல்

984 பாசிழைப் பரவை யல்குற்
பண்டருங் கிளவித் தண்டேன்
மூசிய கூந்தன் மாதர்
மொய்த்தபே ரமலை கேட்டுக்
கூசின வல்ல பேச
நாணின குயில்க [1]ளெல்லாம்
வாசகம் வல்லார் முன்னின்
றியாவர்வாய் திறக்க வல்லார்.

பெண்கள் தோடப் பூங்கொம்புகள் மலர் சொரிந்து தாழல்

985 நஞ்சினுங் கொடிய நாட்ட
மமுதென நயந்து நோக்கிச்
செஞ்செவே கமலக் கையாற்
றீண்டலு நீண்ட [1]கொம்பும்

கொம்பு - பூங்கொம்பு. உணர்தல் - வேற்றுமை அறிதல். வம்பு - வாசனை. அலங்கல் - மாலை சுருளும் குழைகளும் மின்னுதலும், தேன் அலம்புதலும் ஒல்குதலும் பெண்களுக்கும் பூங்கொம்புகளுக்கும் பொது. (நு)

984 பாசிழை - பசும் பொன்னாற் செய்த அணிகள். பரவை யல்குல் - பரந்த அல்குல். கிளவி - சொற்கள். பண்தருங்கிளவி என்றதனால் இசை என்று கொள்க. கிளவித் தண்தேன் - கிளவியாகிய குளிர்ந்த தேன். மூசிய - மொய்த்த. அமலை - ஒலி. கூசுதல் - புதியவர்களென்று அஞ்சுதல். (பி - மீ.) [1]'ளென்றால்' (சு)

985 நாட்டம் - கண்களை. அமுது என - கண்டோர் அமுதென்று சொல்ல. செஞ்செவே - மிகச் செவ்வையாக. கொம்பர் - மரக் கொம்புகள். மகளிர் நோக்கவும் தீண்டவும் மரம் பூச் சொரிதல்: 'நித்தில முலையினார் தம் கொடுங்கணை நோக்கப் பெற்றும், கைத்தலந் தீண்டப் பெற்றுங் கனிந்தன மலர்ந்த காண்க, வைத்தலர் கொய்யத் தாழ்ந்த மரம்' (சீவக. 1907) மு:

தஞ்சிலம் படியின் மென்பூச்
சொரிந்திடை தாழ்ந்த வெண்ணூல்
வஞ்சிபோன் மருங்கு லார்மாட்
டியாவரே [2]வளைகி லாதார்.

இதுவும் அது

986 அம்புயத் தணங்கி னன்ன
ரம்மலர்க் கைக ளுண்ட
வம்பவி ழலங்கற் பங்கி
வாளரி மருளுங் கோளார்
தம்புய வரைகள் வந்து
தாழ்வன தளிர்த்த மென்பூங்
கொம்புக டாழு மென்றல்
கூறலாந் தகைமைத் தொன்றே.

பெண்கள் முகத்தில் மோய்க்க வரும் தும்பிகள் அலைக்கப் போகாமை

987 நதியினுங் குளத்தும் பூவா
நளினங்கள் குவளை யோடு
மதிநுதல் வல்லி பூப்ப
நோக்கிய [1]மழலைத் தும்பி
அதிசய மெய்திப் புக்கு
வீழ்ந்தன வலைக்கப் போகா
புதியன கண்ட போது
விடுவரோ புதுமை பார்ப்பார்.

'பாவையர்கை தீண்டப் பணியாதார் யாவரே, பூவையர்கை தீண்டலுமப் பூங்கொம்பு - மேவியவர், பொன்னடியிற் சூழ்ந்தனவே' (நள. உ : 5.)

(பி - ம்.) [1]'கொம்பர்' [2]'வணங்க லாதார்' (ஈ)

986 அம்புயத்து அணங்கு - திருமகள். அம்மலர்க் கைகள் - அழகிய மலர் போன்ற கைகள். பங்கி - ஆண்மயிர்முடி. வாள் அரி - சிங்கம். கோள் - வலிமை. தீண்டப் புயவரைகள் தாழ்வன. (அ)

987 பூவா நளினங்கள் - மூகங்கள். மதிநுதல் வல்லி - சந்திரனைப் போன்ற நெற்றியையுடைய கொடி; என்றது பெண்களை. குவளையோடு நளினங்கள் பூத்தல்: 'முண்டகத்தின் மேலே முழு நீலம் பூத்ததனைக் கண்ட தண்டு' (தனிப்.) மழலைத்தும்பி: 'மழலை வண்டினம் கல்லியாழ் செய்ய' (மணி. ச : 2.) முகத்தில் மொய்க்க வரும் தும்பி அலைக்கப் போகாமை: 'ஒருத்தி, கணங்கொண்டவை மூசச் கையாற்றூன் பூண்ட, மணங்கமழ் கோதை பரிவுகொண் டோச்சி, வணங்குகாழ் வங்கம் புகும்' (கலி. கூ: 45-7.) என்ற அடிகளையும், 'ஒருத்தி திரட்சி கொண்டு வண்டுகள் மொய்க்

கோம்புகளில் பெண்கள் வளைக்க முடிந்தவையும் முடியாதவையும்

988 உலந்தரு [1]வயிரத் திண்டோ
ளொழுகிவா ரொளிகொண் மேனி
மலர்ந்தபூந் தொடையன் மாலை
மைந்தர்பான் மயிலி னன்னார்
கலந்தவர் போல வொல்கி
யொசிந்தன சிலகை வாராப்
புலந்தவர் போல [2]நின்று
வளைகில பூத்த கொம்பர்.

பூப்பறித்தலாற் போலிவற்ற கோம்புகளைப்
பெண்கள் தம் அணிகளால் அலங்கரித்தல்

989 பூவெலாங் கொய்து கொள்ளப்
பொலிவில துவள நோக்கி
யாவதாங் கணவர் கண்ணுக்
கழகில விவையென் றெண்ணிக்
கோவையும் வடமு நாணுங்
குழைகளுங் குழையப் பூட்டிப்
பாவையர் பனிமென் கொம்பை
[1]நோக்கினர் பரிந்து நின்றார்.

கையினுலே கையாற் கடிய மாட்டாளாய் மணம் நாறுகின்ற மாலையை அறுத்துக் கொண்டு ஓட்டி அதற்கு அவை போகாமை கண்டு..... ஓடத்தே பாயும்' என்ற அவற்றின் உரையையும் காண்க; 'கோல காண்மலர் கொய்பவ ளங்கையில், ஒலிடுஞ்சுரும் போச்சவும் போகில, மாலு ழந்தும றிந்து விழுவன' (நைடத. போதுகொய். 14.)

(பி - ம்.) [1]'மாலைத்'

(க)

988 உலம் தரும் - திரண்ட கல்லைப் போன்ற. வயிரம் - உறுதி. ஒழுகி - ஒழுங்கு பட்டு; சிறுபாண். 21. ஒழுகும் (பி-ம்.)—சொரிகின்ற. தொடையல் மாலை - தொடுக்கப் பெற்றன வாகிய மாலைகள். கலந்தவர் - கூடியவர். ஒல்கி - துவண்டு ஒசிந்தன சில - சில வளைந்தன. கைவாராப் புலந்தவர் - உணர்த்த உணராத ஊடல் கொண்ட மகளிர். வளைந்த கொம்பு களுக்கும் வளையாத கொம்புகளுக்கும் முறையே கூடன் மகளிரும் ஊடன் மகளிரும் உவமை.

(பி - ம்.) [1]'வயிரத் தோண்மீ தொழுகுவார் நறைகண் மல்கி' [2]'நின்ற வளைகில'

(கo)

989 யாவது ஆம் - எப்படி யிருக்கும்; இகழ்ச்சிக் குறிப்பு. கோவை - மணிகள் கோத்த மாலை. வடம் - ஒற்றை வடமாகிய முத்துமாலை. நாண்-

வேறு

தும்பிகள் பெண்களின் வெறுங் கூந்தலில் மொய்த்தல்

990 துறும்போ தினிற்றேன் றுவைத்துண்டுழ றும்பி யீட்டம்
நறுங்கோதை யோடு [1]ளிசின்னமு நீத்த நல்லார்
வெறுங்கூந்தன் மொய்க்கின்றன வேண்டல வேண்டு போதும்
உறும்போக மெல்லா நலனுள்வழி யுண்ப ரன்றே.

பளிங்குப் பாறையில் தன்னுருவைக் கண்ட ஒரு பெண்ணின் செயல்

991 மெய்ப்போதினங்கைக் கணிபன்னவள் வெண்பளிங்கிற்
பொய்ப்போது தாங்கிப் பொலிகின்றதன் மேனிநோக்கி
இப்பாவை யெங்கோற் குயிரன்னவ ளென்னவுன்னிக்
கைப்போதி னேடு நெடுங்கண்பனி காலநின்றாள்.

ஒருவன் தன்காதலியை மாலைசூட்டக்
கண்ட ஒரு பெண்ணின் வருத்தம்

992 கோளுண்ட திங்கண் முகத்தாளொரு கொம்பர் மன்னன்
தோளுண்ட மாலை யொருதோகையைச் சூட்ட நோக்கித்
தாளுண்ட கச்சாற் றகையுண்ட [1]தனங்கண் மீது
வாளுண்ட கண்ணின் மழையுண்டன வாக நின்றாள்.

பொன்னால் இயன்ற கயிறு. பரிந்து - விரும்பி. விரும்புதல் செயற்கையால் உண்டான அழகை. (பி-ம்.) [1]'பரிந்தனர் நோக்கி நின்றார்' (கக)

990 துறும் - அடர்ந்த. போது - மலர். துவைத்து - மிதித்து. கோதை - மாலை. சின்னப்பூ - வியூ; கட்டாத பூ; I022, 1222, உ. 7:14; சீவக. 2251; தூளா. இரத. 53. பூக்கள் வியூ, தொடைப் பூ, கட்டுப் பூ என மூவகைப்படுமென்பர்; சிலப். 5:14, அடியார். மொய்க்கின்றன: பயனிலை. மலரில்லாக் கூந்தலில் தும்பி யீட்டம் மொய்த்தது; கூந்தலுக்கு இயற்கை மணம் இருத்தல் பற்றி. வேண்டல - விரும்ப வில்லை. வேண்டு போதும் - மற்றக் காலங்களில் தாம் விரும்பும் மலர்களையும். உறும்போகம் - அடையத்தக்க இன்பங்களை. நலன் உள்வழி - இன்பம் உண்டான இடத்தில். முடிபு: ஈட்டம் வெறுங் கூந்தல் மொய்க்கின்றன, வேண்டுபோதும் வேண்டல. (பி - ம்.) [1]'நலனே' (கஉ)

991 மெய் - உண்மையாக. போதின் நங்கை - இலக்குமி. பளிங்கு - பளிங்குப் பாறை. பொய்ப் போது - நிழலிலுள்ள மலர். மேனி - நிழல். எம் கோற்கு - எம் தலைவனுக்கு. கைப்போதினேடு - கையிலே வைத்திருந்த மலரோடு. கால - சோரிய; தெலுங்கு காட்டித் திசைச் சொல். (கங)

992 கோள் உண்ட திங்கள் முகத்தாள் - கொள்ளப் பட்ட சந்திரனைப் போன்ற முகத்தவள்; பாம்பு கவ்விய சந்திரனைப் போன்ற முகத்தவள்;

தலைவன் ஒளித்தலால் தலைவி வருந்தல்

993 மயில்போல் வருவாண் மனங்காணிய காதன் மன்னன்
செயிர்தீர் மலர்க்காவி லொர்மாதவிச் சூழல் சேரப்
பயில்வா ளிறைபண்டு பிரிந்தறி யாள்ப தைத்தாள்
உயிர்நாடி யொல்கும் [1]முடல்போ லலமந் துழன்றாள்.

ஒரு மாதின் புலவி நுணுக்கம்

994 செம்மாந்த தெங்கி னிளநீரையொர் செம்ம னேக்கி
அம்மாவிவை மங்கையர் கொங்கை களாகு மென்ன
எம்மாதர் கொங்கைக் கிவையொப்பன வென்றெ ரேழை
விம்மா வெதும்பா வெயராமுகம் வெய்து யிர்த்தாள்.

ஓர் ஊடல் மகள் தன்கணவனே வேண்டாது
குயிலை மலர் பறித்துத்தர வேண்டுதல்

995 மைதாழ் கருங்கண்கள் சிவப்புற [1]வந்தொர் மாது
நெய்தாவும் வேலா னெடுநெஞ்சு புலந்து நின்றாள்

மேகமும் பாம்பும் கூந்தலுக்கு உவமைகள். கோள் - மேகம், பாம்பு; 'அணிமுக மதியொப்ப வம்மதிலைய ணனியேய்க்கும், மணிமுக மாமழைநின் பின்னெப்பப் பின்னின்கண், விரிநுண்ணூல் சுற்றிய வீரித ழலரி, அரவுக் கண் ணணியுற ழாரன்மீன் றகையொப்ப, அரும்படர் கண்டாரைச் செய் தாங் கியலும், விரிந்தொலி கூந்தல்' (கலி. சுசை: 1-6); 'மின்னெரே, கோளொடு குளிர்மதி வந்து வீழ்ந்தென' (சீவக. 320, உரை.) கூந்தலுக்கு அரவு உவமை: 'பின்னும் வேணிவார் குழலெனுங் கரியபே ரரவம்' (பிரபு. மாயை பூசை. 7.) தாள் உண்ட - முடிச்சு அமைந்த. ஒரு காதலன் தன் கழுத்திலுள்ள மாலையைத் தன் மனைவியரில் ஒருத்திக்குச் சூட்டத் தன் காதலன் தனக்குச் சூட்டவில்லையே என்று மற்றொருத்தி கண்ணீர் வார நின்றாள். முகத்தாளாகிய ஒரு கொம்பு கண்ணீர் வார நின்றாள்.

(பி - மீ.) [1]'மூலைக்கணலி' (கசை)

993 காணிய - அறிய. செயிர் - குற்றம். மாதவிச் சூழல் - குருக்கத்தியின் புதற்கரிய நெருக்கம். பயில்வாள் - எப்பொழுதும் உடன் இருக்கின்றவள். இறை - சிறிது நேரமும். உடல் தலைவிக்கு உவமை. அலமந்து உழன்றாள். (பி - மீ.) [1]'மூடம் பென்னப் புலந்து நின்றாள்' (கஞி)

994 செம்மாந்த - தலைதூக்கி நின்ற. செம்மல் - தலைவன். அம்மா: வியப்புக் குறிப்பு. கொங்கையின் ஆய - தனங்களைப் போன்றுள்ளன. ஒப்பன என்று - ஒப்பாவன என்று கணவனைக் கேட்டு. ஏழை - பேதைக் குணத்தவள். தன் கணவன் தாய்மையை ஐயுற்றமை பற்றி ஏழை என்றார். விம்முதல் - தேம்பி அழுதல். வெதும்புதல் - மனம் புழுங்குதல். (கசு)

எய்தாது நின்ற மலர்நோக்கி யெனக்கீ [2]தீண்டுக்
கொய்தீதி யென்றோர் குயிலைக்காங் கூப்பு கின்றாள்.

கண்களைப் புதைக்க யார் என்ற
கணவனிடம் ஒருமாது ஊடல் கொண்டமை

996 போரென்ன வீங்கும் பொருப்பன்ன பொலங்கொ
டிண்டோள்]

மாரன் னனையான் மலர் கொய்திருந் தானை வந்தோர்
காரன்ன கூந்தற் குயிலன்னவள் கண்புதைப்ப
ஆரென்ன லோடு மனலென்ன வயிர்த்து யிர்த்தாள்.

மலர் பறித்து வைத்திருந்த ஓர் ஆடவன் செயல்

997 ஊற்றூர் நறைநாண் மலர்மாத ரொருங்கு வாசச்
சேற்றூல் விளையாத செந்தாமரைக் கைக ணீட்டி
ஏற்றூரை நோக்கா னிடையேந்தின னின்றெ ழிந்தான்
மாற்று னுதவா[1]னெடு வச்சையன் போலொர் மன்னன்.

---

995 மாது நின்றாள். ஈண்ட (பி-ம்.)—வி ரை ய. குயிலைக் கொய்தீதி என்ற குறிப்பு, தலைவன் பறித்துத் தரல் வேண்டு மென்பதை உணர்த்தும். (பி - மீ.) [1]'வந்து தோன்ற' [2]'தீண்டக்' (கஎ)

996 என்ன - என்று சொன்ன அளவில். போரென்ன வீங்கும் தோள் வீரர்: 'கிட்டிய தமரெனக் கிளருந் தோளினான்' (உ. 11:9); 'மண்டமர் நசையொடு' (முல்லைப். 67); 'செருவேட்டுச் சிலைக்குஞ் செங்கணாடவர்' (அகநா. கடுஎ: 4); 'போரெனிற் புகலும் புனைகழன் மறவர்' (புறநா. கூ: 9); 'செரு வென்ற மாற்றங் கேட்டுச் சிந்தையி' னுவகை பொங்க.....மார்பும் வாகுவ தாமும் பூரித்து.....ஒருப்பட்டான்' (வி. பா. திவாத. 17); 'பொரு மாறிற் றுளர் தடந்தோ ளொரு மாறன்' (திருவிளை. கடவுள். 12.) பொருப்பு - மலை. பொலம் - அழகு. ஆர் என்ற வினா, 'இவன் மனம் விரும்பிய மகளிர் வேறுசிலர் உளர் போலும்' என்ற ஐயத்தை வினைத்தது. மகளிர் தம் தலைவன் கண்புதைத்தல்: '.....என் கண் புதைத்தோயே;.....நீயல துளரோவென் னெஞ்சமர்ந் தோரே' (ஐங். உகஅ: 2-5.) (பி - மீ.) [1]'வந்து' (கஅ)

997 ஊற்று ஆர் நறை நாள் மலர் - இடைவிடாமல் பெருகும் தேனையுடைய அப்பொழுது மலர்ந்த பூ. 'மாதர் ஒருங்கு கைகள் நீட்டி ஏற்றூரை' என்றதனால் நீட்டியவர் ஒருவரின் மேற்பட்டவர் (இருவர்) என்றபடி. ஒரு தலைவனுக்கு இருவர் மனைவியர்: 998, 1079. சேற்றூல் - சேற்றில். 'சேற்றூல்.....தாமரை': கைகளுக்கு விசேடணம். மாற்றுன் - பிரதி பலனைக் கருதி அம்மலர்களைக் கொடான்; 'ஏற்றகை மாற்றுமை...ஈவதாம் ஆண்கடன்' (நாலடி. 98.) மறுன் என்பாரும் உளர். ஒருவருக்கு ஈந்தால் மற்றவர் புலத்தல் கருதியும், ஏற்றூர் இருவருக்கும் பங்கிட்டுக் கொடுத்தால்

மாற்றுள் பேரைத் தன் கணவன்
சொல்லக் கேட்ட பெண்ணின் வருத்தம்

998 தைக்கின்ற வேலைக்கின டன்னுயி ரன்ன மன்னன்
மைக்கொண்ட கண்ணுளெதிர் மாற்றவள் பேர்விளம்ப
மெய்க்கொண்ட நாணந் [1]தலைக்கொண்டு வெதுப்பி மென்பூக்
கைக்கொண்டு மோந்தா ளுயிர்ப்புண்டு கரிந்த தன்றே.

தன் தேவிமாருடன் விளங்கிய மன்னவன் தோற்றம்

999 [1]திண்டே ரரசன்குலத் தேமொழித் தேவி மார்தம்
ஒண்டா மரைவாண் முகத்துண்மிளி [2]ரொண்க ணெல்லாம்
கண்டா தரிக்கத் திரிவான்மதங் கவ்வி யுண்ண
வண்டா [3]தரிக்கத் திரிமாமத யானை யொத்தான்.

தலைவன்பால் இரு காதலிகளின் சினம்

1000 சந்திக் கலாவெண் மதிவாணுத லாட னைக்கும்
வந்திக் [1]கலாகு மடவாட்கும் வகுத்து நல்கி
நிந்திக் [2]கலாகா வுருவத்தின னிற்க மென்பூச்
சிந்திக் கலாப மயிலிற்கண் சிவந்து [3]போனார்.

அவளவளிடத்திலே தனக்கு அதிக அன்பு உண்டு என்று ஒவ்வொருத்தியினிடமும் தான் முன்பு சொன்ன சொல் பொய்த்தலும் நோக்கியும் உதவவில்லை. வச்சையன் - உலோபி. (பி - மீ.) [1]'னெடு விஞ்சையன்' (கக)

998. வேல் நோக்கினள் - வேலைப் போன்ற கண்களையுடையவள். கண்ணுளாகிய தன் எதிரில். மாற்றவள் - தான் மணந்து கொண்ட வேறொருத்தியின். தலைக்கொண்டு மிகுந்து. உயிர்ப்பு வருத்தத்தால் தோன்றியது. பூக்கள் உயிர்ப்பினால் கரிதல்: 'துணையமை பிணையல, மோயின ளுயிர்த்த காலை மாமலர், மணியுரு விழுந்த வணியழி தோற்றம்' (அகநா. இ: 23-5.) [1]'தலைக் கொண்டிட விமமி' (உ0)

999 அரசன் - ஒரு மன்னன். தேமொழி - தேன் போன்ற மொழியையுடைய. திரிவான் - திரியுமவன்; அரசனுக்கு யானையும் அவன் தேவிமாரின் கண்களுக்கு வண்டுகளும். அச்சுப் புத்தகங்களில் முதலடி, 'திண்டே ரரசன் ஞெருவண் குலத் தேவிமார்தம்' என்று காணப்படுகிறது.
(பி - மீ.) [1]'திண்டோளரசன்' [2]'ருண்க' [3]'தரிக்கின்ற தோர் மாமத' (உ5)

1000 சந்தி கலா மதி - சந்தி நேரத்தில் தோன்றும் கலைகளையுடைய சந்திரன். நுதலுக்கு உவமை யாதலின் எட்டாம் பிறைமதி என்க. நுதலாள் - காமக் கிழத்தி. வந்திக்கலாகும் வாட்கண்ணி - கற்புடை மனைவி;

வேறு

மலராசை கொண்ட சில பெண்களின் செயல்

1001 வந்தெங் குந்தம் மன்னுயி ரேயோ [1]பிறிதேயோ
கந்தந் துன்னுஞ் சோர்குழல் காணுர் கலைபேணுர்
அந்தந் தோறு மற்றுகு முத்த மவைபாரார்
சிந்துந் சந்தத் தேமலர் நாடித் திரிவாரும்.

புலவியில் தாழ்ந்த கணவனை அலட்சியஞ் செய்த ஒரு மாதின் செயல்

1002 யாழொக் குஞ்சொற் பொன்னனை யாளோ ரிகன்மன்னன்
தாழத் தாழா டாழ்ந்த மனத்தா டளர்கின்றுள்
ஆழத் துள்ளுங் கள்ள [1]மனத்தா லவனின்ற
சூழற் கேதன் கிள்ளையை யேவித் தொடர்வாளுப்.

'வடமீன் றெழுதேத்த வயங்கிய கற்பினுள்' (கலி. உ:21.) ஒரு தலைவனுக்கு மணந்து கொண்ட மனைவியே யல்லாமல் காமக்கிழத்தியும் உண்டு. நல்லியவை மலர்கள். இருவரிடத்தும் தலைவன் சம அன்பு காட்டியது அவர்களில் ஒவ்வொருத்திக்கும் சினத்தை அளித்தது. 'போளுள்' என்ற பாடம் கொண்டு, அங்ஙனம் போனவள் காமக் கிழத்தி என்பாரும் உளர்.

(பி - மீ.) [1]'நலாகுஞ் சுடர் வாட்கணி ணுட்கு நல்கி' [2]'கலாத மனத்தினனின்ற போதுஞ், சிந்திப் புதுப் பூவயிற் கண்' [3]'போளுள்' (உஉ)

1001 கந்தம் - வாசனை. சோர் குழல் காணுர் - குழல் சோர்ந்ததைக் கருதார் என்றபடி. கலை - ஆடை. அந்தம் - கோவையின் கடைப்பூட்டு. சந்தம் - அழகு. முடிபு. 'காணுர் பேணுர் பாரார் வந்து எங்கும் சிந்தும் மலர் நாடித் திரிவாரும் (அம் மலர்) தம் உயிரேயோ பிறிதேயோ' திரியும் செயல் ஒரு பெண்ணினதாகச் சில பிரதிகளில் காணப்படுகிறது. (பி - மீ.) [1]'பிறிதொன்றே' (உக)

1002 இகல் - வலிமை. தாழ - வணங்க. புலவியைத் தணிக்கக் கணவர் தாழ்தல் இயல்பு. தாழாள் - மனம் இளகாள். அவன் அப்பாற் சென்றபின் தாழ்ந்த மனத்தாள். தளர்வது, தான் தாழாமலிருந்துவிட்டதனல் தலைவன் இனித் திரும்பிப் பாராானே என்ற அச்சத்தால். ஆழத்து உள்ளும் கள்ளம் - ஆழ்ந்து எண்ணும் வஞ்சகம். சூழல் - இடம். கிள்ளையை..... தொடர் வாளும் - கிளியை அனுப்பி விட்டு அதனைத் தேடிச் செல்கின்றவள் போல் தொடர்ந்து செல்லுபவளும். (பி - மீ.) [1]'நினைப்பாள்' (உச)

மன்மதாவஸ்தையிலுள்ள ஓர் ஆடவன் செயல்

1003 அந்தா ராகத் தைங்கணை நூறு யிரமாகச்
சிந்தா நின்ற [1]சிந்தையி னுன்செய் குவதோரான்
மந்தா ரங்கொண் [2]டீர்குதி யோமா தவியென்றோர்
சந்தார் கொங்கைத் தாழ்குழ லாள்பாற் றளர்வானும்.

ஒரு பெண் தன் அழகைக் கண்ணாடியிற் கண்டு வருந்துதல்

1004 நாடிக் கொண்டாள் குற்ற நயந்தாண் [1]முனிவாறுள்
ஊடிக் [2]காட்டக் காணு நலத்தா ளுடனில்லாள்
தேடித் தேடிச் சேர்த்த செழும்பூ நறுமாலை
சூடிச் சூடிக் கண்ணாடி நோக்கித் துவள்வாளும்.

ஒரு பெண் அணிகளை வெறுத்து நீத்தல்

1005 மறலிக் கூணு [1]டுங்கதிர் வேலா னிடையேவர்
துறவிக் கோலம் பெற்றில [2]தென்ற னுடன் வாழ்விப்
பிறவிக் கேலா தென்செய்வ திப்பே ரணியென்னு
விறலிக் கீவா ளொத்திழை யெல்லாம் விடுவாளும்.

1003 அம்தார் ஆகத்து - அழகிய மாலை யணிந்த மார்பில். சிந்தை யினுன் - மன்மதன்; சித்தஜன் என்று மன்மதனுக்கு ஒரு பெயர் உண்டு. மந்தாரம் - தெய்வ லோகத்திலுள்ள ஒரு மலர். ஈர்குதியோ - என்னைப் பிளக்கின்றீயோ. மாதவி - குருக்கத்திக் கொடி. இது புணர்தற்குரிய இடம். மாதவியினிடம் மந்தார மலர் இருப்பதாகத் தலைவன் எண்ணியது காம மயக்கத்தினால்; அன்றி இங்ஙனம் கேட்டல் அருகிலிருக்கும் தலைவி ஊடல் நீங்கிக் கூடுதலின் பொருட் டெனினும் ஆம். ஈகுதியோ என்ற பாடத்துக்கு 'நீ மந்தார மலரை உன்னிடத்தே மலர்ந்து தருவையோ' என்பதாம். தளர்வானும் உளன் என்று ஒரு சொல் வருவித்து முடிக்க.
(பி - மீ.) [1]'செய்கையினால்' [2]'ஈகுதியோ' (உரு)

1004 நாடி - ஆராய்ந்து. குற்றம் தலைவன் பாலுள்ளது. முனிவு - கோபம். காட்டக் காணும் - தலைவன் ஊடலைத் தெளிவிக்க உணரும். உடன் இல்லாள் - தலைவன் அருகில் இல்லாதவள். கண்ணாடி - கண்ணாடி. கண்ணாடியில் நோக்கியது மாலை யணிந்த தன் செயற்கை யழகைப் பார்த்தல் கருதி; பரி. கo: 20-21. (பி-மீ.) [1]'முனிவாற்றுள்' [2]'காணக் காட்டு' (உசு)

1005 மறலி - எமன். நாடும் - தேடும். 'மறலிக்கு.....கதிர்': வேலுக்கு அடை. இடை - என்னிடம். வந்து உற இக்கோலம் பெற்றில - அடைய இந்த அழகு பாக்கியஞ் செய்யவில்லை. உடன் வாழ்வு - கணவனுடன் வாழும் வாழ்க்கை. ஏலாது - பொருந்தாது. இத்தப் பேரணிகள் எமக்குச் செய்வது என்? விறலிக்குப் பொன் இழைகளைத் தருதல் மரபு. விடுவாள் - கை சோர விடுவாள்.

அன்னப் பறவைக்கு ஒருபெண் ஆடை அளிக்க அமையல்

1006 தன்னைக் கண்டாண் மென்னடை கண்டா டமரேபோல்
துன்னக் கண்டா டோழமை யென்று டுணையென்றுள்
உன்னைக் கண்டா ரெள்ளுவர் பொல்லா துடுநீயென்
றன்னக் கன்னிக் காடை யளிப்பா னமைவாளும்.

ஒரு மாது மயிலுக்கு அஞ்சிக் கண் புதைத்தல்

1007 பாகொக் [1]குஞ்சொற் பைந்தொடி யாடன் படரல்குல்
ஆகக் கண்டோ ராடர வாமென் றயனண் ணும்
தோகைக் கஞ்சிக் கொம்பி னெதுங்கித் துணரீன்ற
சாகைத் தன்கைக் கண்கள் புதைத்தே தளர்வாளும்.

இடைக்கும் கிளிக்குமாக இரங்குகின்ற பெண்கள்

1008 வம்பிற் பொங்குங் கொங்கை சுமக்கும் வலியின்றிக்
கம்பிக் கின்ற நுண்ணிடை [1]நோவக் கசிவாளும்
பைம்பொற் கிண்ணம் மெல்விர லுங்கிப் பயிலகின்ற
கொம்பிற் கிள்ளைப் பிள்ளை யொளிக்கக் குழைவாளும்.

(பி - ம்.) [1]'நெந்திறல்' [2]'மென்றூல்', 'னென்றூல்', 'பெற்றில னுய்யேன்' (உஎ)

1006 தன்னை - அன்னத்தை. மென் னடை - அந்த அன்னத்தின் மென் னடையை. தமர் - உறவினர். துன்ன - தன்னை (தலைவியை) நெருங்க. துணை - துணை ஆவாய். எள்ளுவர் - இகழ்வர். இகழ்தல் ஆடையின்றி இருத்தலால். பொல்லாது - இங்ஙனம் இருத்தல் குற்றம். (உஅ)

1007 பைந்தொடியாள் தன். ஆக - தோன்ற; ஓர் இடைச் சொல்லுமாம்; தொல். இடை. 32. ஆடு அரவு ஆம் என்று. அல்குலை அரவாக மயங்கி அயல் நண்ணினது தோகை; தோகை - மயில். கொம்பின் - பூங் கொம்பைப் போல. ஒதுங்கி - நடந்து. சாகை - ஒரு பூங் கிளையினிடம். அச்சத்தாற் கண் புதைத்தல்: கலி. கூகு:2.

(பி - ம்.) [1]'குஞ்சொன் னுண் கலையாடன்' (உக)

1008 வம்பில் பொங்கும் - கச்சினின்றும் மீறுகின்ற. கம்பித்தல் - நடுங்குதல். கிண்ணம் - கிளிக்கு அமுதூட்டும் கிண்ணம். விரல் தாங்கி. பயில்கின்ற - நெருங்கியுள்ள, அடர்ந்த. குழைதல் - மனம் உருகுதல். மாதர் கிளியை ஊட்டுதல்: 'மாதர் அருகூட்டும் பைங்கிளியும்' (நள. க. 19.) தாங்கிக் குழைவாளும் என இயைக்க.

(பி - ம்.) [1]'நோக்கிக் கனி வாளும்' (கo)

மறைந்து விளையாடும் ஆட்டத்தில் ஒருத்தியின் செயல்

1009 பொன்னே தேனே பூமக ளேகா ணெனையென்னைத்
தன்னே ரில்லா [1]ளங்கொரு [2]கொய்யற் றழை[3]மூழ்கி
இன்னே யென்னைக் காணுதி நீயென் றிகலித்தன்
நன்னீ லக்கண் கையின் மறைத்து நகுவாளும்.

பெண்கள் குழாத்து ஓர் ஆண்மகன் வருணனை

1010 வில்லிற் கோதை நாணுற மிக்கோ [1]னிகலங்கம்
புல்லிக் [2]கொண்ட தாமரை மென்பூ மலர்தாங்கி
அல்லிற் கோதை மாதர் முகமா மரவிந்தச்
செல்வக் கானிற் செங்கதி ரென்னத் திரிவானும்.

பெண்கள் நடுவில் மாலையில் ஆடவர் வருதல்

1011 சோலைத் தும்பி மென்குழ [1]லூதத் தொடை[2]மேவும்
கோலக் கொண்ட மன்மத வாயன் குறியுய்ப்ப
நீலத் துண்கண் மங்கையர் சூழ நிரையாவின்
மாலைப் போதின் மால்விடை யென்ன வருவாரும்.

1009 கொய்யற்றழை - கொய்யா மரத்தின் தழை பெருங். க. 51: 51. இகலி - மாறுபட்டு. தன் கண்ணை மூடிக்கொண்டால் தனனே ஒரு வரும் பார்க்க முடியாதென்னும் பேதைமையால் கண்களை மறைத்துச் சிரித்தாள். (பி - மீ.) [1]'னங்கொரு' [2]'கொய்பூந் தழை' [3]'மூழ்' (நூ)

1010 வில்லில் நாண். கோதை உற-வில்லிலே பூட்டிய நாணி இடது முன்கையைப் பொருந்த. கோதை - நாணி தாக்காமலிருக்க இடது முன் கைக்கு இடும் கவசம்; இங்கு அது பொருந்திய கையை உணர்த்தியது இகல் - வலிமை. இகல் அங்கம் - வலக்கை. புல்லிக் கொண்ட - தன்பால் அமைந்துள்ள. சூரியனுக்குத் தாமரை மலர் கையிலுண்டு (சூரிய ஸகஸ்ர நாமாவளி, 768 : 913.) 'இலவங்கம் புல்லிக் கொண்ட தாமரை' என்ற பாடத்துக்கு, 'இலவங்க மலர் செருகப் பெற்ற தாமரை' என்பது பொருள். தாமரை காம வேட்கையை உணர்த்துவது. அல்லில் கோதை - இருளை ஒத்த கூந்தலையுடைய. இவனைக் கண்டதும் மகிழ்ச்சியால் மலர்ந்தமை பற்றிப் பெண்களின் முகங்களை அரவிந்தம் என்றார்.

(பி - மீ.) [1]'ரிகலங்கம்', 'னிலவங்கம்' [2]'கொண்டார்' (நூ)

1011 வண்டுகளின் ஒலி குழலோசைக்கு: 'குழல் போல் இரங்கிசை மிழிறெழுதும்பிதா தூத' (கலி: நூ. 22-3.) 'குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட' (மணி. ச: 1.) தொடை - தொடுத்தல் (மாலை.) கோல் - அம்பு. (தண்டி.) மன்மத ஆயன் - மன்மதனுகிய இடையன். தொடையும் கோலும்

பெண்கள் பேச்சை விரும்பித் திரியும் ஆடவர்

1012 செய்யிற் கொள்ளுந் [1]தெள்ளமு தச்செஞ் சிலையொன்றும்
கையிற் [2]பெய்யிற் காமனு நாணுங் கவினுர்தம்
மையற் பேதை மாதர் மிழற்றும் மழலைச்சொற்
றெய்வப் பாடற் சொற்கலை [3]வேண்டித் திரிவாரும்.

வேறு

ஒரு பெண்ணின் புருவங்களின் சிறப்பு

1013 ஊக்க முள்ளத் துடைய முனிவரால்
காக்க லாவது காமன்கை வில்லெனும்
வாக்கு மாத்திர மல்லது வல்லியிற்
பூக்கொய் வாள்புரு வக்கடை [1]போதுமே.

மரக் கோம்பேறியிருந்த ஓர் ஆடவன் நினைப்பு

1014 நாறு பூங்குழ னன்னுதல் புன்னைமேல்
ஏறி னன்மனத் தும்பர்சென் றேறினுள்
ஊறு ஞானத் துபர்ந்தவ ராயினும்
வீறு சேர்மூலை மாதரை வெல்வரோ.

இடையனுக்கு உரியவை: பெரும்பாண். 174–5; அகநா. 274 : 8. குறி உய்ப்ப - குறியிடத்தே செலுத்த. வீடி திரும்பும் குறியைக் காட்டு. நிரை ஆவின் மால் விடை என்ன - பல பசுக்களிடையில் உள்ள காளையைப் போல; ஏறுடை இனநிரை: நெடுநல். 4; நள. க : 156.

(பி - மி.) [1]'லாகத்' [2]'யெய்யும்' (கூ)

1012 செய் - வயல். தெள் அமுதச் செஞ்சிலை - கரும்பு. பெய்யில் - பெற்றால். கவினுர் - அழகை யுடையவர்கள். மையல் தரும் பேதைமைக் குணமுள்ள தம் மாதர். மழலைச் சொல் - மழலை மொழிகளாகிய தெய்வப் பாடலென்னும். சொற்கலை - சொற்களாலாகிய கலை. தெய்வப் பாடலாகிய கலை என்க. ஆடவர் பெண்களின் சொற்களைக் கேட்க முயற்றல்: 978.

(பி - மி.) [1]'செங்குமுதச்' [2]'கொள்ளும்' [3]'யென்னத்' (கூ)

1013 ஊக்கம் - புலன்களை யடக்கிச் செய்யும் தவ முயற்சி. வாக்கு மாத்திரம் - சொல் அளவே மெய்யாவது. அல்லது - அன்றி. வல்லி - கொடி. முனிவரைக் கெடுக்கப் புருவக்கடை போதும். போலும் (பி - மி.)—அவ் வில்லைப் போன்றிருக்கும். (கூ)

1014 நன்னுதல் - நல்ல நெற்றியை யுடைய ஒரு பெண். பூப்பறிக்க ஏறினவன். மனத்து உம்பர் - மனத்தின் மேல். ஏறினன் - அவளையே அவன் நினைத்திருந்தான் என்றபடி. ஊறும் ஞானம் - மேன் மேலும்

இதுவும் அது

1015 சினையின் மேலிருந் தானுருத் தேவரால்
வனைய வும்மரி யாள்வனப் பின்றலை
நினைவு நோக்கமு நீங்கலன் கைகளால்
நனையு [1]ணாண்முறி யுங்கொய்து நல்கினன்.

ஓர் ஆடவன் தன் மனைவியின் கோபக் குறிகண்டு தடுமாறல்

1016 வண்டு வாழ்குழ [1]லாண்முகம் [2]நோக்கியோர்
தண்டு போற்புயத் தானறு மாறினன்
உண்டு கோபமென் றுள்ளத் [3]துணர்ந்தவள்
தொண்டை வாயிற் றுடிப்பொன்று சொல்லவே.

யாவரும் நீர் விளையாடச் செல்லுதல்

1017 ஏயுந் தன்மைய ரிவ்வகை யாரெலாம்
தூய [1]வொண்மலர்ச் சோலைத் துறுமலர்
வேயுஞ் செய்கை வெறுத்தனர் வெண்டிரை
பாயுந் தீம்புனற் பண்ணைசென் றெய்தினர்.

வளரும் அறிவு. வீறு - வீற்றுத் தெய்வம்; அழகுக் குரிய தெய்வம் (சீவக. 171, உரை.) (நூ)

1015 இருந்தான்: எழுவாய். வனையவும்: உம்மையைத் தேவர்க்குப் பிரித்துக் கூட்டுக. தேவராலும் வனைய அரிய உருவாள். வனப்பின்தலை - அழகில். நனை - மலரரும்பு. முறி - தளிர்கள். 'நினைவும் நோக்கமும் வேருகச் சூட உதவாத அரும்புகளையும் நாள்பட்ட (பயனற்ற) தளிர்களையும் கொய்து நல்கினன்' என்னலும் ஒன்று. (பி - ம்.) [1]'ணாண்மலருங்' (நூ)

1016 தண்டு - கதாயுதம். தோளுக்குத் தண்டு: 1026, திருச்சிற். 302. 'தோள் மாலையைப் பிறளொருத்திக்கு நல்கி வெறும் புயங்களொடு வந்த வனுக்குப் புனைவின்றி வறிதே கிடக்கும் தண்டை உவமை கூறினர் கம்பர்' என்று கூறுவர் பலர். வீர மிகுதியைப் புலப்படுத்தப் புயங்கள் வருணிக்கப் பெற்றன. வீரனுயினும் ஒரு துடிப்புக்கு அஞ்சினன் என்பது நயம். உதடு துடித்தல் கோபக்குறி: திருச்சிற். 366. முடிபு: நோக்கிச் சொல்ல உணர்ந்து தடுமாறினன். (பி - ம்.) [1]'வாளினை' [2]'வாட்டிடத்' [3]'துணர்த்துவாள்' (நூ)

1017 ஏயும் தன்மையர் - மேற்கூறிய செயல்கள் எல்லாம் பொருந்திய இயல்பினர். துறுமலர் - இதழ் அடர்ந்த மலர்: 990. வேய்தல் - சூடுதல். பலகால் வேய்ந்ததனால் வெறுத்தனர். புனல் பண்ணை - நீர்விளையாட்டு; 1019. (பி-ம்.) [1]'தண்மலர்ச்', 'தண்ணிழற்' 'தண்புனற் சோலையின் தூய்மலர்' (நூ)

16 நீர் விளையாட்டுப் படலம்

ஆடவரும் பெண்டிரும் குளங்களுக்கு நீராடப் போதல்

1018 புனைமலர்த் தடங்க ணுக்கிப்
பூசல்வண் டார்த்துப் பொங்க
வினையறு துறக்க நாட்டு
விண்ணவர் கணமு நாண
அனகரு மணங்க ளுரு
மம்மலர்ச் சோலை நின்றும்
வனகரி பிடிக ளோடு
வருவன போல வந்தார்.

அவர்கள் குளத்தில் இறங்கிய தோற்றம்

1019 அங்கவர் பண்ணை நன்னீ
ராடுவா னமைந்த தோற்றம்
கங்கைவார் சடையோ னன்ன
மாமுனி கனல மேனுள்
மங்கைமார் கூட்டத் தோடும்
வானவர்க் கிறைவன் செல்வம்
பொங்குபாற் கடலுட் போகுந்
தோற்றமே போன்ற தன்றே.

மாதர் கண்ணும் குவளையும், முகமும் தாமரையும்

1020 மையவாங் குவளை யெல்லா
மாதர்கண் மலர்கள் பூத்த
[1]கையவா முருவத் தார்தம்
கண்மலர் குவளை பூத்த

1018 தடங்கள்–குளங்கள். பூசல்–ஒலி. வினை அறு துறக்க நாடு–தீவினை அற்றோர் எய்துதற்குரிய சுவர்க்க லோகம். இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின் மேல் நின்றது. அனகர்–பாவமில்லாத ஆடவர்; 1075. விண்ணவர் நாண என்றதற்கு ஏற்ப, 'அனகரும் அணங்களுரும்' என்றார். வனகரி–காட்டிலுள்ள யானை. (க)

1019 பண்ணை நன்னீர்–நீர்விளையாட்டு; 1017. சடையோன் அன்ன மாமுனி–துருவாசர். கனல–கோபிக்க. செல்வம் மங்கைமார் கூட்டத் தோடும் மறைந்தமை; 500. (உ)

1020 மை அவாம்–கருமையை விரும்புகின்ற; அவாம்=அவாவும். கண் போல் மலர் பூத்தன. கைய ஆம்–ஒப்பனையைப் பெற்றுள்ள. செய்ய–

செய்யதா மரைக ளெல்லாந்
தெரிவையர் முகங்கள் பூத்த
தையலார் [2]முகங்க ளெல்லாந்
தாமரை பூத்த வன்றே.

மாதர் புனலில் விளையாடியவை

1021 வண்டுணைக் கமழுஞ் சுண்ணம்
வாசநெய் நானத் தோடும்
கொண்டெதிர் வீசு வாருங்
கோதைகொண் டோச்சு வாரும்
தொண்டைவாய்ப் பெய்த தூநீர்
கொழுநர்மேற் [1]றூர்க்கின் றூரும்
புண்டரீ கக்கை [2]கூட்டிப்
புனன்முகந் தெறிகின் றூரும்.

1022 தாளையேய் கமலத் தாளின்
மார்புறத் தழுவு வாரும்
தோளையே பற்றி வெற்றித்
திருவெனத் தோன்று வாரும்

செந்நிறமுள்ள; 'வயல்களிலே உள்ளனவாகிய' எனலும் ஆம். குவளை கண் போல் மலர்ந்தன என்று இங்ஙனம் கூறுவது இதர விதரம் அல்லது புகழ்ப் பொருளுவமை என்பர் அலங்காரநூலார். பின்னிரண்டடிக்கும் இவ்வணியே.

(பி - ம்.) [1]'கையவாம் புருவத் தார்த்தம்', 'பையரவல்கு லார்தம் கண் மலர் பானல் பூத்த' [2]'முகங்கள் செய்ய' (கூ)

1021 உண - உண்ணும்படி. சுண்ணம் - வாசனைப் பொடி. வாசம் நெய் - நறுமணம் ஏற்றிய தைலம். நானம் - கஸ்தூரி. சுண்ணம் முதலிய வற்றை நீர்விளையாடலில் ஒருவர்மேலொருவர் விசுதல்: சீவக. 2661. கோதை கொண்டு ஓச்சல்: பரி. கூ: 39-40, 12:58: கலி. சுள: 6, கஉஅ: 18-9; பெருங். க. 42: 184-6; சீவக. 2291, 2659. தொண்டை - கோவைக் கனி. (பி - ம்.) [1]'றூர்கின்றூரும்' [2]'நீட்டிப்', 'கூம்பிப்' (சு)

1022 தாளை ஏய் - தண்டினைப் பொருந்திய; கமலத்துக்கு அடை. கமலத்தாள் - இலக்குமி. இலக்குமி போல் தம் கணவரின் மார்பைத் தழுவு வாரும். 'தம் தாள்களை ஒத்த கமலங்களின் நாளத்தில் மார்பு பொருந்தத் தழுவுவாரும்' என்பதும் ஒன்று. தோளையே-கணவனுடைய தோள்களையே.

பாளைவீ விரிந்த தென்னப்
[1]பரந்தநீ ருந்து வாரும்
வாளைமீ னுகள வஞ்சி
மைந்தரைத் தழுவு வாரும்.

023 மின்னொத்த விடையி னாரும்
[1]விடமொத்த விழியி னாரும்
சின்னத்தி னளக பந்தி
திருமுகம் மறைப்ப நீக்கி
அன்னத்தை வருக வென்னோ
டாடவென் றழைக்கின் றாரும்
பொன்னொத்த முலையின் வந்து
பூவொத்த வுளைகின் றாரும்.

கயல் மீன்களைக் கண்ட மாதரின் செயல்

1024 பண்ணுளர் பவளத் தொண்டை
பங்கயம் பூத்த தன்ன
வண்ணவாய்க் குவளையுண் கண்
மருங்கிலாக் கரும்பி னன்னார்
உண்ணிறை கயலை நோக்கி
யோடுநீர்த் தடங்கட் கெல்லாம்
கண்ணுள வாங்கொ லென்று
கணவரை வினவு வாரும்.

பரந்த - பரவிய. கையால் தள்ளப்படும் நீருக்கு விரிந்த பாளை உவமை. நீரை எற்றுதல்; 1028. (பி - ம்.) [1]'பரந்துநீர் படிகு வாரும்' (ரு)

1023 இடைக்கு மின்னல் சின்னம் - விடுபூ; 990, அடிக். அளக பந்தி - முன் உச்சி மயிரின் வரிசை. சுணங்கு பூத்தலால் பொன்பூத்த முலை யென்றார்; நகில்களில் தோன்றும் தேமல்; சொன்னடை (சொல் வழக்கு.) பூ - நீர்ப்பூக்கள். ஒத்த - ஒற்ற. உளைகின்றார் - வருந்துகின்றார். பூவின் மென்மையையும் பொறாவாயின நகில்கள்.

(பி - ம்.) [1]'வேயொத்த தோளினாரும்' (சு)

1024 பண் உளர் - இசை தொனிக்கின்ற. பவளத் தொண்டை - சிவந்த கொவ்வைக்கனி. பூத்தல் - மலர்தல். வண்ணம் - இங்கே செந்நிறம். மருங்கிலா.....நல்லார்; 605. உள்நிறை ஓடுநீர் - கடைபோகும் நீர்; ஓடு என்ற அடை நீரின் இயல்பை உணர்த்த வந்ததும் ஆம். (எ)

தன் நிழலைத் தோழியென்று மயங்கிய மாதின் செயல்

1025 தேனகு நறவ மாலைச்
செறிகுழற் றெய்வ மன்னாள்
தானுடை கோல மேனி
தடத்திடை தோன்ற நோக்கி
நானக நகுகின் றூளிந்
நன்னுத றோழி யாமென்
றானமில் [1]மூலையி னீர
முளங்குளிர்ந் துதவு வாளும்.

பெண்கள் கணவரை நினைந்து கரையேறுதல்

1026 குண்டலந் திருவில் வீசக்
குலமணி யார மின்ன
விண்டொடு வரையின் வைகு
மென்மயிற் கணங்கள் போலும்
வண்டுளர் கோதை மாதர்
மைந்தர்தம் வயிரத் திண்டோட்
டண்டுகள் தழுவு மாசை
யாற்கரை சார்கின் றாரும்.

ஓர் ஆடவன் நீரிலுள்ள தாமரைக்கும் தன் காதலியின் முகத்துக்கும் வேற்றுமை தெரியாது மயங்குதல்

1027 அங்கிடை யுற்ற குற்றம்
யாவதென் றறித [1]றேற்றும்
செங்கய லனைய நாட்டஞ்
சிவப்புறச் சீறிப் போன
மங்கையார் கமலச் சூழன்
மறைந்தனண் மறைய மைந்தன்
பங்கைய முகமென் றோரா
தையுற்றுப் பார்க்கி றானும்.

1025 தேன் நகு - தேன் விளங்கும். நறவம் - ஒரு மர விசேடம். தானுடை - தனது. நான் நக. (பீ - மீ.) [1] 'வீலையி' (அ)

1026 திருவில் - இந்திரவில்; 'திருவி லிட்டுத் திகழ்தகு மேனியள்' (மணி. சு. 10.) இந்திரவில் குண்டலத்தின் ஒளிக்கு உவமை; 'குண்டல மொருபுடை குலாவி வில்லிட' (சீவக. 1009.) குலமணி - சிறந்த மணி. கோதை - மாலை. தோளுக்குத் தண்டு: 1016. (கு)

1027 இடை - நீர்வீளையாட்டின் கடவில் அறிதல் தேற்றும் - தெளிவாக அறியமாட்டோம். இது பங்கயம், இது முகம் என்று ஓராது. (பீ - மீ.) [1] 'றேற்று' (கo)

பெண்கள் காலைச் சுற்றிக் கொண்ட மேகலையை அரவு என்று அஞ்சுதல்

1028 பொற்றொடி தளிர்க்கைச் சங்கம்
வண்டொடு புலம்பி யார்ப்ப
எற்றிநீர் குடையுந் தோறு
மேந்துபே ரல்கு னின்றும்
கற்றைமே கலைக ணீங்கிச்
சீறடி கௌவக் காலில்
சுற்றிய நாக மென்று
துணுக்கத்தாற் [1]றுவள்கின் றாரும்.

பெண்கள் கூட்டத்தில் நின்ற ஓர் ஆடவன் தோற்றம்

1029 குடைந்துநீ ராடு மாதர்
குழாம்புடை சூழ வாழித்
தடம்புயம் பொலிய வாண்டோர்
தார்கெழு வேந்த னின்றான்
கடைந்தநா ளமுதி னெடுங்
கடலிடை வந்து தோன்றும்
மடந்தையர் சூழ நின்ற
மந்தர மலையை யொத்தான்.

இதுவும் அது

1030 தொடியுலாங் கமலச் செங்கைத்
தூநகைத் துவர்த்த செவ்வாய்க்
கொடியுலா மருங்கு னல்லார்
குழாத்தொரு குரிசி னின்றான்
கடியுலாங் கமல வேலிக்
கண்ணகன் கான யாற்றுப்
பிடியெலாஞ் சூழ நின்ற
பெய்மத யானை யொத்தான்.

1028 தொடி : சங்கம்; இவை கையிலணியும் வளையல் விசேடங்கள். நீரை எற்றுதல்: 1022. கற்றை - கொத்தாக உள்ள. சீறடி - சிறிய அடிகள். மேகலைக்கு நாகம் உவமை. (பி - மீ.) [1] 'றுடிக்கின்றாரும்' (கக)

1029 குழாம் - கூட்டம். ஆழி - தோள்வளை; 'வாழி' என்று கொண்டு அசைச் சொல் என்னலும் ஆம். தோன்றும் மடந்தையர் - அரம்பை முதலியோர்; துருவாசர் சாபத்தால் மறைந்தவர்கள் இவர்கள். (கஉ)

1030 தொடி - வளையல். துவர்த்த - சிவந்த. கடி - திருமணம். கண் அகல் - இடமகன்ற. பிடிகள் சூழ நின்ற யானை: 935. (கங)

இதுவும் அது

1031 கானமா மயில்க ¹ளெல்லாங்
களிகெடக் களிக்குஞ் சாயற்
சோனைவார் குழலி னுர்தங்
குழாத்தொரு தோன்ற னின்றுன்
வானயா றதனே நண்ணி
வயின்வயின் விளங்கித் தோன்றும்
மீனெலாஞ் சூழ நின்ற
விரிகதிர்த் திங்க ளொத்தான்.

பெண்களின் இடையே நின்ற ஒரு தலைவியின் தோற்றம்

1032 மேவலாந் தகைமைத் தல்லால்
வேழவிற் றடக்கை வீரற்
கேவெலாங் காட்டு கின்ற
விணெடுங் கண்ணே ரேழை
பாவைமார் பரந்த கோலப்
பண்ணேயிற் பொலிவாள் வண்ணப்
பூவெலா மலர்ந்த பொய்கைத்
தாமரை பொலிவ தொத்தாள்.

இதுவுமது

1033 மிடலுடைக் கொடிய வேலே
யென்னவாள் மிளிர்வ வென்னச்
சுடர்முகத் தலவு கண்ணு
டோகையர் சூழ நின்றுள்

1031 கானமாமயில் - காட்டிலுள்ள மயில்கள்; மயிலை முல்லை நிலக் கருப் பொருளாகக் கூறுதலும் உண்டு. களிக்கும் சாயல்-செருக்குவதற்குக் காரணமாகிய சாயல். சோனை - மேகம். வானயாறு-ஆகாய வழி. மீன்சூழ நின்ற சந்திரன் மகளிர் சூழ நின்ற தலைவனுக்கு உவமை: 'பன்மீ னடுவட் பான்மதி போல, இன்னகை யாயமோடிருந்தோற் குறுகி' (சிறுபாண். 219-20.) (பி - ம்.) ¹ளேபோற் கவின்பெறக் காணுஞ்' (கச)

1032 மேவல் ஆம் தகைமைத்து அல்லால் - விரும்பப்படும் தன்மையைப் பெற்றிருப்பது மாத்திரம் அல்லாமல். வேழவில் - கரும்புவில். ஏலாம் - அம்புகளே எல்லாம். ஏ.....கண் - மன்மதனுடைய பஞ்ச பாணங்களின் செயல்களே அவனிடந்தானே செய்கின்ற ஒன்றற்கொன்று இணையான நீண்ட கண்கள். பரந்த - பரவியுள்ள. பண்ணே - விளையாட்டு. தலைவிக்குத் தாமரை: 'ஒருதனி யோங்கிய, திருமலர் போன்று, வான்றரு கற்பின் மனையுறை மகளிரில்' (மணி. கடு: 76-7.) (கடி)

1033 மிடல் - வலிமை. வாள் - வாளாயுதம். மடல்-பூவிதழ். போதுமலரும் நிலையிலுள்ள அரும்பு. தோழியர் முதலிய பிறமகளிர்க்குப்

மடலுடைப் போது காட்டும்
வளர்கொடி பலவுஞ் சூழக்
கடலிடைத் தோன்று மென்பூங்
கற்பக வல்லி யொத்தாள்.

நீரில் முழுகிய ஒரு பெண்ணின் முகப் போலிவு

1034 தேரிடைக் கொண்ட வல்குற்
றெங்கிடைக் கொண்ட கொங்கை
ஆரிடைச் [1]சென்றுங் கொள்ள
வொண்கிலா வழகு கொண்டாள்
வாரிடைத் தனமீ தாட
மூழ்கிளள் வதன மைதீர்
நீரிடைத் தோன்றுந் திங்க
ணிழலெனப் பொலிந்த தன்றே.

வேறு

வெள்ளம் நிலைகடந்து பரத்தல்

1035 மலைக டந்த புயங்கள் மடந்தைமார்
கலைக டந்தகலல்குற் கடம்படு
முலைக டந்தமின் முந்தி நெருங்கலால்
நிலைக டந்து பரந்தது நீத்தமே.

பிறகொடிகள். கற்பகவல்லி - காமவல்லி என்ற கொடி; 'காமவல்லியாங் கன்னி' (கூ. 5:39); இது கற்பகத்தருவிற் படரும் என்பர். (கக)

1034 தேர் - தேர்த்தட்டு. தெங்கு - தென்னை. ஆரிடை.....அழகு கொண்டாள்: 'நல்லார் உறுப்பெலாங் கொண்டியற்றி யான்கொல்' (கலி. நெய்: 7-8.) வார் இடைத்தனம் - கச்சினுள் இருக்கும் நகில்கள். மூழ்கிளள்: வினையாலணையும் பெயர்.

(பி - மீ.) [1]'சென்றுந் தேடற் கணுகுரு' (கஎ)

1035. மலைகள் தந்த; தந்த - ஒத்த; உவம வாசகம். கலைகடந்தகல். அல்குல் - கலையறிவை வென்று அகன்ற அல்குலையுடைய; அல்குல் - பின்தட்டு. கலை - ஆடையுமாம். நீத்தம் - வெள்ளம் முடிபு. புயங்கள் முலைகள் தந்தம்மின் நெருங்கலால் நீத்தம் நிலை கடந்து பரந்தது. கடம்படு - குடத்தைப் போன்ற. (கஅ)

போய்கைக்குங் கணவருக்கும் ஒற்றுமை

1036 செய்ய வாய்வெளுப் பக்கண் சிவப்புற
[1]நெய்ய ராக மழியத் துகிலெனத்
தொய்யின் மாமுலை மங்கையர் தோய்தலாற்
பொய்கை காதற் [2]கொழுநரைப் போன்றதே.

நீரில் நறுமணப் பெருக்கம்

1037 ஆன [1]தூயவ ரோடுட னுடிஞர்
ஞான நீரவ ராகுத னன்றரோ
தேனு நாவியுந் தேக்ககி லாவியும்
மீனு நாறின வேறினி வேண்டுமோ.

சாந்தும் குங்குமமும் கலந்த நீரின் தோற்றம்

1038 மிக்க வேந்தர்தம் [1]மெய்யழி சாந்தொடும்
புக்க மங்கையர் குங்குமம் போர்த்தலால்
ஒக்க நீல [2]முகிற்குல மொட்டிய
செக்கர் [3]வானக மொத்தது தீம்புனல்.

1036 செய்யவாய் - இயல்பாகச் சிவந்துள்ள வாய். நெய் அராகம் - கூந்தலிற் பூசிய புழுகும் சந்தனமும்; அராகம் - அங்கராகம், சந்தனப் பூச்சு; 'அராகம் பயின்றமிழ் தம் பொதிந்தீர்ஞ்சுணங் காடகத்தின், பாகஞ் சிதர்ந்த பயோதரம்' (திருச்சிற். 194.) துகில் நெக-ஆடை அவிழ்ந்துவிட. தொய்யில்-முலைகளில் சந்தனம் குங்குமம் முதலியவைகளை அப்பி எழுதப் பெறும் கோலம். தோய்தல் - குளித்தல். கொழுநருடன் தோயும் காலத்தும் இவை நிகழ்தலின் பொய்கை கொழுநரைப் போன்றது என்றார். கொழுநரைக் கூடியபின் பெண்களிடம் காணப்படும் குறிகள்: 1074, அடிக்.

(பி - ம்.) [1]'மெய்ய' [2]'கொழுநரும்' (கக)

1037 ஆனதூயவரொடு - பரிசுத்தமான ஞானிகளுடன். ஆடிஞர் - பழகினவர்கள். நீரவர் - எளிய குணமுடையவர். அரோ: அசை. 1-2: நல்லவரோடு சேர்ந்தவர் ஞானியராவார்கள். தேனும் - தேன் மணமும். நாவி - கஸ்தூரியின் மணம். தேக்கு அகில் ஆவி - நிறைந்த அகிலின் புகை; ஆவி - புகை மணம். இயற்கையில் புலால் நாற்றமுடைய மீன்கள் இந்த மணங்கள் நாறினமை பழக்க விசேடத்தால்.

(பி - ம்.) [1]'தூய்புன லாடிய மாதரார் எனையாரென வெண்ணுவ தெங்ஙனம்' (உ0)

1038 சாந்து - செந்நிறமுள்ள சந்தனக் குழம்பு. நீலமுகிற் குலம் - கார் மேகத்தின் தொகுதி. ஒட்டிய - பொருந்திய. செந்நிறமுள்ள நீரில் செந்நிறமுள்ள சாந்தும் குங்குமமும் பரவியுள்ளமை கார் மேகங்களுடன் செவ்வானம் கலந்துள்ளமை போன்றது.

(பி - ம்.) [1]'மெய்யணி', 'மெய்வழிச்' [2]'முகிற்றலை யோடிய' [3]'மேகமு மொத்ததத்' (உக)

குளித்தலாற் கலவைச் சந்தனம் நீங்கப்பெற்ற பெண்களின் தோற்றம்

1039 காக துண்ட நறுங்கல வைக்களி
ஆக முண்ட தடங்கதழ் நீங்கலால்
பாக டர்ந்த [1]பனிக்கனி வாய்ச்சியர்
வேக டஞ்செய் மணியென மின்னினார்.

ஒரு பெண்ணின் சினத்துக்குக் காரணம்

1040 பாய ரித்திற லான்பசுஞ் சாந்திஞல்
தூய பொற்புயத் துப்பொதி தூக்குறி
மீய ரித்துவி ளக்கவொர் மெல்லியல்
சேய ரிக்கருங் கண்கள் சிவந்தவே.

குளநீர் சூடுண்டமைக்குக் காரணம்

1041 கதம்ப நாள்விரை கள்ளவிழ் தாதொடும்
கதும்பு பூத்திரைத் தண்புனல் சுட்டதால்
நிதம்ப பாரத்தொர் நேரிழை காமத்தால்
வெதும்பு வாளுடல் வெப்பம் வெதுப்பவே.

1039 காகதுண்டம் - அகில். கலவைக்களி - கலவையாகிய சந்தனம்; அகிலும் சாந்தும் கலந்த கலவை என்க. ஆகம் உண்டது-உடலே மறைத்தது. அடங்கலும் - முற்றும். பாகு அடர்ந்த - பாகினே வென்ற; பனிக்கனி வாய்ச் சியர் - குளிர்ந்த பழம் போன்ற சொற்களை யுடையவர்கள்; வாய் - சொல்லுக்கு ஆகுபெயர்; சீவக. 324. வேகடம்செய் - சாணை பிடித்த; 'மணியினே வேகடம் வருக்குமாறும் போல்' (உ. 2 : 28.) மகளிர்க்கு மணி: சீவக. 623. (பி - ம்.) [1]'பனிமொழி' (உஉ)

1040 பாய் அரிதிறலான் - பாய்கின்ற சிங்கம் போன்ற வலியுடை யவன். பசும் சாந்து - ஈரமாக உள்ள சந்தனக் குழம்பு. பொதி - எழுதிய. தூகுறி—நல்ல நகத்தின் அடையாளத்தை. மீ அரித்து விளக்க - நீரானது மேலே பட்டு உடலின் உண்மை நிறத்தை விளக்கிக் காட்ட. சேஅரி - செவ்வரி. கண் சிவந்தமை, தன் காதலனுகிய 'இவன் புயத்தில் விளங்கிய நகக்குறியால் இவன் வேறொருத்தியோடு கலந்தான்' என்று கொண்ட கோபத்தினுல். (உங)

1041 கதம்பம் - கலவைச் சாந்து; பலவகைப் பூக்கள் சேர்த்துத் தொடுத்த மாலையுமாம்; வழங்கு மொழி. நாள்விரை - புதுமணம் கமழும் வாசனைப் பொடி; 'சந்தன மகிலொடு கருப்பூரங்கத்தூரி குங்கும மென் றிவை யைந்தும் விரையே' (சீவக. 623, மேற். ந.) தாது-மகரந்தப் பொடி. கதும்பு - நிரம்பியுள்ள. நிதம்பம் - அல்குல். நேரிழை - பெண். முடிபு: உடல் வெப்பம் வெதுப்பப் புனல் சுட்டது. மு. 'நீத்த நீரி னெடியவன் மூழ்கலும், நீத்த காமத் தெறுகதிர்த் தீயிலை, காய்த்திரும்பைக் கருமகக் கம்மியன், தோய்த்த தண்புன லொத்ததத் தோயமே.' (உச)

ஒரு பெண்ணின்மேல் ஆடவன் ஒருவன் நீரை வீசுதல்

1042 தைய லாளையோர் தாரணி தோளினன்
நெய்கொ ளோதியி னீர்முகந் தெற்றினன்
செய்ய தாமரைச் செல்வியைத் தீம்புனல்
கையி னுட்டுங் களிற்றர சென்னவே.

தாமரைமேல் அன்னங்கள் இருந்த காட்சி

1043 சுளியு மென்னடை தோற்க நடந்தவர்
ஒளிகொள் சீறடி [1]யொத்தன வாமென
விளிவு தோன்ற மிதிப்பன போன்றன
களின மேறிய நாகிள வன்னமே.

குளிக்கும் பெண்களைக்கண்ட ஆடவரின் தாபம்

1044 எரிந்த சிந்தைய ரெத்தனை யென்கெனை
அரிந்த கூருகி ராலழி சாந்தினுள்
தெரிந்த கொங்கைகள் செவ்விய நூல்புடை
வரிந்த [1]பொற்கல சங்களை மானவே.

1042 தார் - மாலை. நெய்கொள் ஓதி - புழுகுநெய் தடவப் பெற்ற கூந்தல். திருவை யானை ரோட்டேதல்: நெடுநல். 81 - 5, உரை; கலி சுர: 5 - 7; சீவக. 2595, ந. (உடி)

1043 சுளியும் அன்னங்கள் - வெறுக்கத்தக்க அன்னங்கள். தோற்கவே சுளியும் மென்னடை நடந்தவர். ஒத்தன - அவை ஏறியுள்ள தாமரை மலர்கள். விளிவு - அழிவு. நாகு இளமை - மிக்க இளமையான. ஒரு பொருட் பன்மொழி. தாமரைமேல் அன்னம் ஏறி நிற்பது பெண்களின் அடிகளைப் போன்ற அம்மலர்களைச் சிதைத்தலை ஒக்கும்.

(பி - ம்.) [1]'ஒப்பிவையாமென' (உக)

1044. எரிந்த - காமம் வெதும்பலால் எரிந்த. சிந்தையர் என்றது கொங்கைகளைக் கண்ட ஆடவரை. அரிந்த கூர் உகிரால்—அரிந்து எடுக்கப் பெற்ற கூரிய நகக்குறிகளால். அழி சாந்து - இடையிடையே அழிந்து போன செஞ்சந்தனம். தெரிந்த கொங்கைகள் - விளங்கித் தோன்றிய முலைகள். சந்தனம் அழிய நகக்குறிகள் விளங்கித் தோன்றும் நகில்களுக்கு நூல்வரிந்த பொற்கலசம் உவமை. மான - போன்று தோன்ற.

(பி - ம்.) [1]'பூங்கல', 'வண்கல' (உஎ)

காதலன் காதலிகளின் சமிஞ்ஞைகள்

1045 தாழ [1]நின்ற தகைமலர்க் கையினுல்
[2]ஆழி மன்னெரு [3]வன்னுரைத் தானது
வீழி யின்கனி வாயொரு மெல்லியல்
தோழி கண்ணிற் கடைக்கணிற் சொல்லினுள்.

நீரில் மறைந்து தோன்றும் தாமரை மலர்களின் தோற்றம்

1046 தள்ளி யோடி யலைதடு மாறலால்
தெள்ளு [1]நீரிடை மூழ்குசெந் தாமரை
புள்ளி [2]மானனை யார்முகம் போல்கிலா
துள்ள நாணி யொளிப்பன போன்றவே.

யாவருங் கரையேறிப் புணர்ந்து கொள்ளல்

1047 இனைய வெய்த விரும்புன லாடிய
வினைக [1]ருங்கழன் மைந்தரு மாதரும்
அனைய நீர்வறி தாகவந் தேறியே
புனைக றுத்துகில் பூணெடு தாங்கினர்.

1045 தாழ - மூழ்ந்தாள் வரையில் தாழ. தகைமலர்க்கை - அழகு பெற்ற தாமரை போன்ற கை. ஆழி - மோதிரம். மன் ஒருவன் உரைத்தது தனது வேட்கையை. வீழி - ஒரு வகை மரம். கண்ணில் - கண்ணுக்கு, தன் கடைக்கண்ணுல்.

(பி - மீ.) [1]'நின்றதன் கைநிலை மெய்யினுல்' [2]'ஊழி' [3]'வற்குரைத்' (உஅ)

1046 அலைதள்ளி ஓடித் தடுமாறலால், நீரில் மூழ்கும் தாமரை முகம் போல்கிலாது ஒளிப்பன போன்ற.

பி - மீ. [1]'நீரின்முழுகுசெந்' [2]'மான்விழி' (உக)

1047 இனைய எய்த - இத்தகையன அமைய. கருங்கழல் - பெருமையுள்ள வீரக்கழல். வறிதாக - தம்மைப் பிரிதலால் வறுமையுடையது ஆகும்படி; 1048. புனை - அணிதற்குரிய. நறுந்துகில் - வாசனை ஊட்டிய ஆடை; 'மென்னூற் கலிங்கங் கமழ்புகை மடுப்ப' (மதுரைக். 554); 'காடி கலந்த கோடிக் கலிங்கம், கமும வூட்டுங் காழகி னறும்புகை'; (பெரும். க. 54: 9-10); 'காடி யுண்ட பூந்துகில் கமும வூட்டும் பூம்புகை' (சீவக. 71.)

(பி - மீ.) [1]'கருங்குழன் மாதரு மைந்தரும்' (உ0)

நீராட்டின்பின் தடாகத்தின் தோற்றம்

1048 மேவி னுர்பிரிந் [1]தாரிந்த வீங்குநீர்
[2]தாவு தண்மதி தன்னெடுந் தாரகை
ஓவு வானமு முண்ணிறை தாமரைப்
பூவெ லாங்குடி [3]போனதும் போன்றதே.

சூரியாஸ்தமயம்

1049 மானி னேக்கியர் மைந்தரோ டாடிய
ஆன நீர்விளை யாடலை நோக்கினன்
தானு மன்னது காதலித் தானென
மீன வேலையை வெய்யவ னெய்தினன்.

சந்திரோதயம்

1050 ஆற்ற லின்மையி னலழிந் [1]தேயுந்தம்
வேற்று மன்னர்தம் மேல்வரும் வேந்தர்போல்
ஏற்று மாதர் [2]முகத்துக் கிணைபெறுத்
தோற்ற சந்திரன் மீளவுந் தோன்றினன்.

1048 மேவினுர் - நீராடத் தடங்களைப் பொருந்தியவர்கள். பிரிந்தார் - அவைகளைப் பிரிந்தார்கள். வீங்குநீர் - மிக்கநீர். தாரகை - விண்மீன்கள். ஓவுவானம் - நீங்கப்பெற்ற விண். குடி போதல் - நீங்கப் பெறுதல்; 'வடிவுந் தனமு மனமுங் குணமும் குடியுங் குலமுங் குடிபோகியவா' (கந்தரனு. 19.) மகளிருக்குத் தாரகையும் தாமரையும் உவமை.

(பி - ம்.) [1]'தார்க்கந்த' [2]'தாவின்மாமதி [3]'போனவும்' (கூக)

1049 மு : திருச்சிற். 123. அன்னது - அந்த நீர் விளையாட்டை. மீன வேலை - மீன்களுள்ள கடல். வெய்யவன் - சூரியன். சிலபிரதிகளில் இச் செய்யுளுடன் படலம் முடிகிறது. (கூஉ)

1050 அழிந்தேயும் - முன்னொருகால் அழிந்து முதுகுகாட்டி ஓடியிருப்பினும். ஏற்று - பெண்களின் முகங்களோடு எதிர்த்து நின்று.

(பி - ம்.) [1]'தேயுமவ்', 'தேகியே' [2]'முகத்துக்கிணையெனு' 'முகங்களோ டிணை', 'முகங்கள்கண் டெங்கணும்' (கூங)

நீர் விளையாட்டுப் படலம் முற்றும்.

17 உண்டாட்டுப் படலம்

வேறு

நிலவின் பெருக்கம்

1051 வெண்ணிற [1]நறவுபாய் வெள்ள மென்னவும்
[2]பண்ணிறஞ் செறிந்திடை பரந்த தென்னவும்
உண்ணிறை காமமிக் கொழுகிற் றென்னவுந்
தண்ணிறை நெடுநிலாத் தழைத்த தெங்குமே.

நெடு நிலாவின் வருணனை

1052 கலந்தவர்க் கினியதோர் கள்ளு மாய்ப்பிரிந்
துலந்தவர்க் குயிர்சுடு விடமு மாயுடன்
புலந்தவர்க் குதவிசெய் புதிய தூதுமாய்
மலர்ந்தது நெடுநிலா மதனன் வேண்டவே.

இதுவும் அது

1053 ஆறெலாங் கங்கையே யாய வாழிதான்
ஊறுபாற் கடலையே யொத்த குன்றெலாம்
ஈறிலான் கயிலையே யியைந்த வெண்ணினி
வேறியாம் புகல்வது நிலவின் வீக்கமே.

1051 நறவு - கள். நிலவைக் கள் எனல் : 1062, 1069. கூடியிருப் பாருக்கு இன்பம் பயத்தலின் நறவு கூறப்பட்டது. பண் - இசை. நிறம் செறிந்து - உருவம் பெற்று. உள்நிறை. நறவு, பண், காமம் இவற்றின் நிறம் வெண்மை. தண் நிறை - குளிர்ச்சி மிகுந்த. நெடு நிலா - மதியத்து நிலா (1052.) உண்டாட்டுப் படலம் ஆதல்பற்றி நறவை முதற் கண் உவமை கூறினர். நிலவுக்குரிய இராகோத்தில் தோன்றுவன பற்றிப் பண்ணும் காமமும் உவமையாயின.

(பி - மீ.) [1]'கறைநிறை', 'நறுநரு', 'நருநிறை' [2]'பண்ணிறம் பொலிந்தபால்' (க)

1052 மகிழ்ச்சி தருதலின், 'கள்ளுமாய்' என்றார். நிலா உயிர் சுடும் விடம் : ந 7 : 135. வெள்ளை வண்ண விடம் : 'வெள்ளை வண்ணவிட முண்டாங்கொலோ' (712.) 'மதிக்கலையாம் வெள்ளை விடம்' (நைடத. சந்திரோ. 14.) புலந்தவர் - கணவருடன் ஊடிய மகளிர். (உ)

1053 ஆறு - நதிகள். கங்கையின் நிறம் வெள்ளை. ஆய - ஆயின. ஆழி - கருங்கடல். குன்று - கருநிறமுள்ள மலைகள். ஈறிலான் - சிவன். இயந்த - போன்றன. வீக்கம் - மிகுதி. (ங)

யாவரும் யாவும் வெண்ணிறக் கோலம்
கொண்டாற் போல் தோன்றல்

1054 எள்ளருந் திசைகளும் யாரும் யாவையும்
கொள்ளவெண் ணிலவினுங் கோலங் கோடலால்
வள்ளுறை வயிரவாண் மகர கேதனன்
வெள்ளணி யொத்தது வேலை ஞாலமே.

பெண்கள் சென்றடைந்த இடங்கள்

1055 தயங்குதா ரகைபுரை [1]தரள நீழலும்
[2]இயங்குகான் மிடைந்ததா ரெழினிச் சூழலும்
கயங்கள்போன் றெளிர்பளிங் கடுத்த கானமும்
வயங்குபூம் பந்தரு மகளி ரெய்தினர்.

பெண்கள் மது அருந்தத் தொடங்கல்

1056 பூக்கம ழோதியர் போது [1]போக்கிய
சேக்கையின் வீளைசெருச் செருக்குஞ் சிந்தையார்
ஆக்கிய வமுதென வம்பொன் வள்ளத்து
வாக்கிய பசுநறு மாந்தன் மேயினர்.

1054 கொள்ளை - மிகுதி. கோலம் கோடலால் - வெண்ணிறக் கோலத்தைக் கொள்ளுதலினால். வள் உறை - கூர்மை உறையும். மகர கேதனன் - மீனக்கொடியை யுடைய மன்மதன். வெள்ளணி - பிறந்தநாட் கொண்டாட்டம்; பிறந்தநாளில் வெள்ளை உடைகளையும் சாந்தையும் அணிகளையும் அணிதல் மரபு; சுபகாரியங்கள் நிகழும்போதும் வெள்ளணி அணிவர்; வெள்ளணிநாள் - பிறந்தநாள்; பு - வெ. 212. வேலைஞாலம் - கடல் சூழ்ந்த உலகம். (சு)

1055 தயங்கு - விளங்குகின்ற. தாரகை புரை - விண்மீன்களொத்த. தரளநீழல் - முத்துப் பந்தர். கான் - மணம். தார் எழினிச் சூழல் - மாலைகள் அலங்கரிக்கப்பெற்ற திரைச்சீலைகளால் ஆன கூடாரங்கள். கயங்கள் போன்று ஒளிர்பளிங்கு - குளங்களைப்போற் பிரகாசிக்கின்ற பளிங்கு. கயம் : பளிங்குக்கு உவமை : 126, குறிப்.

(பி - ம்.) [1]'தரளப்பந்தரும்' [2]'இயங்குகார் மிடைந்த காவெழினிச்' (நி)

1056 கமழ் - மணம் வீசுகின்ற. ஓதியர் - கூந்தலையுடைய பெண்கள். போதுபோக்கிய - பொழுதுபோக்கும் பொருட்டு. போதுபொங்கிய (பி - ம்) - மலர்கள் மிகுதியாக உள்ள. சேக்கை - படுக்கை. சேக்கையின் வீளை செருகலவிப்போர்; 1108, 1111. 'தொடுத்த நாண்மலர் வேய்ந்து.....அடுத்த நீள் சுரத மகளிரிற், றடங்கண்ணுஞ் சிவப்புறக் கரையழிந்து, படுத்த பேரணைப் போர்புரிந்த தாலந்தப் பண்ணையங் கானல் சூழ் பெண்ணை, (வி. பா. சிறப்புப். 7.) செரு செருக்கும் சிந்தையர் - போரிலே களிக்க

அவர்கள் மது அருந்திய வருணனை

1057 [1]மீனுடை [2]விசும்பினர் விஞ்சை நாட்டவர்
[3]ஊனுடை யுடம்பினர் ருருவ மொப்பிலார்
[4]மானுடை நோக்கினர் வாயின் மாந்தினர்
[5]தேனுடை மலரிடைத் தேன்பெய் தென்னவே.

இதுவும் அது

1058 உக்கபால் [1]புரைநரு வுண்ட வள்ளமும்
[2]கைக்கவி ஞெளிபடச் சிவந்து காட்டத்தான்
மைக்கணுஞ் சிவந்ததோர் மடந்தை வாய்வழிப்
புக்கதே னமுதமாய்ப் [3]புகுந்த போதினே.

கள் காமத்தை எழுப்பினமை

1059 தாமமு நானமுந் ததைந்த ணிகிற்
றூமமென் குழலிய ருண்ட தூநறை
ஓமவெங் குழியுகு நெய்யி னுள்ளுறுங்
காமவெங் கனலிடை கனற்றிக் காட்டிற்றே.

வேண்டுமென்ற பெண்கள். அமுதின் நிறம் கள்ளின் நிறம்போல் வெள்ளை; 'அமிழ்தினின் விளர்த்து' (நைடத. அன்னத்தைத். 13.) வாக்கிய - வார்த்த. பசுநரு - புதியகள். (பி - மீ.) 1 'பொங்கிய' (சு)

1057 மீன்உடை - விண்மீன்களை யுடைய. விசும்பின் ஆர் - ஆகாயத் தின்கண் பொருந்திய, விண்ணிலுள்ள. விஞ்சை நாட்டவர் - வித்யாதரப் பெண்கள். ஊனுடைய உடம்பினர் - மானிட மகளிர்; ஊன் - சதை. 'விஞ்சையரும் உருவில் ஒப்பில்லாத உடம்பினர்' என்க. மான் உடை நோக்கு - மான் தோற்றுதற்குக் காரணமான விழி. தேன்உடை மலர் - தேன் கட்டவிழ்கின்ற மலர். மலர் பெண்களின் வாய்க்கு உவமை.

(பி - மீ.) [1]'மீனுறு' [2]'விசும்புடை' [3]'ஊனுறு' [4]'மானுறு' [5]'தேனுறு மலர்மிசைத்' (எ)

1058. 'நிலா உண்டவள்ளம்' என்ற பாடத்துக்கு, 'நிலாவின் ஒளி யைத் தன்னிடம் கொண்ட திண்ணம்' என்பது பொருள். நிலாவுக்குப் பால் உவமை; நக்க.605, குறிப். கைகவின் ஒளி - கையின் அழகிய ஒளி. வள்ளம் கையால் தொடச் சிவத்தல் : 585. மது உண்ணக் கண் சிவக்கும். தேன் வாய்வழிப் புகுந்த போதின் ஒளிபட வள்ளமும் சிவந்து காட்டக் கண்ணும் சிவந்தது.

(பி - மீ.) [1]'புரைநிலா' [2]'கய்த்தளிரெழில் படச்' [3]'பொலிந்த போன்றவே' (அ)

1059. தாமம் - மலர் மாலை. நானம் - புழுகு நெய். ததைந்த - நெருங்கிய. தூமமென் குழலியர் - புகையுண்ட மெல்லிய கூந்தலையுடைய பெண்கள்.

இது முதல் 1073 முடிய மது மயக்கங் கொண்ட பெண்களின் தனித்தனிச் செயல்கள்

ஒருத்தி கள்ளில் தன் நிழல் கண்டு தோழிஎன்று மயங்கிக் கூறியது

1060 விடனெக்கு நெடிய வேற்க
ணமுதொக்கு மின் சொலார்தம்
மடனெக்கு மடனு முண்டோ
வாணுத லொருத்தி [1]தான்றன்
சடனெக்கு நிழலைக் கண்டே
தண்ணறுந் தேறல் வள்ளத்
துடனெக்க [2]நுகர் னீயே
யுண்ணுதி தோழி யென்றாள்.

இதுவும் அது

1061 அச்சநுண் மருங்கு லாளோ
ரணங்கனை ளளக பந்தி
நச்சுவேற் கருங்கட் செவ்வாய்
நகைமுக நறவுட் டோன்றப்
பிச்சிநீ யென்செய் தாயிப்
பெருநற விருக்க வாளா
எச்சிலை நுகர்தி யோவென்
றெயிற்றரும் பிலங்க நக்காள்.

வயிற்றிற் புகுந்த நறைக்கு ஓம குண்டத்திற் புகுந்த நெய் உவமை. நெய்யின்; இன்:ஒப்புப்பொருள். கனற்றி - கொழுந்து விட்டெரியச் செய்து. நெய் பெய்த ஓமத்தீக் கொழுந்து விட்டெரிதல் : 780. (க)

1060. விடன் - விடம்; போலி. மடன் ஒக்கும் மடன் - அறியாமையைப் போன்ற அறியாமை. சடன் ஒக்கும் நிழல் - தன் உடலை ஒத்த நிழல்; உடலின் நிழல் என்றபடி; சடன் = சடம் - உடல் 'நிழலை வள்ளத்துக் கண்டே'; உடன் ஒக்க நுகரல் - என்னுடன் ஒத்திருந்து (ஒரு பாத்திரத்தில்) பருகாதே.

ஒப்பு : 'தமனிய வள்ளத்துத் தன்னிழ லுைக்கிப், பிறன்முக மிது வெனப் பெண்மையின் மயங்கி' (பெருங். க. 40 : 162 - 3.)

(பி - ம்.) [1] காணச் சடனெக்கு நிழலைப் பொன்செய்', 'காணத் சடனெக்கு நிழலைப் பொன்செய்' [2] வுவந்து நீயே யுண்ணுதி' 'வந்தாய் நீயு முண்ணுதி' (கo)

1061. அச்சம் நுண் மருங்குல் - ஒடிந்து விடுமோ வென்று கண்டார்க்கு அச்சம் தரும் நுண்ணிய இடை. அணங்கு - தெய்வப் பெண். அளகபந்தி - இருபிரிவாக வகிர்ப்பட்ட கூந்தல். பிச்சி - பைத்தியக்காரி. பெருந்றவு - சாடியில் உள்ளகள். வாளா - பயனின்றி. எயிற்று அரும்பு - பற்களாகிய முல்லை அரும்புகள். இலங்க - விளங்க. (கக)

ஒருத்தி நிலாவை நறவென்று மயங்கி நாணுதல்

1062 [1]புறமெலா நகைசெய் தேசப்
பொருவரு மேனி போர்செய்
மறமுலாங் கொலைவேற் [2]கண்ணு
ளொருத்திவள் ளத்து வெள்ளை
நிறநிலாக் கதிர்கள் பாய
நிறைந்தது போன்று தோன்ற
[3]நறவிலா ததனை வாயின்
வைத்தன ணுணுட் கொண்டாள்.

ஒருத்தி தன் கண்நிழலைச் சாடியிற் கண்டு வண்டு என ஓச்சுதல்

1063 யாழ்க்குமின் குழற்கு மின்ப
மருளின விவையா மென்னக்
கேட்குமென் [1]மழலைச் சொல்லோர்
கிஞ்சுகங் கிடந்த வாயாள்
தாட்கருங் குவளை தோய்ந்த
தண்ணறைச் சாடி யுட்டன்
வாட்கணி னிழலைக் கண்டாள்
வண்டென வோச்சு கின்றாள்.

1062 புறம் எலாம் - புறத்தார் எல்லாம். நகைசெய்து ஏச. பொருஅரு - ஒப்பற்ற. வேறுஓர் (பி - ம்.) - முன் பாட்டிற் கூறினவள் அல்லாத மற்றொரு. 'வேறோர்மறம்' என்பதற்கு. 'இவ்வுலகில் இது காறும் அறியப்படாத புதியதொரு கொடுமை' என்று பொருள் கூறுவாரும் உளர். நிலாக்கதிர் நறவு போல் தோன்றல் : 1051, 1069. நாணம் நறவில்லாமை யால் தோன்றியது; 'ஏச வாயில் வைத்தனள்.'

மு : 'திங்கள் சொரிநிலவு சேர்வெள்ளி வள்ளத்துப், பைங்கிள்ளை பாலென்று வாய்மடுக்கும்' (தண்டி. சூ. 55, மேற்.)

(பி - ம்.) [1]'புறமெலாந் திகழுஞ் சோதிப் பொன்னெஞிர் மேனி வேறோர்' [2]'கண்ணுள் மணியின்வள்' [3]'நறவென வதனை' (கஉ)

1063. கேட்கும் - ஒலிக்கும். கிஞ்சுகம் கிடந்த - முருக்க மலரைப் போன்ற. தாள் கரும் குவளை - தாளையுடைய கருங்குவளை மலர். 'குவளை மலர் மோந்து இன்புறுதற் பொருட்டு வைக்கப்பட்டது' (பதிற். 42 : 10-11, உரை.) வாள் கண்ணின் நிழலை.

(பி - ம்.) [1]'குதலைச் சொல்லான்' (கூ)

கள்ளில் மதியின் நிழலைக் கண்டாளின் செயல்

1064 களித்தகண் மதர்ப்ப வாங்கோர்
கனங்குழை கள்ளி னுள்ளே
வெளிப்படு கின்ற காட்சி
வெண்மதி நிழலை நோக்கி
அளித்தன னபயம் வானத்
தாவினை யஞ்சி நீவந்
தொளித்தனை [1]நடுங்க லென்றுங்
கினியன வுணர்த்து கின்றாள்.

கள்ளில் தோன்றும் தன் முகத்தை மதியென்று நினைத்தாள் செயல்

1065 கண்மணி வள்ளத் துள்ளே
களிக்குந்தன் முகத்தை நோக்கி
விண்மதி மதுவி னுசை
வீழ்ந்ததென் றிருத்தி யுன்னி
உண்மகிழ் தூணை வேடு
[1]மூடுகாள் வெம்மை [2]நீங்கித்
தண்மதி யாதி யாகிற்
றருவனிந் நறவை யென்றாள்.

ஒருத்தி வேறுங் கிண்ணத்தின் அடிப்புறத்தில்
கள் இருக்கு மென்று வாயில் வைத்தமை

1066 எள்ளொத்த கோல மூக்கி
னேந்திழை யொருத்தி பூங்கை
தள்ளத்தண் ணறவை யெல்லாந்
தவிசிடை யுகுத்துந் தேறாள்

1064. களித்த கண் மதர்ப்ப - கள் மயக்கத்தையுடைய கண்கள் செருக்கும்படி. கனங்குழை - கனத்த காதணியை யுடையாள். காட்சி - அழகிய. (பி - மீ.) [1] நடுங்கா தூங்கே யுறைந்திடென் றுணர்த்து' (கசை)

1065. கள் மணி வள்ளம் - கள்ளையுடைய மணிகளால் இயன்ற கிண்ணம். கள்ளில் தோன்றும் முகநிழலை மதியாகக் கருதுதல்; சீவக. 2677. ஊடுங்கால் மகளிரைச் சந்திரன் சுடுவோன் என்பர். ஆதி ஆகில் - ஆவாயாஞல். (பி - மீ.) [1] மூடிஞள்' [2] நீக்கித்' (கடு)

1066. மூக்குக்கு எள்ளின் பூ உவமை. உப்புறம் - பின்புறம்; 'ஊழையு முப்பக்கங் காண்பர்' (குறள், 620.) மறித்து வாங்கி - திருப்பி எடுத்து. மணி - பவளம். (கசை)

உள்ளத்தின் மயக்கந் தன்னை
ஒப்புறத் துண்டென் றுன்னி
வள்ளத்தை மறித்து வாங்கி
மணிநிற விதழின் வைத்தாள்.

ஒருத்தி கழுநீர்த் தண்டினால் மது அருந்துதல்

1067 [1]வான்றனைப் பிரித லாற்ற
வண்டினம் வச்சை மாக்கள்
[2]என்றமா நிதியம் வேட்ட
விரவல ரென்ன வார்ப்பத்
தேன்றரு கமலச் செவ்வாய்
திறந்துதே னுகர நாணி
ஊன்றிய [3]கழுநீர் நாளத்
தாளினு லொருத்தி யுண்டாள்.

ஒருத்தி தன் மனத்துள் இருக்கும் அன்பன் கள் உண்ணுமையினால் தானும் உண்ணுதிருத்தல்

1068 புள்ளுறை கமல வாவிப்
பொருகயல் வெருவி யோட
வள்ளுறை கழித்த வாள்போல்
வசியுற வயங்கு கண்ணுள்
கள்ளுறை மலர்மென் கூந்தற்
களியிள மஞ்ஞை யன்னாள்
உள்ளுறை யன்ப னுண்ணு
னெனவுன்னி நறவை யுண்ணாள்.

1067. வான்தனை - ஆகாயமளவும். வச்சைமாக்கள் - உலோபிகளே; 997. என்ற - பொருந்திய. இரவலர் - யாசகர். வண்டுகளுக்கு உலோபியரை இரக்கும் இரவலர் உவமை. நுகர நாணியது வண்டுகள் மொய்த்தலினாலே.

(பி - மி.) [1] வான்றுணைபிரிய' [2] என்றவர் நிதியம் வேட்டு மிரவல' [3] கமல' (கள)

1068. வாவி - தடாகத்திலுள்ள. பொருகயல் - ஒன்றோடொன்று போர் செய்யும் இயல்பினவாய கயல் மீன்கள். வள்உறை : 1054. வசி - கூர்மை. உள்ளுறை - தன் மனத்திலே தங்கி நின்ற. (கஅ)

ஒருத்தி நிலாவைக் கள்ளென்று மயங்கல்

1069 அழிகின்ற வறிவி னுலோ
பேதைமை யாலோ வாற்றிற்
சுழியொன்றி நின்றி தென்னு
மூந்தியா ளொருத்தி செந்தேன்
பொழிகின்ற [1]பூவின் வேய்ந்த
[2]பந்தரைப் புரைத்துக் கீழ்வந்
திழிகின்ற கொழுநி லாவை
நறவென வள்ளத் தேற்றுள்.

ஒருத்தி அணிகளை ஒவ்வாத முறையில் அணிதல்

70 மின்னென நுடங்கு கின்ற
மருங்குலா ளொருத்தி [1]வெள்ளை
இன்னமு தனைய [2]சொல்லா
ளிடைதடு மாறி [3]யேய்ந்த
வன்னமே கலையை நீக்கி
மலர்த்தொடை யல்குல் சூழ்ந்தாள்
பொன்னரி மாலை கொண்டு
புரிகுழல் புனைய லுற்றாள்.

1069. உந்திக்கு ஆற்றில் தோன்றும் நீர்ச்சுழி. புரைத்து - தளைத்து. நிலாவைக் கள் என மயங்கல் : 1062.

(பி - ம்.) [1]' பூவி லேய்ந்த' [2]' பந்தரைக் கிழித்துக்' (கக)

1070. இடை தடுமாறி - நடுவிலே தடுமாற்றம் உற்று. வன்னம் - பல நிறம். மேகலை - இடையில் கட்டும் அணி. மலர்த் தொடை - பூமாலை. சூழ்ந்தாள் - சுற்றிக் கட்டினாள். பொன்னரி மாலை - கழுத்தில் அணிதற்கு உரிய ஒரு மாலை என்பர் கம்பர்; 'சுடர் மணித் தோளிற் றோன்றும் பொன்னரிமாலை' (சூ. 16 : 6); தலையிலணியும் மாலை என்பாரும் உளர்; 'செண்ணகச் சிகழிகைப் பின்னிடை சேர்ந்த பொன்னரி மாலை', 'மெல்லெனுதிப், பொன்னரி மாலை', 'பின்னிருங் கூந்தற் பொன்னரி மாலாய்' (பெருங். க. 40 : 39 - 40; உ. 3 : 72 - 3, 19 : 75 - 6); 'பொன்னரி மாலையும் நெற்றி மாலையும் தலைக் கோலமாகிய முத்தும் புலம்ப இவற்றைக் குழலினின்று அகற்றினை லென்க', 'போதற்கு விரைந்து பொன்னரி மாலையைக் கழுத்திலே பூண்டு பூஞ்சிகையிலே அதனை வைத்தாராகக் கருதி, அதனையொழியப் பூஞ்சிகையை முடித்துத் தொட்டுக் கண்ணுடியைப் பார்த்துத் தம்மை அதிலே கண்டு காணி', 'காரிருட்டிவளு மின் போல்..... கூந்தற் பொன்னரி மாலை தாழ' (சீவக 349. ந., 2538, ந. 2663.)

மதுவுண்டு மதி மயங்கியதால் ஓர் உறுப்புக்குரிய ஒன்றைப் பிறிதோர் உறுப்பிற் சேர்த்தனள்.

மு : 'தாருடைத்துத் தூசு தலைக்கணியும்' (நூற்றெட்டுத்திரு. 53.)

வேறு

ஒருத்தியினிடம் கோபக்குறிகள் தோன்றல்

1071 கூற்றமற் றயனங்கள் சிவப்பக் கூனுதல்
ஏற்றிவா ளெயிறுக ளதுக்கி யின்றளிர்
மாற்றருங் காதல மறிக்கு மாதொரு
சீற்றமா மவிரயஞ் தெரிக்கின் றாரினே.

இதுவும் அது

1072 [1]துடித்தவான் றுவரிதழ்த் தொண்டை தூநிலாக்
கடித்தவா லெயிறுக [2]ளதுக்கிக் கண்களாம்
[3]வடித்தவெங் குருதிவேல் விழிக்கு மாதர்மெய்ப்
பொடித்தவேர் புறத்துகு [4]நறவம் போன்றவே.

(பி - ம்.) [1]மெல்ல' [2]'வின் சொலிடை', [3]'செஞ்சம்', 'யென்ன' (உ0)

1071. கண்களுக்கு யமன் உவமை : குறள், 1085; 'ஆற்ற லுறு கொலையி லாரெனக் கொப்பென்று, கூற்றுவரீ வீண்செருக்குக் கொள்கின் றாய் - சாற்றுவல்கேள் ..... ஒண்டொடியி னீள்விழியு மூண்டு' (விசாகப் அணியிலக்கணம்.) கூன் நுதல் - வளைந்த புருவம். புருவம் நெற்றியிற் செல்லல் : 340. வாள் எயிறுகள் - ஒளி பொருந்திய பற்கள். இன் தளிர் மாற்று அருமை காதலம் - இனிய தளிரின் அழகை மாற்றுகின்ற அரிய கைகள். மறிக்கும் - தட்டுவாள். சீற்ற அவிரயம் : 'வெகுண்டோ னவிரயம் விளம்புங் காலை, மடித்த வாயு மலர்ந்த மார்பும், துடித்த புருவமுஞ் சுட்டிய விரலும், கன்றிய வுள்ள மொடுகைபுடைத் திருத்தலும், அன்ன நோக்கமோ டாய்ந்தனர் கொளலே' (சிலப். ஊ : 12 - 25, மேற்.) தெரிக்கின்ற ரின் - காட்டுவாரைப் போல். இவள் உண்மையிற் கோபங் கொண்டாளில்லை. (உக)

1072. துடித்த : உதட்டுக்குத் துடித்தல் இயல்பு; திருச்சிற். 32, பேர். துவர்இதழ்த் தொண்டை - செந்நிற முள்ள இதழாகிய கொவ்வைக்கனி. தூநிலா கடித்த - தூய நிலாவைக் கோபித்த; 'நிலவினும் வெண்மையான' என்றபடி. வால் - வெண்மை. வடித்த - கூர்மை செய்யப் பெற்ற. வேர் - வேர்வை. புறத்து உகு - வெளியே சிந்துகின்ற. வேர்வை சிந்துதல் குடித்த கள் வெளி வருதலே ஒக்கும்.

(பி - ம்.) [1]'துடித்த வாய்த்துவர்' [2]'ளெறிப்பக்' [3]'வடித்தசெங்' [4]'தரளம்' (உஉ)

ஒருத்தியின் நினைப்பும் உரையும் வேறுபடல்

1073 கனித்திர [1]ளிதழ்பொதி செம்மை கண்புக
நினைப்பதொன் றுரைப்பதொன் றுமொர் நேரிழை
தனித்தட மரைமலர் முகத்த சாபமும்
குனித்தது பனித்தது குழவித் திங்களே.

கணவருக்கும் கள்ளுக்கும் ஒப்பு

1074 இலவிதழ் துவர்விட வெயிறு தேனுக
[1]மூலைமிசைக் கச்சொடு கலையு மூட்டற
அலைகுழல் சரிதர வசதி யாடலாற்
கலவிசெய் கொழுநருங் கள்ளு மொத்தவே.

தன் கணவரிடம் தூது போக்கும் தோழியை ஒருத்தி ஐயுற்று வினவல்

1075 [1]கனைகழற் காமனுக் கலக்க முற்றதை
அனகனுக் கறிவியென் [2]றறியப் போக்குமோர்
இனமணிக் கலையினு டோழி நீயுமென்
மனமெனத் தாழ்த்தியோ வருதி யோவென்றாள்.

1073. கனி - கொவ்வைக் கனியை யொத்த. திரள் இதழ் - திரண்ட அதரம். கண்புக - கண்களிலே புக. தனிதடம் - ஒப்பற்ற குளம். மரை - தாமரை; முதற்குறை. முகத்த சாபம் - முகத்திலே உள்ள வில்லாகிய புருவம். குனித்தல் - வளைத்தல். பனித்தது - வியர்த்தது. குழவித்திங்கள் - எட்டாம் பிறைச் சந்திரனை யொத்த நெற்றி.

(பி - ம்.) [1]'ளிதழ் பொழி' (உங)

1074. இலவு இதழ் இலவம் பூவை ஒத்த அதரம். துவர்விட - செந்நிறத்தை நீங்க. தேன்உக - தேன் போன்ற நீரைச் சொரிய. மூட்டு அற - முடிச்சு அவிழ. சரிதர - அவிழ. அசதியாடல் - பரிகாசம் செய்தல்; சீவக. 1871. மேற்கூறிய செயல்கள் கலவிக்கும் கள்ளிற்கும் பொது. மேலே 1036-இல் பொய்கைக்கும் கணவருக்கும் ஒற்றுமை கூறியவர் இங்கே கள்ளுக்கும் கணவருக்கும் ஒற்றுமை கூறினர்.

மு. 'பழிபடு நறவந் தன்னைக் கடைசியர் பருகிச் செவ்வாய், மொழிதடு மாற வேர்வை முகத்தெழ முறுவ றோன்ற, விழிசிவந் தழலக் கூந்தன் மென்றுகில் சோர வுள்ளக், கழிபெருங் களிப்பு நல்கிக் கலந்தவ ரொத்த தன்றே' (திருவிளை. நாடு. 21.) (பி - ம்.) [1]'மூலை முகக்' (உச)

1075. அனகன் - இங்கே கணவன். 1018. கலையினுள் - மேகலாபரணத்தை அணிந்தவள். தாழ்த்தியோ - காலம் கடத்திவிடுவாயோ.

(பி - ம்.) [1]'கனைகடற் கள்ளினுற்' [2]'றறைத்து' (உடு)

கணவன் பால் ஒருவர்பின் ஒருவராகத் தூது சென்ற
பாங்கியர் மீளாமை கண்டு ஒருத்தி தானே செல்லல்

1076 மானமர் நோக்கியோர் மதுகை வேந்தன்பால்
ஆனதன் பாங்கிய ராயி னுரெலாம்
போனவர் போனவர்த் தொடரப் போக்கினுள்
தானுமங் கவர்பினே தமிய ளேகினுள்.

ஒருத்தி தன் கிளியைச் சீறுதல்

1077 மன்றனு நெருருசிறை யிருந்தொர் வாணுதல்
தன்றுணைக் கிள்ளையைத் தழீஇ யென் னுயிரை
இன்றுபோய்க் கொணர்கிலை பென்செய் தாயெனக்
கன்றிலா டொத்தியென் றழுது [1]கன்றினுள்.

ஒருத்தி தன் கிளியை உவந்து அழைத்தல்

1078 விரைசெய்பூஞ் [1] சேக்கையாந் தெப்ப மீமிசைக்
கரைசெயா வாசையங் கடலு ளாளொரு
பிரசமென் குதலையாள் கொழுநன் பேரெலாம்
உரைசெயுங் கிள்ளையை [2]யுவந்து கூவினுள்.

1076 மதுகை – வலிமை. போனவர் திரும்பி வராமையின் அவர்கள் பின் பிறரையும் அனுப்பிப் பின் அனுப்ப வேறு தோழியர் இல்லாமையின் தானே தனியே போனுள். (உசு)

1077 மன்றல் – நறுமணம். ஒரு சிறை – ஓர் இடம். கிள்ளை – கிளி. தழீஇ – தழுவி. ஆவி என்றது கணவனை. எனக்கு அன்றிலோடு ஒத்தி – தீமை செய்வதில் நீ எனக்கு அன்றிற் பறவையைப் போல்கின்றாய்; அன்றில் ஆணும் பெண்ணுமாக வாழும் பறவைச் சாதி. ஒன்றை ஒன்று பிரியின் வருந்து மியல்பின. அன்றிலின் குரல் கொழுநரைப் பிரிந்தாருக்கு வருத்தம் தருவ தொன்றாகும். (பி - மீ.) [1]'சொல்லினுள், சீறினுள்' (உஎ

1078 விரை – வாசனை. சேக்கை ஆம் தெப்பம் – படுக்கையாகிய அழகிய மிதவை. ஆசையைக் கடலென்றதற்கு ஏற்பச் சேக்கையைத் தெப்பம் என்றது நயம். பிரசம் – தேன். காதலியின் பாலுள்ள கிளி கொழுநன் பெயரைச் சொல்லுதல்: 'மண்டமர் கடந்த வேனலன் வந்தானெனத் தொண்டை வாய் மடந்தையர் நாளுஞ் சொல்வன; பண்டரு மொழிக்கிளி பயின்று கூறலும், கண்டதோ விவ்வெதனக் காளை யெண்ணினுன்' (நைடத. நளன்றூது. 68.)

(பி - மீ.) [1]'சேக்கையி னெடுத்த', 'சேக்கையும் வெதும்ப' [2]'யுயிர்த்துச் சீறினுள்' (உஅ)

ஒருத்தி கண்ணீர் வடித்தமை

1079 வளைபயின் முன்கையோர் மயில னுட்குத்தன்
இளையவள் பெயரினைக் கொழுந னீதலும்
முளையெயி றிலங்கிட முறுவல் வந்தது
களகள வுதிர்ந்தன கயற்க ணுலியே.

இதுவும் அது

1080 [1]செற்றமுற் றேகவோர் செம்மல் வெம்மையாற்
பற்றலு மல்குலிற் பரந்த மேகலை
அற்றுகு [2]மூத்தின்முன் பவனி சேர்ந்தன
பொற்றொடி யொருத்திகண் பொருத முத்தமே.

ஒருத்தி செய்வதறியாது பலபல சொல்லுதல்

1081 தோடவிழ் கூந்தலா ளொருத்தி [1]தோன்றலோ
டூடுகெ னுவையி ருருகு நோய்கெடக்
கூடுகெ னுவவன் குணங்கள் வீணையிற்
பாடுகெ னுவெனப் பலவும் பன்னினாள்.

1079 இளையவள் - மாற்றாள்; தங்கை முறையாதல் பற்றி இளையவள் என்றார். 'இளையாளின் பெயரிட்டு அழைத்தலும்' என்றபடி. முறுவல் சினம் பற்றித் தோன்றிற்று. களகள : இரட்டைக் கிளவி. ஆலி - கண்ணி லிருந்து வரும் துளி. (உக)

1080 செற்றம் முற்றும் ஏக - தன் காதலியின் சினம் முற்றிலும் ஒழிய; 'முற்றும்' என்பதன் உம்மை விகாரத்தால் தொக்கது. 'செற்ற முன் புரிந்ததோர் செம்மல்' என்ற பாடத்துக்கு - 'முன் குற்றம் புரிந்தவனுகிய ஓர் ஆணமகன்' என்பது பொருள். வெம்மையால் - விருப்பத்தால். முன்பு அவனி; அவனி - பூமி. பொருத முத்தம் - தாங்காத ரீத்துளிகள். மேகலை யின் முத்து அவனி சேர்வதன் முன் கண் முத்துச் சேர்ந்தன என்றது நயம்.

(பி - மி.) [1]'செற்றமுன் புரிந்ததோர்' [2]'மணியின் முன்' (நூ)

1081 தோடு - பூவிதழ். நோய் - காமநோய். பன்னுதல் - பலகாற் சொல்லுதல். (பி - மி.) [1]'தோழனே' (நூ)

ஒருத்தி தன்ஊடலைத் தோழியர்க்கு மறைத்துப் பாடுதல்

1082 மாடகம் [1]பற்றிய மகர வீணைதன்
தோடவிழ் மலர்க்கரஞ் சிவப்பத் தொட்டனள்
பாடின ளொருத்திதன் [2]பாங்கு ளார்களோ
டூடின துரைசெயா ளுள்ளத் துள்ளதே.

கூடல் இழைத்த ஒரு மங்கையின் செயல்

1083 குழைத்தமென் கொம்பனா ளொருத்தி கூடலை
இழைத்தன ளதுவவ ளிட்ட போதெலாம்
பிழைத்தலு மனங்கவேள் பிழைப்பி லம்பொடும்
உழைத்தன ளுயிர்த்தன ளுயிருண் [1]டில்லென.

1082 மாடகம் - வீணையின் முறுக்காணி. தொட்டனள் - தொட்டு; முற்றெச்சம். பாங்குளார் - தோழிகள். ஊடினது - தன் கணவன்பால் ஊடல் கொண்டதை. உள்ளத்து உள்ளதே - அவ்விஷயம் மனத்தினுள் இருப்பதே யாகும்; 'நோயெரி யாகச் சுடினுஞ் சுழற்றியென், னாயிதழுள்ளே கரப்பன்' (கலி. கசஉ : 51 - 2.) உரைசெயின் பாங்கியர் தன்மேல் வைத்துள்ள அன்பின் காரணமாகத் தன் நாயகனைப் பழித்தல் கூடுமென்றஞ்சி உள்ளத்திலேயே வைத்திருந்தாள். ஊடல் வருத்தம் மாறப் பாடினள்.

(பி - ம்.) [1]'பற்றினள்' [2]'பாங்கிமார்களோ' (௩௨)

1083 கூடல் : ஒருத்தி, 'நான் என் கணவனோடு கூடப் பெறுவேனேல் இருதலையும் கூடுக' என்று சொல்லிக் கண்களை மூடிக்கொண்டு மணலில் வரையும் வட்டம் கூடல் எனப்படும்; 'மின்னகு மணிவிரற்றேய வீழ்கணீர், துன்னரும் பெருஞ்சுழி யழிப்பச் சோர்வினோ, டின்னகை நுளைச்சிய ரிழைக்கு மாழிசால், புன்னையம் பொதும்பர்' (கூ. 4 : 28); 'மருகற் பெருமான் வரிற், கூடுநீயென்று கூடலிழைக்குமே' (தே. திருஞா.); 'கூடற் பெருமானைக் கூடலார் கோமானைக், கூடப் பெறுவேனேல் கூடென்று - கூடலிழைப்பாள்' (முத்தொள். 73); 'மணற் குன்றி னீத்தகன்றார் வருகென், றாழிதிருத்திச சுழிக் கணக் கோதி' (திருச்சிற். 186); 'செருவேலான், பொன்றாங் கணியகலம் புல்லப் பொருந்துமேற், குன்றாது கூடுகெனக் கூறிமுத்தாவர் மணன் மேல், அன்றாங் கணியிழையா ளாழி யிழைத்தாளே' (சீவக. 1037); 'வரிற் கூடிடு கூடலே' (நாய்ச்சியார் திரு. 4-ஆம் பத்து.) இழைத்தனள் - கீறினாள். பிழைத்தல் இல் - தவறுதல் இல்லாத. உழைத்தனள் - வருந்தினள். என - என்று கண்டோர்கூற, 'ஒருத்தி இழைத்தனள்; பிழைத்தலும் உண்டில்லென அம்பொடும் உழைத்தன ளுயிர்த்தனள்'

(பி - ம்.) [1]'டென்னவே' (௩௩)

தூதின்மேல் கணவன் வரக்கண்ட ஒரு மங்கையின் செயல்

1084 பந்தணி விரலினு ளொருத்தி பையுளாற்
சுந்தர னொருவன்பாற் றூது போக்கினுள்
வந்தன னெனக்கடை யடைத்து மாற்றினுள்
சிந்தனை தெரிந்திலஞ் சிவந்த நாட்டமே.

முன்பு ஊடிய ஒரு மாதின் செயல்

1085 உய்த்தபூம் பள்ளியி னூட னீங்குவாள்
சித்தமுண் டொருத்திதன் னன்பன் றோக்கிலான்
பொய்த்ததோர் மூரியா னிமிர்ந்து போக்குவாள்
எத்தனை யிறந்தன கடிகை யீண்டென்றுள்.

ஒருத்தியின் ஊடலுதையின் விளைவு

1086 விதைத்தமென் காதலின் வித்து [1]மெய்ந்நிறை
[2]முதைப்புன நனைத்தலின் முளைத்த [3]வேயெனப்
பதைத்தன [4]ளொருவன்மே லொருத்தி பஞ்சடி
உதைத்தலும் பொடித்தன வுரோம ராசியே.

1084 பந்து அணிவிரல் - பந்தினை அணிந்த விரல்கள். பையுளால் - பிரிவுத் துயரத்தினுல். வந்தனன் என - வந்தான் என்று சிலர் சொல்ல. கடை - முன் வாசல். மாற்றினுள் - வராமல் தடுத்தாள். அடைத்து மாற்றியது அவன் தானு வாராமல் தூதுபோக வந்தமையால். நாட்டம் - கண். (கூசு)

1085 சித்தம் - கூடவேண்டுமென்ற விருப்பம். உண்டு - அவர்களுக்கு உண்டு. மூரியால் நிமிர்ந்து போக்குவாள்; மூரிபோதல் - சோம்பலைப் போக்குதல்; பரி. உ0 : 54, கு - ரை. மூரிநிமிர்தல் - துயின்றெழுந்தவுடன் இரண்டு கைகளையும் நிமிர்த்திச் சோம்பைப் போக்குதல் (புறநா. கூஉ. 2, அடிக்.) தூக்கத்தினின்றும் அப்பொழுதுதான் எழுந்த பாவனையாக மூரி போக்கினுள் என்க. கடிகை - நாழிகை. 'எத்தனை கடிகை யிறந்தன' என்ற வினுவின் குறிப்பு, 'இவ்வளவு நேரம் புணர்ச்சியின்றி வீணுயிற்றே' என் பதாம். (கூடு)

1086 காதலாகிய வித்து. மெய் - உடல். முதைப்புனம் - பழங்கொல்லை (குறுந். 155 : 1.) பஞ்சடி - செம்பஞ்சி ஊட்டிய பாதம். பழங்கொல்லையை உதையாகிய நீர் நனைத்தலின் காதலின் வித்து முளைத்தலேயென மெய் நிறைய உரோமராசி பொடித்தன. மெய்நிறை முதைப்புனம் - உடலாகிய நிறைந்த பழங்கொல்லை என்னலும் ஆம்.

தன் நாயகியின் மிகுந்த காதலை அறிந்தவன் செயல்

1087 ஏய்ந்தபே ரெழிலினு ளொருவ னெய்தினுன்
வேய்ந்தபோ லெங்கணு மனங்கன் வெங்கணை
பாய்ந்தபூம் பள்ளியிற் படுத்த பல்லவர்
தீய்ந்தவா நோக்கினுன் [1]தளிர்க்குஞ் சிந்தையான்.

இதுவும் அது

1088 பொலிந்தவாண் முகத்தினுன் பொங்கித் [1]தன்னையு
மலிந்தபே [2]ருவகையன் மாற்று வேந்தரை
நலிந்தவா ளுழவனே நங்கை கொங்கைபோய்
மெலிந்தவா நோக்கித்தன் புயங்கள் வீங்கினுன்.

ஒரு மாதின் தனங்களின் சிறப்பு

1089 ஊட்டிய சாந்துவெந் துலரும் வெம்மையான்
நாட்டினை யளித்திநீ யென்று நல்லவர்
ஆட்டுநீர்க் கலசமே யென்ன [1]லாயதோர்
வாட்டொழின் [2]மன்னற்கோர் மங்கை கொங்கையே.

(பி - மீ.) [1]வெஞ்சிறை' [2]இதைப்புனம்', 'இதைப்புனல்' [3]தேயெனப்' [4]ளொருத்தன்மே' (கூசு)

1087 ஏய்ந்த - பொருந்திய. எய்தினுன் - போய், முற்றெச்சம்; நோக்கினுன் என்பதனைக் கொண்டுமுடியும். அனங்கன் வெங்கணை - மன்மதன் மலர்கள்; பாய்ந்த - பரவிய. 'கணை வேய்ந்தபோல் எங்கணும் பாய்ந்த பூம்பள்ளியில்' என்னலும் ஆம். படித்த - பரப்பிய. பல்லவம் - தளிர்கள். தீய்ந்தவா - கருகிப்போன விதத்தை; கருகியது தலைவியின் காம வெப்பத்தினால், சிந்தை தளிர்த்தது, அவளுடைய காதல் மிகுதியைக் கண்டதனால்.'

(பி - மீ.) [1]றினைக்குஞ்' (கூஎ)

1088 வாள் - ஒளி பொருந்திய. தன்னையு மலிந்த - தன்னையு விஞ்சிய. போய் - இயல்பு கெட்டு. மெலிந்தவா - மெலிந்த விதத்தை; புயங்கள் புணர்ச்சியின் மெலிந்தமையின் வீங்கியது. முன்கவியோடு இதனை ஒப்பிடுக.

(பி - மீ.) [1]தன்னிலும்' [2]ருவகையின்' (கூஅ)

1089 வெம்மையான் - காமவெப்பத்தை யுடையவன். 'வெம்மையனாகிய வாள்தொழில் மன்னன்' என்று கூட்டுக. ஆட்டு நீர்க்கலசம் : பட்டாபிஷேக கலசம்; இது அகில்களுக்கு உவமை. என்னலாயது - போன்றது.

(பி - மீ.) [1]லாணபோர்' [2]மைந்தற்கோர்' (கூக)

காதலன்பால் இரகசியமாகச் செல்லும் ஒரு மாதின் செயல்

1090 பயிருறு கிண்கிணி பரந்த மேகலை
[1]வயிரவெண் பூணணை வாங்கி நீக்கினள்
உயிருறு தலைவன்பாற் போக வுன்னினள்
செயிருறு திங்களைத் தீய நோக்கினள்.

ஒருத்தி தன் காதலனை மாலையாற் பிணித்தல்

1091 ஏலுமிவ் [1]வன்மையை யென்னென் றுன்னுதும்
ஆலிமென் [2]கருப்பனை னெருவற் காங்கொரு
சோலிமென் குயிலனள் சுற்றி வீக்கிய
மாலையை நிமிர்த்தில வயிரத் தோள்களே.

ஒருத்தி குறிப்பினள் தன் தோழியைத் தூதுவிடல்

1092 சோர்குழ லொருத்திதன் வருத்தஞ் [1]சொல்லுவான்
மாரனை நோக்கிமீயார் மாதை நோக்கினள்
காரிகை யவளிவள் கருத்தை நோக்கியோர்
வேரியந் தெரியலான் வீடு நோக்கினள்.

1090 பயிர் - ஒலி. கிண்கிணி - காலணி விசேடம். கிண்கிணியையும் மேகலையையும் பூண்களையும். வாங்கி - கழற்றி. நீக்கினது, தான் தலைவன்பால் செல்லும்போது பிறர் காணும்படி இவை ஒலிக்கும் என்று அஞ்சி. 'பூஞ்சிலம் பார்ப்பறச், சுரந்து தம்முயிர்க் காதலர் பாற்சொல்வார்' (நைடத. நகரப். 29.) செயிர்உறு - குற்றமுள்ள. ஒளிவீசித் தான் செல்வதைப் பிறர்க்குப் புலப்படுத்தலின் திங்களைத் தீய நோக்கினள்.

(பி - மி.) [1]'வயிரவான்', 'வயிரமென்', 'வயிரவெண்' (சா0)

1091 ஏலும்-அமைந்த. வன்மை-மாலைப்பிணிப்பின் வலுவை. இளமை என்ற பாடத்திற்குத் தலைவனது இளமை என்பது பொருள். ஆலிமென் கரும்பனன்; 'ஆலிநீண் கரும்பன்னவன்' (பெருமாள். 7 : 1) கரும்பு அனன் - தலைவிக்குக் கரும்பு போன்று இனியவன். மீறி நிமிரவில்லை. தோள்கள்: எழுவாய். ஆடவரை மாலைபாற் கட்டுதல்: 'கங்குள்பாற் புகுந்த கள்வ னிவனெனக் கதுப்பிற் சூழ்ந்த, தொங்கலான் முன்கை யாத்து' (சீவக. 1988.)

(பி - மி.) [1]'விளமையை', 'வண்மையை' [2]'கரும்பென வாசம் வீசு தோட்', 'கரும்பிலா வொருவற்', (சா0)

1092. குழல் சோர்ந்தமை வருத்தத்தால். சொல்வதற்காக மாரனை நோக்கி ஓர் மாதை நோக்கினள், சித்திரத்திற் றீட்டப் பெற்ற மன்மதன்

ஒரு மங்கை கணவன் பாற்செல்லல்

1093 சினங்கெழு வேற்கையோர் செம்மல் பாலொரு
கனங்குழை மயிலனுள் கடிது போயினுள்
மனங்குழை நறவமோ மாலை தான்கொலோ
அனங்கனே யார்கொலோ வழைத்த தூதரோ.

ஒரு மாதின் வருத்தமும் மகிழ்ச்சியும்

1094 தொகுதரு [1]காதற்குத் தோற்ற சீற்றத்தோர்
வகிர்மதி வெற்றியாண் மழைக்க ணுலிவந்
துகுதலு முற்றதென் னென்று கொற்றவன்
நகுதலு நக்கன ணுணு [2]நீக்கினுள்.

புல்லிய கையை மனையாள் நீத்து விட்ட ஓர் ஆடவன் நிலை

1095 பொய்த்தலை மருங்குல் லொருத்தி புல்லிய
கைத்தல [1]நீத்தவன் கருத்தை நோக்கினுள்
சித்திரம் போன்றவச் செயலொர் தோன்றற்குச்
சத்திர மார்பிடைத் தைத்த தொத்தமே.

உருவத்தைப் பார்த்து விட்டு அருகிலிருந்த ஒரு சேடியை நோக்கினுள். காரிகையவள் - அழகியாகிய அந்தச் சேடி. இவள் கருத்தைக் குறிப்பாற் கண்டு கொண்டு. வேரியம் தெரியல் - நறுமண முள்ள அழகியமாலை. வீடு நோக்கினுள் - வீட்டுக்கு அவனை அழைத்து வாச் சென்றுள். எவாமற் குறிப்பறிதல் : 779. (பி - ம்.) [1]'சொல்லுவாள்' (சஉ)

1093 'சினங்கெழு' என்பது இங்கே வேலுக்கு அடை. உடையான் றொழில் உடைமைமேல் நின்றது. மனம் குழை - மனத்தைக் குழையச்செய் யும். மாலை-மாலைக்காலம். யார் கொலோ - வேறு எவரோ, காமோத்தீபனத் தைத் தருவதால் கள்ளும் மாலைப்போதும் மன்மதனும் தூதாகக் கருதப்பட் டமை காண்க. (சங)

1094 தொகுதரு - நிறைந்த. சினம் காதலுக்குத் தோற்றுப்போதல் : சீவக. 758. ந.,'காமன் றன்றிறத் தையுங் கடந்தது சீற்றத்தின் றகைமை', 'பிளந்து தின்பனென் றுடன்றவன் பெயர்ந்தனன் பெயரான், இளர்ந்த சீற்றமுங் காதலு மெதிரெதிர் நிடைப்ப' (கு. 4 : 60 - 61.) காதலின் வெற்றி : 1111. வகிர்மதி - பிளவுபட்ட சந்திரன் : என்றது எட்டாம் பிறையை. (பி - ம்.) [1]'கலவிக்குத் தோற்ற சீற்றத்தால்' [2]'நீங்கினுள்' (சச)

1095 பொய்த்தலை மருங்குல் - உண்டென்பதனைப் பொய்யாக்கும் (அவ்வளவு நுண்ணிய) இடை என்றபடி. புல்லிய - கணவனைத் தழுவிய. நோக்கினுள் - ஆராயலானுள். புணர்ச்சி நிகழும்போது தலைவனது கருத்தை

ஒருத்தி நாணத்தாற் பாங்கியைத் தூது போக்காமல் விம்மினமை

1096 மெல்லிய லொருத்திதான் விரும்புஞ் சேடியைப்
புல்லிய கையினள் போதி தூதெனச்
[1]சொல்லுதற் கிசைந்துபின் ணிச் சொல்லலள்
எல்லியில் பொழுதெலா மிருந்து விம்மினள்.

தன்கணவன் செய்கையைத் தோழிக்கு அறிவிக்க முயன்ற ஒரு பெண்ணின் செயல்

1097 ஊறுபே ரன்பினு ளொருத்தி [1]தன்னுயிர்
[2]மாறிலாக் காதலான் [3]செய்கை மற்றொரு
நாறுபூங் கோதைபா னவில நாணுவாள்
வேறுவே றுறச்சில மொழிவி ளம்பினள்.

ஆராய வேண்டியதில்லையாக, இவள் ஆராய முற்பட்டது கள்வெறியினால் என்க. சித்திரம் போன்ற - விசித்திரமான். சத்திரம் - ஆயுதம். புணர்ச்சிக்கு இடையூறு வந்ததே என்ற மனப்பிணால் அவள் செயல் சஸ்திரம் தைத்ததை ஒத்தது. (பி – மீ.) [1]'நீக்கினள் கருதி நோக்கிலள்' (சசு)

1096 காமத்தைத் தெரிவிக்க நாணல் : 'தாமுறு காமத் தன்மை தாங்களே யுரைப்பதென்ப. தாமென லாவதன்ரு லருங்குல மகளிர்க்கம்மா' (கூ. 5. 45); 'கன்னிய ருற்றநோய்.....அஃதின்னதென் றுரையலர் நாணின்' (சீவக. 1028); 'தெரிவை யர்க்குளங் கூசு மாசைநோய் கூறுகிற்ப தென், றெறம் மனோர்களுஞ் சொல்வர்' (வி. பா. வேத்திர. 5.)

(பி - பீ.) [1]'சொல்லுவா னுன்னுவாள்' (சசு)

1097 ஊறு - மேன்மேலும் பெருகுகின்ற. காதலன் செயலைத் தலைவி மறைத்தல் : 1082 ; 'தன்னெவ்வங் கூரினு நீ செய்த வருளின்மை, என்னையு மறைத்தாளென் ரோழியது கேட்டு, நின்னையான் பிறர் முன்னர்ப் பழிகூற ரூணி' (கலி. சச : 8 - 10.)

(பி - மீ) [1]'யாங்கொரு' [2]'வேறிலாக் காதலன் விளைவை வேறொரு' [3]'செவ்வி', 'செலவை' (சள)

இருவர் காதலர் தம்முள் தழுவியமை

1098 உருத்தெரி தன்மையு முயிரு மொன்றுதம்
அருத்தியு மத்துணை யாய தன்மையால்
ஒருத்தியு மொருவனு முடலு மொன்றெனப்
பொருத்தின ரிவரெனப் புல்லி ஞரோ.

காதலி வணங்கக் காதலன் அஞ்சுதல்

1099 வெதிர்பொரு தோளினு ளொருத்தி வேந்தன்வந்
தெதிர்தலுந் தன்மன மெழுந்து முன்செலக்
கதுமெனக் கையுற வணங்கி ஞளது
புதுமைய தாலவற் கச்சம் பூத்ததே.

ஒருத்திக்குக் கள்ளும் இரவும் துன்பம் விளைத்தமை

1100 தனிவரு நலத்தொடுஞ் சோர்கின் றுளொரு
குனிவரு நுதலிக்குக் கொழுந னின்றியே
தனிவருந் தோழியுக் [1]தா யுமொத்தன
[2]இனியபூந் தேறலு மிரவு [3]மென்பவே.

1098 உருத்தெரி தன்மை ஒன்று - ஒத்த அழகு என்றபடி. இருவர்க்கும் உயிர் ஒன்று : 'காகத் திருகண்ணிற்கொன்றே மணிகலந் தாங்கிருவர், ஆகத்து ளோருயிர் கண்டனம் யாம்' (திருச்சிற். 71); 'ஒருயிராக உணர்க வுடன் கலந்தார்க்கு' (பு. வெ. : 262.) 'காவிபோற் கண்ணிக்குங் கண்ணி யந் தோட் காளைக்கும், ஆவிபோ லாடையுமொன் றுயதே' (நள. உ :86); 'ஒருயிரிரண்டு மெய்யா யுருகுவார்' (வி. பா சம்பவ. 91) அருத்தி - ஆசை. இருவருக்கும் ஆசை வகையும் ஒன்று 'அருத்தியும் ஒன்று' என்பதில் 'கருத் தொரு தன்மையது' என்பது அடங்கு மாதலாலும், மோனே இருப்பதாலும் 'உருத்தெரி தன்மையும்' என்ற பாடமே சிறந்தது. தலைவனும் தலைவியும் ஒருடம்பு ஆதல் : 'நஞ்சூற்ற காமநனி நாகரிற் றுய்த்த வாறும்' என்ற மூலத்தையும் அதற்கு நச்சினர்க்கினியர் எழுதிய, 'நாகரோடு உவமை ஒருடம்பு ஆதலும் நீங்கல் வன்மையும் பற்றி' என்ற விசேட வுரையையும் காண்க; சீவக. 11; 'ஈருடலே யோருடலா யிசைவிப்ப தென்னம்பே' (பாசைவதைப்பரணி.) (சஅ)

1099 வெதிர்பொரு - மூங்கிலை ஒத்த. மனம் முன் எழுந்து செல்ல - வேட்கை மிகுதியாக என்றபடி. கதுமென - விரைவாக. கையுற - இருகை களும் பொருந்த. புதுமையது - முன் ஒருகாலும் இல்லாதது. வணங்கியது கள்வெறியினால். அச்சம் பூத்தது. இவள் நம்மால் இயலாத ஒன்றைக் கேட் கப் போகிறளோ என்று எண்ணியதனால். (சக)

1100 தனிவரு நலத்தொடு - ஊடலினால் வரும் இன்பத்தோடு. சோர்தல் கணவன் இன்னமும் வரவில்லையே என்ற எண்ணத்தால். குனி

ஒருத்தி தூதனுப்பித் தன்வசம் இழத்தல்

1101 ஆக்கிய காதலா லொருத்தி யந்தியுள்
தாக்கிய தெய்வமுண் டென்னுந் [1]தன்மையள்
நோக்கின [2]ணினறன [3]ணுவன்ற கேட்கிலள்
போக்கின தூதினே டுணர்வும் போக்கினள்.

கணவன் வரவை எதிர்பார்க்கும் ஒரு பெண்ணின் செயல்

1102 மறப்பிலள் கொழுநனே வரவு நோக்குவாள்
பிறப்பினே டிறப்பெனப் [1]பெயருஞ் சிந்தையாள்
துறப்பரு முகிலிடைத் தோன்று மின்னெனப்
புறப்படும் புகுமொரு பூத்த கொம்பனாள்.

தோழியைத் தூது செல்ல விரும்பிய ஒரு மாதின் செயல்

1103 எழுதருங் கொங்கைமே லனங்க னெய்தவம்
புழுதவெம் புண்களில் வளேக்கை யொற்றினாள்
அழுதனள் சிரித்தன ளற்றுஞ் [1]சொல்லலள்
தொழுதன லொருத்தியைத் தூது வேண்டினாள்.

வருந்துதலி - வளேந்த நெற்றியை யுடையவள். தனிவரும் - தூது சென்று தனியே மீண்டு வரும். 'கணவனில்லாதபோது பருகுவார்க்குக் காமத்தை எழுப்பி வருத்துவது தேறல். பிரிவுக் காலத்தில் வருத்தும் பொருள்களில் இரவும் ஒன்று. தேறலும் இரவும் வருத்துதலில் தோழியையும் தாயையும் ஒத்தன.

(பி - மீ.) [1]'தாயை யொத்தனள்' [2]'இனிவருதென்றலு' [3]'மென்னவே' (ருo)

1101. ஆக்கிய - கணவன் உண்டாகிய. அந்தி - பிற்பகலும் இரவும் கலக்கும் நேரம். தாக்கிய தெய்வம் - சூர். என்னும் - என்றுபிறர் கூறும். நுவன்ற - பிறர் சொன்ன சொற்களே.

(பி - மீ.) [1]'தன்மையால்' [2]'னின்றவர்' [3]'நுவன்று கேள்வனிற்' (ருக)

1102. பெயரும் சிந்தையாள் - நிலேமாறும் மனத்தையுடையவள். பிறப்பும் இறப்பும் மாறி மாறி வருதல், தலேவி கணவன் வருவான் என வும் வாரானெனவும் மாறி மாறி நினேத்தலுக்கு உவமை. துறப்பு அரு முகில் - நீக்குவதற்கு அரியமேகம்; உலகிற்கு இன்றியமையாத மேகம் என்றபடி. தலேவிக்கு மின்னலும் கூடாத்திற்கு மேகமும் உவமை.

ஒப்பு : 'வருவார் கொழுந னெனத் திறந்தும் வாரார் கொழுந ரென வடைத்தும், திருகுங் குடுமி விடியளவும் தேயுங் கபாடந் திறமிலே' (கலிங்கத். உ.) (பி - மீ.) [1]'பிறழுஞ்' (ருஉ)

1103. எழுத அரும் கொங்கை - அழகிய கலேகள்; எழுதரும் - எழு கின்ற 'எனினும் ; ; 'தீட்டரு மேனி' (உ. 11 . 34) என்பதுபோல். கை

இதுவும் அது

1104 ஆர்த்தியு முற்றது மறிஞர்க் கற்றந்தான்
வார்த்தையி னுணர்த்துதல் [1]வறிதன் றேமனம்
வேர்த்தனள் வெதும்பினண் மெலிந்து சோர்ந்தனள்
பார்த்தன ளொருத்திதன் பாங்க ளாளையே.

மன்மதனும் மதுவுண்டவன் என்பது

1105 தனங்களி னிளையவர் தம்மின் மும்மடி
[1]கனங்களி யிடையிடை களிக்குங் கள்வனுய்
மனங்களி னுழைந்தவர் மாந்து தேறலே
அனங்கனு மருந்தினு ணுதல் வேண்டுமே.

வேறு

புணர்ச்சியின் தொடக்கத்தில் ஆடவரின் செயல்

1106 நறைகம ழலங்கன் மாலை
நளிநறுங் குஞ்சி மைந்தர்
துறையறி கலவிச் செவ்வித்
தோகையர் தூசு வீசி

ஒற்றல் தினவைத் தணிப்பதற்காக. அற்றம் - சோர்வை. மது மயக்கத்தினுற் சொல்லமாட்டாள். (பி - மீ.) [1]'சொல்லினள்' (நாக)

1104. ஆர்த்தி - காமநோய். உற்றதும் - அதனுல் வந்த துன்பத்தையும். அற்றம் - வருத்தத்தை. வறிது - வீண். ஆர்த்தியும் உற்றதுமாகிய அற்றம் அறிஞர்க்கு வார்த்தையால் தான் உணர்த்த வேண்டுவதில்லை. குறிப்பால் அவராகவே அறிந்து கொள்ளுவர். பாங்களாளை ஒருத்தி பார்த்தனள். பார்த்த குறிப்புத் தலைவனிடம் தூது சென்று வருக என்றதாகும்; 'முகநோக்கி நிற்க வமையு மகநோக்கியுற்ற துணர்வார்ப் பெறின்' (குறள். 708.) (பி - மீ.) [1]'அரிதன்றே' (நாச)

1105. தனங்களின் - கதிர்களையுடைய. இளையவர் தம்மின் - பெண்களைக்காட்டிலும். மும்முடி-மூன்று மடங்கு. கனம் களி - மிகுந்த களிப்பை. நுழைதர - மனங்களில் நுழைவதனுல். நுழைதல் காமநோயை எழுப்ப. மாந்து - அப்பெண்கள் பருகிய. அனங்கனும் நுழைதர அருந்தினுன் ஆதல் வேண்டும். (பி - மீ.) [1]கனங்களமிடை' (நாஎ)

1106. நாளி - செறிவு. குஞ்சி - ஆண்களின் தலைமயிர். துறை காரணங்களின் வகை. கலவிச் செவ்வித் தோகையர் - கலவிக்கு உரிய பக்குவ மடைந்த பெண்கள். தூசு வீசி - ஆடைகளைக் களைந்து வீசி எறிந்து விட்டு. புல்லும் - சூழ்ந்துள்ள. கலன் - மேகலை முதலியன. 'பொன்னருங் கலனும்

நிறையக லல்குல் புல்குங்
[1]கலன்கழித் தகல நீத்தார்
அறைபறை யனைய நீரா
ரருமறைக் காவ லோதான்.

காமமும் துறவும் ஒன்று எனல்

1107 பொன்னருங் கலனுந் தூசும்
புறத்துள துறத்தல் [1]போக
நன்னுத லொருத்தி தன்பா
லகத்துள நாணு நீத்தாள்
உன்னருந் துறவு பூண்ட
[2]வுரனுடை யொருவ னேபோல்
தன்னையுந் துறக்குந் தன்மை
[3]காமத்துந் தங்கிற் றன்றே.

கலவிப் போரின் சிறப்பு

1108 பொருவரு மதனன் போல்வா
ளொருவனும் பூவின் மேலத்
திருவினுக் [1]குவமை யன்ற
ளொருத்தியுஞ் சேக்கைப் போரில்
ஒருவருக் கொருவர் தோலா
தொத்தன ருயிரு மொன்றே
இருவர்த முணர்வு மொன்றே
[2]யென்றபோ தியாவர் வெல்வார்.

தூசும் புறத்துள துறத்தல் போக' (1107.) அறை பறை அனைய நீரார் - அறையப்படும் பறையை ஒக்கும் தன்மையர்; குறள், 1076. மறை - இரகசியம். இரகசியங்களை யாவர்க்கும் வெளியிட்டுவிடுவோரை ஒக்கும் மேகலை என்றபடி. (பி - ம்.) [1]'கலைநெகிழ்த்', 'கலையொழித்' (1107)

1107 வம்போ (பி - ம்.) புதுமையோ. நாணும் : உயிரினும் சிறந்த நாணத்தையும்; உம் : சிறப்பும்மை. உரன் - மனவலிமை. 3 - 4 காமி - துறவுபூண்ட ஒருவனுக்கு உவமை.

(பி - ம்.) [1]'வம்போ' [2]'வுணர்வுடை' [3]'காமத்தே' (1107)

1108 சேக்கைப்போர் : 1056, குறிப். உயிருமுணர்வும் ஒன்றே: 1098.
(பி - ம்.) [1]'குவமைசெய்யா' [2]'யாவரே வெல்லவல்லார்' (1108)

ஊடலில் உதைத்தவரின் கோப மிகுதிக்குக் காரணம்

1109 கொள்ளைப்போர் வாட்க ணுளைங்
கொருத்தி யோர் குமர னன்னுன்
[1]வள்ளத்தா ரகலந் தன்னே
மலர்க்கையான் மறைப்ப நோக்கி
உள்ளத்தா ருயிர ணுண்மே
லுதைபடு மென்று [2]நீர்நுங்
கள்ளத்தாற் [3]புதைத்தி ரென்னு
முன்னேயிற் கனன்று மிக்காள்.

ஓராடவன் தன் காதலியைக் கண்ணுற் கண்டு இன்பமுறல்

1110 பாலுள பவளச் செவ்வாய்ப்
[1]பணைமுலை நிகர்த்த வேய்த்தோள்
வேலுள நோக்கி ணுளோர்
மெல்லியல் வேலை யன்ன
மாலுள சிந்தை யாணுர்
மழைவளர் தடக்கை யாற்கு
மேலுள வரம்பை மாத
ரென்பதோர் விருப்பை யீந்தாள்.

1109 வள்ளம் தார் அகலம் - வளப்பமுள்ள மாலையை யணிந்த மார்பு. வள்ளம் = வளம்; விரித்தல் விகாரம். குமரன் அகலந்தன்னை மறைப்ப ஒருத்தி நோக்கி; மறைத்தமை அவள் ஊடலில் உதைக்குங்கால் தன் மார்பில் அணிந்துள்ள முத்துக்கள் முதலியன அவளுடைய பாதங்களில் பட்டு உறுத்தாதிருக்கும் பொருட்டு. உயிரணுள் என்றது - இவன் இரகசியமாகக் காதலித்து உள்ளத்தில் வைத்திருக்கும் ஒருத்தியை. ஊடலுதை ; 1086. கனன்று மிக்காள் - மிக்குக் கோபங் கொண்டாள். விகுதி பிரித்துக் கூட்டுக.

ஒப்பு : 'சிலைமலி வாணுத லெங்கைய தாக மெனச்செழும்பூண், மலை மலி மார்பி னுதைப்பத் தந்தான்றலை.....காரிகை கண்மூத்த மாலை கலுழ்ந் தனளே' (திருச்சிற். 397.)

(பி - மீ.) [1]'வள்ளற்ருர்' [2]'நீநின்.....புதைத்தாயென்' [3]'மறைத்தா யென்னக் காரிகை கனல்வதாணுள்.' (இக)

1110 பால் உள வாய் - பாலின் சுவையையுடைய வாய். நிகர்த்த - ஒன்றை ஒன்று ஒத்த. வேய் - மூங்கில். வேலை அன்னமால் - கடலை ஒத்த

வேறு

வெகுளியைச் சிருங்காரம் வென்றது

1111 புனத்துறை மயிலனாள் கொழுநன் பொய்யுரை
நினைத்தனள் சீறுவா ளொருத்தி [1]நீடிய
[2]சினத்தினைக் காதலன் சேக்கைப் போரிடை
மனத்துறை காதலே வாகை கொண்டதே.

ஒரு காதலி தன் கணவன் முதுகை நோக்கல்

1112 கொலையுரு வமைந்தெனக் கொடிய நாட்டத்தோர்
கலையுரு வல்குலாள் கணவற் புல்லுவாள்
சிலையுரு வழிதரச் [1]சிறந்த மார்பிற்றன்
முலையுரு வினவென முதுகை நோக்கினாள்.

புணருங்கால் நிகழ்ந்தவை

1113 குங்கும முதிர்ந்தன கோதை சோர்ந்தன
சங்கின முரன்றன கலையுஞ் சாறின
பொங்கின சிலம்புகள் பூச லிட்டன
மங்கைய ரிளநல மைந்த ருண்ணவே.

காதல்; 'காதல் தானுங் கடலினும் பெரிதே' (நற். கசுசு : 10); 'கடலன்ன காமம்' (குறள் 1137.) மழை - கார்மேகம். கொடைபற்றி மேகம் கைக்கு உவமை அரம்பை மாதர் கண்ணால் இன்பம் நுகர்தற்கு உரியவர்; சீவக. 222, 352, ந. (பி - ம்.) [1]'பல்வளை பணைத்த வேய்த்தோள்' (சுo)

1111 காதலன் சேக்கைப் போர் - காதலனுடன் செய்த கலவிப்போர்; 1056, குறிப். வாகை கொண்டது - வெற்றி பெற்றது ஒப்பு. 1114. (பி - ம்.) [1] நீட்டிய' [2]'சினத்தொடு காதலன் செய்த' (சுக)

1112 கொலை உரு அமைந்தன - கொலைத் தொழில் உருவெடுத்து வந்தாற் போன்ற. கலை உருவு - ஆடையை உருவித் தோன்றுகின்ற. சிலை உரு அழிதர - மலை தன் அழகு கெடும்படி. முதுகை நகில் உருவிச் சென்றதென்று நோக்கினாள்.

மு. "துப்புறச் சிவந்த வாயா டியபஞ் சணையின் மீதில் ஒப்புறக் கணவனோடேயோர்லீலை செய்யும் போது, கற்பகஞ் சேர்ந்த மார்பிற் கனதன மிரண்டுந்தைத்தே. அப்புற முருவிற் றென்றே யங்கையாற் றடவிப் பார்த்தாள்" (விவேகசிந். 70.) (பி - ம்.) [1]'செறிந்த' (சுஉ)

1113 சங்கினம் - கை வளையல்கள். முரலல் - ஒலித்தல். கலை - ஆடைகள். சாறின - நழுவின; திருப்புகழ். 790. இளநலம் - புதிய இன்பம். உண்ணல் - அனுபவித்தல். (சுங)

புணர்ச்சிக்குப் பொய்க்கனவு உதவியது

1114 துனியுறு புலவியைக் காதற் சூழ்சுடர்
பனியெனத் துரத்தலும் பதைக்குஞ் சிந்தையாற்
புனையிழை யொருமயில் பொய்யு றங்குவாள்
கனவெனு நலத்தினாற் கணவற் புல்லினாள்.

காதலர்இருவர் புணர்ச்சியில் மூழ்கினமை

1115 வட்டவாண் முகத்தொரு மயிலு மன்னனும்
கிட்டிய போதுடல் கிடைக்கப் புல்லினார்
விட்டிலர் கங்குலின் விடிவு கண்டிலர்
ஒட்டிய வுடல்பிரிப் புணர்கி லாமையால்.

இராப்பொழுது நீங்கினமை

1116 அருங்[1]களி மால்களி றனைய வீரர்க்கும்
கருங்குழன் மகளிர்க்குங் கலவிப் பூசலால்
நெருங்கிய வனமுலை சுமக்க நேர்கலா
[2]மருங்கெனத் தேய்ந்தது மாலைக் கங்குலே.

1114 துனியுறு புலவி - வருத்தம் தரும் ஊடல். காதல் சூழ்சுடர் - காதலாகிய கிரணங்கள் சூழ்ந்த சூரியன். புலவிக்குப் பனியும் காதலுக்குச் சூரியனும்.

கனவின் நலமாவது தான் அஞ்சினாள் என்று கூறுவதற்கு அது காரணமாக இருத்தலாம். 4 : 'கலவியின் வேட்கை தூண்டக் கனவினில் வெருவினாள் போல், முலைமுகடழுந்த வேந்தன் முழவுத்தோள் புல்லினாளே' (நைடத. மணம். 43.) ஒப்பு. 1111. (சுச)

1115 கிட்டிய போது - நெருங்கிய சமயத்தில். உடல் கிடைக்க : ஒருவருக்கு ஒருவர் உடல், மற்றவர் உயிர். உயிர் உடலைப் புல்லியது போல் புல்லினார் என்க. (சுரு)

1116 பூசல் - போர். வனம் - அழகு. மாலைக் கங்குல் - மாலை நேரத்துடன் தொடங்கும் இரவு.

(பி - ம்.) [1]'களியார்' [2]'மருங்குல் போற்' (சுசு)
சில பிரதிகளில் இதன் பின்,
'அரம்பைய ரினுமிவ ராட னன்றெனப்
புரந்தரன் கலவியின் பூச னோக்கிவான்
நிரம்பிய கண்களை முகிழ்த்து நீணகர்
கரந்தது கடுத்துடுக் கணங்கண் மாண்டவே'
என்ற செய்யுள் காணப்படுகிறது.

சந்திரன் மறைவும் சூரியன் தோற்றமும்

1117 கடையுற நன்னெறி காண்கி லாதவர்க்
கிடையுறு திருவென விந்து [1]நந்திஞன்
படர்திரைக் கருங்கடற் பரமன் மார்பிடைச்
சுடர்மணி [2]யாமென விரவி தோன்றினன்.

1117 கடையுற - முடிவு வரையிலும் என்றபடி. இடை உறு திரு என்றது நீடித்திராமல் திரு அழிதலைக் குறிக்கும். இந்து – சந்திரன். நந்தல் - குன்றல், அஸ்தமித்தல். சூரியனுக்குத் திருமால் மார்பிலுள்ள கவுத்துவம்; 'வாளிரவி - பொன்னகலம். தங்கு கவுத்துவம்போ லுந்தித் தடமலர் போல், அங்க ணுலகளந்தாற் காம்' (நண்டி சூ. 41, மேற்); 'தனது மகட் கின்பமணம் புணர்த்த, தாய்ந்து திருமருக ஞகத்தே - தோய்ந்த - கனமணி வாங்கிக் கடல் கொடுப்ப தென்னத் தினமணி வந்துதயஞ் செய்ய' (திரு வாரூருலா, 37 - 8.) (சுஎ)

(பி - ம்) [1]'நீங்கினன்' [2]'யரசென'

உண்டாட்டுப் படலம் முற்றும்

18. எதிர்கோட் படலம்

தசரதன் பரிவாரங்களுடன் கங்கையை அடைதல்

1118 அடாநெறி யடைதல் செல்லா வருமறை யறைந்த நீதி
விடாநெறிப் புலமைச் செங்கோல் வெண்குடை வேந்தர் வேந்தன்
[1]படாமுக மலையிற் றோன்றிப் பருவமும் றருவி நல்கும்
கடாநிறை யாறு பாயுங் கடலொடுங் கங்கை சேர்ந்தான்.

ஆறு வற்றிப்போகச் சேனை நீரைக் குடித்தல்

1119 கப்புடை நாவி னுக ருலகமுங் கண்ணிற் றோன்றத்
துப்புடை மணலிற் றூங்கிக் கங்கைநீர் சுருங்கிக் காட்ட
அப்புடை யனிக வேலை யகன்புனன் முகந்து மாந்த
உப்புடைக் கடலுந் தெண்ணீ ருண்ணசை யுற்ற தன்றே.

சனகன் செயலைக் கூறுவோம் எனல்

1120 ஆண்டுநின் றெழுந்து போகி யகன்பணை மிதிலை யென்னும்
ஈண்டுநீர் நகரின் பாங்க ரிருநிலக் கிழவ னெய்தத்
தாண்டுமாப் புரவித் தானைத் தண்ணளிச் சனக னென்னும்
தூண்டரு வயிரத் தோளான் செய்தது சொல்ல லுற்றும்.

1118 அடாநெறி அடைதல் செல்லா வேந்தன் - நெறியையும் புலமையையும் கோலையும் குடையையும் உடைய தசரதன். படாம் முகமலை - யானை; வெளிப்படை. பருவம் உற்று - கார்ப்பருவம் வந்து; தக்கபிராயம் அடைந்து. கடாம் நிறை ஆறு - மதஜலம் நிறைந்த பிரவாகத்தை. கடல் என்றது சேனைக்கடலை. மலைகளுக்கு யானைகளும் ஆறுகளுக்கு மதநீரும் கடலுக்குச் சேனையும். ஆற்றிற் கடல்பாய்ந்தது என்பது ஒரு நயம்.

(பி - ம்.) [1]'படாமுகப் பணைக்கை நால்வாய்ப் பாகடும் சிற்றத் துப்பிற்' (க)

1119 கப்புடைநா - பிளவுபட்ட நாக்கு. நாகருலகமும் தோன்றும் கங்கை: 'எற்பொரு நாகர்த மிருக்கை யீதெனக், கிற்பதோர் காட்சியது' (சு. 1 : 6); ஆழத்தின் மிகுதி கூறியபடி. துப்பு - தூய்மை. அப்பு உடை அனிகவேலை - அம்புகளையுடைய சேனைக்கடல்; அப்பு - நீர்; என்பது தொனி. அகன்புனல் - பரந்துள்ள அந்தக் கங்கையின் நீரை. தெண்ணீர் உண்நசை - அந்தத் தெளிந்த கங்கையின் நீரை உண்ணும் விருப்பத்தை. நசை உறக் காரணம் கங்கையில் சேனைக்கடல் உண்டதனால் நீர் வறண்டுபோனமையின். கடல் கங்கையை உண்டது என்பது ஒரு நயம். (உ)

1120 பணை - வயல்கள். ஈண்டு நீர் - மிக்க நீரையுடைய. நிலக்கிழவன் - தசரதன். தூண்தரு - தூணையொத்த. (ங)

சனகன் தசரதனை எதிர் கொள்ள எழுதல்

1121 வந்தன னரச னென்ன மனத்தெழு முவகை பொங்கக்
கந்தடு களிறுந் தேருங் கலினமாக் கடலுஞ் சூழச்
சந்திர னிரவி தன்னைச் சார்வதோர் தன்மை தோன்ற
இந்திர திருவன் றன்னை யெதிர்கொள்வா னெழுந்து வந்தான்.

இருவர் சந்திப்பின் வருணனை

1122 கங்கைநீர் நாடன் சேனை மற்றுள கடல்க ளெல்லாம்
சங்கின மார்ப்ப வந்து சார்வன போலச் சாரப்
பங்கயத் திருவைத் தந்த பாற்கட லெதிர்வ தேபோன்
மங்கையைப் பயந்த மன்னன் [1]வளநகர் வந்த தன்றே.

வேறு

தசரதனது சேனையின் சிறப்பு

1123 இலகுலா வயிலினு னனிகமே ழெனவுலாய்
நிலகுலா மகரநீர் நெடியமா கடலெலாம்
அலகின்மா களிறுதேர் புரவியா ளெனவிராய்
உலகெலா நிமிர்வதே பொருவுமோ [1]ருவமையே.

1121 கலினமா - குதிரை; கலினம் - கடிவாளம். சூரிய வமிசத்துத் தசரதருக்குச் சூரியன் உவமை. சனகன் சந்திர வமிசத்தவன்: 1203, 1228, 1231. சனகனிலும் தசரதன் பெருமை வாய்ந்தவன் என்பது தோன்ற இரு வருக்கும் சந்திர சூரியரை உவமை கூறினர் என்னலும் ஆம். இந்திர திருவன் - தசரதன்; 331; 'வியனில மாளும், இந்திர திருவன்' (சிலப். உசு: 94 - 5.) (சு)

1122 கங்கைநீர் நாடன் - தசரதன்; சரயுவே கோசலத்தின் நதியாயி னும் தசரதன் இப்பெயராற் பல இடங்களிற் குறிக்கப் பெறுகிறான். மற்றுள கடல்கள் - பாற்கடல் ஒழிந்த உவர்நீர், கருப்பஞ்சாறு, கள், நெய், தயிர், நன்னீர் என்னும் ஆறு கடல்கள். சங்கினம் ஆர்த்தல் கடலுக்கும் சேனைக் கும் பொது. வளநகர்: ஆகுபெயர். சீதையைப் பெற்ற சனகன் சேனைக்குத் திருவைப் பெற்ற பாற்கடல். (பி - மீ.) [1]'சேனைவந் தெதிர்ந்த' (நி)

1123 இலகுலாவு-இலையைப் போன்ற; சீவக; 328. எழு என உலாய் - எழுகடல்கள் என்று வழங்கி உலாவி. நிலகுலாம் - நிலைபெற்றுள்ள. மகர நீர் - சுறுமீன்கள் வசிக்கின்ற நீர். எழுகடல்களும் கரிபரிதேர் காலாள் என்று விரவி உலகமெங்கும் பரவுவதைத் தசரதன் சேனை ஒக்கும்.

இது முதல் சிலகவிகள் இடத்துக்கு ஏற்ற சந்தம் உடையன.

(பி - மீ.) [1]'ருவகையே' (சு)

இதுவும் அது

1124 தொங்கல்வெண் குடைதொகைப் பிச்சமுட் படவிராய்
எங்கும்விண் புதைதரப் பகன்மறைந் [1]திருள்செயப்
பங்கயஞ் செய்யவும் வெளியவும் பலபடத்
தங்குதா மரையுடைக் கானமே சாலுமே.

இதுவும் அது

1125 கொடியுளா ளோதனிக் குடையுளா ளோகுலப்
படியுளா ளோகடற் படையுளா ளோபகர்
மடியிலா வரசிஞன் மார்புளா ளோவளர்
முடியுளா ளோதெரிக் துணர்கிலா முளரியாள்.

ஒலிகளின் மிகுதி

1126 வார்முகங் கெழுவுகொங் கையர்கருங் குழலுள்வண்
டோர்முழங் கரவமே ழிசைமுழங் கரவமே
தேர்முழங் கரவம்வெண் டிரைமுழங் கரவமே
கார்முழங் கரவம்வெங் கரிமுழங் கரவமே.

1124 தொங்கல் - மயிற்பீலி. பிச்சம் – பீலிக்குடை. இருள்செய: 875. செய்யவும் வெளியவும் - செந்தாமரையும் வெண்டாமரையும். தாமரைக் கானம் : 205. சாலும் - போலும். போன்றது சேனை என்க.

(பி - மீ.) [1]'திருளெழப்' (எ)

1125 குலப்படி - குலத்திற்கு உரிமைப்பட்டுவரும் இராச்சியம்; படி - உலகம். கடற்படை - கடல்போன்ற சேனை. மடியிலா அரசிஞன் - தசரதன்; 'மடியிலா மன்னவ னெய்தும் படியளந்தான், தாஅய தெல்லா மொருங்கு', 'மடியிலான், தாளுளா டாமரையினுள்' (குறள், 610, 617.) அரசர்கள் திரு மாலின் அம்சம் என்ற கொள்கைபற்றி, 'மார்பு ளாளோ' என்றார். உணர்கிலாம் - அறிகின்றேமில்லே. முளரியாள் - வெற்றித்திரு மேற்கூறிய எல்லா விடங்களிலும் உள்ளாள் என்பது கருத்து. (அ)

1126 வார் முகம் - கச்சின் இடத்தில். கெழுவு - பொருந்திய. எர் முழங்கு - அழகாக முழங்குகின்ற. அரவம் - ஒலி. ஏழ்இசை சரிகமபதநி என்பன; குரல் முதலாகிய ஏழு என்பது தமிழ் வழக்கு. வெண்திரை : வெள் ளிய திரைகளையுடைய கடலுக்கு ஆகுபெயர். யானையின் முழக்கத்துக்கு மேகத்தின் முழக்கம். சிலபிரதிகளில் 3 - 4 அடிகள் முன்பின்னுக உள்ளன. (க)

எழுந்த தூளியின் மிகுதி

1127 சூழுமா கடல்களுந் திடர்படத் துகடவழ்ந்
தேழுபா ரகமுமுற் றுளதெனம் கெளிதரோ
ஆழியா னுலகளந் தன்றுதாள் சென்றவப்
பூழையூ டேபொடித் தப்புறம் போர்த்ததே.

குடைகளின் நெருக்கத்தால் உண்டான இருளின் நீக்கம்

1128 மன்னெடுங் குடைமிடைந் தடையவான் மறைதரத்
துன்னிடு நிழல்வழங் கிருடுரப் பெளிதரோ
பொன்னிடும் பூணிடும் புனைமணிக் குலமெலாம்
மின்னிடும் வில்லிடும் வெயிலிடும் நிலவொடே.

சனகன் எதிர்கோள வரும் வழி வருணனை

1129 தாவின்மன் னவர்பிரான் [1]வரமூரட் சனகனும்
எவருஞ் சிலையிணை னெதிர்வரு நெறியெலாம்
தூவுதண் சுண்ணமுங் கனகதுண் டூளியும்
பூவின்மென் முதுகும் பொடியுமே [2]பொடியெலாம்.

இதுவும் அது

1130 நறுவிரைத் தேனுநா [1]வியுநறுங் குங்குமத்
தெறியகிற் றேய்வையு மான்மதத் [2]தெக்கரும்
வெறியுடைக் கலவையும் [3]விரவுசெஞ் சாந்தமும்
செறிமதக் களுழிபாய் சேறுமே [4]சேறெலாம்.

1127 திடர்பட - மேடிட்டுப்போக. துகள் - தூசி; எழுவாய். ஏழுபார் அகம் - ஏழு தீவுகள். எளிதரோ; அரோ : அன்று என்னும் பொருளில் வந்தது; 'வீடு பெற்ற விலங்கும் விலங்கரோ' (சு. 5 : 109.) அளந்தன்று - அளந்த அன்று; தொகுத்தல். பூழை - துவாரம்; அண்டகோளத்தின் பூழை. பொடித்து - தோன்றி. (கo)

1128 அடைய - முற்றிலும். துன்னிடும் - பொருந்துகின்ற. நிழல் வழங்குகின்ற இருளை ஓட்டுதல் எளிது. அரோ : அசைநிலை. பொன் இடும் - பொன்னுற் செய்த. பூணிடும் - அணிந்துகொள்ளுகின்ற. மணிகளின் நிறம் பல ஆதல்பற்றி வெயில் நிலவு முதலியவற்றைக் கூறினர். (கக)

1129 தாவுஇல் - குற்றமில்லாத. மன்னவர் பிரான் - தசரதன். வர - வருகையில். மூரண் - வலிமை. எவரும்சிலை - அம்புகள் புறப்படுகின்ற வில். (பி - மீ.) [1]'வரமுடிச்' [2]'புவியெலாம்' (கஉ)

1130 விரைத்தேன் - வாசனையுடைய தேன். நாவி - புனுகு. எறி அகில் - வெட்டப்படும் அகிலின். மான்மதம் - கத்தூரி. எக்கர் - வண்டல்; 2 : 12. வெறி - நறுமணம். மதக்களுழி - யானையின் மதநீர்ப்பெருக்கு; வாசனைப் பொருள்களில் யானைமதமும் ஒன்று.

இதுவும் அது

1131 மன்றலங் கோதையார் மணியினும் பொன்னினும்
சென்றுவந் [1]தூலவுமத் திசையெலா [2]நிழலநேர்
வென்றதிண் கொடியொடும் மெடுவிதா னமும்விராய்
நின்றவெண் குடைகளி னிழல்களே நிழலெலாம்.

இருவர் சேனைகளின் சந்திப்பு வருணனை

1132 மாறிலா [1]மதுகையான் வருபெருந் தானைமேல்
ஊறுபே ருவகையா னனிகம்வந் தூற்றபோ
தீறிலோ தையினுலா மெறிதிரைப் பாவைவாய்
ஆறுபாய் கின்றதோ ரமலிபோ லானதே.

தசரதனைக் காணச் சனகன் தேரேறி வருதல்

1133 கந்தையே பொருகரிச் சனகனுங் காதலோ
டுந்தவோ தரியதோர் [1]பெருமையோ டுலகுளோர்
தந்தையே யனையவத் தகவினன் முன்புதன்
சிந்தையே பொருவெடுந் தேரின்வந் தெய்தினான்.

(பி - மீ.) [1]'னமுறுங்' [2]'திரள்களும்' [3]'விரவுசேறுற மிதஞ்' [4]'தெரு வெலாம்' (கஉ)

1131 மன்றல் - வாசனை. மணியினும் பொன்னினும் - மணியினலும் பொன்னினலும் இயன்ற அணிகளோடு. நிழல - ஒளிர; ஒளிர்வது அணிகளின் காந்தியினலும் மாதர்களின் ஒளியினலும். நேர்வென்ற - வஞ்சியாது எதிர் நின்று வென்றமைக்கு எடுத்த. நிழல் எலாம் – பந்தர் முதலிய பிற நிழல்கள் எல்லாம்.

(பி - மீ.) [1]'தூலவுமச் சிதைவிலா' [2]'நிழலதே', 'நிழலினேர்', 'நிழலு நேர்' (கச)

1132 மதுகையான் - வலிமையுடைய தசரதன். ஈறுஇல் - முடிவற்ற. ஓதை - ஓசை. அமலை - ஓசை. சனகன் சேனைக்கு ஆறு உவமை; இதனலும் தசரதன் பெருமை உணர்த்தப்பட்டது.

(பி - மீ.) [1]'ம்துகையின் மகிழ் பெருந்' (கடு)

1133 கந்தையே - கட்டித்தறியையே. தேரின் வேகத்துக்குச் சிந்தை உவமை. உலகுளோர் தந்தை. 'நானிலத்தோர் தந்தாய்' உ. 12 :60.

(பி - மீ.) [1]'தன்மையோ டுலகின்மாத்' (கஉ)

தசரதன் சனகனைத் தன் தேரில் ஏற்றிக்கொண்டு தழுவுதல்

1134 எய்தவத் திருநெடுந் தேரிழிந் [1]தினியதன்
[2]மொய்கொடிண் சேனைபின் னிற்கமுன் சேறலும்
கையின்வந் தேறெனக் கடிதின்வந் தேறினான்
ஐயனும் முகமலர்ந் தகமுறத் தழுவினான்.

தசரதன் சனகனோடு அளவளாவிக்கொண்டு செல்லுதல்

1135 தழுவிநின் றவனிருங் கிளையையுந் தமரையும்
வழுவில்சிந் தனையினான் வரிசையின் னளவளாய்
எழுகமுந் துறவெனா [1]வினிதுகந் தெய்தினான்
உழுவைமுந் தரியனா னெவரினும் முயரினான்.

இராமன் எதிர்கொள அமைதல்

1136 இன்னவா றிருவரும் மினியவா றேகவத்
துன்னுமா நகரினின் றெதிர்வரத் துன்னினான்
தன்னையே யனையவன் றழலையே யனையவன்
பொன்னின்வார் சிலையிறப் புயநிமிர்த் தருளினான்.

1134 எய்த - சமீபத்திற் செல்ல. சேறலும் - காலால் நடந்து செல்லலும். சேனை பின்நிற்க முன் செல்லல் : சுற்றமப்புற நிற்கச சுடுகணை விற்றுறத்தன, வீக்கிய வாளொழித.....தன்பினன் வாயிலை நண்ணினான்' (2.6-37); 'பொற்புடைப் புனிதன் கோயிற் புறத்தினி லனிக நிற்பச், சற்ப வெம் பதாகை வேந்தன் றடையறத் தனிச்சென் றெய்தி' (வி. பா. வாசுதே 9.) கையின் வந்து ஏறுஎன - கையினால் 'வந்து ஏறுக' என்று சொல்ல. தசரதன் தழுவி உபசரித்தல் : 252.

(பி - ம்.) [1]'தெதிர் தரும்' [2]'மொய்பெருந்' (கஎ)

1135 தழுவிநின்று. அவன் - அச்சனகனுடைய. கிளை - சுற்றத்தார் தமர் - தம்மைச் சேர்ந்த நண்பர் முதலானோர். சிந்தனையினான் - மனத்தினால். வரிசையின் - கேட்க வேண்டிய முறைப்படி. முந்துற எழுக. உழுவை - புலி. அரி - சிங்கம். சேனைகளின் முன்னே நிற்கும் தசரதனுக்கு அரி உவமை.

'வழுவில் சிந்தனையினானான சனகன் தழுவி நின்றவனுடைய கிளையையும் தமரையும் வரிசையின் அளவளாய் எழுக முந்துற எனா, அரி அனானும் எவரினும் உயரினானுமான தசரதன் (சனகனோடு) இனிது உகந்து எய்தினான்' என்றலும் ஒன்று.

(பி - ம்.) [1]'ஏவினன் சனகனை' (கஅ)

1136 துன்னினான் - பொருந்தினான். தன்னையே அனையவன் - மிக்காரும் இல்லாததனால் தமக்குத்தாமே யுவமையாவர் சீராமர். தழலையே அனையவனுக்கு அடையும ஆம. தழலையே அனையவன் - "தழற்புரை

இராமன் தம்பியுடன் தேர் ஏறுதல்

1137 தம்பியுந் தானுமத் தானைமன் னவனெதிர்
பம்புதிண் புரவியும் படைஞரும் புடைவரச்
செம்பொனின் பசுமணித் தேரின்வந் தெய்தினன்
உம்பரு மிம்பரு மூரகருந் தொழுவுளான்.

இருவரையும் சூழ்ந்து வந்த சேனைகளின் மிகுதி

1138 யானையோ பிடிகளோ விரதமோ வியுளியோ
ஆனபே ருறையிலா நிறைவையா ரறிகுவார்
தானையேர் சனகனே வலினெடுந் தாதைமுன்
போனபே ரிருவர்தம் புடைவரும் படையினே.

இராமன் தசரதரை அணுகியது

1139 காவியுங் குவளையுங் கடிகொள்கா யாவுமொத்
தோவியஞ் சுவைகெடப் பொருவதோ ருருவுவாடே
தேவருந் தொழுகழற் சிறுவன்முன் பிரிவதோர்
ஆவிவந் தென்னவந் தரசன்மா டணுகினன்.

சுடர்க் கடவுள்' (கூ. 3 : 41.) சிவபெருமான். 'ஏக, தன்னையே அனையவன் நிமிர்த்தருளினன் நகரினின்று எதிர்வரத் துன்னினனன்'; சில பிரதிகளில் இதுவும் அடுத்த கவியும் முன் பின்னாக உள்ளன. (சுகூ)

1137 தானை மன்னவன் - சனகன். பம்பு - பரவியுள்ள. உம்பர் இம்பர் உரை : உ : 1 : 18, 3 : 21. (உ0)

1138 யானை - களிறுகள். இவுளி - குதிரைகள். உறை - ஓளவு. 'அம்பண வளவை யுறைகுவித் தாங்கு' (பதிற். 71 : 5.) தானை ஏர் - சேனைகளோடு எழுந்த. தாதை - தந்தை. புடை - சுற்றிலும். படையின் - சேனைகளில். (உச)

1139 காவிவேறு குவளைவேறு. கடிகொள் - விளக்கத்தைத் தன்னிடத்தே கொண்ட. ஓவியம் சுவைகெடுதலாவது சித்திரத்தில் எழுதும் உருவமும் அழகு கெடுதல். 'ஓவியம் சுவைகெட' என்றது தந்தையைக் காணும் ஆர்வத்தாலுண்டான பொலிவுபற்றி; சீதையை மணக்கலாம் என்பது பற்றித் தோன்றிய பொலிவினால் என்பாரும் உளர். பிரிவதோர் ஆவி : 347, குறிப். (உஉ)

இராமன் வணங்க அவனைத் தசரதன் தழுவுதல்

1140 அனிகம்வந் தடிதொழக் கடிதுசென் றரசர்கோன்
இனியபைங் கழல்பணிந் தெழுதலும் தழுவினன்
மனுவெனுந் தகையன்மார் பிடைமறைந் [1]தனமலைத்
தனிநெடுஞ் சிலையிறத் [2]தவழ்ந்தடங் கிரிகளே.

இலக்குவன் வணங்க அவனைத் தசரதன் தழுவுதல்

1141 இளையபைங் குரிசில்வந் தடிபணிந் தெழுதலும்
தளைவருந் தொடையன்மார் புறமிகத் தழுவினன்
களைவருந் துயரறக் ககனமெண் டிசையெலாம்
விளைதரும் புகழினு னெவரினும் மிகுதியான்.

இராமன் வணங்கக் கண்ட தாயரின் மகிழ்ச்சி

1142 கற்றைவார் சடையினன் கைக்கொளுந் தனுவிறக்
கொற்றநீள் புயநிமிர்த் தருளுமக் குரிசிறன்
பெற்றதா யரையுமப் பெற்றியிற் றொழுதெழுந்
தற்றபோ தவர்மனத் துவகையா ருரைசெய்வார்.

1140 அடி - இராம பிராணடிகளை. மனு வெனும் தகையன் - தசரதன். மனு : வைவஸ்வத மனு. தடங்கிரிகள் - தோள்கள். தடங்கிரிகள் தகையன் மார்பிடை மறைந்தன.

(பி - மீ.) [1]'தனன்மலைத்' [2]'தவழ்தடக் கையினன்' (உரை)

1141 இச் செய்யுள் சில பிரதிகளில் இல்லை. இளையபைங் குரிசில் - இலக்குமணன். தளைவரும் தொடையல் - கட்டுதல் அமைந்த மாலை. களைவு அரும் துயர் - நீக்குவதற்கு அரிய துன்பம். ககனம் - விண். ககனத்திலும் தசரதன் புகழ் விளைதலுக்குக் காரணம் சம்பரனைக் கொன்று இந்திரனுக்கு அரசு வழங்கியது. மிகுதியான் - மேலானவன். (உசை)

1142 சடையினன் - சிவபெருமான். தனு - வில் இற - ஒடியும் படி. குரிசில் - இராம பிரான். 'ஈன்ற போதினும் உவகை பெரிதாக லின் 'யார் உரைசெய்வார்' என்றார்; 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன் மகனைச், சான்றோ னெனக்கேட்ட தாய்' (குறள், 69.) (உரை)

வணங்கிய பரதனை இராமன் தழுவுதல்

1143 உன்னுபே ரன்புமிக் கொழுகியொத் தொண்கணீர்
பன்னுதா ரைகடரத் தொழுதெழும் பரதனைப்
பொன்னின்மார் புறவணைத் துயிருறப் புல்லினன்
தன்னையத் தாதைமுன் றழுவினு னென்னவே.

இராமனுக்கும் பரதனுக்கும் முறையே சத்துருக்கனனும்
இலக்குமணனும் வழிபாடு செய்தல்

1144 கரியவன் பின்புசென் றவனருங் காதலிற்
பெரியவன் றம்பியன் [1]றேவருந் தூதிசெய்தார்ப்
பொருவருங் [2]குமரர்தம் புனைநறுங் குஞ்சியால்
இருவர்பைங் கழலுமவ் திருவரும் வருடினர்.

குமரர் நால்வரின் விளக்கம்

1145 கோல்வருஞ் செம்மையுங் குடைவருந் தண்மையும்
சால்வருஞ் செல்வமென் றுணர்தருந் தாதைபோல்
[1]மேல்வருந் தகைமையான் மிகவிளங் கினர்கடாம்
நால்வரும் [2]பொருவினுன் மறையெனு நடையினர்.

1143 அன்பு ஒழுகியது ஒத்துக் கண்ணீர் தாரைகள்தர; அன்புக்கு அறிகுறி கண்ணீர்: 'ஆர்வலர். புன்கண்ணீர் பூசல் தரும்' (குறள், 71.) தன்னை - இராமனுகிய தன்னை. தாதை - தசரதன். இராமனுக்குத் தசரதனும பரதனுக்கு இராமனும் உவமை. பரதனது இயல்பு இதிற் கூறப்பட்டது. (உசு)

1144 கரியவன் - இராமன். பின்பு சென்றவன் - இலக்குமணன். அருங்காதலிற் பெரியவன் - பரதன். காதல் - இராமனிடம் வைத்த அன்பு. தம்பி - சத்துருக்கனன். கரியவன் பின்னே சென்றவனுகிய இலக்குவனும் காதலிற் பெரியவனுடைய தம்பியாகிய சத்துருக்கனனும் ஆகிய குமரர் இருவரும் குஞ்சியால் வருடினர் என்க. இலக்குவன் பரதன் கழலையும் சத்துருக்கனன் இராமன் கழலையும் வணங்கினதாகக் கொள்க.
(பி - ம்.) [1]றனையதோர் பெருமையத' [2]'குமரராம் புனைறுங் குஞ்சியார், இருவருமிருவர்பைங் கழல்களும் வருடினர்' (உஎ)

1145 கோலவருஞ் செம்மை-நீதி. தண்மை-அருள். நீதியும் அருளும்: 1146. சால்வரும் செல்வம் - உழுகின்ற நலப்பை நிலத்தின் கண்ணே ஊன்றும் சாலி - தானே விளைந்த செல்வம். மிகுதியான செல்வமும் ஆம்; 'பொருபடை தருங் விகாற்றமு முழுபடை. ஊன்றுசான் மருங்கி னீன்றதன பயனே' (புறநா. கூடு; 25 - 6); 'கோலின் செம்மையுங் குடையின் றண்மையும், வேலின் கொற்றமும் விளங்கிய கொள்கைப் பதியெழு வறியாப் பண்பு'

சேனைகளை நடத்திக்கொண்டு முன்செல்க என்று
தசரதர் இராமனிடம் கூறுதல்

1146 சான்றெனத் தகையசெங் கோலினா னுயிர்கடாம்
ஈன்றநற் றாயெனக் கருதுபே ரருளினான்
ஆன்றவிச் [1]செல்வமத் [2]தனையுமொய்த் தருகுறத்
தோன்றலைக் கொண்டுமுற் செல்கெனச் சொல்லினான்.

இராமனைத் தலைமையாகக் கொண்ட சேனையின் மகிழ்ச்சி

1147 காதலோ வறிகிலங் கரிகளைப் பொருவினார்
தீதிலா வுவகையுஞ் சிறிதரோ பெரிதரோ
கோதைசூழ் குஞ்சியக் [2]குமரன்வந் தெய்தலும்
தாதையோ டொத்ததத் தானையின் றன்மையே.

இராமன் தேர் ஏறிச் செல்லல்

1148 தொழுதிரண் டருகுமன் புடையதம் பியர்தொடர்ந்
தழிவில்சிந் தையினொடு மாடன்மா மிசைவரத்
தழுவுசங் குடனெடும் பணைதழங் கிடவெழுந்
தெழுதருந் தகையதோர் தேரின்மே லேகினான்.

(சிலப். கரு : 3 - 5.) தாதைபோல் மேல்வரும் தகைமையான் - தந்தையாகிய தசரதனைப்போல் மேலாகிய தகுதியினால் தசரதனது மேல்வருந்தகை: 1141. எனும் நடையினார் - என்று சொல்லத்தக்க ஒழுக்கத்தையுடையவர்கள். நால்வர்க்கும் நான்மறை: 315, குறிப். 'தாம் நால்வரும் நடையினார் தகைமை யான் மிகவிளங்கினார்' (பி - ம்.) [1]'மேல்வரும் பரிதியின்' [2]'நாலுமா' (உஅ)

1146 சான்று எனத்தகைய - குடிகளுக்குத்தான் சாட்சி என்று சொல்லும் தன்மைவாய்ந்த. கோலினான் அருளினான் என்றது தசரதனை. உயிர்கள் ஈன்ற...அருளினான் : 'தாயொக்கு மன்பின்' (185); 'ஆருயிரின் றாயே' (நள. உ : 55.) ஆன்ற இச்செல்வம் அத்தனையும் - மிகப் பெரிய கரிபரி தேர் காலாள் குடை ஏவன்மகளிர் முதலிய இச்செல்வம் முழுவதும். மொய்த்து-கூட்டமாக மொய்த்துக்கொண்டு. தோன்றல் - இராமன்.
(பி - ம்.) [1]'செல்வமுய்த் தனனுகந்' [2]'தனையுமொத்' (உக)

1147 சிலபிரதிகளில் இச்செய்யுள் 1141-க்குப் பின் காணப்படுகிறது. கரிகளைப் பொருவினார் - தசரதன் சேனையில் உள்ளார். சிறிதரோ பெரிதரோ - சிறிதோ பெரிதோ; அரோ : ஐயப்பொருளில் வந்த இடைச் சொல். அக்குமரன் - இராமன். (௩௦)

1148 இரண்டு அருகும் - இருபக்கலிலும். தம்பியர் ஆடன் மாமிசைத் தொடர்ந்துவர. பணை - முரசு. சங்கும் முரசும் சேர்த்துக் கூறப்படுதல் மரபு. (௩௧)

பெண்கள் குழுமியிருக்கும் வீதிவழியே இராமன் செல்லல்

1149 பஞ்சிசூழ் மெல்லடிப் பாவைமார் பண்ணைசூழ்
மஞ்சுசூழ் நெடியமா ளிகையினின் றிடைவிராய்
நஞ்சுசூழ் விழிசள்பூ மழையின்மேல் விழநடந்
திஞ்சிசூழ் மிதிலைமா வீதிசென் [1]றெய்தினன்.

பெண்களின் மகிழ்ச்சியும் குதூகலமும்

1150 சூடகந் துயல்வரக் கோதைசேர் தரமலர்ப்
பாடகம் பரதநூல் பகரவெங் கடகரிக்
[1]கோடரங் கிடவெழுங் [2]குவிதடங் கொங்கையார்
ஆடரங் [3]கல்லவே யணியரங் கயலெலாம்.

ஏழு பருவ மாதர் உற்ற செயலைக் கூறுவோம் எனல்

1151 பேதைமார் முதல்கடைப் பேரிளம் பெண்கடாம்
ஏதியார் மாரவே ளெய்யவன் றெய்தினர்
ஆதிவா னவர்பிரா னணுகலா லணிகொள்கார்
ஓதிபார் வீதிவா யுற்றவா றுரைசெய்வாம்.

1149 பஞ்சிசூழ் மெல்லடிப்பாவை : 'பஞ்சிமென்றளிரடிப் பாவை' (உ. 1 : 19.) பாவைமார் பண்ணைசூழ் - பாவைகளைப்போன்ற பெண்களின் கூட்டங்கள் சூழ்ந்துள்ள. மஞ்சு - மேகம். விராய் - நெருங்கி. விழிகள் - பாவைமாரின் விழிகள் விழிகள் மாளிகையினின்று இடைவிராய், பூ மழையைப் போல்தன் மேல்விழ (பி - ம்.) [1]நெய்தினர்' (கூஉ)

1150 சூடகம் - கைவளையல் துயல்வர - அசைய. மலர்ப்பாடகம் - தாமரைமலர்போன்ற பாதங்களில் அணிந்த பாடகம் என்னும் அணி. பரத நூல் பகர - பாதநூலில் சாலவியபடி சதி மிதித்தலினால் உண்டாகும் ஒசையை வெளிவிட கோடு அரங்கிட எழும் கொங்கை - யானையின் தந்தங்கள் வருந்தும்படி தோன்றும் கச்சுகள் அணி அரங்கு அயல் எலாம் - அழகிய மாளிகைகளின் பக்கங்கள் எல்லாம். முடிபு : 'அயல் எலாம் கொங்கையார் ஆடு அரங்கு அல்ல' ஆடரங்கு அல்லவெனும் இவ்வாழுது அங்ஙனம் தோன்றிற்று.

(பி - ம்.) [1]'கோடொடுங்கிட', 'கோடொதுங்கிட' [2]'குங்குமக்' [3]'கல்லவே லணியரங் கவையெலாம்' (கூஙூ)

1151 பேதைமுதல் பேரிளம்பெண்கள்கடை எழுவர் : பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண். ஏதி ஆர் மாரவேள் - ஆயுதங்கள் நிரம்பின மன்மதன். எய்ய-அம்பினை ஏவ வானவர் பிரான்-இராமன். கார்ஓதியார்- மேகம்போன்ற கூந்தலையுடைய மாதர். உற்ற ஆறு - அடைந்த நிலைமையை. பேதைமுதல் பேரிளம்பெண் இறுதியான மாதர் வீதியிற் பவனிவரும் தலைவனைக்கண்டு தத்தம் பருவத்திற்கேற்பக் காமத்தினால் வருத்தமுறுதலை விளக்கும் பிரபந்தம் உலா எனப்படும். (கூச)

எதிர்கோட் படலம் முற்றும்

19. உலாவரு படலம்*

பெண்கள் வந்து மொய்த்தமை

1152 மானினம் வருவ போன்று
மயிலினந் திரிவ போன்றும்
மீனின மிளிர்வ போன்று
மின்னின மிடைவ போன்றும்
தேனினஞ் சிலம்பி யார்ப்பச்
சிலம்பினம் புலம்ப வெங்கும்
பூநனை கோதை மாதர்
பொம்மெனப் புகுந்து மொய்த்தார்.

இதுவும் அது

1153 விரிந்துவீழ் கூந்தல் பாரார்
மேகலை யற்ற நோக்கார்
சரிந்தபூந் துகில்க டாங்கா
ரிடைதடு மாறத் தாழார்
நெருங்கினர் நெருங்கிப் புக்கு
நீங்குமி னீங்கு மென்றென்
றருங்கல மனைய மாதர்
தேனுக ரளியின் மொய்த்தார்.

1152 நடை, சாயல்பற்றி மயில் உவமை; 'மயில்கண் டன்ன மடநடை மகளிர்', 'மடநடை மஞ்ஞை' முருகு. 205 310.) மீனினம் - நட்சத்திரக் கூட்டம். மீனினம் மகளிர்க்கு உவமை: 'பன்மீனடுவட் பான்மதி போல, இன்னகை யாய மோ டிருந்தோன்' சிறுபாண் 219-20); 'மீது லாயவெண் டாரகை நாப்பணிற் சீத வெண்கதிர்த் திங்கள்கண் டாலென, மாதர் நோக்கின் மடந்தையர் நாப்பணிற். காதல் கூர்தமயந்தியைக் கண்டதே' (நைடத. அன்னத்தைத். 41.) தேன் இனம்-வண்டின் சாதிகள். சிலம்பி - ஒலித்து. பொம்மென : விரைவுக் குறிப்பு. (க)

1153 அற்ற - அறுந்து வீழ்ந்தவற்றை; அற்றம் - மறைவிடமும் ஆம். மிகவும் நுண்ணியது ஆதல்பற்றி இடை நடையினால் தடுமாறிற்று நீங்குமின் என்றல் 'ஆணையாணை யகலுமி னீரென வேணுக் கோலின விலக்கலின்' சீவக. 634.) தேனுகர் அளியின் மொய்த்தல்: 1156. (உ)

*சில பிரதிகளில் இது 'உலாவியற் படலம்' என்று காணப்படுகிறது. உலாவருஞ் செய்திவான்மீகத்தில் இல்லை.

மோய்த்துக்கொண்ட மாதருக்கு உவமைகள்

1154 பள்ளத்துப் பாயு நன்னீர்
ரூனையவர் பானல் பூத்த
வெள்ளத்துப் பெரிய கண்ணூர்
மென்சிலம் பலம்ப மென்பூத்
தள்ளத்தம் மிடைக ணேவத்
தமைவலித் தவன் பாற்செல்லும்
உள்ளத்தைப் பிடித்து நாமென்
றேடுகின் றூரு மொத்தார்.

1155 கண்ணினுற் காத லென்னும்
பொருளேயே காண்கின் றேமிப்
பெண்ணினீர் மையினு லெய்தும்
பயனின்று பெறுது மென்பார்
மண்ணினீ ருலர்ந்து வான
மழையற வறந்த காலத்
துண்ணுநீர் கண்டு வீழு
முழைக்குலம் பலவு மொத்தார்.

1156 அரத்தமுண் டூனைய மேனி
யகலிகைக் களித்த தாளும்
விரைக்கருங் குழலிக் காக
வில்லிற நிமிர்ந்து வீங்கும்

1154 பள்ளம் - கடல்; இராமனுக்கு உவமை கம்பீரம் பற்றியும் நிறம் பற்றியும். விரைவாக வந்த மகளிருக்குப் பள்ளத்துப் பாயும் புனல். பானல் - கருங்குவளை. பானல் பூத்த கண்ணூர்; வெள்ளத்துப் பெரிய கண்ணூர்; வெள்ளம் - கடல். கண்ணுக்குக் கடல் உவமை: 708 மென்பூத்தள்ள - மெல்லிய மலர்கள் மாலையிலிருந்து விழ. வலித்து - இழுத்துக்கொண்டு. வலித்தது உள்ளம். பிடித்தும் - பற்றிக்கொள்வோம். (கூ)

1155 காதல் பொருள் எனப்பட்டது; குணத்தைப் பொருளாகக் கூறல் வைசேடிகமதம்; 'சினத்தைப் பொருளென்று கொண்டவன்' (குறள், 07.) பயன் - பயனை. இன்று - இற்றைக்கு. வீழும் - திரண்டுவந்து குவியும்; 1156. உழைக்குலம் - மானினம். (சு)

1156 அரத்தம் - செந்நிறம். அளித்த - அருள்செய்த. விரை - மணம். குழலி - சீதை. தாளும் தோளும் : 1070. இரைத்து - மோகித்து. நக்க. 128, உரை. மறுகு - தெரு. வண்டுகள்போல் மொய்த்தல் : 1153. (டு)

வரைத்தடந் தோளுங் காண
மறுகினின் வீழு மாதர்
இரைத்துவந் தமிழ்தின் மொய்க்கு
மீயின மென்ன லானார்.

கண்ணன் என்ற பெயருக்குக் கவி கற்பிக்கும் காரணம்

1157 வீதிவாய்ச் செல்கின் றான்போல்
விழித்திமை யாது நின்ற
மாதரார் கண்க ளூடே
வாவுமான் றேரிற் போனான்
யாதினு [1]முயர்ந்தோர் தன்னை
யாவர்க்குங் கண்ண னென்றே
[2]ஓதிய பெயர்க்குத் தானே
யுறுபொரு ளுணர்த்தி விட்டான்.

சீதையின் பெருமையைக் கவி பாராட்டல்

1158 எண்கடந் தலகி [1]லாதின்
றேகுறு மிவன்றே ரென்று
பெண்கடந் தம்மி னொந்து
பேதுறு கின்ற வேலை
மண்கடந் தமரர் வைகும்
வான்கடந் தானைத் தான்றன்
கண்கட வாமற் காத்த
காரிகை பெரிய [2]ளேகாண்.

1157 மாதரார் கண்களூடே.....போனான் : 622. 'கண்டவர் கண்களை நீ.....விடாய்' (பாகவத. 150.) கண்ணன் - 'கண்ணில் உள்ளவன்' என்ற பொருளைக் கற்பித்தது ஒரு நயம். திருமாலைக் கண்ணன் என்றல் உண்டு; 622; பாகவத. கண்ணன் துவரை யடைந்த. 138. 'உயர்ந்தோர் ஓதிய' என்று கூட்டுக.

(பி-ம்.) [1]'முயர்ந்தோன் றன்னை' [2]'ஓதுநால் வேதத்துண்மைக்குறு' (சு)

1158 எண்கடந்து - மனவேகத்தையும் கடந்து. அலகிலாது - வேகம் ஓர் அளவில்லாமல். பெண்கள் தம் தம்மில். மண்ணையும் வானையும் கடந்தது திரிவிக்கிராமாவதாரத்தில். காரிகை - சீதை. இது கவிக்கூற்று.

(பி - ம்.) [1]'லாத வின்பத்தை யெனக்கீ யென்றே', 'லாத வின்பத்தை யீதியென்று' [2]'ளென்றார்'

ஒருபெண் உயிரைத்தவிர மற்றவற்றை இழந்து நிற்றல்

1159 பயிரொன்று கலையுஞ் சங்கும்
பழிப்பரு நலனும் பண்பும்
செயிரின்றி யலர்ந்த பொற்புஞ்
சிந்தையு முணர்வுந் தேசும்
வயிரஞ்செய் பூணு நாணு
மடனுந்தன் னிறையு மற்றும்
உயிரொன்று மொழிய வெல்லா
முகுத்தொரு தெரிவை நின்றுள்.

ஒருத்தி துவண்டு நிற்றல்

1160 குழையுறு மிளிருங் கெண்டை
கொண்டலி னொலி சிந்தத்
[1]தழையுறுக் கருப்பின் சாபத்
தனங்கவேள் சரங்கள் பாய்ந்த
இழையுறுப் புண்ண நுத
விளமுலை யொருத்தி [2]சோர்ந்து
மழையுறு மின்னி [3]னன்ன
மருங்குல்போ னுடங்கி நின்றுள்.

1159 பயிர் - பெண்களுக்குரிய அச்சம் முதலிய நான்கு குணங்களில் ஒன்று; பயிர்ப்பாவது பழகாத பொருளைக்கண்டால் உண்டாகும் அருவருப்பு. ஒன்றுகலை - உடலோடு பொருந்திய ஆடை. சங்கு - கைவளையல். செயிர் இன்றி அலர்ந்த - குற்றமில்லாமல் விளங்கியிருந்த. பொற்பு - அழகு. தேசு - ஒளி. ஒரு பெண் தனது உடைமைகளை மட்டுமன்றிக் குணங்களையும் இழந்து நின்றுள்; 611, 622. (அ)

1160 குழைஉறு மிளிரும் கெண்டை - காதணியோடு பொருந்தி விளங்கும் கண்; 'கொண்ட னிழலிற் குழைதடவுங் கெண்டை' (நள. உ : 94.) கொண்டலின் - மேகத்தைப்போல். சாபம் - வில். கருப்பு வில்லில் தழைகள் இல்லை; 'இகூ தண்டம்' என்பர். இழையுறு - ஆபரணம் பொருந்தாத. முலைக்கு அடை; 'நூலிழையும் நுழைதற்கிடமில்லாமல் முற்றிலும் புண்பட்ட' எனினுமாம். பாய்ந்தபுண் என்க. மழைஉறுமின் - மேகத்தினிடம் தோன்றுத மின்னல். இடைக்கு மின் உவமை. மருங்குல்போல் நுடங்கல் : 608, குறிப்.

(பி - ம்.) [1]'தழையருக்' [2]'மேல்வான்' [3]'னன்னுள் மயங்கிமெய் கலங்கி' (கூ)

பெண்களின் விழிகளின் கருமைக்கும் ஐயன் மேனியின் கருமைக்கும் காரணம் கற்பித்தல்

1161 பஞ்சிவர் விரலி னூர்தம்
படைநெடுங் கண்க ளெல்லாம்
செஞ்செவே யையன் மெய்யிற்
கருமையைச் சேர்ந்த வோதாம்
மஞ்சன மேனி யான்றன்
மணிநிற மாத ரார்தம்
அஞ்சன நோக்கம் போர்க்க
விருண்டதோ வறிகிலே மால்.

'அரசன் ஆணையையும் இராமபிரானது வீரத்தையும் பாராமல் பெண்களே எய்பவன் யார்' என்று ஒருத்தி கூறல்

1162 மாந்தளிர் மேனி யாளோர்
வாணுதன் மதன னெங்கும்
பூந்துணர் வாளி மாரி
பொழிகின்ற பூச லோக்கி
வேந்தர்கோ ஞாண நோக்கான்
வீரன்வில் லாண்மை பாரான்
ஏந்திழை யாரை யெய்வான்
யாவனே வொருவ னென்றாள்.

1161 பஞ்சு இவர் விரல் - செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப்பெற்ற விரல். செஞ்செவே - மிகவும் நன்றாக. மஞ்சன - கார்மேகம் போன்ற. மணி நிறம் - நீலமணிபோலும் நிறம்; இங்கே அழகிய நிறம் என்று கொள்ளுக. ஐயனது நிறம் போர்த்துக் கண் கருநிறமாதல்: 1220. பெண்களின் கண்ணும் இராம பிரானின் உடலும் இருண்டமைக்குக் காரணம் கற்பிக்கப்பட்டது. (50)

1162 பூந்துணர் வாளிமாரி - பூங்கொத்தாகிய அம்புமழை. பூசல் - போர். வேந்தர்கோன் - சனகன்; தசரதன் என்பாரும் உளர். தாம் ஒரு பிழையும் செய்யாமலிருக்கக் காரணமின்றி ஏந்திழையாரை எய்வது வேந்தனது ஆணையை மீறும் செயலாகும். வீரன் - இராமபிரான். (51)

ஒருத்தி, 'ஐயன் தனித்து உலாவந்தனனே' என்றல்

1163 வில்தங்கு புருவ நெற்றி
வெயர்வரப் பசலை விம்மிச்
சுற்றெங்கு மெறிப்ப வுள்ளஞ்
சோரவோர் தோகை நின்றாள்
கொற்றஞ்செய் கொலைவே லென்னக்
[1]கூர்நுதிக் கொடிய கண்ணாள்
மற்றொன்றுங் காண்கி லாதா
டமியனே வள்ள லென்றாள்.

ஒருத்தி ஆடைமட்டும் தாங்கிச் சித்திரம்போல் நிற்றல்

1164 [1]தொன்னயந் தொடர்ந்த காமச்
சுவையையோ ருருவ மாக்கி
இன்னயந் தெரிய வல்லா
னெழுதிய [2]தென்ன நின்றாள்
பொன்னையும் பொருவு நீராள்
புனைந்தன வெல்லாம் [3]போகத்
தன்னையுந் தாங்க லாதா
[4]டுகிலொன்று தாங்கிக் கொண்டாள்.

1163 வில்தங்கு - வில்லைப்போன்ற. பசலை - பசப்பு நிறம்; ஆசை நோய் காரணமாக மகளிர்க்கு வரும் நிறம். கூர்நுதி - மிகவும் கூர்மையான. மற்றொன்றும் காண்கிலாதாள் என்றது கண்ணும் கருத்தும் இராமனிடையே ஒன்றுபட்டமையின்; கூர்நுதிக் கண்ணாளாக இருந்தும் மற்றொன்றும் காண வில்லை என்றது ஒரு நயம். 1170. தமியனே - பரிவாரங்களும் தம்பிமாரு மின்றித் தனித்து வந்தவனே. இதுவும் அடுத்த கவியும் சிலபிரதிகளில் மூன் பின்னாக உள்ளன. (பி - மீ.) [1]'கூற்றெனக்' (சஉ)

1164 தொல்நயம் தொடர்ந்த காமச்சுவை - புலவர்களால் மற்றச் சுவைகளிலும் மேலானதென்று பண்டைக் காலத்தே நயம்பெறப் புகழப் பட்ட காமச்சுவை; 'இச்சிறப்புப்பற்றி வடநூலுட் போசராசனும் சுவை பல வென்று கூறுவார் கூறுக; யாம் கூறுவது இன்பச் சுவை யொன்றனையுமே யென இதனையே மிகுத்துக் கூறினன்' (குறள். காமத்துப்பால், பரிமேல்.) 'சொல்நலம் தொடர்ந்த' என்ற பாடத்துக்கு 'பண்டைப் புலவர்கள் சொல்லிய எல்லா நலன்களும் தொடர்ந்த' என்பது பொருள். நின்றாள் - உடலில் அசைவொன்றுமின்றி நின்றாள், சித்திரப் பாவையினைத்த வடங்கி (நன்.) பொன் - இலக்குமி. உம்மை: சிறப்புமை. துகில் ஒன்று.

(பி - மீ.) [1]'சொன்னலந் தொடர்ந்த', 'சொன்னலம் கடந்த' [2]'எனவும் பூமேற்' [3]'போக்கித்' [4]'ளுயிரொன்றுந் தாங்கி நின்றாள்' (சஉ)

காம மயக்கத்தால் ஒருத்தி கூறியது

1165 மைக்கருங் கூந்தற் செவ்வாய்
வாணுத லொருத்தி யுள்ளம்
[1]நெக்கன [2]ளுருகு கின்ற
ணெஞ்சிடை வஞ்சன் வந்து
புக்கனன் போகா வண்ணங்
கண்ணெனும் புலங்கொள் வாயில்
சிக்கென வடைத்துத் தோழி
சேருது மமளி யென்றாள்.

இராமனுக்குக் கண்ணைச்சில் வருமே என்று ஒருத்தி பிறரைச் சினத்தல்

1166 தாக்கணங் கனைய மேனி
தைத்தவேள் சரங்கள் பாராள்
வீக்கிய கலியுங் தூசும்
வேறுவே றுன தோராள்
ஆக்கிய பாவை யன்ன
வொருத்தியாண் டமலன் மேனி
நோக்குகின் றுரை யெல்லா
மெரியெழ நோக்கி நின்றாள்.

1165 நெகுதல் - நெகிழ்தல்; 1178; "என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி" (திருவா. போற்றித். 80.) வஞ்சன் என்றது தன்னை அறியாமல் கண்வழி நுழைந்து நெஞ்சம் புகுந்து நிறைநாண் முதலியவை பறிபோகச் செய்தமையின்; 'கண்வழி நுழையுமோர் கள்வ னேகொலாம்' (622.) சிக்கென - உறுதியாக; 'சிக்கெனப் பிடித்தேன்' (திருவா. பிடித்த.) தோழி : விளி. 'நெஞ்சிடை.....அமளி' : தலைவியின் சொற்கள்.

(பி - ம்.) [1]'நெக்கென வுருகு' [2]'ளுருகி நின்றாள்' (கசு)

1166 தாக்கு அணங்கு - தீண்டிவருத்தும் தெய்வம்; மோகினி என்பர்; 'நோக்கினு நோக்கெதிர் நோக்குத லுக்கணங்கு, தானைக்கொண் டன்ன துடைத்து' (குறள். 1082); "எல்லாரிடத்திலும் சென்று சேரும் திரு' என்பர் நச்சினார்க்கினியர்; சீவக. 871, 1473, உரை. மேனி - உடலில். கலி - மேகலை. தூசு - ஆடை. எரிஎழ நோக்கினது, இராமபிரானுக்குத் திருஷ்டி தோஷம் ஏற்பட்டிவிடுமே என்ற எண்ணத்தினால்; தான் காதலித்தவனைப் பிறர் காதலித்தல் கூடாது என்ற சினத்தினால் என்பர் சிலர். (கரு)

மகிழ்ச்சியுடன் வந்த ஒருத்தி வருத்தத்துடன் திரும்புதல்

1167 களிப்பன மதர்ப்ப நீண்டு
கதுப்பினை யளப்பக் கள்ளம்
ஒளிப்பன வெளிப்பட் டோடப்
பார்ப்பன சிவப்புள் ளூற
வெளுப்பன கறுப்ப வான
வேற்கணை ளொருத்தி யுள்ளம்
குளிர்ப்பொடு காண வந்தாள்
கொதிப்பொடுங் கோயில் புக்காள்.

ஐயனைப் பார்க்க இடமின்றி ஒருத்தி பெண்களின் இடையின் வெளிகளின் ஊடே பார்த்தல்

1168 கருங்குழற் பாரம் வார்தோய்
கனமுலை கலைசூ ழல்குல்
நெருங்கின மறைப்ப வாண்டோர்
நீக்கிடம் பெறுது [1]விம்மும்
பெருந்தடங் கண்ணி காணும்
பேரெழி லாசை தூண்ட
மருங்குலின் [2]வெளியி னூடே
வள்ளலை நோக்கு கின்றுள்.

வீதியில் சிந்திக்கிடந்த பொருள்கள்

1169 [1]வரிந்தவா [2]ளனங்கன் வாளி
[3]மனங்கழன் றனவு மாதர்
எரிந்தபூ ணினமுங் கொங்கை
வெயர்த்தபோ திழிந்த சாந்தும்

1167 மதர்ப்ப - செருக்கையுடையன. கதுப்பு - கன்னங்கள். ஒளிப்பன - மறைப்பன. வெளிப்பட்டு முகத்தினின்றும் ஓடப் பார்ப்பன. களிப்பன.....ஆனவேல் : கண்ணுக்கு அடை. கொதிப்பொடும் - காம வெப்பத்துடனே. கோயில் - மாளிகை என்ற அளவாய் நின்றது. (கசு)

1168 கலை - ஆடை; மேகலையும் ஆம். அல்குல் - பின்தட்டு. நீக்கிடம் - வெற்றிடம். (பி - மீ.) [1]'நீண்ட' [2]'வெளிக்கண்ணே நோக்கியே மகிழ்ந்து நின்றுள்' (கஎ)

1169 வரிந்த - கட்டிய. வாளி மனம் கழன்றனவும் - அம்புகள் மனத்தை ஊடுருவி வெளிவந்து விடப்பனவும். எரிந்த - காம வெப்பத்தினால் நீங்கு சிந்திய. வெள்ளிடை - ஒன்றுமில்லாத இடம். வீதி - தெருவில்.

சரிந்தமே கலையு முத்துஞ்
சங்கமுந் தாழ்ந்த கூந்தல்
விரிந்தபூந் தொடையு மன்றி
வெள்ளிடை யரிதவ் வீதி.

ஐயனது முழுவடிவை எவரும் கண்டிலே என்றல்

1170 தோள்கண்டார் தோளே கண்டார்
தொடுகழற் கமல மன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்
தடக்கைகண் டாரு மஃதே
வாள்கொண்ட கண்ணுர் யாரே
வடிவினை முடியக் கண்டார்
[1]ஊழ்கொண்ட சமயத் தன்னு
னுருவுகண் டாரை யொத்தார்.

வேறு

இராமன் பெரியனதற்குக் காரணம் கற்பித்தல்

1171 தையல் சிற்றிடை யாளொரு தாழ்குழல்
உய்ய மற்றவ ளுள்ளத் தொடுங்கினன்
வையமுற்றும் வயிற்றி னடக்கிய
ஐய னிற்பெரி யாரினி யாவரே.

(பீ - ம்.) [1]'வரிந்தவில்' [2]'லனங்கனம் பங்கடர்ந்த போ தளவு', 'லனங் கனம் பங்கழன்றன வுளவு', [3]'மனங்கழன்றுகவு', 'மனங் களின்றடவு' (கஅ)

1170 தோள் - இராமனது, வில்லிறுத்த தோள்; தாள் - அகலிகைக்கு அளித்த பாதங்கள்: 1156. தடக்கை-முழந்தாள்வரை நீண்ட கைகள். ஒருறுப் பினைக் கண்டவர் அவ்வுறுப்பின் செயலேயெண்ணி யிருந்து விட்டதனால் பிறவற்றைக் கண்டிலர். தோள் முதலிய உறுப்பினுள் ஒவ்வொன்றைக் கண்டவர்கள், உலகில் பிறவற்றைக் காண விரும்பிலர் என்றலும் ஆம்; 'இவற்றைக் கண்டவர்கள் பின்னே இவையே காண்பார்கள் என்று கூறினார் என்றுமாம்' (சீவக. 636, உரை); 4 : 44, குறிப். வாள் கொண்ட கண்ணார் என்றது பார்வையின் கூர்மையைக் கூறியபடி. ஊழ் - முறைமை. விராட் புருஷனுடைய ஒவ்வோர் உறுப்பும் ஒவ்வொரு தெய்வம்; அந்த ஒரு தெய் வத்தையே உபாசித்து முற்றிலும் காணப்பெறுதவர் விராட் புருஷனை எங் ஙனம் காணவல்லார் என்ற குறிப்பு இக்கவியில் தோன்றுகிறது.

(பீ - ம்.) [1]'ஊழ் கண்ட' (சக)

1171 சில பிரதிகளில் இச்செய்யுள் இல்லை. ஐயனுக்குப் பெருமை, தான் வைய முற்றிலும் அடங்கியவனுயிருந்தும் ஒரு பெண்ணின் உள்

1172 அலம்பு [1]பாரக் குழலியொ ராயிழை
சிலப்பு [2]மேகலை யுஞ்சில மபத்தனி
நலம்பெய் கொப்பி னடந்துவந் தெய்தினுள்
புலம்பு சேடியர் கைம்மிசைப் போயினாள்.

1173 அருப்பு மென்முலை யாளங்கொ ராயிழை
இருப்பு [1]நெஞ்சினை யேனுமோ ரேழைக்காப்
பொருப்பு வில்லைப் பொடிசெய்த [2]புண்ணியா
கருப்பு வில்லிறுத் தாட்கொண்டு காவென்றாள்.

உருவெளித் தோற்றத்தில் இராமனைக் கண்டாள் கூற்று

1174 மைத வழ்ந்த கருங்கணெ ணீர்வா ணுதல்
செய்த வன்றனித் தேர்மிசைச் சேறல்விட்
டெய்த [1]வந்தெதிர் நின்றமை யாலிது
கைத வங்கொல் கனவுகொ லாமென்றாள்.

ளத்தே ஒடுங்குவதற்கு இயைந்ததனால்; 'பெருக்கத்து வேண்டும் பணிதல்' (குறள், 963); 'தாழ்ந்தோருயர்வர்' (பிரபு. மாயையுற். 14.) (உ0)

1172 அலம்பு .. வண்டுகள் ஒலிக்கின்ற. இராமபிரானைக் கண்ட பின் தன் வசமிழந்த இவளைச் சேடியர் தூக்கிச் சென்றனராக, 'கைம்மிசைப் போயினாள்' என்றார்.

(பி - ம்.) [1]அலம்புவார் குழல் சோரவோராயிழை' [2]'மேகலையும் மொலிசெய்திட', 'பேரொலி மேகலை செய்திட' (உக)

1173 அருப்பு - அரும்பு. இருப்பு நெஞ்சினையேனும் - இரும்பினால் இயன்றது போல் கடினமான மனத்தை நீ யுடையவன் ஆயினும். பொருப்பு வில்லை - மலைபோன்ற சிவதனுசை. கருப்புவில் - மன்மதனது கரும்பாகிய வில்லை. 'நேர் முகமாக அருள் செய்யாய் ஆயினும் மன்மதனது உபத்திரவத்திலிருந்து என்னைக் காப்பாயாக' என்றபடி. புண்ணியா : ஒரு விளிவாய்பாடு; 'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி பென் மனத்தே, வழுவா திருக்க வரந்தர வேண்டும்' (நே. அப்பர்.)

(பி - ம்.) [1]'நெஞ்சினராயுமோ' [2]'புண்ணியர் கருப்பு வில்லிறக்கற்றில ரோவென்றாள்' (உஉ)

1174 செய்தவன் - முற்பிறப்பிற் செய்த தவத்தை யுடையவன். வடமொழிநடை; முற்பிறப்பில் தவம் செய்தவன் என்றபடி. அழகு, ஆற்றல் முதலியவற்றைப் பெற்றிருத்தலே நினைந்து. சேறல் - செல்லுதல்.

(பி - ம்.) [1]'வந்துநின் றனுமெய் தாதது', 'வந்தெதிர் நின்றுமெய் தானிது' (உங)

தூதனுப்புவதற்கு ஒருவருமின்றித் தளர்வாளின் கூற்று

1175 மாதொ ருத்தி மனத்தினை யல்லதோர்
தூது பெற்றில ளின்னுயிர் சோர்கின்றாள்
போத ரிக்கட் பொலங்குழைப் பூண்முலைச்
சீதை யெத்தவஞ் செய்தன ளோவென்றாள்.

ஒருத்தி, 'ஐயன் எழுதரிய திருமேனியான்' என்றல்

1176 பழுதி லாததோர் பாவையன் ஞாலத்தைத்
தழுது வெய்துயிர்த் தன்புடைத் தோழியைத்
தொழுது சோர்ந்தயர் வாளிந்தத் தோன்றலை
எழுத லாகுங்கொல் மன்மத னெனென்றாள்.

ஒருத்தி, 'திருமாலே' என்றல்

1177 வண்ண [1]வாயொரு வாணுதல் மானிடர்க்
கெண்ணுங் காலிவ் விலக்கண மெய்திட
ஒண்ணு மோவொன் றுணர்த்துகின் றேனிவன்
கண்ண னேயிது கண்டிரும் பின்னென்றாள்.

1175 மனமே தூது : 'ஆரிருக்கிலுமென் னெஞ்சு மல்லதொரு வஞ்ச மற்ற துணையில்லென, ஆதரத்தினுடு தூது விட்ட பிழை' (திருவரங்கக். 24.) போது அரிக்கண் - தாமரை மலர் போன்ற செவ்வரி படர்ந்த கண்கள். தூது ஒன்றும் இன்றி இராமனைச் சீதை அடைந்தமையை நினைந்து, 'எத்தவம் செய்தனனோ' என்றாள். (உ)

1176 தொழுதமை ஆசைமிகுதியினாலும் 'எழுத இயலாது' என்ற விடையைத் தோழியினிட மிருந்து பெறும் விருப்பத்தினாலும், 'மன்மத னைக் கொண்டு இவன் உருவத்தை எழுதுவித்துக் கொள்ளலாமோ' என்று கேட்டனள் எனலும் ஆம். மன்மதன் ஓவியம் எழுதுவதிற் கைதேர்ந்த வன் : 571; 'தேவு தெண்கட லமிழ்துகொண் டனங்கவேள் செய்த, ஓவியம் புகையுண்டதே யொக்கின்ற வுருவாள்' (சூ. 3 : 11.) (உ)

1177 இலக்கணம் - உத்தம லட்சணங்கள். ஒன்று உணர்த்துகின்றேன் என்றது ஈற்றடியிலுள்ள செய்தியை. கண்ணன் : 1157, குறிப்.

(பி - ம்.) [1] 'வார்முலை' (உ)

ஒருத்தி, 'இராமபிரான் இங்கே வந்தது சனகனது தவப்பயனால்' என்றல்

1178 கனக நூபுரங் கைவளை யோடுக
மனநெ கும்படி வாடியொர் வாணுதல்
அனக னிந்நக ரெய்திய தாதியிற்
[1]சனகன் செய்த தவப்பய னாலென்றாள்.

ஒருத்தி, 'ஐயன் தனியே கனவில் வருதல்கூடுமோ' என்றல்

1179 நனிவ ருந்தி நலங்குடி போயிடப்
பனிவ ருங்கணொர் பாசிழை யல்குலாள்
முனிவ ருங்குல மன்னரு மொய்ப்பறத்
தனிவ ருங்கொல் கனவின் றலையென்றாள்.

ஒருபெண்ணால் காதலை மறைக்க முடியாமை

1180 புனங்கொள் கார்மயில் போலுமொர் பொற்றொடி
மனங்கொள் காதன் மறைத்தலை யெண்ணினாள்
அனங்க னன்ன தறிந்தன னற்றந்தான்
மனங்கள் போல முகமு மறைக்குமே.

1178 வளையோடு உக. மனம் நெகுதல் : 1165, குறிப். அனகன் - பாவ மற்றவனான இராமன். ஆதியில் - முன்னால். 'சனகர்' என்ற பாடத்துக்கு, 'சனககுலத்திற் பரம்பரையாக வந்த முன்னோர்கள்' என்று பொருள் கூறு வாருமுளர்; சனக குல முதல்வன் நிமி; அவன் மைந்தன் மிதி. இவனுக்குச் சனகன் என்ற பெயர் வந்தது; வான்மீகம், க. 71. முன்னோர் செய்தவம் என்று கூறுதல் : 333. (பி- மீ.) [1]'சனகர்' (உஎ)

1179 நலம் - நற்குணம். குடிபோயிட - நீங்க; 1048, குறிப். மொய்ப்பு அற — மொய்த்தல் இன்றி. முனிவரும் மன்னவரும் மொய்த்து இராமனுடன் செல்லும்போது அவனைக் கூடப் பெறாமையின், 'தனிவருங் கொல்' என்றாள். (உஅ)

1180 அறிந்தனன் : மன்மதாவஸ்தையினின்று அவளால் தப்ப முடியவில்லை என்பது கருத்து. அற்றம் - இரகசியம். தான் : அசை. மறைக்குமே ; ஏகாரம் வினா. முகம் அற்றத்தை வெளியிட்டு விடும் : 'உள்ளத்தினுள்ளதை யுரையின் முந்துற, மெள்ளத்தம் முகங்களே விளம்பும்' (சூ. 4 : 91); 'முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினும், காயினுந் தான்முந் துறும்', 'முகனோக்கி நிற்க வமையு மகனோக்கி, உற்ற துணர் வார்ப் பெறின்' (குறள், 707 - 8.) (உசு)

காதல்கொண்ட ஒரு பெண்ணின் செயல்

1181 இணைகெ [1]டுங்கணை சேர்ந்திழை யேந்துபூ
[2]அணைய ணைந்திடி யுண்ட வாவெனப்
புணர்க லங்கிளர் கொங்கை புழுங்கிட
உணர்வ [3]ழுங்க வுயிர்த்தன ளாவியே.

உயிர்தடுமாறும் பெண்கள்

1182 ஆம்ப லொத்தமு தூறுசெவ் வாய்ச்சியர்
தாம்ப தைத்துயி ருட்டடு மாறுவார்
தேம்பு சிற்றிடைச் சீதையைப் போற்சிறி
தேம்ப லுற்றில செங்ஙன முய்வரே.

ஒருத்தி, 'ஐயன் அன்பிலனே' என்றல்

1183 வேர்த்து மேனி தளர்ந்துயிர் விம்மலோ
டார்த்தி யுற்ற மடந்தைய ராரையும்
தீர்த்த னித்தனை சிந்தையிற் செங்கணிற்
பார்த்தி லானுட் பரிவில னேவென்றுள்.

1181 பூ அணை - மலர்கள் பரப்பிய படுக்கை. நாகம் இடிக்கு அஞ்சுதல் : 'இடியேறுண்ட நாகம் போல' (பெருங். உ. 10 : 112); 'அருமை மாமணி நாக மழுங்கவோர், உருமு வீழ்ந்தென வுட்கினர்' (சீவக. 242.) உணர்வு அழுங்க - அறிவுகெட. ஆவி உயிர்த்தனன் - காம வெப்பினல் பெருமூச்சு விட்டாள். (பி - மீ) [1]டுங்கணி னிந்து முகத்திபூ', [2]அணை புகுந்திடி' [3]ழிந்திட்டுயிர்த்தன ளாசையால்' (கூ0)

1182 ஆம்பல் ஒத்த வாய்ச்சியர், அமுது ஊறுவாய்ச்சியர். உள்ளே உயிர் தடுமாறப் பெறுபவர்கள்; தடுமாறுதல் - போவதும் வருவதும் ஆதல். சிறிது - சிறிய அளவிலும்; உம்மை விகாரத்தாற் றொக்கது. ஏம்பல் - மகிழ்ச்சி. (கூக)

1183 விம்மல் - துக்கத்தினுல் விம்முதல். ஆர்த்தி - துன்பம். தீர்த்தன் - பரிசுத்தமானவன். இத்தனை : நெஞ்சறிசுட்டு; இவ்வளவு; என்னும் குறிப்பும் ஆம். சிந்தையில் பார்த்தல் - மனத்தால் நினைத்தல் நோக்கல் நோக்கம். (கூஉ)

அம்புகள் தீர்ந்ததால் மன்மதன் வாளோடுக்க முனைதல்

1184 வையம் பற்றிய மங்கைய ரெண்ணிலார்
ஐயன் பொற்புக் களவிலே யாதலால்
எய்யும் பொற்சிலை மாரனு [1]மென்செய்தான்
கையம் பற்றுடை வாளினுங் கைவைத்தான்.

விண்ணோட்டு மாதரும் காதலால் வருந்துதல்

1185 நான வார்குழ லரிய ரோடலால்
வேனல் வேளொடு மேலுறை வார்களோ
டான பூச லறிந்தில மம்புபோய்
வான நாடியர் மார்பினுந் தைத்தவே.

ஒருத்தி ஐயனை நிந்தித்தல்

1186 மருண்ம யங்கு மடந்தையர் மாட்டொரு
பொருண யந்திலன் போகின்ற தேயிவன்
கருணை யென்பது கண்டறி யான்பெரும்
பருணி தன்கொல் படுகொலை யானென்றாள்.

1184 வையம் - தேர். பூமியும் ஆம். இராமபிரானது தேரைப் பின் பற்றிச் சென்ற; 'அந்நிலத்தே வந்துகூடிய' என்னலும் ஆம். பொற்பு - அழகு. கை அம்பு அற்ற - எய்து எய்து கையிலே உள்ள அம்புகள் தீர்ந்து போய். மன்மதனுக்கு வாள் தாழை மலர். அம்புகள் எய்து தொலைந்தமையால் மகளிரை வருத்த உடைவாளைக் கொண்டான். என் செய்தான்.....கைவைத்தான்: வினவும் விடையும் ஒருங்கமையக் கூறுவது மரபு; 'தாதையன் றேது செய்தான்.....எதிர் கொள் கென்றான்', 'என் செய்தான் முடிவிலோடினான்' (வி - பா. கிரைமீட். 115; 14 ஆம். 191.) (பி - ம்.) [1]மென் செய்வான்' (ஈஈ)

1185 நானம் - கஸ்தூரி கலந்த மயிர்ச்சாந்து. நாரியரோடு அலால்; நாரியர் - பூமியிலுள்ள மகளிர். வேனல்வேள் - இளவேனிற் காலத்துக் குரிய மன்மதன். பூசல் - போர். நாடியர் - நாட்டிலுள்ள பெண்கள். மண்ணிலுள்ளார்மேல் எய்த அம்புகள் விண்ணிலுள்ளார் மீதும் பட்டன என்க. (ஈஉ)

1186 மருள் மயங்கு - காம மயக்கத்திலே மயங்கியுள்ள. ஒரு பொருளை யும் நயந்தான் இல்லை. நயத்தல் - விரும்புதல். போகின்றதே - நில்லாமல் போகிறதா. பருணிதன் - ஞானபரிபாக முடையவன். 'பருணிதன் கொல்' என்றது அல்லன் என்றபடி. சொல் என்பதைப் பின்பும் கூட்டுக. ஒருத்தி என்பது தோன்ற ஏழனாய். (ஈஇ)

ஒருத்தியின் பரிதாப நிலை

1187 தொய்யில் வெய்ய முலைத்துடி போலிட
[1]நையும் நொய்ய மருங்குலொர் நங்கைதன்
கையு மெய்யு முணர்ந்திலள் கண்டவர்
உய்யு [2]முய்யா ளெனத்தளர்ந் தோய்வுற்றாள்.

ஒரு டெண் ஐயன் தேரின்பின் போவதும் வருவதுமாக இருத்தல்

1188 பூக வூசல் புரிபவர் போலொரு
பாகு போன்மொழி யாண்மலர்ப் பாதங்கள்
சேகு [1]சேர்தரச் சேகவன் றேரின்பின்
ஏகு மீளுமி தென்செய்த வாறரோ.

ஒருத்தி மற்றொருத்தியை 'ஐயன் உலாவரும் இடத்தில் என் மனத்தைக் கண்டாயோ?' என்று கூறுதல்

1189 பெருத்த காதலிற் பேதுறு மாதரில்
ஒருத்தி மற்றங் கொருத்தியை நோக்கியென்
கருத்து மவ்வழிக் கண்டதுண் டோவென்றாள்
அருத்தி யுற்றபின் ஞாணமுண் டாகுமோ.

1187 தொய்யில் : கன்னங்களில் சந்தனக்குழம்பு அப்பி எழுதும் கொடி வீசேடம். போலிட-போலத்தோன்ற. முலையால் நையும். நையும் மெய்யும் : ஒருவழக்கு. உய்யும் உய்யாள் என - சிலர் பிழைப்பாள் என்றும் வேறுசிலர் பிழையாளென்றுங்கூற. உய்யும் உய்யும் (பி - ம்.)- உய்வாளா; வினை அல்லாத ஒன்று வினைவாகப் பயன்படுதல் காகுஸ்வரம் எனப்படும்.

(பி - ம்.) [1]'நைய நொய்தின் வருந்தியோர்' [2]'முய்யுமெனத்' (நகு)

1188 பூகவூசல் - பாக்கு மரத்தே பிணித்த ஊசல்; 577, குறிப். சேகு - வைரம். சேர்தர - உண்டாக. ஓடும் மீளும் - ஓடிவாள் திரும்பிவருவான்.

(பி - ம்.) [1]'சேர்தரச்' (நஎ)

1189 கருத்து - மனம். அவ்வழி - இராமன் தேரினிடம். அருத்தி - ஆசை. 'ஆசை வெட்கமறியாது' என்பது பழமொழி. (நஅ)

ஒருத்தி இவருக்குக் கோடுமை எங்ஙனம் அமைந்தது என்றல்

1190 நங்கை யங்கொரு 'பொன்னையந் தாருய்யத்
தங்க ளின்னுயி ருங்கொடுத் தார்தமர்
எங்க ளின்னுயி ரெங்களுக் கீகிலா
வெங்க ணெங்கண் விளைந்த திவற்கென்றுள்.

ஒருத்தி 'இவருக்கு ஆசை என்பதே இல்லை' என்றல்

1191 நாமத் தாலழி வாளொரு நன்னுதல்
சேமத் தார்வில் லிறுத்தது தேருங்கால்
தூமத் தார்குழற் றூமொழித் தோகைபாற்
காமத் தாலன்று கல்வியி னுலென்றுள்.

ஒருத்தி, 'மன்மதனைவிட வலியவர் யார்?' என்றல்

1192 ஆர முந்துகி லுங்கல னியாவையும்
சோர வின்னுயிர் சோரவெர் சோர்குழல்
கோர வில்லிமுன் னேயெனைக் கொல்கின்றுன்
மார வேளின் வலியவர் யாரென்றுள்.

இராமன் ஒரு மண்டபத்தை அடைதல்

1193 மாத ரின்னண மெய்திட வள்ளல்போய்க்
கோதில் சிந்தை வசிட்டனுங் கோசிக
வேத பாரனு மேவிய மண்டபம்
ஏதின் மன்னர் குழாத்தொடு மெய்தினன்.

1190 ஒருபொன் : எழுவாய். நயந்தார் - விரும்பிச் சரண்புகுந்தவர்கள். உயிர் கொடுத்தார் : சிபிச்சக்கரவர்த்தி முதலியவர்கள். வெம்கண் - கொடுமை. தமருக் கில்லாத வெங்கண் இவற்கு எங்ஙனம் உண்டாயிற்று?

(பி - ம்.) 1 'பெண்ணையந் தாளுய்யத்' (நூக)

1191 நாமத்தால்-இராமன் என்னும் சொல்லால். சேமத்து ஆர் - சனகனது காவலில் பொருந்திய. தோகை - சீதை. கல்வியினுல் - தான் கற்றுள தனுர்வேதத் திறமையை உலகுக்குக் காட்ட வேண்டியதனுல். 'இவனிடம் சிறிதளவேனும் காமம் இருப்பின் எங்களில் ஒருத்திக்கேனும் அருள் செய்யாளோ, அஃது இல்லை' என்பது கருத்து. (சo)

1192 கோரவில்லி-அச்சம் தரும் வில்லை ஏந்திய இராம பிரான்; வீரன் என்றபடி. மாரவேள் - மரண வேதனையைச் செய்யும் மன்மதன். (சக)

1193 எய்திட - காம மயக்கத்தையடைய. வள்ளல் - இராமன். பாரன் பாரகன்; கரைகடந்தவன். ஏதின் மன்னர் - அயல் மன்னர். (சஉ-)

இராமபிரான் இரு முனிவரையும் இறைஞ்சுதல்

1194 திருவி ணுயகன் மின்றிரிந் தாலெனத்
துருவின் மாமணி யாரந் துயல்வரப்
பருவ மேகம் படிவது போற்படிந்
திருவர் தாளு முறையி னிறைஞ்சினான்.

ஐயன் தம்பியர் சூழ ஓர் ஆசனத்தில் அமர்தல்

1195 [1]இறைஞ்ச வன்னவ ரேத்தின ரேவவோர்
நிறைஞ்ச பூந்தவி சேறி நிழல்கள்போல்
புறஞ்செய் தம்பிய ருட்பொலிந் தானரோ
அறஞ்செய் காவலற் கயோத்தியுட் டோன்றினான்.

தசரதன் மண்டபத்துக்கு வருதல்

1196 ஆன மாமணி மண்டப மன்னது
தானை மன்னன் றமரொடுஞ் சார்ந்தனன்
மீனை [1]லாம்வரப் பின்வரும் வெண்மதி
வானி லாவுற வந்தது மானவே.

1194 திரிந்தாலென்ன - வேறுவடிவங் கொண்டாற்போன்ற. துரு இல் - குற்றமில்லாத. முறையின் - வணக்கம் செய்யவேண்டிய முறையில்; முன்னே குல குருவையும் பின்னே வித்தியா குருவையும் வணங்கினான் என்று கொள்க. முன்கவியில் முனிவர் இருவரின் பெயர்கள் அமைந்த முறையைக் காண்க. (சகூ)

1195 ஏத்தினர் - ஆசீர்வதித்து; முற்றெச்சம். ஏவ - இருக்கும்படி கட்டளை இட. நிறைஞ்ச - நிறைந்த; போலி. இராமனைவிட்டுப் பிரியாமலிருந்த தம்பியர்க்கு அவனைப் பிரியாத நிழல் உவமை, 317. புறஞ்செய் - புறத்தே நின்று பாதுகாக்கும்; புறத்தொழில் செய்யும்; அறஞ்செய் ..... தோன்றினான். "மூவர்க்குந் தலைவராய மூர்த்தியா ரறத்தை முற்றும் காவற்குப் புகுந்து நின்றூர் காகுத்த வேடங்காட்டி" (கூ. 15 : 149.) (பி – மீ.) [1]"இறைஞ்சியன்னவர்" (சச)

1196 ஆன - பொருந்தின. மண்டபம் அன்னது - அப்படிப்பட்ட தாகிய மண்டபத்தை. மன்னன் - தசரதன். மீன்எலாம் பின்வர வரும் வெண்மதி: 'பன்மீ னடுவட் பான்மதிபோல ... ..இருந்தோன்' (சிறுபாண். 219 - 20); 'பன்மீ னடுவட் டிங்கள் போலவும்பூத்த சுற்றமொடு பொலிந் தினிது விளங்கி' (மதுரைக். 769 - 70); 'பன்மீ னுப்பட் டிங்கள் போலப் பூத்த சுற்றமொடு பொலிந்து தோன்றலே' (பதிற். 90); 'பன்மீ னுப்பட் டிங்கள் போலவும்' (புறநா. கூ); 'மைந்தர் ..... இருந்தான் விசும்பிற் ..... மாமதித் தோற்ற மொத்தே' (சீவக. 882.) வால் நிலாவுற - வெண்மையான நிலாப் பொருந்தும்படி. (பி – மீ.) [1]"வாம்வர மின்னெளிர் வெண்மதி" (சஙி)

தசரதன் மாதவரை வணங்கி ஓர் ஆசனத்தில் அமர்தல்

1197 வந்து மாதவர் பாதம் வணங்கிமேற்
சிந்து தேமலர் மாரி சிறந்திட
அந்த ணாளர்க ளாசி யோ டாசன
இந்தி [1]ரன்முக நாணுற வேறினான்.

வந்த மன்னர்கள்

1198 கங்கர் கொங்கர் கலிங்கர் தெலுங்கர்கள்
சிங்க ளாதிபர் சேரலர் [1]தென்னவர்
[2]அங்க ராசர் குலிங்க [3]ரவந்திகர்
வங்கர் மாளவர் சோழர் [4]மராடரே.

1199 மான மாகதர் மச்சர் மிலேச்சர்கள்
ஏண வீர [1]லாடர் விதர்ப்பர்கள்
சீனர் [2]சேகுணர் சிந்தியர் [3]சேமகர்
[4]சோன கேசர் துருக்கர் [5]குருக்களே.

1200 ஏதி யாதவ [1]ரேழ்திறற் கொங்கணர்
சேதி ராசர்க ளூட்படச் சேண்விளங்
காதி வானங் கவித்த வவனிவாழ்
சோதி நீண்முடி மன்னருந் தின்னினர்.

1197 தசரதனுக்கு இந்திரன் உவமை : 329, குறிப்.

(பி - ம்.) [1]இந்திராதியர்' (சக)

1198 பெயர்கள் அடைமொழியின்றி வந்தன. தின்னினர் (1200); பயனிலை. அடுத்த கவிக்கும் இது ஒக்கும். (பி - ம்.) [1]கோசலர்' [2]அங்கர் சினர்' [3]ரவந்தியர்' [4]வீராடரே' (சஎ)

1199 இலாடர் - லாட தேசத்தவர். திருக்கர் - திருக்கிய தேசத்தவர். குருக்கள் - குருநாட்டவர்; அஸ்தினபுரத்தைத் தலைநகராகக் கொண்ட நாடு குருநாடு.

(பி - ம்.) [1]ரிராட்டர்' [2]சிங்குனர்சிஞ்சையர்' [3]சேயகர்', 'தெறஞ் சினச்' [4]சோனர் சோமர்' [5]'துளுவரே' (சஅ)

1200 ஏதியாதவர் - ஆயுதங்களையுடைய யாதவ வமிசத்தவர். ஏழ்திறற் கொங்கணர் - ஏழுநாடுகளையுடைய வலிமை பொருந்திய கொங்கண தேசத்தவர்; 'கொங்கண மேழு நீங்கி' (சு. 12 : 32.) ஆதிவானம் - மற்றப் பூதங்களுக்கு முன்னே தோன்றியவானம். வானம் கவித்த அவனி : 'வான்க விந்த வையகம்' (நாலடி. 80.) தின்னினர் - மேலிரண்டு கவிகளுக்கும் இதுவே பயனிலை. (பி - ம்) [1]ரேழுதர்' (சக)

சாமரை வருணனை

1201 தீங்க [1]ரும்பினுந் தித்திக்கு மின்சொலார்
தாங்கு சாமரை மாடு தயங்குவ
ஓங்கி யோங்கி வளர்ந்துயர் கீர்த்தியின்
பூங்கொ ழுந்து பொலிவன போன்றவே.

மங்கையர் பல்லாண்டு கூறல்

1202 சுழலும் வண்டு மிஞிறுஞ் சுரும்புஞ்சூழ்ந்
துழலுந் தும்பியும் பம்பற லோதியர்
குழலி [1]னோடுறக் கூறுபல் லாண்டொலி
மழலை யாழிசை யோடு மலிந்தவே.

குடை வருணனை

1203 வெங்க ணானையன் னான்றனி வெண்குடை
திங்க டங்கள் குலக்கொடி சீதையாம்
மங்கை மாமணங் காணிய வந்தருள்
பொங்கி யோங்கித் தழைப்பது போன்றதே.

தசரதனுடைய சேனைகளின் பெருக்கம்

1204 ஊடு பேர்விட மின்றியொன் றாம்வகை
நீடு மாகடற் றானை நெருங்கலால்
ஆடன் மாகளி யானைச் சனகர்கோன்
நாடெ லாமொரு நன்னக ராயதே.

1201 மாடு - பக்கங்களில். தயங்குவ - விளங்குவன. கீர்த்தியின்கொழுந்து. 251. சாமரைக்குப் புகழ்உவமை.

1202 வண்டின் சாதிகள் : 888 குறிப். பம்பு - நெருங்கும். அறலோதியர் - கருமணலைப் போன்ற கூந்தலையுடைய பெண்கள். குழலோடு உற - புல்லாங்குழல் ஓசையோடு பொருந்த - பல்லாண்டு கூறுவோர் மகளிர்; 250, குறிப். (பி - ம்.) [1] னோசையிற்' (௫௧)

1203 ஆனையன்னான் - யானையைப் போன்ற தசரதன். குடை, தங்கள் குலக் கொடியாம் மங்கை மாமணம் காணிய திங்கள் வந்து தழைப்பது போன்றது. சீதை சந்திர வமிசம் : 1121, குறிப். ஒப்பு : 1231 (௫௨)

1204 ஊடு - இடையில். கடல் தானைஆடல் - வலிமை. நாடெலாம் ஒரு நகர் : 188, 'வையநின் னகரி' (அரிச். சூழ்வினை. 20.) (௫௩)

சனகன் உபசரித்த முறை

1205 ஒழிந்த தென்னினி யொண்ணுத றுதைதன்
பொழிந்த காத [1]றொடரப் பொருளெலாம்
அழிந்து [2]செய்துகொண் டாடலி னன்புதான்
இழிந்து ளார்க்கு மிராமற்கு மொத்ததே.

1205 பொருள் - செல்வம். அழிந்து – சொரிந்து; 'அழியுமது மாலை யார்' (சீவக, 2575, ந.) அன்பு - ஒத்தது.

(பி - ம். [1]றுரப்பப்' [2]'செய்கை கொண்டாடினரன்பு' (கோ)

உலாவரு படலம் முற்றும்.

20. கோலங்காண் படலம்

சீதையைக் கொணரும்படி சனகனுக்கு வசிட்டர் கூறுதல்

1206 [1]தேவியர் மருங்கு சூழ
விந்திர னிருக்கை செய்த
ஓவிய முயிர்பெற் றென்ன
வுவந்தர சிருந்த காலை
தாவில்வெண் கவிகைச் செங்கோற்
சனகனை யினிது நோக்கி
மாவிய னேக்கி ஞாலக்
கொணர்கென வசிட்டன் சொன்னான்.

சனகன் கட்டளையை மாதர் ஓடித் தாதியருக்குக் கூறுதல்

1207 உரைசெயத் தொழுத கையன்
னுவந்தவுள் ளத்தன் பெண்ணுக்
கரைசியைத் தருதி ரீண்டென்
றுயிழை யவரை யேவக்
கரைசெயற் கரிய காதல்
கடாவிடக் கடிது சென்றார்
பிரைசமொத் தினிய சொல்லார்
பேதைதா தியரிற் சொன்னார்.

1206 இந்திரன் இருக்கை செய்த ஓவியம் உயிர் பெற்றென்னத் தேவியர் மருங்குசூழ அரசு உவந்து இருந்தகாலை. தேவியர் – கோசலை முதலிய மூவர். தசரதனுக்கு இந்திரன் : 3289. மாஇயல் நோக்கினள் – மாவடுவின் தன்மையையுடைய கண்களைப்பெற்ற சீதையை.

(பி – ம்.) [1]'தேவர்கள்.....னிருக்குஞ் செவ்வி', 'ஏவியர்..... யேய்ந்த' (உ)

1207 அரைசி – அரசி; போலி. கரைசெயற்கு அரிய காதல் : 327, குறிப். கடாவிட – செலுத்த. பிரைசம் – தேன். தாதியரில் – தாதிமாரிடத்தில். (உ)

தாதியர் சீதையை அலங்கரித்தல்

1208 அமிழிமைத் துணைகள் கண்ணுக்
[1]கணியெனத் தகைக்கு மாபோல்
உமிழ்சுடர்க் கலன்க ணங்கை
யுருவினை மறைப்ப தோரார்
அமிழ்தினைச் சுவைசெய் தென்ன
வழகினுக் கழகு செய்தார்
இமிழ்திரைப் பரவை ஞால
மேழமை யுடைத்து மாதோ.

கூந்தலில் மாலை சூட்டல்

1209 கண்ணன்றன் [1]னிறந்தன் னுள்ளக்
கருத்தினை நிறைத்து மீதிட்
டுண்ணின்ற கொடிக ளோடி
யுலகெங்கும் பரந்த தன்ன
வண்ணஞ்செய் கூந்தற் பார
வலயத்து மழையிற் றோன்றும்
விண்ணின்ற மதியின் மென்பூஞ்
சிகழிகைக் கோதை வேய்ந்தார்.

1208 அமிழிமைத் துணைகள் - மூடுதற்கு உரிய இரண்டு இமைகள். அணி என தகைக்குமாபோல் - அழகு என்று சொல்லி அந்த அழகைக் கெடுத்தல்போல். அமுதை அதனினும் சுவைசெய்தல் இயலாது. கலன்கள் உருவை மறைத்தன 'கோலங் கொள்ளும், ஆடகப் பைம்பூண் ணருவிலை யழிப்பச், செய்யாக் கோலமாடு வந்தீர்க்கு' சிலப். கக : 9 - 11); 'பவழமும் ..... அணிகல மணிவோ ரணியி லோரே, மறுப்பருங் காட்சி யிவள்போன் மாண்டதம், அறுப்பே யணிகல மாகவுடையோர்' (பெரும். ச. 17 : 75 - 9); 'ஆனபோரணிட் கெல்லா மணியென வணிந்த செல்வி' (பாகவத. 1847.) இமிழ் - ஆரவாரம். இமிழ் திரைப் பரவை ஞாலம் : 2. 3 : 67. ஏழமை - அறியாமை. ஒப்பு : 601.

(பி - ம்.) [1]கழிகினைத்'; 'கணியென வமைக்கு' (கூ)

1209 கண்ணன் - இராமன்; எ. 15 : 152. கண்ணன்றன் நிறம் - இராமனுடைய கரிய நிறம். நிறவித்து (பி - ம்) - கரியநிறத்தைக்கூடிய விதை. கூந்தல் பாரவலயத்து - வட்டமாக முடித்துள்ள கூந்தலின் தொகுதியில். சிகழிகைக் கோதை - சிகழிகை என்ற ஒருவகை மாலையை. மங்கல மாதல்பற்றிச் சூட்டியது வெண்பூ என்க. வலயத்து வெண்பூ மாலைக்கு மேகத்துச் சந்திரன்.

(பி - ம்.) [1]நிறவித்தொன்றைக் கருத்தினிற் புதைக்க மங்கை, யுண்ணின்றுங் கொடிகளாகி யுதித்தெங்கும் படர்தற் கொத்த' (ஊ)

நேற்றியில் சுட்டியும் பிறவும் அணிதல்

1210 விதியது வகையால் வான
[1]மீனினம் பிறையை வந்து
கதுவுறு கின்ற தென்னக்
[2]கொழுந்தொளி கலுழத் தூக்கி
[3]மதியினை நக்க மேக
மருங்குநா வளைப்ப தென்னப்
பொதியிரு ளகல பந்தி
[4]பூட்டிய பூட்டி விட்டார்.

குழையை அணிதல்

1211 வெள்ளத்தின் சடிலத் தான்றன்
வெஞ்சிலை யிறுத்த வீரன்
தள்ளத்தன் னுவி சோரத்
தனிப்பெரும் பெண்மை தன்னை
அள்ளிக்கொண் டகன்ற காளை
யல்லன்கொ லாங்கொ லென்பாள்
உள்ளத்தி னூச லாடுங்
குழைநிழ லுமிழ விட்டார்.

1210 விதியது வகையால் - முறையாக. கொழுந்து - நெற்றிச் சுட்டி பிறை நெற்றிக்கும், நட்சத்திரங்களின் கூட்டம் சுட்டி என்னும் ஆபரணத் துக்கும். ஒளிகலுல - ஒளிகிறையும்படி. தூக்கி - தொங்கவிட்டு. நக்க - நக்கு வதற்கு. மேகத்தின் நா என்றது மின்னல். 'கருங் கொண்மூ வாய்திறந்த மின்' (நாலடி. 8.) பூட்டிய - பூட்டவேண்டிய அணிகளை.

(பி – ம்.) [1]'மீதுறு பிறையை வந்து கதிருறு கின்ற தென்னக் கலு லொளிக் கொழுந்து தூக்கி' [2]'கொழுந்தணி' [3]'மதியிளங் கதிர்கள் மேக மருங்கினை வளைப்பதேபோல்', மதியினைத் தந்தமேகம்' [4]'பூமுடிப்பூட்டி', 'பூட்டிய பூட்டு மிட்டார்' (ஈ)

1211 வெள்ளம் - கங்கையின் வெள்ளம்; 784. தன் - சீதையின். தள்ள - தடுமாற. பெண்மையை அள்ளிக்கொண்டமை : 606. காளை - பதி னெறு பிராயத்தான்; நக்க. 5. சீதையின் ஐயம் : 817. என்பாள் உள்ளத்தின் - என்னும் சீதையின் உள்ளத்தைப்போல. குழை - காதணி. (ஈ)

1212 கோனணி சங்கம் வந்து
குடியிருந் தனைய கண்டத்
தீனமில் கலன்க டம்மி
னியைவன வணிதல் செய்தார்
மானணி நோக்கி ஞர்தம்
மங்கலக் கழுத்துக் கெல்லாம்
தானணி [1]யென்ற போது
தனக்கணி யாது மாதோ.

மார்பில் முத்துவடம் அணிதல்

1213 கோணிலா வான மீன்க
ளியைவன [1]கோத்த தென்கோ
வாணிலா வயங்கு செவ்வி
வளர்பிறை [2]வகிர்ந்த தென்கோ
நாணிலா நகையி னின்றோர்
நளிர்நிலாத் தவழ்ந்த தென்கோ
பூணிலா முலைமே லார
முத்தையான் புகல்வ தென்னே.

1212 கோன் அணி - இராமாவதாரமெடுத்த திருமால் கையில் வைத்திருந்த சங்கு. பெண்களின் கருத்துக்கு உவமை. மான் அணி நோக்கினர் - மான் போன்ற அழகிய கண்களையுடைய பெண்கள். பெண்களுக்கெல்லாம் மாங்கலியமாக இருப்பவள் திருமகள். கண்டத்துக்கு வேறு அணி வேண்டாவாயினும் இயைவன அணிதல் செய்தார். (எ)

1213 கோண் - மாறுபாடு; சீவக. 28. மாறுபாடில்லாத மீன்கள் என்றது, வானத்தே செல்லுங்கால் ஒன்றை ஒன்று மோதிக் கொள்ளாமல் அதனதன் வழியிற் செல்லும் மீன்கள் என்றபடி. என்கோ - என்பேனே; வான் நிலா வயங்கு செவ்வி வளர்பிறை - ஒளி பொருந்திய நிலவானது விளங்குகின்ற அழகு வளர்கின்ற பிறைச் சந்திரனை. வகிர்ந்தது - இரண்டாகப் பிளந்தது. நாள் நிலா நகையில் நின்று - அன்று உண்டான ஒளியையுடைய நகையினிலிருந்து. பூண் நிலா முலை - அணிகள் விளங்கும் முலைகள்; நிலாம் - நிலாவும். ஆரமுத்து - முத்து வடம்.

(பி - ம்.) [1]'குவிந்த வென்கோ' (அ)

அணிந்த முத்து வடத்தின் தோற்றம்

1214 மொய்கொள்சீ றடியைச் சேர்ந்த
முளரிக்குஞ் செம்மை யீந்த
[1]தையலா ளமிழ்த மேனித்
தயங்கொளி [2]தழுவிக் கொள்ள
வெய்யபூண் முலையிற் சேர்ந்த
வெண்முத்தஞ் சிவந்த வென்றூற்
செய்யவர்ச் சேர்ந்து ளாருஞ்
செய்யராய்த் திகழ்வ ரன்றே.

தோள் அலங்காரம்

1215 கொமையுற வீங்கு கின்ற
குலிகச்செப் பனைய கொங்கை
சமையுற நுடங்கு கின்ற
நுசுப்பினுள் [1]பூண்பெய் தோளுக்
[2]கிமையுற விமைக்குஞ் செங்கே
ழினமணி முத்தி னேடும்
[3]அமையிடை யமைவ துண்டா
மாகினைப் பாகு மன்றே.

1214 மொய் - பெருமை; 1221 நான்மணி. 23, ப - பை. தாமரை மலர் சிவந்திருப்பது திருமகளின் பாதங்கள். தீண்டப் பெற்றதனால் என்ற காரணம் கற்பித்திருப்பது பாராட்டத்தக்கது. உறுதோறும் உயிர் தளிர்த்ததை வால் அமிழ்த மேனியென்றார் மேனியின் தயங்கொளி என்பது செந்நிற வொளியை. வெய்ய - விருப்பத்தைத் தருகின்ற. சிவந்த - சிவந்து காட்டின. செம்மைக் குணம் உடையோர். வேற்றுப் பொருள் வைப்பணி.

(பி - ம்.) [1]'தையலாள்பவள்' [2]'தழுவிச்சார' (க)

1215 கொமை - திரட்சி. குலிகச் செப்பு - இரகுலிகக் கலசம்; சாதிலிங்கம் என்ற செந்நிறப் பொருள் பூசிய செப்பு. இமை உற இமைக்கும் - பார்ப்பவரின் கண்கள் ஒளி மிகுதியினால் மூடிக்கொள்ளும் படி ஒளி வீசுகின்ற; இமையற இமைக்கும் (பி - ம்.) - விடாமல் பிரகாசிக்கும். செங்கேழ் - செந்நிற முடைய. 'மணியானது முத்தினோடும் அமைவதுண்டாயின்' என இலயக்க. அமையிடை - மூங்கிலினிடத்து. அத்தகைய அமை ஒப்பாகும் என்க.

(பி - ம்.) [1]'தூணெனன்றோளுக்' [2]'இமையற' [3]'அமையுற' (கஎ)

கையில் கடகம் அணிதல்

1216 தலையவிழ் கோவை யோதிச்
சானகி தளிர்க்கை யென்னும்
முளரிக ளிராமன் செங்கை
முறைமையிற் றீண்ட நோற்ற
[1]அளியன கங்குற் போதுங்
குவியல தாகு மென்றுங்
இளவெயில் சுற்றி யன்ன
வெரிமணிக் கடக மிட்டார்.

முலையில் கொடியும் வில்லும் எழுதினமை

1217 சில்லிய லோதி கொங்கைத்
திரள்மணிக் கனகச் செப்பில்
வல்லியு மனங்கன் வில்லு
மான்மதச் சாந்திற் றீட்டிப்
பல்லிய நெறியிற் பார்க்கும்
பரம்பொரு ளென்ன [1]யார்க்கும்
இல்லையுண் டென்ன நின்ற
[2]விடையினுக் கிடுக்கண் செய்தார்.

1216 ஓதி - கூந்தல். முறைமையின் - அங்கி சான்றாக வேதவிதிப்படி. நோற்ற - நோன்பைச் செய்துள்ளன. அளியன - அளிக்கத்தக்கன, வண்டுகளை உடையன என்பது தொனிப்பொருள். என்று - என்று எண்ணி. இளவெயில் - இளஞ் சூரியன். கடகம் - கைவளைகள்.

(பி - ம்.) [1]'அளவிய' (கக)

1217 சில் இயல் ஓதி - சிலவாகிய பகுப்புக்களையுடைய கூந்தல்; 'சில்லிருங் கூந்தல்' (பெரும். க. 56 : 46.) வல்லி - காமவல்லி என்னும் கொடி: சீவக 2442. முலையில் கொடியும் வில்லும் எழுதுதல் : மான்மதச் சாந்து - கத்தூரி கலந்த சந்தனம். இட்டிடை (பி - ம்)- சிறிய இடை. 'இட்டிடைப் பின்னை கேள்வன்' (திருச்சிற். 13.) பல் இயல்நெறியின் - பலவகைப்பட்ட மதங்களென்னும் வழிகளால். இடைஉண்டு இல்லை என்றல்; நூல்களும் பிண்டத்தும் உண்மையின் உண்டென்றும், கட்புலனாகாமையின் இல்லை யென்றும் ஐயுறுதல்; 'இட்டிடை யிருக்குந் தன்மை தொட்டவெற் குணரா வாமற் றுண்டெனுஞ் சொல்லு மில்லை' (ச. 10 : 38); 'நுடங்கிடையை, உண்டெனத் தமர்மதிப்பர் நோக்கினூர் பிறரெல்லாம், உண்டில்லை யெனலையல்லதொன் றுணர்வரிதே' (சீவக. 172.) இடுக்கண் செய்தார் : இயல்பாக உள்ள பாரத்தைத் தாங்காமல் நடுங்கும் இடைக்கு மான்மதச் சாந்தின் பாரம் அதிகமாயிற்று; 'அனிச்சப்பூக் காலையாள் பெய்தா னுசுப்புக்கு,

இடைக்கு உரிய அணிகளை அணிதல்

1218 நிறஞ்செய்கோ சிகநுண் டூசு
நீவிநீ வாத வல்குற்
புறஞ்செய்மே கலையும் [1]பாரத்
தாரகைச் சுமையும் பூட்டித்
திறஞ்செய்கா சின்ற சோதி
பேதைசே யொளியிற் [2]சேர்ந்து
கறங்குபு[3]திரியத் தாமுங்
கண்வழுக் குற்று நின்றார்.

பாதங்களிற் சிலம்பை அணிதல்

1219 ஐயவா யனிச்சப் போதி
[2]னதிகமு நொய்ய வாடற்
பையர வல்கு லாடன்
பஞ்சின்றிப் பழுத்த [4]பாதச்
செய்யபூங் கமல [5]மன்னச்
சோத்திய சிலம்பு சால
நொய்யவே நொய்ய வென்றே
பலபட நுவல்வ தம்மா.

கல்ல படாஅ பறை' (குறள், 1115); அஞ்சன மெழுத லாற்றே தம்மவோ வென்று மையும், வஞ்சிநுண் ணிடை' (நைட. சுயம். 165) என்பவற்றைக் காண்க. (பி - மீ.) [1]'யாரும்' [2]'விட்டிடைக்' (கூ)

1218 நிறம்செய் கோசிகநுண் டூசுநீவி - ஒளியைச் செய்கின்ற பட்டாகிய நுட்பமான ஆடையின் முடிச்சு. நீவாத - அகலாத. புறம்செய் - ஆடைக்குப் புறத்தே அழகுசெய்கின்ற. தாரகைச் சுமை இடையிற் கட்டும் ஓர் அணி. நட்சத்திரக் கூட்டம்போலப் பலவடங்களில் முத்துக்களால் இயன்றது; திறம்செய் - பலநிறங்களோடு கூடிய. காசு - மணிகள். சோதிபேதை யாகிய பிராட்டியாரது சிவந்த ஒளியிலுற் சிவந்து சுழன்று உலாவ; பேதை - சிறுபெண் என்றபடி. தாமும் - அழகுபடக் கோலஞ்செய்த தாதியர் தாங்களும். கண்வழுக்குறுதல் - கண்ஒளி மழுங்குதல்.

(பி - மீ) [1]'தாழத்' [2]'சேர்த்திக்', 'றீர்ந்த' [3]'திரியுமாதர்' (கூ)

1219 ஐயஆய் - மிகவும் நுண்ணியவாகி. பாதங்களாகிய செய்யபூங் கமலங்களில் பொருந்தும்படி சேர்த்திய. நொய்ய - மெல்லியன; என்றது பாதங்களை. பலபட - பலவித ஒலிகள்தோன்ற. சிலம்பு ஒலிப்பது பாதம் நொய்ய வென்று கருதியோ? பிரதிபேதப்படி : 'பாதம் கமலமென்னிற் சிலம்பு நுவல்வது நொய்ய வென்றே'

(பி - மீ.) [1]'ஐயவாம்' [2]'ணனிதிகழழகுக் கேற்ற' [3]'பஞ்சுறப்' [4]'பாதம்' [5]'மென்னிற்', 'மின்னச்' [6]'நொய்யவோ நோன்மையன்றே பலபட நுவல் வரம்மா' (கூ)

கண்களுக்கு மை யிடல்

1220 நஞ்சினே டமுதங் கூட்டி
நாட்டங்க ளான வெண்ணச்
செஞ்செவே நீண்டு மீண்டு
சேயரி சிதறித் தீய
வஞ்சமுங் களவு மின்றி
மழையென மதர்த்த கண்கள்
அஞ்சன நிறமோ வண்ணல்
வண்ணமோ வரித மேற்றும்.

நெற்றிக்குத் திலகம் இடல்

1221 மொய்வளர் குவளை பூத்த
முளரியின் மூளைத்த [1]முந்நாள்
மெய்வளர் மதியி னுப்பண்
மீனுண்டே லனைய தேய்ப்ப
வையக மடந்தை மார்க்கு
நாகர்கோ தையர்க்கும் வானத்
தெய்வமங் கையர்க்கு [2]மேலாந்
திலகத்தைத் திலகஞ் சேர்த்தார்.

1220 கண்களில் நஞ்சும் அமுதமும் உள்ளன : கரிய நஞ்சு கருவிழிக்கும், வெள்ளிய அமுது வெள்ளை விழிக்கும் உவமை; 'அமிழ்தினின் வீளர்த்து ணஞ்சினிற் கருகி.....கண்ணிணை' (நைடத. அன்னத்தைத். 13.) செஞ்செவே - மிகச் செவ்வையாக; 358. வஞ்சமும் களவும் இல்லாமை காமநோக்குடன் எவரையும் பாராமையாற் பெறப்படும். மதர்த்த - கொழுத்த. அஞ்சன நிறமோ - மை தீட்டப் பெற்றதால் உண்டான கருநிறமோ. அண்ணல் வண்ணமோ : இராமனுடைய நிறம் போர்த்ததனால் கரிய ஆயினவோ; 1161. (கஇ)

1221 மொய் - பெருமை; 1214; 'இதழ்கள் அடர்ந்த' எனினும் ஆம். முந்நாள்மதி - மூன்றும்பிறைச் சந்திரன். 'முந்நாட் பிறையின் முனியாது வளர்ந்து' (நன். சூ. 401, சங். மேற்.) இது நுதலுக்கு உவமை. குவளை கண்களுக்கும், முளரி முகத்துக்கும், மீன் திலகத்துக்கும் உவமை.

(பி - ம்.) [1]முன்னாள்' [2]மெல்லாந் திலகத்தைத் திலகஞ் செய்தார்' (கக)

விடு பூக்களையும் பொற்பொடியையும் அணிதல்

1222 சின்னப்பூச் [1]செருகு மென்பூச்
[2]சேகரப் பூவும் கோதில்
கன்னப்பூக் களுல மீது
கற்பகக் [3]கொழுந்தி யாவும்
மின்னப்பூஞ் சுரும்பும் வண்டு
மிஞிறுங் தும்பிகளு [4]மார்ப்பப்
புன்னைப்பூந் தாது மானும்
பொற்பொடி யப்பி விட்டார்.

கண்ணேறு கழித்தல்

1223 நெய்வளர் விளக்க மாட்டி
நீரொடு பூவுந் தூவித்
தெய்வமும் பராவி வேத
[1]பாரர்க்குஞ் செம்பொ னல்கி
ஐயவி [2]யறுகு சேர்த்தி
வானிற வயினி சுற்றிக்
[3]கைவளர் மயில ளுலா
வலஞ்செய்து காப்பு மிட்டார்.

1222 சின்னப்பூ. 990, குறிப் சேகரப்பூ - உச்சிப்பூ. கன்னப்பூ--- காதில் அணியும் பூ. இவை, பொன்னுலியன்றவை என்பாருமுளர். கற்பகக் கொழுந்து : 'அரசர் தமது ஆணையால் இவ்வுலகிற் கொணர்ந்த கற்பகம் தேவரது சாபத்தால் தன் நிலையன்றிப் பூ அவ்வே உண்டாயிற்றென்க' (சீவக. 1710, ந.) மீது - மார்பின்மேல். வண்டின் சாதிகள் : 888, குறிப். புன்னைத்தாது பொற்பொடிக்கு. பொடியை உடலில் அப்புதல் : 'விரிமலர், வேங்கை நுண்டாதப்பி' (முருகு. 35-6.)

(பி - ம்.) 1'செருகி', 'செருக்கு' 2'செக்கர்ப்பூம் போது. 'காதில்', சீகரப் போதுந் தேசார்' 3.கொழுந்துமான' 4.தும்பிகளும் வேட்கும்' (கஎ)

1223 விளக்கம் மாட்டி - தீபத்தை ஏற்றி. பராவி - தொழுது. பாரர் - வணித்திருப்பவர். ஐயவி - வெண்சிறுகடுகு. அறுகு - அறுகம்புல். ஐயவி அறுகு சேர்த்தல் : குமாரஸம் எ : 7. வால்நிற - வெண்ணிறமான. அயினி - சோற்றையுடைய ஆலாத்தி. ஐயவியும் அறுகும் அயினியும் திருஷ்டிபரிகாரப் பொருள்கள்; 'பூதி யணிந்தாங் கயினிநீர் சுழற்றித் தெய்வம் பராய்ப்போற்றி' (நைடத. அன்னத்தைத். 129.) காப்பு - ரட்சை.

(பி - ம்.) 1'பாரகர்க் கீந்து செம்பொன்' 2.நுதலிற்' 3.மைவரை', ,கைவளை' (கஅ)

மகளிர் சீதையின் அழகைக்கண்டு மயங்குதல்

1224 கஞ்சத்துக் களிக்கு மின்றேன்
கவர்ந்துணுப வண்டு போல
அஞ்சொற்கள் கிள்ளைக் கெல்லா
மருளுவா ளழகை மாந்தித்
தஞ்சொற்கள் குழறித் தத்தந்
தகைதடு மாறி நின்றூர்
மஞ்சர்க்கு மாத ரார்க்கு
மனமென்ப தொன்றே யன்றே.

1225 இழைகுலா முலையி னாளை
யிடையுவா மதியி னோக்கி
மழைகுலா [1]வோதி கல்லார்
களிமயக் [2]குற்று நின்றூர்
உழைகுலா நயனத் தார்மாட்
டொன்றென்றே விரும்பற் கொத்த
தழகெலா மொருங்கே கண்டால்
யாவரே யாற்ற வல்லார்.

1224 களிக்கும்தேன் - களிப்பதற்குக் காரணமான தேன். 'அருளு வாள் அழகை வண்டுபோல மாந்தித் தடுமாறி நின்றூர்' மகளிர் - பிறமகளிர் அழகில் மயங்குதல். 600; 'கண்பிற பொருளிற் செல்லா கருத்தெனி னஃதே கண்ட, பெண்பிறந் தேனுக் கென்று லெண்படும் பிறருக் கென்றுள்' (கூ. 5 : 60); 'பெண் மகிழ் வுற்ற.....மகளிர்' (மதுரைக். 555); 'இவளழகு எமக்குங்கூட வியப்பாயிற்று, இனி இவருக்குச் சொல்ல வேண்டுமோ' (பரி. உக : 22, பரிமேல்); 'பெண்டிரு மாண்மை வெஃகிப் பேதுறு மூலை யினுள்', 'ஆண்விருப் புற்று நின்ற ரவ்வளைத் தோளி னுமே' (சீவக. 587, 2447.) மஞ்சர் = மைந்தர் - ஆண்மக்கள்; போலி; 1269; உ. 3 : 55. (கக)

1225 இழை - ஆபரணங்கள். இடையுவாமதியின் நோக்கி - பௌர்ணமி சந்திரனைக் கண்டாற்போலப் பார்த்து. வெள்ளணி அணிந்த சீதைக்கு மதி உவமை; சந்திர வமிசத்தவள் ஆதலும் ஒன்று; உழை - மான். 3 - 4 : 'பெண்களா னூர்க்கு ணல்ல வுறுப்பெலாம் பெருக்கி நீட்ட எண்களா லளவா மானக் குணந்தொகுத் தியற்றி னாளை' (சூ. 16 : 5); 'நல்லார், உறுப்பெலாங் கொண்டியற்றி யான்கொல்' (கலி. நெய்தல் : 7-8:) பெண்கள் சீதையைக் கண்டு மயங்கல் : 1224; ஆடவரும் பெண்டிரும் மயங்கல் : 1234.

ஒரு பிரதிபேதப்படி, 'மதியைநோக்கி உலகெலாம் களிமயக்குற்ற தென்ன முலைபினாளை ஒருங்கேகொண்ட அழகுக்கு மயங்கி நின்றூர்' என்றது முடிபு.

(பி - மீ.) [1]'வுலகமெல்லாங் களிமயக்குற்ற தன்றே' [2]'குற்றதென்ன'

1226 சங்கங்கை யுடைமை யாலுந்
தாமரைக் [1]கண்ண தாலும்
எங்கெங்கும் பரந்து பல்வே
றுள்ளத்து மெழுதிற் றென்ன
அங்கங்கே தோன்ற லாலு
மருந்ததி யனைய கற்பின்
நங்கையு நம்பி யொத்தா
ணுமினிப் புகல்வ தென்னே.

1227 பரந்தமே கலையுங் கோத்த
பாதசா லகமு நாகச்
சிரஞ்செய்நூ புரமும் வண்டுஞ்
சிலம்பொடு சிலம்பி யார்ப்பப்
புரந்தரன் [1]றனக்குற் றுளா
யரம்பையர் புடைசூழ்ந் தென்ன
வரம்பறு [2]மழலைத் தீஞ்சொன்
மடந்தையர் தொடர்ந்து சூழ்ந்தார்.

1228 சிந்தொடு குறளுங் கூனுஞ்
சிலதியர் குழாமுந் தெற்றி
வந்தடி [2]வணங்கிச் சுற்ற
மணியணி விதான நீழல்
[3]இந்துவின் கொழுந்து விண்மீ
னினத்தொடும் வருவ தென்ன
நந்தலில் விளக்க மன்ன
நங்கையு நடக்க லுற்றாள்.

1226 திருமாலுக்கும் சீதைக்கும் சிலேடை. சங்கம் - சங்கு, வலையல். தாமரைபோற் கண்கள் பெற்றிருத்தலாலும்; தாமரையைத் தங்கும் இடமாகப் பெற்றிருத்தலினாலும். தாமரைக் கண்ணனென்பது திருமாலின் பெயர் களுள் ஒன்று. (பி - மீ.) [1]'கோயிலாலும்' (உக)

1227 நாகச் சிரம்செய் நூபுரம் - மாணிக்கப் பரலையுடைய காலணி. வண்டு - வலையல்; வண்டாகிய பறவையும் ஆம். புரந்தரன் தனக்கு உற்றாள் - இந்திராணி

(பி - மீ.) [1]'பிழற் கீழாஞ ரம்பையர்', 'கோற்கீழாணை யரம்பையர்' [2]'சும்மைத்' (உஉ)

1228 தெற்றி - மெருங்கி. சிந்தொடு..... .....வணங்க : 888, குறிப். சீதைக்கு இந்துவின் கொழுந்து உவமை சந்திர வமிசத்தவள் ஆதல்பற்றி; சந்திர வமிசம் என்பது : 1121, 1203, 1231. சீதைக்குச் சந்திரன்; சூழ்ந்த மகளிருக்கு விண்மீன்கள் : 'பற்பன் னூருயிரவர் கண்ணும் கவரும் ஒண்ணுதல் மகளிர் தற்சூழத் தாரகை நடுவண் தண்மதிபோலச் செல்வாள்'

வேறு

1229 வல்லியை யுயிர்த்தநில மங்கையிவள் பாதம்
மெல்லிய வுறைக்குமென வஞ்சிவெளி யெங்கும்
பல்லவ மலர்த்தொகை பரப்பின ளெனத்தன்
நல்லணி மணிச்சுடர் தவழ்ந்திட நடந்தாள்.

1230 தொழுந்தகைய மென்னடை தொலைந்துகளி யன்னம்
எழுந்திடை விழுந்தயர்வ தென்னவய லெங்கும்
கொழுந்துடைய சாமரை குலாவவொர் கலாபம்
வழங்குநிழன் மின்னவரு மஞ்ஞையென வந்தாள்.

1231 மண்முதலனைத்துல்கின் மங்கையர்க ளெல்லாம்
[1]கண்மணி யெனத்தகைய கன்னியெழில் காண
அண்ணன்மர பிற்சுட ரருத்தியொடு தானவ்
விண்ணிழிவ தொப்பதொர் விதானநிழல் வந்தாள்.

(இறை. 2, உரை.) நந்தலில் விளக்கு : 'நந்தாவிளக்கே நாமிசைப் பாவாய்' (மணி. கச : 18.)

(பி - ம்.) [1]'சுற்றி' [2]'வணங்கிப் போற்ற' [3]'இந்துவந் திழிந்து' (உரு)

1229 வல்லி - சீதை. நில மங்கை - பூமி தேவி. 'நிலமங்கை பெற்றெடுத்த என்பதற்கு ஏற்பச் சீதையைக் கொடி என்றது ஒரு நயம். பல்லவம் மலர்த்தொகை - தளிர்களையும் தொகுதியான மலர்களையும். மங்கை பரப்பினள் என ஒளி தவழ்ந்திட, அணிகளின் பல நிறங்கள் தளிர்களுக்கும் மலர்களுக்கும்.

சில பிரதிகளில் இதன்பின் கீழ்வரும் பாடல் ஒன்று காணப்படுகிறது :

'பொன்னின்மணி கிண்கிணி சிலம்பொடு புலம்ப
மின்னனைய மேகலைகள் மெல்லென மிழற்றச்
சின்னமலர் கொண்டுசில சேடியர்கள் சூழ
அன்னமென வல்லவென வாமென நடந்தாள்.'

இச் செய்யுள் மூன்றுமடி சிறிது வேறுபட்டு கூ. 5 : 33 க்குப்பின் அதிகப் பாடலாகச் சில பிரதிகளிற் காணப்படுகின்றது.

1230 தொலைந்து - அழிந்து. கொழுந்து - ஒளியின் கொழுந்து. சாமரைக்கு அன்னங்கள். கலாபம் - மயிலைக் குறிக்கும் போது தோகை; சீதையைக் குறிக்கும்போது இடைக்கு உரிய பதினாறு கோவையான அணி. வழங்கு நிழல் - தருகின்ற ஒளி.

1231 கன்னி - சீதை. அண்ணல் - இராமன். சுடர் - சூரியன். அருத்தி - ஆசை. ஒப்பு : 1203.

1232 கற்றைவிரி [1]பொற்சுடர் பயிற்றுறு கலாபம்
சுற்றுமணி [2]புக்கவிழை மிக்கிடை [3]துவன்றி
விற்றவழ [4]வாண்மிளிர மெய்யணிகண் மின்னச்
சிற்றிடை நடங்கவொளிர் சீறடி பெயர்த்தாள்.

1233 பொன்னினொளி பூவின்வெறி சாந்துபொதி சீதம்
[1]மின்னினிழ லன்னவடன் [2]மேனியது மான
அன்னமு மரம்பையரு மாரமிழ்து நாண
மன்னவை யிருந்தமணி மண்டப மடைந்தாள்.

கம்பராமாயணப் பழைய வசனத்துள் இப்பகுதி, 'இந்தச் சீதையினுடைய அழகைப் பார்க்கிற நிமித்தம் ஆகாயத்தில் பிரகாசிக்கிற அருந்ததி அநேக நக்ஷத்திரங்களுடனே கூட வந்திருக்கிறது போலப் போட்டிருக்கிற முத்துப் பந்தலின் கீழலில் வந்து சேர்ந்தாள்' என்று காணப்படுகிறது.

(பி - மீ.) [1]. கண்ணிழலெனத்' [2]. கண்ணெளி' (உசு)

1232 கற்றைவிரி - தொகுதியாக விரிந்த. மணிபுக்க இழை - மணிகள் பதித்த ஆபரணம். இடைதுவன்றி - இடுப்பில் பொருந்தி. வில், வாள் என்பன ஒளிகள். சீறடி - சிறிய அடிகள்.

(பி - மீ.) [1]'பொற்பிடை' 'பொற்கடை' [2]'புக்குநிறை நின்ற' 'புக்கநிரை' [3]. துவன்ற' [4]. வாளொளிர', 'வாணிமிர' (உஎ)

1233 வெறி - வாசனை. சாந்து பொதிசீதம் - சந்தனத்திலுள்ள தண்மை. நிழல் - ஒளி. மேனியது - திருமேனியை; அது : பகுதிப் பொருள் விகுதி. பிராட்டியாரின் உடல் ஒளியையும் வெறியையும் தண்மையையும் பெற்றுள்ளதென்பது கருத்து. 'மேனியது' என்பதற்கு மேனியிலுள்ள தென்பது எனினும் ஆம். 'மேனியது' என்பதற்கு, 'மேனியிலுள்ளதை' என்று பொருள் கொண்டு, 'பொன்னின் ஒளி மேனியின் ஒளியையும் பூவின் வெறி மேனியின் வெறியையும் சாந்தின் சீதம் மேனியின் தண்மையையும் கண்டு இலச்சிப்ப' என்று பொருள் கூறுவாருமுளர். மான - லச்சிப்ப; தக்க. 34, உரை. மன் அவை - அரசவை. 'மேனி ஒளி வீச' என்ற பாடங்கொண்டு, 'அணிந்த பொன்னின் ஒளியும் மிலேந்த பூவின் வெறியும் பூசிய சாந்தின் சீதளமும் நிழலன்னவள் தன் மேனியின் ஒளியும் பிரகாசிக்க நாண அடைந்தாள்' என்று முடிப்பாருமுளர்.

ஒப்பு . 590 : 1 - 2.

(பி - மீ.) [1]. மின்னி னெளி', 'மின்னினிழில்' [2]. மேனியொளி வீச' (உஅ)

1234 சமைத்தவரை யின்மைமறை தானுமென லாமச்
சமைத்திரண் மூலைத்தெரிவை தூய்வடிவு கண்டோர்
அமைத்திரள்கொ டோளியரு மாடவரு மெல்லாம்
இமைத்தில ருயிர்த்திலர்கள் சித்திர மெனத்தாம்.

1235 அன்னவளை யல்லளென வாமென வயிர்ப்பான்
கன்னியமிழ் தத்தையெதிர் கண்டகடல் வண்ணன்
[1]உன்னுயிர் நிலைப்பதொ [2]ரருத்தியொ டுழைத்தான்
இன்னமிழ் தெழுக்களிகொ ளிந்திரனை யொத்தான்.

1236 நறத்துறை முதிர்ச்சியுறு நல்லமுது பில்குற்
றறத்தின்விளை [1]வொத்துமுக டுந்தியரு குய்க்கும்
நிறத்துவ ரிதழ்க்குயி [2]னிலைப்பினிடை யல்லாற்
புறத்துமுள [3]ளோவென மனத்தொடு புகன்றான்.

1234 சமைத்தவரை இன்மை - தன்னை உண்டாக்கியவரை இல்லாமையால். சீதைக்கு வேதம் உவமை; அயோனிஜையென்றபடி. எனல் ஆம் - என்று சொல்லத்தக்க. அமைதிரள் கொள் தோளியர் - மூங்கிலைப்போல் திரண்ட தோள்களையுடைய பெண்கள். 1225, குறிப். (உசு)

1235 அன்னவளை - சீதையை. அல்லள் - கன்னிமாடத்தில் காணப் பெற்றவள் அல்லளோ. அயிர்த்தல் - ஐயங்கொள்ளுதல். கன்னி அமிழ்தம் - கன்னியாகிய அமுதத்தை, கடல் வண்ணன் - இராமன். உன் உயிர் - எல்லாவற்றிலும் மேலாகக் கருதப்படும் உயிர். உழைத்தான் - வருந்தினான். கடலமுதைக் கண்டு களித்த இந்திரன் போல் இராமனும் பிறிதோர் அமுதத்தைக் கண்டு களித்தானென்றது ஒரு நயம்.

(பி - ம்.) [1]. தன்னுயிர்' [2]. ரருத்திகொ டழைத்தான்', 'ரருத்தியொடு ழைத்தாண்டின்னமிழ்து' (கூ0)

1236 நறத்து = நறவத்து - தேனினிடத்தில்; விகாரம். நறத்து உறை..... அமுது - தேனிடத்தே முதிர்ந்த நல்ல அமிர்தம்; பானிலத்துறையுந் தீந்தேனனையவா யமிர்தம்' (சீவக. 1915.) பில்குற்று - சொரிந்து. தருமத்தின் விளைவு சீதை. 'அன்றம் மாடத் தும்பரளிக்கு மமுதன்னாள் (593) என்றார் முன்னும்; 'விளைவுக்குக்காரணம் அமுது ஒழுகினமை' என்று கொள்வது ஒரு நயம். முந்தி - உச்சி; கன்னிமாடத்தின் மேலிடம். துவர் இதழ் - சிவந்த இதழ்களையுடைய. உச்சியினின்றும் வந்தமை தோன்றக் குயில் என்றார். 'அறத்தின் விளைவு ஒத்தும் சுகம் விளைக்காமல் துயர் விளைத்த குயில் (பி - ம்.) என்றது பாராட்டற்பாலது.

(பி - ம்.) [1]. வொத்தருள் கடுந்துயர் விளைத்த' வொத்துமுகடுந்தியமுதறும்', 'வொத்து முகடுந்தியருகாகும்' [2]. னிலைக்கணிடை' [3]. தோவென' (கூக)

1237 கைவள நவிற்றுமொழி நண்ணவர லோடும்
வையநுகர் கொற்றவனு மாதவரு மல்லார்
கைகடலை புக்கன [1]கருத்துளது மெல்லாம்
தெய்வமென [2]வுற்றவுடல் சிந்தைவச மன்றே.

1238 மாதவரை முற்கொள வணங்கிநெடு மன்னன்
பாதமல ரைத்தொழுது கண்கள்பனி [1]பாயும்
தாதையரு கிட்டதவி சிற்றனி யிருந்தாள்
போதினை வெறுத்தரசர் பொன்மனை புகுந்தாள்.

வசிட்ட முனிவரின் மகிழ்ச்சி

1239 எங்கள்செய் தவத்தினி லிராமனென வந்தோன்
சங்கிலெடு சக்கர முடைத்தனி முதற்பேர்
அங்கணர சாதலினவ் வல்லிமலர் புல்லும்
மங்கையிவ ளாமென வசிட்டன்மகிழ் வுற்றான்.

1237 கைவளம் நவிற்று மொழி - நட்டபாடை என்னும் பண்ணைப் போல் பேசுகின்ற மொழிகளையுடைய சீதை; கைவளம் : 880, குறிப். வையம் நுகர் கொற்றவன் - உலகத்தை ஒரு காலத்தில் உண்ட திருமாலாகிய இராமன். மாதவர் - வசிட்டரும் கோசிகரும். கைகள் தலைபுக்கன. கம்பர் பிராட்டியாரிடத்திலே தமக்குள்ள அன்புகாரணமாக, யாவரும் சீதையை இலக்குமி என்று கருதி வணங்கினார்கள்' என்று கொண்டு, 'இராமனும் மாதவரும் அல்லார்' என்றார். கருத்து - மனமும்; உம்மை விகாரத்தால் தொக்கது. உளதும் எல்லாம் - மற்றுமுள்ள அந்தக் காரணங்கள் எல்லாமும். எனவுற்ற - எனக்கருதின. கருத்துளவை எல்லாம் என்ற பாடத்துக்கு, 'மனம் படைத்த அறிவினைப் பொருள்களியாவும்' என்பது பொருள். 'உடல் சிந்தைவசத்திலுள்ளது' என்பது பொதுப் பொருள்.

சில பிரதிகளில் 'எங்கள் செய்', 'துன்றுபுரி' (1239 - 40) என்னும் கவிகள் இக்கவிக்கு (1237) முன்னே காணப்படுகின்றன.

(பி - மி.) [1] கருத்துளவையெல்லாம்' [2] வுட்டெளிதல்'

1238 மன்னன் - தசரதன். பனி - ஆனந்தக்கண்ணீர். தாதை - சனகன். தவிசில். 'தனியிருந்தாள்' என்பது ஒரு சுவை. போது - தாமரை மலர். 'போதினை வெறுத்து.....புகுந்தாள்! 'முருகு வீம்ம நறவுமிழும், தூய மலர்ப்பங் கயப்போதைத் துறந்தெம் மனையிற் புகுந்திருவே' (நைடத. அன்னத்தைத்தூது. 126.)

(பி - மி.) [1] சோரும்'

(நகை)

1239 தனிமுதல்-ஒப்பற்ற முதல்வனாகிய திருமால். கண் - கண்ணேட்டம். காக்கும் உரிமை நோக்கி அரசு என்றார். அல்லிமலர்-தாமரை; 'அல்லி சேரணங் கிற்கணங் கன்னவள்', 'அல்லியுட் பாவை யன்னாள்' (சீவக. 162 1505.)

(நகை,

தசரதனது மகிழ்ச்சி

1240 துன்றுபுரி கோதையெழில் கண்டுலகு சூழ்வர்
தொன்றுபுரி கோலொடு தனித்திகிரி யுய்ப்பான்
என்றுமுல கேழுமர செய்தியுள னேனும்
இன்றுதிரு [1]வெய்திய தெமக்கென நினைத்தான்.

கோசிகமுனிவரின் வியப்பு

1241 [1]அச்சிலை யுணர்ந்தமுத லந்தண [2]னினைத்தான்
[3]பச்சிலையை யொத்தபடி வத்தட விராமன்
[4]நச்சிலைய யிற்கண்மலர் நங்கையிவ ளென்றுல்
இச்சிலை [5]கிடக்கவரை யேழையு மிறுனே.

1240 துன்றுபுரி கோதை - அடர்ந்த சுருண்ட கூந்தலையுடைய சிதை. ஒன்றுபுரிகோல் - நண்பர், பகைவர், அயலார் என்று பாராமல் யாவரிடமும் பொதுகோக்குடைய ஆட்சி. உய்ப்பவன் தசரதன். உலகு ஏழு - ஏழுதீவுகள். எய்தியுளன் : தன்மை ஒருமை. இன்று : இதற்கு முன் எய்தவில்லை என்றவாறு. 'ஏழுலகையும் ஆளுவதைக்கொண்டு நான் திருவை யெய்தியுள்ளவன் என்று கொள்ள வேண்டா. இன்றே திருவை யெய்தினன்' என்பது 3-4 அடிகளின் கருத்து.

(பி - ம்) [1]'வெய்திய திதென்னவய மென்றன்', 'வெய்தியது மெய்வயமி தென்றன்', 'வெய்துமது மென்வய மிதென்றன்' (கூடு)

1241 அச்சிலை - அந்தச் சிவதனுசு. அந்தணன் - விசுவாமித்திர முனிவர். 'அச்சென இருந்தமுதல் அந்தணன்' என்ற பாடத்துக்கு, தேருக்கு அச்சு ஸ்வனம் இன்றியமையாததோ, அங்ஙனம் சூரிய குலத்துக்கு இன்றியமையாத முதன்மை பெற்ற வசிட்ட முனிவர் என்பது பொருள். பச்சிலை - தமாலமரம். படிவம் - வடிவம். அடல் இராமன். நஞ்சு இலை அயில் கண் - விடம் தோய்ந்த இலை என்னும் உறுப்பினையுடைய வேல் போன்ற கண். கிடக்க - கிடக்கட்டும்; ஒருபொருளன்று என்பதாம். ஏழுமலைகள் : நக்க. 541.

(பி - ம்.) [1]'அச்சென நினைத்த', 'அச்சென விருந்த' [2]'னிருந்தான்' [3]'பச்சைமலை', 'பச்சை முகிலொத்த' [4]'நச்சுடைவடிக்', 'நச்சடைவடிக்' [5]'யிருக்க' (கூஎ)

சீதை தன் ஐயம் நீங்கியது

1242 எய்வளை வில்லேற்றது மிறுத்தது மூரைத்தும்
மெய்வினை விடத்துமுத லையம்விட லுற்றுள்
ஐயனை யகத்துவடி வேயல புறத்தும்
கைவளை திருத்துபு கடைக்கணி னுணர்ந்தாள்.

ஐயம் நீங்கிய சீதையின் மகிழ்ச்சி

1243 கருங்கடை [1]நெருங்குமொளி யாறுநிறை [2]கண்ணப்
பெருங்கடலின் மண்டவுயிர் பெற்றினி துயிர்க்கும்
அருங்கல னணங்கரசி யாரமிழ் தனைத்தும்
ஒருங்குட னருந்தினரை யொத்துட றடித்தாள்.

இதுவும் அது

1244 கணங்குழை கருத்தினுறை கள்வனென [1]லாமவ்
வணங்குவி லிறுத்தவ னெனத்துயர் மறந்தாள்
அணங்குறு மவிஞ்சைகெட [2]விஞ்சையி னகம்பா
டுணர்ந்தறிவு முற்றுபய னுற்றவரை யொத்தாள்.

1242 எய்வளை வில் - அம்பு எய்தற்குரிய வளைந்த வில்லை. இறுத்ததும் - முறித்ததும். உரைத்தும் - நீலமாலை முன்பு சொல்லியும்; சொன்னது : 813 16. மெய்வினைவு இடத்து - முன்பு தான் கன்னி மாடத்தில் கண்ட வீரன்தானே என்ற உண்மை விஷயத்தில். முதல் ஐயம் : 817. திருத்துபு - ஒழுங்கு படித்துமிடத்து, திருத்துவாள் போல என்றபடி. உணர்ந்தாள் : எழுவாய்.

முடிபு : உணர்ந்தாள் உரைத்தும் மெய்வினை விடத்து (த்தோன்றிய) முதல் ஐயம் விடலுற்றுள். (நூ அ)

1243 ஒளியாறு - ஒளியாகிய ஆறு. நிறைகண் - நிறைந்த இடத்தையுடைய. பெருங்கடல் - இங்கே இராமன். மண்ட - நிறைய. அருங்கலனுகிய அணங்கரசி. ஒருங்குடன் - ஒருசேர. தடித்தாள் - பெருத்தாள்.

(பி - மீ.) [1]'நெடுங்க ணெளளி', 'நெருக்கி னெளளி [2]'கண்ணுள்' (நூ கூ)

1244 கணம் குழை - தொகுதியாகிய காதணியை யுடையாள். வணங்கு - வளைந்த. இறுத்தவன் கள்வன் எனலாம் எனக் கணங்குழையர் மறந்தாள். கள்வன் : 622, குறிப். அணங்கு உறும் அவிஞ்சை - துன்பம் உறுவதற்குக் காரணமாகிய அஞ்ஞானம்; துன்பம் என்றது பிறவித் துன்பம். அகம்பாடு - உள்ளீடு. பயனுவது - நித்தியானந்தம்.

(பி - மீ.) [1]'லானுள்' [2]'விஞ்சை யிளகப்பட்' (நூ ஏ)

'மணநாள் என்று' என விசுவாமித்திரரைத் தசரதன் கேட்டல்

1245 கொல்லுயர் களிற்றரசர் [1]கோமகனவ் வேலை
கல்விகரை யுற்றமுனி கௌசிகனே மேலோய்
வல்லிபொரு சிற்றிடை மடைந்தைமண நாளாம்
[2]எல்லையின லத்தபக லென்றுரைசெய் கென்றான்.

கோசிகர், 'மணநாள் நாளை' என்றல்

1246 வாளையுக ளக்கயல்கள் [1]வாவிபடி மேதி
மூளைமுது [2]கைக்கதுவ மூரியவ ரான்மீன்
[3]பாளைவிரி யக்குதிகொள் பண்ணைவள நாட
[4]நாளைமண முற்றதென நற்றவ னுரைத்தான்.

தசரதன் தன் விடுதியை அடைதல்

1247 சொற்றபொழு தத்தரசர் கைதொழ வெழுந்தான்
ஒற்றைவயி ரச்சுரிகொள் [1]சங்கினொலி பொங்கப்
பொற்றட முடிப்புது வெயிற்பொழி தரப்போய்
[2]நற்றவ ரனுச்சையொடு நன்மனை யடைந்தான்.

1245 அரசர் கோமகன் - தசரதன். எல்லையில் நலத்த - அளவற்றநன்மையையுடைய. (பி - மீ.) [1]'கோமகனிருந்தான்' [2]'எல்லை நலமுற்ற' (சச)

1246 உள - துள்ளிக்குதிக்க; வாளை துள்ளும் இயல்பின. கயல் சிறியமீன்; இவை குளிப்போரின் கால்களைக் கவ்வும் இயல்பின. கயல்கள் எருமைகளின் மூஞ்சையையும் மூதுகையும் கவ்வ. மூரிய - வலிமை பொருந்திய. பாளை - கமுகம்பாளை. பண்ணை - வயல்.

'மணநிச்சயத்தை நாளை வைத்துக் கொள்ளுங்கள்; என் யாகம் இன்றைக்கு நாலாம்நாள் முற்றுப்பெறும்; அது முடிந்ததும் திருமணம் செய்து கொடுக்கிறேன்' என்று சனகர் தசரதரிடம் கூறியதாக வான்மீகத்திற் காணப்படுகின்றது. தசரதர் மிதிலையடைந்த மறுநாள் மணநிச்சயம் நடைபெற்றதென்றும் அச்சமயம் கோசிகர் தசரதருடைய குலமுறையையும் ஜனகன் தன் குலமுறையையும் எடுத்துக் கூறினர்கள் என்றும் அந்நூல் கூறும்; (பால : சர்க். 69-71.)

(பி - மீ.) [1]'வாவமுது', 'வாவுமதின்' [2]'கைக்கிழிய' [3]'பாளைசிதற' [4]'நாளையென வுற்ற பொருள்' (சஉ)

1247 வயிரச் சுரிகொள் ஒற்றைச் சங்கு. வயிரம் - முதிர்ச்சி. சுரி - வளைதல். அரசன் ஒற்றைச் சங்கு முதலில் ஒலித்தல் மரபு; "ஒற்றை வலம்

எல்லோரும் மண்டபத்தினின்று நீங்கலும் சூரியாஸ்தமனமும்

1248 அன்னமரி திற்பிரிய வண்ணலு மகன்றேர்
பொன்னினெடு மாடமனை புக்கனன் மணிப்பூண்
மன்னவர் பிரிந்தனர்கண் மாதவர்கள் போனூர்
மின்னுசுட ராதவனு மேருவின் மறைந்தான்.

பூரியூத வதன்பின்பு மற்றை யலகில் வளைகலிப்ப" (சூலோத். உலா 84.) தடமுடி - பெரிய கிரீடம். நற்றவர் - வசிட்டரும் கோசிகரும். அனுச்சை = அநுஞ்ஞை - அனுமதி'

(பி - மீ.) [1]'சங்கின முழங்கப்' [2]'நற்றவரினிச்சை கொடு', 'நற்றபன னுச்சிதொடு' (அரு)

1248 மாடமனை - மாடத்தையுடைய மாளிகை. மாடம் - மேலுள்ள தளம். வேயாமாடம் என்பதைக் காண்க; சிலப். நி : 7. ஆதவன் - சூரியன். (அச)

கோலங்காண் படலம் முற்றும்

21. கடிமணப் படலம்

சனகனுடைய உபசரிப்பினால் யாவரும் மகிழ்ச்சியோடிருத்தல்

1249 இடம்படு புகழ்ச்சனகர் கோனினிது பேணக்
கடம்படு களிற்றரச ஞதியிடை கண்டோர்
தடம்படு புயத்தசிறு தம்பியர்கள் காறும்
உடம்பொடு துறக்கநக ருற்றவரை யொத்தார்.

சீதையின் நிலை

1250 தேடரு நலத்தபுன லாசைதெற வுற்றூர்
மாடொர்தட முற்றதனை யெய்துமவழி காணு
நீடழிவு றத்தளர்வொ டேமுறுவ ரன்றே
ஆடக வலோக்குயிலு மந்நிலைய ளாளுள்.

1249 இடம்படு - விரிந்த; 832. பேண - உபசரிக்க. கடம்படு - மதம் தோன்றுகின்ற. அரசன் - தசரதன். தடம்படு - விலாசமான. தம்பியர்கள் காறும் - தம்பிகள்வரையிலும். உடம்பொடு துறக்கம் உற்றவர்: 'உறையும் விண்ணக முடலொடு மெய்தின ரொத்தார்', 'துறந்த செல்வன் .....துறக்கந்தான், பறந்து வந்து படிந்தென', 'மெய்யி லோடருந் துறக்க மூற்றெனை வியந்தார்' (உ. 1. 75, 12 : 7; கூ. 35 ; 156); தவஞ் செய் மாக்கடம் முடம்பிடாஅ, தகன்பய மெய்திய வளவைமான' (பொருந. 91 - 2.) சனகன் எல்லோருக்கும் ஒரேவகையான மரியாதை செய்தமை இதனாற் புலனாகும் ; 1205. 'அரசனுக்குச் சோறு வேறு உளது என்று சொல்லாத, எல்லோருக்கும் ஒரு படித்தாக..... ..உடைய வுணவு' (பதிற். சுடு : 13.) இராமபிரான் காதல் கொண்டு வருந்துவதாக மேலே கூறுதலால் (1260 - 66) அவரை இங்கே குறிக்க வில்லை. (க)

1250 இது முதல் 1260 வரையில் சீதையின் விரகதாபம் கூறப்படும்.

தெறல் உற்றூர் - வருத்தப்பட்டவர்கள். மாடு - பக்கத்தில். ஓர் தடம் உற்று - ஒரு தடாகத்தை அடைந்து. எய்தும் வழி என்றது நீர்பருக இறங்கும் வழியை. ஈடு - வலிமை. ஏமுறுதல் – துன்பமடைதல் ; 694. ஆடகவலோ - பொன் வலையல். (உ)

சில பிரதிகளில் இதனையடுத்துப் பின்வரும் பாடல் காணப்படுகின்றது:

'எரிகால் சுடரே கவெழுந் தநிலா
வருமீ ரமுமா மயில்சா னகிதன்
திருமே னியின்மீ துசினங் துசுடத்
தரியா துளகொந் துதனித் துறைவாள்.

வேறு

இரவோடு கூறல்

1251 உரவே துமிலா ருயிரீ துமெனுக்
காவே புரிவா ருளரோ கதிரோன்
வரவே யெனையா ளுடையான் வருமே
இரவே கொடியாய் விடியா யெனுமால்.

நெஞ்சோடு கூறல்

1252 கருநா யிறுபோல் பவர்கா லொடுபோய்
வருநா ளயலே வருவாய் மனனே
பெருநா ளுடனே பிரியா துழல்வாய்
ஒருநா டரியா தொழிவா ருளரோ.

அன்றிலோடு கூறல்

1253 கனையேழ் கடல்போல் கருநா ழிகைதான்
வினையேன் [1]வினையால் விடியா விடினீ
தனியே பறவாய் [2]தகவே துமிலாய்
பனைமே லுறைவாய் பழிபூ ணுதியோ.

1251 உரவு - வன்மை. வன்மையில்லார் என்றது பெண்களை. ஈதும் எனு - கொடுப்போம் என்று சொல்லி. காவு - வஞ்சனை. உளரோ என்ற குறிப்பு, 'இரவே; நீ அங்ஙனம் செய்கின்றாய்' என்பது. விடியாய் - விடியமாட்டாய், விடிவாயாக. எனும் - என்று சொல்லுவாள். ஆல் : அசை. (சு)

1252 கரு ஞாயிறு - கருஞ்சூரியன், இராமருக்கு உவமை. இல்லாத முதற் பொருள் உவமை ஆயிற்று. 'அஞ்சன நாயிறன்ன வையன்', 'கருநா யிறெனக் கண்டான்' (உ. 6 : 51 ; சு. 2. 24.) காலொடு போய் - அவருடைய காலை ஒட்டிச் சென்று; தான் அவருக்கு அடிமை என்பதை நினைந்து; 'காலொடு போய்' என்றாள். சீதையின் மனம் இராமர் பின் சென்றமை : 605. வருவாய் - வர இருக்கின்ற மனமே. உன்னைப்போல் இந்த ஒரு நாள் தரியாமல் நீங்குபவர் உளரோ.

1253 கனை - ஒலிக்கின்ற. கருநாழிகை - இரவு ; 'கரியநாழிகை பாதியில்' (சு. 2 : 157) ; 'கரும்பொழு தகலு முன்னே கொல்வதே கரும மென்றான்' (வி. பா. கிருட்டினன். 171.) இரவுக்குக்கடல் உவமை நிறம் பற்றியும் அளக்கலாகா அளவு பற்றியும் ; 721 ; 'கங்குல் வெள்ளங் கட லினும் பெரிதே'(குறுந். உஅ : 5) ; 'நிறைபுனையா, யாம நெடுங்கட னீந்து வேன்', 'இருண்மாலை வெள்ளத்துள்' (பு. வெ. 298, 328.); பெருங். க. 33 . 208 - 9. தனியே பழிபூணுதியோ என இயைக்க. 'தனித்துள்ள பற வையே' என்றலுமாம். 'தனியேபற வாய், பனைமேலுறைவாய்' என்ற

சந்திரனோடு கூறல்

1254 அயில்வே[1] லனல்கால் வனவா ணிழலாய்
வெயிலே யெனநீ விரிவாய் நிலவே
செயலே துமிலா ருடனேய் வுறுவார்
உயிர்கோ ளுறுவா ருளரோ வுரையாய்.

தென்றலோடு கூறல்

1255 மன்றற் குளிர்வா சம்வயங் கனல்வாய்
[1]மின்றொத் துநிலா [2]மணிவீழ் மலயக்
குன்றிற் குலமா முழையிற் குடிவாழ்
தென்றற் புலியே யிரைதே டுதியோ.

குறிப்பினுல் அன்றிற் பறவை என்பது பெறப்படும். அன்றில் ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்தே வாழும் பறவை. அவை பனைமேல் உறைவதாக நூல்கள் கூறும்; ஒன்றை ஒன்று சிறிது பிரியினும் வருந்தும் இயல்பின; காதலரைப் பிரிந்துள்ளார்க்கு வருத்தந் தருவனவற்றுள் அன்றிலும் ஒன்று. 'நீ கூவுவதால் என் உயிர் நீங்குதல் கூடும்; அதனுல் உனக்கே பழிவரும்' என்க.

(பி - மீ.) [1] 'வினையாய்' [2] 'தகவோ துயிலாய்' 'தயவே துமிலாய்' (டு)

1254 அயில்வேல் அனல் கால்வன - கூரிய வேலை போலக் கொடிய அனலைச் சொரிகின்றனவாகிய. வாள் நிழலாய் - மிகுந்த ஒளியாகி; வெயிலே என - அச்சூரியன் பொழிகின்ற வெயில் போல. நிலவே: விளி. செயல் ஏதும் இலார் - செய்யும் வகை ஒன்றும் இல்லாதவர். தான் அபலையாதல் பற்றிச் சீதை தன்னைச் செயலேது மில்லாருள்ளடக்கிக் கூறினுள்; மூன் 'உரவேது மிலார்' (1251) என்றமை காண்க. உடல் தேய்வது விரகநோயினுல். தேய்வுறுவாருடைய உயிரை. கோளுறுவார் - கொள்ளுதலைச் செய்பவர். உளரோ - உலகில் உள்ளாரோ? 'செயலேது மிலாரது உயிர் கோளுறுகின்றவர் உள்ளவர் ஆகார் தம் உடல் தேய்வுறுவார்' என்று பொருள் கொள்வாரும் உளர்.

(பி - மீ.) [1] 'லனகா லகல்வா னிலவாய்' 'லனல்கா லவன்போ லவரும்'. (சு)

1255 மன்றல் குளிர்வாசம் – மன்றலாகிய குளிர்ந்த நறுமணம். வாசம் வயங்கு அனல் - சந்தனம், வெளிப்படை. மின் தொத்து - ஒளி மிகுதி. மணி என்றது மூங்கிலின் முத்துக்களை சந்தன மரங்களாகிய வாயையும் முத்துக்களாகிய பற்களையுமுடைய தென்றற்புலி. குலம் மா முழை – பெருமை வாய்ந்த பெரிய குகை. தென்றலைப் புலி என்றதற்கு ஏற்ப, 'முழைபிற் குடிவாழ்' என்றார். தென்றற் புலி : "குன்றின்வாய் முழையினிற் குலாயகொட்பது, தென்றலென் றொருபுலி யுயிர்த்துச் சென்றதால்" (சு. இலங்கைக்கேள்வி, 9.)

ஐயனது உருவெளித் தோற்றத்தைக் கண்டு தன்னுள் கூறிக் கொண்டது

1256 தெருவே திரிவா ரொருசே வகனூர்
இருபோ தும்விடா ரிதுவென் னைகொலாம்
கருமா முகில்போல் பவர்கன் னியர்பால்
வருவா ருளரோ குலமன் னவரே.

இரவை வெறுத்தல்

1257 தெருளா வினைதீ யவர் [1]சே ரலர்தோள்
அருளா நெறியோ டுமவா வுவதோ
கருளார் கடலோ கரைகா ணரிதால்
இருளா மிதுதா னெனையூ ழிகொலாம்.

தென்றலுக்கு இரை தலைவரைப் பிரிந்திருக்கும் பெண்களின் உயிர். 'தன்னிடத்தே கொண்டுள்ள சந்தனத்தாலும் முத்தாலும் தனித்து உறையும் பெண்களே வருத்தும் மலையில் குடிவாழும் உனக்கும் அத்தன்மை இருத்தல் இயல்பு' என்பது ஒரு நயம்.

(பி - மி) [1]'மின்னுக்க' [2]'நகைவீழ்' (எ)

1256 சேவகனூர் - வீரர். இருபோதும் - பகலிலும் இரவிலும். விடார் - என்னைவிட்டு நீங்கார். குலமன்னவரே - உயர்ந்த குடிப்பிறப்பையுடைய அரசர்களுள். முகில்போல்வாரும் திரிவாரும் சேவகனூரும் ஆகிய குலமன்னவர் இருபோதும் கன்னியர்பால் வருவார் உளரோ? இது என்னை?

கன்னியர் முன்னும் கன்னிமாடத்தும் ஆண்கள் அணுகக் கூடாது: 'சிவிகை, பல்வலை யாயத்துப் பைந்தொடி யேறலும்.....முனிவ ராயினு மூத்தோ ராயினும், எனையீர் பிறரு மெதிர் வரப் பெறீரென.....ஆறுகடி முரச மதிர்வரக் கொட்டி' (பெருங். க. 38 : 255-69); 'அருங்கடை நிறைக் கதவ நீக்கிக், காவலென் னெஞ்ச மென்னுங் கன்னிமாடம் புகுந்து, கோவலென் னுள்ளம் யாத்தாய்' (சீவக. 714); 'காவல் கடந்தெங்கள் கன்னிமாடம் புகுந்தாய், யாவனே' (நள. க : 85.) (அ)

1257 தெருளாவினை - தெளிவில்லாத பாவச்செயல்களையுடைய. தீயவர் சேரலர் - தீயோரால் அணுகப் பெறாதவராகிய இராமர். தோள் அருளா நெறி ஓடும் அவா அதுவோ - தம் தோள்களை அருளாத வழியே ஓடுகின்ற ஆசையோ; அது : பகுதிப் பொருள் விகுதி. இரவாகிய கடலுக்கு ஆசை. கருள்ஆர் - கருமைநிறைந்த. காணரிது - காண அரிது. எனை ஊழி - எவ்வளவு ஊழிகள்.

முடிவு : 'இருளாம் இது அவாவதுவோ, கடலோ, ஊழிகொலாம் எனை? காரைகாணரிது'

(பி - மி.) [1]'சேர்நரகோ', 'சேருநர் தோள்,' 'சேர்மரபோ', 'சொற்செனை' (க)

தன் வருத்த மிகுதிக்குரிய காரணங்களைக் கூறுதல்

1258 பண்ணே வொழியா பகலோ புகுதா
தெண்ணே தவிரா விரவோ விடியா
துண்ணே வொழியா வுயிரோ வகலா
கண்ணே துயிலா [1]விதுவோ கடனே.

கடலோடு புலம்பல்

1259 இடையே வளைசோ ரவெழுந் துவிழும்
தடலேய் மதனன் சரமஞ் [1]சினையோ
உடலோய் வுறநா ளுமுறங் கலையால்
கடலே யுரைநீ யுமொர்கன் னிகொலாம்.

'ஐயன் நினைவினை இனிச் சொல்லுவேன்' என்று கவி கூறல்

1260 எனவின் [1]னனபன் னியிருந் [2]துளைவாள்
துனியுன் [3]னிமனத் தொடுசோர் வுறுகால்
மனைதன் [4]னின்வயங் கிருள்வை குறுவாய்
[5]அனகன் னினைகின் றனையா மறைவாம்.

1258 பண்ணே - பலர் பாடுகின்ற இசைகளோ; 'இசையுங் கூத்தும் காமத்துக்குத் தீபனம்' (சீவக. 2597, நச்.) எண்ணே - என் மனத்தில் தோன்றுகின்ற எண்ணங்களோ. உள்நோ ஒழியா - மனத்தின் நோய்களோ நீங்கமாட்டா. அகலா - நீங்கமாட்டா; பிராணன்கள் ஐந்து ஆதல்பற்றி 'அகலா' என்று பன்மையிற் கூறினர். (பி - மி.) [1]விவையோ' (கo)

1259 இடையே - இடத்தில். வளைசோர - சங்குகள்சோர்ந்து வருந்த; பெண்ணைக் குறிக்கையில், 'கைவளையல்கள் கழன்று விழ' என்பது பொருள். ஓய்வுற - ஓய்ந்துபோக. 'நினைத்த தலைவனைக் கூடப் பெறுது வருந்தும் கன்னியா நீ.' ஒப்பு: 643. குறிப்.
(பி - மி.) [1]'சினைபோல்' (கக)

1060 இருந்து - தூங்காமல் இருந்துகொண்டு. துனி - துன்பம். வயங்கிருள் - மிகுந்த இருள். வைகுறுவாய் - தங்கினசமயம். அனகன் - பாவமற்றவன். 'அனிதன் என்ற பாடத்துக்கு, 'ஒருவராலும் நடத்திச் செல்லப்படாதவன்' என்பது பொருள். 'இனைகின்றன' என்றும், 'நினைகின்றன' என்றும் பிரிக்கலாம். இனைதல் - வருந்துதல்.
(பி - மி.) [1]'னனவின் னல்பகர்ந்' [2]'துளையா' [3]'னிகலங்கொடு' [4]'னின்மயங் கிருள்வை குறும்வாய்', 'னின்வயங் குறுவை கிருள்வாய்' [5]'அனிதன்' (கஉ)

ஆசையின் மிகுதியைக் கூறுதல்

1261 முன்கண் டுமுடிப் பருவேட் கையினுல்
என்கண் [1]டுணைகொண் டிதயத் தெழுதிப்
பின்கண் டுமொர்பெண் கரைகண் டிலனுல்
மின்கண் டவரெங் கறிவார் [2]வினைவே.

சந்திரனுடு கூறி வருந்துதல்

1262 திருவே யனையாண் முகமே [1]தெரியின்
கருவே கனியே வினைகா மவிதைக்
கெருவே மதியே யிதுவென் செய்தவர்
ஒருவே னெடுநீ யுறவா கலையோ.

இருளை வெறுத்தல்

1263 [1]கழியா வுயிருங் கியகா ரிகைதன்
விழியோ லவினைக் கதுவீ கிலதால்
அழிபோ ரிறைவன் படவஞ் சியவன்
பழிபோ லவளர்ந் ததுபா யிருளே.

1261 முன் கன்னிமாடத்தின் மேலே அவள் நின்றிருந்த முன்பு ஒரு நாள். முடிப்பு அருவேட்டை - முடிவற்ற ஆசை. என் கண்களைத் துணையாகக் கொண்டு. எழுதியது பிராட்டியாரின் உருவினை. பின் கண்டும் - மறுபடியும் மணிமண்டபத்தில் பார்த்தும். பெண்கரை கண்டிலன் - பெண்ணுசையென்னும் கடலின் கரையைக் கண்டேனில்லை. பெண் என்ற சொல் அழகுக்கு ஆகு பெயர் என்பாரும் உளர். ஈற்றடி சிலேடை : 'பெண்களை நினைத்திருப்பார் அப்பெண்ணுசையால் வரும் வினைவை எங்ஙனம் அறிவார்கள்' என்றும், 'மின்னல் ஒளியைப் பார்த்தவர்கள் (கண் மழுங்கப் பெறுவதனால்) அருகில் நிகழும் நிகழ்ச்சிகளைத் தம் கண்ணால் எங்ஙனம் பார்ப்பார்கள்' என்றும் பொருள் கொள்க.

(பி - மீ.) [1]'டுணையோ', 'டனிலென் னிதயத்' [2]'வினையே', 'விதியே' (கரு)

1262 சந்திரனைச் சீதையின் முகம் என்றார். கரு - காம விதையின் கருவே ; அதனின்றும் தோன்றும் கனியே ; அது விளைவதற்கு ஏற்ற எருவே ; கரு - முளை. உயிரின் கருவே (பி - மீ.) உலகத்து உயிர்களுக்குக் கருப் போன்றவனே; உணவுக்குரிய ஓஷதிகள் பயிர்கள் முதலியன வளர்வதற்கு மதியே காரணம் என்று சாத்திரங்கள் கூறும். கூடினார்க்கு மகிழ்ச்சி செய்தலான் 'கனியே' என்றார். 'காமம், கனியும் கருக்காயு மற்று' (குறள். 1306.) செய்தவா என் - நீ செய்த வகையாது?

(பி - மீ.) [1]'யுயிரின்', யுயிர்தீ' (கரு)

1263 கழியா உயிர் - உடலின்றும் நீங்காத என் உயிரை. உந்திய - வெளியே தள்ளிய. அஞ்சியவன் - போருக்கு அஞ்சிய சேனைத் தலைவன். இறைவன் போரிற்பட்ட பின்பும் போர்செய்து பகைவரை வெல்லல்; அண்

நெஞ்சோடு கூறல்

1264 நினையா யொருகா னெடிதோ நெறிதான்
வினவா தவர்பால் விடைகொண் டிலையோ
புனமா னனையா ரொடுபோ யினவென்
மனனே யெனைநீ யுமறந் தனையோ.

பிராட்டியாரின் கண்கள் வருத்தினமை கூறல்

1265 தன்னைக் கெரிகா றகைவா ளரவின்
பன்னைக் கியதென் பதுபண் [1]டுகொலாம்
என்னைக் கினுநெஞ் சினுமென் [2]றுமுளார்
மென்னைக் கினதே கடுவல் விடமே.

என்மனந்தானு அவளுக்கு விளையாடுமிட மென்றல்

1266 [1]வல்லோர் வனைமா ளிகைவார் பொழிலோ
டெல்லா முளவா யினுமென் மனமோ
[2]கல்லோ வெனுநெஞ் சொடுகன் னியராம்
மெல்லோ தியர்தாம் விளையா டிடமே.

ணல் யானையொடு வேந்து களத் தொழிய, வருஞ்சமந் தடையத் தாக்கி நன்று, நண்ணுத் தெவ்வர்த் தாங்கும், பெண்ணேயம் படப்பை நாடுகிழ வோயே' (புறநா. கஉசு : 20 - 23.) (பி - மி.) [1]'கழிபோ யுயிருங்' (கடு)

1264 ஒருகால் நினையாய் - ஒரு தடவையாகிலும் என்னை நினைக்க மாட்டாய். நெறி - நீ சென்ற வழி. வினவாதவர் - ஏன் என்று உன்னை விசாரியாத சீதை; தலைவியைத் தலைவன் பன்மைச் சொல்லிற் கூறுதல் கவி மரபு. விடை கொண்டிலையோ - விடைகொண்டு நீ மீளவில்லையோ. புனமான் - தினைப்புனத்திலுள்ள மான். (கசு)

1265 தன் நோக்கு - தன் கண்களில். எரிகால் - தீயைக் கக்குகின்ற. தகைவாள் அரவின் - தன்மையையுடைய கொடிய பாம்பின். கண்ணில் விடமுள்ள அரவு திட்டிவிடம்; 361, குறிப். பல் நோக்கிய தென்பது - பல்லில் உள்ளதென்று கூறுவது. பண்டு அன்று என்றபடி. உளார் என்றது சீதையை. மென்னைக்கினதே - மெல்லிய பார்வையினிடத்ததே. விடம் : எழுவாய். 'விடம் பல்நோக்கியதென்பது பண்டு, இன்று உள்ளாரது நோக்கினதே'.

(பி - மி.) [1]'புகொலாம்' [2]'றுமுளாள் தன்னைக்கினதே தழல்வெவ்' (கஎ)

1266 உள ஆயினும் - விளையாடுவதற்கு இருப்பினும் - கல்லார் மலர் சூழ் (பி - மி.)- செங்கழு நீர் மலர்கள் சூழ்ந்துள்ள; கல்லாரம் என்பதன்

வேறு

நகரை அலங்கரிக்குமாறு சனகன் முரசறைவித்தல்

1267 வானவர் பெருமானும் மனநினை வினனுகத்
தேனகு குழலாடன் றிருமண [1]வினைகாளை
[2]பூநகு மணிவாசம் புனைந்க ரணிவீரென்
றுனையின் [3]மிசையாணை யணிமுர சறைவித்தான்.

நகரை அணிசெய்ய விரைவோரின் மகிழ்ச்சி

1268 முரசறை தலுமான முதியரு மிளையோரும்
விரைசெறி குழலாரும் விரவினர் விரைகின்றூர்
உரைசெறி கிளையோடு முவகையி னுயர்வாரும்
[1]கரைதெரி வரிதாகு மிரவொரு கரைகண்டார்.

கடைக்குறை. சொல் ஆர் அமுதின் சுவையோடு இனிது ஆம் எல்ஓதியர் (பி - மீ.)- சொல்லாகிய அரிய அமுதத்தின் சுவையோடு இனிமை பெற்ற இருளைப் போன்ற கூந்தலையுடையார். தம் வருத்த நோக்கி இன்பம் நல்க வாராமையின், 'கல்லோ எனும் நெஞ்சொடு' என்றூர்.

(பி - மீ.) [1]'கல்லார் மலர் சூழ் களிவார்' [2]'சொல்லாரமுதின் சுவை யோடினிதாம்', 'கல்லோ டுறழ் நெஞ்சுறுகன்' (கஅ)

ஒரு பிரதியில் இதன் பிறகு பின்வரும் பாடலும் 'கோலங்காண் படலம் முற்றும்' என்ற தொடரும் காணப் பெறுகின்றன.

'என்றை யன்மனத் தொடுமெண் ணினன்மற்
றன்றங் கவைநிற் கவருட் சனகன்
முன்றந் ததவத் துறுமொய் குழலாள்
துன்றும் மணமுற் றதுசொல் லிடுவாம்.'

இப்பிரதியில் அடுத்த பாட்டின் முன்னிரண்டடிகள், 'வானவர் பெரு மானும் வரியளி மலர் வாசத், தேனுகர் குழலாளுந் திருமண முறனூள்' என்று காணப்படுகின்றன.

1267 வானவர்களுக்குப் பெருமான்; என்றது இராமனை. மனம் நினை வினன் ஆக - சீதையின் நினைவினன் ஆக இருக்க. காளை - காளைத்தினம் ஆரும். பூநகுமணிவாசம் - பூக்களாலும், விளக்கத்தையுடைய மணிகளா லும், வாசனைப் பொருள்களாலும். புனைநகர் - இயற்கையாகவே அழகையு டைய மிதிலை நகர். சனகன் என்ற எழுவாயை வருவிக்க.

(பி - மீ.) [1]'மெனகாளை', 'மினிகாளை' [2]'பூ நிறையணிகோலப் பொன் னக' [3]'மிசையேவைத் ததிர்முர', 'மிசையாண ரணிமுர' (கக)

1268 மான முதியர் - பெருமையையுடைய வயோதிகர்; 'தானை மடக்கா மான மாந்தர்' (பெருங். க. 33. 65.) விரைவது நகரை அணி செய்ய. உரை செறிகிளை - புகழ் நிறைந்த சுற்றம். உவகையின் நதி முழ்கி (பி - மீ.) - மகிழ்ச்சியாகிய ஆற்றில் குளித்து. தெரிவு - தெரிதல். கரை

சூரியோதயம்

1269 அஞ்சன வொளியானு மலர்மிசை யுறைவாளும்
எஞ்சலின் மணநாளைப் புணர்குவ [1]ரெனவெண்ணிச்
செஞ்சுட ரிருள்கீறித் தினகர னெருதேர்மேல்
மஞ்சனை யணிகோலங் காணிய வெனவந்தான்.

நகருக்குக் கோலம் புனைந்த சிறப்பு

1270 தோரண நடுவாருந் [1]தூணுறை யிடுவாரும்
பூரண குடமெங்கும் [2]புனைதுகில் புனைவாரும்
காரணி நெடுமாடங் கதிர்மணி யணிவாரும்
ஆரண மறைவாணர்க் கமுதினி தடுவாரும்.

தெரிவு அரிய : 327, குறிப். 'கரை கண்டார்' என்றதனால் இரவைக் கட லெனக் கொள்க. திருமணத்தைக் காணும் வேட்கை மிகுதியினால் யாவருக் கும் இரவு கடல்போல மிகுந்து தோன்றியது.

(பி - மி.) [1]'கரை செறிவரி', 'கரைசெயவரி' (உ0)

1269 நாளை மணம் புணர்குவர். செஞ்சுடர் - தனது சிவந்த ஒளி பொருந்திய கிரணங்களினால். தினகரன் - தினத்தை உண்டாக்குவோன்; சூரியன். மஞ்சனை - மைந்தனாகிய இராமனை.

(பி - மி.) [1]'ரெனலோடும்' (உக)

இதன் பின்னே சில பிரதிகளில் பின்வரும் பாடல் காணப்படுகின்றது.

கதிரவ னெழலோடுங் கடிநக ரிடமெங்கும்
மதிமுக மடவாரு மைந்தரு முதியோரும்
விதிபுரி செயல்போலு மேலுல கினுமில்லாப்
புதுமையி னுறுகோலம் புனைதலை முயல்வுற்றார்.

1270 தோரணம் - தோரணக் கம்பம்; 177. தூண் உறை - தூண்களை உறைபிட்டு மூடும் சித்திரச் சீலை. பூரண குடம்; பூர்ணகும்பம்; 'பூரண பொற்குடம் வைத்து' நாச்சியார் திருமொழி. புனைதுகில் - கும்ப வஸ்திரம். கார் அணி - மேகங்கள் அழகு செய்கின்ற. கதிர்மணி கொடிகளுக்கு. ஆரண மறை - ஆரணம் என்ற உறுப்பை உடைய வேதம்; மறை யோர்க்கு இன் அமுது அதிதல் : 64.

(பி - மி.) [1]'தூணிரையிடுவாரும்', 'தூணுறைபொதிவாரும்' [2]'பொ லிதர நினைவாகும்' (உஉ)

1271 அன்னமென் னடையாரு மழவிடை யனையாரும்
கன்னிநன் னகர்வாழை கமுகொடு நடுவாரும்
[1]பன்னரு நிறைமுத்தம் பரியன தெரிவாரும்
பொன்னணி யணிவாரும் மணியணி புனைவாரும்.

1272 சந்தன மகிலுஞ்சாந் தொடு [1]தெருவெங்கும்
கிந்தினர் திரிவாருஞ் செழுமலர் சொரிவாரும்
இந்திர தனுநாணு [2]மெரிமணி நிறைமாடத்
தந்தமில் விலையாரக் கோவைக ளணிவாரும்.

1273 தளங்கிளர் மணிகாலத் தவழ்சுட ருமிழ்தீபம்
இளங்குளிர் முளையார்ந்த பாலிகை யினமெங்கும்
[1]விளம்புபொன் [2]ளெளிநாற வெயிலொடு நிலவீனும்
பளிங்குடை யுயர்திண்ணைப் பத்தியின் வைப்பாரும்.

1274 மந்தர மணிமாட முன்றிலின் வயினெங்கும்
[1]அந்தமி லொளிமுத்தி [2]னகனிரை யொளிவீச
அந்தர [3]நெடுவானம் மீனலர் குவதென்னப்
பந்தரின் நிழல்வீசப் படர்வெயில் கடிவாரும்.

1271 மழவிடை - இளங்காளை கன்னி - அழி வின்மை.

(பி - மி) [1]இன்னிசை தெரிவாரு மிளமூலை யவரோடும் (உங)

1272 சந்தனம் அகில் இவற்றின் நாறும் குழம்புடன்; சாந்து குழைத்துள்ள வாசனைக் கலவை. இந்திர வில் நாணத் தக்க மணி - பலநிற முடைய மணிகள். அந்தம் இல் - அளவற்ற. ஆரக் கோவைகள் - முத்து மாலைகள்: மாலையாகிய கோவைகளுமாம். கோவைகளுக்கு வானவில்: தொல்லா ரணிதார் சுடரின் நிறுகை தான்.....வில்லா லொளிர் மேகமெனப் பொலிவான்'. 'அமரர்கோமா னடர்சிலை துறந்த தென்ன வாரந்தீர் மார்பி னானே' (கூ. 2: 11; சு. 4: 135)

பி - மி.) [1]:விரை யெங்குஞ்' [2]:மேழின மணி மாடத் (உச)

1273 தளம் - வீட்டின் மேல்தளம். முளை ஆர் - முளைகள் நிறைந்த. விளிம்பு - திண்ணைகளின் விளிம்பு. தீபங்களையும் பாலிகை யினத்தையும் பத்தியின்வைப்பாரும்.

(பி - மி.) [1]:விளங்கு பொன்' [2]:னிரை நாண்', 'னிரை நாற' (உஞ)

1274 மந்தர மலையைப் போன்ற மாடம். பந்தர் - முத்துப்பந்தர். இவை மாடத்தின் மேலும் முன்றிலின் கண்ணும் உள்ளவை. வீச, வீச வெயில் கடிவாரும். பந்தரின் முத்துக்குவிண்மீன் உவமை :உ. 3: 50.

1275 வயிரமி ளெளியீனும் மரகத மணிவேதிச்
செயிரற வொளிர்தீபஞ் சிலதியர் கொணர்வாரும்
வெயில்விர வியபொன்னின் மிடைகொடி மதிதோயும்
எயில்வயி ணணிவாரு மெரியகி லிடுவாரும்.

பல வகை நகர மாந்தரின் செயல்கள்

1276 பண்டியி [1]னிறைவாசப் பனிமலர் கொணர்வாரும்
[2]தண்டலை யிலையோடுங் கனிபல தருவாரும்
குண்டல மொளிவீசக் [3]குரவைகள் [4]புரிவாரும்
உண்டைகொண் மதவேழத் தோடைக ளணிவாரும்.

1277 கலவைகள் பூணவாருங் [1]கலகல தெரிவாரும்
மலர்குழன் மலிவாரும் மதிமுக [2]மதிலாடித்
திலகமு னிடுவாருஞ் சிகழிகை [3]யணிவாரும்
இலவிதழ் பொலிகோல மெழில்பெற விடுவாரும்.

(பி - மி.) [1]'நந்தலி லொளி முத்தி' [2]'னகு சுடர் பொலி வாகி'. 'னகை நிரை யொளி வீச' [3]'மிசை விண்மீ னலர்குவ தெனநீளும்' [4]'னிழல் வீசிப்' 'வகை செய்தே' (உசு)

1275 வயிரங்கள் மின்னலின் ஒளியைத் தருகின்ற பச்சை மணிகளால் இயன்ற மேடைகளின்மேல். செயிர் அற - குற்றம் நீங்க. சிலதியர் - பணிப் பெண்கள். பொன்னின் மிடைகொடி - பொற் காம்புகளுடன் கூருங்கிய கொடிச் சீலைகள். எயில் - மதில். (உஎ)

1276 பண்டியில் மலர் கொண்டு வருதல்: 2: 22; 'மண நிலை மலர் பெய்து மறுகும் பண்டியும்' (சீவக. 61.) தண்டலை யிலை யோடும் - சோலைகளிலுள்ள வாழை முதலிய இலைகளோடும். 1 - 2: மணத்துக்குரிய இவ்விதமான பொருள்களைப் 'பச்சை' என்பர்; சீவக. 823. நூ. குரவை - கைகோத்து ஆடும் கூத்து; 79. உண்டைகொள் - மண்ணுருண்டையால் அடியைக் கொள்ளும்; சோற்றுத் திரளும் ஆம்; 'கோவுண்டை கோட்டாற் றழிவித்த கோன்' பாண்டிக்கோவை. ஓடை - நெற்றிப்பட்டம்.

(பி - மி.) [1]'வருவாரும்'. 'மிசை பெய்தே' 2 தண்டிய விலைதாது தளிர் வகை', 'தண்டலை தளி ரோடுங்' [3]'குரவதம்', [4]'பிணைவாரும்' (உஅ)

1277 கலவைகள் - வாசனைக் கலவைகள். கலகல - கல்ல ஆடைகளை. மலைதல் - சூடுதல். 'சூடி மூன் றிலகம் இடுவாரும்' என்று கூட்டுக; ஆடி கண்ணாடி. சிகழிகை - ஒரு வகைத் தலை மாலை. இலவு இதழ் - இலவம் பூப் போன்ற வாய் இதழ். பொலி கோலம் - செந்நிறக் கோலஞ்சை. இதழுக்குச் செந்நிறம் இதுதல் :88, 175, 1036, 1074. தொல். செய். 80, நூ.

(பி - மி.) [1]'கலகல' [2]'மணியாடித்' [3]'தெரிவாரும்' (உக)

1278 தப்பின மணிகாசுஞ் சங்கமு மயிலன்னார்
ஒப்பனை புரிபோது மூடலி னுகுபோதும்
[1]துப்புறழ் நிறைவாசச் சுண்ணமு முதிர்தாதும்
குப்பைக ளெனவாரிக் கொண்டயல் களைவாரும்.

1279 மன்னவர் வருவாரும் மறையவர் நிறைவாரும்
இன்னிசை மணியாழி னிசைமது நுகர்வாரும்
சென்னியர் திரிவாரும் [1]விறலியர் செறிவாரும்
கன்னலின் [2]மணவேலைக் கடிகைக டெரிவாரும்.

1280 கணிகையர் தொகுவாருங் கலைபல [1]தெரிவாரும்
[2]பணிபணி யெனலோடும் பலவிரு நிலமன்னர்
அணிநெடு முடியொன்றொன் றறைதலி னுகுமம்பொன்
மணிமலை [3]தொகமன்னன் வாயிலின் மிடைவாரும்.

1278 தப்பின - கைக்குத் தவறிய. சங்கம் - வளையல். ஒப்பனை புரி போதும் - அலங்காரம்செய்யும் மலர்களும். உகுபோதும் - உதிரும் மலர் களும். துப்பு - பவளம். சுண்ணம் - செஞ் சுண்ணம். மயிலன்னார் புரி போதும் உகுபோதும் தப்பின மணிகாசும் சங்கமும் சுண்ணமும் தாதும் குப்பைகள் எனக்களைவாரும். மதிப்புள்ள பொருள்களைக் குப்பை என நீக்கு தல்: பெருங். உ. 2: 92 - 102. (பி - ம்) [1]'துப்புறழிளவாசச்' (௩௦)

1279 மணியாழ் - அழகிய வீணை. சென்னியர் - பாணர். விறலியர் - சத்துவம் தோன்ற நடிப்பவர்; பாண்மகளிர். பாணரும் விறலியரும் : 880 'சிலதியர்' என்ற பாடம் நோக்கிச் 'சென்னியர்' என்பதற்கு 'எவும் தொழி லுடைய தலைமக்கள்' என்று பொருள் கூறுவாரும் உளர்; சிலதியர் - வேலை செய்யும் பெண்கள். கன்னல் - நாழிகை வட்டில்; சிறு துவார முள்ள ஒரு கடாரத்தில் நீரை ஊற்றி, ஒழுகிய நீரை அளந்து நாழிகை அறிவது அக்கால வழக்கம்; நீர்க்கன்ன லெனவும் வழங்கும்; 'புனலுற் றொழுகு செப்பின், காலமறி வுற்று ணர்தல் கன்னலள வல்லான், மாலைபக லுற்ற தென வோர்வரிது மாதோ' (ச. 7: 73); (முல்லைப். 58; மதுரைக். 670 - 71 ; அகநா சஙூ: 6 - 7 ;மணி : எ. 64 - 5.)
(பி - ம்.) [1]'சிலதியர்' [2]'மணவெல்லைக்' (௩௧)

1280 பணி, பணி எனலோடும் - 'வணங்கு, வணங்கு,' என்று காவலர் கூறின உடனே - முடிகள் ஒன்றை ஒன்று அறைதல், 'யான் முன், யான் முன்' என்று எல்லா அரசரும் முற்பட்டுப் பணிய விரைதவினால். பொன்மணி மலை - பொன்னு மணியுமாகிய மலைபோன்ற குவியல். வாயில் - ஆசார வாசல். தொக - தொகும்படி. 'அரு மொழிதன் கோயிலடலரசர் மண்டித், திருமகுட கோடிகடேய்த்த, பருமணி கள்' ('சாஸனப் பாடல்')
(பி - ம்.) [1]'பயில்வாரும்' [2]'பணியணி யின முத்தம் பலவித', பணி யணி நிறைமுத்தின் பலவித' [3]'தொகு' (௩௨)

1281 கேடகம் வெயில்வீசக் கிளரயி னிலவீனக்
கோடுயர் நெடுவிஞ்சைக் குஞ்சர [1]மதன்மீதே
ஆடவர் திரிவாரு மரிவையர் களிகூரும்
நாடக நவில்வாரு [2]நகையுயிர் கவர்வாரும்.

ஒளி கண் கூச மக்கள் மாடம் எதுவென்று அறியாது திகைத்தல்

1282 கதிர்மணி யொளிகாலக் கவர்பொரு [1]டெரியாவா
றெதிரெதிர் சுடர்விம்மு மெழுதலி [2]னிளையோரும்
மதுவிரி குழலாரும் மதிலுடை [3]நெடுமாடம்
அதுவிது வெனவோசா ரலமர லுறுவாரும்.

பலவகை வாகனங்களில் வருகிறவர்கள்

1283 தேர்மிசை வருவாருஞ் சிவிகையில் வருவாரும்
ஊர்தியில் வருவாரு மொளிமணி நிரையோடைக்
கார்மிசை வருவாருங் கரிணியில் வருவாரும்
பார்மிசை வருவாரும் [1]பண்டியில் வருவாரும்.

1281 நிலவு - சந்திரிகைபோன்ற பளபளப்பை. ஈன - தர. கோடு - தந்தங்கள். விஞ்சைக் குஞ்சரம் - வித்தைகளைக் கற்ற யானை. நகை - மூறு வலிஞல்.

(பி - மீ.) [1]'மனையார்போல்', 'மதுபோல', வரலேபோல்' [2]'நல்ல முதவோரும்' (நூ)

1282 கவர் பொருள் - கண்ணுக்கு விஷயமாகும் பொருள்கள். 'தெரி வாரும்' என்ற பாடப்பபடி, 'சூரியன் விளக்கு முதலியவற்றின் ஒளிகளின்றி மணிகளின் ஒளியினாலேயே பொருள்களை அறிகிறவர்களும்' என்பது பொருள். சுடர் விம்முற்றே முந்து கண்களைக் கூசுதலின் அது இது என ஓரார் என்க. அலமரல் - மனம் சுழலல்.

(பி - மீ) [1]'டெரிவாரும்' [2]'னிமையோரும்' [3]'நெடுவானம்' (நூ)

1283 ஊர்தி - ஊர்வதற்குரிய ஒட்டகம் முதலிய பிற வாகனங்கள். ஓடைக்கார் - நெற்றிப்பட்டம் அணிந்த மேகம்; என்றது யானையை. கரிணி - பெண் யானை; முன் கூறியது. களிறு எனக் கொள்க. பார்மிசை வருதல் - பாதசாரியாய் வருதல். (நூ)

(பி - மீ.) [1]'பரிமிசை'

மக்கள் பலவற்றை அணிதல்

1284 முத்தணி [1]யணிவாரும் மணியணி முனிவாரும்
பத்தியி [2]னவிர்செம்பொற் பலகலன் மகிழ்வாரும்
தொத்துறு [3]தொழின்மாலை சுரிகுழ லணிவாரும்
சித்திர [4]நிரைதோயுஞ் செந்துகில் புனைவாரும்.

வரும் பெண்களின் சிறப்பு

1285 விடநிகர் விழியாரு மமுதெனு மொழியாரும்
கிடைபுரை யிதழாருங் [1]கிளர்நகை யொளியாரும்
தடமுலை பெரியாருந் தனியிடை சிறியாரும்
பெடையன நடையாரும் பிடியென வருவாரும்.

அந்த மணநாளுக்கு உவமை

1286 உண்ணிறை நிமிர்[1]செல்வத் துளவியல் பதைநாடிக்
கண்ணுற [2]லரிதென்னிற் கழறுத லெளிதாமோ
எண்ணுறு சுடர்வானத் திந்திரன் முடிசூடும்
மண்ணுறு திருநாளே யொத்தது மணநாளே.

1284 முனிதல் - வெறுத்தல். பத்தியின் - முறைப்பட. அவிர் - விளங்குகின்ற. தொத்து - பூங்கொத்து. சித்திர நிரைதோயும் துகில் - சித்திர வரிசைகள் அமைந்த ஆடைகள்; சிலப். எ: 1; பெருங். உ. 5: 109. சில பிரதிகளில் அடி 3 - 4, பின்முன்னாக உள்ளன.

(பி - ம்) [1]'வடமாலை முலைமிசை முயல்வாரும்' [2]'னிமி;' 'னிறை,' 'ணணி' [3]'தொடைமாலை' [4]'நிறந்' (கூசு)

1285 கிடை புரை இதழ் - நெட்டியைப்போல் சிவந்த அதரங்கள். கிளர் முலை நகையாரும் (பி - ம்) - விளங்குகின்ற முல்லை அரும்புபோன்ற பற்களையுடையவர்கள். பழைய வசனத்தின்படி 'தந்திடை' என்பது பாடம்; தந்து - தூல். (பி - ம்.) [1]'கிளர்முலை நகையாரும்' (கூஎ)

1286 உள் நிறை - மிதிலாபுரியில் நிறைந்துள்ள. உள இயல்பு - உள்ள தன்மை. எண்ணுறு - மதிப்பையுடைய. மண்ணுறு திருநாள் - அபிடேகத் திரு நாள்.

(பி - ம்) [1]'செல்வ மொருதுறை செலவென்றுங்' [2]'லரிதென்றும் கருதுதலரிதம்மா' (கூஅ)

வேறு

மண மண்டபத்துக்குத் தசரதன் வர அமைதல்

1287 கரைதெரி வரியது கனகம் வேய்ந்தது
வரையென வுயர்ந்தது மணியிற் செய்தது
நிரைவளை மணவினை நிரப்பு மண்டபம்
அரைசர்த மரசனு மணுகன் மேயினன்.

தசரதன் மணமண்டபம் வருதலின் சிறப்பு

1288 வெண்குடை யிளநிலா விரிக்க மின்னெனக்
கண்குடை மணியிள வெயிலுங் கான்றிடப்
பண்குடை வண்டினம் பாட வாடன்மா
மண்குடை தூளிவிண் மறைப்ப வேகினன்.

இதுவும் அது

1289 மங்கல முரசின மழையி னார்த்தன
[1]சங்குகண் முரன்றன தாரை [2]பேரிகை
பொங்கின மறையவர் புகலு நான்மறை
கங்குலி லெலிக்குமா கடலும் [3]போன்றதே.

இதுவும் அது

1290 பரந்ததேர் களிறுபாய் புரவி பண்ணையிற்
றரந்தர நடந்தன தானை வேந்தனை
நிரந்தரந் தொழுதெழு நேமி மன்னவர்
புரந்தரன் புடைவரு மமரர் போன்றனர்.

1287 கரை - அளவு. கனகம் - பொன். நிரைவளை - சேனை. அரைசர் தம் அரசன் - தசரதன். (சுக)

1288 மின்னென - மின்னலைப்போல. கண்குடை - ஒளியினுல் கண்களைக் குடைகின்ற. மணி - பலவகை இரத்தினங்கள். ஒரே சமயத்தில் நிலவும் வெயிலும்: 875. குடை வண்டினம் பண்பாட; குடை - மலர்களைக் குடைகின்ற. ஆடன்மா - குதிரை. (சo)

1289 மங்கல முரசு - மணமுரசு. போர் என (பி - மீ.) - போர் - ஒலிக் குறிப்பு: இடைச் சொல். நான் மறை - நான்கு வேதங்களின் ஒலி. கங்குலின் - இரவில். சங்கும் பேரிகையும்.

(பி - மீ.) [1]'சங்கின முழங்கின' [2]'போரென' [3]போன்றவே. (சக)

1290 பண்ணை - கூட்டம். தரம் தர - வரிசைப்பட. தானை வேந்தனை - சேனைகளையுடைய தசரதனை. தசரதனுக்கு இந்திரன்; 329, குறிப். (சஉ)

யாவரும் ஆசனங்களில் அமரல்

1291 அனையவன் மண்டப மணுகி யம்பொனின்
புனைமணி யாதனம் பொலியத் தோன்றினன்
முனைவரு மன்னரு முறையி னேறினர்
சனகனுந் தன்கிளை தழுவ வேறினன்.

கலியாண மண்டபத்துக்கு மேருமலை உவமை

1292 மன்னரு [1]முனிவரு மற்று ளோர்களும்
அன்னமென் னடையணங் கனைய மாதரும்
துன்னினர் துவன்றலிற் சுடர்கள் சூழ்வரும்
பொன்மலை யொத்ததப் பொருவில் கூடமே.

அண்டகோளம் போன்றது மண்டபம்

1293 புயலுள [1]மின்னுள பொருவின் மீனுள
[2]இயன்மணி யினமுள [3]சுடரி ரண்டுள
மயன்முதற் றிருத்திய [4]மணிகொண் மண்டபம்
அயன்முதற் றிருத்திய வண்ட மொத்ததே.

1291 **அனையவன்** - அத்தகைய தசரதன். **முனைவரும்** - முனிவரும். 'முனைவன் கண்டது முதனூலாகும்'. தொல். (சஙூ)

1292 நடையையுடைய அணங்கு அனைய மாதர்; அணங்கு - திருமகள். துன்னினர் துவன்றலில் - நெருங்கி நிறைந்ததனால். கூடம் - கல்யாண மண்டபம். மன்னர் முதலியோருக்குச் சூரியன் முதலிய சுடர்களும் மண்டபத்துக்கு மேருவும் உவமை; 1326. (பி - ம்.) [1]'முனிவரும் வானு' (சஙூ)

1293 புயல், மின் மீன் என்பன பெண்களின் கூந்தல், இடை, கண்கள். மணியினம் - ஆபரணங்களில் உள்ள மணிகளின் கூட்டம். சுடரிரண்டு - சூரிய சந்திரர்: இங்கே தசரதரும் சனகரும்; 1121. மயன் - தெய்வத் தச்சன்; 110, குறிப். அண்டம் - அண்ட கோளம். புயல் முதலியன அண்டகோளத்தில் உள்ளவை.

(பி - ம்.) [1]'வதனுளபொருவின் மின்னுள' [2]'இயன் முழக்குள' [3]'சுடர்கள் மூன்றுள,' 'சுடருமீண்டுள,' 'சுடருமீன்றுள' [4]'மணிசெய்,' 'வசையின்' (சஙூ)

திருமாலின் வயிற்றைப் போன்றது மண்டபம்

1294 எண்டவ முனிவரு மிறைவர் யாவரும்
அண்டரும் பிறரும்புக் கடங்கிற் றுதலால்
மண்டபம் வையமும் வானும் வாய்மடுத்
துண்டவன் மணியணி யுதர மொத்ததே.

கவிக் கூற்று

1295 தராதல முதலுல கனைத்துந் தள்ளுற
விராவின குவிந்தன விளம்ப வேண்டுமோ
அராவணை துறந்துபோந் தயோத்தி மேவிய
இராகவன் செய்கையை யியம்பு வாமரோ.

இராமன் மங்கள ஸ்நானம் செய்தல்

1296 சங்கினந் தவழ்கட லேழிற் றந்தவும்
[1]சிங்கலி லருமறை தெரிந்த தீர்த்தங்கள்
கங்கையே முதலவுங் கலந்த நீரினுல்
மங்கல மஞ்சன மரபி னுடியே.

தெய்வத்தை வணங்குதல்

1297 கோதறு தவத்துத்தங் குலத்து ளோர்தொழும்
ஆதியஞ் சோதியை யடிவ ணங்கினன்
காதியல் கயல்விழிக் கன்னி மார்களை
வேதியர்க் கருமறை விதியி னல்கியே.

1294 எண்தவம் - மதித்து எண்ணப்படும் தவம். உண்டவன் - திருமால். மணி - உதரபந்தன மணிகள். உதரம் - வயிறு.

'தொடங்கியுந் தொடக்கந் தொட்டுத் துகளற வளர்ந்து மீள, மடங்கியுஞ் செல்லுகின்ற மன்னுயி ருலகமெல்லாம், முடங்கிய சார்ங்கச் செங்கை முகுந்தன்வாய்ப் புகுந்த காலத், தடங்கிய வுதரம்போன்ற தந்தமா நகரி யம்மா' (வி - பா. திரௌபதி மாலையிட்ட. 19.)

1295 தராதலம் - பூமியாகிய இடம்; தனியன், 1. தள்ளுற - திரு மணத்தைக் காண வேண்டுமென்ற ஆசை விசையிற் செலுத்த. தள்ளுற உல கனைத்தும் விராவினவாய்க் குவிந்தன. 'அராவணை துறந்து வந்தவர்: 'அராவணை துறந்து தரை நின்றவர்' (கூ. 1. 31.) (சஎ)

1296 சிங்கல் இல் - அழிதல் இல்லாத. மரபின் - சாஸ்திர முறைப் படி. (பி - மீ) [1]'சிங்கலி ஞன்மறை செப்பும்' (சஅ)

1297 ஆதியஞ் சோதி - திருமால்; 726. காதியல் - காதினிடம் செல்லுகின்ற. நல்கிச் சோதியை அடி வணங்கினன். (சக)

சந்தனம் அணிதல்

1298 அழிவரு தவத்தினை டறத்தை யாக்குவான்
ஒழிவருங் கருணையோ ருருவு கொண்டென
எழுதரு வடிவுகொண் [1]டிருண்ட மேகத்தைத்
தழுவிய நிலவெனக் கலவை சாத்தியே.

முடிக்கு அலங்காரஞ் செய்துகொள்ளல்

1299 மங்கல முழுநிலா மலர்ந்த திங்களைப்
பொங்கிருங் கருங்கடல் பூத்த தாமெனச்
செங்கிடைச் சிகழிகைச் செம்பொன் [1]மாலையும்
தொங்கலுந் துயல்வரச் சுழியஞ் சூடியே.

காதணிகளை அணிதல்

1300 ஏதமி லிருகுழை யிரவு நன்பகல்
காதல்கண் [1]டுணர்ந்தன கதிருந் திங்களும்
சீதைதன் கருத்தினைச் செவியி னுள்ளுறத்
தூதுசென் றுரைப்பன போன்று தோன்றவே.

வீரபட்டமும் திலகமும் அணிதல்

1301 கார்விடக் கறையுடைக் கணிச்சி வானவன்
வார்சடைப் புடையிலேர் மதிமி லிச்சத்தான்
சூர்சுடர்க் குலமெலாஞ் சூடி னெனை
வீரபட் டத்தொடு திலக மின்னவே.

1298 அழிவரு - அழிந்து வருகின்ற. ஆக்குவான் - நிலைநிறுத்தும் பொருட்டு. கலவை - சந்தனக் கலவை.

(பி - மீ.) [1]'டெழுந்த', 'டிருந்த' (நிo)

1299 செங்கிடைச் சிகழிகை - செந்நெட்டி மாலை. சிகழிகைக்குச் சந்திரன்: 1209. தொங்கல் - மாலைவிசேடம். துயல்வர - அசைய. சுழியம் - தலையில் அணியும் ஓர் அணி. சுழியத்துக்கு முழுமதி. சிகைக்குக் கடல் உவமை. (பி - மீ.) [1]'மவுலியில்' (நிக)

1300 காதல் கண்டு - சீதையின் காதலைப் பார்த்து. கதிர் - சூரியன். உணர்ந்தனவாகிய கதிரும் திங்களும் கருத்தினை உள்ளுறத் தூது சென்று உரைப்பன போன்று இருகுழை தோன்ற. (பி - மீ.) 'டுவந்தன' (நிஉ)

1301 கணிச்சி வானவன் - மழுவை யுடைய சிவபெருமான். ஓர்மதி - ஒரு கலையை யுடைய பிறை. 'தாரென்ன வோங்குஞ் சடைமுடி மேற்றனித் திங்கள், வைத்த...கறைமிடற்றம் பலவன்' (திருச்சிற். 56, பேர்.)

முத்து மாலைகள் அணிதல்

1302 சக்கரத் தயல்வருஞ் சங்க மாமென
மிக்கொளிர் கழுத்தணி தரள வெண்கொடி
மொய்க்கருங் குழலிணை முறுவ லுள்ளுறப்
[1]புக்கன நிறைந்துமேற் பொடிப்ப போன்றவே.

தோள்வளை அணிதல்

1303 பந்திசெய் வயிரங்கள் பொறியிற் பாடுற
அந்தமில் சுடர்மணி யழலிற் றோன்றலாற்
சுந்தரத் தோளணி வலயந் தொல்லைநாள்
மந்தரஞ் சுற்றிய வரவை மானுமே.

கையில் முத்துவடம் அணிதல்

1304 கோவையின் பெருவட முத்தங் கோத்தன
காவல்செய் தடக்கையி னடுவட் காந்துவ
மூவகை யுலகிற்கு முதல்வ னுமென
ஏவரும் பெருங்குறி யிட்ட போன்றவே.

சூர் சுடர்க்குலம் - தெய்வத் தன்மையுள்ள சூரியன் முதலிய ஒளிக் கூட்டங்கள். வீரபட்டம் : நெற்றியில் அணிவது. (நிஙு)

1302 சுதரிசனமென்னும் சக்கரம் இராமபிரான் முகத்துக்கும் சங்கு கழுத்துக்கும் உவமை. தரள வெண்கொடி - முத்து மாலைகள்: உள் உறப் புக்கன - தன் மனத்திலே பொருந்த முன்பு புகுந்துள்ளன. மேல்பொடிப்ப போன்ற - உடலின் வெளியே தோன்றுதல் போன்றன.
(பி - ம்) [1]'புக்கென நிறைத்து மெய்பொடித்த' (நிச)

1303 வாகு வலயத்துக்குப் பாம்பு. பந்தி - வரிசை. பொறியின் - பாம்பினது படத்திலுள்ள புள்ளிகளைப்போல. பாடு உற - பெருமைபெற; ஒளி வீச என்றபடி. சுடர் மணி - செந்நிற மணிகள். அழல் - பாம்பின் கண் ணின்விடம்; திட்டிவிட மென்னும் பாம்பு அழற் கண்களை யுடையது. தோள் அணி - தோளில் அணிந்த. மந்தரம் சுற்றிய அரவு - வாசுகி. சுற்றியது பாற்கடலைக் கடைவதற்கு. 'சுந்த ரத்தடந் தோள்வளை மாசுணஞ் சுற்றிய தொழில் காட்ட, மந்தரத்தையுங் கடித்தது மற்றவன் மணியணி வயிரத் தோள்' (6, கும்பகருணன். 344.) (நிடு)

1304 1-2: கையில் முத்து வடம் அணிதல் உண்டு; இது தோள் வளைக்கும் கடகத்துக்கும் மத்தியில் அணிவது. காந்துவ - பிரகாசிப்பன.
ஏ : தலையெடுப்பு. (நிசு)

கடகம் அணிதல்

1305 மாண்டபொன் மணியணி வலயம் வந்தெதிர்
வேண்டினர்க் குதவுவான் வேண்டிக் கற்பகம்
ஈண்டுதன் கொம்பிடை யீன்ற தாமெனக்
காண்டகு தடக்கையிற் கடக மின்னவே.

மணியாரம் அணிதல்

1306 தேனுடை மலர்மக டிளைக்கு மார்பினிற்
றூனிடை விளங்கிய தகையி னூரந்தான்
மீனெடுஞ் சுடரொடும் விளங்கு மேகத்துள்
வானிடு வில்லென வயங்கிக் காட்டவே.

உத்தரீயம் அணிதல்

1307 நணுகவு [1]மரியதா நடக்கு ஞானத்தர்
உணர்வென வொளிர்தரு முத்த ரீகந்தான்
[2]கணிவருங் கருணையான் கழுத்திற் சாத்திய
மணியுமிழ் கதிரென மார்பிற் றோன்றவே.

பூணூல் வருணனை

1308 மேவருஞ் சுடரொளி விளங்கு மார்பினூல்
ஏவருந் தெரிந்தினி துணர்மி னீண்டெனத்
தேவரு முனிவருந் தெரிக்க லாமுதன்
மூவருந் தானென முடித்த தொத்ததே.

1305 மாண்ட - மாட்சிமைப்பட்ட. வலயம் - வளைகள். உதவுவான் வேண்டி - கொடுக்க விரும்பி. காண்தகு தடக்கை - யாவரும் காணத்தக்க அழகிய விசாலமான கை. இராமன் கைக்குக் கற்பகக் கொம்பு. (பக எ)

1306 இராமாவதாரத்துக்கு முன்னும் பின்னும் இலக்குமி திருமால் மார்பில் திளைப்பதை நினைந்து (இந்த அவதாரத்தில் மட்டும்) 'இடைவிளங்கிய ஆரம்' என்றார். விரிவு பற்றியும் நிறம் பற்றியும் இராமன் மார்புக்கு மேகம் உவமை. சுடர் - சந்திரன். ஆரத்துக்கு இந்திரவில். (பக அ)

1307 நணுகவும் - நெருங்குவதற்கும். நடக்கும் - ஒழுகுகின்ற. உத்தரீகம் - மேலாடை, ஞானிகளின் அறிவு உத்தரீயத்துக்கு உவமை; தூய்மையோடு கூடிய வெண்மை பொதுத்தன்மை. கணிவரும் - கணக்கிடுதற்கு இயலாத. கருணையான் - இராமன்; எழுவாய். மணி உமிழ்கதிர் - மணிமாலை.

(பி - ம்) [1]'நிமிரவு', [2]'தணிவருங்' (பக கூ)

1308 மேவரும் - ஒளி மிகுதியினால் எவரும் அருகில் நெருங்க இயலாத. முதல் - பரப்பிரமம்; என்றது இராமபிரானை. முதன் மூவரும் என்று கொண்டு 'முதன்மையான மும்மூர்த்திகளும்' என்று கொள்ளலும் ஆம். ஒத்தது மார்பிலணிந்த பூணூல். மூன்று புரிகளையுடைய நூல் மும்மூர்த்திகளுக்கு. (பக ஙo)

உதரபந்தனம் அணிதல்

1309 சுற்றுநீ டமணியச் சோதி [1]சூழமேல்
ஒற்றைமா மணியுமி ழுதர பந்தனம்
மற்றுமோ [2]ரண்டமு மயனும் வந்தெழப்
பொற்றடந் தாமரை பூத்த தொத்ததே.

பட்டாடை அணிதல்

1310 மண்ணுறு சுடர்மணி வயங்கித் தோன்றிய
கண்ணுறு கருங்கட லதனைக் கைவளர்
தண்ணிறப் பாற்கட றழீஇய தாமென
வெண்ணிறப் பட்டொளி விளங்கச் சாத்தியே.

கச்சும் உடைவாளும் அணிதல்

1311 சலம்வரு தரளமுந் தயங்கு நீலமும்
அலம்வரு நிழலுமி ழும்பொற் கச்சினுற்
குலம்வரு கனகவான் குன்றை நின்றுடன்
வலம்வரு கதிரென வாளும் வீக்கியே.

1309 தமனியச்சோதி - பொன்னின் ஒளி. ஒற்றை மாமணி - ஒரு மணி, நடுநாயக மணி. உதர பந்தனம் - வயிற்றிற் கட்டிக் கொள்ளும் அணி. பொன்னுலியன்ற உதரபந்தனம் அண்டகோளத்துக்கும், நடுநாயக மணி நான்முகனுக்கும், அது பதிந்துள்ள முகப்பு நான்முகன் உதித்த தாமரைக்கும் உவமை.

(பி - ம்) [1]'பொங்கமேல்' [2]'ரண்டமோடயனும்' (கூ5)

1310 மண்ணுறு - சாணே பிடித்த. கண்ணுறு - இடம் அகன்ற. இராமபிரான் மேனிக்குக் கருங்கடல் உவமை. கைவளர் - பக்கத்திலே சோபிக்கின்ற. (கூ6)

1311 சலம் வருதரளம் - நீரில் தோன்றும் முத்து. தயங்கு - விளங்குகின்ற. அலம் வரு - சுழல்கின்ற. கச்சு நீல மணிகளாலும் முத்துக்களாலும் இயன்றது. குலம் வரு - சிறந்த என்றபடி. கனகவான் குன்று - மேருமலை; ஐயனது இடைக்கு உவமை. வாளுக்குச் சூரியன் உவமை. (கூ7)

கச்சினில் தொங்கல் சேர்த்தல்

1312 முகைவிரி சுடரொளி முத்தின் பத்தியால்
தொகைவிரி பட்டிகைச் சுடருஞ் சுற்றிடத்
தகையுடை வாளெனுந் தயங்கு வெய்யவன்
நகையிள வெயிலெனத் தொங்க ணுற்றியே.

தோடையணி அணிதல்

1313 காசொடு கண்ணிழல் [1]களுலக் கைவினை
ஏசலில் கிம்புரி யெயிறு வெண்ணிலா
வீசலின் மகரவாய் விளங்கு [2]வாண்முகம்
ஆசையை யொளிகளா லளந்து காட்டவே.

சிலம்பும் கழலும் அணிதல்

1314 இனிப்பரந் துலகினை யளப்ப தெங்கெனத்
தனித்தனி தடுப்பன போலுஞ் சால்பின
நுனிப்பரு நுண்வினைச் சிலம்பு நோன்கழல்
[1]பனிப்பருந் தாமரைப் பாதம் பற்றவே.

1312 முகைவிரி சுடர் ஒளி முகத்தின் பத்தி - முல்லை அரும்புகளை விரித்தாற்போன்ற ஒளியை வீசும் முத்துக்களின் வரிசை. தொகை விரி - தொகுதியாக விரிகின்ற. பட்டிகைச் சுடர் - அரைப்பட்டிகையின் ஒளி. வாளைச் சூரியன் என்றதற்கு ஏற்ப, அதன் அருகில் தொங்விட்ட செம்மணிகளால் இயன்ற தொங்கலை அச் சூரியனது இளவெயில் என்றார். (சுச)

1313 கண் நிழல் காசொடு களுல - மகரத்தின் கண் ஒளி இரத்தினத்தின் ஒளியோடு நெருங்க. இரத்தினம் பதிந்த கண்களையுடையது மகரம். கைவினை - வேலைப்பாடு. கிம்புரி எயிறு - பூண் இட்ட பற்கள். ஆசையை - திசைகளை. மகரவாய் என்பது சுறா மீனின் வாயைப்போன்று அமைந்த முகப்பை உடைய ஓர் அணி; குறங்கு செறி எனப் பெயர்பெறும்; குறங்கு - தொடை. இவ்வித அணிதோளுக்கும் உண்டு; 'மணிமகரம் வாய்போழ்ந்து... தோள்' (சீவக. 170.) வாண்முகம் மகரவாயினது. ஒளிகள் என்றது இரத்தினங்களின் வெயிலையும் பற்களின் வெண்ணிலாவையும்.

(பி - ம்) [1]'கனலக்' [2]'மின்னென' (சுடு)

1314 இனி - (திருவிக்கிரமாவதாரத்தில் அளந்ததுபோல்) இனி மேல். தடுப்பது தமக்கு அமைந்த பாரத்தால். நுண் வினை - நுட்பமான வேலைப்பாடு. நோன்கழல் - வலிமையுடைய வீரக் கழல். பனிப்பு அரும் தாமரை - நடுக்கமற்ற தாமரை மலர்.

(பி - ம்) [1]'பனிப்புறு' (சுசு)

நெற்றிக்குத் திருமண் இட்டுக்கொள்ளுதல்

1315 என்றுநான் முகன்முதல் யாரும் யாவையும்
நின்றுபே ரிருவினை நீக்கி நீணெறி
சென்றுமீ ளாக்குறி சேரச் சேர்த்திய
தன்றிரு நாமத்தைத் தானுஞ் சாத்தினே.

தாங்கிய கோலச் சிறப்பு

1316 இன்னன பொலிதர விமைய வர்க்கெலாம்
தன்னையே யொப்பதோர் கோலந் தாங்கினன்
பன்னக மணிவிளக் [1]கழலும் பாயலுள்
அன்னவர் தவத்தினு லனந்த னீங்கினன்.

இதுவும் அது

1317 முப்பரம் பொருளுக்கு முதலே மூலத்தை
இப்பரந் தடைத்தவ ரெய்து மின்பத்தை
அப்பனே யப்பினு ளமிர்தந் தன்னையே
ஒப்பனே யொப்பனே யுரைக்க வொண்ணுமோ.

1315 இச்செய்யுள் சிலபிரதிகளில் இல்லை. வேறு சிலபிரதிகளில் இது 49 ஆம் பாடலாகக் காணப்படுகின்றது. 1301 ஆங்கவியில் திலகங் கூறப் படுவதால் இது அதிகப் பாடலென்பர் பலர்.

என்றும் - எக் காலத்தும். யாவையும் - அஃறிணையுயிர்களும். மீளாக் குறி - சென்றவர் திரும்பிப் பிறத்தலில்லாத வைகுண்டம். 'யாரும் யாவையும் சேர்த்திடும் நாமத்தைத் தானும் சாத்தி.' (கூஎ)

1316 இமையவர்க்கு எலாம் - எல்லா இமையவர் பொருட்டும். தன்னையே அனையதோர் கோலம்: 1136. பன்னக மணி விளக்கு, அழலும் பாயல்: 'பாம்பின், ஆயிரமணிவிளக்கழலுஞ் சேக்கை' (யா. வி. 90, மேற்.)

சில பிரதிகளில் இது 1322 க்குப்பின் காணப்படுகிறது.

(பீ - ம்) [1] 'கவிரும்' (கூஅ)

1317 முப்பரம் பொருள் - பிரமன், திருமால், உருத்திரன். முப்பரம் பொருளுக்கும் முதல்வன் இராமன்: 326; 'முப்பரப் பொருளுக்கு முதலு மாய்' பிற்சேர்வு. 1இப்பரம்-இந்தப் பாரத்தை. பாரம் என்றது எல்லாவகைப் பற்றுக்களையும். ஒப்பனே - முன்னது ஒப்பவனே; பின்னது அலங்காரம். (கூக)

தானம் வழங்கியபின் தேர் ஏறுதல்

1318 பல்பதி னாயிரம் பசுவும் பைம்பொ னும்
எல்லையி னிலனெடு மணிகள் யாவையும்
நல்லவர்க் குதவினு னவிலு நான்மறைச்
செல்வர்கள் வாழ்த்துறத் தேர்வந் தேறினான்.

தேரின் வருணனை

1319 பொற்றிர [1]ளச்சுருள் வெள்ளிச் சில்லிபுக்
குற்றது வயிரத்தி னுற்ற தட்டது
சுற்றுறு நவமணி சுடருந் தோற்றத்தால்
ஒற்றையா ழிக்கதிர்த் தேரொ டொப்பதே.

தேரிற் பூட்டிய குதிரைகளின் இயல்பு

1320 நூல்வருந் [1]தகையன நுனிக்கு நோன்மைய
சால்பெருஞ் செவ்விய தரும மாதிய
நாலியு மனையன புரவி நான்கொரு
[2]பாலியும் புணர்ந்தன பக்கம் பூண்டவே.

1318 **நவிலும்** - எப்பொழுதும் கூறும்; (எ0)

1319 உருள் வெள்ளிச் சில்லி - வெள்ளியாலான உருளும் சக்கரம். அச் சுசில்லி புக்குற்றது. தேர்த்தட்டு வயிரத்தால் இயன்றது. ஒற்றை யாழித் தேர் - ஓர் உருளையை யுடைய தேர். கதிர்த் தேர் - சூரியனுடைய தேர்.

(பி – மீ.) [1]'ளச்சது', 'ளச்சொடு' (எக)

1320 நூல் வரும் தகையன - அசுவசாத்திரத்திற் கூறப்பட்ட நிகுதிகளை யுடையன; அசுவசாத்திரம் சூரியன் செய்தது. 'ஏழிடந் தோன்றியின்னூற் கியைந்து, வீதி போகிய வாலுளைப் புரவி' (கல்லாடம். 8)

நுனிக்கும் நோன்மைய - சாரதியின் கட்டளையை நுட்பமாக அறிந்து கொள்ளும் திறமையை யுடையன. செவ்விய-அழகை யுடையன. புருஷார்த்தங்கள் நான்கையும் போன்றன நான்கு குதிரைகள். நான்கொரு பாலையும் புணர்ந்தன - ஐந்து பான்மைகளை யுடையன; ஐந்து என்றது குதிரைக்கு உரிய ஐந்து கதிகளை; அவை விக்கிதம், விற்கிதம், உபகண்டம், ஜவம், 'மாஜவம் என்பன; இவை பஞ்ச தாரை எனப்படும்; பு. வெ. 355. 'ஒரு பாலையும் புணர்ந்தன' என்பதற்கு 'ஒப்பற்ற வெண்ணிறத்தையும் சேர்ந்தன' என்று பொருள் கொள்வாரு முண்டு; 'பால்புரை புரவி நால்குடன் பூட்டி'(பொருந. 165.) பக்கம் - தேரின் பக்கத்தில். இச்செய்யுள் சில பிரதிகளில் இல்லை.

(பி. - மீ.) [1]'தன்மைய' [2]'பாலமை யுணர்ந்தன', 'பாலமை புணர்ந்தன்' (எஉ)

தம்பியர் பணிபுரிய ஏகுதல்

1321 அனையதோர் தேரினி லருண னின்றெனப்
பனிவரு மலர்க்கணப் பரதன் கோல்கொளக்
குனிசிலைத் [1]தம்பியர் கூட வெய்திநின்
றினியபொற் கவரிகா லியக்க வேகினான்.

யாவரும் இமைகொட்டாது இராமனே நோக்கல்

1322 அமைவரு மேனிய னழகி னுயதோ
கமையுறு மனத்தினுற் கருத வந்ததோ
சமைவுற வறிந்திலந் [1]தக்கதி யாதென
இமையவ ராயினு ரிங்கு ளாரெலாம்.

அரம்பைமாருடன் தேவர்கள் கூத்தாடுதல்

1323 வரம்பறு [1]மூலகினை வலிந்து மாய்வின்றித்
திரம்பயி லரக்கர்தம் வருக்கந் [2]தேய்வினி
நிரம்பிய தெனக்கொடு நிறைந்த தேவர்கள்
அரம்பையர் குழாத்தொடு [3]மாடன் மேயினர்.

1321 பனி - ஆனந்தக் கண்ணீரைக் குறிக்கும். கோல் கொளல் - சாரத்தியஞ் செய்தல். இலக்குவனும் சத்துருக்கனும் கவரிவீசல்: கூ. 36: 38. கவரி கால் இயக்க - கவரியினுல் காற்றை இயங்கச் செய்ய. பொற்கவரி - பொற்பிடியை யுடைய சாமரை.

(பி - ம்.) [1]'தம்பியர் குறுகிப் பின்னர் நின்று', 'தம்பி பின் கூட வேனையன்' (எஙூ)

1322 அமைவு அரும் - பிறருக்குப் பொருந்துதற்கு அரிய. கமை - பொறுமை. சமைவுற - பொருத்தமுற. எல்லோரும் இமை கொட்டாமைக்குக் காரணம் முதல் இரண்டடிகளில் கூறப்பட்டது. ஒன்றைக் கருதி ஆழ்ந்திருப்பார் இமை கொட்டுவதில்லை.

(பி - ம்.) [1]'தக்க தாகுக' 'தவத்தினுயதோ' (எச)

1323 வரம்பறும் உலகு - எல்லை யற்ற உலகங்கள். வலிந்து - காரணமின்றி வருத்தி. மாய்வு இன்றி - தங்களுக்கு அழிவில்லாமல். திரம் பயில் - ஸ்திரத்தைப் பெற்றுள்ள; ஸ்திரம் - நிலைபெறுதல். கொடு - மனத்திற் கொண்டு.

(பி - ம்.) [1]'மூலகெலாம் வளர்ந்து தேய்வின்றித்' [2]'தேய்வுறல்', தேய்வின்று' [3]'தாமு மாடினர்' (எடி)

மிதிலை மகளிரியின் செயல்

1324 சொரிந்தனர் பூமழை சுண்ணந் தூவினர்
விரிந்தொளிர் காசுபொற் றூசு வீசினர்
பரிந்தன ரழகினைப் பருகி னுர்கொலோ
தெரிந்தில மந்நகர் மகளிர் செய்கையே.

இதுவும் அது

1325 வள்ளலை நோக்கிய மகளிர் மேனியின்
எள்ளரும் பூணெலா மிரிய நிற்கின்றூர்
உள்ளன [1]யாவையு முதவிப் பூண்டவும்
[2]கொள்ளையிற் கொள்கெனக் கொடுக்கின் றூரினே.

வேறு

இராமன் மணமண்டபம் அடைதல்

1326 எஞ்சலி லுலகத் துள்ள வெறிபடை யரச வெள்ளம்
குஞ்சரக் குழாத்திற் சுற்றக் கொற்றவ னிருந்த கூடம்
வெஞ்சினத் தனுவ லானு மேருமால் வரையை மேவும்
செஞ்சுடர்க் கடவு ளென்னத் தேரின்மேற் சென்று
சேர்ந்தான்.

1324 சுண்ணம் - வாசனைப்பொடி. காசு பொன்தூசு - இரத்தினங் களையும் பொன்னுலான ஆடைகளையும். வீசுதல் - தமக்கென்று லட்சியம் செய்யாது தாராளமாகக் கொடுத்தல்; 'வேண்டினர் வேட்கையின் மேற்பட வீசி, ரீண்ட கையா' (447.) தெய்வம் திரு உலாவருகையில் காசு முதலிய வற்றை வீதியில் வீசுதல் மரபு. பரிந்தனர் - விரும்பினவர்களாய். அழகினை- இராமபிரானது அழகை. அழகினைப் பருகுதல்: 724. அந்நகர் - மிதிலை. (எக)

1325 வள்ளல் - இராமன். இரிய - கழன்றுவிழ. பூண்டவும் - அணிந் துள்ள வற்றையும். கொள்ளையில் - மிகுதியாக.

முடிவு: கொடுக்கின்றூரின் இரிய நிற்கின்றூர்.

(பி - மீ.) [1]'வறியவர்க்குதவிப்' [2]'கொள்ளெனக் கொள்ளையிற்' (எஎ)

1326 எஞ்சல் இல் உலகத்துள் - சகல தேசங்களிலும் உள்ள. குஞ்சரக் குழாத்தில் சுற்ற - யானைக் கூட்டத்தைப் போல் சுற்றி இருக்க. கொற்றவன் - தசரதன். கூடம் - மண மண்டபத்தில். தனுவலான் - வில் வித்தையில் வல்லவனன இராமன். மண்டபத்துக்கு மேருமலை: 1292. முன் 1319 ஆம் கவியில் ஐயன் எறியதேர், 'ஒற்றை யாழிக் கதிர்த்தே ரொ

மண்டபம் சென்று ஐயன் அமர்ந்த முறைமை

1327 இரதமாண் டிழிந்த பின்ன ரிருமருங் கிரண்டு கையும்
பரதனு மிளைய கோவும் பரிந்தன ரேந்தப் பைந்தார்
வரதனு மெய்தி மைதீர் மாதவர்த் தொழுது நீதி
விரதமெய்த் தாதை பாதம் வணங்கிமா டிருந்த வேலை.

பிராட்டி மண்டபம் அடைந்த வருணனை

1328 சிலையுடைக் கயல்வாட் டிங்க ளேந்தியோர் செம்பொற் கொம்பர்
முலையிடை முகிழ்ப்பத் தேரின் மீமிசை முளைத்த தன்னாள்
அலைகடற் பிறந்து பின்னை யவனியிற் றோன்றி மீள
மலையிடை யுதிக்கின் றுள்போன் மண்டப மதனில் வந்தாள்.

வேறு

தேவர்கள் கூற்று

1329 நன்றிவா னவரெலா மிருந்த நம்பியைத்
துன்றிருங் கருங்கட றுவைப்பத் தோன்றிய
மன்றலங் கோதையாண் மாலை சூட்டிய
அன்றினு மின்றுடைத் தழகென் றுரரோ.

டொப்பது' என்றதற் கேற்பவும், 1321 ஆம் கவியில் சாரதிக்கு அருணனை உவமை கூறியதற்கு ஏற்பவும் இங்கே, 'செஞ்சுடர்க் கடவுளென்ன' என்றார். கூடத்தில் சென்று சேர்ந்தான். (எஅ)

1327 இளையகோ - இலக்குவன். பரிந்தனர் - விரும்பி. மாதவர் - வசிட்டரும் கோசிகரும்; அங்குள்ள முனிவர் யாவரும் ஆம். நீதிவிரத மெய்த்தாதை - நீதியையே தன் விரதமாகக் கொண்ட சத்திய சீலனான தசரதன். வேலை - சமயத்தில். (எக)

1328 சிலையுடைக்கயல்; புருவத்தையுடைய கண்ணுக்கு. வாள் திங்கள் - ஒளியையுடைய சந்திரன். கொம்பர் - பூங்கொம்பு. இடை முகிழ்ப்ப - அக் கொம்பினிடையே அரும்ப. கொம்பர் தேரின் மீமிசை முளைத்த தன்னாள். மலை மண்டபத்துக்கு உவமை. (அ0)

1329 நன்றி வானவர் - பல நன்மைகள் மிகுந்த தேவர்கள். நம்பி - ஆடவரிற் சிறந்த இராமன். கருங்கடல் - பெருமையுள்ள பாற்கடலை துவைப்ப - ஒலியெழ. பாற்கடலை யன்றிக் கருங்கடலைக் கடைந்தது ஒரு யுகாந்தரத்தில் என்று கொள்ளலும் ஆம். இலக்குமி திருமாலை மணந்த அந்நாளினும். இன்று - இந்நாள். (அக)

மண அழகின் சம்பிரமம் சொல்லுந்தரமன்று

1330 ஒலிகட லுலகினி லும்பர் நாகரிற்
பொலிவது மற்றிவள் பொற்பென் [1]றாலினி
மலிதரு மணம்படு திருவை வாயினால்
மெலிதரு முணர்வினே னென்வி ளம்புகேன்.

இந்திரனும் சிவபிரானும் பிரமனும் தம் தேவிமாருடன் வருதல்

1331 இந்திரன் சசியோடு மெய்தி னானிளஞ்
சந்திர மௌலிதன் றைய லாளொடும்
வந்தனன் மலரயன் வாக்கி னாளுடன்
அந்தரஞ் சூழ்ந்தன னழகு காணவே.

வசிட்டர் மணச்சடங்கு செய்ய அமைதல்

1332 நீந்தருங் கடலென நிறைந்த வேதியர்
தோய்ந்தநூன் மார்பினர் சுற்றத் தொன்னெறி
வாய்ந்தநல் வேள்விக்கு வசிட்டன் [1]மையற
ஏய்ந்தநற் [2]றருப்பையோ டினிதி னெய்தினான்.

வசிட்டரின் செயல்

1333 [1]தண்டிலம் விரித்தனன் தருப்பை சார்த்தினன்
மண்டலம் விதிமுறை வகுத்து [2]வெண்மலர்
[3]கொண்டுநெய் சொரிந்தெரி குழும மூட்டினன்
பண்டைய மறைநெறி பரிவிற் செய்தனன்.

1330 உலகினில் உம்பர் நாகரில் - பூலோகத்திலும் மேலுலகிலும் பாதாளத்திலும். பொற்பு - அழகு. மணம் படு திரு - கல்யாணத்தில் தோன்றும் அழகு முதலிய சம்பிரமங்கள். மெலிதரும் உணர்வினேன் - அற்ப அறிவுடைய நான்.

(பி - ம்.) [1]'றாலிவன்' (அஉ)

1331 வாக்கினாள் - சரசுவதி. அந்தரம் - கடை நிலைத்தீவகம். (அங)

1332 நீந்து அரும் - நீந்துவதற்கு அரிய. சுற்ற - தன்னைச்சூழ. வேள்வி - திருமணவேள்வி.

(பி - ம்.) [1]'வாய்மையால்' [2]'கலப்பை கொண்டங்க ணெய்தினான்' (அச)

1333 தண்டிலம் : 'தண்டிலமாவது அக்கினியைப் பிரகிஷ்டிக்கிற விடத்தே சதுரமாகப் பரப்புகின்ற மணல்' (சீவக. 2463, ந.) சார்த்தினன்: நாற்புறங்களிலும் சேர்த்தனன். மண்டலம் - பருதிகள். விதிமுறை வகுத்தலாவது, கீழ்த்திசை யொழிந்த திசைகளில் வைத்தல். மங்கலத்துக் குரியது ஆதல் பற்றி வெண்மலரைக் கூறினார்.

(பி - ம்.) [1]'தண்டுலம்', [2]மென்மலர், [3]கொண்டவி, (அரு)

வேறு

இராமனும் சீதையும் ஏகாசனத்தில் அமர்தல்

1334 மன்றலின் வந்து [1]மணித்தவி சேறி
வென்றி நெடுந்தகை வீரனு மார்வத்
தின்றுணை யன்னமு மெய்தி யிருந்தார்
ஒன்றிய போகமும் யோகமு மொத்தார்.

சனகன் தாரைவார்த்துக் கொடுத்தல்

1335 கோமகன் முன்சன கன்குளிர் நன்னீர்
பூமக ளும்பொரு ளும்மென நீயென்
மாமக டன்னெடு மன்னுதி யென்னுத்
தாமரை யன்ன தடக்கையி னீந்தான்.

மங்கல ஒலிகள்

1336 அந்தண ராசி யருங்கல [1]மன்னர்
தந்தப லாண்டிசை தார்முடி மன்னர்
வந்தனை மாதவர் வாழ்த்தொலி போல
முந்தின [2]பேரி முழங்கின மாதோ.

1334 மன்றலின் - மணவறையில். மணித்தவிசு - மணிகளால் இயன்ற ஆசனம்; அழகிய ஆசனமும் ஆம். ஆர்வத்து - அன்புடைய. அன்புடைமைக்கு அன்னம்: 'ஆதரம் பெருகுகின்ற வன்பினு லன்ன மொத்தும்' (சீவக. 189.) 'மார்வத்து' எனப்பிரித்து, 'திருமாலின் மார்பி லுள்ள என்னலும் ஆம். இன் துணை அன்னம் - இராமனுக்கு இனிய வாழ்க்கைத்துணையாகிய அன்னம் போன்றவள். போகம் - பேரின்பம்; யோகம் - அப்பேரின்பத்தை அடைவதற்குரிய முயற்சி; போகம் இராமன்; அதனை அடையும் முயற்சியாகிய யோகம் சீதை.
(பி - மீ.) [1]'மணத்தவி' (அசு)

1335 கோமகன் - இராமன். பூமகள் - இலக்குமி. பொருள் - திருமால். சகல போகங்களையும் நுகரப், 'பூமகளும் பொருளும் என' என்றார்; 'பொன்னின் தாமரைப் பூவையும் மாலும் போன், மன்னர் கோவெனும் வாழ்கென வாழ்த்தினன்' (நைடத. மணம். 22.) 'நாமகளும்' என்ற பாடத்தில் நாமகள் - சொல்; எனவே 'சொல்லும் அதன் பொருளும் போல்' என்பது அர்த்தம்; சீதை சொல், அதன் பொருள் இராமன்; 'சொல் வடிவாய் நின்னிடம் பிரியா விமயப் பாவை, தன்னையுஞ் சொற் பொருளான வன்னையுமே' (திருவிளை. 56 : 10.) (அஎ)

1336 அருங்கலம் அன்னர் - சுமங்கலிகள். மகளிர் அருங்கலம்: 1344.
(பி - மீ.) [1]'பின்னர்' [2]'சங்க' (அஅ)

மணவறை விண்ணேப்போல் விளங்கல்

1337 வானவர் பூமழை மன்னவர் பொற்பூ
ஏனையர் தூவு மிலங்கொளி முத்தம்
தானகு நாண்மல ரென்றிவை தம்மால்
மீனகு வானின் விளங்கிய திப்பார்.

பாணிக்கிரகணம்

1338 வெய்ய கனற்றலை வீரனு மந்நாள்
மையறு மந்திர [1]மும்மை வழங்கா
நெய்யமை யாகுதி யாவையு நேர்ந்தான்
தைய ளிர்க்கை தடக்கை பிடித்தான்.

இருவரும் தீயை வலம் வருதல்

1339 இடம்படு தோளவ ளேடியை வேள்வி
தொடங்கிய வெங்கனல் சூழ்வரு போதின்
மடம்படு சிந்தையண் மாறு பிறப்பின்
உடம்புயி ரைத்தொடர் கின்றதை யொத்தாள்.

மற்றும் செய்வன செய்தல்

1340 வலங்கொடு தீயை வணங்கினர் வந்து
[1]பொலம்பொரி செய்வன செய்பொருண் முற்றி
இலங்கொளி யம்மி மிதித்தெதிர் நின்ற
கலங்கலில் கற்பி னருந்ததி கண்டார்.

1337 தான் நகு - தானுக மலர்ந்த. நாள் மலர் - அன்று அலர்ந்த பூ. மீன்நகு - வீண் மீன்கள் விளங்குகின்ற. இப்பார் - இந்த இடம்; பூமி என்றது மணவறையை. (அக)

1338 வெய்யகனல் தலை - விரும்பத்தக்க ஓமத்தீயில். மும்மை வழங்கா - மூன்று முறை வழங்கி; சீவக. 2465. தளிர்க்கையைத் தன் தடக்கையால் பிடித்தான். (கo)

(பி - ம்.) [1] முற்றும்'

1339 இடம்படு - விசாலமான. எரியை வலஞ்செய்தல் : கலி. கக : 3-5; சிலப், க : 51-3; சீவக. 835, 2468; தூளா. சுயம். 278; வி. பா. திரௌபதி. 94; நைடத. மணம். 20. உடம்பு உயிரைத் தொடர் கின்றது ஒத்தாள் - இராமன் முன்னும் சீதை பின்னுமாகச் சென்றனர், உயிர் இராமனுக்கு உவமை. (கக)

1340. அருந்ததி வசிட்டருடன் திருமண மண்டபத்தே இருந்ததனால், 'எதிர் நின்ற' என்றார். பொரியிடுதல், அம்மி மிதித்தல், அருந்ததி காணல் இவை இங்கே கூறப் பெற்றன.

மாதவரையும் தசரதனையும் வணங்கிக் கிரகப்பிரவேசம் செய்தல்

1341 மற்றுள செய்வன செய்து மகிழ்ந்தார்
முற்றிய மாதவர் [1]தாண்முறை சூடிக்
கொற்றவ னைக்கழல் கும்பிட லோடும்
பொற்றொடி யைக்கொடு பொன்மனை புக்கான்.

பல்வகை முழக்கம்

1342 ஆர்த்தன பேரிக ளார்த்தன சங்கம்
ஆர்த்தன நான்மறை யார்த்தனர் வானோர்
ஆர்த்தன பல்கலை யார்த்தன பல்லாண்
டார்த்தன வண்டின மார்த்தன வேலை.

இராமன் தாயரை வணங்குதல்

1343 கேகயன் மாமகள் கேழ்கிளர் பாதம்
தாயினு மன்பொடு தாழ்ந்து வணங்கி
[1]ஆயத னன்னை யடித்துணை சூடித்
தூய சுமித்திரை தாடொழ லோடும்.

(பி - ம்.) [1]'புலம்பரி நூலவர்' (கஉ)

1341. முற்றிய - அறிவு முதிர்ச்சி பெற்ற. கொற்றவன் - தசரதன்.

(பி - ம்.) [1]'தாண்மலர்' (கக)

1342 இராமாவதாரத்தின் நோக்கம் இனி நிறை வேறு மென்று கருதி மறைகளும் கலைகளும் தம் அழியாமையை எண்ணி ஆர்த்தன; நான்மறை, பல்கலை என்பவற்றுக்கு அவைகளை வல்லவர்கள் என்று பொருள் கூறுதலும் ஆம். வண்டினம் ஆர்த்தது மலர்களின் மிகுதி நோக்கி. வேலை - கடல்கள். (கச)

1343 கேழ் - நிறம். தன் அன்னை - கோசலை. தாயினும் இராமனிடத்து அன்புடையவள் கைகேயி. 'இராமனைப் பயந்தவெற் கிடருண்டோ வென்றுள்', 'தாய்கையில் வளர்ந்திலன் வளர்த்தது தவத்தால், கேகயன் மடந்தை' (உ. 2 : 41 ; 3 : 97.)

(பி - ம்.) [1]'நாயகனன்னை யடித்துணை நண்ணித்'. (கஙி)

சீதை மாமியரை வணங்குதலும் அவர்தம் மகிழ்ச்சியுரையும்

1344 அன்னமு மன்னவ ரம்பொன் மலர்த்தாள்
சென்னி புனைந்தனள் சிந்தை மகிழ்ந்தார்
கன்னி யருந்ததி காரிகை காணம்
நன்மக னுக்கிவ ணல்லணி யென்றூர்.

சீதையைத் தழுவி நின்ற மாமியர் கூற்று

1345 சங்கவ ளைக்குயி லேத்தழி நின்றூர்
அங்கண னுக்குரி யாருள ராவார்
[1]பெண்களி னிப்பிற ராருள ரென்றூர்
கண்கள் களிப்ப மனங்கள் களிப்பார்.

அவர்கள் சீதைக்கு அளித்த பொருள்கள்

1346 எண்ணமில் கோடிபொன் னெல்லியில் கோடி
வண்ண வருங்கல மங்கையர் வெள்ளம்
கண்ணக னுடியர் காசொடு தூசும்
பெண்ணி னணங்கனை [1]யாய்பெறு கென்றூர்.

1344 அன்னமும் - சீதையும். அன்னவர் கைகேயி முதலிய மூவர். கன்னி - அழிவில்லாத; அருந்ததிக்கு அடை. கற்பில் அருந்ததி காரிகை காண்; காரிகை - அழகு மிக்கவள்; காண் : அசை. நம் நன் மகனுக்கு.
(கூசு)

1345 சங்கவளைக் குயில் - சங்கு வளையே அணிந்த சீதை; சங்கம் - கூட்டமுமாம். தழி - தழுவி; 'தமிழ் தழிய' (சீவக. 2026.) அம் கண்ணனுக்கு - அழகிய கண்களையுடைய இராமனுக்கு. உரியார் உளராவார்.

(பி - ம்.) [1]எங்களர் பெண்களினிப் பிற ரென்னுக்'

ஒரு பிரதியில் 1345 ஆம் செய்யுளின் முதல் இரண்டடிகள் ஒரு செய்யுளின் முதல் இரண்டடிகளாகவும்; பின் இரண்டடிகள் மற்றொரு செய்யுளின் 3 - 4 ஆம் அடிகளாகவும் காணப்படுகின்றன. இந்த இரண்டு செய்யுட்களில் முதற் செய்யுளின் பின் இரண்டடிகள் 'இங்ஙெவர் பெண்களினித்திரு வென்றூர், பொங்ஙெழில் கண்டு மனம்புள கிப்பார்' என்றும், அடுத்த செய்யுளின் முன் இரண்டடிகள் 'பண்கள் மிழற்றறுந் தேனிசை பாடி, உண்க ளழிக்க வினைந்ததை யொப்ப' என்றும் காணப்படுகின்றன.

1346 எண்ணம் - கணக்கு; அம் : சாரியை. வண்ண அருங்கலம் - அழகிய அரிய அணிகள். மங்கையர் வெள்ளம் - பணிப் பெண்களின் கூட்டம். கண் அகல் நாடு - இடம் அகன்ற நாடுகள். காசொடு - மணிகளுடன். தூசு - ஆடைகள். (பி - ம்) [1]'யாள் பெறு', 'யாள் பெற வீந்தார்'.

இராமனும் சீதையும் பள்ளியறை சென்றமை

1347 நூற்கட லன்னவர் [1]சொற்கட னோக்கி
மாற்கடல் [2]பொங்கு மனத்தவ ளோடும்
கார்க்கடல் போற்கரு ணைக்கடல் பண்டைப்
பாற்கட லொப்பதொர் பள்ளி யணைந்தான்.

மண வினையின் பூர்த்தி

1348 பங்குனி யுத்தர மான பகற்போ
[1]தங்க விருக்கினி லாயிர நாமச்
சிங்க மணத்தொழில் [2]செய்த திறத்தால்
மங்கல வங்கி வசிட்டன் வகுத்தான்.

1347 நூல் கடல் அன்னவர் - நூலறிவு மிகுந்த பெரியோர்கள். சொற்கடன் நோக்கி - சொல்லாகிய நூன்முறைமையை எண்ணி. மால் கடல் - காதல் மயக்கமாகிய கடல். கார்க்கடல் - கரிய கடல்; இராமனுக்கு உவமை; 'கார்க்கடல் கமலம் பூத்த தெனப்பொலி வான்' (கூ. 4 : 132.) பள்ளி - படுக்கை; படுக்கையின் நிறம் வெள்ளை. மனத்தவளோடும் ஓர் பள்ளி அடைந்தான்: மணவினையை அடுத்துத் தம்பதிகளுக்குக் கூட்டம் உண்டென்று சிந்தாமணி முதலிய தமிழ் நூல்கள் கூறுமாறு கம்பரும் கூறினர். 'பொற்றொடியைக் கொடு பொன்மனை புக்கான்' என்று 1 41-இல் முன்னே கூறினமையின் இங்கே கூறியது சமாவேசம் அன்று. (கக)

(பீ - மீ.) [1]'போர்க்கட' [2]'அன்ன'

1348 இராமன் திருமணம் பங்குனி மாதத்தில் உத்தர நாளில் நடைபெற்றது. கம்பராமாயண அரங்கேற்றமும் பிறிதோர் பங்குனி உத்தரத்தில்; நனியன், 8. அங்கம் - வேதாங்கம். ஆயிரநாமச்சிங்கம் - இராமபிரான். அங்கி - அக்கினி; சேஷஹோமம் என்பர். (கoo)

(பீ - மீ.) [1]'அங்கரு தத்தினை யாயிர', அங்க ணிருக்கினி' [2]'செய்த பினிலோ யோர்'

1348க்குப் பின் ஒரு சில பிரதிகளில்,

'வள்ளற னக்கிலை யோர்க டமக்கு
எள்ளலில் கொற்றவ னெம்பி யளித்த
வள்ள மலர்த்திரு வன்னவர் தம்மைக்
*கொள்ளுமெ னத்தம ரோடு குறித்தான்'

என்ற பாடல் காணப்படுகின்றது. பல பிரதிகளில் இது இல்லை.

(பீ - மீ.) *'கொள்ளு தெனத்தமர் கோவொ டுரைத்தார்'

பரதன் முதலிய மூவருக்கும் திருமணம்

1349 கொய்நிறை [1]தாரன் குசத்துவ சப்பேர்
நெய்நிறை வேலவன் மங்கையர் நேர்ந்தார்
மைநிறை கண்ணினர் [2]வானுறு நீரார்
மெய்நிறை மூவரை மூவரும் வேட்டார்.

தசரதனது கோடைச் சிறப்பு

1350 வேட்டவர் வேட்டபின் வேந்தனு மேனுள்
கூட்டிய சீர்த்தி கொடுத்தில னல்லால்
ஈட்டிய மெய்ப்பொரு ளுள்ளன வெல்லாம்
வேட்டவர் வேட்கையின் மேற்பட வீந்தான்.

1351 ஈந்தள வில்லதொ ரின்ப நுகர்ந்தே
ஆய்ந்துணர் கேள்வி யருந்தவ ரோடும்
[1]வேந்தொடு மங்கர் வைகினன் மெள்ளத்
தேய்ந்தன நாள்சில செய்த துரைப்பாம்.

1349 தாரன் குசத்துவசப் பேர் - தாரை அணிந்த குசத்வஜன் என்ற பெயரையுடைய; இவன் சனகனுடைய தம்பி. நேர்ந்தார் - வரிக்கப் பட்டார்கள். இலக்குவனை மணந்த ஊர்மிளை சனகனுடைய மகள் என்று வான்மீகர் கூறுவர். வசிட்டரின் யோசனைப்படி பரதன் முதலிய மூவருக் கும் இந்த மூன்று மங்கையரும் விவாகம் செய்யப்பட்டதாக வான்மீகத்தி லுள்ளது. பரதனையும் சத்துருக்கனனையும் மணந்தவர்கள் முறையே மாண்டவியும் சுருதகீர்த்தியும் ஆவார்கள். வான் உறு நீரார் - உயர்வாகிய குணமுடையவர்கள்.

(பி - மீ.) [1]:தார்க்கு [2]:மூவரை மாரு; மெய் நிறை தம்பியர்' (கo8)

1350 வேட்டு அவர் வேட்டபின் - பரதன் முதலிய மூவரும் விரும்பி மணந்த பின். வேந்தன் - தசரதன்; சனகன் என்பாரும் உளர். சீர்த்தி - மிகு புகழ். கொடுக்க இயலாத சீர்த்தியைக் கொடுத்தில என்றதனால் மற்றவைகளை எல்லாம் கொடுத்தமை விளங்கும். சனகன் கொடுத்தது பெண்களுக் கென்பாரும் யாசகருக் கென்பாரும் உண்டு : வேட்டவர் வேட் கையின் மேற்பட ஈதல் : 447. (கo9)

1351 வேந்தொடும் - சனகனுடனும். வைகினவன் தசரதன். நாள் சில தேய்ந்தன. (பி - மீ.) [1]:வேந்தனு' 'வாய்ந்தொளிர் பொன்னக ராயமன வைகத்', 'வாய்ந்தொளிர் பொன்னகர் வையி னின்பாங், கேய்ந்த வர் மீள்வயி னுற்ற திசைப்பாம்' (கoஙு)

22. பரசுராமப் படலம்*

வேறு

விசுவாமித்திரர் விடை பெற்றுச் செல்லல்

1352 [1]தாஞுகிய தகைமைப்பொருள் [2]சனகன்குயி லுடனே
நாஞுவித [3]விருபோகமு நுகர்கின்றதொர் நாள்வாய்
ஆஞுமறை நெறிமாதவ முனிகோசிக னருளிப்
போஞுன்வட திசைவாயுயர் [4]பொன்மால்வரை புக்கான்.

தசரதன் பரிவாரங்களுடன் புறப்படுதல்

1353 அப்போதினின் முடிமன்னவ னணிமாநகர் செலவே
இப்போதுக மனிகந்தவ யெழுகென்றினி திசையாக்
கைப்போதக நிகர்காவலர் குழுவந்தடி கதுவ
ஒப்போதரு தேர்மீதினி லினிதேறின னுரவோன்.

இதுவும் அது

1354 [1]தன்மக்களு மருமக்களு நனிதன்கழ றழுவ
மன்மக்களும் வயின்மொய்த்திட மதில்சூழ்தரு மிதிலைத்
[2]தொன்மக்கடம் மனமுக்குயிர் பிரிவென்பதொர் துயரின்
வன்மைக்கடல் புகவுய்ப்பதொர் வழிபுக்கன னுரவோன்.

---

* சில பிரதிகளில் இது மீட்சிப் படலமென்று காணப்படுகிறது.

1352 தாஞுகிய தகைமைப் பொருள் - திருமால்; இங்கே இராமன். இருபோகம் - அசனசயன போகங்கள். மறைநெறி அருளி - வேத மார்க்கங்களை உபதேசித்து விட்டு; மறைநெறியே மாதவத்தையுடைய முனி ஆசி கூறுதலை அருளிச் செய்து. திசைவாய்ப் போஞுன். பொன் மால் வரை - மேருமலை. இச்சந்தம் மகிழ்ச்சிக் குறிப்பு.

(பி - மீ.) [1]'தாஞுவதொர் வகையேநனி சனகன்றரு தயலும்' [2]'சன கன்றிரு நகரில்' [3]'முறு போகமு நவபோகமு' [4]'பொன்மாநகர் புகவே' (க)

1353 மாநகர் - அயோத்தி. நம் அனிகம் - நம் சேனை. எழுகவென்று. இசையா - உரைத்து. கைப் போதகம் - கையையுடைய யானை. குழு - கூட்டம். ஒப்பு ஒதரு - உவமை கூற முடியாத. (உ)

1354 மருமக்கள் - பிள்ளைகளின் மனைவிகள். கழல் - பாதங்கள்; ஆகு பெயர். மன்மக்கள் - அரச குமாரர்கள். வயின் மொய்த்திட - பக்கங்களில் நெருங்கி வர. உக்கு - உருகி. உயிர் பிரிவு என்பதொர் துயரின் வன்மைக் கடல் - தம்உயிர் பிரிகின்றது போன்றதொரு துயரமாகிய வலிய கடலில். உயிர் - இராமன். புக உய்ப்பதொர் வழி - புகும்படிச் செய்யும் ஒரு வழியில். உரவோன் - வன்மையுடைய தசரதன்.

(பி - மீ.) [1]'நன் மக்களு' [2]'தொன் மக்களும்' (ங)

இராமபிரான் கூட்டத்தில் செல்லும் வருணனை

1355 முன்னேநெடு முடிமன்னவன் முறையிற்செல மிதிலை
நன்மாநக ருறைவார்மன நனிபின்செல நடுவே
தன்னேர்புரை தருதம்பியர் தழுவிச்செல மழைவாய்
மின்னேயெனு மிடையாளொடு மினிதேகினன் வீரன்.

இருவகைச் சகுனங்கள் தோன்றுதல்

1356 ஏகும்மள வையின்வந்தன [1]வலமும்மயி லிடமும்
காகம்முத லிய [2]முந்திய தடைசெய்வன கண்டான்
[3]நாகம்மன னிடையிங்குள திடையூறென நடவான்
மாகம்மணி யணிதேரொடு நின்றானெதி ரிவந்தான்.

நிமித்திகனை மன்னன் வினவுதலும் அவனது நிமித்தமும்

1357 நின்றேநெறி யறிவானொரு நினைவாளனை யழையா
நன்றேபழு துளதோநய முரைநீநடு வென்னக்
குன்றேபுரை தோளானெதிர் புள்ளின்குறி கொள்வான்
இன்றேவரு மிடையூறது நன்றுய்விடு மென்றான்.

1355 மனம் பின் செலல் நினைத்தலைக் குறிக்கும். தன் ஏர் புரை - தன் அழகை ஒத்த. மழை வாய் மின் - மேகத்தினிடத்தே உள்ள மின்னல். வீரன் - இராமன். (சு)

1356 அளவையின் - சமயத்தில். மயில் வலமும் வந்தன - நற்சகுனமாக மயில்கள் இடப்புறமிருந்து வலமாக வந்தன. காகம் முதலிய இடம் முந்திய - காக்கை முதலிய சில வலப்பாலிருந்து இடமாக முந்தியவை. நாகம் அனன் - நாகத்தைப் போன்றவன்; நாகம் - யானை; மலையுமாம். கம்பீர புருஷனுயிருந்தும் சகுனத்துக்கு அஞ்சினன் என்பதைக் காட்ட நாகத்தை உவமை கூறினர். சகுனங்களுக்கு வீரர் அஞ்சாமை: 'புட்பகைக், கேவா னுகலிற் சாவேம் யாமென, நீங்கா மறவர் வீங்கு தோள் புடைப்ப' (புறநா. சுஅ: 11-13.) மாகம் அணி-ஆகாயம் அளாவிய. முடிபு: நெறி வந்தான் வலம் வந்தன (எனினும்) காகம் முதலியன தடை செய்வன கண்டான், இடையூறு உளதென நடவான் நின்றான்.

(பி - ம்.) [1]வலமும் மிடமயிலும்' [2]'பல்பறை', 'வேவின' [3]'ஆகும் மிவனிடை யூறவையாவோ வென வறியான்.' (சு)

1357 நினைவாளன் - புள்ளின் குறியின் உணர்வை உடையவன்; 'புட்குரான், முன்னங் கூறினன் முழு துணர்வினன்' (சீவக. 415.) நயம் நடுவுரை - சகுனத்தின் பலனை நடு நிலைமையோடு சொல்; நடு - நடுநிலை; 1373. இடையூறு வந்து பின் அது நன்றாதலை, 'இன்ன வின்பம்' என்பர்; பெருங். க. 47 : 14. காகம் முதலியன தடை செய்தலை இடையூறு வருதலையும், மயில்கள் வலமாணமை அவ்விடை யூறு நலமாதலையும் உணர்த்தும் என்றபடி. நிமித்தம் கூறியவர் வசிட்டர் என்று வான்மீகம் கூறும். (சு)

பரசுராமர் வருதலின் வருணனை 1366 முடிய

1358 என்னும்மள வையின்வானக [1]மிருணின்றது வொளியாய்
மின்னும்படி புடைவீசிய சடையான் [2]மழு வுடையான்
பொன்னின்மலை வருகின்றது போல்வானனல் கால்வான்
[3]உன்னுஞ்சுழல் விழியானுரு மதிர்கின்றதொ ருரையான்.

1359 கம்பித்தலை யெறிநீருறு கலமொத்துல குலையத்
தம்பித்துயர் திசையானைக டளரக்கடல் சலியா
வெம்பித்திரி தரவானவர் வெருவுற்றிரி தரவோர்
செம்பொற்சிலை தெறியாவயின் முகவாளிக டெரிவான்.

1360 விண்கீழுற வென்றேபடி [1]மேல்பாலுற வென்றே
எண்கீறிய வுயிர்யாவையும் யமன்வாயிட வென்றே
புண்கீறிய குருதிப்புனல் பொழிகின்றது புரையக்
கண்கீறிய கனலான்முனி வியாதென்றயல் கருத.

1358 இருள் நின்றதான வானகம் ஒளியாய். புடை - பக்கங்களில். மழு - கோடாலி. கம்பீரத்துக்கு மேருமலை உவமை. உன்னும் - யாவரும் மதிக்கும். உரும் - இடியைப்போல.

(பி - ம்) [1]'மிருள் கீறிட வொளியால்' [2]'மிடல்மழுவான்' [3]'உன்னுஞ்சுடர்', 'உன்னுந்தழல்' (எ)

1359 கம்பித்து - நடுங்கி; அசைந்துமாம். அலை எறி நீர் - கடல். கம்பித்து.....உலகு உலைய: 'கம்பமுற் றுலைந்த வேலைக் கல மெனக் கலங்கிற் றண்டம்' (கூ. 18 : 103.) கம்பித்தது உலகம் என்றல் சிறப்பு. தம்பித்து - தூண்போல் அசைவற்று; தம்பம் - தூண். கடல் சலியா வெம்பி திரிதர - கடல் கொந்தளித்துப் பொங்கி நிலை பெயர. வெருவுற்று இரிதர - பயந்து ஓட. தெறியா - தான் இறுகி யுள்ளதோ என்று அறியத் தெறித்து. அயில் முகவாளிகள் - கூரிய அம்புகள். (அ)

1360 கீழ் - பூலோகம். படி - மண்ணுலகு. மேல் பால் - விண். எண் கீறிய - இவ்வளவு என்ற கணக்கு ஒழிந்த; கீறிய - ஒழிந்த; 1358, (பி - ம்.) 'எண் கூறிய உயிர்' என்ற பாடத்துக்கு, 'இவ்வளவு என்று கணக்கிட்டுள்ள தான்கு விதப் பிறப்புடைய உயிர்கள்' என்பது பொருள். கண் கீறிய - கண்ணினின்றும் வெளிப்போந்த. கண்ணின் அனலுக்குப் புண்ணிலிருந்து வரும் இரத்தம் உவமை. முனிவு யாது - கோபத்துக்குக் காரணம் யாது. அயல் கருத - அயலிலிருந்தார் நினைக்கும்படி. (பி - மீ.) [1]'மேல் கீழுற' (கு)

1361 போரின்மிசை யெழுகின்றதொர் மழுவின்சிகை புகையத்
தேரின்மிசை மலைசூழ்வரு கதிருந்திசை திரிய
நீரின்மிசை வடவெங்கன னெடுவானுற முடுகிப்
பாரின்மிசை வருகின்றதொர் படிவெஞ்சுடர் படர.

1362 பாழிப்புய முயர்திக்கிடை யடையப்புடை படரச்
சூழிச்சடை முடிவிண்டொட வயல்வெண்மதி [1]தொத்த
ஆழிப்புனல் புவிகாலன லாகாயமு மழியும்
ஊழிக்கடை [2]முடிவிற்றனி யுமைகேள்வனை யொப்ப.

1363 [1]அயிர்சுற்றிய கடன்மாநில மடையத்தனி படரும்
[2]செயிர்பற்றிய படையானடன் மறமன்னவர் திலகன்
உயிருற்றதொர் மரமாமென வோராயிர முயர்தோள்
[3]வயிரப்பணை துணியத்தொடு வடிவாய்மழு வுடையான்.

1364 நிருபர்க்கொரு பழிபற்றிட நிலமன்னவர் குலமும்
கருவற்றிட மழுவாள்கொடு களைகட்டுயிர் கவரா
இருபத்தொரு படிகாலிமிழ் கடலொத்தலை யெறியும்
குருதிப்புன லதனிற்புக முழுகித்தனி குடைவான்.

1361 சிகை புகைய - தீச்சுடர் புகையவும். மலை - மேரு மலை. கதிர் - சூரியன். வட வெங்கனல் - வடவா முகாக்கினி ; 215, குறிப். சுடர் படர - கனல் விரிய. பரசுராமருக்கு வடவைக் கனல் உவமை. (கo)

1362 பாழிப்புயம் - வலிய தோள்கள் ; 'பாழிய பணைத்தோள் வீர' (இ. 5 : 72.) திக்கு இடை அடைய - திசையிடம் முழுவதும். சூழிச்சடை முடி - முடித்தற் குரிய சடாமகுடம். விண்ணின் காறும் முடி சென்றதனால் விண்மதி தலையில் தொத்தவும். புனல் - இனியநீர், நீர் என்ற அளவாகி நின்றது. கால் - காற்று. ஊழிக்.....கேள்வன் - பிரளய கால உருத்திர மூர்த்தி. சடை முடியாலும், முடிமேல் மதி தொத்து வதனாலும், அழித்தற் றொழிலாலும் உருத்திரன் உவமை.

(பி - மி.) [1]'தோற்ற' [2]முடி விற்றினி.' (கக)

1363 அயிர் சுற்றிய கடல் மாநிலம் - நுண்மணலையுடையகடல் சூழ்ந்த பெரிய பூமி. அடைய - முற்றிலும். படரும் - செல்லும். செயிர் பற்றிய படை - கினம் மிகுந்த சேனை. அடல் - வலிமை. வயிரப்பணை - காழேறிய நிலைகள். துணிய - துண்டங்களாக. தோள்களாகிய பணை துணிய. வடி வாய் - கூரிய வாயை யுடைய.

(பி - மி.) [1]'அயிர்சுற்றிய' [2]செயிர்சுற்றிய' [3]வயிரக்கிரி' (கஉ)

